மஹாபாரதத் தேடல்

அலெக்ஸாண்டர் ரகசியம்

கிறிஸ்டோபர் சி. டாய்ல்

தமிழில் : மஹாரதி

வெஸ்ட்லேண்ட் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்

ஆசிரியரைப் பற்றி...

அலெக்ஸாண்டர் ரகசியம் (மகாபாரதத் தேடல் தொடரின் முதல் புத்தகம்) என்னும் இந்நூலின் ஆசிரியர் கிறிஸ்டோஃபர் சி டாய்ல், வாசகனை ஒரு கவர்ச்சி கரமான உலகத்திற்கு நாடு கடத்துகிறார். அங்கே தொன்மங்களில் புதைந்து கிடக்கும் ஆதிகால ரகசியங்கள் விஞ்ஞானத்தோடும் சரித்திரத்தோடும் கலந்து ஓர் அழுத்தமான கதை உருவாகிறது.

செவ்வியல் இலக்கியத்திலிருந்து விஞ்ஞானப் புனைவுகள் வரை ஒரு நீண்ட வீச்சு மிக்க வாசித்தலில் வளர்க்கப்பட்ட கிறிஸ்டோஃபர் தன் பள்ளிநாட்களிலிருந்து எழுதி வருகிறார். குழந்தைப் பருவம் முதல் அவரது இலக்கிய ஆதர்ஷ புருஷர்கள் ஜூல்ஸ் வெர்னே, எச்.ஜி. வெல்ஸ், ஐசாக் ஆசிமோவ், ராபர்ட் ஹெயின்லெயின், ஜே.ஆர்.ஆர். டோல்கெய்ன், ராபர்ட் ஜோர்டான் மற்றும் டெரி புரூக்ஸ் ஆகியோர்.

தன் கன்னிப்புதினமான மகாபாரத ரகசியத்தை வெளியிடுவதற்கு முன்பு, அவர் நிறுவன உலகில் பணியாற்றியவர். டில்லி செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரியில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்று, கொல்கத்தா இந்திய மேலாண்மைக் கழகத்தில் தொழில் மேலாண்மை படித்தார். தனது நிறுவனப் பணிக்காலத்தில், தலைசிறந்த பன்னாட்டு நிறுவனங்களில் முதுநிலை நிர்வாகியாகவும், தலைமை செயல் அலுவலராகவும் பணிபுரிந்தார். பின் அமெரிக்க ஆலோசனை நிறுவனம் ஒன்றோடு கூட்டுச்சேர்ந்து இந்தியாவில் ஒரு திட்டமிடல் ஆலோசனை நிறுவனத்தைத் தொடங்கினார்.

பணிக்காலம் முழுவதும், கிறிஸ்டோபர் பல இந்திய, வெளிநாட்டு பத்திரிகைகளில் மேலாண்மை மற்றும் தொழில் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். உலக மாநாடுகளிலும் கூட்டங்களிலும் பேசியிருக்கிறார். அவர் சான்றளிக்கப்பட்ட ஒரு நிர்வாகப் பயிற்சியாளர். தற்போது முதுநிலை நிர்வாகிகள் பலருடன் இணைந்து அவர்களின் வெற்றிக்கும், அவர்களின் நிறுவனங்களில் நல்ல விளைவுகளை உருவாக்கவும் உதவுகிறார்.

வழக்கமான பணிநேரம் போக, கிறிஸ்டோபர் ஒரு நல்ல இசைக்கலைஞர். செவ்வியல் ராக் இசைக்கச்சேரி நிகழ்த்தும் 'மிட்

லைஃப் கிரைசிஸ்' என்ற குழுவை அமைத்து அதன் மூலம் தன் இசைக்காதலில் வாழ்கிறார்.

அவர், மனைவி ஷர்மிளா, மகள் ஷேநயா, மற்றும் அவரது செல்லப்பிராணிகளான ஜாக், கோடெய் ஆகிய இரண்டு நாய்களுடன் குர்கானில் வசிக்கின்றார். அவரது முகநூல் முகவரி:

www.facebook.com/authorchristophercdoyle
இணையத்தள முகவரி: *www.christophercdoyle.com*

மஹாபாரதத் தேடல்
அலெக்ஸாண்டர் ரகசியம்

கிறிஸ்டோபர் சி. டாய்ல்

தமிழில்: மஹாரதி

மிஸ்டிக்ஸ்ரைட்

MYSTICSWRITE
Content Developers & Editors

westland publications ltd
61 Silverline Building, 2nd Floor, Alapakkam Main Road, Maduravoyal, Chennai 600095.
93, 1st Floor, Sham Lal Road, New Delhi 110002.

First Published in English as *The Mahabharata Quest - The Alexander Secret* by westland publications ltd 2014
First Published in Tamil as *Mahabharatath Thedal - Alexander Ragasiayam* by westland publications ltd 2017 in association with Mysticswrite Private Limited, Chennai

Copyright © Christopher C.Doyle, 2014

All rights reserved

10 9 8 7 6 5 4 3 2 1

ISBN:

This book is sold subject to the condition that it shall not, by any way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author's prior written consent, in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser and without limiting the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of the copyright owner, except in the case of brief quotations embodied in critical articles or reviews with appropriate citations.

வெளிச்சம் தரும் ஆபரணம் அவன் கையில் ஜொலித்தது;
கிஷ்ர் கீழே பார்த்தான்; அவன் தேடியது கிடைத்தது.

அந்த ஊற்று வெள்ளியைப் போல் தோன்றியது,

பாறை நடுவிருந்து வலிந்துவரும் வெள்ளி ஓடையைப்
போல. ஊற்றல்ல - அது இந்தப் பேச்சுக்குப்
பொருத்தமில்லை;

ஆனால் அது நிஜத்தில் ஊற்றானால் - அது ஒளியூற்று.

காலைநேரத்தில் எப்படி இருக்கிறது விண்மீன்?

காலை விண்மீன் காலையில்
இருப்பதுபோல்,- அப்படியே இருந்தது.

தேயாத நிலவு எப்படி இருக்கிறது இரவில்?

அப்படி இருந்தது அது, நிலவைவிட பெரிதாக.

காண்டம் **69** - எஸ்கண்டர் நாமா

கிறிஸ்டோபர் சி. டாய்லின் பிற புத்தகங்கள்
தி மகாபாரதா சீக்ரெட்

காணிக்கை

அஜய் மாகோவுக்கும், தீபா சௌத்ரிக்கும்
என் எழுத்தின் மீதான அவர்களின் நம்பிக்கைக்காக
என் முதல் புத்தகத்தை எழுதும் போது அவர்கள்
செய்த வழிகாட்டுதலுக்காக
ஓர் எழுத்தாளனாக எனக்கு
முதல் வாய்ப்பைத் தந்தமைக்காக

நன்றிகள் உரித்தாகுக...

இந்தப் புத்தகத்தின் இருப்பு நிறைய மனிதர்களுக்குக் கடன்பட்டிருக்கிறது. இதன் உருவாக்கத்தில் பங்களித்த ஒவ்வொருவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

முதலில் என் மனைவி ஷர்மிளா என் மகள் ஷேநயா இருவருக்கும் என் நன்றி, ஒரு வருடத்திற்கும் மேலான ஆராய்ச்சிக்காகவும் எழுத்திற்காகவும் பிரிந்திருந்து நான் அவர்களுக்கு கொடுத்த வலியைத் தாங்கிக்கொண்டதற்காக. அவர்களின் ஆதரவும் புரிதலும் இல்லாமல் நான் இதை எழுதியிருக்கமுடியாது. என் முந்தைய புத்தகத்திற்குச் செய்தது போலவே இந்தப் புத்தகத்திற்கான ஆராய்ச்சிக்கு ஷேநயா மிகவும் உதவிசெய்தார், குறிப்பாக புராணம், சரித்திரம் சம்பந்தமான விஷயங்களில்.

இந்தப் புத்தகம் தன் வாக்குறுதியைக் காப்பாற்றக்கூடிய வகையில் அமைவதற்காக, மதிப்பிற்குரிய உள்ளீடுகளைத் தந்து, புதினத்தின் இறுதிவடிவத்தைப் படித்து உதவிய ஆர்த்திகா பக்ஷி, ஆஷா மிச்சிகன், என் துணைவியார் ஷர்மிளா ஆகியோருக்கு நன்றிகள்.

விஞ்ஞானம் தொடர்பான என் எல்லாக் கேள்விகளையும், கருத்தாக்கங்களையும் பொறுமையாகக் கேட்டு பதிலளித்த, உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியா பிராந்திய அலுவலகத்தின் இயக்குநர் டாக்டர் ராஜேஷ் பாட்டியா, பிரதியை விமர்சன கண்ணோட்டத்துடன் படித்து, என் புரிதலில் இருந்து தவறுகளை களைந்து, நான் பயன்படுத்திய விஞ்ஞான, மருத்துவ உண்மைகள், கருத்தாக்கங்கள், சான்றுகள் ஆகியவற்றின் மெய்மையை உறுதிப்படுத்துவதற்கு அவர் கொடுத்த ஆதரவு விலைமதிக்க முடியாதது. நான் கொடுத்திருக்கும் ஊக்கச்சிந்தனைகளும், அனுமானங்களும் சாத்தியமானவை என்பதையும் விஞ்ஞான சான்றுகளால் நிற்கக்கூடியவை என்பதையும் அவர் உறுதிபடுத்தினார். எனினும் என் கருத்துகளிலும் அனுமானங்களிலும் அல்லது விளக்கங்களிலும் அவர் உடன்பட்டார் என்று அவர் செய்த உதவியை வைத்து சொல்லிவிடமுடியாது. என்றாலும் அவர்க்கு என் மனமார்ந்த நன்றிகள்.

தங்களின் சமஸ்க்ருதப் புலமையை என் உபயோகத்திற்காக வழங்கி உதவி செய்தது மட்டுமில்லாமல், அசல் சம்ஸ்க்ருத சுலோகங்களின் விளக்கங்கள் சம்பந்தமான என் கேள்விகளுக்குப் பொறுமையுடன் பதில் சொல்லி, சில சம்ஸ்க்ருத வார்த்தைகளுக்கு நான் கொடுத்திருந்த அர்த்தங்கள் சரியானவையாக இருக்கும்படி பார்த்துக் கொண்ட திருமதி. ஜோதி த்ரிவேதிக்கும், திருமதி. ஆஷா மிச்சிகனுக்கும் என் நன்றிகள்.

காகிதங்களில் சொல்லப்பட்ட கதைக்கு உயிர்கொடுத்து அட்டகாசமான அட்டைப்பட வடிவத்தை உருவாக்கிக் கொடுத்த ஆனந்த் பிரகாஷுக்கும் என் நன்றிகள்.

என் எழுத்தாளர் ஆராய்ச்சிக் குழுமத்தில் இருக்கிற என் சக எழுத்தாளர்களான ஜெரால்ட் நோர்ட்லே, ஜாக்குலின் சூமான், பிலிஸ் ஜரின் ராட்ஃபோர்டு, கெவின் ஆன்ட்ரூ மர்ஃபி, கிறிஸ்டி மார்க்ஸ், பேட் மேக்எவன், பேரிட் ஃபிர்த், தவே ட்ரவ்ப்ரிட்ஜ் ஆகியோர் ஆராய்ச்சி பண்ணுவதற்கு விஷயங்கள் சம்பந்தமான கடினமான கேள்விகளுக்குக்கூட பதில்கள் கொடுத்தார்கள். அவர்களுக்கு என் நன்றிகள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு அலெக்ஸாண்டர் படையெடுத்துச் சென்ற வழிகளுக்கும், புத்தகத்தில் சொல்லப்பட்ட மற்ற இடங்களுக்கும் வரைபடங்களை வடிவமைத்த மயாங்க் மேத்தாவுக்கும் என் நன்றிகள்.

வெஸ்ட்லேண்டில் இருக்கும் எல்லா மனிதர்களுக்கும், குறிப்பாக இறுதிப்பிரதியைப் படித்து கதைக்களன் மற்றும் கதை சம்பந்தமாக அருமையான உள்ளீடுகளைக் கொடுத்த கௌதம் பத்மநாபனுக்கும் என் நன்றிகள். என் எழுத்தை கூர்செய்து சீர்செய்து, விவரணை கதையோடு பொருந்திவருமாறு செய்த எடிட்டர் சங்கமித்ரா பிஸ்வாஸ்க்கும் என் நன்றிகள்.

எனக்கு உதவிய புத்தகங்கள், கட்டுரைகள், வலைப்பதிவுகள் மற்றும் வீடியோக்கள் பட்டியல் போடமுடியாத அளவுக்கு எண்ணற்றவை; அவையே ஒரு புத்தகம் போடும் அளவுக்கு இருக்கின்றன. எனினும் நான் ஆராய்ச்சி செய்து பெற்ற ஒவ்வொரு குறிப்புக்கும் நான் நன்றி சொல்லித்தான் ஆகவேண்டும். இந்தப் புத்தகத்தில் நான் வழங்கியிருக்கும் அனுமானங்களுக்குப் பின்னால் சரித்திர, விஞ்ஞானத் தகவல் களஞ்சியம் இல்லாவிடின், என் வேலையை எளிதாக்கிய ஆராய்ச்சி மற்றும் ஆதாரங்களின் உதவியோடு கூடிய கருத்துகளை முன்வைப்பது கடினமாக இருந்திருக்கும்.

இறுதியாக, எனக்குப் பேராதரவு நல்கிய ஒவ்வொருவரின் பங்களிப்பையும் நான் நன்றியோடு ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், இந்தப் புத்தகத்தில் ஏதேனும் தரவுத் தவறுகள் அல்லது உண்மை பற்றிய தவறுகள் இருந்தால், அதற்கான பொறுப்பு என்னுடையது.

முகப்புரை

கி.மு. 316

கேபியன், பாரசீகம் (தற்போதைய ஈரான்)

யூமனியஸ் சிறைக்கூடாரத்துப் படுக்கையில் கிடந்தவண்ணம் தன் விதியைப் பற்றி யோசித்தான். தான் அழியப்போகிறோம் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. முன்பு யாரோடு அவன் போராடினானோ அந்த ஒற்றைக்கண் ஆன்ட்டிகோனஸின் தற்போதைய சிறைக்கைதி அவன். இந்தத் தடவை அவன் இறுதிப்போராட்டத்தில் காட்டிக் கொடுக்கப்பட்டான். அவனுடைய சொந்த சத்ரபதிகளே அவனை அந்த ஒற்றைக்கண் தளபதியிடம் ஒப்படைத்துவிட்டு, அதற்கு விலையாக ஆன்ட்டிகோனஸ் பறித்து வைத்திருந்த தங்களின் படைவீரர் அத்தியாவசியப் பொருட்கள் வண்டிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

ஒரு நீண்ட காலத்து கசப்பான போட்டியின் முடிவாக யூமனியஸ் சிறை பிடிக்கப்பட்டதை ஆன்ட்டிகோனஸ் வெகுஜனவிழாவாகக் கொண்டாடினான். ஆனால் ஒருநாள் சூரியாஸ்தமனப் பொழுதில் அவன் யூமனியஸைப் போய்ப்பார்த்தான்.

அலெக்ஸாண்டர் மிகப்பெரிய சிந்து நிலத்தின் மீது படையெடுக்கத் தீர்மானித்ததின் உண்மையான காரணம் என்னவென்பதும், அங்கே அலெக்ஸாண்டர் என்ன கண்டுபிடித்தார் என்பதும், ஆன்ட்டிகோனஸ்க்குத் தெரிந்திருந்தது என்று அப்போது தான் யூமனியஸ்க்குப் புரிந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு அந்த மாவீரனை எது மரணத்துக்கு கொண்டு சென்றிருந்தது என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

யூமனியஸ் முதலில் அலெக்ஸாண்டரின் தந்தை பிலிப்பிற்கு ஒரு நண்பனாக, செயலாளராக இருந்தான். பிலிப் கொலைசெய்யப்பட்ட பின்பு, அலெக்ஸாண்டரிடம் தலைமைச் செயலராக பணிபுரிந்தான். அரசரின் ஆவணங்களை, அரசின் அன்றாட நாட்குறிப்புகளை அவன்தான் பேணிக் காத்தான். அந்த ஆவணங்களில் யூமனியஸ்

பதிவுசெய்யாமல் விட்ட விஷயம் தான் ஆக முக்கியமான விஷயம்: அலெக்ஸாண்டரின் உண்மை யான இலட்சியங்களைப் பற்றிய, அவரைக் கடவுளாக்கிய பெரிய ரகசியம் பற்றிய ஆவணம் அது.

பதினாறு வருடங்களுக்கு முன்பு, சிவா பாலைவனச் சோலையில் உள்ள ஷீயஸ்-அம்மான் ஆலயத்திற்கு அந்த மாவீரன் சென்றபோது, யூமனியஸும் உடன்சென்றான். அங்கே அலெக்ஸாண்டர், ஷீயஸ்-அம்மானின் மகன் என்று அவரிடமே சொல்லப்பட்டது. அதனால் அவரே ஒரு கடவுள் தான்.

தனது தெய்வீகத்தைப் பறைசாற்றுவதில் காலத்தை வீணடிக்காமல் விரைந்து செயல்பட்டார் அலெக்ஸாண்டர். மேலும் கீழ்த்திசையில் பயணித்து சிந்துநதி நோக்கி, தன்னை உண்மையில் கடவுளாக்கும் இறுதி லட்சியத்தை நோக்கி, அவர் தன் படைப்பயணத்தைத் தொடர்ந்தார். அந்த லட்சியத்தை நிறைவேற்ற அவர்க்கு உதவுகின்ற கதைகள், அவர் கேட்டிருந்த கதைகள், அவரை விடாப்பிடியாக முன்னேற்றிக் கொண்டிருந்தன. அதே வேளையில் அவரின் வீரர்கள் தங்கள் வீடுகள் மீதான ஏக்கத்தோடு இருந்தனர்.

கடவுளின் ரகசியங்கள் மறைக்கப்பட்டிருந்த பூமிக்கடியிலான குகைக்கு வெளியே அலெக்ஸாண்டரோடு யூமனியஸ் நின்றிருந்தான். ஆனால் குகைக்குள் அலெக்ஸாண்டர் மட்டும் தனியாக நுழைந்தார். அவர் திரும்பிவந்தபோது, முகம் வெற்றி உணர்வில் ஜொலித்தது. எதற்காக அவர் வந்தாரோ அதை அவர் கண்டுபிடித்துவிட்டார்.

சிந்துவெளி வழியாக தாய்நாடு திரும்பும் பயணத்தின்போது மாலிஸ் முற்றுகை நிகழ்ந்தது. அப்போதுதான் அலெக்ஸாண்டரின் ரகசிய செயல்பாட்டின் வெற்றிக்கான சான்று கிடைத்தது. படையெடுப்பின் போது, அலெக்ஸாண்டர் சுவர்மீது ஏறினார். ஏணி உடைந்து, அவர் தன் படையினரைவிட்டு நெடுந்தூரம் விலகிப்போய் காட்டுவாசிகள் மத்தியில் மாட்டிக்கொண்டார். ஜொலிக்கும் அவரது முகத்தையும் ஜோதிமயமான அவர் ஆயுதக் கவசத்தையும் பார்த்து மிரண்டு போனார்கள் காட்டுவாசிகள்; 'ஓ' கடவுள் தங்களுக்கு மத்தியில் வந்து சேர்ந்துவிட்டார் என்று நினைத்து அலறியடித்து ஓடினார்கள். எனினும் அவர்கள் சுதாகரித்துக்கொண்டு அவரைத் தாக்க வந்தார்கள். ஆனால் இரண்டுவீரர்களை மட்டும் வைத்துக்கொண்டு அலெக்ஸாண்டர் சண்டையிட்டார். விலாவில் அம்பு ஒன்று தைத்தபோதும், அவர் அதிதீவிரமாகப் போராடினார். இறுதியில் மாசிடோனியர்கள் (அலெக்ஸாண்டர் படையினர்) வழியைக் கண்டுபிடித்து உள்ளே வந்து

தங்கள் அரசரைக் காப்பாற்றினார்கள்.

அம்பை அகற்றும் அறுவைச்சிகிச்சை நடந்து கொண்டிருந்தபோது, பாசறைகளில் கதைகள் பல உலாவின: சக்கரவர்த்தி இறந்துவிட்டார் என்று. படகில் அலெக்ஸாண்டர் வைக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியே யூமனியஸ் பலநாட்கள் படபடப்பாகக் காத்திருந்தான், அந்த மாவீரனின் ஆரோக்கியம் பற்றிய செய்திக்காக. இறுதியில் அலெக்ஸாண்டர் படகின் மேல்தளத்தில் தோன்றினார், உயிரோடு, ஆனால் பலகீனமாக. அலெக்ஸாண்டரைக் காப்பாற்றிய அற்புதம் பற்றிய கிசுகிசுப்புகள் யூமனியஸ் காதுக்கும் வந்தன. காயம் உயிருக்கு ஆபத்தானதாக இருந்திருக்க வேண்டும்; நிறைய ரத்தம் வெளியேறியிருந்தது. மருத்துவர்கள் கைவிட்டுவிட்டார்கள். உள்காயத்தைக் குணப்படுத்தவோ அல்லது ரத்தஒழுகலை நிறுத்தவோ அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.

ஆனால், சக்கரவர்த்தியின் மரணத்திற்காக அவர்கள் அருகிலே கையறுநிலையில் காத்திருந்தபோது, அலெக்ஸாண்டரின் காயம் தானாகவே குணமாக ஆரம்பித்தது. மெதுவாகத்தான் குணமாகிக் கொண்டிருந்தது; ஆனால் இயல்பாக ஆரம்பித்தது. அலெக்ஸாண்டர் குணமாகிவருவதைக் கவனித்த மருத்துவர்கள் உடனே அதை விரைவுப்படுத்தும் வேலையில் இறங்கினார்கள். ஒரு சில நாட்களிலே மாவீரர் மீண்டெழுந்தார்; காயங்கள் ஆறின; வலுவற்ற உடல்நிலையைப் பொருட்படுத்தாமல், தன் வீரர்களுக்குத் தன்னைக் காண்பிக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அந்த வதந்திகளைப் பற்றி என்ன நினைப்பது என்று யூமனியஸுக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த நாளில் மற்ற படைவீரர்களைப் போலவே அவரும் நம்பினார்: அலெக்ஸாண்டர் ஒரு கடவுள் என்று; அமரத்துவம் வாய்ந்தவர் என்று. மனிதனுக்குத் தெரிந்த எந்த ஆயுதத்தாலும் சாகாதவர் என்று. இந்த மாபெரும் மாற்றத்துக்கு, கடவுளின் குகைக்கு அலெக்ஸாண்டர் செய்த விஜயம் பெரும்பங்கு வகித்திருக்கிறது என்று யூமனியஸ் அறிந்துகொண்டான்.

அந்தக் குகையில் ஒளிந்திருந்த ரகசியத்திற்கும், அந்த இரவில் அலெக்ஸாண்டர் குகையில் நுழைந்து செய்திருந்த செயலுக்கும், பாபிலோனில் இறுதி நாட்களில் அவரைக் காய்ச்சலோடும், தாகத்தோடும், பேசமுடியாத நிலைக்குத் தள்ளிய நோய்க்கும் தொடர்பு இருந்தது என்று யூமனியஸ் அறிவான். கடவுளாக வேண்டும் என்ற அலெக்ஸாண்டரின் லட்சியம் நிறைவேறிவிட்டது; ஆனால் அதற்கான

விலை அவரின் உயிர் என்பதுதான் முரண்நகை.

அலெக்ஸாண்டரின் இந்த ரகசியம்தான், அந்த மாவீரன் இறந்து ஆறுநாட்கள் ஆனபின்பும் அந்த உடல் அழுகிவிடாமல், அவர் உயிர்ப்புடன் தூங்குவது போன்று, புதியதாகவும் வெள்ளைவெளேர் என்றும் இருந்ததற்குக் காரணம் என்பதையும் யூமனியஸ் அறிவான்.

இப்போது யூமனியஸ் ஒரு கைதி; அலெக்ஸாண்டரின் தளபதிகளில் ஒருவனின் கைதி. அவன் நிச்சயம் யூமனியஸைத் தூக்கிலிடப்போகிறான்.

அலெக்ஸாண்டரின் பெரிய ரகசியம் பாதுகாப்பாக இருக்கிறது என்பதுதான் அவனது ஒரே ஆறுதல். 'அலெக்ஸாண்டரின் செயல்கள்' என்ற காலிஸ்தெனிஸ் புத்தகத்திலிருந்து எல்லா தகவல்களையும் அவன் மெய்ப்படப் பதிவுசெய்து வைத்திருந்தான். காலிஸ்தெனிஸ் என்ற சரித்திர ஆசிரியனை அலெக்ஸாண்டர் தூக்கிலிடுவதற்கு முன்பு, அரசனின் சார்பாக சோக்டியன்கள் தேசத்தில் காலிஸ்தெனிஸ் மேற்கொண்ட பயணத்தைப் பற்றிய பகுதிகளை அந்த அதிகாரப் பூர்வ ஆவணங்களிலிருந்து யூமனியஸ் நீக்கிவிட்டான். அதற்குப் பதிலாக, காலிஸ்தெனிஸின் செயல்பணியுடன், அலெக்ஸாண்டரோடு தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றிய விவரணையை தன் சொந்த ரகசிய குறிப்பேட்டில் பதிவுசெய்து வைத்திருந்தான். அதைப் போர்க்களத்தில் தன் பாசறையில் மறைத்து வைத்திருந்தான்.

தன் வீரர்களை ஒரு 'பயங்கர விலங்குக் கூட்டம்' என்று கேவலமாக சித்தரித்து, ஆன்ட்டிகோனஸோடு ஏற்பட்ட யுத்தத்திற்கு முன்னால் தன் ஆவணங்களையும், குறிப்பேடுகளையும் அவன் அழித்துவிட்டான். ரகசியக் குறிப்பேட்டை மாத்திரம் ஒரு நம்பிக்கையான தூதுவன்மூலம் அலெக்ஸாண்டரின் தாயார் ஒலிம்பியாசுக்கு அனுப்பினான். அலெக்ஸாண்டரின் அம்மா மாசிடோனியாவின் சிம்மாசனத்தை பேராசைப்பிடித்த காசாண்டரிடமிருந்துக் காப்பாற்றுவதில் முனைப்பாக இருந்தாள்.

ஆன்ட்டிகோனஸ்க்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

யூமனியஸ் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான். சக்கரவர்த்திக்குச் செய்யவேண்டிய கடமையை அவன் செய்துமுடித்து விட்டான். ஆன்ட்டிகோனஸ், தாலமி, காசாண்டர் ஆகிய மனிதர்கள் அலெக்ஸாண்டரின் அகண்ட ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள். சிந்துவெளியில் அலெக்ஸாண்டரின் ரகசியம்

பற்றி அவர்களுக்கு ஒருபோதும் தெரியப் போவதில்லை; உலகத்திற்கும்தான்.

கி.பி. 391

ரகசியத்தின் தகனம்

தனித்திருந்த ஒரு கிராமத்துச் சாலையில் வெற்று வண்டி மெல்ல மெல்ல ஊர்ந்துகொண்டிருந்தது. பாதி நிலாவின் மெலிந்த வெளிச்சத்தில் பயணம் பிரகாசமாக இருந்தது. குதிரை வேகமற்று நடைதளர்ந்து சென்றது; தனது பணி முடிந்துவிட்டது; இனி அவசரகதி தேவையில்லை என்று அது அறிந்துகொண்டது போல் தோன்றியது. மூன்று நாட்கள் முன்புவரை வண்டி ஏதோவோர் அரும்பெரும் பொக்கிஷத்தைச் சுமந்துகொண்டிருந்தது; மதிப்பிடமுடியாத ஏதோவொன்று. கடந்த 500 வருடங்களாக உலகம் வழிபட்ட ஏதோவொன்று.

இனி எதுவும் பாதுகாப்பானது இல்லை. மத்திய கிழக்கில் உதித்த புதிய மதம் உலகம் முழுக்கப் பரவிக்கொண்டிருந்தது. கிறிஸ்து என்றழைக்கப்பட்ட ஒரு மனிதனின் வாழ்வையும், மரணத்தையும் அடிப்படையாகக் கொண்ட அந்த மதம் எகிப்தை வந்தடைந்தது. அங்கே 500 வருடங்களுக்கு மேலே கிடத்தப்பட்டிருந்தது அந்த வழிபாட்டுச் சின்னம். தேவனின் மகன் என்று தாங்கள் நம்பிய தலைவனின் பெயரிலே தங்களைக் கிறித்துவர்கள் என்றழைத்துக் கொண்ட மதம் மாறியவர்கள், பழைய கடவுள்களைக் கேள்விக்குள்ளாக்கிக் கொண்டிருந்தார்கள். சிலைகள் இடிக்கப்பட்டன; ஆலயங்கள் அழிக்கப்பட்டன; பிரதிமைகள் சேதாரமாயின.

அந்த அலை அலெக்ஸாண்ட்ரியாவின் புனித ஸ்தலத்திற்கு வந்துசேர நீண்டகாலம் ஆகப்போவதில்லை. அங்கேதான் வழிப்பாட்டுப் பொருள் 500 ஆண்டுகளாக அசைவற்றுப் புதைக்கப்பட்டிருந்தது.

அது பாதுகாக்கப் படவேண்டும். அந்தப் பொறுப்பை ஓர் அமைப்பு எடுத்துக்கொண்டிருந்தது. இப்போது வெறுமையாகத் திரும்பிப் போய்க்கொண்டிருக்கும் வண்டியிலிருந்த பொருட்கள் அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து நதிகள் வழியாக, கடல்கள் வழியாகக் கடத்தப்பட்டன; படகுகளில், கப்பல்களில், வண்டிகளில், சரக்குப்பெட்டி வாகனங்களில் அமைப்பின் இலச்சினை இருந்தது.

ஐந்து தலைகள் கொண்ட ஓர் ஒற்றை நாகம் தாக்கவருவது போல எழுந்தது.

இந்த இலச்சினைதான், பயணித்துக் கொண்டிருந்த பொக்கிஷத்திலிருந்து ஆர்வமான கண்களையும், அறியவிழையும் மனங்களையும் திசைதிருப்பியது. ஏனென்றால் பார்த்தவர்களைப் பயப்படவைக்கும் இலச்சினை அது. அந்த அமைப்பு பரமரகசியமானது; அது என்னவென்று யாருக்கும் தெரியாது; அல்லது அதன் உறுப்பினர்கள் யார் அல்லது அதன் ஆதிமூலம் எதுவென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அதன் செயல்கள் யாருக்கும் தெரியாமல் இல்லை.

பணிமுடிந்தவுடன் இறுதியில் வண்டியின் ஓட்டுநர் பாலைவனம் நோக்கிப்போய்க் கொண்டிருந்தான். ஓட்டுநர் கர்மல் இறுதி நிறுத்தம் ஒன்றில் நிற்க வேண்டியதாயிற்று.

அமைதியான அரவமற்ற ஒரு கிராமத்தின் ஊடாக வண்டி போய்க்கொண்டிருந்தது. கிராமம் தூக்கத்தில் இருந்தது. அந்த நிர்ச்சலனம், வண்டியின் பக்கவாட்டுகளில் வர்ணத்தில் பொறிக்கப்பட்டிருந்த பாம்பின் இலச்சினையால் கூட உருவாகியிருந்திருக்கலாம்.

ஒரு பெரிய வீட்டின் எல்லைச் சுவரை அடைந்தது வண்டி. கதவுகள் திறந்துகிடந்த வாயிலில் நுழைந்தது. கர்மலின் வருகை ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டிருந்தது போலத் தோன்றியது. ஓடுபாதைமுடிவில், கற்களாலும் செங்கல்களாலும் கட்டப்பட்டிருந்த பலமாடிக் கட்டிடம் கொண்ட வீடு இருந்தது.

வீட்டின் பிரதான கதவின் முன்னால் வண்டி நின்றது. கர்மல் கீழிறங்கினான். அவன் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கதவு திறந்தது; தலையும் உடலும் துணியால் போர்த்தப்பட்ட ஒரு நெடிய உருவம் வெளியே வந்தது.

'முடிந்ததா?' என்ற ஓர் ஆழமான குரலில் கேட்டது மறைவான அந்த உருவம்.

கர்மல் களைப்பாகத் தலையாட்டினான். நீண்ட பயணம் மேற்கொண்டதால் அவன் மிகவும் தளர்ந்துபோயிருந்தான்.

'நல்லது. இப்போது நீ என்ன செய்யவேண்டும் என்று தெரிந்துகொள்.' அந்த மனிதன் சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

'பொறுங்கள்,' என்று கர்மல் கையை நீட்டினான்.

உருவம் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தது. 'என்ன அது?'

'இதை வைத்துக்கொள்ளுங்கள்.' கர்மல் அந்த மனிதனின் கையில்

ஏதோவொன்றை வைத்துவிட்டு வண்டிக்குள் ஏறினான். அவன் முடிக்கவேண்டிய வேலை ஒன்று பாக்கியிருந்தது.

அந்த மனிதன் கர்மலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க, வண்டி வெளியேறி பார்வையைவிட்டு மறைந்தது. கர்மல் தந்திருந்த ஓர் உலோகப் பொருளை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டிருந்தது அவன் கை. பின், அவன் வீட்டுக்குள் விரைந்தான்; அங்கியைக் கழற்றி எறிந்தான். மெலிந்த முகமும், ஆழமாகப் பதிக்கப் பட்ட கண்களும், சன்னமான உதடுகளும் வெளிப்பட்டன.

முஷ்டியை விரித்து உள்ளங்கையில் இருந்த சின்ன தாமிரக் குப்பியை வெறித்தான். பின், மீண்டும் ஒருமுறை முஷ்டியால் அதை மூடிக்கொண்டு, படிக்கட்டுகளில் துள்ளிக்குதித்து ஓடி, முதல் தளத்தில் இருந்த ஒரு படிப்பறைக்குள் நுழைந்தான்.

கதவை மூடிவிட்டு மேஜையின் முன்பு உட்கார்ந்தான். அவனது முகம் வெளிறிப் போயிருந்தது; கைகள் நடுங்கின.

அந்த முட்டாள் கர்மல் என்ன செய்திருக்கிறான்?

கர்மல் அமைப்பின் கட்டளையை மீறமாட்டான் என்று அவனுக்குத் தெரியும். கர்மல் மிகப்பல்வியமாக வண்டியை சில மைல்தூரம் ஓட்டிக்கொண்டுபோய், குதிரையை பாலைவனத்தின் ஆழத்தில் தவழவிட்டு, பின் தன்கழுத்தைத் தானே அறுத்துக் கொள்வான். பொக்கிசத்தின் இடத்தை அப்போதுதான் யாரும் அறிந்துகொள்ள முடியாது. பாதுகாக்கப்பட வேண்டிய நினைவுப்பொக்கிசம் நிரந்தரமாக மறைந்துவிட வேண்டும் என்று அமைப்பு ஆணையிட்டிருந்தது.

குப்பியின் ஒருமுனையை கத்தியால் கவனமாக அறுத்து திறந்து அதை மேஜைமீது வைத்து குலுக்கினான்.

மெல்லிய கன்றுக்குட்டியின் தோலில் செய்த காகிதத்துண்டு வெளியே வந்தது. அவன் முனகினான். அதைப் பார்க்காமலே அது என்னவென்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

அது ஒரு வரைபடம்!

உடனே அதை அவன் மடித்து மீண்டும் குப்பிக்குள் திணித்தான். இந்த வரைபடத்தைப் பற்றி அமைப்புக்கு ஒன்றும் தெரியவே கூடாது. எப்போதும் ரகசியமாகவே மறைந்திருக்க வேண்டிய ஓர் இடத்தைப் பற்றிய ஒரே ஒரு தடம் இதுதான்.

முதலில் அதை அழித்துவிடலாம் என்று நினைத்தான். பின்

நினைப்பைக் கைவிட்டான். அதன் இருப்பை அறிந்த ஒரே ஒரு மனிதன் அவன்தான். பின்னாடி பயன்படலாம்; எப்போதாவது அமைப்போடு அவனுக்கு பிரச்சினை வருமென்றால்.

ஆனால் வரைபடம் அவன்மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய வகையில், இடத்தில் தந்திரமாக மறைக்கப்பட வேண்டும். அவனுக்குப் பின்னாடி அதன் இடம் ரகசியமாகவே தேங்கிவிடும்.

குப்பியை மறைக்கும் இடம் அவனுக்குத் தெரியும்.

ஜூன், 1990

செயிண்ட் ஜேம்ஸ் கல்லூரி, பிலடெல்பியா, அமெரிக்கா

மைக் ஆஷ்ஃபோர்ட் பற்களை நறநறவென்று கடித்தான். நகல் எந்திரம் இன்னும் வேகமாக வேலை செய்யவேண்டும் என்று துடித்தான். அது புத்தம்புதிய நவீன எந்திரம். சாதாரண காகித்தைப் பயன்படுத்தி நகல் எடுக்கும். முன்பு உபயோகத்தில் இருந்த மின்நிலை நகல் எந்திரத்தை விட அல்லது ஈரக் காகித எந்திரத்தை விட மிகச் சிறந்தது. ஆனாலும் அந்த எந்திரம் அவனது நோக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் வேகம் குறைந்திருந்தது.

அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின; இரண்டு மணிநேரத்திற்கு முன்பு அவனுக்கு வந்த தொலைபேசி அழைப்பைப் பற்றி யோசித்தான்.

'மைக் ஆஷ்ஃபோர்டு?' மறுமுனையிலிருந்து குரல் ஒலித்தது.

'ஆமாம். யார் பேசுறது?'

'வேண்டாம். அது முக்கியமல்ல. கவனமாகக் கேளு. உன்கிட்ட இருக்கும் ஒரு விஷயம் எனக்குத் தேவை. நேற்று நீ கண்டுபிடித்தாயே பாப்பிரஸ் ஆவணங்கள்; அதுதான்.'

ஆஷ்ஃபோர்டு குழம்பினான். நூலகத்தின் தரையடித் தளத்தில் ஒரு பெட்டியில் தான் கண்டுபிடித்த பாபிரஸ் ஆவணங்கள் பற்றி அவன் யாரிடமும் சொல்லவில்லையே. செவ்வியல் துறை ஆசிரியர்களைத் தவிர. அவர்களில் யாராவது ஒருவர் செய்தியைக் கசிய விட்டிருப்பார்களோ? அது சாத்தியமில்லை. ஆனால் முகந்தெரியாத தொலைபேசிக் குரல்காரனுக்குத் தெரிந்திருக்கிறதே.

'என்ன ஆவணங்கள்?' என்று கேட்டான், ஆழம் பார்ப்பவனாய்.

தொலைபேசிக் குரல் கடுமையானது. 'ஆஷ்ஃபோர்டு, என்கூட விளையாடாத. இப்போ நான் ஒரு முகவரி கொடுப்பேன். அங்க அனுப்பிவை ஆவணங்களை. உறையிட்ட கவரில் போட்டு அனுப்பு. பாபிரஸ் நல்ல நிலைமையில இருந்தாலும், அது கிழிஞ்சிடக் கூடாது.' பில்டெல்பியா புறநகர்க் குரலில் அவன் முகவரியையைச் சொன்னான்.

ஆஷ்ஃபோர்டு அதிர்ந்துவிட்டான். பாபிரஸின் நிலை வரைக்கும் ஆவணங்கள் பற்றி தொலைபேச்சுக்காரனுக்குத் தெரிந்திருக்கிறது.

'நான் மறுத்தால்?' என்று பதிலடி கொடுத்தான். 'இந்த ஆவணங்கள் கல்லூரிச் சொத்து. நான் ஒரு நூலகன். அதைக் காப்பாற்றுவதுதான் என் பொறுப்பு. கேட்டவனுக்கு எல்லாம் கொடுக்கிறதுக்கு இல்லை.'

தொலைபேசிக் குரலில் பொறுமையின்மை ஒலித்தது. 'அப்படியா. நல்லது. உனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்த்து; அதை நீ தவறவிட்டுட்ட.'

அழைப்பு திடீரென்று துண்டிக்கப்பட்டது. தொலைபேசியின் உயிர்ப்பொலியைக் கேட்டுக் கொண்டிருந்தான் ஆஷ்ஃபோர்டு.

அது ஒரு பைத்தியக்காரனின் அழைப்பு என்று அவன் முடிவுகட்டியிருப்பான். ஆனால் 45 நிமிடம் கழித்து ஓர் அதிர்ச்சியான செய்தி வந்தது. செவ்வியல் துறையின் ஆசிரியர் கார்ல் டன் தன் வீட்டு முன்பு தெருவைக் கடந்த போது ஒரு காரில் அடிபட்டு இடத்திலே இறந்துபோனார். அவரை அடித்துவிட்டு கார் மாயமாய்ப் பறந்துசென்றது. நேரில் கண்ட சாட்சிகள் இல்லாததால் காரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரிடம்தான் அவன் பாபிரஸ் ஆவணங்கள் பற்றி பேசியிருந்தான்.

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் ஆஷ்ஃபோர்டு ஒருமாதிரியாகி விட்டான். டன் நல்ல மனிதர். தீவிர கத்தோலிக்கர். ஜெசூட் கலைக்கல்லூரியில் நன்றாகப் பொருந்தியிருந்தார். தொலைபேசி நிழல்மனிதன் இந்த விபத்தின் பின்னால் இருந்திருப்பானோ? ஒரே நேரத்து சம்பவங்களின் அகஸ்மாத்தான தன்மை போல தோன்றியது.

கல்லூரியின் துறைத்தலைவரும் செவ்வியல் இலக்கியப் பேராசிரியருமான லாரன்ஸ் ஃபுல்லர் இரண்டு வாரங்களுக்கு முன்பு காணாமல் போன புதிரான நிகழ்வு இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது. சிக்காகோ பல்கலைக்கழகத்தின் கீழ்திசைக் கல்லூரியில் நடந்த ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் திரும்பிவந்தார். ஓட்டல் அறையைக் காலிசெய்துவிட்டு வெளியே வந்த அவர் காற்றில்

காணாமல் போனார். ஓட்டல் வாயில் ஊழியனும், அறை ஊழியனும் அவர் ஒரு வாடகைக்காரில் ஏறியதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அவர் விமான நிலையத்திற்குப் போகவே இல்லை. ஃபுல்லரின் பணிஒப்பந்த நிபந்தனைகள் படி, கல்லூரி அவர் கடிதங்களையும், ஆவணங்களையும் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. வரிசைப்படுத்தப் படாமல், பெட்டிகளில் அடைக்கப்பட்டு தரைத்தளத்தில் அவை கிடந்தன. ஃபுல்லரின் உடைமைகளைப் பட்டியலிட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு பெட்டியில்தான் ஆஷ்ஃபோர்டு அந்த பாபிரஸ் ஆவணங்களைக் கண்டுபிடித்தான்.

அந்த நிகழ்வு அவனை அப்போது எந்தச் சூழ்நிலையில் விட்டுச்சென்றது? ஆஷ்ஃபோர்டு பிடிவாதமாக இருந்தான். தொலைபேசி அழைப்பாளியின் வேண்டுகோளை அவன் நிராகரித்துவிட்டான். அடுத்து அவன்தானா?

வேகமாக யோசித்து அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தொலைபேசி அழைப்பாளியை விட ஒரு விஷயத்தில் அவனுக்குப் பலம் அதிகமாக இருந்தது. பாபிரஸ் ஆவணங்களோடு அவன் கண்டுபிடித்த இரண்டு குறிப்பேடுகள் பற்றி யாருக்கும் தெரியாது. தன்னிடமோ அல்லது வேறு யாரிடமோ அவன் சொல்லியிருக்கவில்லை. இரண்டு குறிப்பேடுகளும் ஆங்கிலத்தில் இருந்தன; ஒன்று பாபிரஸ் ஆவணங்களின் மொழிபெயர்ப்பு. இந்த உண்மை குறிப்பேட்டின் முதல் பக்கத்தில் ஃபுல்லரின் கையெழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த மொழிபெயர்ப்பு அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது என்றால், இரண்டாவது குறிப்பேடு அவனை குழப்பத்தில் ஆழ்த்தியது; மயக்கத்தைத் தந்தது.

இரண்டு குறிப்பேடுகளும் அவன் நினைத்தது போன்ற அர்த்தம் கொண்டவை என்றால், ஆயிரக்கணக்கான வருடங்கள் பழையதான அரத்தமற்ற ஆவணங்களை சும்மா தோண்டியெடுத்ததை விட அவை ஆகப்பெரிய கண்டுபிடிப்பாகும்.

உலகத்தின் எதிர்காலம் இதில் பணயமாக்கப் பட்டிருக்கலாம்.

எந்திரம் கடைசி நகலைத் துப்பியது. ஆஸ்ஃபோர்டு துரிதமாக காகிதங்களைச் சேகரித்து ஒன்றாக தைத்தான். இரண்டு செட் நகல்களை எடுத்து அவற்றைக் கவரில் போட்டு அதன்மீது பெறுநர் முகவரியை எழுதினான். நடுங்கிய அவன் கைகள் அவனது மனநிலையைக் காட்டியது. ஒரு சில கணங்கள், தன் செயலை மறுபரிசீலனை செய்வது போல, முத்திரையிடப்பட்ட உறையையே அவன் வெறித்துப்பார்த்தான்.

கட்டிடத்துறையிலிருந்த தன் சகஊழியனை அழைத்தான். அந்தப் பாக்கெட்டை புறநகர் 'ஃபெட் எக்ஸ்' அலுவலகத்தில் கொண்டுசேர்க்க சக ஊழியன் முன்வந்தான். ஐந்துநிமிடம் கழித்து, பாக்கெட் பாதுகாப்பாகச் சென்றது, அதன் சேருமிடம் நோக்கி.

சக ஊழியன் சென்றபின்பு, ஆஸ்ஃபோர்டு நாற்காலியில் சரிந்தான். குறிப்பேடுகளில் இருக்கும் விஷயத்தை அறிந்த மனிதனாக தான் மட்டுமே இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த, எல்லாவற்றையும் அவன் செய்துமுடித்துவிட்டான். அதீதமான கடமை உணர்வு கொண்ட ஓர் எளிய மனிதன் அவன். இந்தச் சூழ்நிலையில் கூட, அந்தக் குறிப்பேடுகளை அப்படியே அசலாக தன் நண்பனுக்கு அனுப்பியிருந்திருக்க முடியும் என்ற எண்ணம் அவனுக்கு தோன்றவில்லை. அவை கல்லூரியின் சொத்து. இங்கேதான் இருந்தாக வேண்டும். பாபிரஸ் ஆவணங்கள் போல. குறிப்பேடுகளை நகலெடுத்து அனுப்பியதுதான் அவன் கண்ட தீர்வு.

தனக்கு என்ன நேரப்போகிறது என்பது ஆஷ்போர்டுக்குத் தெரியும். புதிரான தொலைபேசி அழைப்பாளி ஏமாளி போலத் தெரியவில்லை. அடுத்து தன்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி ஆஷ்ஃபோர்டுக்கு ஒன்றும் புரியவில்லை. ஓடிவிடலாம் என்று யோசித்தான். ஆனால் அவன் எங்கே போகமுடியும்? கடந்த முப்பத்தைந்து வருடங்களாகவே இந்தக் கல்லூரி அவனது வாழ்க்கையாகவே இருந்திருக்கிறது. இத்தனைக் காலம் கல்லூரி வளாகத்தைத் தாண்டி அவன் வெளியே சென்றதில்லை. ஒரே ஒரு தடவை 1983-ல் வாஷிங்டனில் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள சென்றான். அப்போதுதான் கல்லூரிக்கு வெளியே அவனுக்கு ஒரே ஒரு நண்பன் கிடைத்தான். ஆதிகாலத்து ஆவணங்களைக் காக்கும் கலையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு சரித்திர ஆசிரியன் இந்தியாவிலிருந்து வந்திருந்தான். ஆச்சரியப்படும் வகையில் அவர்கள் நண்பர்கள் ஆனார்கள். பலவருடங்களாகத் தொடர்பில் இருந்தார்கள். இந்த நண்பனுக்குத்தான் நகல்களை அவன் அனுப்பியிருந்தான்.

வருவது வரட்டும் என்று அவன் கண்களை மூடி பிரார்த்திக்க ஆரம்பித்தான். பிரச்சினைகள் வரும் போதெல்லாம், ஒரு தீவிர கத்தோலிக்கனான அவனுக்கு இது ஒன்றுதான் ஆதரவு.

தன் அலுவலகம் நோக்கி வந்த காலடிச் சத்தங்கள் அவன் கண்களைத் திறந்தன. ஐந்து மனிதர்கள் நுழைந்தார்கள்: சுவர்களின் அருகே ஆளுக்கொருவராய் நின்றார்கள். அவர்களிடம் ஆயுதம்

இருந்தது. அவர்களின் ஜாக்கெட்டில் துப்பாக்கி உறை துருத்திக்கொண்டிருந்ததை அவன் கவனித்தான். நடுவில் இருந்த ஒருவன் உயரமாய், நிலக்கரி கறுப்புக் கண்களோடும், தீர்க்கமான பார்வையோடும் இருந்தான். அவனிடம் மட்டும் ஆயுதம் இல்லை. எப்போதும் ஒரு தீவிரமான தத்துவச் சிந்தனையில் இருப்பவன் போன்று தோன்றினான். இந்தக் கூட்டத்தின் தலைவன் அவன்தான் என்று தெளிவாகத் தெரிந்தது.

ஆயுதமற்ற மனிதனின் கண்கள், ஆஷ்போர்டின் மேஜையிலிருந்த பாபிரஸ் ஆவணங்கள்மேல் விழுந்தன. 'ஓ எனக்காக நீ தயாராக வச்சிருக்க.' அவன் வார்த்தைகள் புகழ்வது போல ஒலித்தன. ஆனால் அவன் முகத்தில் இருந்த ஆபத்தான தோற்றம் மாறவில்லை. அவனது சிறு சைகையில், ஒரு மனிதன் பாபிரஸ் ஆவணங்களை எடுத்து, தான் கொண்டுவந்திருந்த சூட்கேசில் திணித்தான்.

ஆஷ்ஃபோர்டு எதிர்க்கும் தொனியில் முறைத்தான். அவனிடம் இன்னும் ஒரு ரகசியத்திட்டம் இருந்தது. அவன் நகலெடுத்திருந்த இரண்டு குறிப்பேடுகள் அவனது மேஜை டிராயரில் இருந்தன.

'இன்னும் ஏதோ வச்சிருக்க, இல்லியா?' என்றான் தலைவன்.

'என்ன சொல்ற? நான்தான் பாபிரஸ் ஆவணங்களைத் தந்திட்டேனே.' ஆஷ்ஃபோர்டு தன் வார்த்தைகள் உண்மையை வெளிக்காட்டாது என்று நம்பிக்கையில் இருந்தான். அவன் எப்போதுமே பொய்சொல்வதற்கு லாயக்கற்றவன்.

'இந்த ஆவணங்களோடு நீ கண்டுபிடிச்சியே அந்த ரண்டு குறிப்பேடுகள்,' என்றான் அவன். குரல் கடுமையாக ஒலித்தது. 'அதைப் பத்தி நீ என்கிட்ட சொல்லக்கூடாதுன்னு இருந்த. இல்லியா? எங்களுக்குத் தெரியாதுன்னு நினைச்சிட்ட.'

ஆஷ்போர்டு தாடை ஆச்சரியத்தில் தொங்கியது. அவர்களுக்கு எப்படித் தெரியும்? அவற்றைப் பற்றி அவன் யாரிடமும் ஒன்றும் சொன்னதில்லையே.

தலைவன் தலையசைத்தான். ஒருவன் மூடிய கைமுட்டியால் ஓங்கி ஓர் அறைவிட்டான். ஆஷ்ஃபோர்டு வலியில் கத்தினான். மூக்கு உடைந்து ரத்தம் முகமெல்லாம் வழிந்தது.

'மேஜையில் தேடுங்கள்,' என்று தலைவன் ஆணையிட்டான். 'மூன்று மனிதர்கள் டிராயர்களில் துழாவினார்கள். ஒருவன் குறிப்பேடுகளை எடுத்துத் தூக்கிப்பிடித்து அவற்றை பாபிரஸ்களோடு

சூட்கேசில் திணித்தான்.

முன்னால் வந்து தலைவன் ஆஷ்ஃபோர்டை முறைத்தான். 'இந்த ஆவணங்கள் கிடைச்சப்பிறகு, உன்னைக் கொல்லத்தான் நினைச்சேன். ஆனால் நீ என் மனசை மாத்திட்ட. நீயும் எங்ககூட வர்ற. மாயமாய் காணாம போகப்போற. அந்தக் கிழட்டு ஃபுல்லர் மாதிரி. இதுக்குப் பதில் நான் உன்ன கொன்னுபோட்டிருக்கலாம்ன்னு உனக்குத் தோணும்.'

பொருளடக்கம்

1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22

75

76

1

நிகழ்காலம்

முதல்நாள்
கிரீஸ், கொரினோஸ்க்கு வடக்கே, மார்க்கிகியலோஸ்க்கு தெற்கே

அலைஸ் கைப்பேசியை காதில் அழுத்தியவாறு எதிர்முனையில் தொடர்ந்து மணியொலி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்டாள். எல்லா அழைப்புகளுக்கும் இதே மாதிரியான எதிர்வினை வந்ததால் கோபமும் விரக்தியும் அவள்முகத்தில் கொப்பளித்தன.

இந்தத் தடவையும் பதில் இல்லை.

மீண்டும் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டதும் எரிச்சலுடன் நாவை அழுத்திக்கொண்டாள். அவள் அழைத்த எண்ணிலிருந்து பதில் அழைப்பு வராது என்று தெரிந்துகொண்டாள்.

நான் ஏன் அழைப்பதற்கு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்?

சில கணங்கள் கைப்பேசியை வெறித்துவிட்டு அதை தன் பாக்கெட்டில் போட்டுக்கொண்டாள். தொலைதூர உறவைப் பேணிக்காப்பது எளிதானதல்ல. கடந்த 12 மாதங்களில் பெரும்பாலான நேரத்தில் அவள் இங்கேதான் முகாமிட்டிருந்தாள். பிட்னா அகழ்வாராய்ச்சித் திட்ட கிரேக்க-அமெரிக்க மிஷனால் ஒன்றிணைக்கப்பட்ட சர்வதேச குழுவின் அங்கமாக வந்திருந்தாள். ஆதிகாலத்து கிரேக்கத்தின் மிகவும் புதிரான ரகசியங்களில் ஒன்றை உலகத்திற்குத் தெரிவிக்கும் நிலைக்கு வந்துவிட்டது அந்தத் பணித்திட்டம். பலமாதங்களின் பிரிவு அவளது தனிப்பட்ட உறவைப் பாதித்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பு வார்த்தைச் சாடல்களில் முடிந்தது அந்த உறவு. அப்போதிருந்து அவளது நண்பன் அவளை

அழைக்கவில்லை. அவளது கைப்பேசி அழைப்புகளுக்கும் பதில் சொல்லவில்லை.

அடிமுட்டாள். மன்னிப்புக் கேட்கும் நாகரிகம் அவனிடம் இல்லை. குறைந்தபட்சம் அவளின் அழைப்புக்கு அவன் பதில் சொல்லலாம். அப்போதுதானே அவள் விரிசலைச் சரிசெய்து உறவைச் சீர்ப்படுத்தமுடியும். ஒருவேளை... தலையைக்குலுக்கி அந்தக் கசப்பான எண்ணத்தை புறந்தள்ளினாள்.

படபடப்பான ஒரு மாணவனால் அவளது சிந்தனை தடைப்பட்டது. சுரங்கத்தில் இறங்கியதால் மூச்சிறைத்தது அவனுக்கு. நூற்றாண்டின் கண்டுபிடிப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட சுரங்கம் அது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலே திறக்கப்படாமலே இருந்த கல்லறை. கடந்த 150 வருடங்களாக அனுமானங்களுக்குட்பட்ட ஒரு விஷயமாக இருந்த கல்லறை. அகழ்வாராய்ச்சிக் குழுவிற்கு, 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் அடங்கிய படை ஒன்றும், உள்ளூர் தொழிலாளிகள் படையும் உதவிசெய்தன. திட்டத்தின் இரண்டு இயக்குநர்கள் – ஒருவர் அமெரிக்கன், மற்றொருவர் கிரேக்கன் – *E*-75 சுங்கவரிச் சாலைவழியாக 50 கிலோமீட்டர் தூரம் தள்ளியிருக்கும் தெசலோனிக்கியில் இருந்தனர்.

'அலைஸ், கல்லறை நுழைவுக்கு நாங்க போய்ட்டோம்!' அவன் குரலில் இருந்த பதற்றம் தெளிவாகவும் தொற்றாகவும் ஒலித்தது. 'வா! வேகமா வா!' பூமிக்கடியில் ஆழத்தில் இருந்த சுரங்கத்திற்கு இட்டுச்செல்லும் திறந்த குறுவழிக்கு மீண்டும் அவன் நடைபோட்டுக்கொண்டே சொன்னான்.

நண்பனைப்பற்றிய எல்லா நினைவுகளும் அவள் மனதைவிட்டு அகன்றன. முதுகுப் பையைச் சரிசெய்து கொண்டு அவள் மாணவனைத் தொடர்ந்தாள். அவள் நினைவுகள் 18 மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு கணத்தை நோக்கிப் பறந்தன. அப்போதுதான் அந்தக் குழுவில் சேரும்படி அவளுக்கு அழைப்புவந்தது.

அந்த அழைப்பு வந்தவேளையில் தான் அவள் தன் நண்பனைச் சந்தித்திருந்தாள் என்பது முரண்நகை. அந்தச் சந்திப்பின் களிப்பில் அவள் மிதந்துகொண்டிருந்தாள்; அதைப்பற்றி அவள் ஒருபோதும் பேசியதில்லை. அந்த நேரத்தில் அதை அவள் கடந்துபோகப் போராடினாள். இறுதியில் அதை ஒரு பலநூற்றாண்டு-ரகசியம்போல தன் மனதின் ஆழமான அடுக்குகளுக்குள் புதைத்துவிட்டாள். அப்போதிருந்து அவளுக்கு அவன் ஆதரவாக இருந்தான்; அவளும்

அதற்காக நன்றியுணர்ச்சியுடன் இருந்தாள். சில மாதங்கள் அவனோடு ஊர்சுற்றித் திரிந்து, பின் அவனோடு ஒன்றாக வாழ ஆரம்பித்தாள்- அகழ்வாராய்ச்சிக்கான அழைப்பு வரும்வரை இன்று ஆதிகால கிரேக்கத்தின் கடைசியான ஆகப்பெரிய ரகசியத்தை உலகத்திற்குத் திறந்துக் காட்டப்போகும் வேளையில், இனி அவளுக்காக அவன் இருக்கமாட்டான் என்பது போலத் தோன்றியது.

கல்லறைக்குச் செல்லும் மாணவனைப் பின் தொடர்ந்தபோது, கோடீஸ்வர வள்ளல் குர்ட் வாலஸைச் சந்தித்த நிகழ்ச்சி அவளுக்கு ஞாபகம் வந்தது. வாலஸ் தனது வாலஸ் அகழ்வாராய்ச்சி அறக்கட்டளை மூலம் இந்த ஆராய்ச்சிக்கு நிதியுதவி செய்துகொண்டிருந்தார். அந்த அறக்கட்டளை தொல்பொருள் ஆராய்ச்சிக்காகவும் பழங்கால நாகரிகங்களைப் பற்றிய ஆய்வுக்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிறுவனம். மேலும் "மறக்கப்பட்ட வேர்கள்" என்ற இயக்கத்தின் பின்னாலும் அவர் இருந்தார். அவர் எழுதியிருந்த ஐந்து புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு, அறக்கட்டளை உருவாக்கியிருந்த எதிர்-பரிணாம இயக்கம் அது. அவர் புத்தகங்களின் பொதுவான கரு இதுதான்: மனிதகுலம் தன் வேர்களை மறந்துவிட்டு, பரிணாமக் கொள்கையின் அடிப்படையில் ஒரு தவறான கருத்திற்குத் திரும்பியது; உண்மையான மனிதகுலத்தின் தோற்றுவாய் உலகம் முழுக்கவிருந்த கலாச்சாரங்களின் தொன்மங்களில் ஆழமாக மறைக்கப்பட்டிருக்கின்றன.

அலைஸ், வாலஸைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள்; படித்திருந்தாள். ஆனால் அவரைப் பற்றியோ அவரின் கருத்துருவாக்கங்களைப் பற்றியோ அவளுக்கு எந்தக் கருத்தும் இருந்ததில்லை. எனினும், அந்த மனிதனின் அறிவுத் திறனைக் கண்டும், அவரது கண்ணியமான நேர்த்தியான பாணியைக் கண்டும் அசந்து போயிருந்தாள். அவரைச் சந்திப்பதற்காக அழைக்கப்பட்டு, அவள் சென்று பார்த்த அவரது கம்பீரமான தங்குமிடத்தையும் கண்டு அசந்துபோயிருந்தாள்.

பத்து நிமிடந்தான் சந்திப்பு நிகழ்ந்தது. வாலஸ் நேராக விஷயத்திற்கு வந்து சம்பாஷணையை ஆரம்பித்தார்.

சம்பிரதாயமான வணக்கங்களும், குடிக்க ஏதாவது வேண்டுமா என்ற கேள்விகளும் முடிந்தபின்பு அவர் பேச ஆரம்பித்தார்: 'நான் உன்ன இந்தக் குழுவில சேரச் சொன்னதற்குக் காரணம் உனது நிபுணத்துவம் தான்; மாவீரர் அலெக்ஸாண்டர் சகாப்தம் பத்தி, அவர்

இறப்புக்கு முன்பும் பின்பும் உனக்கு நிறைய தெரியும்.'

இந்த ஆரம்ப கருத்து அவளது ஆர்வத்தைத் தூண்டியது. தன் படிப்பறையில் ஜன்னலோரத்தில் நின்ற வாலஸின் நெடிய உயரத்தை வெறித்துப் பார்த்தாள் அவள். அற்புதமாக தைக்கப்பட்டிருந்த சூட்டும், பட்டு 'டையும்', கரடுமுரடான முகமும் வெள்ளையும் கறுப்பும் கலந்த கேசமும் கொண்ட ஒரு பிரபுத்துவ மனிதனின் சித்திரம் போல் இருந்தார்.

வாலஸ் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார். அவள் தூண்டிலில் விழுந்துவிட்டாள் என்று அவர் புரிந்துகொண்டார். 'அறக்கட்டளையில இருக்கிற என்னோட குழு கிரீஸின் நிரந்தரமான மர்மங்களில் ஒன்றிற்கு தடயம் கண்டுபிடித்துவிட்டது. அதுக்கும் அலெக்ஸாண்டருக்கும் சம்பந்தமுண்டு.'

அவர் மேலும் இந்தத் திட்டத்தின் நோக்கம், இயல்பு பற்றி, குழுவின் அமைப்பு பற்றியெல்லாம் விவரித்தார். அவர் முடிக்கும் முன்பே, வாய்ப்புக் கிடைத்திருந்தால், அவள் இந்தத் திட்டத்திற்காக உடனடியாகக் கையெழுத்திட்டிருப்பாள்.

'பாத்து அடியை வையுங்க,' என்ற மாணவனின் குரல் அவள் சிந்தனைகளைக் கலைத்தது. 'சுரங்கக் கூரை இங்க ரொம்ப தாழ்ந்திருக்கு பாத்து.' அவர்கள் சுரங்கவாயில் குழியில் தட்டுத்தடுமாறி நுழைந்து சுரங்கத்திற்குள் சென்றார்கள். அசையும் விளக்குகளிலிருந்து வரும் வெளிச்சம், அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தபோது, மிகவும் பிரகாசமாகத் தெரிந்தது.

மாணவர்களின் டார்ச்லைட் வெளிச்சத்தில் அவர்கள் அதிவேகமாகச் சென்றார்கள். இறுதியில் பளபளப்பான கற்சுவர்கள் கொண்ட ஒரு கனசதுர அறைக்குள் நுழைந்தார்கள்.

நேரெதிர் மூலைகளில் இருந்த இரண்டு கம்பங்களின் *LED* விளக்குகளின் வெளிச்சம் அந்தச் சின்ன அறையைப் பிரகாசமாக்கியது.

'நன்றி, மார்க்கோ,' என்று அலைஸ் புன்னகைத்தாள், ஃப்ளாஷ்லைட்டை போட்ட மாணவனைப் பார்த்து.

'செம செழிப்பான இடம், நிஜ அர்த்தத்தில்,' என்றார் டாமன். குழுவில் இருந்த இன்னொரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அவர்; குண்டான, கறுப்புக்கேசம் கொண்ட அவர் பின்நாற்பதுகளில் இருந்தார். கடந்த 12 மாதங்களுக்கும் மேலாக அதிக சிரமத்துடன் அவர்கள் அகழ்ந்தெடுத்த கல்லறை நுழைவுவாயிலைச் சுட்டிக்காட்டிச் சொன்னார் அவர்.

அலைஸ் அந்த அறையில் பல பெட்டிகள் இருந்ததைப் பார்த்தாள். பஞ்சுபோன்ற மென்மையான பொருட்கள் அடைக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டிகள், அகழ்வாராய்ச்சிக் களங்களில் கிடைக்கும் கலைப்பொருட்களைச் சேகரித்து, முழுமையான ஆய்வுக்காக அவற்றைப் பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படும் போக்குவரத்துப் பெட்டிகள். 'இங்கிருந்தா இந்தச் சரக்கையெல்லாம் அப்படியே எடுத்துக்கொண்டு போகணும்?' அவள் சற்று ஆச்சரியமானாள். அகழ்வாராய்ச்சி விதியின்படி இது முரணான விசயம். எப்போதுமே அகழ்ந்தெடுக்கப்படும் கலைப்பொருள் முதலில் நிழற்படமாக்க வேண்டும்; அடையாளக் குறியிடப் படவேண்டும்; வரைபடமாக்க வேண்டும்; பின்பு இறுதி விவரம் வரைக்கும் அளக்கப்பட வேண்டும். அப்புறம்தான் களத்திலிருந்து அது அகற்றப்படவேண்டும்.

'தலைமையிடத்து உத்தரவு. நம்முடைய இயக்குநர்கள் குறிப்பான கட்டளைகள கொடுத்திருக்காங்க. ஒவ்வொரு கலைப்பொருளையும் பத்திரமாக தோண்டியெடுத்து பாதுகாப்பாகக் கட்டியெடுத்து வரணும்,' என்று டாமன் பதில் சொன்னார்; அவளை ஆர்வத்துடன் ஆராய்ந்தவண்ணம். 'எங்க போயிருந்த?'

அலைஸ் தலையசைத்தாள், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி. 'நீங்க எல்லோரையும் தூரப்போகச் சொன்னதை நான் கவனிச்சேன்.' சுரங்க வாயில் குழியை நோக்கி அவர்கள் போய்க்கொண்டிருந்த போது, எதிர்த்திசை நோக்கிப் போகும் மற்ற மாணவர்களையும், தொழிலாளிகளையும் அவர்கள் கடந்துபோனார்கள்.

'நான் அவர்களை அனுப்பிட்டேன்,' என்று அவர் பதிலளித்தார், அவளைப் பார்த்துப் பல்லிளித்து. 'இந்தக் கல்லறையைத் திறக்கும் சிறப்புரிமை உனக்கும் எனக்கும் மட்டுந்தான் இருக்குதுன்னு நினைச்சேன்,' என்று சொல்லிவிட்டு அவர் மாணவனைப் பார்த்தார். 'மார்க்கோவின் உதவியோடுதான்,' என்று அவனைப் பார்த்து கண்ணடித்தார். அவன் பதிலுக்குப் பல்லிளித்தான்.

'இங்க கதவு இல்லியே,' என்று அலைஸ் நெற்றி சுருக்கினாள். 'பழைய கிரீஸ் கலாச்சாரத்தில் கல்லறைகளுக்குக் கதவுகள் உண்டே.'

டாமன் தோளைக் குலுக்கினார். 'பார்க்கலாம். பார்ப்போமா?' அவரது முகத்தில் பதற்றம் தெரிந்தது. இத்தனை மாதங்கள் கடினமாக உழைத்தது எல்லாம் இறுதியில் ஏமாறுவதற்குத்தானா?

அலைஸ் பெருமூச்செறிந்தாள். இது சத்தியத்தின் கணம். மார்க்கோவை கையசைத்த டாமனைப் பார்த்து அவள் தலையசைத்தாள். மாணவன் விளக்குக் கம்பங்களில் ஒன்றை எடுத்துவந்து, கல்லறைக்குப் போகும் திறந்த வாயில் வழியாக சுமந்துசென்றான். அலைஸும், டாமனும் கல்லறைக்குள் நுழைந்தபோது, அவன் இன்னொரு விளக்குக்காகத் திரும்பிப் போனான். அவன் கண்கள் கிளர்ச்சியுணர்வில் ஜொலித்தன.

'ரெண்டு அறைகள் இருக்கு,' என்று டாமன் முணுமுணுத்தார். 'மாசிடோனியாவின் மத்த கல்லறைங்க மாதிரி. தொட்டி நிலவறை கட்டுமானம். இது பழைய கிரீஸ் பாணிதான்.'

அலைஸ் ஒரு சிறிய முன்னறையில் நின்று கொண்டிருந்தாள். வண்ண ஆடைகள் உடுத்திய ஒரு பெண்மணி படைகளுக்கு ஆணையிடுவது போலவும், கட்டளைகள் பிறப்பிப்பது போலவும், பொறுப்பில் இருக்கும் தலைவியின் பாணியில் நிற்பது போலவும் சுவர் முழுவதும் ஓவியங்கள் நிரம்பியிருந்தன.

அவள் டாமனைப் பார்த்தாள்; அவரது முகத்திலும் கிளர்ச்சியுணர்வு கிளர்ந்தெழுந்தது. அவர்கள் நம்பியிருந்தது சரியாகத்தான் இருந்தது.

'ஒரு ராணியோட கல்லறை,' என்று டாமன் அடிமூச்சில் சொன்னார். 'கடைசியில இந்த உலகம் அவளோட ஓய்விடத்தைப் பாக்கப்போவுது.'

அலைஸ் முன்னறையிலிருந்து புதைகுழி அறைக்குச் சென்றாள். டாமன் பின்தொடர்ந்தார்.

அங்கே நுழைந்தபோது அலைஸ்க்கு மூச்சுமுட்டியது. ஒரு சித்திரச் சவப்பெட்டி, பிணம் அல்லது சாம்பல் கொண்ட பெட்டி அல்லது பதப்படுத்தப்பட்ட பிணம், இவற்றில் ஏதாவது ஒன்றுதான் இருக்கும் என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் அவள் கண்களை வரவேற்ற காட்சி அவளை மயிர்க்கூச்செறியச் செய்தது.

2

ஆர். கே. புரம், புதுடில்லி

இந்தியன் உளவுத்துறை விசேஷ இயக்குநர் இம்ரான் கிட்வாய் வீட்டுக்குக் காரில் சென்றுகொண்டிருந்தபோது, அன்றைய நிகழ்வுகளை அசைபோட்டார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு, எ-20 தேசங்களுக்கு எழுந்த தீவிரவாத அச்சுறுத்தல் சர்ச்சையும், மகாபாரதத்தின் தொன்மையான ரகசியத்தின் கண்டுபிடிப்பால் ஏற்பட்ட பதற்றமும் அடங்கிய பின்பு, அமெரிக்க அரசும், இந்திய அரசும், தொழில்நுட்ப அடிப்படை கொண்ட தீவிரவாதத்தின் துப்புகளை ஆராய்வதற்காக ஒரு கூட்டுப் பணிப் படையை நிறுவ தீர்மானித்தன. அதற்குக் காரணம் ஒரு நிழல் உலகக்குழு. அது தீவிரவாதிகளோடு சேர்ந்து, மகாபாரத ரகசியத்தை அடிப்படையாகக் கொண்ட கூர்மையான, துல்லியமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உலகமுழுவதும் அரசியல், பொருளாதார அதிகாரத்தை உருவாக்க முயன்றது. அந்தச் சதி முறியடிக்கப் பட்டது; ஆனால் எதிரி இன்னும் இருந்தான். இந்தச் சம்பவம் ஒன்றை நிரூபித்தது: தொழில்நுட்பத்தை தங்களின் இலக்குகளை அடைவதற்காக துஷ்பிரயோகம் செய்யும் மனசாட்சியில்லாத மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதுதான் அது.

பணிப்படைக் கருத்தை இம்ரான் விருப்பத்துடன் ஒத்துக்கொண்டார். அதற்கு அரசியல் ஆதரவும், தொழில்நுட்பத் தீவிரவாதத்தின் சாத்தியமான துப்புகளை ஆய்வதற்கான அதிகாரமும், பொறுப்பும் இருந்தன. ஆனால் பணிப்படைத் தலைவரை இன்றுதான் அவர் முதன்முதலாகச் சந்தித்தார். அவர் கண்ட காட்சி அவருக்குப் பிடிக்கவில்லை. இதில் மிகமோசம் என்னவென்றால், அந்தக் கருத்தை ஆரம்பத்தில் முழுவதுமாய் ஆதரித்த அவருக்கு பணிப்படையிலிருந்து விலகுவதற்கு வழியில்லை. அது ஒரு சிரமமான சூழல்.

அவரது ப்ளாக்பெரியில் வந்த மின்னஞ்சல் எச்சரிக்கை அவரின் சிந்தனைகளைக் கலைத்தது. வழக்கமாக அலுவலக நேரம் தாண்டி வரும் மின்னஞ்சல் சவால்கள் அவருக்குப் பிடிக்கும். தீர்வுக்காக ஒரு பிரச்சினை காத்திருக்கிறது என்று அதற்கு அர்த்தம். பிரச்சினைகளைத் தீர்ப்பவர் என்றில்லாமல் அவர் வேறொன்றுமில்லை. அவர் ஓர் உண்மையான ஜெமினி.

(ஜெமினி என்பது ஜோதிடத்தில் ராசிக்கட்டத்தில் மூன்றாவது ராசி; தமிழில் மிதுனம். மேலைநாட்டு ஜோதிடம் 'சூரியன் நகர்வை அடிப்படையாகக் கொண்டது; இந்திய ஜோதிடம் சந்திரனை மையம் கொண்டு அமைவது. ஆங்கில தேதியான மே 21-ஜூன் 20-ல் பிறந்தவர்கள் இந்த ராசிக்குச் சொந்தக்காரர்கள் - மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

ஒரு புதிய நெருக்கடி தலைதூக்கும் புதுமையைத் தவிர அவர் வேறொன்றையும் விரும்பியதில்லை. தனது வழமையான பணியிலிருந்து விலகி ஓர் இயல்பான கேளிக்கையை நாடும் சுபாவம் கொண்ட அவருக்கு, புதுநெருக்கடி பன்மைத்தன்மையை கொடுத்தது.

அவர் மின்னஞ்சல் உள்பெட்டியைப் பார்த்தார். பார்த்தவுடன் உடனே நிமிர்ந்து உட்கார்ந்தார். அது ஓர் ஆவியிடமிருந்து வந்த ஒரு மின்னஞ்சல்.

ஒரு ராணியின் கல்லறை

டாமனும் அலைஸும் உள்ளறையில் நுழைந்தவுடன், வெளியறையிலிருந்த ஓர் ஒற்றை விளக்கிலிருந்து வாயில்வழியாக கசிந்து பரவிய சிதறல் வெளிச்சத்தில், அவர்களை வரவேற்றது ஓர் அமானுஷ்யமான காட்சி.

அறையின் மத்தியில் ஒரு கல்சவப்பெட்டி எந்த அலங்காரமும் இல்லாமல் சாதாரணமாக இருந்தது. அங்கே வேறெந்த பொருளும் இல்லை. அங்கே சிறப்பாகத் தெரிந்தது, அறையின் வெறுமையோ அல்லது சவப்பெட்டியின் எளிமையோ அல்ல.

வாயிலை நோக்கிய சுவரில், ஒரு கல் பாம்பு கல்லறையின் தரையிலிருந்து கிளம்பிவருவது போலத் தோன்றியது. பாம்பின் ஆகப்பெரிய சுருள்கள் தரையிலிருந்து நெளிந்து, சுவர்முழுக்க வளைந்து, அறையின் கூரை வரைக்கும் சென்று, இறுதியில் பிரமாண்டமான ஐந்து

தலைக் கவசமாக முடிந்தது. கீழிருந்த கல்சவப்பெட்டிக்கு மேலே மூன்றடி நீளத்திற்கு அந்தக் கவசம் சுவரிலிருந்து துருத்திக் கொண்டிருந்தது. அதன் அகண்ட தாடைகள் விரிந்து திறந்திருந்தன. அதன் விஷப்பற்கள் பளிச்சென்று தெரிந்தன, வேண்டாத தலையீடுகள் மீதான கோபத்தைக் காட்டுவது போல.

கல்சவப்பெட்டிக்குப் பாதுகாப்பான அடைக்கலம் போல. வாழ்ந்தபோது இருந்தது போல, மரணித்த பின்னும் இருக்கிறது ராணிக்குப் பாதுகாப்பு என்று யோசித்தாள் அலைஸ். அந்த எண்ணம் உதித்ததை அவளால் தவிர்க்கமுடியவில்லை.

அறையில் மிச்சமிருக்கும் சுவர்களில் தென்பட்ட வரையோவியங்கள் இந்தக் கனவுக்காட்சியை மேலும் அதிகமாக்கியது. கறுத்த படிமத்தில் வரையப்பட்ட பாம்புகள் சுருண்டும், 'உஷ்' சத்தம் எழுப்புவது போன்றும், நீண்டும் கிடந்தன. மங்கலான வெளிச்சத்தில், சுவரைவிட்டுக் குதித்துவிடுவது போன்ற கல் நிழல்களாகத் தோன்றின.

மார்கோ இரண்டு விளக்குக் கம்பங்களைப் பிடித்துக் கொண்டு தள்ளாடி வந்தான். வந்தவன், கல்லறையின் வினோதமான அலங்காரங்களைப் பார்த்து உறைந்து விட்டான்.

'என்ன கண்றாவி இது?' என்று அவன் முணுமுணுத்தான், பிரமிப்போடு.

அலைஸ் இரண்டு தோழர்களையும் படபடப்போடு பார்த்தாள். 'இது அவளோட கல்லறை!' கண்டுபிடிப்பின் சுவாரஸ்ய உணர்வில் அவளது குரல் நடுங்கியது. கல்லறைக்குள் இருப்பவரைப் பற்றிய தங்கள் ஊகம் சரியாக இருக்கும் என்று அவர்கள் கடந்த 12 மாதங்களாக நம்பிவந்தார்கள். இப்போது எல்லா சந்தேகங்களும் தீர்ந்துவிட்டன.

'உம்... நீங்க இதைப்பாக்க ஆசைப்படுவீங்க.' மார்க்கோ அறையைச் சுற்றிவந்து ஓவியங்களை ஆராய்ந்துகொண்டிருந்தான். குறைந்தபட்சம் 50 அடி நீளத்தில் அறை பெரியதாக இருந்தது. அவர்களுக்கு மேலே உயர்ந்துநின்ற பாம்பின் பெரிய சுருள்களில் ஒன்றின் கீழே, நுழைவு வாயிலுக்கு எதிரே அறையின் அப்பால் ஒரு மூலையில் மார்க்கோ நின்றுகொண்டிருந்தான்.

அவன் பார்த்ததைப் பார்க்க அலைஸும், டாமனும் வேகமாக ஓடிவந்தார்கள். சுவர்க்கு வெளியே நீண்டு கொண்டிருந்த பாம்பின் பெரிய வடிவத்திற்குப் பின்னாடி ஒரு குழி இருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். மூன்றாவது அறை இருக்கிறதா

என்ன? தொன்மைகால கிரீஸ் கல்லறையில் இது ஒரு புதுமையாக விஷயம்.

மார்க்கோவிற்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவன் ஏற்கனவே ஒரு விளக்கை எடுத்துவந்து மறைவான வாயில்மீது வெளிச்சம் பாய்ச்சினான். பல்வேறு வடிவத்தில் கற்சிலைகளும், கற்துண்டுகளும் நிரம்பிய இரண்டு அடுக்குகளின் வரிசைகொண்ட ஒரு சிறிய அறை அப்போது தெரிந்தது.

அடுக்குகளில் இருந்த பொருட்களை ஆராய முற்பட்டனர் அலைஸும், டாமனும்.

'அவளுக்குப் பாம்புமீது ஏதோவொரு ஈர்ப்பு இருந்திருக்கணும்,' என்றார் டாமன், ஓர் ஐந்து அங்குல உயரமான சிறுசிலையை ஆராய்ந்தவாறு. அது கல்லில் செதுக்கப் பட்டிருந்தது; தலைமுதல் பாதம்வரை வளைத்த ஒரு பெரிய பாம்பின் சுருள்களில் மாட்டிக்கொண்ட ஓர் அழகான இளம்பெண்ணின் சித்திரம் அது.

அலைஸ் தலையசைத்தாள். 'மூன்றாம் அலெக்ஸாண்டரின் தகப்பன் ஒரு பாம்பு என்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்க. பாம்பின் மீது அவளுக்கிருந்த கவர்ச்சிய பத்திய கதைகள் உண்மைன்னு நினைக்கிறேன்.'

'பிரமாதம்,' என்றார் டாமன், பத்து அங்குலம் நீளம்கொண்ட ஒரு சதுரப்பெட்டகத்தின் மீது பொறிக்கப் பட்டிருந்த வாசகங்களைப் படித்துக்கொண்டு. 'இந்த வாசகங்கள் மாவீரன் அலெக்ஸாண்டர் இறந்த பின்னாடி என்ன நடந்திச்சிங்றதைச் சொல்லுது.'

அடுக்குகளில் இருந்த சிறுசிலைகளையும், பெட்டகங்களையும் ஆராய்ந்த வண்ணம் அலைஸ் தலையசைத்தாள்.

டாமன் தன் கடிகாரத்தைப் பார்த்தார். 'நாம தலமைக்குச் சேதி சொல்லணும். அவங்க காத்திட்டு இருக்காங்க. இத எல்லாம் பாக்கிறதுக்கு அவங்க உடனே வர விரும்பலாம்.'

'ம்ம்ம். நீங்க ஏன் ஓட்டலுக்குப் போய் அவங்களுக்காகக் காத்திருக்கக் கூடாது? நான் கல்லறையை ஃபோட்டோ எடுக்கிறேன்.' அலைஸ் ஏற்கனவே தன் பையிலிருந்து கேமராவை எடுத்துக்கொண்டிருந்தாள். 'நான் இந்த கலைப்பொருட்களை 'டாக்' செஞ்சி கண்டெய்னர்கள்ல அடுக்கிவைக்கிறேன்.'

'நன்றி. மார்க்கோவை உனக்காக திருப்பி அனுப்பிவைக்கிறேன்.'

டாமன் அவளைப் பார்த்துப் புன்னகைவிட்டு வெளியேறினார். மார்க்கோ பின்தொடர்ந்தான்.

அலைஸ் சுற்றுமுற்றும் பார்த்தாள். பெருமூச்சு ஒன்று அவளிடமிருந்து கிளம்பியது. ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளராக, அவளது தொழிலில் இதுதான் உச்சம். அறைகளை, சவப்பெட்டியை, சுவரோவியங்களை நிழற்படம் எடுப்பதில் அவள் முனைப்பாக இருந்தாள்.

முடிந்தவுடன், மறைந்துகிடந்த அறையின் கலைப்பொருட்கள் பக்கம் அவளது கவனம் திரும்பியது. ஒவ்வொன்றையும் கவனமாக ஃபோட்டோ எடுத்து, அவற்றை கண்டெயினர்களில் அடுக்கினாள்.

'ஏ என்ன இது?' என்று அவள் தனக்குள் முனகினாள், கடைசி கலைப்பொருளை எடுக்கும்போது. அது மஞ்சள் கனசதுரப் பெட்டகம்; ஐந்து பக்கங்களிலும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இதுவரை அது சிறுசிலைகளுக்கும், களிமண் பெட்டகங்களுக்கும் பின்னாடி ஒளிந்திருந்தது. பல நூற்றாண்டுகளில் நிறமிழந்த ஒரு தொன்மைக்கால எலும்பினால் செய்யப்பட்டிருக்கும் என்று முதலில் அவள் நினைத்தாள். ஆனால் விளக்கு வெளிச்சத்தில் அவள் அதை தன் கைக்குள் திருப்பித்திருப்பிப் பார்த்து ஆராய்ந்த பின்பு, அது உண்மையில் யானைத் தந்தத்தினால் ஆனது என்று புரிந்துகொண்டாள். யானைத் தந்தத்திற்கே உரிய 'வரைகோடுகளின் சந்திப்பு' அல்லது அலைப்பாணி, விளக்குகளின் வெளிச்சத்தில் மிக வலுவாகத் தெரிந்தது.

'இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு, மாசிடோனியாவில் இருந்த யானைத்தந்தம்,' என்று அவள் தனக்குள்ளே முனகிக்கொண்டாள். 'விநோதம். இந்தப் பகுதிகளில் யானைகள் கிடையாதே.'

'முடிந்ததா?'

அலைஸ் துள்ளினாள். கிட்டத்தட்ட கனசதுரப் பெட்டகத்தைக் கீழே போட்டாள். திரும்பிப் பார்த்தாள். மார்க்கோ பல்லிளித்துக் கொண்டிருந்தான்.

'நீ என்ன பயமுறுத்திட்ட,' என்று அவள் வேடிக்கையாகச் சொன்னாள். 'பழங்காலத்து இருட்டுக் கல்லறையில தனியா இருக்கும் ஆள்கள்கிட்ட இந்த மாதிரி பண்ணாத.'

'மன்னிச்சிருங்க,' என்று மார்க்கோ மீண்டும் பல்லிளித்தான். அவனது குரலில் பதற்றம் ஒலித்தது. இதுமாதிரியான கண்டுபிடிப்பில்

ஓர் அங்கமாக இருப்பது ஒரு மாணவனுக்கு ஒவ்வொரு நாளும் நடப்பதில்லை. 'ஆனா நீங்க உங்களுக்குள்ளேயே பேசிக்கிட்டிருந்தீங்க. அதனால என்னால் தவிர்க்க முடியல. டாமன் தலமையிடம் பேசிட்டாரு. அவங்க வந்துகிட்டிருக்காங்க. ஓ, இதுக்கிடையில, இந்தக் கனசதுரத்தை நீங்களே வச்சிருக்கணும்னு டாமன் சொல்லிட்டார். இயக்குநர்கள் இதை பாக்க விரும்பலாம்.' அலைஸ் கையில் வைத்திருந்த யானைத்தந்தக் கனசதுரத்தை அவன் சுட்டிக்காட்டினான்.

'நிச்சயமா. நான் போட்டோ எடுத்திட்டு இதை அடையாளப்படுத்தி வக்கிறேன்.' அவள் கனசதுரத்தின் எல்லாப் பக்கங்களையும் போட்டோ எடுத்துவிட்டு, அதையும், மற்ற கலைப்பொருட்களையும், கேமராவையும் சேர்த்து பெட்டிகளில் போட்டுவிட்டு, பெட்டிகளை தன் முதுகுப்பையில் வைத்தாள்.

'கிரேட். எல்லாம் முடிஞ்சது. நாம இதை களக்குடிசைக்குக் கொண்டுபோவோம்.' அலைஸ் கல்லறையை விட்டு வெளியேறினாள். அவர்கள் இருவரும் ஒன்றாக கலைப்பொருட்கள் பெட்டிகளை குடிசைக்குக் கொண்டு சென்று, மத்தியில் இருந்த மேஜைமீது கவனமாக பரப்பிவைத்தனர். இரண்டு இயக்குநர்களும் இவற்றைப் பார்வையிட விரும்புவார்கள் என்று அலைஸுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஏனென்றால் குறிப்பாக இந்தக் கலைப்பொருட்களை கல்லறையை விட்டு அகற்றிவிட வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

'முடிந்தது.' மார்க்கோ தன் வெள்ளை கையுறைகளைக் கழற்றிவிட்டு அவளை எதிர்பார்ப்புடன் பார்த்தான்.

அலைஸ் தலையசைத்தாள். 'போவோம்.' குடிசையின் கதவை மூடினார்கள். களத்தில் இரண்டு காவலாளிகள் இருந்தார்கள். இந்த இடம் எங்கிருந்து வந்தாலும் பல மைல் தூரத்தில் இருந்தது. அதனால் கலைப்பொருட்கள் களவு போவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் இது ஒரு பல்லாயிரம் வருடத்தின் கண்டுபிடிப்பு. அதனால் அபாயம் இல்லை என்று நினைத்துவிடக் கூடாது.

ஓட்டலுக்குத் திரும்பினார்கள். ஓட்டல், நாட்டுப்புற மாளிகைகளின் தொகுப்பாக இருந்தது. அலைஸ் தன் அறைக்குச் சென்றாள். மார்க்கோ காரை நிறுத்திவிட்டு டாமனைப் பார்க்கச் சென்றான். 'இன்னும் அஞ்சு நிமிசத்தில உங்களோட இருப்பேன்,' என்று அவள் மார்க்கோவிடம் சொன்னாள். தவிர்க்கவே முடியாத ஒன்றைத் தான் தள்ளிவைக்கிறோம் என்று அவளுக்குத் தெரியும். அகழ்வாராய்ச்சி நடக்கும் காலம் முழுவதும் அவள் இரண்டு இயக்குநர்களோடு தொடர்புகொள்வதை முடிந்தவரை

தவிர்த்திருந்தாள். டாமனே அவர்களோடு பேசட்டும், அவர்களுக்குச் சேதிகள் சொல்லட்டும், தேவைப்படும்போது அவர்களின் கட்டளைகளை வாங்கிக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டாள். ஆனால் இந்த இரவில் தப்பிக்க வழியில்லை. பணியின் இரண்டு இயக்குநர்களான ஸ்டாவ்ரோஸ் மற்றும் பீட்டருடன் அவள் கல்லறைக்குப் போக வேண்டியிருக்கும். அவர்களில் ஒருவர்மீது கூட அவளுக்குப் பிரியமில்லை; அதேபோன்ற உணர்வுதான் அவர்களிடமும் இருந்தது என்ற பிரக்ஞையோடு அவள் இருந்தாள். ஆனால் இந்தப் பணித்திட்டத்தில் முக்கியமான தொல்பொருள் ஆய்வாளர்களில் ஒருவர் என்ற முறையில் அவள் அவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது. கல்லறை கட்டப்பட்ட காலத்தைப் பற்றிய குழுநிபுணர் என்ற வகையில், கல்லறையில் நிகழ்ந்த வினோதமான கண்டுபிடிப்புகள் பற்றி அவள் கருத்துக்களைக் கேட்க இரண்டு இயக்குநர்களும் விரும்புவார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

இந்த விரும்பத்தகாத சிந்தனையில் அவள் இருந்தபோது, ஒரு தனித்துவமான வெட்டல் ஓசை இரவை நிரப்பியது. ஒரு ஹெலிகாப்டர் தலைக்குமேலே தாழ்வாகப் பறந்தது. சற்றுநேரம் நிலவிய அதன் சத்தம் பின்பு திடீரென்று அடங்கியது; அந்த எந்திரம் அருகில் எங்கேயோ இறங்கிவிட்டது போன்று கிட்டத்தட்ட தோன்றியது.

அலைஸ் தனக்கு இருக்கும் கசப்பான வேலையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். பெருமூச்சுவிட்டுக் கொண்டே அவள் தன் மடிக்கணினியையும், கேமராவையும் எடுத்து மேஜைமீது வைத்தாள். தன் கைப்பேசியையும் கேமராவின் ஞாபகக்குச்சியையும் தனது இடுப்புப் பைக்குள் வைத்துவிட்டு, டாமன் இருக்கும் மாளிகைக்குச் செல்ல ஆயத்தமானாள்.

கதவுப்பிடிமீது கைவைத்தபோது, தோட்டத்தைப் பார்த்த ஜன்னலிலிருந்து விடாப்பிடியான ஒரு தட்டல் ஓசை வந்தது. அது கம்பிகள் இல்லாத ஜன்னல். திரை மேலே எழும்பியிருந்தது. அதனால் மார்க்கோவின் அரண்டுபோன முகம், ஜன்னல் கண்ணாடிமீது அழுத்திக்கொண்டிருப்பதை அவளால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ரத்தம் முழுவதும் வடிந்தது போன்று, அச்சத்தால் வெளிறிப்போன முகம். அவன் மீண்டும் தட்டினான். அவள் ஜன்னலைத் திறக்க வேண்டும் என்று குறிப்பால் உணர்த்திய ஓர் அவசரம் அதில் ஒலித்தது.

அலைஸ் பின்னால் திரும்பிவந்து, மார்க்கோவை ஜன்னல் வழியாக உள்ளே விட்டாள். 'என்ன...?' என்று ஆரம்பித்தவள் அவன் கண்ணீரில்

வெடித்ததைப் பார்த்தவுடன் உறைந்து நின்றாள். மார்க்கோவை அரண்டுபோக வைத்தது எது என்று அவள் ஆச்சரியப்பட்டாள்.

3

கொதிக்கும் வட்டப்பாத்திரத்திலிருந்து...

'அவங்க டாமனைக் கொன்னுட்டாங்க,' என்று மார்க்கோ பிதற்றினான். தரையில் பொத்தென்று ஒரு குவியலாய் விழுந்தான். 'பீட்டர் சுட்டுட்டார். சும்மா இப்படிங்கறதுக்குள்ள.'

கொஞ்ச நேரம் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை, மார்க்கோ என்ன சொல்கிறான் என்று. என்ன உளறுகிறான் இவன்? புத்தியோடு இவன் பேசவில்லை. பீட்டர் ஏன் டாமனைச் சுட வேண்டும்?

அழுதுகொண்டிருந்த பையனின் அருகில் முட்டிப்போட்டு அவனது தோளில் தன் கையை ஆதரவாக வைத்தாள். 'என்ன நடந்திச்சு. சொல்லு,' என்று அவள் மென்மையாகக் கேட்டாள். 'இது வெறும் தவறான புரிதல்ன்னு எனக்குத் தெரியும்.'

'என் கண்ணால நான் பார்த்தேன்!' என்று மார்க்கோ அரற்றினான். 'ஸ்டாவ்ரோஸ் டாமனப் பாத்துக் கத்திக்கிட்டிருந்தாரு. டாமன் உங்கள கல்லறையில தனியே கலைப்பொருட்களை போட்டோ எடுக்க விட்டதனால அவர் ரொம்ப கோபமாயிட்டாரு. டாமன் அந்தக் கனசதுரப் பெட்டகத்தை அவங்ககிட்ட கொண்டுவந்து காமிச்சிருக்கணும்னு அவரு சொன்னாரு.' அவன் கண்களில் புதிதாக ஒரு கண்ணீர் அலை ஊறிக் கிளம்பியது. வார்த்தைகளில் அவனுக்கு மூச்சுத்திணறியது.

அலைஸ் பொறுமையாகக் காத்திருந்தாள். ஒரு பெட்டி நிறைய 'டிஷ்யூ' காகிதங்களை அவனிடம் கொடுத்தாள். திடீரென்று தான் கனவில் இருப்பது போன்று அவள் உணர்ந்தாள். மிகவும் மோசமான ஒரு கனவு. இப்போதே தான் எழுப்பப்பட வேண்டும் என்று அவள் பிரயாசைப்பட்டாள்.

மார்க்கோ மூக்கைப் பலமாகச் சிந்தினான். தொடர்ந்து பேசினான். 'அப்புறம், பீட்டர் ஒரு துப்பாக்கிய எடுத்தாரு. டாமன் அவங்க

கட்டளைகளப் பின்பற்றல. அதனால அவரு ஒரு சுமையாயிட்டாருன்னு பீட்டர் சொன்னார்.' அவன் இடைவெளி விட்டான். டாமனின் வில்லா ஜன்னல்கள் வழியாக தான் பார்த்த காட்சியை மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தான். 'டாமன் அரண்டுபோயிட்டாரு. பாவம் அவர் கெஞ்சினாரு; இன்னொரு வாய்ப்பு கொடுங்கன்னு பீட்டர்கிட்ட கேட்டாரு. அவர் அழுதுகிட்டு இருந்தாரு. ஆனால் பீட்டர் அதைக் கவனிக்கவே இல்ல. சும்மா சுட்டுத் தள்ளிட்டாரு.' மார்க்கோவின் விசன அழுகை மீண்டும் தொடர்ந்தது.

அவளுடைய வில்லாவிற்கு இட்டுச்செல்லும் தாழ்வாரத்தில் யாரோ சிலர் ஓடிவரும் சத்தம் கேட்டவுடன் அவள் எழுந்துநின்றாள். அது ஸ்டாவ்ரோஸா அல்லது பீட்டரா? அவளது நிலைமையின் நிஜம் திடீரென்று, பனிபடர்ந்த குளிர்கால நாளில் பொழியும் குளிர்நீர்ச் சிதறலைப் போல, அவளைத் தாக்கியது; அவளை அதிர்ச்சியாக்கி செயல்பட வைத்தது.

அவள் அதிவேகமாக ஓடி கதவில் இரட்டைத் தாழ்ப்பாளைப் போட்டாள். இன்னும் கொஞ்ச நேரம் கிடைக்கும். டாமன் கொல்லப்பட்டிருந்தால், அடுத்து மார்க்கோவிற்கும் அவளுக்கும் அடுத்து என்ன நேருமென்பது பற்றி சந்தேகமே இல்லை.

'நாம இங்கிருந்து ஓடியாகணும்,' என்று மார்க்கோவிடம் தன் சிந்தனைகளை வார்த்தைகளில் சொன்னாள். 'வா.'

யாரோ ஒருவர் கதவைத் தட்டும்போது அவள் தன் முதுகுப்பையை எடுத்துக்கொண்டு ஜன்னல் வழியாக நழுவ எத்தனித்தாள்.

'பூட்டியிருக்கு,' பீட்டரின் குரல்.

'உடை!' ஸ்டாவ்ரோஸின் குரல்.

கதவின் மீதான தாக்குதல் ஓசை வந்தது. தாழ்ப்பாள் சற்று அதிர்ந்தது; ஆனால் கெட்டியாக இருந்தது.

அலைஸ் கதவைப் பார்த்தாள்; பின் மார்க்கோவைப் பார்த்தாள். அவன் பயத்தில் உறைந்து போயிருந்தான். காட்டுப்பாதையில் காரின் முகப்புவிளக்கு வெளிச்சத்தில் மாட்டிக்கொண்ட மானைப்போல, அவன் கதவையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

'மார்க்கோ!' என்று அவள் சன்னமான குரலில் அழைத்தாள். சத்தமிட தைரியமில்லை. என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியும் என்பது பீட்டருக்குத் தெரிந்தால், அவள் தப்பியோடப் பார்ப்பாள் என்று

அவர்கள் ஊகித்து அவளைத் தடுக்கும் செயலில் இறங்கிவிடுவார்கள். 'இங்கிருந்து போய்த்தொலைவோம் வா!'

அவளது குரல் மார்க்கோவை அதிரடியாக நிஜத்திற்குக் கொண்டுவந்தது. அவன் நடுங்கியவாறு எழுந்தான். ஜன்னல் நோக்கி தள்ளாடி நடந்தான். ஜன்னல் வழியாக இறங்கி, புல்வெளிமீது நடந்துசென்றான். அப்போது கதவு வழிவிட்டது; பீட்டர் அறைக்குள் அத்துமீறி நுழைந்தார்.

'புல்வெளி மேல!' என்று பீட்டர் கத்தினார், ஜன்னலில் எட்டிப்பார்த்து.

பின்னாடி என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க அலைஸ் காத்திருக்கவில்லை. ஆனால் மார்க்கோவின் கையை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு வில்லாவை விட்டு வேகமாக ஓடினாள். இரண்டு இயக்குநர்களோடு வேறுயாராவது இருக்கிறார்களா என்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் தனியாக இல்லை என்பதை அவள் ஊகித்தாள்.

இரண்டு இருமல் சத்தங்கள் ஒலித்தன; அவர்களின் காதுகளைக் கடந்து குண்டுகள் விர்ரென்று பாய்ந்தன.

யாரோ ஒருவர் சுட்டுக்கொண்டிருக்கிறார் என்பதையும், துப்பாக்கியில் 'சத்தம் ஒடுக்கி' இருக்கிறது என்பதையும் அவள் உணர்ந்துகொண்டாள்.

மார்க்கோவை இழுத்துக் கொண்டு புல்வெளியில் அவள் அதிவேகமாக ஓடினாள். அவர்களின் அலுவலக வாகனமான 'லாண்ட் குரூசர்' நின்ற இடம் நோக்கி ஓடினாள்.

ஓடிக்கொண்டிருந்தபோது மார்க்கோ திடீரென்று கனமாகிப்போனான். ஒரு கணம் அவனை முன்னுக்கு இழுத்தாள் அவள். அடுத்த கணம் அவன் அசையா பொருளாக, கல்லில் வடிக்கப்பட்டவன் போல் மாறினான்.

மார்க்கோ தரையில் பொத்தென்று விழுந்தபோது அலைஸ் திரும்பிப் பார்த்தாள். அவனது முகம் சிகப்பு முகமூடியானது; முடி ரத்தத்தில் நனைந்தது. குண்டுகள் தங்கள் இலக்கை அடைந்துவிட்டன.

விலைமதிப்பில்லாத அந்த ஒரு கணத்தில் அவள் தயங்கினாள்; கண்களில் கண்ணீர் பொங்கியது. தான் பார்த்துக்கொண்டிருக்கும் துயரநாடகத்திற்கும், தனது பாதுகாப்பிற்கும் மத்தியில்

மாட்டிக்கொண்டு அவள் தவித்தாள். ஓர் இளைஞனின் வாழ்க்கை கொடூரமாகக் கத்தரிக்கப்பட்டுவிட்டது. எதற்காக?

மேலும் இருமல் சத்தங்கள் ஒலித்தன; அவளது அனிச்சை உணர்வு மேலோங்க, தயக்கத்துடன் மார்க்கோவின் கையை விட்டுவிட்டு அவள் வேகமாக காரில் நுழைந்து டிரைவர் சீட்டில் உட்கார்ந்துகொண்டாள்.

சாவி அதன் துவாரத்திலே இருந்தது. இயக்குநர்களை கல்லறைக் களத்திற்குக் கூட்டிக்கொண்டு போகும் நோக்கத்துடன் மார்க்கோ அதை அங்கேயே விட்டுவைத்திருக்க வேண்டும். எஞ்சின் தகராறு செய்தது; பின் அவள் அழுத்தம் கொடுத்தவுடன் எஞ்சின் உயிர்பெற, கார் வேகமாக கல்லறைக்குச் செல்லும் அழுக்குச்சாலையில் விரைந்தது.

அவள் வேகமாகச் செல்ல, தனக்குப் பின்னால் மீண்டும் இருமல் சத்தங்கள் கேட்டன. குண்டுகள் வண்டிமீது தட்தட் என்று விழுந்தன; அவள் காரின் தரை வரைக்கும் ஆக்ஸிலேட்டரை மிதித்தாள். கல்லறைக்கு அவள் சென்றாக வேண்டும். அங்கே இரண்டு காவலாளிகள் இருக்கிறார்கள். இங்கே திடீரென்று கட்டவிழ்த்துவிடப்பட்ட வெறித்தனத்திலிருந்து அவர்கள் அவளைக் காப்பார்கள்.

அகழ்வாராய்ச்சிக் களத்திற்கு வந்துசேர நீண்டநேரம் பிடிக்கவில்லை. அது இருட்டாகவும் அமைதியாகவும் இருந்தது. அலைஸ்க்கு ஆச்சரியமானது. களத்தில் இருந்த வெளிச்ச வெள்ளம் அணைந்துபோயிருந்தது; மின்சாரம் கொடுத்த ஜெனரேட்டர்களும் அமைதியாகக் கிடந்தன.

காவலாளிகள் எங்கே?

அவள் வண்டியிலிருந்து குதித்து கரடுமுரடான பாதையில் தடுமாறினாள். இந்த வழி அவளுக்குத் தெரிந்ததுதான் என்றாலும், இருட்டில் இங்கே இருந்ததில்லை. இப்போது நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் நடந்தாள்.

திடீரென்று தரையில் கனமாக இருந்த ஏதோவொன்றில் கால்தடுக்கி விழப்பார்த்தாள். எனினும் சுதாகரித்து சமாளித்தாள்.

அதிர்ச்சியடைந்தாள். கீழே கிடந்தது காவலாளிகளில் ஒருவனான ஜியோர்டி. குனிந்து அவனைச் சோதித்தாள். நாடித்துடிப்பு இல்லை. அவன் செத்துக்கிடந்தான்.

எச்சரிக்கையாக அவள் நிமிர்ந்தாள்; என்ன நடக்கிறது என்பதைப்

புரிந்துகொள்ள வேண்டும் என்ற தேவைக்கும், ஓடிவிடு என்று சொல்லும் தன் உள்உணர்வுக்கும் இடையில் மாட்டிக்கொண்டு அவள் குழப்பமடைந்தாள்.

அவள் தன் சிந்தனைகளோடு போராடிக் கொண்டிருந்தபோது, ஓர் இருட்டு நிழல் பூமிக்கடியிலிருந்த கல்லறைக்கு இட்டுச்செல்லும் சுரங்க வாயில் குழியிலிருந்து தடுமாறி வெளியே வந்தது.

அலைஸ் உறைந்துவிட்டாள். இப்போதுதான் அந்த ஹெலிகாப்டரை அவள் பார்த்தாள். அதன் பிரமாண்டமான நிழல் ஒருபக்கமாக சரிந்தது.

அவளது மனம் பல்வேறு குழப்பமான சிந்தனைகளின் சுழற்சியானது. அவற்றில் ஒன்று மிகத் தெளிவாக வெளியே வந்து நின்றது: அவள் மாட்டிக்கொண்டாள்.

4

உதவி கேட்டு வந்த அழைப்பு

அன்வர்!

தன் கண்களை நம்பமுடியாமல் இம்ரான் மின்னஞ்சலை வெறித்துப்பார்த்தார்.

அன்வரும், இம்ரானும் மீரட்டில் ஒன்றாக வளர்ந்தவர்கள். பெற்றோர்களை இழந்தவுடன், அன்வர் லக்னோவில் தன் மாமாவோடு தங்குவதற்காகச் சென்றுவிட்டார். அது பல வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. ஆனால் இரண்டு பையன்களும் வளரவளர தொடர்பில் இருந்தார்கள். இம்ரான் காவல் துறையில் சேர்ந்தார். அன்வர் லக்னோவில் ஒரு சின்ன தொழிலை ஆரம்பித்தார்; அது பல வருடங்களாக சரியாகப் போகவில்லை. ஆனால் இருவரும் நல்ல நண்பர்களாகவே இருந்தார்கள்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு அன்வர் திடீரென்று மாயமாய் மறைந்துபோனார்; தடயமேதும் விட்டுவைக்காமல்.

இப்போது எங்கிருந்தோ திடீரென்று வந்திருக்கிறார். இறந்தகாலத்தின் ஆவியாக.

தன் பழைய நண்பனோடு மீண்டும் ஏற்பட்ட தொடர்பின் சந்தோசத்தில் அவருடைய தேகம் முழுவதும் ஓர் எதிர்பார்ப்பு உணர்வு கிளர்ந்தோடியது. மின்னஞ்சலைத் திறந்தார்.

அதில் இரண்டு வார்த்தைகள் இருந்தன.

உதவி, அன்வர்.

...நெருப்புக்குள்

சுரங்கவாயில் குழியிலிருந்து நிழல் ஒன்று அவளை நோக்கி வந்தபோது, அலைஸ் அசையாமல் நின்றாள். அதன் ஒரு கை இடுப்பை நோக்கி

நகர்வதைப் பார்த்து அவள் புரிந்துகொண்டாள், அது ஓர் ஆயுதத்தை எடுக்கிறது என்று.

என்ன நடக்கிறது என்பதை கண்டுபிடிக்கும் முயற்சி பற்றிய எண்ணங்களை எல்லாம் கைவிட்டு, அவள் திரும்பி கார்நோக்கி துரிதமாக ஓடினாள். குண்டுகள் இரவின் மௌனத்தைக் குலைத்துக்கொண்டு ஒலிக்க, அவள் ஓர் ஒற்றை அசைவில் காரைத்திறந்து டிரைவர் சீட்டில் சரிந்தாள். துப்பாக்கியில் சைலன்சர் இல்லை. இங்கே திருட்டுத்தனத்திற்கு அவசியமில்லை.

குண்டுகள் ஜன்னல்களைத் துளைத்து உடைத்தன. அவள் காரை ஸ்டாரட் செய்தாள்.

ஒரு குண்டு அவளது முகத்தைக் கடந்து அவளது அருகில் இருந்த பிரயாணி இருக்கைக்குள் போய்விழுந்தது.

'லாண்ட் குரூசரின்' ஆற்றல்மிக்க எஞ்சின் உறுமி உயிர்பெற்றது; அவள் காரை பின்னாடி வேகமாக ஓட்ட, டயர்கள் சரளைக்கற்களில் சரிந்தன. முன்னாடி செல்ல கியர்களை அழுத்திப் போட்டுவிட்டு, கல்லறையை விட்டு ஒரே பாய்ச்சலில் ஓட்டிச்சென்றாள். இன்னொரு குண்டு ஸ்டீரியோ சிஸ்டத்தில் பொத்தென்று விழ, அவள் சக்கரத்தில் தலையைக் குனிந்துகொண்டாள். அச்சத்தில் நரம்புகள் பிறழ, திகிலுணர்வைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றாள். ஒரே ஒரே சிந்தனைதான் அவள் தலைக்குள் ஓடிக்கொண்டிருந்தது:

அவள் தப்பித்துவிட வேண்டும்.

அவளுக்குப் பின்னாடி ஹெலிகாப்டர் புறப்பட்டுவரும் சத்தம் கேட்டது. அவர்கள் அவளைச் வேட்டையாடிக் கொல்லப்போகிறார்கள்.

யார் இந்த ஆட்கள்? என்ன வேண்டும் அவர்களுக்கு?

அச்சத்தால் நடுங்கி அழுது, தெசலோனிக்கிக்குச் செல்லும் சுங்கவரிச் சாலை *E*-75-ஐ நோக்கி விரைந்தாள். இந்த நேரத்தில் அவள் யோசிக்கக் கூடிய ஒரே விஷயம் இதுஒன்றுதான்.

ஹெலிகாப்டர் அவளைப் பின்தொடரும் சத்தம் பின்னாடி கேட்டது. அவள் காரின் சக்கரத்தை அழுத்திப் பிடித்தாள்; அது வாகனத்தின் வேகத்தை மேலும் துரிதமாக்கும் என்பது போல.

ஆனால் ஹெலிகாப்டர் தன்னை முந்திவிடும் என்று அவளுக்குத் தெரியும். இன்னும் கொஞ்சம் நேரந்தான்.

அன்வரைத் தேடி

'ஆபிஸுக்குத் திரும்ப போ,' என்று இம்ரான் டிரைவரிடம் உறுமினார். 'சுழல்விளக்கைப் பயன்படுத்து!'

டிரைவர் பணிவாகத் திரும்பிப் பார்த்து, சுழல் விளக்கைப்போட்டு காரை வேகப்படுத்தினான். தன் அதிகாரச் சிறப்புரிமைகளை அதிகமாகவே தான் பயன்படுத்துகிறோம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. இதுவரை அவர் ஒருபோதும் செய்யாத செயல் இது. ஆனால் இப்போது அதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. வந்த செய்தியிலிருந்து அவருக்கு ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்திருந்தது. அவரது நண்பர் ஆபத்தில் இருக்கிறார்.

இம்ரான் தன்னால் முடிந்த உதவியைச் செய்யத்தான் போகிறார்.

உளவுத்துறைத் தலைமையகத்திற்கு மீண்டும் அவர்கள் விரைந்தபோது, இம்ரான் தன் கைப்பேசியில் சத்தமாகக் கட்டளைகள் இட்டார். சிகப்புச் சுழல்விளக்கு போக்குவரத்து அவர்களுக்கு வழிவிடச் செய்தது. உப்பு வெள்ளத்தில் காணாமல் போகும் பனியைப் போல, போக்குவரத்து நெரிசல் மாயமந்திரம்போல உருகி இலகுவானது.

அலுவலகத்திற்குள் வந்தவுடன் அவர் தன் குழுவை அழைத்தார்.

'சரி. நமக்கு என்ன கிடைச்சிருக்கு?' அவரது குரல் ஆச்சரியமூட்டும் வகையில் அமைதியாக ஒலித்தது. அவரது கோபம் ஒரு கட்டுக்குள் இருந்தது. அவரது வெளிப்படையான அமைதி, தன் நண்பருக்கு உதவி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிடுமோ என்ற அவரது கவலையை மறைத்த ஒரு மெல்லிய முகமூடிதான். செய்தியைத் தட்டச்சு செய்யும்போது, அன்வர்க்கு ஏதோவொரு தடை நேர்ந்திருக்கிறது என்று அவர்க்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது. அதனால்தான் அன்வரால் விவரங்கள் சொல்ல முடியவில்லை.

'IP முகவரித் தடயம் நமக்கு கிடைச்சிருக்கு,' என்று ஒருவன் சொன்னான். 'அது டில்லியிலிருக்கும் ஒரு சர்வர். தோராயமான இடத்தைக் கண்டுபிடித்துவிட்டோம்.' அவன் ஒரு வரைபடத்தின் பிரதியைக் காட்டினான். சிகப்புப் புள்ளி அந்த இடத்தை அடையாளப் படுத்தியிருந்தது. 'அது இந்த இடத்திலிருந்து 50 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கலாம்.'

இம்ரான் அவனைப் பார்த்தார். 'எனக்குத் துல்லியமான இடம் தெரியணும். சரியான முகவரி வேண்டும்.'

'சார். அதுக்கு கோர்ட் உத்தரவு வேணும். நான் *ISP*-யைக் கூப்பிடுகிறேன்...'

'நாம கோர்ட் உத்தரவுக்கெல்லாம் காத்திருக்க முடியாது,' என்று இம்ரான் இடைமறித்தார். ஒவ்வொரு வினாடியும் விலைமதிப்புள்ளது. விவாதங்கள் என்னும் ஆடம்பரமெல்லாம் அவர்களுக்கு இல்லை. *'ISP*-க்கு விவரமாகச் சொல்றதுக்கு நமக்கு நேரமில்ல. இது ரொம்ப அவசரநிலை.'

அவரது ஏஜெண்ட அவரை திரும்ப வெறித்துப் பார்த்தான். 'நாங்க *ISP*-யின் தரவு அமைப்பை *(database)* அத்துமீறி உடைத்து பார்க்கணும்னு விரும்புறீங்களா?'

'செய்யுங்க. நான் அதிகாரம் தர்றேன்.' இது ஓர் அதிகாரத் துஷ்பிரயோகம் என்ற பிரக்ஞை இம்ரானுக்கு இருந்தது. ஆனால் அவரது நண்பர் மோசமான ஆபத்தில் இருக்கிறார் என்று அவர் முழுமையாக நம்பினார். இந்த இரவு தேவைப்பட்டால் அவர் விதிகளை மீறக்கூடிய இரவு. காவல் துறையில் அவரது பணியின் நீண்டகாலத்தில் இதுபோல் அவர் செய்ததில்லை என்றாலும் கூட.

அவர் ஆட்கள் வேகமாக வெளியேறினார்கள்; ஒருவரை ஒருவர் குழப்பமாகப் பார்த்துக் கொண்டார்கள். இம்ரான் தன் சேரில் சாய்ந்துகொண்டார், பெருமூச்சுடன். அவர்கள் சரியான நேரத்திற்குள் கண்டுபிடித்து விடுவார்கள் என்று மட்டுந்தான் அவர் நம்பினார்.

5

வேட்டையாடப்பட்டது

புழுதிச்சாலையிலிருந்து நெடுஞ்சாலை நோக்கிச் செல்லும் கருங்காரை சாலையைக் குறிவைத்து ஓடிக்கொண்டிருந்த 'லாண்ட் குரூசரை' அசைத்துப் பார்த்தது வெடிகுண்டின் அதிர்ச்சி. சில வினாடிகள் கழித்துத்தான் வெடிகுண்டின் பெருஞ்சத்தம் அவளுக்குக் கேட்டது. அவள் அனிச்சையாக அலறினாள்.

அகழ்வாராய்ச்சிக் களத்திற்கு மேலே நெருப்புப்பந்து மேலெழும்புவதை அவள் பின்காட்சிக் கண்ணாடியில் பார்த்தாள். அவளால் நம்பமுடியவில்லை. அவர்கள் கல்லறையை அழித்துவிட்டார்கள்! நல்லவேளை அதிர்ஷ்டவசமாக அவள் அந்தக் கண்டுபிடிப்பை நிழற்படம் எடுத்திருந்தாள். கேமராவின் ஞாபகக் குச்சி *(memory stick)* இன்னும் அவளிடம்தான் இருக்கிறது. கல்லறையின் அழிவு சரித்திரத்திற்கும், தொல்பொருள் ஆய்வுக்கும் மீட்கமுடியாத இழப்பு என்றாலும், காப்பாற்றப்படக் கூடிய ஒன்று தன்னிடம் இன்னும் இருக்கிறது என்னும் எண்ணம் அவளைத் தேற்றியது.

பின்பு அவளுக்குத் தோன்றியது. கல்லறையை வெடிவைத்து தகர்த்தது யாரென்றாலும், அதில் இருக்கும் கண்டுபிடிப்புகளின் தடயம் எதையும் விட்டுவைக்க அவர்கள் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

கல்லறைக் கண்டுபிடிப்பின் ஜீவனுள்ள சாட்சியாக அவள் இருந்தாள்; அதனால் அவள் சாகும்வரை அவர்கள் ஓயப்போவதில்லை.

'லாண்ட் குரூசரின்' கூரைமீது ஏதோவொன்று திடீரென்று தாக்கியது. ஹெலிகாப்டரின் வெளிக்கம்பிகளிலிருந்து விமானஓட்டி காரின் கூரையைத் தாக்கிக்கொண்டிருந்தான். அலைஸ் தன் இருக்கையில் துள்ளிக்குதித்து மீண்டும் கத்தினாள். விடாப்பிடியாக தான் வேட்டையாடப் படுவோம் என்ற உணர்வு கலந்த அந்த

மாலைப்பொழுதின் துக்கம் அவள் நரம்புகளைத் தளரவைத்தது.

அவள் கியரை மாற்றி வேகத்தைக் கூட்டினாள். இந்த இரவு என்ன நிகழ்ந்தாலும் சரி, அவ்வளவு எளிதாக அவள் விட்டுவிடப் போவதில்லை. முடிவில் அவர்கள் அவளைப் பிடித்துவிடலாம்; ஆனால் அவள் சும்மா பணிந்துபோய் சரணடையப் போவதில்லை.

விமான ஓட்டிக்கு அது புரிந்திருக்க வேண்டும். ஒரு திடீர் வேகவெடிப்பில், விமானம் வலதுபக்கம் திரும்பி அவளைக் கடந்துசென்று, பின் அவளை நோக்கி வட்டமடித்து மீண்டுவந்து இறங்கி அவளது விளையாட்டுப்பிரயோக வண்டிக்கு *(SUV)* அணுக்கமாக வந்தது.

தன்னை நோக்கி நேராக வந்த ஹெலிகாப்டரை அவள் திகிலோடு வெறித்தாள். விமான ஓட்டி என்ன செய்யப் பார்க்கிறான் என்பதை அவள் அனிச்சை உணர்வால் புரிந்துகொண்டாள். கார்ப்பாதையில் இறங்கி அவளது வழியை அடைக்க அவன் திட்டமிட்டான் என்பது தெளிவாகத் தெரிந்தது; அதே வேளையில், அவன் அவளது வண்டியோடு நேருக்குநேர் மோதப்போகிறான் என்று அவளை நம்பவைத்து அவள் மனதோடு விளையாடி அதன் மூலம் அவளது திகிலுணர்வை அதிகமாக்க அவன் முயன்று கொண்டிருந்தான்.

அலைஸ் தன்னைக் கட்டுப்படுத்தப் போராடினாள். அவள் கையறுநிலையில் இருக்கிறாள்; அதனால் அவளை ஆட்டிப்படைக்கலாம் என்று யாரோ ஒருவன் நினைக்கிறான் என்ற சிந்தனை, தன்னைத்தானே மையப்படுத்த அவளுக்கு உதவியது.

'சரி, நண்பா,' என்று அவள் இறுக்கமாகச் சொல்லிக் கொண்டாள். 'இரண்டு பேரும் இந்த விளையாட்டை விளையாடுவோம். உனக்கு ரூலட் விளையாட்டு வேணும். இதோ உனக்கு அது கிடைச்சிடுச்சி.'

(ரூலட் என்பது ஃபிரென்ஞ் சூதாட்டம். சக்கரத்தில் கறுப்பு, சிகப்பு வண்ணங்களில் எண்கள் பொறிக்கப்பட்டு நடுவில் பந்து உருளும்; சக்கரம் சுழலும். சக்கரம் நின்றவுடன், பந்தயம் கட்டியவர்கள் சொன்ன எண்ணில் பந்து நின்றால் அவர்கள் ஜெயித்ததாக அர்த்தம்.)

அலைஸ் கியரை மாற்றினாள். கணநேரம் வேகத்தைக் குறைத்து, பின் அதிகரித்து, தரையைவிட்டு சில மீட்டர்கள் மேலே இருந்த ஹெலிகாப்டரை நோக்கி நேராகச் சென்றுகொண்டிருந்தாள். 'பாப்போம்; யார் முதல்ல அடிவாங்கறான்னு.'

சில கணங்களுக்கு, ஹெலிகாப்டரும், காரும் ஒன்றையொன்றை

நோக்கி உறுமின. இரண்டும் மோதப்போவது போல தோன்றின.

விமான ஓட்டி நன்றாக யோசித்தவன் போலத் தோன்றினான். கார்ப்பாதையில் ஹெலிகாப்டரைக் கொண்டுவந்து, முன்னேறிவரும் 'லாண்ட் குரூசர்' பாதையின் குறுக்கே அதை நிறுத்தினான். மனோதத்துவ உத்திகளைக் கைவிட்டு இப்போது அவன் பௌதீகத் தடையை உருவாக்குவதில் முனைந்தான்.

ஹெலிகாப்டர் சத்தம் நின்றவுடன் அதிலிருந்து ஓர் ஒற்றை உருவம் வெளிவந்தது. கூட யாருமே இல்லை என்று அவள் புரிந்துகொண்டாள். பூச்சியொன்று நெருங்கிவருவதைத் தன் வலைக்குள்ளிருந்துக் கவனித்துக் கொண்டிருக்கும் ஒரு சிலந்தியைப்போல, அந்த மனிதன் ஒரு பக்கமாகவே நின்றான், எப்படியும் அதன் பட்டிழைப் பிடிக்குள் பூச்சி வந்து மாட்டிக்கொள்ளும் என்ற அறிவின் பாதுகாப்போடு.

அலைஸ் தீவிரமாகச் சுற்றுமுற்றும் பார்த்தாள், தப்பிக்கும் வழிதேடி. ஹெலிகாப்டரின் கனத்த உருவம் அவளது பார்வையில் நிரம்பி, அப்பாலிருந்த நெடுஞ்சாலையைத் தடுத்துநிற்க, மனதில் நிரம்பும் திகிலுணர்வு அலையை எதிர்த்து அவள் போராடினாள். இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்க வழி ஒன்றிருந்தால், அவளை முற்றுகையிட அச்சுறுத்தும் பயங்கரத்திற்கு விட்டுகொடுக்க தன்னை அவள் அனுமதித்துவிட்டால், அந்த வழியைக் கண்டுபிடிக்கத் தன்னால் முடியாமல் போய்விடும் என்று அவள் புரிந்துகொண்டாள்.

பொங்கிவரும் கண்ணீரைக் கண்துடிப்பால் கட்டுப்படுத்திய வண்ணம், தன் முன்னே இருக்கும் காட்சியில் கவனத்தைக் குவிக்க முற்படலானாள். அவளது உள்ளுணர்வு எதிராக அவளைத் தூண்டிவிட்டது.

அப்புறம்தான் அது அவளுக்குத் தோன்றியது. ஒரு வாய்ப்பு இருக்கிறது; மிக மெல்லியதான வாய்ப்பு. ஆனால் அது அவளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. சூழ்நிலைகள் தனக்கு எதிராகவே இருக்கின்றன என்று அவளுக்குத் தெரியும். ஆனால் முயற்சியே செய்யாமல் அவள் விட்டுவிட மாட்டாள்.

அலைஸ் காரை மீண்டும் மெதுவாக ஓட்டினாள். வேகமாக ஏதோ சில மனக்கணக்குகள் போட்டாள். ஒருவேளை அது வேலை செய்யலாம்.

அவளது வாகனம் வேகம் குறைந்து வருவது கண்டு, அவள் நிறுத்தப்போகிறாள் என்று விமானஓட்டி நினைத்து, அவளை நோக்கி முன்னேறி வர ஆரம்பித்தான்.

ஜவுன்கார் கோட்டை, புதுடில்லியிலிருந்து 130 கி.மீ.க்கு அப்பால், இந்தியா.

'இந்த நிகழ்வு பற்றி நான் சந்தோசமா இருக்கேன் என்று சொல்வதற்கில்லை,' என்று காலின் முனகினான்.

அவனும் விஜயும், விஜயின் பூர்வீகக் கோட்டையின் பால்கனியில் உட்கார்ந்து சுகமான பருவநிலையை ரசித்தனுபவித்துக் கொண்டிருந்தார்கள். குளிர்காலம் இன்னும் வரவில்லை. இரவுகள் குளிராக இருந்தன; குறிப்பாக கோட்டையைச் சுற்றி. கோட்டை ஒரு குன்றின் மேல் கட்டப்பட்டிருந்தது; பண்ணை நிலத்திற்கு மேலே உயர்ந்துநின்ற குன்றின் அடிப்பகுதியில் அதனுடைய சின்ன கிராமம் கூடாகக் கிடந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு கொல்லப்பட்ட அணுவிஞ்ஞானியான விஜயின் மாமாவிற்குச் சொந்தமாக இருந்தது கோட்டை.

விஜய் காலினைப் பார்த்துப் பல்லிளித்தான். 'உனக்கு அந்தப் பையன பிடிக்கலயா? அவன் அழகா இருக்கிறான்னு நான் நினைச்சேன்.'

காலின் விஜயைப் பார்த்து முறைத்தான். 'நீ சொல்வது ரொம்பச் சரிதான். எனக்கு அவனைப் பிடிக்கலை. இந்தியாவும் அமெரிக்காவும் சேர்ந்து இந்த இணைப்பணிக் குழுவை அமைக்கத் திட்டம் போட்டிருக்குன்னு நம்ம நண்பன் கிட்வாய் சொன்னபோது, நான் நினைச்சேன் அது ஒரு அற்புதமான விஷயமுன்னு.'

'நிச்சயமா,' என்று விஜய் ஆமோதித்தான். 'விஞ்ஞானிகளயும், எஞ்சினியர்களயும் ஒன்று சேர்த்து, இரண்டு அரசாங்கத்தின் ஆதரவோட, ஒரு குழு அமைச்சி, டெக்னாலஜி தீவிரவாதத்தைப் புலன்விசாரணை செய்வது ஒரு நல்ல விஷயம். அதற்கான காலம் இப்ப வந்திருக்கு.'

'ஆமாம். ஆனால் 'ரெட் ரைடிங் ஹுட்' காட்டில் நடந்துசென்றபோது எப்படி உணர்ந்திருப்பாள்ன்னு இப்போ எனக்குத் தெரியுது. ஓநாய் அவள் மீது பாயுற வரைக்கும் அது ஒரு அற்புதமான நடையாக இருந்தது.'

(ரெட் ரைடிங் ஹுட் – *Red Riding Hood* - என்பது ஐரோப்பிய நாட்டுப்புறக் கதைகளில் ஒன்று. பல்வேறு வடிவங்களில் புழங்கிய கதை அது. 2011-ல் அதே பேரில் ஓர் அமெரிக்கத் திரைப்படமும் வந்தது.

அந்தக் கதையில் ரெட் ரைடிங் ஹூட் என்ற ஒரு சிறுபெண், அவளுக்குப் பிரியமான மனிதர்களின் வடிவத்தில் உருமாறும் ஓர் ஓநாயால் விழுங்கப்படுவாள்.

இந்த இடத்தில் காலின் பாத்திரம் அதை ஏன் சொல்ல வேண்டும்? உருமாறும் ஓநாய் போலவே தீவிரவாதிகள் நமக்கு மத்தியில் நல்லவர்களாகவே தோன்றுவார்கள் என்ற கருத்தை முன்வைப்பதற்காக.)

விஜய் நமட்டாகச் சிரித்தான். இன்று காலையில்தான் உளவுத்துறை *(IB)* தலைமையகத்திற்கு அவர்கள் இருவரும் அழைக்கப்பட்டார்கள். கடந்த வருடம் அவர்களுடன் இணைந்து வேலைசெய்த மைக்கேல் பிளேக் என்னும் அமெரிக்க உளவுத்துறை *(CIA)* ஒற்றனை அவர்கள் அங்கே சந்தித்தார்கள். இணைப்பணிக் குழுவின் தலைவராக அமெரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஓர் அமெரிக்கனும் பிளேக் உடன் இருந்தான். இந்தச் சந்திப்புக்காகத்தான் காலின் சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்திருந்தான்.

பில் பேட்டர்சன் ஆறு ஆடி, மூன்று அங்குலத்தில் இருந்தார்; மூளையே சதைகளாக இருந்தது. அணுக்கூறு உயிரியலிலும், வேதியியல் உயிரியலிலும் முனைவர் பட்டம் பெற்றவராக அவர் ஆவணங்கள் சொல்கின்றன. அமெரிக்காவின் கப்பற்படையின் 'சீல்' ஆக வேலை பார்த்தவர்.

(SEAL – sea, air and land: கடல், வான்வெளி, நிலம் ஆகியவற்றில் பணிபுரியும் கப்பற்படையின் விசேஷப் பிரிவில் இருப்பவர்க்குப் பேர் சுருக்கமாக 'சீல்').

ஆஃப்ரிக்க-அமெரிக்கனான அவரது பாணியில் ஓர் அலட்சியம் தெரிந்தது; அவர் ஆட்டிப்படைப்பவர் என்பதில் யாருக்கும் சந்தேகம் வராது.

இயல்பிலேயே கலகக்காரனான காலினுக்கு, பேட்டர்சனைப் பார்த்த கணத்திலே பிடிக்கவில்லை. அவனது அனிச்சையான வெறுப்புணர்வு, தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பகிர்வது பற்றிய விவாதத்தில் கொண்டு போய்விட்டது. அதில் காலின் முடிவில் தோற்றுப்போனான். அந்தச் சந்திப்பின் வலி இன்னும் அவனுக்குள் இருந்தது.

'இங்க பாரு. அமெரிக்க ஜனாதிபதி அவன் திறமைக் காரன்னு நினைச்சா, எனக்கு சரிதான்; உனக்கும்தான்.'

'ஒவ்வொரு தடவையும் ஏதாவது செய்யறதுக்கு அவன்கிட்ட போறது எனக்குப் பிடிக்கலை,' என்று காலின் விஜயைப்பார்த்து வெறித்தான்.

'யே. என் உயிரை வாங்காத. நாம செய்யற ஒவ்வொண்ணுக்கும் அவன்கிட்ட அனுமதி வாங்க தேவையில்ல. ராணுவ நடவடிக்கை அல்லது விசேஷமான எக்ஸ்பெர்ட் பயிற்சி சம்பந்தமா ஏதாவது இருந்தா மட்டுந்தான். இந்தக் குழுவில நம்ம வேலை புலன் விசாரணை பண்றதும், அனுமானங்கள் சரிதானான்னு சோதிச்சுப் பாக்கறதும் மட்டுந்தான். செயல்நடவடிக்கை ஏதாவது இருந்தா, அதுக்குன்னு இருக்கிற ஆள்கள்கிட்ட விட்டுவிட வேண்டியதுதான்.'

காலின் உறுமினான். விஜய் சொல்வது சரிதான் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அதை ஒத்துக்கொள்ள அவன் தயாராக இல்லை. அவன் தன் கடிகாரத்தைப் பார்த்தான். 'போக வேண்டிய நேரம்,' என்று அவன் சொன்னான்; இன்னும் முறைப்போடுதான் இருந்தான். 'பேட்டர்சன் கனவில பேயாய் வந்து பயமுறுத்த மாட்டான்னு நினைக்கிறேன். இப்போதைக்கு அதுதான் எனக்கு வேணும்.'

6

உதவிக்கான அழைப்பு

ஹெலிகாப்டர் விமான ஓட்டி காரின் பாதையில் நடுவே வந்தபோது, அலைஸ் காரை வலதுப்பக்கமாகத் திருப்பி துரிதப்படுத்தினாள். ஹெலிகாப்டரின் மூக்கிற்கும், நெடுஞ்சாலையின் தோளுக்கும் இடையில் இருந்த இடைவெளியைக் குறிவைத்துக் கொண்டிருந்தாள். சாலையின் முனையை நெருங்கியவடன் வேகத்தை அதிகப்படுத்தினாள்.

ஆச்சரியமான விமானஓட்டியைக் கடந்து அவள் விர்ரென்று செல்ல, அவன் காரைத் தொடர்ந்து ஓடிவந்தான். தனது அனுமான சூதாட்டம் பலனளிக்க வேண்டும் என்று அலைஸ் தீவிரமாகப் பிரார்த்தித்தாள். இந்த இடைவெளி போதுமான அளவுக்கு அகலமாக இருக்கிறதா?

அடுத்த கணம், 'லாண்ட் குரூசர்' இரண்டு பக்கமும் இருந்த உலோகத்தை உராய்ந்து சென்றது. உலோகம் நொறுங்கித் தேய்ந்த சத்தம் இரவின் மௌனத்தை தகர்த்தது. ஒரு பக்கம் ஹெலிகாப்டர்; மறுபக்கம் நெடுஞ்சாலையின் உலோகக்கம்பித் தடுப்புகள்; இடையில் அவளது கார் நெருக்கியடித்து நுழைந்து விரைந்தது.

ஒரு நீண்ட கணம், காலம் மெதுவாக ஊர்ந்தது. ஹெலிகாப்டரும் கம்பித்தடுப்புகளும் இணைந்து காரின்மீது சங்கமித்து, அதை அழுத்தி, முன்பு நடந்த துப்பாக்கிச் சூட்டில் உடையாமல் மிச்சமிருந்த ஜன்னல்களை நொறுக்கியது போலத் தோன்றியது.

அலைஸ் கண்களை மூடிக்கொண்டாள். கார் எப்படியாவது குறுகலான நெருக்கடியான வழியைக் கடந்து சென்றுவிட வேண்டும் என்று தீவிரமான எண்ணினாள். உலோகத்தின் கரடுமுரடான தேய்வு அவளது மூளையின் உள்ளே கிழித்துச் சென்றது போலத் தோன்றியது.

திடீரென்று 'லாண்ட் குரூசர்', தன்னை அழுத்திய சுமையான இடையூறுகளிலிருந்து விடுபட்டு துள்ளிக் குதித்தது போல ஓடியது.

வண்டி இடைவெளியின் ஊடாகப் பாய்ந்து வெளியேற, முன்னாடி நீண்டுகிடந்த நெடுஞ்சாலையைத் தன்னால் பார்க்க முடிகிறது என்று அவள் ஓர் அதிர்வோடு உணர்ந்தாள்.

ஒரு புதிய ஆற்றல் வெடிப்பு அவளுக்குள் பொங்கிப் பாய்ந்தது. நம்பிக்கைகள் உயர்ந்தன. விமான ஓட்டி சுதாகரித்து மீண்டும் தன் பயணத்தைத் தொடரும் முன்பே, 'ஆக்ஸிலேட்டரை' தரைவரை அழுத்தி, தன் காருக்கும், ஹெலிகாப்டருக்கும் இடையில் ஒரு வெளியை உருவாக்கினாள் அவள்.

பின்னாடி விமான ஓட்டி கத்திச் சபித்துக் கொண்டிருந்ததை கண்ணாடியற்ற ஜன்னல்கள் வழியாக அவள் கேட்டாள். அவன் மீண்டும் சுட ஆரம்பிப்பான் என்று நிச்சயமாக அவளுக்குத் தெரியும். அதனால் தன் இருக்கையில் அவள் சற்று தாழ்வாக உட்கார்ந்துகொண்டாள். குண்டுகள் மீண்டும் அவளது தலையைக் கடந்து விசுக்கென்று பாய்ந்தன. குண்டு பாய்ந்து முன்னாடி இருந்த கார் கண்ணாடித்திரை வெள்ளிக் கீறல்களின் சிலந்தி வலையாக உருமாறியது.

எப்படியோ அவள் ஓட்டிக்கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்குத் தெரியும், மங்கலான கண்ணாடித்திரையோடு தன்னால் அதிவேகமாக ஓட்டமுடியாது என்று. அவள் நம்பிக்கைகள் மீண்டும் தளர்ந்தன. முன்னாடி சாலையின் மீது கவனம் குவித்து அவள் வேகத்தைக் குறைத்து ஓட்ட ஆரம்பித்தாள்.

ஹெலிகாப்டரின் சத்தம் தொடர்கிறதா என்று அவள் காதுகொடுத்து கேட்டாள். ஆனால் நிமிடங்கள் டிக்டிக் என்று கடந்தன; ஒன்றுமே கேட்கவில்லை. காரின் கேபின் வழியாக, உடைபட்ட ஜன்னல்கள் வழியாக, எஞ்சினின் உறுமல் வழியாகப் பாய்ந்தது காற்றின் இரைச்சல். தனது அதிவீரச் செயலால் ஹெலிகாப்டர் சேதமானதா, இல்லை அவன் துரத்தும் வேலையை விட்டுவிட்டானா என்று அவள் ஆச்சரியப்பட்டாள்.

இந்த இரவின் நிகழ்வுகளுக்குப் பின்னாலிருந்த மர்மம் மீண்டும் தலைதூக்கியது. இதற்குப் பின்னால் இருந்தது தொல்பொருட்களின் கொள்ளைக்கூட்டம் என்றுதான் அவள் ஆரம்பத்தில் நினைத்திருந்தாள். அதனால்தான் கல்லறையைப் போட்டோ எடுத்ததற்காக அப்படியொரு காட்டுக்கத்தல் நிகழ்ந்தது. கலைப்பொருட்களின் நிழற்படங்கள் உலகத்தின் பார்வைக்குச் சென்றுவிட்டால், அப்புறம் அவற்றைக் கறுப்புச்சந்தையில் வியாபாரம் செய்வது கடினமாகிவிடும். குறிப்பாக,

இதுபோன்ற மிகவும் பிரசித்தமான கல்லறை விஷயத்தில் இன்னும் சிரமம்தான்.

ஆனால் இந்தக் கருத்துருவாக்கம் கல்லறை போலவே தூள் தூளானது. அதில் எந்தவிதமான தர்க்கவிளக்கமும் இல்லை. இரண்டாயிரம் வருடம் பழமையான கல்லறை அழிந்துபோவதில் யார்க்கு என்ன லாபம்?

ஒருவருடமாக கல்லறையை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தது எல்லாம் அதை அழிக்கத்தானா? இதற்கு விடைகள் இருப்பது போலத் தெரியவில்லை.

இப்போது அவள் லூதியாஸ் நதியின் மீது காரை ஓட்டிக்கொண்டிருந்தாள். தெசலோனிக்கியை அடைவதற்கு நீண்ட நேரமாகாது என்று அவளுக்குப் புரிந்தது. இதுவரை நிகழ்ந்தது பற்றிய எண்ணங்களைத் தள்ளிவைத்துவிட்டு, இனி என்ன செய்யவேண்டும் என்பதில் கவனத்தை மையப்படுத்த முயன்றாள்.

ஸ்டாவ்ரோஸ் மற்றும் பீட்டருடன் தொடர்புகொண்ட விமான ஓட்டிக்கு தெசலோனிக்கியில் ஆட்கள் இருப்பார்கள் என்பது மிகமிக சாத்தியம். அவளைப் பின் தொடர்வதை விட, தெசலோனிக்கியில் அவளுக்காக ஆட்களைக் காத்திருக்கச் செய்வது எளிதானது. தான் இன்னும் ஆபத்தைக் கடக்கவில்லை என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

கண்ணீரைக் கட்டுப்படுத்தியவாறே, அலைஸ் காரை நிறுத்தி வெளியே வந்தாள். அவள் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். மார்க்கோ செத்து விட்டான். டாமனும்கூட. ஆனால் இதிலிருந்து உயிரோடு தப்பிக்க அவள் விரும்பினாள். பாலத்தின் கம்பிகள் அருகே நின்றுகொண்டு, கைமுட்டிகளை ஓங்கி அடித்தாள், காயப்படும்வரை விரக்திக்கு வடிகால் தேடுபவள் போல. மார்க்கோவைப் பற்றி, தேவையற்ற அவனது மரணத்தைப் பற்றி அவள் யோசித்தாள். அவனுடைய அதிர்ஷ்டம் ஏன் அவ்வளவு சீக்கிரம் காணாமல் போகவேண்டும்?

கண்ணீர்க்கறை படிந்த முகத்தைத் திருப்பி ஆகாயத்தைப் பார்த்தாள். அங்கே நட்சத்திரப் புள்ளிகள் இருந்தன; ஆனால் அவளுக்கான ஆறுதல் இல்லை.

பாலத்தின் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, சிந்திக்கத் தலைப்பட்டாள். தெசலோனிக்கியில் அமெரிக்கத் தூதரகம் இருக்கிறது.

அங்கே போக வேண்டும். அதுதான் அவள் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இடம் என்று அவள் நினைத்தாள். ஓட்டலில் அவள் தன் பாஸ்போர்ட்டை விட்டு வந்தாலும், ஓட்டுநர் உரிமம் இப்போது இருக்கிறது. இது போதும், அவள் தன் அடையாளத்திற்கான ஆதாரத்தைக் காட்டி அங்கே புகலிடம் தேடுவதற்கு.

தன் கைப்பேசியை எடுத்தாள். தூதரகத்தின் முகவரியைத் தேடினாள்: 43, சிமிக்ஸி தெரு. அதுதான் ஆரம்பம்.

அடுத்து யாரையாவது அழைத்து உதவி கேட்கலாம் என்று அவள் கணக்குப்போட்டாள்.

அவளது நண்பன். ஒருகணம் அவள் தயங்கினாள். ஆனால் அவன் இப்போதும் அவளது நண்பன்தானா? அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அவன் மட்டுந்தான் அவளுக்கு இருப்பது. அவளுக்கு ஒருசில நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்பும் அளவுக்கு அவ்வளவு நெருக்கமானவர்கள் அல்ல.

அலைஸ் எண்ணை டயல் செய்தாள். கொஞ்சநேரம் மணி ஒலித்தது. திடீரென்று துண்டிக்கப்பட்டது. நேரத்தைப் பார்த்தாள். அமெரிக்காவில் இப்போது அதிகாலை நேரம். மீண்டும் முயன்றாள்; அதே எதிர்வினைதான். சில மணியொலிகள்; பின் துண்டிப்பு. அதைரியமடைந்து, அவள் கைப்பேசித் திரையைப் பார்த்தாள். அவள் முயற்சி செய்த எண் 'பிசி'யாக இருந்தது என்று செய்தி தெரிந்தது.

அவன் விழித்துதான் இருக்கிறான். அவன் வேண்டுமென்றே அவளது அழைப்பை ஏற்க மறுக்கிறான் என்பது இந்த இரவில் மிகவும் அதிகமாகவே வலித்தது. இந்த மாதிரி நேரத்தில், வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவளருகே இருக்க வேண்டிய ஒரே ஒரு மனிதன், இப்போது திடீரென்று அவள் வாழ்க்கையிலிருந்து காணாமல் போய்விட்டான். மற்றொரு கண்ணீர் அலை ஊறி மேலெழும்ப அச்சுறுத்தியது. ஆனால் அவள் அதை வற்புறுத்தித் தடுத்தாள்.

ஜெயிக்க வேண்டுமென்றால் அவள் பலமுள்ளவளாக இருந்தாக வேண்டும்.

மற்றொரு பெயர் அவள் சிந்தனையில் நீந்திவந்தது. எண்ணை அழுத்தினாள். இது கைப்பேசி எண் அல்ல; நிலவழித் தொலைபேசி எண். குர்ட் வாலஸின் தனிப்பட்ட கைப்பேசி எண்ணுக்கு அவள் நெருக்கமானவள் அல்ல.

ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது, இரண்டு மணியொலிகளுக்குப் பின்.

'மிஸ்டர் வாலஸ் அலுவலகம். நாங்கள் உங்களுக்கு எப்படி உதவ வேண்டும்?' அது கிளாரா; வாலஸின் காரியதரிசி.

கிடைத்த அனுபவத்தினால் தன் குரல் நடுங்குவதை அலைஸ் உணர்ந்தாள். 'நான் மிஸ்டர் வாலஸிடம் பேசணும். தயவுசெய்து. ரொம்ப அவசரம்.'

'மிஸ்டர் வாலஸ் ஒரு கூட்டத்தில் இருக்காரு. இந்த நேரத்தில அவர தொந்தரவு செய்ய முடியாது.'

'வாழ்வா சாவான்னு இருக்கிற பிரச்சின இது. நிஜமாகவே. தயவுசெஞ்சி, அவரோட பேச விடுங்க.' அலைஸ் கெஞ்சினாள். பொறுமையின் கடைசிக்கீற்று அவளது கைகள் வழியாக நழுவிச் செல்ல, ஒரு மரண பயம் அவளை ஆட்கொண்டது.

'உங்க பேரையும், போன் நம்பரையும் சொல்லுங்க. மிஸ்டர் வாலஸ் ஃபிரீயானவுடன் உங்ககிட்ட பேச சொல்றேன். இப்போது அவர்கிட்ட நான் போகமுடியாது. மன்னிக்கணும்.'

சுத்தியல் கொண்டு அடித்தது போன்று வார்த்தைகள் அலைஸைத் தாக்கின. ஆக, இப்போது அவள் தனியே விடப்பட்டுவிட்டாள். உதவியென்று ஏதுமில்லை.

7

கிரீஸ், தெசலோனிக்கி அருகே, *E*-75-ல்

கிளாராவின் வார்த்தைகளால் அதிர்ச்சியாகி மரத்துப்போய் சில கனங்கள், அலைஸ் அதிர்ந்துநின்றாள். பிரயத்தனத்துடன் தன்னைத்தானே சமன்படுத்திக் கொண்டாள். ஒருவேளை விளக்கம் கொடுத்தால்...?

'என் பேரு அலைஸ் டர்னர். மிஸ்டர் வாலஸ் கிரீஸில் நிதிஉதவி செய்யும் திட்டத்தில் வேல பாக்கிறேன். தயவுசெஞ்சி... தயவுசெஞ்சி அவருகிட்டச் சொல்லுங்க, கல்லறையை அழிச்சிட்டாங்க; ரெண்டு பேரு செத்துட்டாங்க; யாரோ ஒருத்தன் என் பின்னாடி வந்துகிட்டிருக்கான். நான்... நான் ரொம்ப பயந்துபோய் இருக்கேன்.' வார்த்தைகளைக் கொட்டும்போது தான் அழுது கொண்டிருந்ததை அலைஸ் கவனித்தாள்.

கிளாராவின் குரல் மென்மையானது. 'மிஸ் டர்னர். உங்க கஷ்டத்த கேட்கும்போது எனக்கு வருத்தமா இருக்கு. இப்பவே மிஸ்டர் வாலஸ்க்கு செய்தி அனுப்புறேன். துரதிர்ஷ்டவசமாக, சொந்த மொபைல் ஃபோன் வச்சுக்கிறதில அவருக்கு நம்பிக்கை இல்ல. அதனால அவர தொடர்புகொள்ள கொஞ்ச நேரமாகும். உங்ககிட்ட நான் ஒண்ணே ஒண்ணு சொல்லிக்கிறேன். உங்க ஃபோனை ஆன்லே வச்சிருங்க; எந்த நேரமும் கால் வரலாம்.'

அலைஸ் தலையசைத்தாள். கிளாராவுக்கு நன்றி சொன்னாள். பின் காருக்குள் சென்று கண்ணீரைத் துடைத்தாள். இப்போது தெம்பு வந்தது. கூடிய சீக்கிரமே வாலஸ் மீண்டும் அழைப்பார். உதவி கிடைத்துவிடும் என்று நம்பிக்கை பிறந்தது.

ஆனால் அதுவரை, அவள் தனது சொந்த அறிவின் படியேதான் செயல்பட வேண்டும். பதற்றம் உதவாது. தான் செயல்பட வேண்டிய இலக்கு பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள அவள் முயன்றாள்.

அமெரிக்கத் தூதரகம். அவள் அங்கே போகவேண்டும்.

தூதரகத்தின் எண்களை 'லாண்ட் குரூசரின்' *GPS*-யோடு பதிவுசெய்துவிட்டு அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அவள் யோசித்தாள்.

GPS-ல் பதிவான பாதையைப் பார்த்தவுடன் அவள் முணுமுணுத்தாள். 'சுவாரஸ்யம். சற்று தொலைவிற்குப் பின்னாடி, *E*-75-யோடு கலந்த *A*2 மோட்டார்பாதை, சற்று தூரம் தள்ளியிருந்த ஆக்ஸியோஸ் சந்திப்பில் *E*-75-ஐ விட்டு விலகியது. பின் அது தெசலோனிக்கி நோக்கி விரைந்தது. காலிக்கோ பாலத்திற்கு சில மைல்கள் தாண்டி, *A*2, நீ டைடிகி இசோடோஸில் கலந்தது; நீ டைடிகி இசோடோஸ், நவர்சௌ கவுன்டூரியோடவ்க்கு இட்டுச் சென்றது. அங்கிருந்து கொஞ்சதூரம் தாண்டி அவள் இடதுபக்கம் திரும்பி சிமிஸ்கி நோக்கி செல்லலாம். இதுதான் *GPS* காட்டிய பாதை.

அவளது ஆர்வத்தைத் தூண்டின திரையில் தெரிந்த இரண்டு மாற்றுப்பாதைகள். முதல் பாதை நீ டைடிகி இசோடோஸிலிருந்து கிளையாகப் பிரிந்து, 26 ஆக்டோவ்ரியோவிற்குச் சென்றது; ஆக்டோவ்ரியோவ் வளைந்து ஒரு சந்திப்பிற்கு மீண்டும் வந்தது. அங்கிருந்து திரும்பி அவள் நவர்சௌ கவுன்டூரியோடவ்க்குப் போகலாம்.

இரண்டாவது பாதை மிகவும் நம்பிக்கை மிகுந்ததாகத் தெரிந்தது. 26 ஆக்டோவ்ரியோவிற்குச் செல்வதற்குப் பதில், அவள் அடுத்திருந்த வெளியேறுமிடத்திற்குச் சென்று, அங்கிருந்து மோட்டார்ப் பாதையில் பயணித்து, 28 ஆக்டோவ்ரியோவிற்குச் சென்று, கொஞ்ச நேரம் கழித்து, மோனாஸ்டிரியோவிற்குத் திரும்பலாம். அது இறுதியில் எக்நாஷியாவிற்குச் செல்கிறது. அங்கிருந்து வலதுத்திருப்பத்தில் சென்றால் அவள் சிமிக்ஸிக்குப் போய்விடலாம்.

இந்தப் பாதையில் போகலாம் என்று அவள் தீர்மானித்தாள். அது இன்னும் ஒரு சூதாட்டம்தான்; ஏனென்றால் அவர்கள் இந்த வழியில் வேவு பார்க்க மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆனால் அவளுக்கு வேறு வழியில்லை.

அவள் காரை நோக்கி நடந்தபோது, இன்னொரு பெயர் தோன்றியது. அவள் நம்பக்கூடிய மற்றொரு நபர். அப்படித்தான் அவள் நினைத்தாள். கல்லூரி நண்பன். அது நீடித்தவரை மிகவும் சிறப்பான உறவுதான். ஆனால் பல வருடங்கள் தொடர்பு இல்லை. ஆனால் சில நேரங்களில் அவன் அவளைப் போனில் அழைத்திருக்கிறான்; மின்னஞ்சல்கள் அனுப்பியிருக்கிறான். எதற்கும் அவள் பதில்

சொன்னதில்லை. இறுதியில் அவன் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டான். பிரயோஜனமில்லை என்று உணர்ந்திருப்பான். அவனுடைய தொடர்பை அவள் கத்தரித்தற்குப் பாதி காரணம், அவர்கள் தங்கள் உறவை துண்டித்த விதம் அவளுக்குள் கசப்புணர்ச்சியைத் தந்தது. இதுதான் திருமணத்தில் முடிந்து வாழ்க்கை முழுவதும் நீடிக்கக்கூடிய உறவு என்று அவள் எப்போதும் நினைத்திருந்தாள். ஆனால் அது அப்படி நடக்கவில்லை.

ஏதோவொரு காரணத்திற்காக, இன்று தனிமையில் காயப்பட்டு, ஆபத்தில் மாட்டிக்கொண்டு பேசுவதற்கு யாராவது கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கும் இந்தத் தருணத்தில் தன் பழைய நண்பனை அழைக்கவேண்டும் போல இருந்தது அவளுக்கு. ஆனால் இத்தனை

வருடங்களுக்குப் பின், அவனை அழைப்பது சரியாக இருக்குமா என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. எல்லாப் பாலங்களையும் எரித்துவிட்ட உறவுவிரிசல் நிகழ்ந்து முடிந்து பல வருடங்கள் ஆனபின்பு, தான் ஏன் இன்னும் அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

சில கணங்கள் அவள் யோசித்தாள்; பின் வேறு சில தொடர்புகளை வரிசையாகப் பார்த்தாள். வேகமாக முடிவெடுத்தாள்; அந்த எண்ணையே அழுத்தினாள். வா! எடு. அவன் அவள் எண்னை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க மாட்டான். ஒருவேளை தன் தொடர்புப் பட்டியலிலிருந்து அதை அவன் நீக்கியிருந்தால். சாத்தியம்தான், இத்தனை வருடங்களுக்குப் பின்பு.

8

ஜவுன்கார் கோட்டை

காலின் தன் அறையில் இருந்தான். கைப்பேசியையே வெறித்துப்பார்த்தான். பதினொரு வருடங்கள், அவளிடமிருந்து எந்த செய்தியும் இல்லை. உறவு முறிவுக்குப்பின் அவள் அவனின் மின்னஞ்சல்களுக்குப் பதில் சொல்லவே இல்லை. தன் முயற்சிகள் தோற்றுப்போனதில் அவனுக்கு ஆச்சரியமில்லை. தன் பழைய நண்பனோடு இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று சபதமிட்டுத்தான் அவள் வெளியேறினாள். இப்போது அவள் அவனை அழைத்துக் கொண்டிருந்தாள். அவ்வளவு நீண்ட காலத்திற்குப்பின் என்ன நேர்ந்துவிட்டது அவளுக்கு, தன் மனதை மாற்றிக்கொள்ளும்படி?

அவளது எண்ணைப் பார்த்தவுடன் அவனது முதல் உள்ளுணர்வு எடுத்துப் பேசுவதாகத்தான் இருந்தது. ஆனால் அவன் தயங்கினான்; நிச்சயமில்லாமல்; பயம்கூட இருந்தது. குறிப்பாக விஷயங்கள் இப்படி இருக்கையில். அவள் மீண்டும் வரமுயற்சி செய்துகொண்டிருந்தால், அது நிலைமையை உண்மையில் சிக்கலாக்கிவிடும்.

மூச்சை ஆழமாய் உள்ளே இழுத்துக்கொண்டு, எதை எதிர்பார்ப்பது என்று தெரியாமல், அவன் அழைப்பை ஏற்றான்.

சுரங்கமுடிவில் வெளிச்சம்

'அலைஸ்?' காலின் குரல் இப்படி நன்றாக ஒலித்ததில்லை அவளுக்கு, வருடங்களின் இடைவெளிப்பிளவு வாய் திறந்து கிடந்தபோதிலும்.

'காலின்... நான்... எனக்கு யாரைக் கூப்பிட்றதுன்னு தெரியலை.' அவளது குரல் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதில் ஒரு நிம்மதி ஒலித்தது, காலின் பல மைல்கள் தாண்டி அமெரிக்காவில் இருந்த போதிலும்; அவனால் இந்தக் கணம் உதவியேதும் செய்யமுடியாத

போதிலும்.'

'ஹே, என்ன ஆச்சு?' காலின் அக்கறையோடு, கலக்கத்தோடு கேட்டான். அவளது குரல் நடுக்கத்தை அவன் கவனித்தான். 'உனக்கு ஒண்ணும் ஆகலியே?'

குற்ற உணர்வாலும், அச்சத்தோடும், அலைஸ் கடந்த ஒரு மணிநேரமாக தான் அனுபவித்த கதையை, கல்லறையில் நுழைந்தது முதல் தொடங்கி, நெடுஞ்சாலையில் இப்போது அவள் இருக்கும் நிலைமை வரை, ஆதியோடு அந்தமாகச் சொல்லிமுடித்தாள்.

அவள் முடித்தபோது மௌனம் நிலவியது. இறுதியில் காலின் பேசினான்: 'தெசலோனிக்கி பணித்திட்டத்தில் உனக்கு உதவ யாருமே இல்லையா?'

'யார நம்பறதுன்னே தெரியலை, காலின். ஸ்டாவ்ரோஸும் பீட்டரும் இதுக்குப் பின்னால இருக்கிறாங்கன்னா, மத்தவங்கப் பத்தி யாருக்குத் தெரியும்? டாமனும் இதில ஒரு ஆளுதான்னு நினைக்கிறேன். அவர் 'ஆணைகளை' பின்பற்றலைங்றதனால சாவடிக்கப் பட்டார். அப்படித்தான் பீட்டர் சொன்னார்.'

'சரி. மாத்துவழியில தெசலோனிக்கிக்கு நீ போற திட்டம் நல்லதுதான்னு நினைக்கிறேன். நீ அப்படி செய்வேன்னு அவங்க எதிர்பார்க்க மாட்டானுக. தூதரகத்திற்கு நேராப் போ. நான் இப்ப இந்தியாவில இருக்கேன். நான் அமெரிக்காவிற்குப் போன் செஞ்சு, ஏதாவது வழியிருக்கானு பாக்கிறேன்.'

'இந்தியாவில நீ என்ன பண்ற?'

விஜய்க்கு அவன் மாமாவிடமிருந்து கோட்டை ஒன்று வாரிசுச் சொத்தாக கிடைத்தது பற்றி அதிக விவரங்கள் இல்லாமல் சொன்னான் காலின்.

'அப்படியா. நன்றி. நான் உன் உதவியை மதிக்கிறேன், காலின்ஸ். எல்லாம் நடந்ததற்கு அப்புறமும் கூட...'

'கவலப்படாத. அதற்குத்தான் நண்பர்கள். அவர்கள் தொடர்பில் இல்லாவிட்டாலும் கூட.' காலின் சற்று தயங்கினான். 'நான் விஜயிடம் சொல்லவா?'

'உம்... அதற்குள் வேண்டாம். அவர் எப்படி எடுத்துக்குவார்ன்னு தெரியலை.'

'சரி. பாத்துக்கோ. சீக்கிரம் உன்கிட்ட பேசுறேன்.'

அலைஸ் அழைப்பைத் துண்டித்தாள்.

அவளது மனம் தீர்க்கமான பின், எஞ்சினை ஸ்டார்ட் செய்தாள். முன்னால் சென்றது கார். ஒரு கிலோமீட்டர் கூட அவள் போயிருக்க மாட்டாள்; மீண்டும் அவளது கைப்பேசி ஒலித்தது.

அதை எடுத்து திரையைப் பார்த்தாள். வாலஸா?

'அலைஸ்?'

'மிஸ்டர் வாலஸ்!' அவளது நிம்மதிக்கு அளவில்லாமல் போனது.

'உனக்கு ஏதோ உதவி தேவைன்னு என்கிட்ட சொன்னாங்க.' வாலஸின் குரலில் அக்கறை ஒலித்தது.

அலைஸ் மனதில் உள்ளதெல்லாம் வாலஸிடம் கொட்டித் தீர்த்தாள். அவள் கல்லறைக்குள் புகுந்து ஒருமணிநேரம் ஆவதற்குள் நிறைய நடந்துவிட்டன என்பதை அவளால் நம்பமுடியவில்லை.

அவள் சொல்லிமுடித்தபின்பு ஒரு கணம் அமைதி நிலவியது. பின் வாலஸ் பேசினார். அவர் குரல் தீர்க்கமாகவும், அதிகாரத்தோடும் ஒலித்தது. 'அமெரிக்கத் தூதரகத்திலிருந்து அரைமணி நேர தூரத்தில நீ இருக்கிற. அப்படித்தான் உன்னோடு ஜிபிஸ் சொல்றதா? இதுபோதும் விசயங்களைச் சரிபண்றதுக்கு.' அவர் குரலில் கருணை வழிந்தது. வேறொரு சூழ்நிலையாக இருந்தால், அதை அவள் கிட்டத்தட்ட ஆதரவான குரலாக எடுத்திருப்பாள். ஆனால் இதிலிருந்து அவள் உயிரோடு தப்பிப்பதற்கு அவர்தான் அவளுக்குச் சிறந்த வழியாகத் தோன்றியது. 'கவலப் படாதே, டியர்! கார் ஓட்டிட்டே இரு. இன்னும் பத்து நிமிசத்துக்குள்ள யாராவது ஒருத்தர் உன்னோட தொடர்பில வருவாங்க. தூதரகம் போனவுடனே என்ன கூப்பிடு. இப்ப நான் போறேன்.'

வாலஸ் இணைப்பைத் துண்டிக்கும்போது அலைஸ் நன்றிகளை முணுமுணுத்தாள். காரைத் தொடர்ந்து ஓட்டினாள். இந்த இரவில் முதன்முதலாக அவள் உணர்ந்தாள், நெடுஞ்சாலையில் யாருமே இல்லை என்று. எந்தத் திசையிலும் கார்கள் கடந்துபோகவில்லை. இது இயல்புக்கு மீறியது; அமானுஷ்யத்தைவிட கொஞ்சம் மேலானது.

வாலஸுடம் கொண்ட உரையாடலால் மனம் அமைதியாக, இப்போது காரை நிலையாக ஓட்டினாள். ஆக்சியோஸ் நதியைக் கடந்தவுடன், கைப்பேசி மீண்டும் ஒலித்தது.

'மிஸ் டர்னர்? தெசலோனிக்கி ஜெனரல் போலீஸ் டைரக்டரேட்டிலிருந்து பேசுகிறேன்.' கனத்த கிரேக்கமொழி அழுத்தத்துடன் ஓர் ஆழமான குரல் அவளது காதுக்குள் பேசியது, இணைப்பை அவள் பொருத்தியவுடன்.

அவளது இதயம் ஒரே ஒரு துடிப்பைத் தவறவிட்டது. அவள் உண்மையிலே இதைக் கேட்டுக்கொண்டிருந்தாளா? வாலஸ் உள்ளூர் காவல்துறையைத் தொடர்பு கொண்டுவிட்டாரா?

'ஆம்,' என்று அவள் திக்கினாள். தன் ஆச்சரியத்தை மறைக்க முயன்றாள்.

இணைப்பில் வந்த காவல் அதிகாரி திட்டத்தை வேகமாக சுருக்கமாகச் சொன்னார். மோட்டார் சைக்கிளில் வரும் மூன்று காவல் அதிகாரிகள் அவளை நீ டைடிகி இசோடோஸின் சந்திப்பில் பார்த்து அவள்கூட வருவார்கள். அமெரிக்கத் தூதரகத்திற்கு அல்ல. அது இந்நேரம் பூட்டியிருக்கும். ஆனால் ஒரு ஓட்டலுக்கு. அங்கே ஆயுதந்தரித்த காவலாளிகள் அவள் அறைக்கு வெளியேயும், ஓட்டல் முகப்பிலும் காவல் காப்பார்கள். தூதரக அதிகாரிகள் அவளுடன் நேராகத் தொடர்பில் வருவார்கள். தெசலொனிக்கியிலிருந்து அமெரிக்காவிற்குச் செல்வதற்கான ஆவணங்களை ஏற்பாடு செய்வார்கள்.

எப்படி எதிர்வினை ஆற்றுவது என்று அலைஸ்க்குத் தெரியவில்லை. கடந்த ஒருமணிநேரத்து பயங்கரம் அவளை மரத்துப்போகச் செய்துவிட்டது. இந்தச் செய்தி வறட்சிக்கு அப்புறம் வந்த பருவகால மழையாக இருந்தது. இணைப்பைத் துண்டிக்கும் முன்பு, காவல் அதிகாரிக்கு அவள் நன்றிகளை அள்ளி வழங்கினாள். பின்பு காரை நிறுத்தி வெளியே வந்து சாலையில் முட்டிபோட்டு அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகளை எல்லாம் நிம்மதிக் கண்ணீராக, சர்வாங்கமும் நடுங்க, கொட்டித் தீர்த்தாள். இந்தத் தடவை அவள் அழுதது அச்சத்தால் அல்ல, இறுதியில் தான் பாதுகாப்பாக இருக்கப் போகிறோம் என்று அறிந்துகொண்ட ஆனந்தத்தால்.

உளவுத்துறை தலைமையகம், புது டில்லி

இம்ரான் ஏறிட்டுப் பார்த்தார். அவருடைய ஆள் ஒருவன் வேகமாக அறைக்குள் வந்தான். புருவத்தை கேள்விக்குறியாக வளைத்தார்.

மேஜையில் அவன் வைத்த காகிதங்களை அவர் பார்த்தார். 'சரி, போகலாம்.' அவர் கதவுநோக்கிப் பாய்ச்சலாக நடந்தார். 'படை வீரர்களை வரச்சொல்லு.' அவர் ஏற்கனவே படைவீரர்களின் குழுவொன்றைத் தயார்நிலையில் இருக்கும்படிச் சொல்லிவைத்திருந்தார். நிமிடங்களுக்குள், இம்ரானோடு உளவுப்படை, ஐஸ்பி கொடுத்திருந்த முகவரி இடத்திற்கு விரைந்தது.

அவர்களில் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் பேசிமுடித்தவுடன் இம்ரானிடம் திரும்பினார். 'சார். தீயணைப்புக்காரங்க ஒரு மருத்துவ வளாகத்தில் பெரிய தீ விபத்து நடந்ததாகச் சொல்றாங்க. அது நாம குறிவைத்த இடம்.'

இம்ரான் பற்களை நறநறவென்று கடித்தார். நேரத்திற்குள் அங்கே அவர்கள் போய்விடவேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்தார்.

9

தெசலொனிக்கி, கிரீஸ்

அலைஸ் தன் படுக்கையில் விழுந்தாள், களைப்போடு. உயிரோடு இருக்கும் மகிழ்ச்சி ஆட்கொண்டது. காவல் அதிகாரிகள் வாக்களித்தபடி அவளைச் சந்தித்து அவளை ஓட்டலில் புனைப்பெயரில் பதிவுசெய்து தங்கவைத்தார்கள். அவளது நிலைமை பற்றி அவர்களுக்கு என்ன சொல்லப்பட்டிருந்தது என்பது பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவளது உண்மையான அடையாளம் யாருக்கும் தெரியக்கூடாது என்று அவர்களுக்குக் கட்டளைகள் இடப்பட்டிருந்தன என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

காவல்துறை வழக்கை ஆரம்பித்து உடனே ஸ்டாவ்ராஸையும், பீட்டரையும் பிடிக்க தேடுதலை ஆரம்பிக்க புலன்விசாரணை தொடங்கப்போகிறது. எனினும் அவர்கள் பிடிபடமாட்டார்கள் என்று ஏனோ அவளுக்குத் தோன்றியது.

தூதரகத்திலிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. அவள் இந்த நாட்டைவிட்டு வெளியேறுவதற்குத் தேவையான ஆவணங்கள் அடுத்த நாள் முற்பகலுக்குள் தயாராகிவிடும் என்று அவளிடம் சொன்னார்கள். அவள் அவர்களின் பாதுகாப்பில் இருப்பதாகச் சொல்லி அவளுக்குத் தெம்பூட்டினார்கள். வாலஸ் நிச்சயமாக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார். அவர் செய்த உதவிக்கு அவள் நன்றியுணர்ச்சியோடு இருந்தாள்.

ஒரேயொரு விஷயம்தான் பாக்கி. இங்கிருந்து போக அவள் டிக்கெட் பதிவுசெய்ய வேண்டும். அதை அவள் நாளை செய்வாள். ஆனால் அவள் அமெரிக்காவில் தன் வீட்டுக்குப் போகப்போவதில்லை. அது புத்திசாலித்தனமும் அல்ல. ஸ்டாவ்ரோஸ்க்கும், பீட்டருக்கும் அவள் எங்கிருந்து வந்தவள் என்று தெரியும்; ஒரு வேளை அவளது விலாசம் கூட அவர்களிடம் இருக்கலாம். இங்கே அவள் பாதுகாப்பாக

இருக்கிறாள். அமெரிக்காவில் அவளை யார் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்? உதவிக்காக மீண்டும் மீண்டும் வாலஸிடம் அவள் போகப்போவதில்லை. இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்ற அவர் தன்பங்குக்கு செய்துவிட்டார்; அதற்கு மேலேயேயும் செய்து முடித்துவிட்டார்.

அவள் எங்கே போவாள்? அவள் குளித்துக் கொண்டிருந்தபோது, இந்தக் கேள்வியைப் பற்றி யோசித்தாள். இப்போது, சார்டோனி மதுரசம் அருந்தி ஓய்வாக இருக்கும்போதுகூட அவளுக்குப் பதில் தோன்றவில்லை.

டிவியைப் போட்டாள். அது ஓர் உள்ளூர் சானல். கிரேக்கத்தில், தலைப்புச் செய்திகளோடு வந்த சித்திரங்களைப் புரிந்துகொள்ள அவளுக்கு மொழியறிவு தேவையில்லை. தெசலோனிக்கி செல்லும் நெடுஞ்சாலையின் இரண்டு பக்கமும் இரண்டு வினோத விபத்துகள் நடந்து, போக்குவரத்தைத் தடைசெய்தன என்று செய்தி ஓடியது. பெயர்சொல்லாத நபர் தொலைபேசியில் தெரிவித்த விபத்துகள் அவை. இரண்டு விபத்துகளும் நடந்த இடங்களுக்கு போலீஸ் சென்றபோது அங்கே யாருமே இல்லை. விபத்துகளில் சம்பந்தப்பட்டவர்கள் இடத்தைவிட்டு ஓடிவிட்டார்கள் என்பது வெளிப்படை.

செய்தியைக் கேட்டவுடன் அவளுக்குள் கொடூர அச்ச உணர்வு ஏற்பட்டது.

அவள் எதற்குள் மாட்டிக்கொண்டு விட்டாள்?

இது ஒன்றும் சாதாரண சதி அல்ல. என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறதோ அது பெரிய விஷயம். அகழ்வாராய்ச்சிக் களத்திலிருந்து யாரும் உயிரோடு தப்பித்துவிட கூடாது என்பதற்காக, சில மணிநேரங்கள் ஒரு நெடுஞ்சாலையை அடைத்துவைக்கும் பைத்தியகாரத்தனமாக அவர்கள் திட்டமிட்டார்கள் என்றால், ஏதோவொன்று பெரிதாக பணயம் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், என்ன அது? அவள் மூளையைப் போட்டு கசக்கினாள். புத்திசாலித்தனமான விளக்கமேதும் தோன்றவில்லை.

அவளது கைப்பேசி ஒலி சிந்தனைகளைக் கலைத்தது.

'அலைஸ்?' வாலஸின் நேர்த்தியான குரல் இணைப்பில் வந்தது.

'மிஸ்டர் வாலஸ், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதுன்னு எனக்குத் தெரியல.' அலைஸ் நன்றியுணர்ச்சி யில் திக்குமுக்காடினாள்.

'நான் இப்ப தெசலொனிக்கியில் ஒரு ஒட்டலில் இருக்கேன்.'

'ஆமா. எனக்குத் தெரியும்,' என்று வாலஸ் பதிலுரைத்தார். 'சொன்னார்கள். அப்புறம், நீ என்னை குர்ட் என்றே கூப்பிடலாம்னு நான் உன்கிட்ட சொன்னேன்னு நினைக்கிறேன். எப்படியோ, நீ பாதுகாப்பா இருக்கிற. எனக்கு மகிழ்ச்சி.'

'எனக்கும்தான்,' என்று அலைஸ் பதில் சொன்னாள். 'ஆனா இன்னும் நான் பயந்துகிட்டுதான் இருக்கேன்.' டிவியில் பார்த்த நெடுஞ்சாலை விபத்துகள் பற்றி அவள் சொன்னாள். 'காலையில முதல் வேலையா டிக்கெட் புக் பண்ணப் போறேன். இங்கிருந்து நான் சீக்கிரமா வெளியேறணும்னு நினைக்கிறேன்.'

'ஓ அதனாலதான் நான் இப்ப கூப்பிட்டேன். எனக்கு நிச்சயமா எதுவும் தெரியாதவரைக்கும் நான் வாக்கு கொடுக்கிறதில்ல. ஒருவாரத்திக்கு கிரீஸிலிருந்து போகும் எந்த விமானத்திலும் உனக்கு சீட் கிடைக்கும்ன்னு எனக்குத் தோணலை. ஆனால் எனக்குத் தெரிஞ்ச ஆளுங்ககிட்ட பேசியிருக்கேன். ஒரு தனியார் ஜெட் ஒண்ணு நாளை பிற்பகலுக்குள் தயாராக இருக்கும் உனக்காக. அமெரிக்கா போக.'

அலைஸின் வாய் திறந்தது. தனியார் ஜெட்டா? குர்ட் வாலஸ்க்கு நிச்சயமாக மேலிடங்களில் நண்பர்கள் உண்டு. அவர் அவளை வீட்டுக்கு அனுப்பத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார் என்ற உணர்ந்து அவள் சுதாகரித்தாள்.

'நான் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன், குர்ட்.' அலைஸ் திடீரென்று தான் போகவேண்டிய இடம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டாள். அமெரிக்காவிற்கு மீண்டும் போவதைப் பற்றிய தன் அச்சத்தை அவள் வாலஸிடம் மென்மையாக, நாகரிகமாக விவரித்தாள். ஆனால் இங்கேயே ஒரு பாதுகாப்பான இடம் தேடித்தருகிறேன் என்று அவர் முன்வந்து சொன்னதை உறுதியாக அவள் ஒதுக்கினாள்.

அவள் சொன்னதை முழுவதுமாய் கேட்டபின்பு, அவளது விருப்பமான இடத்தைப் பற்றி தெரிந்துகொண்ட பின்பு, 'இதப்பத்தி நீ உறுதியாகத்தான் இருக்கியா?' என்று வாலஸ் இறுதியாகக் கேட்டார்.

'முழுமையாக.' இதுதான் தான் விரும்பியது என்பது பற்றி அலைஸ்க்கு சந்தேகங்கள் இல்லை. 'ஒரே ஒரு வேண்டுகோள். சாத்தியமென்றால்.' அவர் அவளுக்காக என்ன செய்ய வேண்டும் என்று அவள் அவரிடம் சொன்னாள்.

'நல்லது. ஏற்பாடு செய்திடலாம். பத்துமணிக்கு ஃபோன் அழைப்பு வரும். ஜாக்கிரதையா ஃபிளைட்ல போ. வேறு ஏதாவது வேணும்னா எனக்குத் தெரியப்படுத்து.'

'தெரியப்படுத்றேன்.'

இணைப்பைத் துண்டித்தவுடன், ஐயத்தின் வலி திடீரென்று அவள் மனதில் தோன்றியது. அவள் சரியாகத்தான் செய்கிறாளா?

அலைஸ் உறுதியாக அந்த எண்ணத்தை நெட்டித்தள்ளினாள். அவள் தன் அசுரர்களை எதிர்கொண்டாக வேண்டும். அவர்களிடமிருந்து அவள் நீண்டகாலம் ஓடிவந்துவிட்டாள்.

10

ஆர்யன் ஆய்வுக்கூடம், புது டில்லி

இம்ரான் தீயணைப்பு ஆட்களோடும், படைவீரர்களோடும் நின்றிருந்தார். தோள்கள் துயரச் சுமையில் தொங்கியிருந்தன.

அந்த மருத்துவ நிலையத்திற்கு அவர்கள் மூன்று மணிநேரத்திற்கு முன்பு வந்திருந்தார்கள். அவர்கள் வந்தபோது தீயணைப்பு வீரர்கள், அந்த நான்குமாடிக் கட்டிடத்தில் மேலிருந்த மூன்று தளங்கள் முழுவதையும் உண்டுதீர்த்த பயங்கர தீயோடு போராடிக் கொண்டிருந்தார்கள்.

பதினைந்து தீயணைப்புப் படைகள் நான்கு மணிநேரம் போராடி நெருப்பை அணைத்தன. அவர்கள் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருந்த போது, இம்ரானும், அவரது உளவுத்துறைக் குழுவும், மற்றும் படைவீரர்களும் கையறுநிலையில் நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள்; அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

கட்டிடத்திற்குள் செல்வதற்கு அனுமதி கிடைத்தவுடன் அவர் உள்ளே விரைந்தார், படைவீரர்களுக்கும், தன் குழுவிற்கும், தீயணைப்பு வீரர்களுக்கும், ஆணைகள் இட்டுக் கத்தியபடி. மேல்தளங்கள் நெருப்பில் சாம்பலாகிக் கிடக்க, தரைத்தளம் பாதிப்பேதுமின்றி அப்படியே இருந்தது.

இந்த இடத்தில் என்ன இருந்தது? கட்டிடத்திற்குள் நுழைந்தபடி, தன் துணைநிலை அலுவலர் அர்ஜுனிடம் கேட்டார் இம்ரான்.

'இது ஒரு மருத்துவ பரிசோதனைக்கூடம். வாஷிங்டன் சியாட்டிலில் இருக்கும் டைட்டன் ஃபார்மசியூட்டிக்கல் கம்பெனிக்காக அவங்க இங்கே நோய்கள பத்தி ஆராய்ச்சி செய்றாங்க.'

இம்ரான் முறைத்தார். 'அமெரிக்கன் மல்டிநேசனல் மருந்து கம்பெனியா?'

'ஆமா. மேற்கொண்டு தகவலுக்காக நாங்க அவங்களை தொடர்பு கொள்கிறோம். அவங்களோட ஆராய்ச்சி முடிவுகள் களப்பரிசோதனை நடத்தும் இடம் இதுதான். வெளிப்படையாகப் பாத்தா, மருத்துவ துறையில ஒரு பெரிய பேரத்துக்கு இடமளிக்கக் கூடிய, சில மூலக்கூறுகளை அவங்க உருவாக்கிட்டு வர்றாங்க.'

இம்ரானின் வாக்கி-டாக்கி உயிர்பெற்றது. 'சார், நீங்க இங்க வர வேண்டும். நாலாவது மாடி.' அது அவரது முகவர்களின் ஒருவன்.

படிக்கட்டு வழியாக ஓட்டமும் நடையுமாக விரைந்தபோது, இம்ரானை ஒரு கொடூர அச்சம் ஆட்கொண்டது. நாற்பதுகளின் நடுவே இருந்தபோதும், இன்னும் அவர் ஒழுங்காக உடற்பயிற்சிகள் செய்து உடலைத் தகுதியாகவே வைத்திருந்தார். ஒரே நேரத்தில் இரண்டு இரண்டு படிகளாகத் தாவி ஏறினார்.

அவர் நான்காவது மாடிக்குச் சென்றபோது, அதிர்ச்சியில் சுருண்டுபோனார்; அரண்டுபோனார். முழுத்தளமும் சாம்பலாகிக் கிடந்தது. நெருப்பால் அழியாமல் கிடந்ததெல்லாம் தீயணைப்புப் படையின் தண்ணீரால் அழிந்துகிடந்தது.

தளத்தில் தேங்கிக்கிடந்த குட்டைகளின் ஊடாக அவர் 'சலப் சலப்' என்று நடந்தார். தகவல்தொடர்புத் தொழில்நுட்பச் சோதனைக்கூடம் போல தோன்றிய அறைக்குள் நுழைந்தார். தீயணைப்பு வீரர்களின் டார்ச் விளக்குகளாலும், முகப்பு விளக்குகளாலும் அங்கே வெளிச்சம் இருந்தது.

அவரின் ஆக மோசமான அச்சங்கள் உண்மையானது போலத் தோன்றின. இருக்கை ஒன்றில் கணினிக்கு முன்பாக வெந்து சாம்பலான ஒரு தேகம் உட்கார்ந்திருந்தது.

'அன்...வர்?' இம்ரானால் பெயரை முழுமையாக உச்சரிக்க முடியவில்லை.

'மன்னிக்கவும், சார். எந்த அடையாளமும் இப்போதைக்கு சாத்தியமில்ல. அடையாளம் காணமுடியாத அளவுக்கு உடம்பு வெந்துகிடக்கு.'

ஒரு கணம் இம்ரான் மௌனமானார். பின்பு தன்னைச் சரிபடுத்திக்கொண்டார். 'அர்ஜுன்,' என்று ஒரு முகவரை அழைத்தார். 'முழு விசாரணை வேண்டும் எனக்கு. இந்த இடம் யாருக்குச் சொந்தம்? இங்க அவங்க என்ன பண்ணிட்டு இருந்தாங்க? தீ விபத்து எப்படி நடந்திச்சி?' அவர் வெந்துகிடந்த உடலைப் பார்த்தார். 'இந்த உடம்புக்கு

அடையாளம் தெரியணும்.'

அவரது வாக்கி-டாக்கி மீண்டும் கரகரத்தது. 'சார். நீங்க தரைத்தளத்துக்கு வந்தால் நல்லது. ஏதோவொண்ணு கிடைச்சிருக்கு.'

இம்ரான் படிக்கட்டு வழியாக கீழே ஓடினார். அர்ஜூன் பின்னால் ஓடிவந்தான். அவரது ஆட்களில் ஒருவன் மின்தூக்கிக் கம்பம் ஒன்றை ஆராய்ந்து கொண்டிருந்தான். அது தரைத்தளத்தோடு முடியவில்லை என்பதைக் கண்டுபிடித்தான். கொஞ்சதூரம் அது கீழ்நோக்கிச் செல்வது போலத் தோன்றியது. கட்டடத்தின் அடித்தளம் வரை செல்வதாக இருந்தது.

விநோதமாக இருக்கிறதே என்று உணர்ந்து, முகவர் வருண் ஜா மின்தூக்கியைத் திறந்தான். தளத்தேர்வு செய்யும் மரக்கட்டை வழமையான பொத்தான்கள் கொண்டதல்ல; மின்உணர் பலகை. அதில் எதுவும் விசேஷமல்ல; ஒன்றைத் தவிர்த்து. அதில் அடித்தளம் பற்றி அந்தப் பலகையில் குறிக்கப்பட்டிருக்கவில்லை.

முதன்மை பொத்தான்பலகைக்குக் கீழே ஒரு சிறிய இரண்டாவது பலகை மறைந்திருந்ததை ஜா கவனித்தான். அது வெறுமையாக இருந்தது. ஆனால் அவனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது: சரியான, அங்கீகரிக்கப்பட்ட மின் அட்டையை யாராது ஒருவர் அதில் தேய்த்தால், அந்தப் பலகையில் மேலும் சில தளங்களைக் காட்டலாம்; கீழே செல்வதற்கு.

புத்திசாலித்தனமான அந்த முகவர் பின்பு தீயணைப்புப் படையினரோடு பேசினான். கட்டடத்தில் தரைத் தளங்கள் மறைந்திருந்தால், அங்கே செல்வதற்கு ஓர் அவசரகால ஏற்பாடாக படிக்கட்டுகள் இருந்தாக வேண்டும் என்று அவன் ஊகித்தான்.

தீயணைப்பு வீரர்கள் படிக்கட்டுப் பகுதியில் அதிரடியாக நுழைய, படிகள் இறுதியில் ஒரு வெறுமையான சிறிய சதுரவடிவ அறையில் போய் முடிந்தன. படிக்கட்டுப் பகுதியைச் சுற்றியிருந்த மூன்று சுவர்களின் பகுதிகளை இடிக்குமாறு அவர்களுக்கு ஜான் ஆணையிட்டான். படிக்கட்டுகளுக்கு முன்னால் நேரடியாக இருந்த சுவருக்கு அப்பால் ஒரு வெற்றிடம் காணப்பட்டது.

அப்போதுதான் ஜான் இம்ரானை அழைத்தான். அவர் விரைந்து படிக்கட்டுகளின் அடியில் இருந்த அறைக்குள் வந்து சுவரைத் தீயணைப்பு வீரர்கள் இடிப்பதைப் பார்த்தார். சுவர் தரைமட்டமானவுடன், கேபிள்களும் மின்கம்பிகளும் உடைந்து

தொங்கிக்கொண்டு ஆடின. சுவரில் மறைந்திருந்த வாசலை இயக்க ஏதோவொரு மின்னணு தந்திரம் இருந்திருக்கிறது.

அவர்கள் வேலையை முடித்தவுடன், ஓர் அடிப்பகுதி வெளிப்பட்டது. அது கட்டிடத்தின் கீழ்மட்ட நிலைகளுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகளைக் காட்டியது.

தான் என்ன காணப்போகிறோமோ என்று இம்ரானுக்கு பயமாக இருந்தது. தரையடிப் பகுதியை மறைப்பதற்காக யாரோ ஒருவன் இந்த அளவுக்குப் போயிருக்கிறான் என்றால், மறைப்பதற்கு ஏதோவொரு விஷயம் இருந்திருக்கிறது.

டார்ச் விளக்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. உளவுத்துறை முகவர்கள், தீயணைப்பு வீரர்களோடு படிக்கட்டில் இறங்கிச் சென்றார்கள். பொறுப்பில் இருந்தவர்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்பது வெளிப்படை. ஆனால் அங்கே மாட்டிக்கொண்டு காப்பாற்றப்பட வேண்டியவர்கள் இருக்கலாம்.

அவர்கள் அங்கே பார்த்தது சற்றும் எதிர்பாராதது. தரைத்தளம் மூன்று அடுக்குகளைக் கொண்டதாக இருந்தது. மிகவும் தாழ்வான இரண்டு அடுக்குகள் ஒருவகை வாழ்விடமாகத் தெரிந்தன. சிற்றறைக் கூண்டுகள், நீண்ட குறுகிய தாழ்வாரங்களில் வரிசையாக நின்றன. இது ஓட்டலும் அல்ல; தற்காலிகத் தங்குமிடமும் அல்ல. தனியறைகள் எல்லாம் வெளியே பூட்டப்பட்டிருந்தன, மின்னணு பூட்டுகளால்.

தனியறைகளில் இருந்தவர்கள் செத்துக் கிடந்தார்கள். மூச்சுத்திணறலால் அல்ல. அப்படி நினைப்பதற்கு ஒன்றும் தடயவியல் நிபுணர் தேவையில்லை. உடல்களில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்தன. நெருப்பு இந்த அடுக்குகளை ஒன்றும் செய்யவில்லைதான். ஆனால் ஒரு ஜீவன்கூட உயிரோடு இல்லை.

இம்ரான், அர்ஜூனை நோக்கித் திரும்பினார். 'அமெரிக்க மல்டிநேசனல், ம்? நல்லது. இங்கே நூற்றுக்கணக்கல மக்கள் சுடப்பட்டு செத்துக் கிடக்குறாங்க. அவங்களுக்கு என்ன தெரியுங்றதை நாம கண்டுபிடிப்போம். நான் இதைத் தனிப்பட்ட முறையில பாத்துக்கிறேன். இதுக்கிடையில, அந்தத் தலைமை நிர்வாக அதிகாரி, தலைமை மருத்துவ அதிகாரி இவங்கள நான் சந்திக்கணும். ஏற்பாடு செய்யுங்க. இந்தியாவில அவங்க என்ன செய்றாங்க, அவங்க சரித்திரம், அவங்க நடத்துற சோதனைகள் இதைப் பத்தின தரவுகள் எனக்கு வேணும். அந்தப் பசங்கள பாக்குறதுக்கு முன்னாடி அவங்கள பத்தி எல்லாம்

எனக்குத் தெரிந்தாகணும்.'

அர்ஜுன் தலையசைத்தான். 'நாளை மாலைக்குள்ளாக உங்களுக்கு அறிக்கை கிடைக்கும்.'

இம்ரான் அர்ஜுனைத் தனியாக அழைத்து, 'இரண்டு விசயம்,' என்று சொல்லி ஏதோ கிசுகிசுத்தார். அர்ஜுன் காத்திருந்தான்.

இம்ரான் சொல்லி முடித்தவுடன், அர்ஜுன் ஆச்சரியப்பட்டான். ஆனால் அவன் ஆட்சேபிக்கவில்லை. 'இதை நான் ஏற்பாடு பண்றேன்,' என்று வாக்களித்துவிட்டு நகர்ந்தான், இம்ரானின் கட்டளைகளை நிறைவேற்ற.

இம்ரான் பிணங்களையும் தனியறைகளையும் வெறித்துப் பார்த்தார். மறைவான தரைத்தளங்கள். துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த பிணங்கள். என்ன நடந்துகொண்டிருந்தது இங்கே? கட்டிடத்தை அழிக்க யாரோ ஒருவன் ரொம்ப சிரமப்பட்டிருக்கிறான்? அவர்கள் சாட்சிகளை அழிக்க முயன்றார்களா? அப்படி என்றால் அந்தச் சாட்சிகள் எதைச் சுட்டிக்காட்டுகின்றன? அன்வர்-க்கு என்ன ஆயிற்று? மருத்துவப் பரிசோதனைகள் நடந்த இடத்தில் அவன் என்ன செய்துகொண்டிருந்தான்?

கேள்விகள் பல இருக்கின்றன. ஒரு படபடப்பான உணர்வு அவரை இம்சித்தது. அவருக்கு அந்த உணர்வு நன்றாகத் தெரியும். அவருக்குள் ஓர் உள்ளுணர்வு ஏற்பட்டது. இது ஒரு பிரமாண்டமான திரை; அதன் பின்னால் ஏதோ ஓர் ஆழமான, இருட்டான இலக்கு இருக்கிறது என்று ஏதோவொன்று அவருக்குச் சொன்னது.

அடுத்த நடவடிக்கைகளைப் பற்றி யோசிக்கும்போது அவரின் தாடை இறுகியது. என்ன ஆனாலும் சரி, இந்த மர்மத்தின் அடிவரை அவர் போய்விடுவார்.

ஜவுன்கார் கோட்டை

கடந்த வாரம் தான் கண்டுபிடித்த அறையின் நடுவே நின்றுகொண்டு விஜய் மோவாயைத் தடவினான். அந்தக் கோட்டை ஐந்து அடுக்குகளில் கட்டப்பட்டு மிகப் பெரியதாக இருந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்ட அறைகள் இருந்தன. ஒரு வருடத்திற்கு முன்பு வாரிசுச் சொத்தாக கோட்டையைப் பெற்றபின்பு, எல்லா அறைகளையும் உடனடியாக ஆராய்வதற்கு அவனுக்கு நேரமும் இல்லை; எண்ணமும் இல்லை. முதல்

தளத்தில் இருந்த படிப்பறைக்குள்ளேயும் இரண்டாம் தளத்திலிருந்த தன் சொந்த அறைக்குள்ளேயும் அவன் முடங்கிக் கிடந்தான்.

சில அறைகள் அவனுக்குப் பரிச்சயமானாலும், அவன் பார்த்திராத அறைகள் பல இருந்தன. கடந்த ஆறுமாதங்களாக, கோட்டையைப் பற்றி நன்றாக அறிந்துகொள்ளும் வேலையில் இறுதியாக இறங்கினான். இந்த ஆராய்ச்சியின் போதுதான் பல சுவாரஸ்யமான அறைகளை அவன் கண்டுபிடித்தான். அவை அவனது மாமாவின் தனிப்பட்ட ரசனைகளைப் பற்றி, இயல்புகள் பற்றி நுட்பமான விஷயங்களைச் சொல்லின.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, முழுக்க எதிர்பாராத ஒரு விஷயத்தை அவன் கண்டுபிடித்தான். மொட்டைமாடிக்குக் கீழே ஐந்தாவது அடுக்கில் ஓர் அறையை அவன் கண்டான். அந்த அறை ஒன்றும் சிறப்பானது அல்ல. அது ஒரு சேமிப்பு அறையாகப் பயன்படுத்தப்பட்டது போன்று தோன்றியது. பிரவுன் காகிதத்தில் கட்டபட்ட பெரிய கனத்த பாக்கெட்டுகளும், அடுக்கிவைக்கப் பட்ட பெட்டிகளும் அதன் சாட்சிகளாக இருந்தன.

ஓர் ஆர்வத்தில் உந்தப்பட்டு விஜய் பெட்டிகளின் உள்ளே சோதனை செய்தான். அவற்றில் அவன் பார்த்ததை அவனே எதிர்பார்த்திருக்கவில்லை.

குறைந்த பட்சம் சில பொருட்கள் அவனின் பெற்றோர்களுக்குச் சொந்தமானவை என்று வெளிப்படையாகத் தெரிந்தன. அவனுக்கு 15 வயது இருக்கும்போது, அவர்கள் ஒரு கார் விபத்தில் மாண்டு போனார்கள். அதிவேகத்தில் வந்த ஒரு டிரக் அவர்கள் பயணித்த காரின்மீது மோதியது என்று அவனுக்கு அவன் மாமா சொல்லியிருந்தார். பெற்றோர்கள் இருவருமே சம்பவ இடத்திலே இறந்துபோனார்கள். அவர்களோடு விஜய் காரில் பயணிக்கவில்லை. ஏனென்றால் ஏதோவொரு காரணத்திற்காக அவன் கடைசி நேரத்தில் போகமுடியாமல் போயிற்று. அது என்ன காரணமென்று விஜய்க்கு மறந்துவிட்டது. ஆனால் அதுதான் அவன் உயிரைக் காப்பாற்றியது.

பெட்டிகளின் உள்ளீடுகளை ஆராய்ந்தபின்பு, அவனது மாமா அவன் பெற்றோர்களின் சொந்த உடைமைகளைப் பத்திரமாகக் கட்டியெடுத்து கோட்டைக்குக் கொண்டுவரச் செய்தார் என்று அவன் புரிந்துகொண்டான். அப்போதிருந்து அவை இங்கே பல வருடங்களாகவே இருக்கின்றன.

திடீரென்று தன் தகப்பனாரின் காகிதங்களையும், அவன் தாயாரின் குறிப்பேடுகளையும் பார்த்தபோது, தான் அவர்களை எப்படி இழந்திருக்கிறோம் என்று அவன் உணர்ந்தான். அவனது மாமா அவனை நன்றாகவே கவனித்துக் கொண்டார். அவனை எம்ஐடிக்கு அனுப்பி உயர்கல்விக் கற்கச் செய்து, தான் ஓர் அனாதை என்று அவனை உணர அனுமதிக்காமலே வளர்த்தார். விஜய் முதலில் படிப்பில் மூழ்கி, பின் வேலையில் ஆழ்ந்து, அந்தத் துயரத்தைப் பற்றிய எண்ணங்களை எல்லாம் மனதைவிட்டு வெளியேற்றினான்.

தன் பெற்றோர்கள் பயன்படுத்திய பொருள்களின் நினைவுகளை அவன் எதிர்கொண்ட போதுதான் அந்த இழப்பு அவனை உண்மையிலே மிகக் தெளிவாகவே உணரவைத்தது; குறிப்பாக அவனது மாமாவும் காலமாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில்.

அந்தக் கணத்தில் அவன் தீர்மானித்தான், பெட்டிகளை எல்லாம் அலசி ஆராய்ந்து, தன் பெற்றோர் பற்றிய ஞாபகங்களைப் போற்றிக் காக்க வேண்டும் என்று. அவனுக்கு தன் பெற்றோர்கள் பற்றி அதிகம் தெரியாது; ஏனென்றால் அவன் வளர்ந்துகொண்டிருக்கும் போதுதான், அவர்களைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கும் போதுதான், அவர்களை அவன் இழந்திருந்தான். தன் பெற்றோர் இருவரும் கல்வி ரீதியில் சரித்திர ஆசிரியர்கள்; ஆராய்ச்சியாளர்கள்; இந்திய தொல்பொருள் ஆய்வுக்கழகத்தில் வேலை செய்தவர்கள் என்று அவன் அறிந்திருந்தான். ஆனால் அதற்கு மேல் அவனுக்கு ஒன்றும் தெரியாது. விடலைப் பருவத்தில் அன்பினாலும் சண்டையினாலும் வளரும் விலைமதிப்பில்லாத அந்த உறவை அவன் தவறவிட்டான். இப்போது இந்த அறையில் இருக்கும் ஏதோவொன்று தன் பெற்றோர்களின் அருகே தன்னைக் கொண்டுசேர்க்கும் என்று நினைத்தான், அவர்களின் மரணத்திற்குப் பின்னாலும்.

அப்போதிருந்து ஒவ்வொரு இரவும், அவன் அந்த அறையில் ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் செலவழித்தான். பெட்டிகளைத் திறந்து உள்ளீடுகளை வெளியெடுத்து, காகிதங்களையும், குறிப்பேடுகளையும் வாசித்து, தன் விடலைப் பருவத்தில் தான் அக்கறை கொண்டிராத தன் பெற்றோர்கள் பற்றிய விஷயங்களைத் தேடினான்.

மேஜைமீது இருந்த விளக்கைப் போட்டான். மேஜையை இந்த நோக்கத்திற்காகத்தான் அவன் அங்கே கொண்டுவந்து வைத்திருந்தான். மேஜைமீது அடுக்கிவைத்திருந்த காகிதங்களைப் படிக்க ஆரம்பித்தான்.

முந்தைய இரவுகள் தரத்தவறிய வெளிப்பாடுகளை இந்த இரவு

தருமா என்ன?

11

இரண்டாம் நாள்

உளவுத்துறை தலைமையகம், புதுடில்லி

இம்ரான் வீடியோ கேமராவிற்குள் வெறித்துப் பார்த்தார். பேட்டர்சன் காணொளிக் காட்சியில் வந்து இணைவதற்குக் காத்திருக்கையில், அவர் கேமராக் கோணத்தைச் சரிசெய்தார். சில மணிநேரத்திற்கு முன்பு இம்ரான் அழைத்தபோது, அந்த விசேஷ பணிக்குழுவின் தலைவர் குரல் எரிச்சலோடும் சந்தேகத்தோடும் ஒலித்தது. வாஷிங்டனில் அப்போது அதிகாலை என்பதைப் பற்றி கவலைப்படாமல் இம்ரான் அவரை எழுப்பிவிட்டார். ஆனால் உளவுத்துறை அதிகாரிக்கு இது காத்திருக்க வேண்டிய விஷயம் அல்ல. தான் சேகரித்த தடயங்களை வைத்து மேற்கொண்டு சென்றாக வேண்டும் என்று அவர் விரும்பினார். அதனால் இந்திய-அமெரிக்க பணிக்குழுவின் தலைவரை நடுராத்திரியில் எழுப்பவேண்டியிருந்தாலும் அவருக்கு அது பரவாயில்லை.

ஆனால் இம்ரான் அனுப்பியிருந்த மின்னஞ்சலைப் பார்த்தவுடன் பேட்டர்சன் தன் மனதை மாற்றிக் கொண்டார். மின்னஞ்சலைப் பெற்ற ஒரு மணிநேரத்திற்குள் பேட்டர்சன் காணொளிக் காட்சியை உறுதிப்படுத்தினார்.

தொலைக்காட்சித் திரை துடித்து உயிர்பெற்றது. பேட்டர்சனின் கடுமையான முகம், திரையின் பாதியளவு நிரம்பிய ஒரு பெட்டிக்குள் வந்தது. மற்றொரு பாதியில், மெல்லிய வெளிறிய, வற்றிப்போன சாம்பல்நிற முடியொடு தோன்றிய ஒரு மனிதரின் முகம் நிரம்பியது. அவர் யாரென்று இம்ரானுக்குத் தெரிந்திருந்தது. டாக்டர் ஹாங்க் ராய்சன். நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் மையத்தின் வாஷிங்டன் அலுவலகத்திலிருந்து வந்தவர். ராய்சனும் அவர்களோடு இணைந்துகொள்வார் என்று, பேட்டர்சன் தன் மின்னஞ்சலில்

தெரிவித்திருந்தார்.

'காலை வணக்கம்,' என்று இம்ரான் அந்த இரண்டு அமெரிக்கர்களுக்கு வாழ்த்துச் சொன்னார்.

'காலை வணக்கம்,' என்று சேர்ந்து ஒலித்தன எதிர்க்குரல்கள்.

'டாக்டர் ராய்சன், குறுகிய கால அவகாசத்தில் எங்களோடு இணைந்ததை நான் பாராட்டுகிறேன்,' என்று பேட்டர்சன் நேராக விஷயத்திற்கு வந்தார். 'கிட்வாய் நமக்கு அனுப்பிய அறிக்கைகள் பற்றி உங்கள் கருத்துகளைத் தயவுசெய்து சொல்லுங்கள்.'

'நல்லது,' என்று ராய்சன் தொண்டையைச் சரிசெய்துகொண்டு ஆரம்பித்தார். 'முதலில் நீங்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அறிக்கைகள் மிகவும் ஆரம்பநிலையிலான அறிக்கைகள்தான்; நிச்சயமாக இறுதியானவை அல்ல. விரிவான நச்சியல் அறிக்கையும், மரபீனி வரிசைப்படுத்தல் ஆய்வும் இன்னும் கொஞ்ச காலம் எடுத்துக்கொள்ளும். நம்மிடம் இங்கே இருப்பவை ஆரம்பநிலை நச்சியல் அறிக்கைகளும், பாலிமேரேஸ் செயின் ரீயாக்சன் ஆய்வு முடிவும்தான்.

'நமக்குத் தெரியும் *PCR TESTING* என்ன என்பது,' என்று இடைமறித்தார் பேட்டர்சன், 'நாங்கள் எதிர்பார்ப்பது நமக்கு வந்த அறிக்கைகள் பற்றிய உங்கள் கருத்துக்களை.'

ராய்சன் கேமராவை வருத்தத்துடன் வெறித்துப் பார்த்தார். 'மிஸ்டர் கிட்வாய்க்கு மருத்துவ மொழி பரிச்சயமா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.'

'அறிக்கைகளைப் பார்த்தும், கூகுளில் கொஞ்ச நேரத்தைச் செலவழித்தும் சில வார்த்தைகளைக் கண்டுபிடித்தேன்,' என்று இம்ரான் புன்னகைத்தார். 'ஆனால் நீங்கள் ஆராய்ச்சிபூர்வமாகச் சொன்னதற்கு மிக்க நன்றி.' பேட்டர்சனின் கடுமையைத் தான் குறைத்தாக வேண்டும் என்று இம்ரான் நினைத்தார்.

ராய்சன் மூக்குறிஞ்சினார். 'இது இப்படி இருக்கிறது. சிக்கலாக. அனுமானமாகப் பேசுவதானால், நம்மிடம் இருப்பது முன்பு அடையாளப் படுத்தமுடியாமல் இருந்த பாக்டீரியமும், முன்பின் தெரியாத ரெட்ரோ வைரஸும். இரண்டுமே எல்லா மாதிரிகளிலும் இருக்கின்றன.' அவர் கேமராவை வெறித்துப் பார்த்தார். 'நோய்த் தடுப்பு மையங்கள் நீங்கள் விமானத்தில் எங்களுக்கு அனுப்பிய மாதிரிகளைப் பரிசோதனை செய்து இந்தமுடிவுகளைச் சரிபார்க்கும். ஆனால் பெரிய

அளவில் தவறு ஏதுமில்லை என்று நான் நிச்சயமாக சொல்கிறேன்.' அவர் கீழே அறிக்கைகளைப் பார்த்து பின் கேமராவைப் பார்த்தார்.

'இது உண்மையில் விநோதமானது. பாக்டீரியா பலமான உயிரிப்படலங்களை உருவாக்கியிருக்கின்றன. அவற்றில் செல்களைச் சுற்றி பரந்த வஸ்துக்கள் குடியிருந்து அவற்றை நோயெதிர்ப்பு எதிர்வினைகளிலிருந்து காப்பாற்றுகின்றன. பாக்டீரியாக்கள் பலவிதமான நச்சுக்களை உமிழ்ந்து மரணத்தை விளைவிக்கின்றன என்று ஆரம்பநிலை நச்சியல் அறிக்கைகள் குறிக்கின்றன.' அவர் இப்போது இம்ரானைப் பார்த்துப் பேசினார். 'மிஸ்டர் கிட்வாய், இந்த மாதிரிகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?'

இம்ரான் கடந்த இரவு நிகழ்வுகளை விவரித்தார். 'அந்த நிலையத்தில் நாங்கள் பார்த்த பிணங்களில் ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றிலிருந்து மாதிரிகளை எடுத்தோம்.' என்று அவர் முடித்தார். 'வன்தட்டுகளில் இருந்து நாங்கள் எடுத்த தரவுகளைத்தான் நீங்கள் பார்த்தீர்கள். அவற்றில் மருத்துவ வரலாறுகள் இருக்கின்றன. அவை இந்த அறிக்கைகள் சொன்ன செய்திகளைத்தான் சொல்கின்றன.'

ராய்சன் தலையசைத்தார். 'ஆமாம். நீங்கள் எங்களிடம் பகிர்ந்த மருத்துவ வரலாறுகள், நீங்கள் அனுப்பிய அறிக்கைகளின் முடிவுகளோடு ஒத்துப்போகின்றன. சில மருத்துவ கோப்புகள் தொற்றுகளின் விளைவுகளால் இறந்த மக்களைப் பற்றியவை. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், மருத்துவக் கோப்புகள்படி, எல்லா மரணங்களும், ஆரம்பநிலை பாக்டீரியா தொற்றுகள் வந்து நான்கிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் நிகழ்ந்திருக்கின்றன. பாக்டீரியா நோயாளிகளைத் தொற்றியவுடன், அவை செயலற்று போயின, செல் தலையிட்ட நோயெதிர்ப்பு எதிர்வினையின் விளைவாக. அந்த எதிர்வினை தொற்றைக் கட்டுப்படுத்தி இருந்தது; ஆனால் அழிக்கவில்லை, உயிரிப்படலங்களால். தெளிவாகவே, பாக்டீரியாக்கள், இயல்பாக உருவாகும் புரோட்டீன்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது போலத் தோன்றுகின்றன. அவை தொடர்ந்து இருக்கும் திறன் கொண்டவை; ஆனால் எந்த அறிகுறிகளும் அல்லது விளைவுகளும் கொண்டதல்ல; காரணம் செல்கள் தலையிட்டு உருவான நோயெதிர்ப்புச் சக்தி.'

'நான் இதைப் புரிந்துகொள்கிறேன்,' என்று இம்ரான் மெதுவாகச் சொன்னார். 'இந்த மக்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்பே பாக்டீரியாத் தொற்றுக்கு ஆளாகி இருந்தார்கள். இந்தப்

பாக்டீரியா புரோட்டீன்களில் கட்டுப்பட்டு இருந்ததால் நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்க முடிந்தது. அதே நேரத்தில், அவை உயிரிப்படலங்களை *(biofilms)* உருவாக்கின. அந்தப் படலங்கள், செல்கள் தலையிட்டு உருவான நோயெதிர்ப்புச் சக்தியிடமிருந்து பாக்டீரியாக்களைக் காப்பாற்றின. அதனால் அவை தொற்றுநோயின் அறிகுறிகளைக் காண்பிக்கவே இல்லை.'

'சரி,' என்றார் ராய்சன், முதன்முதலாகப் புன்னகைத்து. பலத்த புகைப்பழக்கத்தால் கறைபடிந்த பற்களைக் காட்டினார். 'அப்புறம், திடீரென்று ஏதோவொன்றால், ஒருவேளை செல்கள் உருவாக்கிய நோயெதிர்ப்புச் சக்தி மெலிந்ததால் அல்லது ஏதோவொரு ஊக்கியால், பாக்டீரியாக்களின் நோய்தரும் வன்மை உயிர்பெற்று அவற்றின் நச்சை விடுவித்தது. அதனால் ஏற்பட்ட அறிகுறிகள்தான் காய்ச்சல், குளிர், அதீதமான தாகம், இயல்புக்கதிகமான வியர்வை, தீவிரமான அடிவயிற்று வலி, அதிகமான பலகீனம், அதன் விளைவான சோர்வு, இடையிடை வரும் ஆற்றல், நரம்புப்பிறழ்வு, வலியின்மை, முடிவில் முடக்குவாதம். இந்த அறிகுறிகள் வந்த சில நாட்களிலே அவர்கள் வழக்கமாக இறந்துவிடுவார்கள்.'

இந்தச் செய்தியை உள்வாங்க இம்ரானுக்கு சில நிமிடங்கள் ஆயிற்று.

பேட்டர்சன் பேசினார். 'நீங்க நினைத்தது சரிதான், கிட்வாய்,' என்று அவர் ஒத்துக்கொண்டார். 'இந்த ஏழைகள்மீது நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகள், பாக்டீரியாக்கள் எவ்வளவு நாள் அமைதியாக இருக்கிறது எப்போது அவை வெளிப்படும் என்பதையெல்லாம் கண்டுபிடிப்பதற்காக நடத்தப்பட்ட பரீட்சைகள்.'

'உயிரியல் தீவிரவாதம்,' என்று அடிமூச்சில் சொன்னார் இம்ரான். மனிதர்கள் அந்த மாதிரி இரக்கமற்ற முறையில் பயன்படுத்தப்படுவார்கள் என்பதை அவரால் நம்பமுடியவில்லை.

'ம்... நாம் உடனே தீர்மானமான கருத்துக்கு வரவேண்டாம். வரவேண்டுமா என்ன?' என்று ராய்சன் விரல்காட்டி இடையில் புகுந்தார். 'மரபணு வரிசைப்படுத்தல் என்னும் சோதனையும், இருக்கும் நோய்தரும் பாக்டீரியாக்களின் மரபணு வங்கிகளின் சோதனையும் நடத்தப்பட்டு, இது புதுவகை பாக்டீரியாவா அல்லது இருக்கும் உயிரிகளோடு தொடர்புகொண்டவையா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். தொற்றைப் பரப்பும் உயிரிகளைத் தீர்மானிக்க இன்னும் பல பரிசோதனைகள் நடத்த வேண்டும்.'

பேட்டர்சன் வேண்டாம் என்பது போல தலையாட்டினார். 'நிச்சயமா. நிச்சயமா. ஆனால் பணிக்குழுவின் முன்னுரிமையாக இதை ஆக்குவதற்கு எங்களுக்குப் போதுமான அளவு கிடைத்துவிட்டது. இதற்காகத்தான் இந்தக் குழுவே உருவாக்கப்பட்டிருக்கிறது.'

'வைரஸ் பற்றி என்ன?' என்று இம்ரான் கேட்டார். ராய்சன் ஏதோவொரு வைரஸ் பற்றிச் சொன்னது அவருக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது.

ராய்சன் தலையைச் சொறிந்தார். 'இப்போது அது இன்னொரு விநோதமான விஷயம்.' அவர் இடைவெளிவிட்டு தன் காகிதங்களை மீண்டும் ஒருமுறை ஆராய்ந்தார். 'நமக்கு ரெட்ரொ வைரஸ் பற்றி அதிகம் தெரியாது. ஆச்சரியமாக இருக்கிறது. அந்த வைரஸ் தொற்றினால் மோசமான விளைவுகள் இருப்பது போல தெரியவில்லை. ஹார்டு டிரைவில் இருக்கும் மருத்துவக் கோப்புகளில் அந்த வைரஸ் பற்றி ஒன்றுமே இல்லை. எதையும் முடிவாகச் சொல்வதற்கு முன்பு, விரிவான பரிசோதனைகளுக்காக நாம் காத்திருக்க வேண்டும்.'

'சரி,' என்றார் இம்ரான். தன் காகிதங்களைச் சேகரித்து அவற்றை ஒழுங்காக அடுக்கினார். அவரைப் பொறுத்தவரை மாநாடு முடிந்துவிட்டது. அவருக்கு வேலை இருக்கிறது. 'நண்பர்களே! நோய்த்தடுப்பு மையங்களின் முடிவுகள் வந்தவுடன் எனக்குச் சொல்லுங்கள். இதற்கிடையில் நான்சியாட்டில் டைட்டனுடன் பேசினேன். புதிய அணுக்கூறுகள் பற்றி அவர்கள் நடத்தும் ஆராய்ச்சிக்கு ஆதரவான சட்டப்பூர்வமான பரிசோதனைகள் தவிர்த்து தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். கட்டட உரிமையாளர், தான் அதை டைட்டனுக்குக் குத்தகைக்கு விட்டதாகவும், அதில் நடக்கும் நிகழ்வுகளுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொல்லிவிட்டார். யாரோ ஒருவர் தனிப்பட்ட காரியத்தை அங்கே செய்துகொண்டிருந்தார் என்று தோன்றுகிறது.'

பேட்டர்சன் சிந்தனையோடு காணப்பட்டார். ராய்சன் சற்று குழப்பமடைந்திருந்தார். 'சியாட்டில் கோணத்தில் வேலை செய்ய நான் சிலரை ஏற்பாடு செய்கிறேன்,' என்று பேட்டர்சன் வாக்களித்தார். 'ஏதாவது தொடர்பு இருந்தால், நாம் அதைக் கண்டுபிடிப்போம்.'

இம்ரான் தலையசைத்தார். முகம் இறுக்கமாக இருந்தது. 'நாம் கண்டுபிடிப்போம். இனிய நாளாக அமையட்டும், சீமான்களே.'

இரண்டு அமெரிக்கர்களும் தலையசைக்க, தொலைபேசித் திரை மீண்டும் வெறுமையானது.

இம்ரான் தன் சேரில் சாய்ந்தார். தான் செல்ல வேண்டிய பாதையைப் பற்றி அவர் திட்டம் போடுகையில், அவர் மனதில் சக்கரங்கள் சுழன்றன. அவர் சந்தித்த வழக்குகளில் இது மிகவும் சவாலான ஒன்று. ஆனால் ஒருவிஷயம் வெளிப்படையாகத் தெரிந்தது.

உயிரியல் தீவிரவாதிகள் இருக்கிறார்கள்.

இந்தியாவில்.

அவரது பார்வையில்.

அவர்களை எப்படித் தேடுவது என்று அவர்க்குத் தெரியவில்லை.

ஜவுன்கார் கோட்டை

பத்து நிமிடங்களுக்கு முன்பு எடுத்த கோப்பில் விஜய் மிகவும் குழம்பினான். கோப்பின் முதுகெலும்பில் இருந்த லேபிள் அவனது ஆர்வத்தைத் தூண்டியது. அது சொன்னது இதுதான்: "???"

பெட்டியில் இருந்த எல்லாக் கோப்புகளிலிருந்தும் இதை அவன் எடுத்து அதிலிருந்த ஆவணங்களை மேலோட்டமாகப் பார்த்தது எல்லாம் மிகவும் யதார்த்தமானதுதான். எல்லாக் காகிதங்களும் அவன் தந்தையின் கையெழுத்தில் இருந்த குறிப்புகள் அல்லது செய்தித்தாள் கட்டுரைகளின் கத்தரிப்புகள்; அவை குறிப்புகளோடும், வரைபடங்களோடும், தேசமுழுவதும் நிகழ்ந்த தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளைப் பற்றிச் சொல்லின. இந்தக் கோப்பில் இருந்த ஆவணங்களுக்கு இடம்பொருள் காலம் என்று எதுவுமில்லை. அவன் தந்தை இந்த அகழ்வாராய்ச்சிகளைப் பற்றி கூகுளில் தேடியவை போல இருந்தது; அல்லது விக்கிபீடியாவில் தேடி பின் அவர் ஆராய்ச்சி செய்திருந்த உண்மைகளைப் பதிவு செய்தது போலத் தோன்றியது. ஆனால் இந்தக் கோப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் விக்கிபீடியா கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. கூகுளை உருவாக்கிய பேஜும் பிரினும் கலிஃபோர்னியாவில் ஓர் வாகன அறையில் இருந்துகொண்டுதான் வேலைசெய்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் பக்கங்களை உருவாக்கிய போது அவனது தந்தை என்னதான் சிந்தித்துக் கொண்டிருந்தார்?

விஜய்க்கு ஒரு கருத்தும் தோன்றவில்லை. அவன் காகிதங்களைப் படிக்க ஆரம்பித்தான். தந்தையின் சிந்தனாமுறையின் தடயங்களைத் தேட முயன்று கொண்டிருந்தான். இந்த முறையில் பதிவு செய்வதற்கு ஏன் இந்த செய்தி அவ்வளவு முக்கியத்துவமானது என்பதைப் புரிந்துகொள்ள அவன் முயன்றான்.

கோப்பைப் படிக்க படிக்க குழப்பம் அதிகமானது. இந்தப் பெரிய பிரயத்தனத்திற்குப் பின்னால் ஏதோவொன்று இருந்திருக்க வேண்டும்.

ஆனால் என்ன அது?

12

நாள் மூன்று

ஜவுன்கார் கோட்டை

சிலமணி நேரத்திற்கு முன்பு, தான் கண்டுபிடித்த விநோதமான கோப்பை விஜய் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். கோப்பின் உள்ளடக்கங்கள் பிரமிப்பாக இருந்தன. அதில் இருந்த ஆவணங்களுக்கிடையே எந்தத் தொடர்பும் இல்லாதது போலத் தோன்றியது. ஆனால், முதலில் அந்தக் கோப்பு ஏன் உருவாக்கப்பட்டிருந்தது என்று தெரியாமல், அவனால் தொடர்பைக் கண்டுபிடிக்க முடியாது.

திடீரென்று அவனது கைப்பேசி ஒலித்தது. துள்ளிக் குதித்தான். கடிகாரம் அதிகாலை 3 என்று காட்டியது. காலின் எதற்காக இந்த அகால நேரத்தில் அழைக்கிறான்? அதுவும் அவன் கோட்டையில் இருக்கும்போது.

'நீ என்னைப் பயமுறுத்திட்ட,' என்று அவன் காலினைத் திட்டினான்.

'கடவுளுக்கு நன்றி. இந்த நேரத்தில நீ என் 'கால' எதிர்பாத்துக்கிட்டு இருந்தீன்னா, எனக்குக் கவலையா இருந்திருக்கும்.'

விஜய் புன்னகைத்தான். 'சரி. இந்நேரம் ஏன் கூப்பிட்ட?'

மௌனம் நிலவியது. 'கீழே வந்து நீயே பாரு.'

'வசிப்பறையிலா?'

'ஆமா. தாமதிக்காத.'

விஜய் பெருமூச்சு விட்டான், கோப்பையும் பின் கதவையும் மூடினான். இந்த அறையைக் கண்டுபிடித்ததிலிருந்து, அதன் சாவியைத் தன்னிடமே வைத்திருந்தான். ஒரு நகல்சாவியையும் தயார்செய்து

அதைத் தனக்கு மட்டுமே தெரிந்த ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தான். அவனுக்கு ஒரு உயிரிழை கிடைத்திருக்கிறது. தன் பெற்றோர்களிடம் தொடர்பு கொள்வதற்கான வழி. அந்த வாய்ப்பை அவன் இழக்கப்போவதில்லை.

சில நேரங்களில் ஒன்றை நாம் இழக்கும்வரை அது நம்மிடம் இருந்தது என்பதே நமக்குத் தெரியாது.

இது ஆச்சரியங்களின் இரவு. அவன் வசிப்பறையில் நுழைந்தபோது, உறைந்துபோனான். ஆவியைப் பார்த்தது போல. தன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை.

மெதுவாக தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். ஆனால் இந்தச் சூழ்நிலையில் எப்படி எதிர்வினை ஆற்றுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

காலின் தன் நண்பனின் முகத்தைப் படித்தான்; ஒன்றும் சொல்லவில்லை.

'ஹை, விஜய்,' என்று அலைஸ் சற்று பயந்தவாறு சொல்லிக்கொண்டு, காலினருகே தான் உட்கார்ந்திருந்த வெள்ளைத்தோல் சோஃபாவிலிருந்து எழுந்துவந்தாள். அவளும் பயத்துடன் இருந்தாள்.

விஜய் பதில் சொல்லவில்லை. அவனது தாடை இறுகியது. புருவங்கள் நெரிந்தன. இது அவன் எதிர்பாராத ஒன்று. அவன் தன் இறந்தகால நினைவுகளை வலிந்து தன் மனதின் அடியாழங்களில் போட்டுப் புதைத்திருந்தான். அவை மீண்டும் மேலெழுந்து வரும் என்று அவன் நினைத்ததே இல்லை. ஆனால் இன்று அவை நுரைத்துக்கொண்டு, பதினொரு வருடங்களுக்கு முன்பு இருந்தது போலவே புதியதாக எழுந்தன. அவற்றோடு வந்த உணர்ச்சிகள் அவனைக் கலைத்தன. அவன் நடைபோட விரும்பாத நினைவுப்பாதை இது. அதைத்தான் இப்போது செய்துகொண்டிருக்கிறான்.

இறுதியில் பேசினான்: 'அதிகாலை மூன்றுமணி ஆயிடுச்சி.' அலட்சியமாக ஒலிக்க அவன் முயன்றான். 'நீ ஏன் இங்க இருக்க? என்னோட எதுவுமே வேண்டாம்ன்னு தானே சொல்லிட்டுப் போன. இப்ப என்ன ஆச்சு?'

'அவள் ஆபத்தில மாட்டிக்கிட்டா,' என்று காலின் இடைமறித்தான், அலைஸ் பதில் சொல்றதுக்கு முன்னாடி. 'அவளுக்கு நம்மோட உதவி தேவை.'

காலின் மௌனமாக நின்றான்.

'விஜய், அவ உயிருக்கு ஆபத்து. நாம அவளுக்கு உதவி செய்யனும்,' என்று காலின் மீண்டும் சொன்னான்.

விஜய் மிகுந்த பிரயத்தனத்துடன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினான். 'அமெரிக்காவிலிருந்து இந்த இடம் ரொம்ப தூரம்,' என்றான் அவன் மெதுவாக, 'நீ இங்க வந்து உதவி கேட்கிறான்னா, பெரிய ஆபத்திலதான் இருக்கிறேன்னு அர்த்தம்.'

அலைஸ் அவனைத் திரும்பவும் கூர்ந்துப்பார்த்தாள். பழைய காயங்கள் வலித்தன மீண்டும். அவள் அவற்றை மறக்க முயன்றாலும் அவை இன்னும் மேற்பரப்புக்குக் கீழேதான் இருந்தன என்று அவை அவளுக்கு நினைவூட்டின. 'நீ எப்படி உணர்றேன்னு எனக்குத் தெரியும், விஜய்,' என்று அவள் ஆரம்பித்தாள். 'சத்தியமா சொல்றேன். வேற வழியிருந்திருந்தா, நான் இங்க வந்திருக்கவே மாட்டேன். ஆனா எனக்கு வேற வழி தெரியல.'

விஜய் தன் குரலைச் சமச்சீராக வைத்துக்கொள்ள முயன்றான். 'என்ன நடந்திச்சு?'

கிரீஸில் தான் அனுபவித்த கொடுமையை அவள் விலாவாரியாகச் சொன்னாள். டாமனின் கொலையை, மார்க்கோவின் மரணத்தை, நெடுஞ்சாலையில் அவள் தப்பித்துவந்த கதையை எல்லாம் சொல்லும் போது அவளுக்குக் குரல் நடுங்கியது. 'என்னால் அமெரிக்காவுக்குத் திரும்ப போகமுடியாது,' என்று அவள் முடித்தாள். 'நான் எங்க போனாலும், அவங்க என்ன கண்டுபிடிச்சிடுவாங்க. வேறு எங்கேயாவதுதான் போகணும். ஆனா, அமெரிக்காவுக்கு வெளியே நம்பிக்கையான ஆளுன்னு எனக்கு யாரையுமே தெரியாது. விமானநிலையத்தில இருந்து இங்க வர்றதுக்கு, குர்ட் வாலஸ் டில்லியில இருக்கிற ஆட்கள் மூலமா எனக்கு கார் ஏற்பாடு செஞ்சாரு. கிரீஸிலிருந்து என்னை யாரும் தொடரமுடியாத வழி இது ஒண்ணுதான்னு அவரு சொன்னாரு. தனியார் ஜெட். தனியார் கார். ஆவணங்கள் இல்லை. மின்னணு மூலமா பின் தொடர்தல் ஏதுமில்லை.'

அவள் விஜயை வெறித்துப் பார்த்தாள். அவனது எதிர்வினைக்காக அவனை உற்றுக் கவனித்தாள். அவள் கதை அவனைப் பாதித்துவிட்டது என்பது நிதர்சனமாகத்தெரிந்தது.

'வா, விஜய்,' என்று காலின் இடைப்புகுந்தான். 'இந்தப் பொண்ணுக்கு தங்கறதுக்கு இடம் வேணும். அவளோட உயிருக்கு

ஆபத்து. இந்தக் கோட்டையிலதான் ஐம்பது அறைங்க இருக்கே. சில ராத்திரிகள் அவ இங்க தங்க கூடாதா? பிரச்சினை முடியற வரைக்கும்.'

விஜய் அவனைப் பார்த்துவிட்டு அலைஸிடம் திரும்பினான். 'நீ ஒரு விசயத்தைப் புரிஞ்சிக்கணும்,' என்று ஆரம்பித்தான். குரல் கடுமையாக ஒலித்தது. 'இதில நாம இரண்டுபேருமே தெளிவா இருந்தாகணும். நான் கடந்துவந்துட்டேன். எனக்கு நிச்சயமாயிடுச்சி. நீயும் நானும்.. அதெல்லாம் கடந்தகாலம். எனக்கும் ராதாவுக்கும் இடையில அந்த விஷயம் தடையா வரக்கூடாது.'

'ராதா அவன் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு,' என்று காலின் அலைஸிடம் விளக்கினான்.

அலைஸ் தலையசைத்தாள். இதைத்தவிர வேறு எதையும் அவள் எதிர்பார்த்ததில்லை. எப்படியோ அவள் இங்கே பாதுகாப்பாக உணர்ந்தாள். அவள் இந்தியாவுக்கு ஒருபோதும் வந்ததில்லை என்றாலும், இப்போது அவள் தன் நண்பர்களோடு இருக்கிறாள்.

'கோட்டையைச் சுத்தி ஒரு பாதுகாப்பு வளையம் இருக்கு,' என்று விஜய் தொடர்ந்தான். 'நீ இங்க இருக்கிற வரைக்கும், வெளியே போகாத வரைக்கும், யாரும் உன்னத் தொடமுடியாது,' பேசிக்கொண்டிருந்தபோது, தன் மாமாவுக்கு நேர்ந்த விதி அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அந்த நினைவை மனதிலிருந்து அகற்றினான். அந்த நேரத்திலிருந்து கோட்டையின் பாதுகாப்பு அமைப்பு மேம்படுத்தப்பட்டுவிட்டதே!

'நன்றி விஜய்!' என்று அலைஸ் பதில்சொன்னாள். 'உன் உதவியை நான் பெரிசா மதிக்கிறேன்.'

விஜய் வலிந்து புன்னகைத்தான். வேண்டுமென்றே அவன் தன் உணர்ச்சிகளைத் தள்ளிவைத்தான். 'நிச்சயமா. உதவி செய்ய எனக்கு எப்பமுமே மகிழ்ச்சிதான். காலின், அவளுக்கு விருந்தாளி அறைகள்ல ஒன்னைக் காமிக்கிறியா? எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். சரி, நண்பர்களே! நான் தூங்கப்போறேன். ராதா நாளைக்கு வர்றா. அவ இங்க வரும்போது நான் தூங்கிக்கிட்டு இருக்க விரும்பல.' அவன் காலினைப் பார்த்தான். 'மேலும் நமக்கு காலயில இம்ரானோட சந்திப்பு இருக்கு.'

காலின் தலையசைத்தான். விஜய் அறையைவிட்டுச் சென்றான்.

அவன் பின் அலைஸிடம் திரும்பினான். 'நல்லது! ஒண்ணும் மோசமா போகல. இல்லியா?'

'ராதா பற்றிச் சொல்லேன்,' என்று அலைஸ் கேட்டாள். 'அவ எப்படி இருப்பா?'

காலின் முறைத்தான். அவன் நினைத்ததுபோல இது ஒன்றும் எளிதாக இருக்கப் போவதில்லை.

13

ஜவுன்கார் கோட்டை

'காலை வணக்கம்,' என்று விஜய் முறைத்துக்கொண்டே உணவக அறைக்குள் வந்தான். காலினும் அலைஸும் காலையுணவை முடித்துக் கொண்டிருந்தார்கள். மோசமான நேரம். ராதா எந்நேரமும் இங்கே வரலாம்.

காலின் ஜெஷர் பூனை போல பல்லிளித்தான். விஜய்க்கு அந்த இளிப்பு பழக்கமாயிவிட்டது.

(ஜெஷர் பூனை என்பது லூயி கரோல் புதினமான 'அலைஸஸ் அட்வென்சர்ஸ் இன் வொண்டர்லாண்ட்'டில் வரும் ஒரு கற்பனையான குறும்புத்தனமான பூனைப்பாத்திரம் - மொழிபெயர்ப்பாளர்)

ஆனால் அலைஸ் அவனைப் பார்த்து உணவு மேஜையிலிருந்து சாந்தமாகப் புன்னகைத்தாள். அவன் மீண்டும் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

'நல்ல தூங்கினியா?' என்று அவன் அலைஸைப் பார்த்துக் கேட்டான். உண்மையான அக்கறையை விட சம்பிரதாயத்தனம்தான் அதில் அதிகமாக இருந்தது. நேற்றிரவு நடந்த உரையாடலின் மிச்சம் ஒன்று அவனது மனதில் தங்கியிருந்தது.

அலைஸ் தலையசைத்தாள். 'உம்ம்ம்ம்ம். தூங்கினேன். நன்றி. நீ தூங்கினியா?'

விஜய் பதில்சொல்லவில்லை. நேற்றிரவு அலைஸ் சொன்ன விசயத்தில் கவனம்குவிந்து அவன்மனம் இப்போது துடித்துக்கொண்டிருந்தது.

'கல்லறையில் யானைத்தந்த கனசதுரம் ஒண்ணு கிடைச்சிதுன்னு நீ சொன்னீல்ல,' என்றான் அவன், வாய்நிறைய இருந்த மசாலா ஆம்லேட்டுக்கும், புரோட்டாவுக்கும் இடையில்.

அலைஸ் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். நேற்றிரவு நடந்த உரையாடலின் பின்னணியைப் பார்க்கும்போது, அவளது கிரீஸ் அனுபவத்தைப் பற்றிய விஷயம் விஜய்க்குள் பதிந்திருக்கும் என்று அவள் நினைத்தது இல்லை.

'ஆமா,' என்று அவள் பதிலளித்தாள். 'அதில் வாசகங்கள் பொறிக்கப் பட்டிருந்திச்சி.'

'மார்க்கோ உன்கிட்ட திரும்பவந்தபோது, டாமன் கனசதுரத்தை ஓட்டலுக்குக் உன்ன கொண்டுவரச் சொன்னார்ன்னு அவன் உன்கிட்ட சொன்னான்.'

'சரி,' என்று சொன்ன அலைஸ், விஜய் எதைப் பற்றி யோசிக்கிறான் என்று ஆச்சரியப்பட்டாள்.

'அந்தக் கனசதுரத்தை நீ என்ன செஞ்சே?'

'நான் அத என்னோட பையில வச்சேன்.' ஒரு திடீர் எண்ணம் அலைஸைக் கடினமாகத் தாக்கியது. கனசதுரம் இன்னும் அவளது முதுகுப் பையில் சின்னப் பெட்டியில்தான் இருக்கிறது என்பதும், அதைப் பத்திரமாக அவள் இந்தியாவுக்குக் கொண்டுவந்திருக்கிறாள் என்பதும், தப்பித்தோடிய பரபரப்பில் சுத்தமாக அவள் மறந்துவிட்டாள்.

'அதுதான் அவர்களுக்கு வேணும்,' என்று விஜய் முணுமுணுத்தான். 'கனசதுரம்.'

அலைஸ் தலையை ஆட்டினாள். சூடாகச் சிவந்து பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கம்பியால் சுடப்பட்டு வெந்துபோனது போல, இரண்டு இரவுகளுக்கு முன்பான மனச்சித்திரங்கள் அவளின் மனதிற்குள் எரிந்துகிடந்தன. 'நான் கல்லறையைப் பார்த்ததால, அவங்க என்னைத் துரத்துறாங்க. மார்க்கோவிடம் ஒன்றுமே இல்ல. ஆனால் அவன் எங்ககூட கல்லறையில இருந்தான். அதனால அவங்க அவனயும் கொன்னுட்டாங்க. அந்த சாயங்காலப் பொழுதில அங்க இருந்த ஒவ்வொருவரையும் அவங்க கொல்ல விரும்பினாங்க.'

விஜய் சிந்தனையில் இருப்பதுபோலத் தோன்றினான். 'உன்னோட லாப்டாப்பையும், கேமராவையும் நீ என்ன பண்ணின?'

'நான் தங்கியிருந்த ஓட்டல் அறையில விட்டுட்டேன்.'

'அதனால கலைப்பொருட்களின் ஃபோட்டாக்கள் அவங்ககிட்டதான் இருக்கும்,' என்று விஜய் குழப்பமானான். 'அதிலிருந்து எதையும் புரிஞ்சிக்க முடியலையே.'

அலைஸின் கண்கள் விரிந்தன. 'இல்ல. அவங்ககிட்ட இருக்காது,' என்றாள் அவள். 'லாப்டாப்பில் ஃபோட்டோக்களை ஏத்த எனக்கு நேரமில்ல. அதப் பின்னாடி பாத்துக்கலாம்ன்னு விட்டுட்டேன். அதனால மெமரி ஸ்டிக்கை எடுத்திட்டேன். அது இன்னும் என் இடுப்புப் பாக்கெட்லதான் வச்சிருக்கேன்.'

விஜய் தன் தொடையைத் தட்டினான். 'அது கனசதுரமாகத்தான் இருக்கணும்,' என்று அதிலே நின்றான். 'இரண்டு காரணங்கள்: முதல் காரணம், கனசதுரம் தான் தொகுப்பிலிருந்து காணாமல் போன ஒரே கலைப்பொருள். அவங்ககிட்ட அதனோட போட்டோ இல்ல. அதனாலதான் அதனோட ஒரிஜினல் அவங்களுக்குத் தேவை. சரியா?'

'சரி,' என்று அலைஸ் முணுமுணுத்தாள், இன்னும் சந்தேகத்தோடு.

'இரண்டாவது, நீ கனசதுரத்தை கடைசியிலதான் கண்டுபிடிச்ச. சிலைகளுக்கும், பெட்டிகளுக்கும் பின்னாடி மறைஞ்சி கிடத்திச்சி. அதற்குள்ள டாமன் அந்த இடத்தவிட்டு போயிட்டாரு.'

'சரியா சொன்னே.' விஜய் என்ன சொல்ல வருகிறான் என்பதை அவள் புரிந்துகொண்டாள். 'அதப் பார்க்காதபோது அது அங்கதான் இருந்திச்சின்னு டாமனுக்கு எப்படித் தெரியும்ன்னு நீ ஆச்சரியப்படுற. அந்த மறைவான அறையில கலைப்பொருட்கள ஆராய்ச்சி செஞ்சுகிட்ட இருக்கும்போது அத அவரு பாத்திருக்க வாய்ப்பிருக்கு.'

விஜய் தலையாட்டினான். 'அதுவல்ல. நான் ஆச்சரியப்படுறது இதுதான். அந்த ரெண்டு இயக்குநர்களும் எல்லாக் கலைப்பொருட்களயும் எடுத்து களத்திலிருந்த குடிசையில கொண்டுபோய் வைக்கச் சொல்லிருந்தாங்க. சரியா?'

'சரி.'

'பின்ன ஏன் டாமன் அந்த கனசதுரத்த மட்டும் ஓட்டலுக்கு உன்னக் கொண்டுவரச் சொன்னாரு? அது ஏன் அவ்வளவு முக்கியமானது? மேலும், ரொம்ப முக்கியமா, டாமன் அந்த கனசதுரத்த ஓட்டலுக்கு உன்னக் கொண்டுவரச் சொன்னாருங்றதுக்காக, ஸ்டாவ்ரோஸ் டாமனைத் திட்டிட்டாருன்னு மார்க்கோ உன்கிட்ட சொன்னான். ஸ்டாவ்ரோஸின் கருத்துப்படி, டாமனே அதைக் கொண்டுவந்திருக்க வேண்டும். அதற்கு என்ன அர்த்தம்ன்னா, கனசதுரம் ஏதோவொரு வழியிலே ரொம்ப முக்கியமானதுன்னும், அது ஒட்டலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கணும்னு டாமனுக்குச் சொல்லப்பட்டிருக்கு. இப்ப ஒரே ஒரு கேள்வி: ஸ்டாவ்ரோஸ்க்கும், பீட்டருக்கும் அல்லது வேறுயாருக்கும்

எப்படி தெரியும், கனசதுரம் அந்தக் கல்லறையில்தான் இருக்குன்னு? அதுவும் அவங்க அந்தக் களத்திலே இல்லாத போது.'

அலைஸ் சிந்தித்தாள். 'அது சாத்தியம்தான்,' என்றாள் அவள் மெதுவாக. உரக்கச் சிந்தித்து. 'டாமன் அவங்ககிட்ட கனசதுரத்தைப் பத்திச் சொன்னதும், அவங்க அவரை அதை ஓட்டலுக்குக் கொண்டுவரச் சொன்னதும்.'

'நான் அப்படி நினைக்கலை,' என்று விவாதித்தான் விஜய். 'அங்கே நிறைய தற்செயலான சம்பவங்கள் நிறைய இருக்கு. அதனால உன் விளக்கங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. முதல்ல, நீ கண்டுபிடித்தற்கு முன்னாலே டாமன் கனசதுரத்தைப் பார்த்திருக்க வேண்டிய அவசியம் இருக்கு. அது சாத்தியமில்லை. அப்புறம், டாமன் அதைப் பற்றி ஸ்டாவ்ரோஸிடம் சொல்லியிருக்க வேண்டும் என்பதும் அதில ஒரு முக்கியத்துவமும் இல்லாமல், அந்தக் குறிப்பிட்ட கலைப்பொருளை ஓட்டலுக்குக் கொண்டு வரச் சொல்லப்பட்டார் என்பதும் சாத்தியமற்றது. அவர்கள் ஏன் கனசதுரத்தை மட்டும் பார்க்க விரும்பினார்கள்? ஏன் கல்லறையில் கிடைத்த வேறெந்த கலைப்பொருட்களையும் அவர்கள் விரும்பவில்லை? இறுதியாக, கனசதுரம் மட்டுந்தான் அவங்க உடைமையில இல்லை; அதனுடைய போட்டோவும் அவங்ககிட்ட இல்லை. அதனால அவர்கள் தேடியது கனசதுரம் மட்டுந்தான்.'

'எனக்குத் தெரியலை,' என்று அலைஸ் பதிலளித்தாள். 'நீ சொல்வது சரியாக இருக்கலாம். உன்னோட தர்க்கத்தில அர்த்தம் இருக்கு. கனசதுரம் மர்மமா இருக்கு. ஆனா அதில எந்தவொரு விசேஷமும் இல்லை. அது யானைத் தந்தத்தால செய்யப்பட்டிருக்கு; அதில புரியாத பதிவுகள் செதுக்கப்பட்டிருக்கு. இதைத்தவிர அதில ஒண்ணும் இல்லை.'

'ஒரு கல்லறையில இருந்த ஒரு பழைய யானைத்தந்தம் ஏன் மக்கள கொல்லற அளவுக்குத் தூண்டிவிடணும்?' என்று காலின் ஆச்சரியப்பட்டான். 'யாருடைய கல்லறை அது?'

அலைஸ் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். 'இந்த அகழ்வாராய்ச்சி பற்றி உனக்கு நான் பின்னணிய சொல்லணும்ன்னு நினைக்கிறேன். அப்பத்தான் நாங்க தேடிக்கிட்டிருந்ததைப் பற்றி உனக்கு ஒரு புரிதல் உண்டாகும்.'

'நண்பர்களே,' என்று காலின் இடைமறித்தான். 'நாம இப்ப தொல்பொருள் ஆராய்ச்சி இடங்கள், கல்லறைகள், அது இதுன்னு

விவாதம் பண்ணப் போறதுன்னா, நல்ல வசதியான இடத்துக்குப் போவோமா? இந்த மாதிரி பேச்செல்லாம் எப்படி போகும்ன்னு எனக்குத் தெரியும். சாப்பாட்டு மேஜையில நடக்கிற விவாதத்துக்கு மத்தியில நான் இருக்க விரும்பல.'

விஜய் புன்னகைத்தான். 'நிச்சயமா,' என்று அவன் பதிலளித்தான். 'படிப்பறை?'

'நல்ல விசயம்,' என்று பதில் சொன்னான் காலின். இந்தக் கோட்டையில் விஜயின் மாமா உருவாக்கியிருந்த படிப்பறை அவனுக்கு மிகவும் பிடிக்கும். 'இன்னக்கு' சூரியன் ரொம்ப பிரகாசமாக நம்பிக்கையோட உதயமாய் இருக்கு.'

அவர்கள் படிப்பறைக்குச் சென்றார்கள். *LCD* தொலைக்காட்சிப் பெட்டி பொருத்தப்பட்டிருந்த சுவர்க்கு அருகிலிருந்த மூலையில் போடப்பட்டிருந்த கண்ணாடி காஃபி மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டார்கள்.

'பதினெட்டு மாசத்துக்கு முன்னாடி,' என்று அலைஸ் ஆரம்பித்தாள். 'வாலஸ் தொல்பொருள் அறக்கட்டளையிலிருந்து என்னத்தேடி வந்தாங்க. இந்த அகழ்வாராய்ச்சிக் குழுவில ஒரு உறுப்பினராய் இருக்கச் சொன்னாங்க.' அவள் இருவரையும் பார்த்தாள். 'மாசிடோனியாவின் மூன்றாம் அலெக்ஸாண்டர் சரித்திரம் உங்களுக்கு எவ்வளவுதூரம் பரிச்சயம்?'

'யார் அவரு?' என்று காலின் கேட்டான். வெள்ளைத்தோல் குஷன்களில் சௌகரியமாகச் சாய்ந்துகொண்டு. 'மாவீரன் அலெக்ஸாண்டருக்கு ஏதாவது உறவா?'

அலைஸ் பெருமூச்செறிந்தாள். 'மூன்றாம் அலெக்ஸாண்டர்தான் மாவீரன் அலெக்ஸாண்டர்.'

காலின் அசட்டுத்தனமாகப் புன்னகைத்தான். 'ஓ. மன்னிக்கவும். சரித்திரத்தை நான் என்னைக்குமே நல்லாப் படிச்சதில்ல.'

'போகட்டும்,' என்று அலைஸ் தொடர்ந்தாள். 'குர்ட் வாலஸ் தனிப்பட்ட முறையில ஏதோவொரு காரணத்துக்காக நான் இந்தத் திட்டத்தில இருக்கணும்னு ஆசைப்பட்டாரு. கிரேக்க வரலாறு எனக்கு ஆர்வமான விஷயங்கிறதனால, நாம் கையெழுத்துப்போட சம்மதிச்சேன்.'

'உன்னை இதில இழுத்துவிட்டதில ஏதோவொண்ணு இருக்கு,'

என்றான் விஜய். 'எனக்கு உன்ன தெரியும். உனக்கு ஒரு விஷயத்தில ஆர்வம் இல்லன்னா, நீ அதில இறங்கமாட்ட.'

அலைஸ் புன்னகைத்தாள். அதனால்தான் அவள் விஜயைக் காதலித்தாள். எப்படியோ அவளைப்பற்றி அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. அது ஏன் நீடித்திருக்கக் கூடாது?

பதில்சொல்ல அவள் வாய்திறந்தாள். அப்போது பட்லர் ஷிவ்ஜீத் அங்கே வந்தான். 'சார், ராதா அம்மாவும், டாக்டர் சுக்லாவும் இங்க வந்திருக்காங்க.'

ராதா அறையில் நுழைந்தாள், புன்னகையுடன். தொடர்ந்து வந்தார் சுக்லா. 'ஷிவ்ஜீத்,' என்று அவள் கோபித்துக்கொண்டாள். 'நாங்க வர்றதை நீ ஒண்ணும் அறிவிக்க வேண்டாம்.' அலைஸைப் பார்த்ததும் அவள் நின்றுவிட்டாள். புன்னகை மறைந்தது.,

காலின் அறிமுகப்படுத்தி வைத்தான். ராதா, விஜய் தனக்கே எனும் உடமையுணர்வு கொண்டவள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் அலைஸை விஜயின் முன்னாள் தோழி என்று அவன் அறிமுகப்படுத்தாமல் கவனமாக இருந்துவிட்டான். அவளை அறிமுகப்படுத்துவதை விஜய் செய்துவிடுவான், அவன் விருப்பப்பட்ட நேரத்தில்.

விஜய் எழுந்து சுக்லாவைக் கட்டித்தழுவி வரவேற்றான். 'நீங்களும் இங்க வந்தது எனக்கு ரொம்ப சந்தோசம்,' என்று அவன் அந்த மொழியியல் நிபுணரைப் பார்த்துச் சொன்னான்.

'உங்ககூட கொஞ்சநேரம் செலவழிக்கலாம்ன்னு இங்க வந்தேன்,' என்று சுக்லா புன்னகைத்தார். 'போன வருசத்திலிருந்து நான் காலினைப் பாக்கவே இல்லை.'

விஜய், ராதாவிடம் திரும்பி அவளுக்கு முத்தமிட்டான். 'ஹே,' என்று அவளைப் பார்த்து அவன் பிரகாசமானான். 'நீ இங்க வர்ற வரைக்கும் என்னால காத்திருக்க முடியல.'

ராதா பதிலுக்குப் புன்னகைத்தாள். 'நானுந்தான்.'

அவர்கள் ஒன்றாக ஒரு சோஃபாவில் அமர்ந்தார்கள். சுக்லா காலினுக்கு அடுத்து உட்கார்ந்தார். 'அலைஸ் கிரீஸில் பயங்கரமான அனுபவத்தைப் பார்த்திட்டா,' என்று விஜய் விளக்கினான். 'இப்பத்தான் அதப்பத்தி அவ சொல்லிக்கிட்டு இருந்தா.'

'தொடர்ந்து சொல்லுங்க, அலைஸ்,' என்று ராதா புன்னகைத்தாள்.

'அதைக் கேட்க எனக்கு வருத்தமா இருக்கு. ஆனா ஆர்வமாகவும் இருக்கு.'

அலைஸ் பதிலுக்கு ராதாவைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு பேசலானாள். 'குர்ட் வாலஸ் என்கிட்ட சொன்னாரு, அவரோட குழு கண்டுபிடித்த ஒரு தடயத்தப் பத்தி. அது பழங்காலத்து கிரீஸின் நீண்டகால மர்மங்கள்ல ஒன்னைத் தீர்த்துவைக்க உதவக்கூடிய தடயம்.'

'குர்ட் வாலஸ் ஒரு கோடீஸ்வரர். அவருதான் அவளோடு அகழ்வாராய்ச்சிக்கு நிதியுதவி செஞ்சார்,' என்று காலின், ராதாவுக்கு விளக்கினான். அவள் புரிந்தது என்று தலையாட்டினாள்.

'அது என்ன மர்மம்?' என்று சுக்லா ஆர்வமானது போல் தென்பட்டார்.

'இரண்டாம் பிலிப்போட மனைவியும், மாவீரன் அலெக்ஸாண்டரின் அம்மாவும் ஆன ஒலிம்பியாஸின் கல்லறை. அதுதான் பல அனுமானங்களுக்கு உட்பட்ட ஒரு விஷயம். ஆனா அது இருந்ததற்கான ஆதாரமே கிடையாது. பின்ன அது இருக்கும் இடத்தப்பத்தி பேசுவானேன். இதுவரைக்கும் ஒரு சான்றும் இல்லை.'

விஜய்யின் ஞாபகத்தில் ஏதோவொன்று நெருடியது. அந்தப் பெயர். ஒலிம்பியாஸ். முன்னாடி அவன் எங்கே அதைக் கேட்டிருக்கிறான்? சமீபத்தில்தான். ஒருவேளை போன மாதமா இருக்கலாம். ஆனால் அந்தக் கேள்விக்கான விடை அவனுக்குப் பிடிபடாமல் நழுவியது. அதனால் வெறுமனே அவன் சொன்னான்: 'ஓ! பெரிய விஷயமா இருக்கே.'

அலைஸ் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். 'உங்களுக்கெல்லாம் கிரேக்க வரலாறு எவ்வளவு தூரம் தெரியும்ன்னு எனக்குத் தெரியல. ஆனால் ஒலிம்பியாஸ் ஒரு மகாராணியாக ரொம்ப போராடினாள். அலெக்ஸாண்டர் இறந்த பிறகு, அவரோட பையன் நாலாம் அலெக்ஸாண்டர ஆட்சிக்குக் கொண்டுவர அவள் அதிகார அரசியல் செஞ்சா. அவள் முதல்ல பெர்டிக்காஸோடு கூட்டணி வைத்துக்கொண்டாள். பின்னாடி பாலிபெர் சானோடு சேர்ந்துகொண்டாள். ரெண்டு பேருமே தளபதிகள்; ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு ஆசை உண்டு. எபிரஸ்க்கும் மாசிடோனியாவுக்கும் ஓடிஓடி கடைசியில அவள் கிமு 316 பிட்னாவில தோற்றுப் போனாள். தோற்கடித்தது காசாண்டர். அலெக்ஸாண்டரின் ஆசியா படையெடுப்பில் மாசிடோனியாவின் வைஸ்ராயாக இருந்த

ஆண்டிபேட்டரோட பையன் காசாண்டர். அவள் சாகடித்த மாசிடோனியாக்காரர்களின் சொந்தக்காரங்கதான் அவளத் தூக்கில் போட்டது. அவங்களைத் தூண்டிவிட்டது காசாண்டர்தான். அவர் நேரடியா அவள தூக்கில போட விரும்பல. ஒலிம்பியாஸை காசாண்டருக்குச் சுத்தமாப் பிடிக்காது. அதனால அவ பிணத்தப் புதைக்க அவரு அனுமதிக்கல. அதைத் தூர எறிஞ்சிருங்கன்னு ஆணையிட்டாரு. ஆனாலும் பிணம் ரகசியமா புதைக்கப்பட்டிச்சி. ஒருவேளை எபிரஸ் சாம்ராஜ்யத்து அரசன் பிர்ரஸ் ஆட்சிசெய்த காலத்தில நடந்திருக்கலாம். பிர்ரஸும், ஒலிம்பியாஸைப் போலவே, 'ஏசிட்' வம்சத்தைச் சேர்ந்தவர்.'

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். 'மேல சொல்லுங்க,' என்று சுக்லா ஊக்கப்படுத்தினார். 'இது ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு.'

'நாங்க அந்தக் கல்லறைய கண்டுபிடிச்சிட்டோம்.' ஆகப்பெரிய யுகக்கண்டுபிடிப்பை நான்கே வார்த்தைகளில் சொல்லிவிட்டது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

'அது ஒலிம்பியாஸின் கல்லறைதான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று ராதா கேட்டாள். அலைஸின் கண்டுபிடிப்பை விஜய் புகழ்ந்தபோது பதிலுக்கு அவள் புன்னகைத்த விதம் ராதாவுக்குப் பிடிக்கவில்லை. யார் இந்தப் பெண்? இவளைப் பற்றி விஜய், ராதாவிடம் சொன்னது இல்லையே.

'நல்லது. மாக்ரிகியோலஸ்ங்ற கிராமத்தில இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் ஒலிம்பியாஸ் பற்றி குறிப்புகள் இருந்திச்சு. ஆதிகாலத்து பிட்னாதான் மாக்ரிகியோலஸ் என்ற அனுமானமெல்லாம் நிறைய உண்டு. குர்ட்டோட ஆராய்ச்சிக்குழு பாதி தேய்ந்துபோன ஒரு கல்தூபியைப் பத்தின செய்தி ஒன்ன கண்டுபிடிச்சுது. அதைக் கண்டுபிடிச்சி விலைகொடுத்து வாங்கினாங்க. ஸ்தூபியில இருந்த கல்வெட்டில கல்லறையப் பத்தி ஒரு குறிப்பு இருந்திச்சு. அது மாக்ரிகியோலஸை விட கொரினோஸ்க்கு பக்கத்தில் இருப்பதா அது சொல்லிச்சு. அதனால ஒரு செயற்கைக்கோள் உதவியுடன் தொலையுணர் புலக்காட்சி மூலமாக, ஓர் ஆழமாப் புதைக்கப் பட்ட கல்லறை போன்ற ஒன்றைப் பார்த்தோம்; அந்த இடத்த நாங்க தோண்ட ஆரம்பிச்சோம். கல்லறைக்குள்ள போனபோது அங்க என்ன இருக்குன்னு எங்களுக்கு எதுவுமே தெரியாது,' என்று அலைஸ் ஒத்துக்கொண்டாள். 'ஆனா சுவர்களில் இருந்த சிற்பங்கள பாத்தபோது...' என்று சொல்லிவிட்டு அவள்

நிறுத்தினாள். புதைகுழி அறையில் கண்ட பாம்புகளைப் பற்றி அவள் யோசித்தாள். 'தொன்மக்கதைப்படி, அலெக்ஸாண்டர் பிலிப் பெற்ற பிள்ளை அல்ல. ஒலிம்பியாஸ் அலெக்ஸாண்டரிடம் சொல்லியிருந்தாள், அவர் ஷீயஸ் கடவுளின் மகன் என்று. ஷீயஸ் அவளிடம் பாம்புவடிவத்தில் வந்திருந்தார். அவளுக்கு பாம்புகள் மீது ஓர் ஈர்ப்பு இருந்திச்சின்னு கதைகள் சொல்லுது. ஏன் பாம்புகள்கூட அவள் உடலுறவு வச்சிக்கிட்டதாகவும் அந்தத் தொன்மங்கள் சொல்லுது. அப்படித்தான் அலெக்ஸாண்டரின் பிறப்பைப் பத்தின தொன்மக்கதை பரவிச்சு.' ராணியை விவரிக்கும் சித்திரங்கள் கல்லறைக்குள் இருந்த முன்னறை சுவர்களில் கண்ட காட்சியை, புதைகுழி அறைச்சுவர்களில் பாம்புகள் இருந்ததை, சிலைகளும் பெட்டிகளும் அடங்கிய மூன்றாவது அறையைக் கண்டுபிடித்ததை அவள் விவரித்தாள்.

'அப்புறம் கனசதுரம்?' என்று விஜய் ஆர்வம் மேலிட கேட்டான். 'நாம அத பாக்கமுடியுமா?'

14

யானைத்தந்தத்தில் ஒரு புதிர்

அலைஸ் தன் அறையிலிருந்து கனசதுரத்தை எடுத்துவருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். அவள் சென்றவுடன், அவள் கிரீஸில் பட்ட கொடுமையான இரவு அனுபவத்தைப் பற்றி ராதாவிடமும், சுக்லாவிடமும் விஜய் சொன்னான். கனசதுரத்தைப் பற்றிய விவாதத்தையும் சொன்னான்.

'அதனால் அவள் அமெரிக்காவுக்குத் திரும்பாமல், இங்க வந்திட்டா,' என்று ராதா குறிப்பிட்டாள்.

ராதாவின் குரலில் ஒலித்த குத்தலைப் புரிந்துகொண்டு, காலின் சொன்னான்: 'அவள் தப்பியோடும்போதுதான் என்னைக் கூப்பிட்டாள். ஒருவேளை இங்க நல்ல வரவேற்பு கிடைக்கும் என்று அவள் நினைத்திருக்கலாம்.'

'கிடைச்சிடுச்சி. இல்லியா?' என்றாள் ராதா.

அப்போது அலைஸ் சின்னப்பெட்டியோடு வந்து அதை காஃபிமேஜைமீது எல்லோரும் பார்க்கும்படி வைத்தாள். நான்குதலைகள் குனிந்து கனசதுரத்தை உற்றுப்பார்த்து முகப்பட்டையை ஆராய்ந்தன.

'இந்த வார்த்தைகள் என்ன சொல்லுது? உன்னால வாசிக்கமுடியுமா?' என்று ராதா அலைஸைப் பார்த்தாள்.

அலைஸ் தலையாட்டினாள். 'இந்த எழுத்து எனக்குத் தெரியாது. ஆனால் வாசகங்கள் கவிதை மாதிர் தெரியது. நான் நினைப்பது தவறா கூட இருக்கலாம்.'

'இது பிராமி எழுத்து,' என்றார் சுக்லா. அவர் கனசதுரத்தை தீவிரமாக ஆராய்ந்தார். 'இது சமஸ்கிருதமொழி; வினோதமா இருக்கு. விசேஷம் என்னன்னா, சமஸ்கிருதத்திற்கு பிராமி எழுத்து அடிக்கடி

பயன்படுத்தப்படுவது கிடையாது. இந்தக் கனசதுரம் இந்தியாவில் உருவாகி இருக்கலாம்.'

அலைஸ், காலின், விஜய் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டார்கள். 'இந்தியாவில உருவான கனசதுரத்துக்கு கிரீஸ் கல்லறையில என்ன வேலை?' என்று அலைஸ் ஆச்சரியப்பட்டாள். 'ஒரு கனசதுரம் அங்க போவதற்கு ரொம்ப தொலவு இல்ல. முதல்ல அது அங்க எப்படி போச்சுன்னு ஆச்சரியமா இருக்கு.'

சுக்லா அலைஸைப் பார்த்தார். 'நான் இதைப் பெட்டியிலிருந்து எடுத்து ரொம்ப கிட்டக்க வச்சு படிக்கட்டுமா?'

'நிச்சயமா,' என்றாள் அலைஸ். வாசகங்கள் என்ன சொல்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள அவளும் மற்றவர்களைப் போலவே ஆர்வமாக இருந்தாள்.

சுக்லா கனசதுரத்தைத் திருப்பித்திருப்பிப் பார்த்தார். ஆறு பக்கங்களையும் ஆராய்ந்தார். 'சுவாரஸ்யமானது,' என்று கருத்து சொன்னார் அவர்.

'மேற்கொண்டு போங்க, அப்பா,' என்று ராதா அவரை அழுத்தினாள். 'வாசகங்கள படிச்சி சொல்லுங்க.'

சுக்லா கனசதுரத்தின் முகத்தை உற்றுப்பார்த்தார். 'கனசதுரத்தின் ஒரு பக்கம் வெறுமையா இருக்கு. மத்தப் பக்கங்கள்லதான் எழுத்து இருக்கு. மொத்தம் ஐந்து செய்யுட்கள். அதில ஒண்ணு இப்படி சொல்லுது:

ஓரத்திலிருக்கும் நதியின் மேலே
இரவும் பகலும் சந்திக்கும் இடத்தில்
சுக்ரன் சிவாவின் கம்பைக் காட்டினார்
ஐந்துதலை முடிசூடிக்கொண்ட
பலம்கொண்ட பாம்பின் பறை
உனக்கு உயிர்கொடுக்கும் உலகத்தின்
கதவில் காவல்காக்கும் நிரந்தர காவலன்.'

காலின் முனகினான். 'ஓ, அருமை! மறைவான அர்த்தம் புதைஞ்சிருக்கிற இன்னொரு புதிரோ அல்லது இன்னொரு பாட்டோஇல்ல இது. இந்த மாதிரி ஒரு முழுகத்தையை நாம படிச்சி ஒரு வருசம் கூட ஆகலை.'

'ஆமா. ஆனால் இதையெல்லாம் படிச்சி அர்த்தம் புரிஞ்சி கடசியில ரகசியத்தோட இருப்பிடத்த கண்டுபிடிக்கிறது ஜாலி இல்ல?' என்று விஜய் அவனைப் பார்த்து புன்னகைத்தான்.

'நாம கடத்தப்பட்டதைத்தவிர,' என்று ராதா அவனுக்கு ஞாபகபடுத்தினாள். அந்த அனுபவத்தின் பச்சைப் பயங்கரத்தை அவள் இன்னும் மறந்த பாடில்லை. 'நீ தான் அந்த கடைசிப்பாட்டைப் புரிஞ்சுக்கிட்டு ரகசியத்தின் இருப்பிடத்தை கண்டுபிடிச்ச, காலின்.'

'ஆமாம். எனக்கு ஞாபகம் இருக்கு,' என்று காலின் முணுமுணுத்தான். 'ஆனால் அது மாதிரியான இன்னொரு முயற்சியில் இறங்க நான் தயார் இல்ல. ஒவ்வொரு தடவையும் இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் நான் பாடல்கள்லயும், புதிர்கள்லயும் மாட்டிக்கிற மாதிரி தெரியது.'

ராதாவின் கண்கள் இந்தப் புதிரை அவிழ்க்கும் சவாலின் எதிர்பார்ப்போடு பிரகாசமாயின. 'இந்தப் புதிர்கள நாம விடுவிக்க முடியும். சொல்லப்பட்ட குறிப்புகள் இந்தியக்குறிப்புகள் இயல்பிலே. உதாரணத்துக்கு, சிவாவின் கம்புங்றது அவருடைய திரிசூலமா இருக்கலாம்.'

அலைஸ் தோளைக்குலுக்கினாள். 'எனக்கு ஒரு தடயமும் தெரியல. உங்களுக்கு வேணா தெரிஞ்சிருக்கலாம். ஆனா இந்தியாவோட சம்பந்தப்பட்ட வாசகங்கள கொண்ட ஒரு யானைத்தந்த கனசதுரம் எப்படி கிரேக்கக் கல்லறைக்கு போச்சிங்றது பெரும்புதிரா இருக்கு.'

'இதன் தோற்றம் இந்தியாவாகத்தான் இருக்கணும்,' என்றார் சுக்லா. 'சுக்ரனைப் பத்திய குறிப்பு இந்திய புராணத்தில இருக்கு. சுக்ரன் என்பவர் பிருகு முனிவரோட பையன். மகாபாரதக் கதைப்படி, அவர் அசுரர்களுக்குத் தலைவர். செத்துப்போனவங்கள உயிர்ப்பிக்கும் விஞ்ஞானம் தெரிஞ்சவர். தானவர்களை தேவர்கள் கொன்றபோது, அவர்தான் இந்த விஞ்ஞானத்தப் பயன்படுத்தி உயிர்கொடுத்தார்.'

'மத்த முகங்கள் என்ன சொல்லுது?' என்று விஜய் தெரிந்துகொள்ள விரும்பினான்.

சுக்லா கனசதுரத்தைத் திருப்பிப் பார்த்தார். 'இது ஒரு இந்திய தோற்றம்தாங்றதுக்கு இன்னொரு சான்று கிடைச்சிருக்கு. இந்த முகப்பட்டையில் சொல்லப்பட்ட வாசகங்கள் இதோ:

வேகமாக பாயும் கண்ணின் குறுக்கே

ஆழமான உப்பில்லாத கடலின் அருகே
மூன்று சகோதரர்கள் வலைவிரித்தார்கள்
பாதாளத்தின் வழியைக் காட்டும் அம்பின் மீது.
பாம்பின் முத்திரை தாண்டி ஆழமாய்த் தோண்டு
உன் தேடலின் சாரத்தை அங்கே தேடு.'

அவர் கனசதுரத்திலிருந்து பார்வையை நீக்கி ஏறிட்டார். 'இந்திய புராணத்தில் பாதாளம் என்பது கீழ்லோகத்தை அல்லது அடியுலகத்தைக் குறிப்பது. சரியாகச் சொன்னால், கீழ்லோகத்தின் ஏழு பகுதிகளில் ஒன்று அது.'

'அதாவது, நரகம்ன்னு சொல்றீங்களா?' என்று காலின் கேட்டான்.

'அப்படியில்ல,' என்று சுக்லா தெளிவுப்படுத்தினார். 'நரகம் என்பது மேல்நாட்டுக் கருத்து. ஜனங்களுக்கு பயத்த ஏற்படுத்தி அவுங்கள நல்ல பாதைக்கி திருப்பிவிடுவதற்கு கண்டுபிடிக்கப்பட்டது.'

அலைஸ் சுற்றுமுற்றும் பார்த்தாள். 'வேறு ஏதாவது கருத்து இருக்கா? எனக்கு ஒண்ணுமே புரியல. ஒன்னே ஒன்னைத் தவிர. ஏதோவொரு தேடலுக்காக சொல்லப்பட்ட வழிமுறை மாதிரி தோணுது.'

'எனக்கு ஒண்ணு புரியது,' என்றான் காலின். 'இந்தப் பாட்டு ஜனங்கள கீழ் லோகத்துக்குப் போகச்சொல்லுது. இங்க இருக்கும் நிஜத்துக்கு எந்த தொடர்பும் இல்ல. கீழ்லோகங்றது ஒரு கட்டுக்கத இல்லியா?'

'இத எல்லாத்தயும் மொழிபெயர்த்தா தெளிவான கருத்து கிடைக்கலாம்,' என்று ராதா இடைமறித்தாள். 'மேலே படியுங்க, அப்பா,' என்று அவள் தூண்டினாள். 'மத்த பாட்டு என்ன சொல்லுதுன்னு பார்ப்போம்.'

15

மேலும் பல விடுகதைகள்

'சரி, இதோ அடுத்து,' என்று சுக்லா மீண்டும் கனசதுரத்தைத் திருப்பிப் பார்த்தார்.

'பாறையைச் சுற்றிய நிலத்திலிருந்து
பழத்தை, இலையை, தண்டைப் பறித்துவிடு
முதல் மரத்தில் தண்டுகளும், பழங்களும்
கருநீலத்தில், சாம்பல்நிறத்தில், வெள்ளையில்
பச்சையில், பழுப்புநிறத்தில் இருக்கிறது.
அடுத்தது நேர்த்தியாக இருக்கிறது
கருநீலப் பழத்தைச் சுமந்துகொண்டு
எச்சரிக்கை! தொடும்போது எரியலாம்.'

'ரொம்பத் தெளிவான கட்டளைகள்,' என்று காலின் கிண்டலாக குறிப்பிட்டான். 'தேடுறதில நீங்க தெளிவா இருந்தா.'

'ஆனால் அலைஸ் இப்ப சொன்னதை இந்தப் பாட்டு உறுதிப்படுத்துது,' என்று ராதா பதிலுக்குச் சொன்னாள். 'இந்தக் கனசதுரம் பெரிய தேடலுக்கான ரகசிய வழிகாட்டி. ஒரு பிரச்சினை என்னன்னா, தேடலின் நோக்கம் என்னன்னு நமக்குத் தெரியாது.'

சுக்லாம் அடுத்தப் பாட்டைப் படித்தார்.

'நினைவில்வை, வீரனே, நீ வீரமாக இருக்கலாம்
எச்சரிக்கைகளை புறக்கணித்தால், உனக்கு ஆபத்து
எல்லாக் கூறுகளும் ஒன்றுசேர்ந்து வரவேண்டும்
நாகத்தின் தீப்பார்வையின் பாதுகாப்பில்: புறக்கணித்தால்
விலையுயர்ந்த பரிசு உனக்கு இல்லை.'

'சரி,' என்று காலின் இடைமறித்தான். 'ஒரே ஒரு வரிமட்டும் எனக்குப் புரியது.' அவன் மற்றவர்களைப் பார்த்து பல்லிளித்தான். 'இதத்தான் இந்த காலத்தில நாம பொறுப்புத்துறப்பு என்கிறோம். இது என்ன சொல்றதுன்னா, கட்டளைகள நீ மீறினா, எச்சரிக்கைகள கண்டுக்கில்லன்னா, உன் உயிர்போயிடும்; அப்படின்னு சொல்லுது. அதுதான் 'விலையுயர்ந்த பரிசு.' வேறொண்ணும் இருக்க முடியாது.'

'நீ சொல்வது சரியாக இருக்கலாம்,' என்று ராதா சிந்தனையோடு சொன்னாள். 'ஆனா, இந்தக் கட்டளைங்க நம்மள எங்க கொண்டு விடுங்கிறதப் பத்தி இந்தப் பாட்டு இன்னும் ஒண்ணும் சொல்லலை. மேலும் இதில பலவிதமான படிமங்கள் கலந்திருக்கு. சிவா, நாகம், பறிக்கவேண்டிய பழங்கள், வேகமாப் பாயும் கண், இத எல்லாம் எப்படி புரிஞ்சிக்கிறது?'

'பொறுங்க; கடைசி ஒன்னையும் படிச்சிர்றேன்.' சுக்லா கடைசி பாட்டை ஆராய்ந்துகொண்டிருந்தார், அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது.

'பின் வாசல் வழி நுழைந்துசென்று, கிழக்காக
மேற்காக பிரியும் பள்ளத்தாக்குகளுக்குப் போ.
விவேகத்தோடு பாதையைத் தேர்வுகொள்;
சூர்யா இருக்கும் இடத்தில் நடந்துபோ; நினவில்வை.'

'ஓ. அருமை,' என்று காலின் முனகினான். 'இன்னொரு வாசல். இப்போ சூர்யா. வேடிக்கையா இருக்கு. சூர்யா யாரு?'

'உண்மையலயே தெரியாதா?,' என்று ராதா முறைத்தாள், உரக்கச் சிந்தித்துவாறு. 'சூர்யா என்பது இந்திய சூரியக்கடவுள்.' சூரியன் கிழக்கில் உதிக்கிறான். அதாவது, இந்த விடுகதை ரெண்டு பள்ளத்தாக்குகளப் பத்திப் பேசுது. கிழக்கில இருக்கிற பள்ளத்தாக்க தேர்ந்தெடுன்னு கட்டளை சொல்லுது.'

'நல்ல கருத்து. ஆனா என்ன பள்ளத்தாக்கு?' சூரியன் கிழக்க இருந்து மேற்கில போவுது. அதனால சூர்யா மேற்கிலதான் இருக்கணும், நேரத்தப் பொறுத்து,' என்று விஜய் சுட்டிக்காட்டினான்.

ராதாவின் கண்களில் இருந்த வெளிச்சம் மங்கலானது. 'நமக்கு ஒரு குறிப்பும் இல்ல, இந்த விடுகதைப் புதிர விடுவிக்க,' என்று அவள் தோள்குலுக்கினாள். குரலில் ஏமாற்றத்தின் தொனி ஒலித்தது. 'ஒண்னு நமக்கு ஒரு ஆரம்பப்புள்ளி இருக்கணும்; கனசதுரத்தில எந்தப்பக்கத்தப்

படிக்கணும்ன்னு தெரிஞ்சிருக்கிறதுக்கு. இல்லன்னா, கனசதுரம் உருவாக்கப்பட்ட நோக்கத்த நாம தெரிஞ்சக்கணும். எதுவுமே இல்லாம, நாம கனசதுரத்தப் புரிஞ்சிக்க முடியாது.'

'உண்மை,' என்று அலைஸ் ஆமோதித்தாள். 'கனசதுரம் நிச்சயமா ஏதோவொரு நோக்கத்துக்காக உருவாக்கப் பட்டிருக்கு. ஆனா ஏன் அது உருவாக்கப் பட்டதுங்றதப் பத்தி தெரிஞ்சிக்க வழியில்ல,' என்று சொல்லிவிட்டு அவள் அதை மீண்டும் பெட்டிக்குள் வைத்தாள்.

'சரி. இது இப்படியே இருக்கட்டும். நாம ஏன் வெளியே போய் கோட்டையைச் சுத்தி நடந்துவரக் கூடாது? இது ஒரு அழகான நாள். எப்படியும் நம்மால புதிர்கள விடுவிக்கமுடியாது. எனக்கு இதில் சந்தோசம்தான்னு கடவுளுக்குத் தெரியும். தீப்பாம்புகளோட எனக்கு எந்த சங்காத்தமும் வேண்டாம். என் வாழ்க்கையே என்னோட விலையுயர்ந்த பரிசுதான். எந்த தேடலிலும் இறங்கி நான் அதை இழக்க விரும்பலை. இந்த தேடல்கள் எல்லாம் கிரேக்கக் கதாநாயகர்களுக்கானது. ஹெர்குலிஸ் மாதிரி ஆட்களுக்கு. என்ன மாதிரி இருபதாம் நூற்றாண்டு மனுசங்களுக்கு இல்ல,' என்று சொல்லிவிட்டு காலின் எழுந்து அலைஸியிடம் கையை நீட்டினான். அவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, தனக்கு உதவ அவனை அனுமதித்தாள்.

'கவலப் படாத, என்று விஜய் சிரித்தான். 'இந்தப் புதிர்களத் துரத்திக்கிட்டு நாம ஒண்னும் கிளம்ப போறதில்ல. கிரீஸ் இங்கிருந்து ரொம்ப தூரம். புதிர்களுக்கு விடைதேடி நாம போகமுடியாது. நாம அதை செய்ய வேண்டிய காரணமும் இல்ல. இது வெறும் அறிவுப்பூர்வமான சவால்தான். பிரயோஜனம் இல்லைன்னு நம்ம எல்லோருக்கும் தெரியும்.'

'எனக்கு வெளிக்காத்த சுவாசிக்கணும்,' என்று சொல்லி சுக்லா எழுந்தார். காலினோடும், அலைஸோடும் கிளம்பி அறையைவிட்டு வெளியேறினார். மற்றவர்கள் சென்றவுடன் ராதா விஜயோடு பின்தங்கினாள்.

விஜய் அவளைக் கேள்விகேட்பது போல பார்த்தான்.

'யாரு அது?' என்று ராதா ஆரம்பித்தாள். 'சூடான பொன்முடிக்காரி. பார்பி பொம்மை போல கட்டுமஸ்தான உடம்பு. நடுராத்திரி வந்து உங்க ரெண்டுபேர் கூட நட்பா இருக்குறா. அவ இங்க என்ன பண்றா? என்ன விஷயம்.'

ராதா மகிழ்ச்சியோடு பேசுவது போல இருந்தாலும், அவளுக்குத் தெரிய வேண்டும் என்று விஜய் புரிந்துகொண்டான். 'அதெல்லாம் பழைய விஷயம். ரொம்ப நாளைக்கு முன்னாடியே நான் அவள தாண்டிவந்துட்டேன். நானும் நீயும் சந்திச்ச போது, எனக்கிருந்த ஒரே உறவு என் தொழில்கூட இருந்த உறவுதான்.'

ராதா தலையசைத்து, புன்னகைத்தாள். ஆனால் அவள் மனதில் சந்தேகங்கள் இருந்தன. அவள் விஜய்பற்றி கவலைப்படவில்லை. அவனை நம்பினாள். ஆனால் விஜய்க்கும் அலைஸ்கும் இடையே இருந்த உறவு, அலைஸின் கோணத்தில் மிகப்பலமாக இருந்தது என்று ராதாவுக்கு அவளது உள்ளுணர்வு சொன்னது. அலைஸ் விஜயைப் பார்த்துக்கொண்டிருந்த முறையை ராதா அவதானித்திருந்தாள். என்னதான் உறவு முறிந்திருந்தாலும், என்னதான் பல வருடங்கள் பிரிந்திருந்தாலும், அலைஸ்க்கு விஜய் மீது இன்னும் ஈர்ப்பு இருக்கிறது என்று ராதாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

கவலைப்படக் கூடாது என்று அவள் தீர்மானித்தாள். நிகழ்வுகளுக்கு ஏற்றாற்போல் சமாளிக்கலாம் என்று முடிவெடுத்தாள்.

'இம்ரான் இங்க எப்ப வர்றாரு?' என்று அவள் கேட்டாள்.

விஜய் தன் கடிகாரத்தைப் பார்த்தான். 'நடுப்பகல்ல வர்றதாகச் சொன்னார். இன்னும் நேரம் இருக்கு.' ஓர் எண்ணம் அவனுக்குள் எழுந்தது. 'ஹே. நமக்குத்தான் நிறைய நேரம் இருக்கே. உனக்கு ஒரு விநோதமான விஷயம் காமிக்கிறேன். மேல்மாடி அறைக்குப் போவோம்.'

'இம்ரான் எதுக்காக சந்திக்க வர்றாரு?' என்று ராதா கேட்டாள், அவர்கள் கல்படியேறி ஐந்தாவது தளம் நோக்கி சென்றபோது.

'அவர் குறிப்பா எதுவும் சொல்லலை. பணிக்குழுவுக்கு இது முதல் வழக்கு. அதனால நம்மகிட்ட அதைப்பத்திச் சொல்றதுக்காக வர்ரேன்னு சொன்னாரு. ஆனால் அவர் குரல்ல சந்தோசமில்ல.'

16

ஜவுன்கார் கோட்டை

'உணமையிலே மர்மமா இருக்கு,' என்று யோசித்தாள் ராதா, விஜயைக் குழப்பத்தில் ஆழ்த்திய கோப்பைப் புரட்டியவாறு. 'உங்க அப்பா இந்தக் கோப்பைச் சேகரித்து வச்சிருக்கார்ன்னா, ஏதோவொரு காரணம் இருக்கும்.'

விஜய் தோளைக் குலுக்கினான். 'நான் அதப்பத்தித்தான் யோசிக்கிட்டு இருக்கேன். ஆனால் என்ன காரணம்ன்னு எனக்குத் தோணவே மாட்டேங்குது.'

'இது என்ன?' என்று அவள், குறியீடுகள் நிறைந்த ஓர் ஒற்றைக் காகிதத்தைச் சுட்டிக்காட்டினாள். அவள் குறியீடுகளை ஆழமாகப் பார்த்தாள். 'கிரேக்க எழுத்துக்கள் மாதிரி தெரியது. கையால் எழுதன மாதிரி இருக்கு. இதுதான் உங்க அப்பாவோட கையெழுத்தா?'

'எனக்குத் தெரியாது,' என்றான் விஜய். 'அவரோட கையெழுத்து எனக்கு நினைவில் இல்லை. யோசித்துப் பாத்தா, அவரப்பத்தின ஞாபகம் எனக்கு நிறைய இல்ல,' அவன் தலையாட்டினான். 'நான் அவர்கூட நிறைய நேரம் செலவழிச்சதில்ல. அவரு இங்கதான இருக்கப்போறாரு; அதனால அவருகூட வெளியே போறதுக்கு நிறைய நேரம் இருக்கும்ன்னு நினச்சேன். அதனால பக்கத்துப் பூங்காக்கள்ல போய் நண்பர்களோட கிரிக்கெட், ஃபுட்பால்ன்னு விளையாடுறதில நேரத்த செலவழிச்சேன். ஆனால் நடந்தது என்னன்னா, போதுமான அளவுக்கு எனக்கு நேரமில்லாமல் போச்சு,' என்று விஜய் அமைதியானான். ராதா தன் கையை அவனது கையில் வைத்துக்கொண்டாள். அவன் அவள் கையை அழுத்தினான், அவள் தன்னருகே இருக்கிறாள் என்ற நன்றியுணர்வோடு.

ஒரு காகித்தை எடுத்து ஆராய்ந்தவண்ணம் அவள் சொன்னாள்: 'ஏதோ ஒரு பட்டியல் இருக்கே. அட்டவணை மாதிரி இருக்கு.'

விஜய் அந்தக் காகித்தை கூர்ந்து பார்த்தான். 'என்னன்னு சொல்றேன். இந்த பட்டியலுக்கும், கோப்புக்கும் ஏதாவது தொடர்பு இருக்குதான்னு பார்ப்போம். பார்ப்போமா?'

ராதா தலையசைத்தாள். விநோதமாக இருக்கிறது. ஒருவேளை ஒரு முக்கியத்துவம் கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதை விஜய் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருப்பதை அவள் புரிந்துகொண்டாள். கோப்பிலிருந்து அட்டவணைக் காகிதத்தை வெளியே எடுத்தாள். விஜய் கோப்பில் இருக்கும் காகிதங்களை வரிசையாகச் சொல்லச்சொல்ல, அவள் அட்டவணையைச் சரிபார்த்தாள்.

அது சிரமான வேலையாக இருந்தது. சரியான பொருத்தங்கள் என்று ஏதுவுமில்லை. பெரும்பாலும் அட்டவணையில் சொல்லப்பட்ட காகிதங்களை அவர்களால் அடையாளம் காணமுடிந்தது. ஒருசில காகிதங்களை அவர்களால் ஊகம்தான் பண்ணமுடிந்தது.

'அட்டவணையில் சொல்லப்பட்ட மூன்று விசயங்கள் கோப்பில் இல்ல,' என்று ராதா இறுதியாகச் சொன்னாள். அவர்கள் கோப்பை முழுமையாகச் சோதித்துவிட்டார்கள். அவள் வரிசையாகச் சொன்னாள்: '*KS*-1, *KS*-2,' என்று அட்டவணையை அவள் வாசித்தாள். 'இந்த மூன்றாவது ஐட்டம்.' அதன் பெயரைப் புரிந்துகொள்ள அவள் முயன்றாள். அது ஓர் ஒற்றைக் குறியீடாக இருந்தது. 'இது என்ன... '*W*'?'

விஜய் குறியீட்டைப் புரிந்துகொள்ள முயன்றான். 'இது '*W*' மாதிரி தெரியது. ஆனால் ரொம்ப அலைமாதிரி தெரியது. இங்க பாரு. நேர்கோடுகளே இல்ல.' ஏதோவொன்று அவன் ஞாபகத்தைக் கிளறியது. உடனே அவன் நிமிர்ந்தான்.

'என்ன ஆச்சு?' என்று கேட்டாள் ராதா, அவனது தோரணையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்து.

'முன்னாடி தொலைந்துபோன ஒரு ஆவணத்த நான் பார்த்திருக்கேன்னு நினைக்கிறேன்,' என்று விஜய் கண்களைக் குறுக்கிக்கொண்டு ஞாபகத்தில் கொண்டுவர முனைந்தான். 'எங்கேயோ '*KS*'ன்னு பாத்ததாக ஞாபகம்.' அவன் எழுந்தான். கடந்த இரண்டு வாரங்களாக தான் ஆராய்ந்த பெட்டிகளைத் திறந்து அதிலிருந்த ஆவணங்களைப் படிக்க ஆரம்பித்தான்.' 'நான் இத மறுபடியும் படிக்க வேண்டும்,' என்று சிந்தித்தான்.

'நான் உனக்கு உதவிபண்றேன்,' என்று ராதா ஒரு பெட்டியை

தன்பக்கம் இழுத்து அதிலிருந்தவற்றை வெளியே எடுத்துப் போட்டாள்.

விஜய் அவளைப்பார்த்துப் புன்னகைத்தான். இன்னொரு பெட்டியை எடுத்து ஆராய்ந்தான். இதுதான் ராதாவிடம் அவனுக்குப் பிடித்தது. அவளிடம் அலட்சியமான போக்கு இருந்தாலும், அலைஸின் இருப்பால் அவள் மனம் சலனப்பட்டிருந்தது என்று அவனுக்குத் தெரியும். ஆனாலும் அதை அவள் உதறிவிட்டு அவனுக்கு உதவ தயாராக இருக்கிறாள். அவளது மனபலத்தையும், நம்பிக்கையும் தவிர்த்து, அவளிடம் அவன் ரசித்த விஷயம் இதுதான். ஒரு கணநேரத்து அவகாசத்தில் தன் சொந்த தேவைகளையும், வேலைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அவள் எப்போதும் தன் நண்பர்களுக்காகவும், குடும்பத்திற்காகவும் உதவிசெய்ய ஓடிவருவாள். தானும் அவள் மாதிரியே இருக்க வேண்டும் என்று அவன் பிரியப்பட்டான். அவன் மிகவும் உள்ளுடுங்கி இருப்பவன்; தனது சொந்த அந்தரங்க உலகத்தில் சஞ்சரிப்பவன். திடீரென்று அவன் சிந்தனைகள் அலைஸிடம் சென்றன. *MIT*யில் படித்துக்கொண்டிருந்தபோது அலைஸ் ஏன் அவன் உறவை முறித்தாள் என்று அவனுக்குத் தெரியும். அந்த முறிவுக்குப் பின்னர் அவன் அதைப்பற்றி மிகவும் துயரடைந்தான். என்ன தவறு என்பதைக் கண்டுபிடிக்க முயன்றான். இறுதியில் அவனுக்குப் புரிந்தது. அவன் ஒருபோதும் அவளிடம் மனந்திறந்தது கிடையாது. அவன் எப்போதும் வாய்மூடியாகவும், சோகமாகவும் இருந்தான்; அதிலும் அவன் பெற்றோர்கள் இறந்தபின்னர், அவன் இன்னும் ஆழமாக தனக்குள்ளே கூடுகட்டி அதில் குடியிருந்தான். தனக்கு நேர்ந்த அவலத்தை மறப்பதற்கு அவனுக்கு அதுதான் சரியான வழியாக இருந்தது. தன்னைச் சுற்றி பலமான சுவர்களைக் கட்டிவைத்துக் கொண்டான். அவனது கனவாக இருந்த திட்டம்தான் எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக இருந்தது அவனுக்கு. அலைஸைச் சந்தித்தபோது, நிலைமை மாறும்போல தோன்றியது. ஆனால் அவர்களுக்கு இடையில் நின்ற சுவர்களை அவனால் உடைத்தெறிய முடியவில்லை.

அவள் அவனைவிட்டு விலகி வெளியேறிய பாணியை அவனால் நீண்டகாலத்திற்கு மன்னிக்க முடியவில்லை. எந்த விவாதமும் இல்லை; எந்த விளக்கமும் இல்லை; அவன் தன்னைத் திருத்திக்கொள்ள எந்த வாய்ப்பும் இல்லை. அவன் தன் தவறுகளை உணரக்கூட சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. அவனிடம் கசப்புணர்வு மிஞ்சியிருந்தது. அவள் மீது கோபமாக இருந்தான். அந்த நேரத்தில் அவனது தவறு என்ன என்று அவள் விளக்கியிருந்தாலும் அது ஒன்றும் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்காது என்று அவனுக்குப் பிற்காலத்தில்தான் புரிந்தது.

அவன் அதற்குத் தயாராக இருந்திருக்கவில்லை. உறவுமுறிவுக்குப் பின் சகஜமாவதற்கு அவனுக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தன. அதற்குப்பின், வேறெந்த உறவிலும் ஈடுபடாமல் அவன் கவனமாக இருந்தான். பாதிகாரணம் அவனது வேலைப்பளு அவனுக்கு நேரம் கொடுக்கவில்லை; மீதிகாரணம் எந்த உறவுக்கும் அவனால் தன்னை முழுமையாக ஒப்படைக்க முடியாது. அப்போதுதான் அவன் ராதாவைச் சந்தித்தான். அவனது மாமாவின் கொலைக்குப் பின்னர், அவர்களின் காதல்நளினச் செயல்களின்போது அவர்களுடைய நட்பு காதலாக பூத்தது, ஒரு வருடத்திற்கு முன்பு. எப்படியோ எல்லாம் நல்லபடியாகப் போனது. இப்போது அவன் சந்தோசமாக இருக்கிறான். திருப்தியோடு. நல்ல உறவுக்கு ராதாவை விட ஒரு சிறந்த நபரை அவனால் தேடிக்கண்டுபிடிக்க முடியாது.

'இதோ இங்கே!' என்று வந்த ராதாவின் குரல், விஜய்யின் சிந்தனைக்கடலின் மீது மிதந்தது. அவள் என்ன கண்டுபிடித்திருக்கிறாள் என்பதைக் காண விஜய் வந்தான்.

ராதா ஒரு மெலிந்த கார்டுபோர்டு ஃபைலைப் பிடித்துக்கொண்டிருந்தாள்; அதில் காகிதக்கற்றைகள் ஒரு ரிப்பன் போட்டு கட்டப்பட்டிருந்தன. அவை அடிக்கடி கைப்பட்டது போல தேய்மானத்தில் இருந்தன. '*KS*-1 என்று அவள் அறிவித்தாள்.

விஜய் பிரகாசமானான். 'அருமை. உள்ள என்ன இருக்குதுன்னு பார்ப்போம்.'

'கையெழுத்துக் குறிப்பேட்டின் ஃபோட்டோ நகல் மாதிரி தெரியது,' என்ற ராதா கோப்பைத்திறந்து அதிலிருந்தவற்றை ஆராய ஆரம்பித்தாள். 'சுவாரஸ்யமா இருக்கு உங்க அப்பா ஒரு சரித்திர ஆராய்ச்சியாளர், இல்லியா?'

விஜய் தலையசைத்தான்.

'இந்த மாதிரி சேகரிக்கற அளவுக்கு அவரு தன் வேலையில ரொம்ப ஈடுபாட்டோடு இருந்திருக்கணும். இந்தக் குறிப்பேடு, மாவீரன் அலெக்ஸாண்டர் காலத்து குறிப்பேட்டின் மொழிபெயர்க்கப்பட்ட நகல்.'

விஜயின் கைப்பேசி ஒலித்தது. காலின். இம்ரான் வந்திருக்கிறார்.

'அதுக்குள்ள நடுப்பகல் ஆயிடுச்சா?' என்று ராதா தன் கடிகாரத்தைப் பார்த்து அவனைப்பார்த்து பல்லிளித்தாள். 'வேடிக்கையா இருக்கும் போது நேரங்காலம் பறக்குது.' அவள் குறிப்பேட்டை விஜய் நோக்கி ஆட்டினாள். 'இது சுவாரஸ்யமான விஷயம். முதல்

பக்கத்தின்படி, ஒரு பழைய குறிப்பேட்டின் மொழிபெயர்ப்பு இது. யாரோ ஒருத்தனுக்குச் சொந்தம். அவன்...' என்று நிறுத்திவிட்டு அவள் குறிப்பேட்டைப் பார்த்தாள். 'ஆங்... யூமனியஸ். அவன்தான் அசல் குறிப்பேட்டை எழுதியவன்; அதை லாரன்ஸ் ஃபுல்லர்ன்னு ஒருத்தன் ஆங்கிலத்தில மொழிபெயர்த்திருக்கான்.'

விஜய் அவளிடமிருந்து அதை வாங்கி புரட்டிப்பார்த்தான். இதைப் பத்திரமாக அவன் அப்பா வைத்திருக்கிறார். ஏன் என்று தெரிந்தாக வேண்டும். குறிப்பேட்டில் சொல்லப் பட்டிருந்த ஒரு பெயர் அவனது கவனத்தை ஈர்த்தது. அதை அவன் ராதாவிடம் காட்டினான். அவள் குறிப்பேட்டை அவனிடமிருந்து வாங்கினாள்; அவள் கண்கள் ஓர் உற்சாக உணர்வில் மிளிர்ந்தன.

17

பணிப்படை சந்திக்கிறது

அவர்கள் கீழிறங்கி வந்தார்கள். ராதா அந்தக் குறிப்பேட்டைக் கெட்டியாகப் பிடித்திருந்தாள். இம்ரான் போனபின்பு அதைப் படிக்கலாம் என்று அவள் திட்டமிட்டாள்.

பத்துநிமிடங்கழித்து, விஜய், ராதா, காலின் மூவரும் படிப்பறையில் கண்ணாடி காஃபி மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். அவர் அறையின் கதவை இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு அவர்களோடு சேர்ந்தபோது முகத்தில் கவலை தெரிந்தது. அவர்கள் சந்தித்தபோது அவர் சொன்ன வணக்கங்கள் கூட அடக்கமாக இருந்தன.

'சரி,' என்று இம்ரான் ஆரம்பித்தார். 'பணிப்படைக்கு முதல் வழக்கு வந்திருக்கு. சிந்தனைக்குழு உறுப்பினர்களான உங்களுக்கு சேதி சொல்றது அவசியம். அதனாலதான் நான் இங்கிருக்கேன். பேட்டர்சன்னோட தொடர்பிலதான் நான் இருக்கேன். அவரு அமெரிக்காவில இருக்கிற அவரோட குழு ஆட்களுக்கு விசயத்த சொல்வாரு.'

அவர் தயங்கினார். 'நம்ம கிட்ட சாத்தியமான ஓர் உயிரியல் தீவிரவாத வழக்கு இருக்கு. ரெண்டு ராத்திரிக்கு முன்னாடி, எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்திச்சி, என்னோட பால்யகால நண்பர் அன்வரிடமிருந்து. உதவிகேட்டு வந்திச்சி. டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸ்ன்னு ஒரு அமெரிக்கா மல்டிநேசனல் கம்பெனி இருக்கு. அதுக்கு இந்தியாவில நிறைய ஆராய்ச்சி மையங்கள் இருக்கு. அது நடத்துற மருத்துவ பரிசோதனைகள்ல ஒரு தன்னார்வலராக அன்வர் ஐந்து வருசத்துக்கு முந்தி சேர்ந்திருந்தாருன்னு அந்த நேரத்தில எனக்குத் தெரியாது.' ஆர்யன் ஆய்வுக்கூடங்கள் நடத்திவந்த மையத்தில் பிணங்களைக் கண்டுபிடித்த அந்த இரவின் நிகழ்வுகளை அவர் விவரித்தார்.

'ஐ.டி ஆய்வுக் கூடத்தில கண்டுபிடிச்ச ஒரு உடல் அன்வருடையது,' என்று அவர் தொடர்ந்தார். 'அடையாளம் தெரியாத அளவுக்கு அது கருகிப்போயிருந்தது. ஆனால் மரபணுப்பரிசோதனை மூலம் அதனோட அடையாளத்தைக் கண்டுபிடிச்சோம்.' அவர் சற்று இடைவெளிவிட்டார். நண்பனின் மரணம் அவரை ஆழமாகப் பாதித்திருந்தது. 'அன்வர் எப்படியோ ஆய்வுக்கூடத்தில திருட்டுத்தனமாக நுழைஞ்சி அங்கிருந்து மின்னஞ்சல் அனுப்பியிருக்காரு; அப்படித்தான் தோணுது. அவர் கண்டுபிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கணும். அவருடைய தலையில பட்ட குண்டால அவர் செத்திட்டாருன்னு பிரேதப் பரிசோதன அறிக்கை சொல்லுது. ரொம்ப கிட்டக்க வந்து சுட்டுருக்காங்க. உளவுத்துறை அதிகாரிக்கு மின்னஞ்சல் போனதுங்றதைத் தெரிஞ்சிக்கிட்டு, அவர்கள் அங்கிருந்த எல்லோரையும் கொன்னுட்டு அந்த இடத்தையும் எரிச்சி, எங்க கைகள்ல கிடைக்கக் கூடாதுங்கறதுக்காக சாட்சிகள அழிச்சிட்டாங்க.'

'இந்த மருத்துவ பரிசோதனைகள் ஒரு புது உயிரியல் ஆயுதத்தைச் சோதிக்கறதுக்காக நடந்திச்ச்சா?' என்று ராதா கேட்டாள். 'இதப்பத்தி டைட்டன் என்ன சொல்லுது?'

'அப்படித்தான் நாங்க சந்தேகப்படுறோம்,' என்று பதில்சொன்னார் இம்ரான். 'ஆனா டைட்டன் தங்களோட பரிசோதனைகள் சட்டபூர்வமானதுன்னும், இந்திய மருந்து கட்டுப்பாட்டுக் கழகத்தின் ஒப்புதல் பெற்றதுன்னும் சொல்றாங்க. இந்தியாவில் உள்ள கிளிக்னிக்கல் ட்ரையல்ஸ் ரிஜிஸ்ட்ரியில் போய் நாங்க விசாரணை செஞ்சோம். அதிலதான் டைட்டன் பல பரிசோதனைகள பதிவுசெஞ்சிருக்கு. பேட்டர்சனும் அவரது குழுவும் அமெரிக்காவிலுள்ள உயர்நிலை மட்டத்து டைட்டன் நிர்வாகத்திடம் பேசிட்டாங்க. குழுத்தலைவர் குர்ட் வாலஸ்கிட்ட கூட பேசிட்டாங்க. டைட்டனோட பெரும்பாலான பங்குகள் அவர்கிட்டதான் இருக்கு.'

அந்தப் பெயர் உடனே மனதில் பதிவானது.

'அலைஸின் ஆராய்ச்சிக்கு நிதிஉதவி செய்த ஆள்,' என்று விஜய் ஆச்சரியப்பட்டுச் சொன்னான்.

'அலைஸ் யாரு?' என்று இம்ரான் உடனே கேட்டார். 'அவளுக்கு இதில என்ன தொடர்பு?'

'அமெரிக்காவில இருக்கிற என்னோட தோழி அவள். இன்னைக்கு காலையிலதான் அவள் இங்க திடீர்ன்னு வந்தா.' அவன் அலைஸின்

கதையைச் சுருக்கமாகச் சொன்னான். அவள் கொடுத்திருந்த வாலஸ் பற்றிய விவரங்களையும் சேர்த்தே சொன்னான்.

விஜய் பேசிமுடித்தவுடன் இம்ரான் வாய்திறந்தார். 'உன் தோழிக்கு நிச்சயமா மோசமான நேரந்தான். அவள் அங்கிருந்து தப்பிச்சு வந்தது எனக்கு சந்தோசம். இரண்டு விசயத்திலும் குர்ட் வாலஸ் பொதுவான காரணியா இருக்குறது சுவாரஸ்யமான அகஸ்மாத்தான நிகழ்வு. நாம உயிரியல் தீவிரவாதத்தின் சாத்தியமான வழக்கை புலனாய்வு செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில அவள் இங்கு வந்தது இன்னும் சுவாரஸ்யமான அகஸ்மாத்தான நிகழ்வு.'

இம்ரான் என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதை விஜய் புரிந்துகொண்டான். 'நான் அவளுக்கு உத்தரவாதம் கொடுக்கமுடியும்,' என்று அவன் மறுப்பு தெரிவித்தான். 'எனக்கு அவள தெரியும்...' என்று அவன் தடுமாறினான். ராதாவின் மனம் காயப்படாதவாறு, அலைஸ்க்கும் தனக்குமான உறவைப்பற்றி விவரிக்க அவன் போராடினான்.

இம்ரான் விஜயைக் கூர்மையாகப் பார்த்தார். 'உனக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் ரொம்ப விநோதமா இருக்கு. அவள் குர்ட் வாலஸோட தொடர்பில் இருந்தாள்ங்றதும், அவள் இங்கு வந்த நேரமும், நம்ம வழக்கில இருக்கிற உண்மைகளோட அகஸ்மாத்தாய் ஒத்துப்போகுது. ஒருவேளை இது வெறும் தற்செயலா இருக்கலாம். ஆனால் என்னால் எதையும் விட்டுவைக்க முடியாது, நமக்கு நிச்சயமா எதுவும் தெரிகிற வரை.'

தன் அச்சத்தை மூடிமறைக்க முயன்று விஜய் அடங்கிப்போனான்.

இம்ரான் மேலும் விளக்கலானார். 'வாலஸும், டைட்டன் கம்பெனி நிர்வாகத்தினரும், ஆர்யனின் உரிமையாளர் சுமன் பாவாவைச் சுட்டிக்காட்டி இருக்காங்க. தீவிபத்துக்கப்புறம், அவர் ஆளையே காணோம். அவரு போயிருக்கக் கூடிய இடத்தையெல்லாம் தேடிப்பார்த்திட்டோம். அவர காணோம். பாவாவால நாங்க முட்டுச்சந்துக்குப் போயிட்டோம். ஆனா அங்கே ஏதோவொண்ணு நடந்தது. 'ஹார்டு ட்ரைவ்'கள் நெருப்பில அழிஞ்சிப்போச்சி. ஆனா ரொம்ப நவீனமான ஐடி சோதனைக்கூடம் அப்படியே இருக்கு. அங்கிருந்துதான் நிறைய விவரங்கள நாங்க சேகரிச்சோம். மருத்துவ கோப்புகள் கிடைச்சிருக்கு; பரிசோதனைகள் பத்திய முழுவிவரங்களும் அதில இருக்கு. நிறைய விஷயம் அதில கிடைச்சுது. உடற்கூறு ஆய்வு நடத்தி மாதிரிகள டில்லியில இருக்கிற நோய்த்தடுப்பு தேசிய

மையத்துக்கும், பூனாவில இருக்கிற தேசிய வைராலாஜி கழகத்துக்கும் அனுப்பிவச்சோம்; அங்கிருந்து வந்த அறிக்கைகள் சரிதான்னு, வாஷிங்டன் நோய்த்தடுப்பு மையம் ஆமோதிச்சிடுச்சி. இன்னைக்கு காலை தான் எனக்கு அறிக்கைகள் வந்திச்சி.'

நேற்றுமாலை பேட்டர்சனோடும், ராய்சனோடும் தான்கொண்ட உரையாடலைப் பற்றி அவர் அவர்களுக்குச் சொன்னார். 'எங்க ஊகம் இதுதான். அந்த ஆளு பாவா மருத்துவப் பரிசோதனைங்ற பேர்ல வேறு ஏதோவொண்ணு பண்ணிக்கிட்டு இருந்திருக்கான். அமெரிக்காவில இருந்து யாரும் இதில ஈடுபடலைன்னு சொல்லமுடியாது. வாலஸ் உட்பட. ஆனா நமக்கு ஆதாரங்கள் இல்ல.'

அவர் பேசிமுடித்தபின்பு அங்கே மௌனம் நிலவியது.

'அடுத்த நடவடிக்கை என்ன?' என்று காலின் கேட்டான்.

'நாங்க என்ன உதவி செய்யனும்?' என்று விஜய் தலையிட்டுக் கேட்டான்.

'இப்போதைக்கு ஒன்றும் செய்றதுக்கு இல்ல,' என்று இம்ரான் ஒத்துக்கொண்டார். 'உங்களுக்கு எல்லா விவரங்களும் தெரிஞ்சாகணும். அப்பத்தான் ஒரு புதிய கோணத்தில உங்களால யோசிக்கமுடியும். அத வச்சி மேற்கொண்டு நாம ஏதாவது செய்யலாம். இப்போதைக்கு, பணிப்படையில இருக்கிற களப்பணியாளர்கள் பாவாவைத் தேடிக்கிட்டும், மருத்துவ பரிசோதனை சம்பந்தமா ஏதாவது துப்பு கிடைக்குமான்னும் திரிஞ்சிக்கிட்டு இருக்காங்க. நாலு, அஞ்சி வருசத்துக்கு முன்னாடி வந்த மருத்துவப் பரிசோதனை விளம்பரங்களயும் தேடிக்கிட்டு இருக்காங்க; இந்தத் துறையில இருக்கிற ஆட்கள் கிட்டேயும் பேசிக்கிட்டு இருக்காங்க. இந்தியாவில இருக்கிற டைட்டன் தலைவர் டாக்டர் ஸ்வரூப் வர்மாவை நான் பாக்கப் போறேன். தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் வருண் சக்ஸேனாவையும் சந்திக்கப் போறேன்.'

'நாங்க அதுக்கு உதவி செய்றோம்,' என்று ராதா முன்வந்தாள். 'நீங்க விரும்பினா, தலைமை மருத்துவ அதிகாரியை நான் சந்திக்கிறதில எனக்கு ஆட்சேபனை இல்ல.'

'நன்றி,' என்றார் இம்ரான். 'ஆனா அது ஒரு களப்பணி. படைப்பணிக்குழு உருவாக்கப்பட்டதக்கப்புறம், உங்களுக்கு களப்பயிற்சி கொடுக்கப்பட்டதுன்னு எனக்குத் தெரியும். ஆனா உங்களுக்கு களப்பணி அனுபவம் இல்லை. உயிரியல் தீவிரவாதத்தில

ஈடுபட்ட யாரோ ஒருவரை நீங்க சந்தித்துவிட்டா, அது ஆபத்தில முடியும்.'

'ஏதாவது ஒரு இடத்தில நாங்க ஆரம்பிக்காவிட்டால், எங்களுக்கு களப்பணி அனுபவமே கிடைக்காது,' என்று ராதா பிடிவாதம் பிடித்தாள். 'நீங்க அந்த மருத்துவ அதிகாரியை சந்திக்கும்போது நானும் கூட வந்தா என்ன? ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நீங்க கூட இருப்பீங்களே.'

'நீங்க ஒத்துக்கணும், இம்ரான்,' என்று விஜய் பல்லிளித்தான். 'அவள் ஒரு வேட்டைநாய் மாதிரி. பின்வாங்க மாட்டாள்.'

ராதா அவன் முதுகை லேசாகத் தட்டி முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டாள். 'இது ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு. வாங்க, இம்ரான். நாம இதை பண்ணுவோம்.'

'சரி,' என்று இம்ரான் கைகளை நீட்டினார். 'நல்லது. ஒரு நேர்காணல்ல என்ன பிரச்சினை வந்திட போவுது? சாயங்காலம் 4.30-க்கு கம்பெனி நிர்வாகத் தலைவரை நான் சந்திக்கிறேன். அதே நேரத்தில, என்னுடைய ஆட்கள் தலைமை மருத்துவ அதிகாரியைச் சந்திக்கிறதுக்கும் ஏற்பாடு செய்றேன்.'

அவர் தன் கைப்பேசியை எடுத்தபோது, அது ஒலித்தது. வந்த அழைப்பை ஏற்று அவர் பேசினார். அவர் முகம் கறுத்தது.

'கெட்ட செய்தியா?' என்று விஜய் ஊகித்துக் கேட்டான்.

'பாவாவின் உடல் இப்பத்தான் கிடைச்சிது. ஆக்ரா விரைவுச்சாலயில கார் விபத்து. பிரேக் கட்டைகள் பிடுங்கப் பட்டிருக்கு ரொம்ப வேகமா அவர் கார் ஓட்டியிருந்துக்கணும்,' என்று சொல்லிவிட்டு அவர் பெருமூச்செறிந்தார். நம்மோட கடைசி தடயமும் போயிடுச்சி. இந்த விளையாட்டில அவர் வெறும் பகடைக்காயா இருந்திருக்கலாம்ன்னு தோணுது. டைட்டன்ல யாரோ ஒருத்தன் இதயெல்லாம் நடத்திட்டு இருக்கான். அது யாருன்னு கண்டுபிடிக்க நமக்கு வழியே இல்ல.'

18

குர்கான்

குர்கானில் வெஸ்டின் ஓட்டலில் ஆடம்பரமான அறையொன்றில் கைநாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் தட்டையான கணினித்திரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் பீட்டர் கூப்பர். அறையின் மூலையில் உபகரணங்கள் நிறைந்த ஓர் அடுக்கிலிருந்து கேபிள்களின் குவியல்கள் பாம்பாக நெளிந்துகிடந்தன; வரிசையாக இருந்த சர்வர்களோடு இணைக்கப் பட்டிருந்தன.

கூப்பர்க்கு கணினிகள் பற்றி ஒன்றும் தெரியாது. அவரது 52 ஆண்டுகளில் அவர் ஒருபோதும் தொழில்நுட்பத்தோடு சௌகரியமாக உணர்ந்ததில்லை. அவர் அமைப்பில் 21 வயதில் சேர்ந்தார். துப்பாக்கிச் சுடுபவனாக; துப்பாக்கியின் தொலைநோக்குக் காட்சியில் தெரியும் எந்த அசையும் இலக்கையும் அனாயசமாகச் சுட்டுத்தள்ளுவதில் மகாகெட்டிக்காரன். மேலும் மனச்சித்திரமாகப் பதியும் ஞாபகச்சக்தியும் அவனிடத்தில் உண்டு. இந்த இரண்டு திறமைகளும் இணைந்து அவனை ஒரு கூலிக்கொலைகாரனாய் மாற்றின; மனசாட்சி உறுத்தல் இல்லாமல் கொலைசெய்யும் திறமையால் அவனது இயல்பான திறமைகளின் வீரியம் அதிகமானது.

அவன் கொலை செய்த மனிதர்களின் எண்ணிக்கையை அவன் வைத்துக் கொள்வதில்லை: ஆண்கள், பெண்கள், குழந்தைகள். அவனுக்கு அவர்கள் வெறும் புள்ளிவிவரங்கள்தான். மனிதர்கள் இல்லை. அழிக்கப்பட வேண்டிய இலக்குகள். தன் வேலையை அவன் கனகச்சிதமாக செய்வான். தன் துல்லியத்தனத்தில் அவனுக்கு ஒரு கர்வம் உண்டு. ஒருபோதும் இலக்கு தப்பியதில்லை. துப்பாக்கியின் குதிரையைப் பற்றி விரல் அழுத்தும்போது, அவன் தயங்கியதே இல்லை.

வருடம் செல்ல செல்ல அந்த அமைப்பில் அவன் அந்தஸ்தில் கூடிக்கொண்டே போனான். இப்போது அவனது வேலை அதிக

விவேகம் கொண்டதாகவும், குறைவான தந்திரங்கள் கொண்டதாகவும் ஆகிவிட்டது. அதற்கு அர்த்தம், கொலைசெய்யும் பணிகள் குறைந்துவிட்டன; வயதானபின்பும் கண்பார்வை குறையவே இல்லை என்றபோதும். இத்தனை ஆண்டுகளில் அவனது பாத்திரம் மாறியபோது, அவனது வெற்றிக்கு தொழில்நுட்பத்தின் பங்களிப்பு அதிகமானது. என்றாலும், அவன் அதைப் பின்பற்றவே இல்லை. அவனைப் பொறுத்தவரை, ஒரு விவேகியின் இறுதி ஆயுதம், அதாவது தொழில்நுட்பத்தின் அதிகபட்சத் தன்மை அவனது தலைக்குள் இருக்கிறது. அதுதான் அவனுக்குத் தேவை. மற்றவையெல்லாம் அப்புறந்தான்.

'நிலைமை என்ன?' என்று உபகரணங்கள் மேஜையருகே இருந்த, மீசைவைத்த, கறுப்பான வழுக்கைத்தலையனைப் பார்த்து அவன் கேட்டான். தொழில்நுட்பக் குழுவின் தலைவனான அவன் பெயர் கிருஷ்ணன். பந்தாவில்லாத தோற்றம் என்றாலும் தகவல் தொழில்நுட்பத்தில் அவன் கில்லாடி என்று கூப்பர் தெரிந்துவைத்திருந்தார்.

தெசலோனிக்கியில் போலீஸ் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தவுடன், கூப்பர் அடக்கிவாசிக்க முடிவுசெய்தான்; அலைஸைப் பின் தொடர்வதை விட அவள்போகும் பாதையைக் கவனிக்க தீர்மானித்தான். அவன் செய்வது ஒரு ரகசிய வேலை; அதனால் யாருடைய கவனமும் இதில் விழுவதை அவன் விரும்பவில்லை. அகழ்வாராய்ச்சிக் களத்து நிகழ்வுகள் பற்றிய செய்தி ஊடகங்களுக்குக் கசிந்துவிடாமல் இருக்க ஸ்டாவ்ரோஸ் ஆகவேண்டியதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அங்கே என்ன நடந்தது என்ற உண்மை யார்க்கும் தெரிந்திருக்கவில்லை. இந்த பணித்திட்டம் ரகசியமாகவே இருக்கும்.

அலைஸ் மட்டும் விடுபட்டுவிட்டாள். நடந்ததிற்கு எல்லாம் அவள் சாட்சியாக மட்டுமல்ல; இந்தப் பணித்திட்டம் எதை மையப்படுத்தி உருவானதோ அதுவும் கூட அவள் கையில் இருக்கிறது. அதை அவன் மீட்கவேண்டும்; அதே நேரம் தன்மீதும் பணித்திட்டத்தின் மீதும் யார் கவனமும் விழுந்துவிடக் கூடாது.

தெசலோனிக்கியில் அலைஸ் காணாமல் போனபோது, அவளை அவன் தேடினான். ஆனால் அவள் தேசத்தை விட்டே போய்விட்டாள் என்று பின்னர் உணர்ந்துகொண்டான். ஆனால் அவன் விட்டுவிடுபவன் அல்ல. அவ்வளவு சீக்கிரம் விட்டுவிடமாட்டான்; அதுவும் அவளது

பாஸ்போர்ட் அவள் தங்கியிருந்த ஓட்டல் அறையில் கிடக்கும்போது. தன் தொடர்புகள் மூலம் தெசலோனிக்கியில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தில் ஒரு ஆளைக் கண்டுபிடித்தான். அவள் கிரேக்கநாட்டுக்காரி; தனியாக வசிக்கும் ஒரு தாய். முதலில் ஒத்துழைக்க அவள் மறுத்தாள். ஆனால் கூப்பர் அவளது ஐந்து வயது மகளைக் கொண்டுபோனான். அதன்பின் அவள் எவ்வளவு வேகமாக அவனுக்கு தகவல்கள் கொடுத்தாள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. வாஷிங்டனிலிருந்து விஷேச ஆணைகள் வந்ததால், அலைஸ்க்குப் புதிய பாஸ்போர்ட் வழக்கத்திற்கு மீறிய வேகத்தோடு வழங்கப்பட்டது என்று அவன் கேள்விப்பட்டான். தாயும் மகளும் மறுநாள் காலை செய்தி ஏடுகளில் பிணமான நிழற்படங்களாக தோன்றினார்கள். அவர்கள் தொண்டைகள் அறுபட்டிருந்தன. அது அவனது பாணியல்ல; அவனது புதிய துணையாள் செய்த காரியம் அது; அவன் துப்பாக்கியை விட பிளேடு பயன்படுத்துவதில் சிறந்தவனாக இருந்தான்.

கூப்பரின் அடுத்த நிறுத்தம் கிரேக்க குடியேற்ற அலுவலகம். அங்கே அவனுக்கு கூலிக்கு வேலைபார்க்கும் ஆட்களின் தொடர்புப் பின்னல் இருந்தது. அவர்களிடமிருந்து அவன் தெரிந்துகொண்டான், அலைஸ் இந்தியாவிலுள்ள புது டில்லிக்குத் தனியார் ஜெட்மூலம் போய்விட்டாள் என்று.

ஸ்டாவ்ரோஸ் கிரீஸில் இருந்து மிச்ச வேலையைச் சுத்தமா முடிக்கட்டும் என்று விட்டுவிட்டு, அமைப்பு கொடுத்த தனியார் ஜெட் மூலம் புது டில்லிக்குப் பறந்தான். இந்தியாவுக்குள் வந்தவுடன், உள்ளூர் பிரிவைத் தொடர்புகொண்டு, குர்கானில் தன் தலைமையகத்தை நிறுவினான். இப்போது அவனுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் அலைஸ் எங்கே மறைந்திருக்கிறாள் என்பதும், யார்கூட இருக்கிறாள் என்பதும்தான். விரும்பியதை அடைவதற்கு அவனுக்கு அதிகநேரம் ஆகாது; அவனது வேலை சுளுவாக தொடரும். அலைஸ் வெறும் சின்ன இடைஞ்சல்தான்; பிக்னிக்கைக் கெடுத்த ஓர் எறும்பு. அதை நசுக்கி எறியும் நேரம் வந்துவிட்டது.

கிருஷ்ணன் தன் சேரைச் சுழற்றி கூப்பரை நோக்கினான். 'ஜவுன்கார் என்ற இடத்தில ஒரு கோட்டையில அவ இருக்கா. 130 கிலோமீட்டர் தூரம், புது டில்லியிலிருந்து. அவள் கூட இருக்கும் ஆட்களும் தெரிஞ்சிடுச்சி,' என்று சொல்லிவிட்டு நிறுத்தினான். 'நல்ல செய்தி இல்லை.'

கூப்பர் புருவம் உயர்த்தினான்.

'ரெண்டு அமெரிக்கக் குடிமகன்கள் அவகூட இருக்கானுக. ஒருத்தன் இந்தியா வம்சாவளியைச் சேர்ந்த விஜய் சிங். இன்னொருத்தன் காலின் பேக்கர். ஒரு பொண்ணும் இருக்கா. அவ இந்திய அணுச்சக்தி துறையில் வேலைசெய்பவள்; அவ பேரு ராதா சுக்லா. இந்திய உளவுத்துறையின் சிறப்பு இயக்குநரும் இருக்கார். அவர் இம்ரான் கிட்வாய்.'

கூப்பர் முறைத்தான். இது கொஞ்சம் பெரிய இடைஞ்சல் தான். இந்திய உளவுத்துறைகளும் இதில ஈடுபட்டிருக்கு. கிருஷ்ணன் சொல்வது சரி. இது கெட்ட செய்திதான்.

'ஐபி ஆள் அங்க என்ன பண்றான்,' என்று அவன் கேட்டான். 'அவங்க பேச்சை ஒட்டு கேட்கமுடியுமா?'

'நம்ம குழு தயாராகத்தான் இருக்கு. ஆனா அவங்க இருக்கிற அறை ஒட்டுக்கேட்க முடியாதபடி மின்னமைப்பு பண்ணப்பட்டிருக்கு. ஒலித்தொடர்பு இல்ல. ஒளித்தொடர்புக்கு வசதியான இடமும் இல்ல. நாம இங்க கண்ணைக் கட்டிவிட்டது போல ஆயிட்டோம்,' என்று அவன் கூப்பரின் பார்வையை வெறித்தான். 'நாம கைப்பேசியை ஒட்டுக்கேட்கும் ஸ்டிங்ரேயை ஏற்பாடு செய்திருக்கணும். அவங்களோட பேச்சுக்கள ஒட்டுக்கேட்டு அவங்க என்ன செய்ய போறாங்கங்றத கண்டு பிடிச்சிரலாம்.'

கூப்பர் முறைத்தான். 'நாம இந்த வேலையில ரொம்ப அடக்கிவாசிக்கிறோம். இந்த நாட்டுக்குள்ள ஸ்டிங்ரேயைக் கொண்டுவருவதற்கு என்னவெல்லாம் செய்யணும்ன்னு தெரியுமா? அது சாத்தியம்தான்; ஆனா ரொம்ப ஆபத்து. நீதான் மேதையாச்சே. என்ன இருக்கோ அதவச்சு வேலைபாரு.'

அவன் வழிகளை யோசித்தான். இலக்கான மனிதர்கள் கோட்டைக்குள் ஒளிந்திருக்கிறார்கள் என்றால், துப்பாக்கிச் சூடு நடத்தாமல் கோட்டைக்குள்ளே நுழைய முடியாது. அது கவனத்தை ஈர்த்துவிடும்.

'நம்ம டீம்களை உஷாராய் இருக்கச் சொல்லு,' என்று அவன் ஆணையிட்டான். 'கோட்டையில இருக்கிற ஒவ்வொருவரையும் கவனித்தாகணும். அவங்க எங்கங்க இருக்காங்க; என்ன செய்றாங்க; எல்லாம் எனக்குத் தெரிஞ்சாகணும்.'

அவன் நாற்காலியில் சாய்ந்துகொண்டு கண்களை மூடினான். துப்பாக்கியின் குதிரையை அழுத்துவதற்கு சரியான வாய்ப்புக்காக காத்திருந்த ஆண்டுக்கணக்கான பயிற்சி அவனை பொறுமையாக

இருக்க வைத்தது. அவன் காத்திருப்பான். சரியான தருணம் வரும்வரை.

அது சீக்கிரமே வரும் என்று அவனுக்குத் தெரியும். அப்படித்தான் அவனுக்கு எப்போதும் நிகழ்ந்திருக்கிறது.

19

சுவாரஸ்யமான கண்டுபிடிப்பு

கோட்டையின் முதல் தளத்தில் இருந்த படிப்பறையில் விஜய் தன் மடிக்கணினித் திரையை கூர்ந்துநோக்கினான். இம்ரானும் ராதாவும் டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸ் சந்திப்புக்களுக்காக போனபின்பு, ராதா கண்டுபிடித்து வைத்திருந்த குறிப்பேட்டுப் பக்கங்களில் மூழ்கிப்போனான். அவ்வப்போது ஒரு சின்ன நோட்டில் குறிப்புகள் எழுதினான்.

குறிப்பேட்டை வாசித்தபின்பு, இணையத்தில் கடந்த அரைமணிநேரமாக தேடிக்கொண்டிருந்தான். தன் குறிப்புகளை மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டான். ஒரே ஒரு தடவை மட்டும் அவன் படிப்பறையை விட்டு வெளியேறி ஐந்தாவது தளத்து அறைக்கு ஓடினான். அங்கேதான் அவன் பெற்றோர்களின் உடமைகள் இருந்தன. முன்பு ராதாவும் அவனும் படித்திருந்த கோப்பை எடுத்துக்கொண்டு மீண்டும் படிப்பறைக்கு வந்தான்.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. 'ஹே இங்கேயே ஆணியடிச்சது போல இருந்திட்டியா? என்ன ஆச்சு?' என்று காலின் கதவைத் திறந்துகொண்டே உள்ளே வந்தான்.

விஜய் பல்லிளித்தான். காலினுக்கு ஆர்வம் தாங்காது என்று அவனுக்குத் தெரியும். விஜய் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதைக் காண அவன் இவ்வளவு நேரம் காத்திருந்தான் என்பது ஆச்சரியந்தான்.

காலின் அவனை முறைத்துப்பார்த்தான். 'இம்ரான் அலைஸைச் சந்திச்சது பற்றி நீ ஒண்ணுமே கேட்கலைங்றது அவளுக்கு கொஞ்சம் வருத்தம்.' அவர்கள் எல்லோருக்கும் சம்பவங்களை விளக்கிவிட்டு, இம்ரான் அலைஸோடு தனியாக படிப்பறையில் அரைமணிநேரம் பேசினார். ஆனால் விஜயின் மனதை அந்தக் குறிப்பேடுதான்

அரித்துக்கொண்டே இருந்தது. அதனால் இம்ரானும் ராதாவும் கிளம்பியவுடனே, அவன் படிப்பறையில் புகுந்துகொண்டு குறிப்பேட்டை வாசிக்க ஆரம்பித்தான்.

'அவள் பெரியவள்,' என்று விஜய் பல்லிளித்தான். 'என்னத்த கேட்க? மேலும், இம்ரான் நல்ல மனிதர். உளவுத்துறை ஆளாய் இருந்தாலும். எல்லாம் நல்ல படியாகத்தான் நடந்திருக்கும்னு எனக்கு நிச்சயமாகத் தெரியும்.'

காலின் தலையசைத்தான். 'அவரு அவகிட்ட அகழ்வாராய்ச்சி பத்தி நிறைய கேள்விகள் கேட்டார். வாலஸ் பத்தி, அவரோட அறக்கட்டள பத்தி, முந்தாநாள் ராத்திரி அவளுக்கு நடந்ததைப் பத்தி கேள்விமேல கேள்வி கேட்டார். ஸ்டாவ்ரோஸ் படத்தயும், பீட்டர் படத்தையும் தனக்கு வாட்ஸப் பண்ணச் சொன்னார். அவங்கள பத்தி ஏதாவது சேதி கிடைக்குமான்னு பாக்கிறார்.'

அவன் குறிப்பேட்டையும், விஜயின் குறிப்புகளையும் ஆர்வமாகப் பார்த்தான். 'நீ என்ன பண்ணிக்கிட்ருக்க?'

'நான் உங்கள எல்லாம் கூப்பிட்டு சொல்லலாம்னு இருந்தேன். உண்மையிலேயே ஒரு சுவாரஸ்யமான கண்டுபிடிப்பைச் செஞ்சிருக்கேன். இதப்பார்த்தான்னா, அலைஸ் உற்சாகமாயிடுவா. ஒரு ஆதிகாலத்து மர்மத்த நாம தீர்த்துவைக்க போறோம்.'

காலினின் முறைப்பு ஆழமானது. 'நான் இங்க வந்தது தப்பு,' என்று அவன் முணுமுணுத்தான். 'உன்ன தனியா விட்டிருக்கணும்.' எனினும் அவன் கண்ணில் ஒரு மினுமினுப்பு தென்பட்டது. 'இங்கேயே இரு. நான் போய் அலைஸையும், டாக்டர் சுக்லாவையும் கூட்டியாறேன்.'

அலைஸ் காத்திருந்தபோது, குறிப்பேட்டையும், மடிக்கணினியையும், ஐந்தாவது தளத்து அறையிலிருந்து கொண்டுவந்த கோப்பையும் மேஜையின் நடுவே வைத்தான். படிப்பறையின் அலமாரியில் பத்திரமாக வைத்திருந்த யானைத்தந்த கனசதுரத்தைக் கொண்ட சின்னப்பெட்டியையும் வெளியே எடுத்து மேஜைமீது வைத்தான்.

காலினோடும், சுக்லாவோடும் உள்ளே நுழைந்த அலைஸ் அவனை விசாரிப்பதுபோல பார்த்தாள்.

'அலைஸ்,' என்று ஆரம்பித்தான் விஜய். 'நீ இதை நம்ப மாட்டாய். ஆனால் இது உனக்கு ரொம்ப பிடிக்கும். இன்னைக்கு காலையில நீ ஒலிம்பியாஸ் பத்தி சொன்னபோது, இந்தப் பேரை நான் எங்கேயோ

கேட்டிருக்கேன்னு நினைச்சேன். ஆனால் எங்கேன்னு ஞாபகம் இல்லை. அப்புறம்தான் தெரிஞ்சுது; நான் சமீபத்திலதான் அதைப் படிச்சேன்னு. இங்க,' என்று சொல்லிவிட்டு அவன் குறிப்பேட்டை எடுத்தான். 'மசிடோனியாவில இருந்த யூமனியஸின் ரகசிய குறிப்பேடு இது.' அவன் அவளை எதிர்ப்பார்ப்போடு பார்த்தான்.

அலைஸ் பதிலுக்கு அவனைப் பார்த்து வெறித்தாள். விஜய் சும்மா நகைச்சுவைக்காகப் பேசுகிறானா இல்லையா என்று அவளுக்குத் தெரியவில்லை. 'ரகசிய குறிப்பேடு? யூமனியஸ்க்குச் சொந்தமானதா?' அவளால் அவநம்பிக்கையை தன் குரலிலிருந்து மறைக்கமுடியவில்லை. 'நீ சும்மா சொல்ற.'

விஜய் பல்லிளித்தான். குறிப்பேட்டைப் படித்தும், இணையத்தில் தேடியும், அவன் போதுமான அளவுக்கு கிரேக்க வரலாறு கற்றிருந்தான். அதனால் அவளிடமிருந்து இந்த எதிர்வினையைத்தான் அவன் எதிர்பார்த்திருந்தான்.

'நல்லது,' என்று சொல்லிவிட்டு தன் குறிப்புகளைப் பார்த்தான். 'நான் நிஜமாத்தான் சொல்றேன்னு இது உனக்குச் சொல்லும். அலெக்ஸாண்டர் சார்பாக, சாக்டியன் பாறைக்குப் பக்கத்தில இருந்த பாக்டிரியாவுக்கு காலிஸ்தெனிஸ் ரகசிய பயணம் போனார்ன்னு இந்தக் குறிப்பேடு சொல்லுது. இந்தியா மேல படையெடுத்தபோது, அலெக்ஸாண்டரும், யூமனியஸும் ஒரு ரகசிய வேலையா போன பயணத்தைப் பத்தியும் இது சொல்லுது.'

அலைஸ் அவனைக் குழப்பமாகப் பார்த்தாள். விஜய் எல்லாப் பெயர்களையும் சரியாகத்தான் சொல்கிறான். ஆனாலும் யூமனியஸ் ஒரு ரகசியக் குறிப்பேடு எழுதினார் என்பது மிகவும் சாத்தியமற்றதாக அவளுக்குத் தோன்றியது. அது அவளுக்கு முன்னாடி இருக்கிறது.

'நான் இதப் பார்க்கலாமா?' என்று அவள் உடனே கேட்டாள். விஜய் அவளிடம் குறிப்பேட்டைத் தந்தான்.

'ஒரு நிமிசம்,' என்று காலின் கைநீட்டினான். 'யூமனியஸ் யாரு? காலிஸ்தெனிஸ் யாரு? காலிஸ்தெனிக்ஸ்ன்னு உடற்பயிற்சிகள சொல்வோமே அதுமாதிரி பெயரால்ல இருக்கு.'

'காலிஸ்தெனிஸ் ஒரு கிரேக்க சரித்திர ஆசிரியன்; மாவீரன் அலெக்ஸாண்டர் ஆட்சியில் இருந்தவன்,' என்று அலைஸ் பதில் சொன்னாள், குறிப்பேட்டிலிருந்து கவனத்தை விலக்கிக்கொண்டு. 'கிரீஸ் பத்தியும், ஃபோசியன் போர்பத்தியும் விரிவான சரித்திரத்த

எழுதிய ஆசிரியர். ஆனா அவருக்கு பேர் வாங்கித்தந்தது 'அலெக்ஸாண்டரின் செயல்கள்' என்ற அவரோட புத்தகம்தான். அலெக்ஸாண்டர் வெற்றிகளின் வரலாற்றைச் சொல்லும் புத்தகம் அது. அதில அந்த மாவீரனை தெய்வநிலைக்குக் கொண்டுபோய் எழுதினார். அலெக்ஸாண்டர் ஜீயஸ் கடவுளின் மகன்னு சொல்லி அவரோட தெய்வீகப் பிறப்பைக் கதையாக்கிய சிருஷ்டிகர்த்தா காலிஸ்தெனிஸ். கிரேக்கநாடு முழுக்க அலெக்ஸாண்டர் பத்தி நிறைய கதைகள அவருதான் பரப்பிவிட்டார். சிவாங்ற இடத்தில தெய்வீக ஆருடம் சொல்லுபவரிடம் அலெக்ஸாண்டர் போனபோது அவரை ஜீயஸ்-அம்மானின் மகன்னு சொன்னாங்க. கிமு 332-ல நடந்தது. பாம்ஃபிலியாவில கடல் அலெக்ஸாண்டருக்கு வழிவிட்டது; இப்படி பல கதைகள். அந்த சரித்திர ஆசிரியன்தான் அலெக்ஸாண்டரைக் கடவுள்ன்னு கட்டமைத்தான்; ஆனால் அலெக்ஸாண்டர் தன்ன கடவுள்ன்னு சொன்னபோது அதை மறுதலித்ததால, அவன் கொல்லப்பட்டான்; பெரிய முரண்நகை இது.'

'வாவ்! அலெக்ஸாண்டர் தன்ன கடவுள்னு நினைச்சிக் கிட்டாருன்னு சொல்றீயா?' என்று காலின் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டான்.

'ஆமா,' என்று அலைஸ் அவனது ஆச்சரியத்தைப் பார்த்து புன்னகைத்தாள். 'கிமு 328-ல மத்திய ஆசியாவை ஜெயிச்சபிறகு, பால்க்ங்ற நகரத்தில் பாசறையில அவரு தங்கினாரு. அப்பத்தான் தன்ன கடவுளாக் கும்பிடணும்னு அவர் அறிவிச்சாரு. பாரசீகத்திலும், மத்திய ஆசியாவிலும் அவர் பெற்ற வெற்றிகள்; சிவாங்ற இடத்தில கேட்ட ஆருடம்; அவரோட வெற்றிகளப் பத்தி காலிஸ்தெனிஸ் எழுதியிருந்த புகழுரைகள்; எல்லாம் சேர்ந்து, தான் ஒரு கடவுள்னு அலெக்ஸாண்டரை நம்ப வச்சிருக்கு.'

'அவரைக் கடவுள்னு ஏத்துக்க காலிஸ்தெனிஸ் மறுத்தபோது, என்று விஜய் முணுமுணுத்தான். கடந்த அரைமணி நேரம் தான் செய்த ஆராய்ச்சியைத் திரும்ப நினைத்துப் பார்த்தான்.

அலைஸ் தலையசைத்தாள். 'ரொம்ப சரி. அவரு மறுக்க மட்டும் செய்யலை. 'இலியட்'டிலிருந்து ஒரு வரிய அலெக்ஸாண்டருக்கு அவர் மேற்கோளும் காட்டினார்: 'உன்னைவிட சிறந்த மனிதன் பாட்ரோக்ளஸ்; ஆனால் அவனையும் மரணம் விட்டுவைக்கவில்லை.'

'அதுவொரு கண்டனம்,' என்று காலின் குறிப்பிட்டான். 'ஆனா அத அவன் சுற்றிவளைச்சி சொல்லியிருக்கலாம். ஒரு மனுசன்கிட்ட போய்

அவன் ஒண்ணும் கடவுள் இல்லேன்னு சொல்றதுக்கு நல்ல வழிகள் இருக்கு. அதுவும் அவன்கிட்ட வாள் இருக்கும்போது.'

'அதனாலதான் அலெக்ஸாண்டர் அவன தூக்கிலப் போட்டாரு. இந்தக் காலகட்டத்தில், யாராவது தன்னோடு ஒத்துப்போகாமல் இருந்தாங்கன்னா அவங்கள அவராால தாங்கிக்க முடியல. அந்த நேரத்தில அலெக்ஸாண்டரைக் கொல்றதுக்கு 'சிறுபையன் வேலைக்காரன்' சதின்னு ஒண்ணு நடந்திச்சி. காலிஸ்தெனிஸ் அதுக்கு உடந்தைன்னு குற்றம் சாட்டப்பட்டாரு; துரோகம் செஞ்சிட்டாருன்னு சொல்லி அவரை அலெக்ஸாண்டர் சிலுவையில அறைஞ்சாரு.'

காலின் உடல் நடுங்கியது. 'பயங்கரம். காலிஸ்தெனிஸ் அவர்க்கு செஞ்ச நல்ல விசயங்கள பாக்கும்போது, அலெக்ஸாண்டர் செஞ்சது நன்றிகெட்டத்தனம். மாசிடோனியா யூமனியஸ் என்ன ஆனாரு?'

அலைஸ் விஜயைப் பார்த்தாள். 'விஜய் தெளிவா ஒரு ரகசிய ஆராய்ச்சி நடத்துறான். அதனால அவன்தான் நமக்குச் சொல்லணும்,' என்று அவள் புன்னகைத்தாள்.

20

கிமு 334

கிரீஸ், மாசிடோனியா

மாசிடோனியாவின் அரசன் இரண்டாம் பிலிப்பின் மனைவி ஒலிம்பியாஸ், தன்முன்னே நின்ற மனிதனை வெறித்துப் பார்த்தாள். பழுப்புநிறத்தோலும், கறுப்பு கேசமும், கறுப்பு கண்களும் கொண்ட அவன் தளர்வான வெள்ளையாடைகள் உடுத்தியிருந்தான். அவற்றைப் போன்ற ஆடைகளை அவள் பார்த்ததில்லை. அவனுக்கு அந்த அறிவு இருக்கிறது என்று அவளுக்குச் சொல்லப்பட்டது போல, அறிவுடையவனாக அவன் தோன்றவில்லை. அமைப்பின் மேல்மட்ட இடத்திலிருந்து அந்தச் சேதி அவளுக்கு வராமல் இருந்திருந்தால், யோசிக்காமலே அவள் அவனைப் புறந்தள்ளியிருந்திருப்பாள்.

'கடவுள்களின் ரகசியங்கள் உனக்குத் தெரியும் என்று நான் கேள்விப்படுகிறேன்,' என்று அவள் இறுதியாகச் சொன்னாள், அவனையே வெறித்துப் பார்த்தவண்ணம்.

அவன் தலையசைத்தான். 'எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் உங்கள் கடவுள்கள் அல்லர். அவர்கள் கிழக்குக் கடவுள்கள். என் மக்களுடைய கடவுள்கள்.' அவன் பேச்சின் அழுத்தம் விநோதமாக இருந்தது. அவன் மெதுவாகப் பேசினான், அந்நிய மொழியில் பேசுபவனைப் போல.

ஒலிம்பியாஸ் அவனை முறைத்தாள். அவனது அலட்சியத் தோரணையும், அவளின் ராஜபோக அந்தஸ்தைப் பற்றிய அவனது அக்கறையின்மையும் அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்தின. ஆனால் அவன் சொல்லப்போகும் செய்தி அவளுக்குத் தேவை; ரொம்பவே. அதனால் அவள் தன்கோபத்தை அடக்கிக்கொண்டு, மேலும் பேசினாள். தனக்குத் தேவையானது கிடைத்தவுடன், அவன்விதியை அவள்

தீர்மானித்து விடுவாள்.

'எனக்கு அது தெரியும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. யாருடைய கடவுள்கள் அவர்கள் என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் அந்தத் தொன்மத்தைப் பற்றிய உண்மைதான். நீ அதைச் சரிபார்த்தாயா?'

பழுப்புத்தோல் மனிதன் அசையாமல் நின்றான். 'தொன்மம் நிஜமானது. நான் அதற்கு உத்தரவாதம் கொடுக்கமுடியும்.'

அவன் அவள் பார்வைக்குப் பதில் பார்வை பார்த்தான். 'நீங்கள் என்னைச் சந்தேகிக்கிறீர்களா, ரா...ராணி?'

ஒலிம்பியாஸ் தயங்கினாள்; அவனது நேர்மையான கேள்வியால் அவள் நிலைகுலைந்தாள். அவன் புன்னகைத்தான். 'மிகவும் கர்வமானவர் நீங்கள்; மிகப்பெரிய இலட்சியம் உள்ளவர் நீங்கள். என் வார்த்தையில் நம்பிக்கை இல்லை என்றால், நதிகளையும் கடலையும் கடக்கும் என் பயணத்திற்காக நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டாம். ஆனால் உங்கள் சந்தேகம் மன்னிக்கப்படலாம். இந்தத் தொன்மம் தெரியாதவர்களின் புரிதலுக்கும் நம்பிக்கைக்கும் அப்பாற்பட்டது.'

தன் வார்த்தைகளின் தாக்கத்திற்காகக் காத்திருந்து விட்டு, மேலும் தொடர்ந்தான். 'ரா...ராணி! எனக்கு என்ன வயது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'

ஒலிம்பியாஸ் மீண்டும் முறைத்தாள். இந்த மனிதனின் வயது என்ன அவ்வளவு முக்கியமா? அவளுக்கு வேண்டியது தொன்மத்தைப் பற்றிய அவனது அறிவுதான். அவள் லேசாகத் தோள்குலுக்கினாள். 'எனக்கு எப்படி தெரியும்?'

'நான் இந்த பூமியில் 600 வருடங்கள் நடந்து வந்திருக்கிறேன். அதுக்கும் மேல. தனித்தனி ஆண்டுகளை எண்ணுவதை நான் விட்டுவிட்டேன். பத்தாண்டுப் பத்தாண்டுகளாக எண்ணிக்கை வைத்திருக்கிறேன்.'

ஒலிம்பியாஸ் எச்சரிக்கையானாள். அவளின் கவனம் முழுமையாக அவன் மீது பதிந்தது. வித்தியாசமாக இருக்கிறது. நாற்பது வயதுக்கு மேல் அவனது தோற்றமில்லை. அவன் சொல்வது உண்மையென்றால்...

ஒலிம்பியாஸ் அவன் வார்த்தைகளை அசைபோட்டாள். 'கடவுள்களின் ரகசியம் எங்கே இருக்கிறது என்று எனக்குச் சொல்.' அவள் முன்னோக்கி வந்தாள். கண்கள் பிரகாசித்தன, ஓர்

எதிர்பார்ப்போடு.

'அது இங்கிருந்து ரொம்ப தூரம், ரா...ராணி,' என்று அவன் பதில்சொன்னான். 'சிந்துநதி நிலத்தில், ஒரு ரகசியமான இடத்தில். வழிதெரிந்தால் ஒழிய, யாராலும் கண்டுபிடிக்க முடியாதவாறு ஒளிக்கப்பட்டிருக்கிறது.

'பூமியின் எல்லைகள்,' என்று ஒலிம்பியாஸ் முணுமுணுத்தாள். எதிர்பார்ப்பு அவள் முகத்தை மினுமினுக்க வைத்தது.

'கிரேக்கர்கள் போன்ற மிகவும் முன்னேறிய ஓர் இனத்தில், நாம் வசிக்கும் உலகத்தைப் பற்றி எவ்வளவு குறைவாக நீங்கள் தெரிந்துவைத்திருக்கிறீர்கள் என்பது அதிசயமானது,' என்று அந்தத் தத்துவஞானி திமிர்த்தனமாகப் புன்னகைத்தான்.

ஒலிம்பியாஸ் அவனைக் கோபமாகப் பார்த்தாள். அவன் உண்மையிலேயே திமிரானவன். அவனை விசாரிப்பதுபோல அவள் புருவம்நெரித்தாள்.

'இதுதான் உங்கள் தத்துவஞானிகள் உங்களுக்குக் கற்றுக்கொடுத்ததா? பூமியின் எல்லைகள் சிந்துக்கு அப்பால் இருக்கின்றன என்று. அப்படியென்றால், உங்கள் மகன் தன் வாழ்வின் மிச்சத்தை பூமியில் எல்லைகளுக்கு நடைபோட்டுக் கழித்துவிட்டு திரும்பி மாசிடோனியாவுக்கு வரும்போது ஞானமில்லாதவனாக இருப்பான்.' தத்துவஞானி குரலை தாழ்த்திப் பேசினான்: 'உங்களுக்கு மட்டும் இது தெரியட்டும், ரா...ராணி. பூமி சிந்துவைத் தாண்டி பரந்த, பயங்கரமான நதிகளின் குறுக்காகச் சென்று விரிந்துகிடக்கிறது. அங்கிருக்கும் ராஜ்யங்கள் பலமானவை; உங்களுக்குத் தெரியாத ஆயுதங்களைக் கொண்டவை; அந்த நிலத்தில்தான் நம் கடவுள்கள் ஒரு காலத்தில் ஆட்சி செய்தார்கள். தேவையானது கிடைத்தவுடன் உங்கள் மகன் திரும்பிவர வேண்டும். உங்கள் பேராசையும், உங்கள் மகனின் பேராசையும் மாசிடோனியாவை அழிவுக்குள் தள்ளாதிருக்கட்டும்.'

அந்த மனிதனின் விவேகத்தைப் பார்த்து ஒலிம்பியாஸ் பேச்சிழந்தாள். ஆனால் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள். அவளுக்குத் தேவையானது இன்னும் கிடைக்கவில்லை. 'எனக்குக் கொடுக்க உன்னிடம் என்ன இருக்கிறது?' என்று அவள் கேட்டாள்.

தன் தளர்வான ஆடைகளில் ஒளித்துவைத்திருந்த இரண்டு வஸ்துக்களை எடுத்து அவன் அவளிடத்தே கொடுத்தான். 'இதுதான் என் முன்னோர்கள் எனக்காக உருவாக்கியது. ஆனால் அவற்றில்

பொறிக்கப்பட்டிருக்கும் வாசகங்கள் உங்களுக்குப் புரியாது. ஏனென்றால் எங்கள் கடவுள்கள் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது.' அவன் தன் ஆடைக்குள் இருந்து தோல்காகிதத்தை எடுத்து அவளிடம் தந்தான். 'இங்கே வருவதற்கான பயணத்தின்போது நான் உங்களுக்காக தயார் செய்தது இது. இதில் பொறிக்கப் பட்ட எழுத்துக்கள் கிரேக்க எழுத்துக்கள். நான் அவற்றை உங்களுக்கு விளக்குகிறேன். இல்லையென்றால் உங்களுக்குப் புரியாது. அப்புறம் இது,' என்று அவன் இரண்டு வஸ்துக்களில் ஒன்றைச் சுட்டிக்காட்டி சொன்னான்: 'நம் இடத்திற்குத் திரும்பவர வேண்டும். உங்கள் மகன் சிந்துவைத் தாண்டும்போது, இதைப் புதைத்துவிட வேண்டும்; எங்கே அது திரும்பக் கண்டுபிடிக்கமுடியாதோ அங்கே புதைத்துவிட வேண்டும்.' முகம் கடுமையாக சற்று இடைவெளி விட்டான். 'ஆனால் ஒரு எச்சரிக்கை. இது ஓர் ஆபத்தான செயல். கட்டளைகளைச் சரியாக பின்பற்றாவிட்டால், மரணம் விளையும்.'

ஒலிம்பியாஸ் உணர்ச்சிவேகத்தில் நடுங்கும் கைகளால் இரண்டு வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டாள். எலும்புபோல் தோன்றும் ஏதோவொன்றிலிருந்து உருவாக்கிய கனசதுரம் அவற்றில் ஒன்று. அதன் தோற்றத்தைப் பார்த்தால் மிகத்தொன்மையானது போல இருந்தது; அதனால் மஞ்சள் நிறத்தில் இருந்தது. கனசதுரத்தின் மேற்பரப்புகளின் எழுத்துக்கள் அவளுக்கு அந்நியமாக இருந்தன. இரண்டாவது வஸ்து கறுப்பு உலோகத்தட்டு; அதிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. தத்துவஞானி பேச ஆரம்பித்தார். தோல்காகிதத்தில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களை விளக்கலானார். என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கட்டளைகள் இட்டார்.

தோல்காகிதத்தில் இருந்த ஒரு புள்ளியைக் காட்டினார். 'இங்கேதான் உங்கள் மகன் நின்றுவிட வேண்டும். இதற்கு மேலே அவன் போகக்கூடாது. ஒன்று வீடுதிரும்ப வேண்டும்; அல்லது திரும்பாமலே இருந்துவிட வேண்டும்.'

ஒலிம்பியாஸ் அவன் சொன்னதைக் காதிலே வாங்கவில்லை. அவள் கண்கள் தோல்காகிதத்தின் பரப்பில் மேய்ந்தபோது, அவளது கிளர்ச்சி உணர்வு அதிகமானது. தன் மகன் அலெக்ஸாண்டருக்காக அவள் போட்டிருக்கும் திட்டத்தின் இறுதி இதுதான். வீரதீரமான வெற்றியாளரான பிலிப் வரைந்திருந்த எல்லைகளைத் தாண்டி, அலெக்ஸாண்டர் தன் சாம்ராஜ்யத்தை விரிவுசெய்யும் பசியோடு ஏற்கனவே பொறுமையற்று இருக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். கடவுளின் ரகசியம் தன் பிடியில் இருப்பதினால், அவள்

எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள், தன் மகன் உலகத்தை ஆள்வதற்கு; ஒரு மனிதனாக அல்ல; கடவுளாக.

21

நிகழ்காலம்

நாள் மூன்று
ஒரு விநோதமான நேர்காணல்

டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸின் இந்திய தலைமையகக் கட்டடத்தின் பரந்துகிடக்கும் முகப்புக்கூடத்தை ராதா கூர்ந்து பார்த்தாள். தலைமை மருத்துவ அதிகாரியைச் சந்திக்க காத்துக்கொண்டிருந்தாள். சில அடிகள் தள்ளி மற்றொரு சோபாவில் உட்கார்ந்திருக்கும் இம்ரானைப் பார்ப்பதை அவள் தவிர்த்தாள். அவர்கள் தனித்தனி கார்களில் ஒரே நேரத்தில் வந்தார்கள். உளவுத்துறையிலிருந்து களப்பணியாளன் ஒருவன் அவளது காரை ஓட்ட நியமிக்கப் பட்டிருந்தான்.

குர்கானில் எஃகு மற்றும் கண்ணாடியால் உருவாக்கப்பட்டிருந்த பல நிறுவனங்களைப் போலவே இந்தக் கட்டிடமும் வர்ணிக்க முடியாத ஓர் ஆறுமாடிக் கட்டமைப்பாக இருந்தது. உள்முக அறைகள் எல்லாம் பளிங்குக்கல் தரைகளைக் கொண்டிருந்தன; வரவேற்பறையில் கிரானைட் கவுண்டர் இருந்தது. முகப்புக்கூடத்தின் நடுவே ஓர் ஊற்று தென்பட்டது. இது லாபத்தில் செழித்த தொழில்நிறுவனம் என்பது தெளிவு.

நெடிய இறுக்கமான, வெள்ளையும் கறுப்பும் கலந்த கேசம் கொண்ட ஓர் உருவம் அணுக்கமாக வந்தபோது அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவர் ஆய்வுக்கூடத்துக்குரிய அங்கி அணிந்திருந்தார். அவரது தோரணையே சொன்னது அவர்தான் வருண் சாக்ஸேனா என்று. ராதா பிரமித்தாள். அவரே நேரே வந்து அவளுக்கு வணக்கம் சொல்லி மாடிக்குக் கூட்டிச்செல்வார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவள் ஒரு பத்திரிகையாளர் என்றும், அவள் வந்திருப்பது மருத்துவ நிலையத்தில் நிகழ்ந்த தீவிபத்து சம்பந்தமாக என்றும்

அவர்க்குச் சொல்லப்பட்டிருந்ததால், அந்த நிறுவனம் மோசமான பத்திரிக்கைச்செய்திகளைத் தவிர்ப்பதில் முனைப்பாக இருந்தது என்று அவள் ஊகித்தாள். அதனால்தான் அவர் துரிதகதியில் பதிலளித்து சந்திப்பை உறுதிபடுத்தினார்.

'ஹலோ, சீமா,' என்று அவர் அவளுக்கு வணக்கம் சொன்னார், அவளது பொய்ப்பெயரைச் சொல்லி. வலிந்துவந்த புன்னகை அவருடையது. இந்தச் சந்திப்பு அவர்க்கு ஒன்றும் மகிழ்ச்சி தரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. தனக்கு வேறு வழியில்லை என்ற பிரக்ஞையோடு அவர் இருந்தார். 'நான் டாக்டர் வருண் சாக்ஸேனா.'

பதிலுக்கு அவள் வணக்கம் செய்தாள். 'குறுகிய அவகாசத்தில என்ன சந்திக்க வந்ததற்கு மிகவும் நன்றி,' என்று சொல்லிவிட்டு தொடர்ந்தாள். 'இந்த செய்தியில ஏதாவது ஆழமிருந்தா, நாளைக்கே போடலாம்னு இருக்கோம்.'

அவள் கொடுத்த ஆரம்பத்தை சாக்ஸேனா பிடித்துக்கொண்டார். 'ஓ. நிச்சயமா. பேசுதற்கு நிறைய ஒன்றும் இல்லங்றத நீங்களே புரிஞ்சுக்குவீங்கன்னு நினைக்கிறேன். உங்களுக்குத் தேவையான தகவல்கள தர நான் தயாரா இருக்கேன். ஆனா ஒரு கதைக்குத் தேவையான அளவுக்கு உங்களுக்கு மசாலா கிடைக்கும்னு எனக்குத் தோணலை.' நிலைமையை இலகுவாக்கும் தன் முயற்சியைப் பார்த்து அவர் புன்னகைப்பது போல பாவனை செய்தார். 'மேல போய் பேசுவோமா?'

ராதா தலையாட்டினாள். நான்காவது மாடிக்கு அவர்கள் மௌனமாகச் சென்றார்கள். சந்திப்பு அறையில் அவர்கள் உட்கார்ந்தபோது, சாக்ஸேனா காஃபி வரவழைத்தார். ராதா நேராக விசயத்திற்கே போகலாம் என்று முடிவுசெய்தாள்.

'கிழக்கு டில்லியில இருக்கிற உங்கள் நிறுவனத்தில் நடந்த தீவிபத்து சம்பந்தமாக நிறைய வதந்திகள நான் கேள்விப்பட்டிருக்கேன்,' என்று அவள் ஆரம்பித்தாள். 'அத எல்லாம் தெளிவாக்க ஒரே வழி உங்ககூட நேராப் பேசுவதுதான்னும் நினைச்சேன்.'

'ஓ. நிச்சயமா,' என்று பற்கள் தெரிய அவளைப் பார்த்து சிரித்தார். 'அது ஒரு நல்ல விஷயம். என்னமாதிரி வதந்திகள நீங்கள் கேள்விப்பட்டீங்க.'

'நல்லது,' என்று சொல்லி ராதா இடைவெளி விட்டாள், என்ன சொல்வது என்று யோசிப்பவள் போல. 'உங்கள் மருத்துவ

சோதனைகள்ல சில இந்திய மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையின் ஒப்புதல் இல்லாதவை; உயிருக்கு ஆபத்தான நுண்ணுயிரிகளை மனிதர்களைக் கொண்டு சோதனை செய்யப்பட்டுள்ளன என்று நான் கேள்விப்பட்டேன்.'

இந்தக் கேள்விவருமென்று பயந்தவர் போல, எதிர்பார்த்தவர் போல, சாக்ஸேனா பதற்றமாக செயற்கையாகச் சிரித்தார். 'இத நீங்க எங்கத்தான் கேள்விப்பட்டிங்க. முழுப்பொய். டைட்டன் அந்த நிலையத்தில நடத்தின மருத்துவ பரிசோதனைகள் எல்லாம் நேர்மையானவை. அரசின் ஒப்புதலோடுதான் நடந்தன. ஆதாரமான ஆவணங்கள நான் தரமுடியும். உயிருக்கு ஆபத்தான நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பே இல்லை. உங்களுக்குத் தெரியும். மருத்துவ பரிசோதனைகள் அப்படி நடப்பதில்ல. டைட்டன் கம்பெனியில எங்களுக்கு வளைந்துகொடுக்காத தொழில் தர்மம் இருக்கு. அதப்பத்தி எங்களுக்கு எப்போதுமே பெருமை உண்டு. ஏதாவது தப்பு நடந்தா, ஒரு வைராலஜிஸ்ட் என்ற முறையில எனக்கு உடனடியா தெரிஞ்சிடும்.'

'அங்க கண்டெடுத்த பிணங்களப் பத்தி நீங்க என்ன சொல்றீங்க?' பிணங்களைக் கண்டுபிடித்த செய்தி பொதுவெளிக்கு கொண்டுபோக வேண்டாம் என்று இம்ரான் முடிவுசெய்திருந்தார் என்று ராதாவுக்குத் தெரியும். ஏனென்றால் ஊடக வெளிச்சம் புலனாய்வுக்குத் தடையாக மாறிவிடும். ஊடகங்களில் இருக்கும் எவர்க்கும் இது தெரியாது என்று சாக்ஸேனா நம்பியிருந்தார் என்று ராதாவுக்குத் தெரியும். அதனால் அதைச் சொல்லி அவரை அசரவைக்க அவள் விரும்பினாள்.

சாக்ஸேனா ஆச்சரியமடைந்தார். இந்தக் கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை என்று தெளிவாகத் தெரிந்தது. அவர் கண்கள் சிறுத்தன. 'எங்கிருந்து உங்களுக்கு அந்தச் சேதி கிடைச்சிது?' என்று கேட்டார். 'அது உண்மையல்ல. தீயில யாரும் சாகல. கருவிகள், சொத்துக்கள் நாசமாயின. அவ்வளவுதான். உயிர்ச்சேதம் ஏதுமில்ல.'

ராதா மூச்சை உள்ளிழுத்தாள். 'டாக்டர் சாக்ஸேனா, உங்களுக்குத் தெரியும்ன்னு எங்களுக்கு நிச்சயமா தெரியும். பத்திரிகைக்காரங்க எங்களுக்கு பல இடங்கள்ல பல தொடர்புகள் உண்டுன்னு. போலீஸ் துறையில் கூட. நான் கேள்விப்பட்டதுக்கும் நீங்க சொல்றதுக்கும் சம்பந்தமே இல்ல. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், தீயணைப்புப் படைகள் போனபோது கட்டடத்தில யாருமே இல்ல. வேலையாட்கள் இல்ல; பரிசோதனைக்கூடத்து தொழில்வினைஞர்கள் இல்ல;

ஆராய்ச்சியாளர்கள் இல்ல. எல்லோரும் காணாம போயிட்டாங்க. மறைவான அடித்தள சிறையில வெளியே பூட்டப்பட்டு உள்ளே செத்துக்கிடந்தவங்கள தவிர யாருமே இல்ல. பாவம், அந்த ஏழை ஜனங்க சுட்டுக்கொல்லப்பட்டாங்கன்னு நான் கேள்விப்பட்டேன். அவங்க தீயில சாவல. நீங்க சொன்னதில. அதுமட்டுந்தான் சரி

சாக்ஸேனாவின் தோள்கள் தொங்கின; திகிலான தோற்றம் அவர் முகத்தைக் குறுக்காக கடந்தது. ஆனால் அது ஒரு கணநேரந்தான். உடனடியாக அவர் தன் சாந்தமான தோற்றத்தை மீட்டுக்கொண்டார். ஒன்று அவர் நல்ல பயிற்சி உடையவராக இருக்க வேண்டும்; இல்லையென்றால், இந்த மாதிரி சிரமமான சூழ்நிலைகளைச் சமாளிப்பதில் பெருத்த அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

'சரி, நல்லது,' என்று அவளைப் பார்த்து அவர் புன்னகைத்தார். 'யார்க்கும் தெரியாதுன்னு நினைச்சேன். மன்னிக்கணும். நான் உங்ககிட்ட பொய் சொல்லிட்டேன். ஆனா, இந்தச் சூழலின் பிரமாண்டத்தையும், அதனால எங்க கம்பெனிக்கு ஏற்படுற பாதிப்பையும் நீங்க புரிஞ்சிக்குவீங்கன்னு நிச்சயமா எனக்குத் தெரியும்.' அவர் தலையாட்டினார். 'அந்தப் பொணங்க அங்க எப்படி வந்திச்சு, ஏன் வந்திச்சுன்னு எங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. நம்புங்க. டைட்டன் கொள்கைகளும் விழுமியங்களும் கொண்ட ஒரு நிறுவனம். எங்கள் நிறுவனரும், சேர்மனும் ஆன குர்ட் வாலஸ் உயர்ந்த கொள்கையுடைய, மரியாதைக்குரிய மனிதர். அமெரிக்காவில மட்டுமல்ல; உலகம் முழுக்க. நாங்க வழிதவறலைன்னு சொல்லலை. நாங்கள் தவறுகள் செய்கிறோம். ஆனா இது எங்க தவறல்ல. எங்க நினைப்பு என்னன்னா, நிலையத்தின் உரிமையாளர் சுமன் பாவா ரகசியமா செயல்பட்டுட்டு இருந்தார். ஏன்னு நீங்க கேட்க விரும்பினீங்கன்னா, நீங்க அவருகிட்டதான் பேசணும். போலீஸ் அவரப் பிடிச்சா; உங்க தொடர்புகள் உங்களுக்கு உதவும்னு நிச்சயமா எனக்குத் தெரியும்.' அவர் கடைசி வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்தார்.

பாவாவின் பிணம் இன்றுதான் கிடைத்தது என்று அவர்க்குத் தெரியாது. ராதா அவரிடம் இதைச் சொல்லக்கூடாது என்று தீர்மானித்தாள்.

'ஆனா அந்த மையம் டைட்டனின் சோதனகளைத்தானே விசேஷமா நடத்திட்டு வந்துது.' ராதா விடுவதாக இல்லை.

'ஆமாம். நிச்சயமா. அத நான் மறுக்கலியே.'

'மருத்துவ பரிசோதனைகள் நடக்கிற இடத்தில சிறைகளுக்கு என்ன அவசியம் இருக்கு உங்களுக்கு?'

சாக்ஸேனா பெருமூச்சுவிட்டார். 'நீங்க அழுக்க தேடுறிங்க, அது இல்லாத இடத்தில. நான் உங்ககிட்ட சொன்னமாதிரி, இந்தப் பரிசோதனைகள் எல்லாம் வெளியாட்கள் மூலமா நடந்திருக்கு, எல்லா சோதனைகளும் அப்படித்தான். ஆராய்ச்சி நடத்தின பரிசோதனைக்கூடம் ஆர்யன்; அதுக்குத்தான் அந்த மையம் சொந்தம். ஆராய்ச்சிக்கு நிதியுதவி செய்யும் உடன்படிக்கையில கையெழுத்து போடுறதுக்கு முன்னாடி, நாங்க எங்க பிரதிநிதியை இங்க அனுப்பிச்சோம். அப்போ மறைவா இருந்த அடித்தளங்கள பத்தி எங்களுக்குத் தெரிய வாய்ப்பில்ல. ஒருத்தர் கள ஆய்வு நடத்தும்போது, யாரும் மறைவான அறைகளப் போய் பாக்குறதில்ல. தவறான ஆளிடம் தவறான கேள்வி கேட்கிறீங்க. மறுபடியும் சொல்றேன். நீங்க பாவாவைக் கேளுங்க. அழுக்கு இருக்கான்னு நீங்க அவனைத்தான் தோண்டியெடுக்கணும்; டைட்டன இல்ல. அங்க கண்டுபிடிக்கப்பட்ட விசயங்கள பத்தி உங்கள போலத்தான் நாங்களும் அதிர்ச்சியானோம்.'

கிட்டத்தட்ட சாக்ஸேனாவின் வார்த்தைகளைக் கண்டு கொள்ளாமல், ராதா எதிர்வினை செய்தாள். 'இன்னொரு விநோதமான விசயம், அந்தக் கட்டிடத்தில மூன்று மாடிகள்தான் கருகிப்போச்சு. இந்த மூன்றிலும் ஒரு ஐடி சென்டரும் மருத்துவ ஆவணங்களும் இருந்திச்சி. இந்த மூன்று மாடிகள் மட்டுமே எரிஞ்சு போனது கொஞ்சம் விநோதமா இல்ல? அங்க நடந்த மருத்துவ பரிசோதனைகள் பத்திய ஆவணங்களயும், சேமிக்கப்பட்ட தரவுகளயும் வேணுமின்னே அழிக்கிறதுக்கு ஏதோவொரு முயற்சி நடந்திருக்கு."

'என் பதில் ஒரே பதில்தான். சாக்ஸேனாவின் குரல்தொனி சுருக்கென்று ஒலித்தது. 'யார் அல்லது எது நெருப்புக்குக் காரணம்ன்னு எங்களுக்குத் தெரியாது. விசாரணை ஆரம்பிச்சிடுச்சி. அது முடிஞ்சவுடன், எங்களுக்கு மேலும் பல தகவல்கள் சந்தேகமில்லாம கிடைக்கும். இப்போதைக்கு பண்ணக் கூடியது ஊகிக்கிறது மட்டுந்தான். சுமன் பாவாவாதன் இதுக்குப் பின்னாடி இருக்கான்றது எங்க கருத்து.'

ராதா தலையசைத்தாள். வித்தியாசமாக செய்யவேண்டிய நேரம் இதுதான். 'மேற்கொண்டு நான் கேள்விப்பட்டேன். நிலையத்தில கண்டுபிடிக்கப்பட்ட பொணங்க ஏதோவொரு முன்பின் தெரியாத வைரஸாலும், பாக்டீரியாவாலும் தொற்றுநோய்க்கு

ஆளாகியிருந்திச்சின்னு. பாவா தான் இதற்கெல்லாம் பொறுப்புன்னா, ஒண்ணு இல்ல ரெண்டு நுண்ணுயிரிகள் அவருக்கு எப்படி கிடைச்சுது? நூத்துக்குமேலான மக்கள வச்சு யாருக்கும் தெரியாம எப்படி அவர் அந்த நிலையத்துல பரிசோதன நடத்தினாரு? நீங்க என்ன நினைக்கிறீங்க?'

சாக்ஸேனாவின் முகம் இறுகியது. இந்தக் கேள்வி நரம்பைத் தெளிவாகவே தொட்டுவிட்டது. 'யாரு இதெல்லாம் உங்களுக்குச் சொன்னது? நான் நிஜமாவே தெரிஞ்சிக்க விரும்புறேன்,' என்றார் அவர் முகம்கறுத்தது. இனிமையாக இருக்க அவர் முயற்சி செய்யவில்லை. 'ஆதாரமில்லாத விஷயங்கள் நிறையவே உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. எந்த சாட்சியும் இல்லாம டைட்டன் மீது நீங்க கடுமையான குற்றச்சாட்டுகள வைக்கிறீங்க. துரதிர்ஷ்டவசமாக, எங்க கட்டுப்பாடுகள் எங்கேயோ தோற்றுபோயிச்சி. இந்த துயரச்சம்பவம் அதைத்தான் சொல்லுது. மையத்தில் இருந்த ஊழியர்கள் தங்கள் கடமைகளத்தான் செஞ்சாங்க. பரிசோதனைகள் நடத்தினாங்க; சாம்பிள்கள் எடுத்தாங்க. அதெல்லாம் அதிகாரபூர்வமானதுதான்னு நினைச்சித்தான் அவங்க வேலை செஞ்சாங்க. நாங்க எங்க உள்கட்டமைப்பை பரிசோதிச்சிட்டிருக்கோம். எதிர்காலத்தில இதுமாதிரி ஏதும் திரும்பவும் நடக்கக் கூடாதுங்றதுக்காக ஒரு பக்காவான திட்டத்தை உருவாக்கிக்கிட்டு இருக்கோம். அதை நான் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில உறுதியா சொல்ல முடியும்.'

அவர் அவளை நோக்கி முன்சாய்ந்தார். அடக்கப்பட்ட சினத்தில் அவர்முகம் கறுத்திருந்தது; கல்லானது. 'நீங்க இந்த கட்டுரைய வெளியிடக் கூடாது, சீமா. ஏன் தெரியுமா?'

ராதா ஒன்றும் சொல்லவில்லை. அவர் குரலில் ஒலித்த ஏதொவொன்று அச்சமூட்டுவதாக இருந்தது. அவள் ரொம்ப தூரம் போய்விட்டாளோ?

'ஏன்னா,' என்று சாக்ஸேனா தொடர்ந்தார். 'உங்ககிட்ட ஆதாரம் இல்ல. இது மாதிரி ஒரு செய்தியை நீங்க வெளியிட்டு டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸை அசிங்கப் படுத்தீங்கன்னா, நாங்க வழக்குபோடுவோம், உங்க செய்தித்தாள்கிட்ட இருக்கிற ஒவ்வொரு ரூபாயையும் நஷ்ட ஈடாகக் கேட்டு. உங்க ஆசிரியர் அந்த ஆபத்தை எதிர்கொள்ள விரும்ப மாட்டார்ன்னு எனக்கு நிச்சயமா தெரியும்.'

ராதாக்கு குரல் வந்தது. 'ஒருவேளை நாங்க ஆதாரத்த கண்டுபிடிச்சா? அவள் மருத்துவ தலைமை அதிகாரியை எதிர்ப்பது போல பார்த்தாள். எனினும் உள்ளுக்குள் அவள் நடுங்கிக்கொண்டுதான்

இருந்தாள்.

சாக்ஸேனா அவளைப் பார்த்து கசப்பாகப் புன்னகைத்தார். நீங்க கண்டுபிடிக்க மாட்டீங்க. முயற்சி கூட பண்ணாதீங்கன்னுதான் நான் சொல்லுவேன். அது மிகவும் ஆபத்தானதாக இருக்கும்.'

'அச்சுறுத்தல் மாதிரி தெரிகிறதே, டாக்டர் சாக்ஸேனா.' ராதா தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள போராடினாள். அவளது கீழுதடு துடித்தது.

சாக்ஸேனாவின் தொனி உடனே மாறியது. இனிமை நிறைந்த முகமூடி மீண்டுவந்தது. 'ஓ. இல்ல; இல்லவே இல்ல.' வலிந்துவந்த புன்னகை அவர்முகத்திற்குத் திரும்பியது. நான் என்ன சொல்றேன்னா, யாரோ ஒருவன் எங்க கட்டிடத்தைப் பயன்படுத்தி சட்டத்துக்குப் புறம்பான மருத்துவ பரிசோதன நடத்திகிட்டு அதை எங்ககிட்ட இருந்து ரொம்ப காலத்துக்கு மறைச்சியிருக்கிறான்னா, ரகசியத்த காப்பாத்தறதுக்கு அவனும் அவன் ஆட்களும் என்ன வேணும்னாலும் செய்வானுங்க. ரகசியங்கள தோண்டியெடுக்க ஒரு நிருபர் மூக்கை உறிஞ்சிக்கிட்டு வர்றத அவங்க சாதாரணமா எடுத்துக்க மாட்டாங்க.' அவர் எழுந்தார். சந்திப்பு முடிந்தது என்று குறிப்பால் உணர்த்தினார். 'நீங்க ஒரு அருமையான பெண்,' என்று அவர் முடித்தார். உங்களுக்கு எதுவும் நடந்தறக்கூடாதுன்னு நினைக்கிறேன். அதனால தயவுசெஞ்சி கவனமா இருங்க.'

ராதா தலையசைத்தாள், வாயடைத்து. தன் காதில் விழுந்தது என்ன என்பதுபற்றி அவளுக்கு எந்தக் குழப்பமும் இல்லை. சாக்ஸேனாவிடம் கைகுலுக்கிவிட்டு அவள் வெளியேறினாள்.

அவள் போனபின்பு, சாக்ஸேனா தன் சேரில் சாய்ந்தார். சில கணங்கள் மோட்டுவளை விளக்குகளைக் கூர்ந்துப்பார்த்தார். பின், பெருமூச்சுவிட்டு, கைப்பேசியை வெளியே எடுத்தார்.

'சாக்ஸேனா பேசுறேன்,' என்றார், இணைப்பு கிடைத்தவுடன். 'நீ தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது.'

22

ரகசிய குறிப்பேடு

'நிச்சயமா,' என்றான் விஜய், தொண்டையைச் சரிசெய்து கொண்டு. 'பார்க்கலாம். கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்கு, யூமனியஸ் பத்தி வெவ்வேறு மூலங்கள் வேறுவேறு விதமா சொல்லுது. ஆனா நான் சேகரிச்ச விவரங்கள பாக்கும்போது, அவன் அலெக்ஸாண்டர் தளபதிகள்ல ஒருத்தன்னு தெரியது; அலெக்ஸாண்டர் இறந்த பின்னாடி வந்த உள்நாட்டுக் கலகத்தில மாட்டிக்கிட்டான்னும் தெரியது. தன் பேரனுக்காக மாசிடோனியா சிம்மாசனத்த காப்பாத்த ஒலிம்பியாஸ் எடுத்த முயற்சிகளுக்கு அவன் ஆதரவு கொடுத்து பின்னால வந்த குழப்பத்தில அவன் தன் உயிரை இழந்தான். அவன் ஒரு அறிவாளின்னும் தெரியது. அலெக்ஸாண்டர் ஆசியா மீது படையெடுத்தபோது, அவரைப் பத்தி ராஜாங்க டயரிகள் எழுதினான்.'

'காலிஸ்தெனிஸ் பத்தியும், யூமனியஸ் பத்தியும் ஆராய்ச்சி பண்றதுக்கு உனக்கு அதிக நேரமில்லங்றதை வச்சி பாக்கும்போது, இப்ப நீ சொன்னது ஒரு நல்ல கத சுருக்கம்,' என்றாள் அலைஸ். 'யூமனியஸ் அலெக்ஸாண்டரோட அப்பா இரண்டாம் பிலிப்பிடம் காரியதரிசியாகவும் இருந்தவர். பிலிப் இறந்தபிறகு, அவன் அலெக்ஸாண்டருக்கு முதன்மை காரியதரிசியாக ஆனான். முக்கியமான தளபதியாகவும் இருந்தான். அலெக்ஸாண்டர் இறந்த பிறகு, அவரோட தளபதிகள் சாம்ராஜ்யத்தை பங்குபோடுறதல சண்டை போட்டாங்க. யூமனியஸ் அதிசிறந்த ஒரு தளபதி என்று எல்லோரும் சொன்னாங்க. ஆனால் அதிர்ஷ்டம் அவன் பக்கம் இல்ல. அது ஒரு பெரிய கத. ஆனா உனக்கு அத சுருக்கமா சொல்றேன். அலெக்ஸாண்டரின் வாரிசாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பெர்டிக்காஸ்க்கு எதிராக கலகம் செஞ்ச தளபதிகள் யூமனியஸைத் தூக்கிலிட வேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்டது. அதிலிருந்து அவன் தப்பித்தான். ஆனால் மரணம் அவனைத் துரத்தியது. அலெக்ஸாண்டரோட இன்னொரு தளபதி

ஆண்டிகோனசுடன் அவன் யுத்தம் செஞ்சான். ஆண்டிகோனஸை அவன் ஜெயிச்சாலும், அவனோட சொந்த சத்ரபதிகளே அவனைக் காட்டிக்கொடுத்தாங்க. ஆண்டிகோனஸ் அவன கிமு 316-ல் தூக்கில போட்டான். ஆண்டிகோனஸுடன் செய்த யுத்தத்துக்கு முன்னாடியே அவன் தன்னோட ஆவணங்கள, குறிப்பேடுகள எல்லாம் அழிச்சிட்டான். ஒரு ரகசிய குறிப்பேடு இருந்ததா என்று எந்தச் சரித்திர ஆவணமும் சொல்லவே இல்ல.'

'இது போலின்னு சொல்றியா?' என்று விஜய் கேட்டான், கொஞ்சம் கடுமையாக. அவன் குரலில் இருந்த கடுமையைப் பார்த்து காலின் புருவம் உயர்த்தினான்.

அலைஸ் இப்போது குறிப்பேட்டைப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் அதைக் கவனித்தது போலத் தெரியவில்லை. 'அது மாதிரி தெரியலை, என்று பாதி தனக்குள்ளே சொல்வது போல முணுமுணுத்தாள். 'மொழிபெயர்ப்பாளர் லாரன்ஸ் ஃபுல்லரோட அறிமுகக் குறிப்புப்படி பாத்தா, 1954-ல் கெய்ரோ பக்கத்தில ஒரு அகழ்வாராய்ச்சிக் குழுவோட போனபோது, ஒரு பழம்பொருள் வியாபாரிகிட்ட இருந்து அவருக்கு ஒரு செட் பாபிரஸ் ஆவணங்கள் நல்ல நிலைமையில கிடைச்சிருக்கு. ஃபுல்லர் நிறைய விரிவான குறிப்புகளும் விளக்கங்களும் கொடுத்திருக்காரு. எப்படி, ஏன் இந்தக் குறிப்பேடு எகிப்துக்குப் போனதுன்னு எனக்குப் புரியலை. இப்போதிருக்கும் ஈரானில்தான் யூமனியஸ் செத்தான்.' அவள் விஜயை ஏறிட்டாள். 'உனக்கு இது எங்கிருந்து கிடைச்சிது?'

முன்னாடி எப்படி அவனும் ராதாவும் சேர்ந்து குறிப்பேட்டை வெளியே எடுத்தார்கள் என்பதை விஜய் விளக்கினான். 'என் பெற்றோர்கள் சரித்திர ஆசிரியர்கள்; இந்திய தொல்பொருள் ஆய்வில் வேலை பார்த்தவர்கள்.'

'அற்புதம்,' என்று அலைஸ் முணுமுணுத்தாள், திரும்பவும் குறிப்பேட்டின் மீது கவனத்தைச் செலுத்தி. 'இந்த பாபிரஸ் ஆவணங்கள் நல்ல நிலைமையிலதான் இருக்கு. ஆனால் சில பகுதிகளை காணோம். ஃபுல்லர் யாராக இருந்தாலும் சரி, அவர் அர்த்தம் கெடாம அருமையா மொழிபெயர்த்திருக்கார். ஆனால் காணாமல் போன வார்த்தைகளால், வாசிக்கிறது சிரமமா இருக்கு.'

'உங்க அப்பா அம்மாவுக்கு இது எப்படி கிடைச்சதுன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு,' என்று காலின் உரக்கவே ஆச்சரியப்பட்டான். 'அவங்களுக்கு இந்த ஃபுல்லரைத் தெரிஞ்சிருக்கணும்.'

விஜய் தோள்குலுக்கினான். 'அப்ப நான் ரொம்ப சின்னவன்,' என்று அவன் ஒத்துக்கொண்டான். மேலும், துரதிர்ஷ்டவசமாக, அவங்க வேலையில எனக்கு கொஞ்சங் கூட ஆர்வம் இல்ல. அவங்க நண்பர்கள பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது; அல்லது ஃபுல்லர் அவங்கள ஒருத்தரான்னும் தெரியாது. தெரிஞ்சிருந்திருக்கணும். தெரிஞ்சிருந்தா அவரப்பிடிச்சு என்ன பெத்தவங்களப் பத்தி நான் பேசியிருந்திருக்க முடியும்.' ஓர் ஏக்கம் கலந்த தொனி அவன் குரலில் எழுந்தது.

'சரி. இப்பவே குறிப்பேட்டை முழுசா படிக்கிற அளவுக்கு எனக்கு பொறுமை இல்ல,' என்று அலைஸ் முடித்தாள். அவள்குரலில் கிளர்ச்சி இருந்தது. 'அதன் சுருக்கத்தை மட்டும் சொல்லு.'

'ஃபுல்லர் கருத்துப்படி, இந்தக் குறிப்பேடு ரெண்டு பாகங்கள் கொண்டது. அதோட ஒரு கடிதமும் இருக்கு, என்று விஜய் ஆரம்பித்தான். 'காலிஸ்தெனிஸ் பத்திய பாகத்த காலிஸ்தெனிஸே எழுதியிருப்பது போல தெரியறது. ஆனா அதை யூமனியஸ், தான் எழுதியிருந்த 'அலெக்ஸாண்டரின் செயல்கள்' என்ற புத்தகத்திலிருந்து நீக்கிவிட்டு தன் சொந்த குறிப்பேட்டின் பகுதியாக அதை வைத்துக்கொண்டார். காலிஸ்தெனிஸ் கூற்றுப்படி, சாக்டியன் பாறைக்கு படையெடுத்தபோது, அலெக்ஸாண்டர் அவரை ஒரு ரகசிய பணிக்காக அனுப்பினாரு இந்தக் கதையில நிறைய விடுபட்டிருக்கு. ஏன்னா, குறிப்பேட்டில இந்தப் பகுதி ரொம்பவும் சேதாரமாயிருக்கு. அதனால அவரோட ரகசியப் பணியின் நோக்கங்கள் என்னன்னு தெளிவா இல்ல. ஆனா, அவரு பாக்ட்ரியா காடுகளில் சுத்தினதையும், மரங்கள், இலைகள் ஆராய்ச்சி பண்ணதையும் பத்தி நிறையவே இருக்கு. அர்த்தம் மட்டும் புரியல.'

'அவ்வளவுதானா?' இது கொஞ்சம் எதிர்மறை உச்சக்கட்டம் என்று அலைஸ் யோசித்தாள்.

'இந்தக் கத அவ்வளவுதான். காலிஸ்தெனிஸ் வேலை முடிஞ்சி திரும்பி வந்துட்டார். அலெக்ஸாண்டர் அவரோட சேவைய பாராட்டி நன்றி தெரிவிச்சார்.'

'அப்புறம் கொஞ்சநாள் கழிச்சி அவரே அவர தூக்கில போட்டார்,' என்று சொல்லி காலின் நமட்டாகச் சிரித்தான். 'மனநிலை மாற்றங்கள்.'

'காலிஸ்தெனிஸ் பாக்ட்ரியாவில பார்த்ததை குறிப்பேடு சரியா சொல்லுதா?' என்று சுக்லா மென்மையாகக் கேட்டார். அவர் இவ்வளவுநேரம் அமைதியாக யானைத்தந்தக் கனசதுரத்தை

ஆராய்ந்தவாறு அவர்கள் பேசுவதைக் கேட்டு உட்கார்ந்திருந்தார்.

விஜய் குறிப்புகளைப் பார்வையிட்டு இல்லையென்று தலையசைத்தான். 'ஃபுல்லருடைய மொழிபெயர்ப்பில் அதப்பத்தி எதுவும் இல்ல. அது அசலான பாபிரஸ் ஆவணங்களில் இருந்து பின்னாடி அந்தப் பகுதி சேதப்பட்டிருக்கலாம்.'

'அது சாத்தியந்தான்,' என்று அலைஸ் குறிப்பிட்டாள். 'அலெக்ஸாண்டரின் ஆசியப் படையெடுப்பின்போது, காலிஸ்தெனிஸ் பல விஞ்ஞான வேலைகள்ல ஈடுபட்டிருந்தார். ஆனால் ஆச்சரியம் என்னன்னா, இந்தக் கதையில நிறைய விஷயங்கள் இல்ல. உதாரணத்துக்கு, பாக்ட்ரியா காடுகள்ல்ல அவர் என்ன பண்ணினார்?'

'யூமனியஸ் கதை கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்கு. சொல்றேன். தயாரா இருங்க.' விஜய் கண்களில் ஒரு மினுமினுப்பு ஜொலித்தது. 'யூமனியஸ் சொல்றத வச்சுப் பாக்கும்போது, அலெக்ஸாண்டருக்கு அவர் அம்மா ஒரு தோல்காகிதம் கொடுத்தா, அதில ஆறு பாட்டுகள் இருந்திச்சி. 'கடவுள்களின் ரகசியம்' என்று யூமனியஸ் எதைச் சொன்னானோ அதைக் கண்டுபிடிக்க அந்தப் பாட்டுக்கள் உதவியாய் இருக்கும்ன்னு நம்பினாங்க. யூமனியஸ் அந்த ரகசியம் என்னன்னு சொல்லலை. ஆனா அதைக் கண்டுபிடிக்க அலெக்ஸாண்டருக்கு அந்தத் தோல்காகிதத்தில இருந்த பாட்டுகள் உதவும்ன்னு சொன்னாரு ஒரு ராத்திரியில சின்ன தோல்பையையும், எண்ணெய்த்தோல் பையையும் தூக்கிக்கிட்டு ரெண்டுபேரும் படையவிட்டு போனாங்க. பைகளில் என்ன இருந்ததுன்னு யூமனியஸ்க்குத் தெரியாது. அவங்க ஒரு ரகசிய இடத்த கண்டுபிடிச்சாங்க. அது ஐந்துதலைப் பாம்புமாதிரி இருந்த ஒரு பாறைக்குள்ளாற இருந்திச்சி. யூமனியஸை வெளியே விட்டுவிட்டு அலெக்ஸாண்டர் மட்டும் கொஞ்சநேரம் உள்ளே போனார். அவரு திரும்பிவரும்போது, அவரோட மார்புக்கவசமும், உடலை மூடியிருந்த தோல்கவசமும் நனைந்திருந்திச்சி. அவர் குளத்தில குளித்தது போல தெரிந்தது. அந்த இரவு என்ன நடந்திச்சின்னு யூமனியஸ்க்குத் தெரியாது. ஆனா அவர் இப்படி முடிக்கிறார்; அலெக்ஸாண்டர் கடவுள்களின் ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டார்; அந்த இரவிலிருந்து அவரும் கடவுளாக மாறிவிட்டார்.'

விஜய் முடித்தவுடன் அங்கே மௌனம் நிலவியது.

'இது ஒரு கதை,' என்று அலைஸ் இறுதியாகப் பேசினாள். 'அலெக்ஸாண்டர் தன்ன கடவுள்ன்னு அறிவிச் சாருன்னும், தன்னை வழிபடனும்னு சொன்னாருன்னும் வரலாற்று ஆவணங்கள்

சொல்றமாதிரியே இந்தக் கதையும் சொல்லுது. ஆனா இது 'அலெக்ஸாண்டர் வீரதீரச்செயல்கள்'ல இருந்து எடுக்கப்பட்டது மாதிரி தெரியது.'

'நானும் அதக் கேள்விப்பட்டிருக்கேன்,' என்றான் காலின். 'எனக்கு கிரேக்க வரலாறு தெரியாதுன்னு சொல்லமுடியாது. அது அலெக்ஸாண்டர் பத்தின கதைத்தொகுப்புதானே?'

'நல்லது, அத நான் கிரேக்க சரித்திரம்னு சொல்லமாட்டேன்,' என்று அலைஸ் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். 'கிரேக்க அலெக்ஸாண்டர் வீரதீரங்கள் என்று யாரோ ஒரு கிரேக்க எழுத்தாளன் எழுதினான். அவனை போலி காலிஸ்தெனிஸ்ன்னு சொல்றாங்க. அந்தத் தொகுப்பு மூன்றுவிதமா இருக்கு; ஒவ்வொன்றும் மற்றதவிட ரொம்ப புனைவானது. முதல் பிரதி கிபி 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அந்தக் கதைகள் நம்பமுடியாத அளவுக்கு அலெக்ஸாண்டரைப் பத்தி பேசுது. வரலாறு என்பத விட அது வெறும் புனைவுதான்.'

காலின் பல்லிளித்தான். 'வாஸ்தவம்தான்; எனக்குத் தெரியும் அது,' என்று அவன் எதிர்ப்பாய்ப் பேசினான். 'நிஜமாகவே.'

விஜய் சொன்னதை அலைஸ் யோசித்துக் கொண்டிருந்தாள். 'அலெக்ஸாண்டரின் ஒரே தேடல் உலகத்தை ஜெயிப்பதுதான். அது சரித்திரத்தில பலமா சொல்லப்பட்டிருக்கு.' அவள் அசைந்துகொடுக்கவில்லை. ஒரு பேச்சுக்கு 'கடவுள்களின் ரகசியத்தை' கண்டுபிடிக்கும் தேடலில் அவர் இருந்தார் என்று சொன்னாலும், யூமனியஸ் உருப்படியா அதைப்பத்தி எதுவும் சொல்லலியே. அலெக்ஸாண்டர் பாறைக்குள்ள போனாரு; கவசமெல்லாம் நனைய திரும்ப வந்தாருன்னுதான் அவன் சொல்றான்.'

'ஒருவேளை, கடவுள்களோட நீச்சல்குளத்தை அவரு பார்த்திருக்கலாம்,' என்று காலின் பல்லிளித்தான். 'அது ரொம்ப சிறப்பானது; இல்லை?'

அலைஸ் அவனைப் பார்த்து முறைத்தாள். 'ரொம்ப வேடிக்கையா இருக்கு, காலின். ஆனால் நிஜத்தில, அலெக்ஸாண்டர் 'வீரதீரங்கள்'ல்ல வர்ற கதைகள் மாதிரி அது அதீதமான புனைவாகத்தான் இருக்கு. அலெக்ஸாண்டரைக் கடவுளாக வரைவது 'வீரதீரங்கள்' கதைகள்ல சகஜமானது. ஒருவேளை, யூமனியஸ் இத தன் அதிகாரப்பூர்வமான ஆவணங்கள்ல சேர்க்காமல் விட்டிருக்கலாம். இது மிகவும் கற்பனையானது; அதனால உண்மையாக இல்ல.'

சுக்லா தொண்டையைச் சரிசெய்து விஜயைப் பார்த்துப் பேசினார். 'அந்த ஆறு பாட்டுக்களும் எதைப்பத்தி என்று யூமனியஸ் சொல்றானா?'

'நீங்க கேட்கமாட்டீங்கன்னு நினைச்சேன்.' விஜயின் முகபாவனை அவன் ஏதோ ஒரு முக்கியமான விசயத்தைச் சொல்லப்போகிறான் என்பது போல இருந்தது.' அவன் உண்மையிலேயே ஒவ்வொரு பாட்டையும் தன் குறிப்பேட்டில பதிவுசெய்திருக்கான். ஃபுல்லர் அத எல்லாத்தையும் மொழிபெயர்த்திருக்கிறார். சில வார்த்தைகள் காணாமல் போய்விட்டன; ஆனா ஒவ்வொரு பாட்டின் சுருக்கமும் இங்க இருக்கு. இதோ.'

அவன் தன் குறிப்புநோட்டில் ஒரு பக்கத்தைத் திருப்பி வாசிக்க ஆரம்பித்தான்.

23

ஆபத்து காத்திருக்கிறது

கூப்பர் தன் ஆடம்பர அறையின் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு கணினியில் தெரிந்த கிறிஸ்டியன் வான் குளூக்கின் முகத்தை வெறித்தான். தன் வேலையின் போக்கைப் பற்றி வான் குளூக்கிற்கு இதுவரையிலான நிலையைச் சொல்லிமுடித்திருந்தான். வான் குளூக் தலையசைத்துக் கொண்டே கேட்டான்; இந்த அழைப்பைச் சீக்கிரம் முடிக்கவேண்டும் என்னும் ஆர்வம் அவனிடம் தெளிவாகத் தெரிந்தது.

அலைஸ் யார்கூட இருக்கிறாள் என்பதைக் கூப்பர் சொன்னபோதுதான், அந்த ஆஸ்ட்ரியன் தொழிலதிபரின் முழுக்கவனத்தையும் ஈர்த்தான். காலவெளியைக் கடந்து வான் குளூக்கின் கழுகுக்கண்கள் கூப்பரைத் துளைத்தன.

'எனக்கு அந்தப் பெயர்கள் தெரியும்,' என்று கூர்மையாக வந்தது அவனது குரல். இரண்டாயிரம் வருடங்களாக மறைந்திருந்த ஒரு மகாபாரத ரகசியத்தை அபகரிக்க கடந்த வருடம் அமைப்பு எடுத்த முயற்சியைத் தடுத்த ஆட்களை அவன் இன்னும் மறக்கவில்லை. 'அவர்கள் நமக்கு பெருத்த தலைவலி. அவர்களால்தான் போனவருசம் நம் அமைப்பின் முக்கியமான ஒரு ஆளை இழந்துட்டோம்.' அந்தச் சொதப்பல் வீரச்செயலை அவன் கூப்பர்க்கு வேகமாக சுருக்கமாகச் சொன்னான்.

'நாம ஏன் அவங்கள காலிபண்ணக்கூடாது?' அமைப்பு அவர்களைச் சும்மா விட்டுவைத்திருப்பது கூப்பர்க்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்ற உண்மை அமைப்பின் வழக்கமான பாணிக்குப் பொருந்தவில்லை. 'பிழைத்தவர்கள் யாருமில்லை; சாட்சிகளும் இல்லை' என்பதுதான் அமைப்பின் வழிகாட்டிக்கொள்கை. அமைப்பில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் இந்தக் கொள்கையால் மூளைச்சலவைச்

செய்யப்பட்டிருந்தார்கள். விதிவிலக்குகள் கிடையாது. இந்த விஷயத்தில் கொள்கை விலகலை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கூப்பர்க்குப் புரியவில்லை என்பதை வான் குளூக் உணர்ந்தான். கூப்பர் அமைப்பின் உறுப்பினர் இல்லை; அவன் வெறும் ஊழியன்தான். 'இந்த அமைப்பு ரொம்ப காலமாகவே இருக்கு. வரலாற்றின் விடியல் காலத்திலிருந்தே. சொந்த பகைகளைவிட இது ரொம்ப பெரிசு. இந்த அமைப்பு எதுக்காக இருக்குன்னு யாருக்கும் தெரியாது. அது உறுப்பினர்களுக்கு மட்டுமே தெரியும். நாம என்ன செய்ய முடியும்ங்றது முக்கியமான ஆட்களுக்கு மட்டுமே தெரியும். ரகசியமா, திரைக்குப் பின்னாடி இருந்து அரசியலை, போரை, பொருளாதாரங்களை, வியாபாரத்தை, நிதிச்சந்தைகளை நாம ஆட்டிப்படைச்சி நிறைய விஷயங்கள சாதிச்சோம். அதனால்தான் உனது வேலை இப்போ ரொம்ப முக்கியம்.'

'அதில ஒரு பிரச்சின இருக்கு,' என்று கூப்பர் தன் மோவாயைச் சிந்தனையோடு தடவினான். 'இப்ப இந்திய உளவுத்துறை இதில ஈடுபட்டிருக்கு. அதனால விஷயம் ரொம்பவே கஷ்டமானதா இருக்கு.'

வான் குளூக்கின் முகத்தில் புன்னகையின் நிழல் தெரிந்தது. 'எனக்கு உன்ன தெரியும். நீ உன் பாதையில சரியாகத்தான போவ. இந்த ஆட்கள் நமக்கு முக்கியமில்ல. நமக்கு ஒரு நோக்கம் நிறைவேறி ஆகணும். அதனால, யாராவது உன் வழியில குறுக்கிட்டா, நீ என்ன செய்யனுமோ அத செய். யாரும் உயிரோடு தப்பிக்கக் கூடாது; சாட்சிகள் இருக்கக் கூடாது. உனக்கு நம்ம விதிகள் தெரியும்.

கூப்பர் தலையசைத்தான். இணைப்பு இறந்துபோனது.

படுக்கையறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. கிருஷ்ணன். அவன் கலவரம் அடைந்தவனாகக் காணப்பட்டான்.

'பிரச்சினையா?' என்று கூப்பர் கேட்டான்.

'ஐபி ஆபிசரும், ராதாவும் டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸ்க்கு வந்தாங்க.'

கூப்பர் மின்னல் வேகத்தில் வசிப்பறையில் இருந்தான். 'அப்படி இருக்க முடியாது.'

கிருஷ்ணன் கணினியைக் காட்டினான். இரண்டு சிகப்புப் புள்ளிகள் மினுக்கின. 'அதுதான் டைட்டன். அந்த ரெண்டும் அவர்கள்தான்.'

கூப்பர் தன்கண்களைத் தன்னாலே நம்பமுடியவில்லை. இந்திய உளவுத்துறை அவர்களின் திட்டங்கள் பற்றி துப்பறிந்துவிட்டதா? சாத்தியமில்லை. யாருக்குமே தெரியாது. அவனுக்குக் கூட முழுவிவரங்கள் தெரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் இந்தப் பணித்திட்டம் 25 வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தது என்பது மட்டுமே. ஸ்டாவ்ரோஸைச் சேர்த்துக்கொண்டு ஒலிம்பியாஸ் கல்லறையின் அகழ்வாராய்ச்சிக்கு அவன் தலைமைதாங்க வேண்டும் என்று அவனுக்குச் சொல்லப்பட்டிருந்தது. கல்லறையிலிருந்து எதை எடுத்துவர வேண்டும் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டிருந்தது. கலைப்பொருள் மீட்கப்பட்டவுடன் அவன் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்கு ஆணையிடப்பட்டிருந்தது. இதற்கு மேல் அவனுக்கு ஒன்றும் தெரியாது.

அவனுக்குத் தெரியாதது புலனாய்வுத் துறைக்கு என்ன தெரியும்?

எனினும் அவன் செயலில் இறங்கியாகவேண்டும். உடனடியாக ஒரு செயல் திட்டம் தீட்டினான். முதலில் அவன் தொலைபேசியில் அழைக்க வேண்டும்; பின் அவன் தன் இலக்குகளை அழித்துவிட வேண்டும். அவர்கள் உண்மையின் அருகில் வந்துவிட்டார்கள்.

அப்படி நிகழ்வதை அவனால் அனுமதிக்க முடியாது.

24

காணாமல் போன கண்ணி

விஜய் ஆறு பாட்டுக்களையும் வாசித்தான். ஒவ்வொன்றையும் எண்ணிக்கைப் படுத்தவும், காணாமல் போன வார்த்தைகளைத் தாண்டிப் போகவும் அவன் இடைவெளிவிட்டான்.

'முதல் பாட்டு,' என்று அவன் ஆரம்பித்தான். 'இதுதான் இருக்கிறதிலேயே முழுமையான பாட்டு.

பின்... தந்திரத்தின் பிறந்த இடம்
மரணத்தில் பிறந்தது, பழிவாங்க சூளுரைத்தது
ஒரு பெரிய ராஜாவின் பரம்பரையை வீழ்த்தியது
வீரதீரச் சூரனே. தாயக்கட்டையை உருட்டு!
அப்புறம்... அதிர்ஷ்டம் உன்னை வழிநடத்தும்!

'இரண்டாம் பாட்டிலிருந்து பல வார்த்தைகள் இல்ல,' என்று சொல்லிவிட்டு மேலும் படிக்கலானான்.

'வேகமான... கண்ணின்... குறுக்கே
உப்பில்லாக் கடலின்... அருகே
மூன்று சகோதரகள் அந்த... வழியில்
பாதாள லோகத்தின்... நுழைய.
தோண்டு... நாகத்தின் முத்திரை
அப்புறம் பார்... தேடல்.'

'மூன்றாவது பாட்டு,' என்று அவன் தொடர்ந்தான்.

'மேலும்... அந்த... பாறை
பறித்துவிடு... மேலும்... மரத்தின் அடிப்பகுதி

முதலில் இருக்கும்... மேலும் பழம்
கறுப்பான.. நிறம்நிரம்பிய... வெள்ளை
மேலும்.. அல்லது... அடுத்து மென்மையான
பழத்தினுடைய...
உஷார்... தீக்காயங்கள்... ஸ்பரிசத்தில்.

'நான்காவது பாட்டு:

பின் நுழை... வாசல்...
பள்ளத்தாக்குகள்... கிழக்கே
தேர்ந்தெடு...இங்கே, ஞாபகம் வைத்துக்கொள்
நீயும்... அப்பல்லோ இருக்கும் இடத்தில்.

'ஐந்தாவது பாட்டு:

விளிம்புக்கு... மேலே
அங்கே... இரவும்... சந்திக்கும்
மேலும்... போசெய்டானின் கம்பு
அந்த... நாகத்தின்..... க்கு
ஐந்து... ... ... காவலாளி
வாசல்... ... .கொடுக்கும்... ... ... வாழ்க்கை.

'கடைசியாக ஆறாவது பாட்டு:

ஞாபகம் வைத்துக்கொள்.... போல... தைரியமான
புறக்கணித்தால்.... உனக்கு ஆபத்து
அந்த மூலக்கூறுகள்... ... ...ஒன்றாக
பாதுகாக்கப்படுகின்றன... ... ...பார்வை
அதனுடைய... ... ...கண்டுகொள்ளாமல்
இழப்பாய்... .....மிகவும் அற்புதமான பரிசு.

விஜய் தன் குறிப்புகளிலிருந்து தலைநிமிர்த்தினான். அங்கே மௌனம் நிலவியது.

'அதனால, அலெக்ஸாண்டர் வச்சிருந்த தோல் காகிதத்துக்கும், அலைஸ் கல்லறையில கண்டுபிடிச்ச யானைத்தந்த கனசதுரத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கு, என்று காலின் முதலில் பேசினான். 'முதல்

பாட்டைத்தவிர, மற்ற பாட்டுக்களும், கனசதுரத்தில இருக்கிற பாட்டுக்களும் ஒரேமாதிரியா இருக்கு. சில வார்த்தைகள் காணாமல் போயிட்டாலும் ஒற்றுமை இருக்கு.'

சுக்லா தலையசைத்தார். 'அப்படித்தான்னு எனக்கும் தோணுது,' என்று அவர் ஒத்துக்கொண்டார். 'பாக்ட்ரியா காடுகள்ல காலிஸ்தெனிஸ் மேற்கொண்ட பயணத்தை நீ விவரிக்கும்போது, தாவரங்கள பத்தி, இலைதழைகள பத்தி பாட்டில இருந்த வர்ணனைதான் எனக்கு ஞாபகம் வந்திச்சு. அலெக்ஸாண்டரோட தேடல் ஒரு ஐந்துதலைப் பாம்போட முடிஞ்சுதுன்னு நீ சொன்னது வேற என்னோட முடிவை ரொம்பவும் பலமாக்கிடுச்சு. கனசதுரத்தில இருக்கிற ஒரு பாட்டு ஐந்து மணிமுடி கொண்ட பாம்பு வாசலுக்குக் காவலாய் இருந்ததுன்னு சொல்லுது. அது ஐந்துதலை பாம்புன்னு விளங்கிக் கொள்ளலாம். ஆனா நான் எல்லாப் புள்ளிகளையும் வேகமாக ஒண்ணுசேத்து இல்லாத ஒரு தொடர்பை ஏற்படுத்திட்டு இருக்கேனோன்னு தோணுது.'

'ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு,' என்று அலைஸ் மெதுவாகச் சொன்னாள். பேசும்போதே அவள் சிந்திப்பது போலத் தோன்றியது. கனசதுரம் இந்தியக் கடவுள்பத்தி, ஒரு ஆதிகாலத்து இந்திய மொழியின் ஆதிகாலத்து இந்திய எழுத்துருவில் சொல்லுது. அலெக்ஸாண்டரோட தோல்காதிதத்தில இந்தியக் கடவுள்களுக்குப் பதிலாக கிரேக்கக் கடவுள்கள்தான் இருக்கு 'சூரியனுக்குப் பதில் அப்போல்லோ இருக்கு. சிவாவுக்குப் பதில் போசெய்டான். கடவுள்கள் மட்டுமில்ல; பாதாளத்துக்குப் பதில் ஹீடிஸ் இருக்கு தோல்காகித எழுத்து கிரேக்க எழுத்தா இருக்கலாம். ஒருவேளை கனசதுரம் இந்தியாவில தோன்றியிருக்கலாம்; யாரோ அத கிரேக்கத்தில மொழிபெயர்த்திருக்கலாம். அப்பத்தான், அசலான சமஸ்கிருதத்தைவிட, கிரேக்கத்தில இருந்தாத்தான், அலெக்ஸாண்டரால சுளுவா புரிஞ்சுக்க முடியும்.'

'இதில நிறைய கேள்விகள் இருக்கே' என்று விஜய் சொன்னான். 'ஒரு கேள்வி என்னன்னா, கனசதுரம் எங்கிருந்து வந்தது? அசலான சமஸ்கிருதத்தை யாரு கிரேக்கத்தில மொழிபெயர்த்தது? சமஸ்கிருதமும், கிரேக்கமும் தெரிஞ்ச யாரோ ஒருத்தன்தான் அத செஞ்சிருக்க முடியும். அப்புறம், அந்தத் தோல்காகிதம் எந்த தேடலை உருவாக்கிச்சு? கிரீஸிலிருந்து இந்தியா வரைக்கும் வந்த அந்த தேடல் அலெக்ஸாண்டருக்கு ரொம்பவும் முக்கியமாத்தான் இருந்திருக்கணும். யூமனியஸ் கருத்துப்பிரகாரம், அந்தத் தேடல் கடவுள்களோட ரகசியத்தைக் கண்டுபிடிக்கிறதுக்கான தேடல். ஆனா எல்லாத்தையும்

விளக்குறதுக்கு அது போதாது.'

'அந்தக் கடிதத்த பத்தி என்ன சொல்ல?' என்று அலைஸ் விஜயிடம் கேட்டாள். 'குறிப்பேட்டோட ஒரு கடிதமும் இருந்திச்சின்னு நீ சொன்னீயே.

விஜய் தலையசைத்தான். 'ஃபுல்லர் கருத்துப்பிரகாரம், குறிப்பேட்ட பத்தின ஒரு இணைப்புக் கடிதம் அது. அது யூமனியஸ் ஒலிம்பியாஸ்க்கு எழுதனது, யூமனியஸ் ஒலிம்பியாஸ்க்கு கடிதத்தையும், குறிப்பேட்டையும் அனுப்பிவச்சதாக ஃபுல்லர் நம்புகிறார். ஒருவேளை யூமனியஸ் தான் சாகறதுக்கு முன்னாடி ஒலிம்பியாஸ்க்கு அனுப்பிவச்சிருக்கலாம்.'

அலைஸ் முறைத்தாள். 'யூமனியஸ் இறந்தது கிமு 316-ல் ஒலிம்பியாஸ் அதே வருசந்தான் இறந்தாள். அவளுக்குக் கடிதம் கிடைச்சிருக்காது. ஒருவேளை ஃபுல்லரோட அனுமானம் சரியா இருக்கலாம். எப்படியோ எல்லா ஆவணங்களும் எகிப்துக்குப் போச்சு.' அவள் தோள்குலுக்கினாள். 'இதெல்லாம் ஊகந்தான். நமக்கு எந்த ஆதாரமும் இல்ல; உண்மைகளும் இல்ல.'

விஜய் புன்னகைத்தான். அலைஸ்க்குள் இருக்கிற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வெளியே வருகிறார். சரித்திர ஆவணத்திலிருந்து விலகிச் சென்று விளக்குவதை தொல்பொருள் ஆதாரமில்லாமல் அவள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

'எப்படியோ,' என்று அவன் தொடர்ந்தான். 'அலெக்ஸாண்டரின் சிந்து நிலப்படையெடுப்பு வெற்றி அடைஞ்சதுன்னு ஒலிம்பியாஸ்க்கு கடிதம் மூலம் சேதி தெரிஞ்சிடுச்சி. அவள் அலெக்ஸாண்டருக்குக் கொடுத்திருந்த வட்டமான உலோகத் தட்டு, அவள் சொன்னமாதிரியே, அவரோட தெய்வத்தந்தையான ஜீயஸின் பீடத்துக்கு அடியில புதைக்கப்பட்டாச்சுன்னும் அந்தக் கடிதம் அவளுக்கு சொல்லிடுச்சி. பாபிலோனுக்குத் திரும்பி போவதற்கு முன்னாடி, ஹைஃபேசிஸ் நதிக்கரையில அலெக்ஸாண்டர் கட்டின 12 பீடங்கள்ல அது ஒண்ணு. உலோகத்தட்டு கடவுள்களோட ரகசியத்தைக் கண்டுபிடிக்க உதவும் ஒரு திறவுகோல்னு யூமனியஸ் சொல்றார்.'

'அதனால, இந்த உலோகத்தட்டு கனசதுரத்தில பொறிக்கப்பட்டிருக்கிற பாட்டுக்களோட அர்த்தத்தைக் கண்டுபிடிக்க ஒரு வழியா இருக்கும்னு நீ நினைக்கிறியா?' தன் நண்பன் என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்பதை காலின் ஊகித்தான்.

'சாத்தியந்தான்,' என்று உடன்பட்டார் சுக்லா. 'ராதா சொன்னது மாதிரி, ஒரு வழிகாட்டிப்புள்ளி இல்லாமல், கனசதுரப் பாட்டுக்களோட அர்த்தத்தைப் புரிஞ்சிக்க முடியாது. ஒருவேளை இந்த உலோகத்தட்டு அந்த உசாத்துணையா இருக்கலாம். அப்படி உண்மையிலே இருந்தால், ஒலிம்பியாஸ் அந்தத் திறவுகோலைப் புதைக்கச் சொன்னதில அர்த்தமிருக்கும். யோசித்துப் பாத்தா, கடவுளோட ரகசியத்த தன் மகனுக்குப் பரிசாகக் கொடுக்கிறதுக்கு முன்னாடி அதை யாரும் பாக்கறதை அவள் விரும்பவில்லை.'

'எனக்கு இன்னும் ஒரு விசயம் புரியலை. ஒலிம்பியாஸ்க்கு இந்த கனசதுரமும், உலோகத்தட்டும் எங்கிருந்து கிடைச்சிருக்கும்?' அலைஸ் இந்தப் புதிரை நினைத்துக் குழம்பினாள். 'இத யார் அவளுக்குக் கொடுத்திருப்பா? ஏன்? அவள புதைக்கும்போதே, உலோகத்தட்டையும் புதைச்சிருந்தா நல்லா இருந்திருக்கும். அப்படி பண்ணியிருந்தா, நாம அதைத் தோண்டி படிச்சி அதுக்கும் கனசதுரத்துக்கும் தொடர்பு உண்டான்னு தெரிஞ்சிருக்க முடியும்.'

விஜய் அவளைப் பார்த்துப் பல்லிளித்தான். அவன் இன்னும் ஓர் ஆச்சரியத்தை ஒளித்து வைத்திருந்தான். குறிபேட்டைப் பற்றிய குறிப்பு கொண்ட பெட்டிக் கோப்பை அவன் தட்டினான்.

'யூமனியஸ் குறிப்பேட்டைக் கண்டுபிடிக்க உதவிய கோப்பு பற்றி நான் உனக்கு சொல்லியிருந்தேனே,' என்று விஜய் விளக்கினான். 'அதுதான் இது. ஏதோவொரு காரணத்துக்காக, உலகத்திலுள்ள அகழ்வாராய்ச்சிகள பத்தின செய்தித்தாள் கட்டுரைகளையும், மற்ற ஆவணங்களயும் எங்க அப்பா வரிசைப்படுத்தி வச்சிருந்தார். அவர் ஏன் இத செஞ்சாருங்றதுக்கு எந்த துப்பும் இல்ல. ஆனா நான் குறிப்பேட்ட படிக்கும்போது, இந்தக் கோப்பிலிருந்த ஒரு செய்தித்தாள் கட்டுரை எனக்கு திடீர்னு ஞாபகம் வந்திச்சி.'

கோப்பில் உள்ள செய்தித்தாள் துண்டுகளைப் புரட்டினான். அவன் சொன்ன கட்டுரை கிடைத்தது. 'இது 1985-ல் வந்த செய்தித்துணுக்கு. வாசிக்கட்டுமா?'

மற்றவர்கள் தலையசைத்து காத்திருந்தனர்.

'மாவீரன் அலெக்ஸாண்டர் கட்டிய பீடங்களின் மிச்சங்கள் கண்டுபிடிப்பு,' என்று செய்தித்தலைப்பை விஜய் வாசித்தான். 'ஹோசியர்புர் மாவட்டத்தில் தசுயா நகரத்தின் அருகே சிந்துப் பள்ளத்தாக்கு சேதாரங்களைத் தோண்டியெடுக்கும் போது, ஏராளமான

பெரிய கட்டுமானங்களின் களிமண் செங்கல் அஸ்திவாரங்கள் போல இருந்தவற்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தனர். ஒவ்வொரு கட்டுமானத்தின் அஸ்திவாரமும் 17 சதுரமீட்டர் அளவு இருக்கும். அலெக்ஸாண்டர், வீடுதிரும்பும் நடையை ஆரம்பிப்பதற்கு முன்னால், பியாஸ் நதிக்கரைகளில் அவர் கட்டியிருந்த 12 பீடங்களின் சேதாரங்களாக இவை இருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் அனுமானிக்கிறார்கள். அலெக்ஸாண்டர் காலமான பின்பு 400 வருடங்களாக இந்திய அரசர்கள் இந்தப் பீடங்களில் வழிபாடு நடத்தினர் என்றபோதிலும், இரண்டாயிரம் வருசங்களாக அவை காணாமலே போயிருந்தன.'

அவன் அவர்களைப் பார்த்தான். 'இப்ப இதைக் கவனியுங்க. ஒரு பீடத்தை ஆராய்ச்சி பண்ணிட்டிருக்கும் போது, அடையாளம் தெரியாத கறுப்பு உலோகத்தால செய்யப்பட்ட ஒரு சின்ன வட்டமான தட்டு ஒண்ணு அஸ்திவாரக் கல்லுக்குப் பக்கத்தில பொதைஞ்சி கிடந்ததைக் கண்டுபிடிச்சாங்க. அது கிரேக்க மூலம் மாதிரி தெரியல. அதனால அதனுடைய இயல்பு, தோற்றம், அது அங்க எப்படி வந்திச்சி; இதெல்லாம் ஒரு மர்மமாவே இருந்திச்சி. அகழ்வாராய்ச்சிக்குழு இந்தக் கண்டுபிடிப்பைப் பத்தி மௌனமாவே இருந்தது. உலோகத்தட்டு அலெக்ஸாண்டர் காலத்த விட ரொம்ப பழமையானது; சித்திர எழுத்துக்களால் ஆன ரகசிய குறியீடுகள் அதில பொறிக்கப் பட்டிருந்திச்சி; அவ்வளவுதான் அவங்க சொன்னாங்க. அந்த உலோகத்தட்டு டில்லி தேசிய அருங்காட்சியகத்துக்கு அனுப்பப்படுவதாகவும், அங்கே அது ஆராயப்படும்; பேணிக் காக்கப்படும்னு செய்தி சொல்லுது.'

சுக்லா புன்னகைத்தார். விஜய் என்ன சொல்ல வருகிறான் என்று அவர்க்குத் தெரிந்தது. 'நீ இன்னும் பெரிசா தாவுற. இந்த மர்ம உலோகத்தட்டுதான் யூமனியஸ் தன்னோட கடிதத்திலே சொன்னதுன்னு நீ சொல்ற?'

'சரியா சொன்னீங்க.' விஜய் கோப்பை மேஜைமீது வைத்தான். 'இது ஒண்ணும் பெரிய தாவல்ன்னு நான் நினைக்கல. முதல் விசயம், தட்டு அலெக்ஸாண்டர் காலத்தவிட ரொம்ப பழசானது. இரண்டாவது, அது எப்படி அலெக்ஸாண்டர் பீடத்தோட அஸ்திவாரக் கல்லுக்கடியில போச்சு? அலெக்ஸாண்டரே அங்கே கொண்டுபோய் வச்சிருக்காவிட்டால். அதைத்தான் அலெக்ஸாண்டர் செஞ்சார்ன்னு யூமனியஸ் சொல்றான்.'

'இந்த தர்க்கத்தில இன்னும் சில இடைவெளிகள் இருக்கு, விஜய்,' என்று அலைஸ் தன் சிந்தனைகளைச் சொல்லும்போது, அவள் நெற்றி கோடுகளால் சுருங்கியது. 'அகழ்வாராய்ச்சியாளர்கள் சொன்ன மிகவும் அடிப்படையான ஊகம் ஒண்ணு இருக்கு. இந்தக் கட்டுமானங்கள் அலெக்ஸாண்டரின் பீடங்களின் சேதாரங்கள் என்பதுதான் அது. மறுபடியும் சொல்றேன், இதை நிரூபிக்க ஸ்தூல ஆதாரம் ஏதுமில்ல. அவை மாவீரன் அலெக்ஸாண்டருக்கு எந்த சம்பந்தமும் இல்லாத, வெறும் 2000 வருட வயதான சேதாரங்களாக இருந்தால்?'

சுக்லா முறைத்தார். 'தட்டு 1985-ல் கண்டுபிடிக்கப்பட்டது. நான் இத தேசிய மியூசியத்தில பார்த்ததில்ல.'

'மியூசியத்துக்கு போன்பண்ணிக் கேட்டால்?' என்று காலின் சொன்னான். 'ஒரு வேளை அது பொதுமக்கள் பார்வைக்கு இல்லாம இருக்கலாம். நிறைய மியூசியங்கள்ல இந்த மாதிரி பொருட்களை எல்லாம் அடித்தளங்கள்ல பெட்டியில போட்டு வச்சிருங்காங்க. கெய்ரோ மியூசியத்தில அப்படி செய்யறாங்கன்னு எனக்குத் தெரியும். பொதுவா மக்களுக்கு அந்த மாதிரியான பொருட்கள பாக்குறதுக்கு அனுமதி கிடையாது. ஆனா அலைஸ் ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர். அவ போய் ஆராய்ச்சிக்கு வேணும்னு சொல்லி அந்த தட்டைப் பாக்க அனுமதி கேட்டா, கிடைக்கலாம்.'

அலைஸ் தலையசைத்தாள். 'நிச்சயமா. தட்டுக்கும் கனசதுரத்துக்கும் உண்மையிலேயே சம்பந்தம் உண்டான்னு தெரிஞ்சிக்க நான் ஆர்வமா இருக்கேன். குறிப்பேட்டில சொன்ன விசயத்துக்கு ஆதாரம் இருக்கான்னு கண்டுபிடிக்கறதும், இல்லை இது அலெக்ஸாண்டர பத்தின வெறும் கற்பனாவாதம்தான்னு தீர்மானிக்கறதும் பெரிய விசயம்.'

'முயற்சி செய்யலாம்,' என்று விஜய் எழுந்தான்; தன் கைப்பேசி வைத்திருந்த மேஜை நோக்கிச் சென்றான்.

'ஒருவேளை நான் உதவலாம்,' என்றார் சுக்லா. தேசிய மியூசியத்தில இருக்கிற பொறுப்பாளர் என் நண்பர்தான். அவர் நமக்காக உதவி செய்யலாம்.' அவர் விஜய்க்கு ஃபோன் நம்பரைக் கொடுத்தார்.

அடுத்த சில நிமிடங்களில், விஜய் சுக்லாவின் நண்பரிடம் பேசி, தொல்பொருள் ஆராய்ச்சிப் பொறுப்பாளரும், கலைப்பொருட்களைப் பாதுகாப்பவருமான அதிகாரியின் நம்பரை வாங்கி, மியூசியத்தில் உலோகத்தட்டை ஆய்வுசெய்வதற்கு அனுமதியும்

வாங்கிக்கொண்டான்.

விஜய் கைப்பேசியைக் கீழே வைத்தவுடன், அவன் கண்கள் மிளிர்ந்தன. 'நம்ம அனுமானங்கள் சரியானதா என்று பார்ப்போம். எப்படி இருந்தாலும், கனசதுரப் புதிரை நம்மால் தீர்க்கமுடியாது. அது அலெக்ஸாண்டரின் அம்மாவுக்கு எப்படி கிடைத்தது என்று கூட நமக்குத் தெரியாது. ஆனா, அலைஸ் சொன்னது போல, ஒரு பழங்காலத்து மர்மக்கதையைக் கோத்து குறிப்பேட்டுக் கதையில உண்மை இருக்கான்னு சரிபார்ப்பது நல்லது.'

'சரியா சொன்ன நீ. கனசதுரப் புதிரை நாம தீர்க்கப்போவதில்ல,' என்றான் காலின் அழுத்தமாக. 'போன தடவை நாம பாட்டுக்கள புரிஞ்சுக்க முயற்சி பண்ணும் போது, தீவிரவாதிகள்கிட்ட மாட்டிக்கிட்டு செமத்தியா வாங்கிக் கட்டிக்கிட்டோம். இது ஒரு சுவாரஸ்யமான விவாதம். ஆனால் இது இங்கேயே முடிஞ்சிட வேண்டியதுதான். உலோகத் தட்டைப் பார்ப்போம்; அப்புறம் யூமனியஸ் கதைவிடுறானா இல்லையான்னு தெரிஞ்சிடும். அங்கேயே அத்தியாயத்த முடிச்சிற வேண்டியதுதான்.'

விஜய் புன்னகைத்தான். 'நிச்சயமா. நான் உன்கூட இருக்கேன். இந்த தடவை நான் பிடிவாதமாக இருக்கப் போவதில்ல. இந்தக் கனசதுரம் நமக்கு சம்பந்தமில்லாதது. அதனோட ரகசியங்கள் என்ன வேணாலும் இருந்திட்டு போகட்டும். அதெல்லாம் எப்பமே புதைந்து கிடக்கட்டும்.'

அவன் சொன்னது தப்பு என்று சீக்கிரமே நிரூபிக்கப்படும் என்று அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

25

தீய நோக்கங்கள்

'அவங்க கிளம்பிட்டாங்க,' என்று கிருஷ்ணன் அறிவித்தான்.

கூப்பர் திரையில் தெரிந்த புள்ளிகள் கூட்டத்தை வெறித்தான். புன்னகைத்தான். 'அவர்கள் கோட்டையை விட்டு கிளம்பிட்டாங்க. நல்லது. 'இந்த வாய்ப்புக்காகத்தான் அவன் காத்துக்கொண்டிருந்தான். கோட்டைக்கு வெளியே இருக்கும்போது, அவர்கள் பலகீனமானவர்கள். 'அவங்களைப் பின் தொடர்ந்து எனக்குத் தகவல் சொல்லு.'

ஆறடி உயரமும், கலைந்து கிடக்கும் பொன்னிறமுடியும், அடிக்கவருவது போன்ற நீலக்கண்களும் கொண்ட சதைப்பிடிப்பான ஓர் இளைஞன் கூப்பரின் அருகே நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்துத் திரும்பினான் கூப்பர். ரிலே கூப்பரின் கொலைப்படையில் ஒரு வருடத்திற்கு முன்புதான் இணைந்தான். ஆனால் குரூரமாக, துல்லியமாக கொலைசெய்யும் அவனது பாணி கூப்பர்க்கு மிகவும் பிடித்துப் போயிற்று. கூப்பரைப் போலில்லை அவன். கத்தி, கயிறு, மற்றும் தன் வெறுங்கைகள் ஆகியவற்றைத்தான் அவன் பயன்படுத்தினான். அவனுக்கு ஏன் துப்பாக்கிகள் பிடிக்கவில்லை என்று கூப்பர் ஒருதடவை கேட்டபோது. 'என்னோட இலக்குகள் சாவும்போது நான் அதை உணரணும்; சாவில உறைஞ்ச உடம்போட ஸ்பரிசம்; கடைசி மூச்சு - இதுதான் எனக்குப் பிடிச்சது,' என்று அவன் சொன்னான்.

அவனது இந்த குணம்தான் அவனை மிகக்கடுமையாக வேலைசெய்ய வைத்தது; உடல்பலத்தைக் கூட்டும் ஊக்கமருந்துகளால் தன் தேகத்தை மேலும்மேலும் இரும்பாக்கச் செய்தது. மிகவும் நெருக்கத்தில் இருந்து கொலை செய்வதற்கு பலியாளை விடவும் பலமுள்ளவனாக இருப்பது அவசியம். எதிரி உன்னை விட பலசாலி ஆகிவிட்டால், உனக்கு வெற்றி கிடைக்காது.

இரண்டு இரவுகளுக்கு முன்பு கிரீஸில், அவன் ஒரே இரவில் இரண்டு தடவை துப்பாக்கி பயன்படுத்த வேண்டியதாயிற்று. அது அவனுக்குப் பிடிக்கவில்லை. அந்த இரவில் கூப்பரும் ஸ்டாவ்ராஸும் அகழ்ந்தெடுத்த கல்லறையை வெடிகுண்டுகள் வைத்து தகர்க்க வேண்டும் என்பதுதான் அவனுக்கு இடப்பட்டிருந்த கட்டளை. ஆனால் அவன் களத்தில் இருந்தபோதே, அந்தப் பெண் ஆராய்ச்சியாளர் எதிர்பாராதவிதமாக வந்துதொலைந்து விட்டாள். அவளைத் தப்பிக்க விடக்கூடாது என்பதற்காக, வேறுவழியில்லாமல் அவன் அவளைப் பார்த்துச் சுட வேண்டியதாயிற்று. ஆனால் துப்பாக்கி அவனது முதல்தேர்வு ஆயுதமல்ல என்பதால், அவனது குறி இலக்குத்தப்பிவிட்டது. அவன் அவளை ஹெலிகாப்டரில் துரத்தி நெடுஞ்சாலையில் எதிர்கொண்டபோது, இன்னொரு தடவை தயக்கத்துடன் துப்பாக்கியைப் பயன்படுத்தினான். ஆனால் அவளோ தந்திரமாக நிறுத்திவைக்கப் பட்டிருந்த ஹெலிகாப்டரைத் தாண்டி காரை ஓட்டிக்கொண்டு தப்பித்து விட்டாள். உயிர்பிழைத்துவிட்டாள்; நாட்டைவிட்டே ஓடிவிட்டால். இப்போது அவர்கள் அவளருகே வந்துவிட்டார்கள்.

'நீ இதை சொந்தவிசயமா கையாளனும்னு நான் விரும்புறேன்,' என்று கூப்பர் ரிலேயிடம் சொன்னான். 'அவங்களுக்கு என்ன தெரியுங்றதை நீ கண்டுபிடி. அப்புறம் மூன்றுபேரையும் தீர்த்திரு. அவங்க டில்லிக்குப் போனா, நீயும் உடனே கிளம்பி அங்க இருக்கிற நம்ம டீம்மோட ஐக்கியமாயிடு.'

ரிலே தலையசைத்தான். அன்றிரவு அவன் முடிக்காமல் விட்ட வேலையை முடித்துவைக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. தீர்க்கப்படுவதற்கு அவனுக்கு ஒரு கணக்கு இருக்கிறது. 'நிச்சயமா. நான் பாத்துக்கிறேன். நீங்க மத்த ரெண்டு பேரையும் கவனிச்சுக்குவீங்க இல்லையா?' அவன் குரலில் ஒரு தெற்கத்திய இழுவைத்தடம் ஒலித்தது. டெக்ஸாஸில் பலகாலம் இருந்த அனுபவம்.

கூப்பர் தலையசைத்தார். 'அந்த பொம்பளைய இங்க உயிரோட கொண்டுவர தீர்மானிச்சிட்டோம். அவளைக் கவனிக்கிறதுக்கு முன்னாடி அவளுக்கு என்ன தெரியுங்றத கண்டுபிடிச்சாகணும்.' அவன் இன்னொரு திரையில் இருந்த ஒரு சிகப்புப் புள்ளியைச் சுட்டிக்காட்டினான். 'ஆனா, அதுக்கு முன்னாடி இன்னொரு இலக்கைக் கவனிச்சாகணும்.' அவன் ரிலேயைப் பார்த்துப் புன்னகைத்தான். 'நான் உன்ன அனுப்பியிருப்பேன். ஆனா அந்த வேலைக்கு நமக்கு தொலைதூர ஆயுதங்கள் வேண்டும்.'

'மகிழ்ச்சி,' என்றான் ரிலே. குரல் தட்டையாக ஒலித்தது.

கூப்பர் அறையைவிட்டு வெளியேறி மின்னேணியின் பட்டனை அழுத்தினான். திட்டப்படி எல்லாம் நடந்துவிட்டால், இந்த இரவே வேலையின் ஒருபகுதி முடிந்துவிடும். வழக்கம்போல யாரும் உயிரோடு இருக்கமாட்டார்கள்.

26

புதுடில்லி

ராதா மெதுவாக காரோட்டினாள், கனத்த போக்குவரத்து இடைஞ்சலில். டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ் அலுவலகங்களை விட்டு வந்தவுடன், அவன் இம்ரானைத் தொடர்புகொள்ள முயன்றாள். ஆனால் பதில் இல்லை. ஒருவேளை அவர் டைட்டன் தலைமை நிர்வாக அதிகாரியுடன் சந்திப்பில் இருக்கலாம் என்று ஊகித்து, அவள் விஜயை அழைத்தாள்.

விஜய் அவளுக்கு குறிப்பேட்டை பற்றிய விவாதத்தை சுருக்கமாகச் சொன்னான். தாங்கள் தேசிய அருங்காட்சியகத்திற்குப் போய்க்கொண்டிருப்பதாக தகவல் தெரிவித்தான். 'வேலை முடிஞ்சவுடன், நான் உன் அப்பாவை உங்க வீட்டில இறக்கிவிடுறேன்,' என்று அவன் அவளிடம் சொன்னான். சரி, வீட்டுக்குப் போய் அவர்களுக்காக காத்திருக்கலாம் என்று அவள் கிளம்பினாள். ரகசியக் குறிப்பேடு, உலோகத் தட்டு, அதற்கும் யானைத்தந்தக் கனசதுரத்திற்கும் இருக்கும் சம்பந்தம்... கதை அவளுக்குள் ஆர்வத்தை தூண்டியது. அவர்கள் மியூசியத்திற்குப்போய் என்ன ஆயிற்று என்பதை அறிய அவளும் ஆர்வமாக இருந்தாள்.

தெற்கு டில்லியில் தன் அப்பாவோடு தான் வசிக்கும் வெள்ளைச்சுவர் பங்களாவின் வாசல்கதவுக்கு வெளியே அவள் காரை நிறுத்தினாள். வீட்டுக்குள் நுழையும்போது, இம்ரான் எண்ணுக்கு மீண்டும் ஒருமுறை முயற்சி செய்தாள். இந்தத் தடவை அவர் இணைப்பில் வந்தார்.

'மன்னிக்கவும்,' என்று அவர் ஆரம்பித்தார். 'தலைமை அதிகாரியோட சந்திப்பு தாமதமாக ஆரம்பிச்சிது. அவர்க்கு ஃபோன்கால்ஸ் வந்துகிட்டே இருந்திச்சு. அதனால சந்திப்பு இழுத்துக்கிட்டே போச்சு. இப்பத்தான் முடிச்சு, உன்னை கூப்பிடலாம்னு நினைச்சேன். உன் மீட்டிங் எப்படி போச்சு?'

சக்ஸேனாவைச் சந்தித்த நிகழ்வை அவரிடம் அவள் சுருக்கமாகச் சொன்னாள்.

'ம்ம்ம். நிச்சயமா நீ அவனுக்குக் கோபத்த மூட்டியிருப்ப. சக்ஸேனா மேல நாம ஒரு கண் வச்சிக்கிறது நல்லது. அவன்கிட்ட நிறைய ரகசியங்கள் இருக்கு.' இம்ரான் தனது சந்திப்பைப்பற்றி அவளுக்குச் சொல்ல ஆரம்பித்தார். 'ஒண்ணும் சொல்லிக்கிற மாதிரி இல்ல. சக்ஸேனா உன்கிட்ட சொன்னதைத்தான் அவனும் என்கிட்ட சொன்னான். ஒரே ஒரு வித்தியாசம். அவன் குரல் மென்மையாக இருந்திச்சி. பயமுறுத்துறமாதிரி இல்ல. முழு ஒத்துழைப்பும் தர்றதாக சொன்னான். தன்னோட ஆவணங்களை எல்லாம் காட்டுறேன்னுகூடச் சொன்னான். ரொம்ப சுவாரஸ்யம் அது. மறைக்கிறதுக்கு அவங்ககிட்ட ஏதாவது இருந்திச்சுன்னா, ஆவணங்களைக் காட்டுற அளவுக்கு வெளிப்படையா இருக்கமாட்டாங்க. அமெரிக்காவில இருக்கிற அவங்களோட ஆவணங்களையும் சரிபாக்கணும்னு பேட்டர்சன்கிட்ட சொல்லிவைக்கணும்,' என்று அவர் பேசி முடித்தார்.

விஜயும் மற்றவர்களும் கோட்டைக்குத் திரும்புவதற்கு முன்னாடி ஏதாவது சாப்பிட்டு ஆகவேண்டும் என்று அவள் தீர்மானித்தாள். கோட்டைக்குத் திரும்ப போவது நீண்ட பயணம்; அதற்குள் அவர்களுக்கு பசி வந்துவிடும். அதனால் அவர்களுக்கு உணவு தயார் செய்ய வேண்டும். அதற்கு முன்னால் ஒரு குளியல் போட்டுவிடுவது நல்லது.

சீக்கிரமாகவே குளித்துவிட்டு உணவு தயாரிக்க ஆரம்பித்து விட்டாள். முடித்த போது, நேரம் இரவு 8.30 ஆகிவிட்டது. அவர்கள் ஏன் இன்னும் வரவில்லை. மியூசியத்தில் ஏதாவது மிகவும் சுவாரஸ்யமான விசயம் நடந்துவிட்டதா? ஒரு கணம் அவர்களைப் போனில் அழைக்கலாமா என்று அவள் நினைத்தாள். ஆனால் அவளுக்குத் தெரியும், விஜய் அவளை இன்னும் கூப்பிடவில்லை என்றால், அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும் என்று.

தொலைக்காட்சியைப் போட்டாள். சானல்களை மாற்றிக் கொண்டேயிருந்தாள். அவர்கள் சொல்லப் போவதைக் கேட்க அவள் காத்திருக்க வேண்டியதுதான்.

தீர்க்கப்பட்டார்கள்

இம்ரான் பேட்டர்சனுடன் பேசி முடித்துவிட்டு கைப்பேசி அழைப்பைத்

துண்டித்து பெருமூச்சு விட்டார். பணிப்படைத் தலைவர் பற்றிய அவரது ஆரம்பகால கணிப்பு சரியாகத்தான் இருந்திருக்கிறது. தர்க்கரீதியான மனிதரான பேட்டர்சன் பேச்சுவார்த்தைக்கு கடினமானவர். விறைப்பானவர். காவல்துறையிலும் உளவுத்துறையிலும் பெரும்புகழ் பெற்றிருந்த இம்ரான் பெரும்பாலும் தன்வழியிலேயே போய் பழக்கமானவர். தன்வழியில் போக அவரால் முடியவில்லை என்றால், தான் விரும்பியதை அடைய அவர் விதிகளைக் கூட மீறிவிடுவார். சூழல்களையும், மனிதர்களையும் எடைபோடக் கூடிய அவரது அமானுஷ்யமான திறமையும், அவரின் உள்ளுணர்வுகளின் துல்லியமும் அவர்க்கு நன்றாகவே கைகொடுத்தது. தன் மேலதிகாரிகள் விரும்பிய பலன்களை அவரால் அடிக்கடி கொடுக்க முடிந்தது. தன் உள்ளுணர்வுகளையோ தன் திறமையையோ விளக்க வேண்டிய அவசியம் அவர்க்கு இருந்ததில்லை.

பேட்டர்சன் வித்தியாசமானவர். அவர்க்கு ஸ்தூலமான நிஜங்கள் வேண்டும். உள்ளுணர்வுகள் அல்ல. வெறும் உணர்வுகள் அல்ல; சாட்சிகள் வேண்டும். மருத்துவ நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட வேலையில் டைட்டனில் இருந்த யாரோ ஒருவர்க்கு சம்பந்தம் இருக்கிறது என்று சொன்ன இம்ரானின் உள்ளுணர்வை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

'நீங்க பெற்ற வாக்குமூலங்கள்ல சிறப்பா ஒண்ணும் இல்லை,' என்று அவர் நிராகரிப்பது போல சொன்னார். டைட்டன் தலைமை மருத்துவ அதிகாரியோடு ராதா செய்த நேர்காணலைப் பற்றி, தான் தலைமை நிர்வாக அதிகாரியைச் சந்தித்த நிகழ்வைப் பற்றி இம்ரான் பேட்டர் சனுக்குச் சொன்ன போதுதான் பேட்டர்சன் அப்படிச் சொன்னார். 'நானே குர்ட் வாலஸோடு பேசிட்டேன். அவரு முழு ஒத்துழைப்பு தர்றதா சொன்னாரு மேலும், அவரோட நிர்வாகக் குழுவின் அமெரிக்க ஆளோ அல்லது இந்திய ஆளோ இதில ஈடுபடலைன்னு தர்க்கரீதியா பேசினாரு. அது வெறும் உள்ளூர் செயல்பாடு மாதிரி தெரியது. அதுக்கு உலகத் தீவிரவாத அமைப்பு நிதியுதவி செய்திருக்கலாம். அதனால, நான் சொல்றேன், நீங்கள் இன்னும் ஆழமா தோண்டி கண்டுபிடிங்க. டைட்டனைத் துரத்துறத விட்டுட்டு, யாரு இதயெல்லாம் செய்றதுன்னு கண்டுபிடிங்க.'

அலைஸ் திடீரென்று இங்கு வந்திருப்பது பற்றியும், அவளுக்கு குர்ட் வாலஸைத் தெரியும் என்பது பற்றியும், இரண்டு புள்ளிகளையும் இணைத்து ஓர் உயிரியல் தீவிரவாதக் கோணத்தைத் தான் பார்க்க முயல்வது பற்றியும் அவரிடம் சொல்லிவிடலாமா என்று இம்ரான்

நினைத்தார். ஆனால் அந்தக் கருத்து மனதில் தோன்றியவுடனே அதை அவர் புறந்தள்ளினார். அவர் அலைஸிடம் பேசிவிட்டார். அவள் சொன்னது உண்மைதான் என்று அவர் நம்பினார். கிரீஸில் அவள் பெற்ற அனுபத்திற்கும், இங்கே நடந்த சம்பவங்களுக்கும் இடையே ஒரு பொதுவான காரணியாக குர்ட் வாலஸ் இருந்தபோதிலும், இரண்டிற்கும் இடையே என்ன சம்பந்தம் இருக்கிறது என்று அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர்க்கு ஞாபகம் வந்தது. அவளது ஆராய்ச்சிக் குழுவினரைக் கொலைசெய்ததாக அவள் குற்றஞ்சாட்டிய இரண்டு இணை இயக்குநர்களான ஸ்டாவ்ரோஸ் மற்றும் பீட்டரின் படங்களை அவள் அவரிடம் கொடுத்திருந்தாள். அவர் அவற்றை ஓர் உலகத் தரவுகளின் மையத்தில் பொருத்திப் பார்த்துவிட்டு வெற்றியடைந்திருந்தார்.

இம்ரான் விஜயின் எண்ணுக்கு டயல் செய்தார். அவனிடம் தான் பெற்ற செய்தியைச் சொல்லி சுருக்கமாகப் பேசிமுடித்தார்.

அவரது கார் அவரது குடியிருப்பு வளாகத்திற்குள் சென்றது. காவலாளி அவர்க்கு வணக்கம் வைத்தான். பதிலுக்கு அவர் புன்னகைத்தார். காவலாளிகள் குறைந்த சம்பளத்திற்கு கடினமான, நன்றியைச் சம்பாதிக்காத வேலையைச் செய்யும் கான்ஸ்டபிள்கள். மற்ற காவல் அதிகாரிகள் அவர்களைக் கடக்கும்போது ஒன்று கண்டு கொள்ளாமல் போய்விடுவார்கள்; அல்லது விறைப்பாக அவர்களை முறைத்துவிட்டுப் போய் விடுவார்கள். ஆனால் இம்ரான் அப்படியல்ல. ஒரு மனிதன் தன் சகமனிதனுக்குக் குறைந்தபட்சம் செய்யக்கூடியது புன்னகைப்பது, வாழ்த்துவது, அவர்களின் வேலைக்கு நன்றிசொல்வது; இதுதான் இம்ரானின் உணர்வு.

இம்ரான் தன் அபார்ட்மெண்ட் பளாக்கில் இறங்கி ஓட்டுநரைப் பார்த்து புன்னகைத்துவிட்டுச் சென்றார். பட்டனை அமுக்கியதும், மின்னேணி தரைத்தளத்திற்கு வந்தது. அதில் ஏறி தனது ஆறாவது தளத்திற்குச் சென்றார். இறங்கிய தளத்தின் கூரையில் பொருத்தியிருந்த பல்ப் மினுக்மினுக்கென்று எரிந்தது. அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டார். பேணிக்காக்கும் ஆட்களிடம் புகார் செய்யவேண்டும். தன் வீட்டின் கதவைத் திறந்தார்.

அவர் நுழைந்தபோது அவரது வசிப்பறை இருட்டாய் இருந்தது. மின்விளக்கைப் போட்டுவிட்டு ஜன்னலருகே சென்றார். சாலையைத் தாண்டி நடந்துகொண்டிருந்த கோபுரக் கட்டுமானத்தின் அசிங்கமான காட்சியைக் கண்டு முகம்சுளித்தார். ஆறு மாடிகள்

கட்டிமுடிக்கப்பட்டிருந்தன; ஆறாவது தளத்தின் வேலை நடந்துகொண்டிருந்தது. அது அவரது அபார்ட்மெண்ட்டுக்கு சமஅளவு உயரத்தில் இருந்தது. இதற்கு முன்னாடி அவர் அந்தக் கட்டிடத்தைப் பார்த்ததில்லை. ஆனால் இப்போதெல்லாம் ஒவ்வொரு நாளும் தொழிலாளர்கள் வேலை செய்வதைப் பார்க்கிறார்.

இது ஓர் அன்றாட வழமைக்காட்சி. அவரது வீட்டைப் பேணிக்காப்போன் திரைகளை திறந்துவைத்துவிட்டே போய்விடுகிறான். அவர் சாயங்காலம் வீடுதிரும்பியவுடன் கோபுரக்காட்சியை மறைப்பதற்காக திரைகளை இழுத்து மூடிவிடுகிறார்.

அவரது பிளாக்பெரியில் பீப் சத்தம் கேட்டது. அவர் அறைக்குள் நுழைந்தவுடன் கைப்பேசித் திரையில் அவர் பார்த்த செய்தி அவரது தாடையை இறக்கியது. படுக்கையறை நோக்கிப் போனார்.

வார்த்தைச் செய்தி அவரை அதிர்ச்சியாக்கியது. ஜன்னல் பக்கம் போய் திரைகளை மூடக்கூட அவர் மறந்துவிட்டார். சாலையைத் தாண்டி கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்தின் ஆறாவது தளத்தில் ஓர் உருவம் இருட்டிலிருந்து வெளிவந்து நிற்பதை அவர் கவனிக்கவில்லை.

அவரது படுக்கையறையிலிருந்து இரண்டு அடிகூட அவர் தள்ளி நிற்கவில்லை. அப்போது ஜன்னல் கண்ணாடி உடைந்து நொறுங்கியது; விசில் சத்தம் கேட்டது. ஏதோவொன்று அறைக்குள் பறந்துவந்தது.

அவரது உள்ளுணர்வும் பயிற்சியும் உடனடியாக இயங்கியது. அவர் அநிச்சையாக எதிர்வினையாற்றினார். ராக்கெட் ஏவிய வெடிகுண்டு அவர்க்கும், அபார்ட்மெண்ட் கதவுக்கும் இடையில் வந்து விழுந்து திறந்தவண்ணம் கிடந்தது.

வெடிகுண்டு வசிப்பறைத் தரையில் விழுந்து வெடித்தவுடன், இம்ரான் தன் இடதுபக்கம் தாவி கதவு வழியாக படுக்கையறைக்குள் விழுந்தார். குண்டுவெடிப்பில் அபார்ட்மெண்ட் ஆட்டம் கண்டது. கனத்த சத்தம் வெளியே இறங்குமிடம் வரைக்கும் கேட்டது.

படுக்கையறைச் சுவர்களில் குண்டுவெடிப்பின் பாதிப்பு எதிரொலித்தது. இம்ரான் தரையில் விழுந்தவுடன் மார்பில் கூர்மையான ரணவலி தாக்கியது. தரையில் ரத்தம் சிந்துவதை அவர் பார்த்தார்.

அவரது ரத்தம். அவர் தாக்கப்பட்டுவிட்டார். எதனால் என்று அவர்க்குத் தெரியவில்லை. குண்டின் சிறிய துண்டா? பறந்துவந்து

உடைந்த கண்ணாடியா? எதுவாயினும் சரி, அவர் காயமடைந்துவிட்டார். மிகவும் மோசமாக.

பின் இருட்டு அவரை ஆட்கொண்டது.

அவரது பிளாக்பெரி, நீண்டு உயிரற்றுக் கிடந்த அவரது கையை விட்டு மூன்றடி தள்ளி கிடந்தது. திரையில், பிரகாசித்த செய்தி தெளிவாகத் தெரிந்தது: 'கூப்பர் இன்று குடியேற்ற சோதனையைத் தாண்டி வந்துவிட்டார்.

27

கலைப்பொருள் காட்சியகத்தில் இரவு

விஜய் இணைப்பைத் துண்டித்துவிட்டு மற்றவர்களைப் பார்த்தான். 'பேசினது இம்ரான்,' என்று அவர்களுக்குத் தெரிவித்தான். 'அலைஸ் கொடுத்த படங்கள சோதிச்சுப் பாத்திட்டாரு. பொருந்திடுச்சாம். பீட்டரோட பெயர் உலகக் குற்றவாளிங்க டேட்டாபேஸில இருக்கு. அவனுக்கு 'ரீப்பர்'ன்னு (அறுவடை செய்பவன்) பேரு. அவனோட உண்மையான பேரு பீட்டர் கூப்பர். முப்பது வருசங்களா நடந்த நிறைய கொலைகளுக்கு அவன்தான் காரணம். துப்பாக்கியைக்குறி தவறாம சுடுறதல மகா கெட்டிக்காரன்; அவன் ஒரு போதும் இலக்குத்தவறி சுட்டதில்ல. இருபத்தியொரு நாடுகள் அவன தேடிக்கிட்டு இருக்கு. அவன் எப்படி உங்க அகழ்வாராய்ச்சிக் குழுவுக்குள்ள வந்தான்?'

'எனக்குத் தெரியாது,' என்று சொன்ன அலைஸ் குரல் நடுங்கியது. 'அவன்... சும்மா அதில இருந்தான். ஸ்டாவ்ரோஸ்கூட. அவங்க இணை இயக்குநர்கள். வாலஸ் அறக்கட்டளையால் நியமிக்கப்பட்டவங்க. ஸ்டாவ்ரோஸ் ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளன். பீட்டர் பணவிசயத்தையும், தொடர்புகளையும் கையாளுற ஆளு. அவனுக்கு அகழ்வாராய்ச்சி பத்தி ஒண்ணும் தெரியாது. அவனப் பத்தி எனக்கு அவ்வளவுதான் தெரியும். கையெழுத்து போட்டவுடன் நான் கேள்விகளே கேட்கவில்லை. ஒலிம்பியாஸின் சாத்தியமான கல்லறையைத் தோண்டப் போறோம்ன்ற ஒரு உணர்ச்சி வேகத்தில மற்ற விசயங்கள பத்தி நான் யோசிக்கவே இல்ல. ஸ்டாவ்ரோஸ் பத்தி ஏதாச்சும் தெரிஞ்சுதா?'

விஜய் தலையசைத்தான். 'ஒன்றும் தெரியலை. இம்ரான் சொல்றத வச்சு பாக்கும்போது, அவன் பேரு டேட்டாபேஸில் இல்ல. இருந்தாலும் அதுக்கு ஒரு அர்த்தமும் இல்ல. இண்டர்போல் கண்காணிப்பிலோ அல்லது வேறெந்த உளவுத்துறையின் கண்காணிப்பிலோ இல்லாத ஒரு ஆளாகக்கூட அவன் இருக்கலாம்.'

'கவலைப் படாத,' என்று காலின் அலைஸ்க்கு தைரியமூட்டினான், அவள் பயப்படுவதைப் பார்த்து. 'நீதான் கூப்பரை கிரீஸிலே விட்டுட்டு ரொம்ப தூரம் வந்திட்டியே., இந்தியா வரைக்கும் வந்து அவன் உன்னைக் கண்டுபிடிக்க முடியாது. அமெரிக்காவில இருக்கிற உன் வீட்டுக்குப் போகாம, இங்க நீ வந்திட்டங்றதை அவன் எப்படி ஊகிக்க முடியும்? அப்படியே அவன் கண்டுபிடிச்சாலும், பிரச்சினை இல்லை. ஏன்னா, ஜவுன்கார் வரைபடத்தைத் தாண்டி இருக்கு; உள்ளூர்க்காரங்களுக்கே அது எங்க இருக்குன்னு தெரியாது.'

'ஆனா நாம இப்ப ஜவுன்கார் கோட்டையில இல்ல.' திடீரென்று கோட்டையிலிருந்த பக்காவான பாதுகாப்பு அமைப்பினால் ஏற்பட்ட சௌகரியத்தை, பாதுகாப்பு உணர்வை அலைஸ் திடீரென்று உணர்ந்தாள். 'இப்ப நாம அவங்களுக்கு காத்திட்டு இருக்கிற வாத்துக்கள்தான்.'

'கூப்பர் உன்ன இந்தியா வரைக்கும், ஜவுன்கார் கோட்டை வரைக்கும் கண்டுபிடிச்சாலும், அது காலின் சொன்னது போல சாத்தியமில்லைதான்; இருந்தாலும், நீ இன்னைக்கு டில்லிக்கு கார் ஓட்டிட்டு வந்ததை அவன் எப்படி தெரிஞ்சிக்க முடியும்?' என்று சொல்லிவிட்டு விஜய் சிரித்தான். 'கிரீஸில அன்னைக்கு ராத்திரி நீ படாதபாடு பட்டுட்டன்னு எனக்குத் தெரியும். ஆனால் நீ அத கடந்துவந்திட்ட. இம்ரான் வேற குடியேற்ற அதிகாரிகள உஷார்படுத்திட்டாரு. அந்த மனுசனோட உண்மையான அடையாளத்த கண்டுபிடிச்சவுடனே அத அவரு செஞ்சிட்டாரு. கூப்பர் இந்தியாவின் குடியேற்ற சோதனையைத் தாண்டிவந்துட்டான்னா, நமக்குத் தெரிஞ்சிடும். அப்படியேதும் நடந்தா, இம்ரான் உளவுத்துறையோட பாதுகாப்பான வீட்ல உன்ன தங்க வைக்கிறதாக சொல்லியிருக்கார்.'

அவர்கள் மியூசியத்தை அடைந்தார்கள். பார்வையாளர்கள் நேரம் முடிந்துபோனதால், பிரதான வாயில்கதவு மூடியிருந்தது. பொறுப்பாளர்க்கு விஜய் போன் செய்தான். அவர் அவர்களுக்காக காத்துக்கொண்டிருந்தார். காவலாளி கதவைத் திறந்து காரை உள்ளே விட்டான். பின் கதவை இழுத்து மூடினான்.

'வாவ், அதப் பாரேன்,' என்று காலின் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு பெரிய ரதம் கூண்டுக்குள் இருந்தது. அதை அவர்கள் கடந்துபோனார்கள். 'நிஜமாவே, ஆதிகாலப் பொருள் மாதிரி இருக்கு.'

விஜய் காரை நிறுத்தினான். எல்லோரும் இறங்கினார்கள். காவலாளி ஓடிவந்து, தான் அவர்களைப் பொறுப்பாளரிடம்

கூட்டிக்கொண்டு போவதாகச் சொன்னான்.

கிர்னாரிலிருந்து வந்த, அசோக சக்கரவர்த்திக் கல்வெட்டின் நகல்வடிவத்தை அவர்கள் கடந்துபோனார்கள். அது மியூசியத்தின் உள்பிரகாரத்து சுவரோரமாய் நின்றிருந்தது. வட்டமான திறந்தவெளியில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் அவர்கள் நுழைந்தார்கள்.

மியூசியப் பொறுப்பாளரின் அறை முதல் தளத்தில் இருந்தது. அவர்கள் அறையில் நுழைந்தபோது, அவர் எழுந்து வணக்கம் சொன்னார்.

'டாக்டர் சுக்லா,' என்று அவர் சுக்லாவின் கையைக் குலுக்கினார். 'நான் ராஜீவ் சாகு; தொல்பொருள் கியூரட்டர்; தொகுப்புக் காப்பாளன். உங்கள சந்திச்சதில் எனக்கு மகிழ்ச்சி.' அவர் அலைஸிடம் திரும்பினார். 'நீங்க மிஸ் டர்னராக இருக்கணும்,' என்று அவள் கையைக் குலுக்கினார். 'சந்தோசம். நான் உங்களுக்கு என்ன செய்யனும்?'

காலின் விஜயைப் பார்த்து முறைத்தவண்ணம் சொன்னான்: 'நாம என்ன பாதுகாப்புக்கு கூடவந்தவங்களா?'

விஜய் பல்லிளித்துக் கொண்டு தன்னையும், காலினையும் சாகுவிடம் அறிமுகப்படுத்தினான்.

'ஓ. நாம பேசியிருக்கோம்,' என்று சாகு விஜயைப் பார்த்து பிரகாசமானார். காலினின் கையையும் குலுக்கினார், அவனிடம் ஒன்றும் பேசாமல்.

அலைஸ் குழப்பமாகத் தெரிந்தாள். உலோகத்தட்டு விஷயம் ஏற்கனவே விவாதிக்கப்ப்பட்டு உடன்படிக்கை ஏற்பட்டு விட்டதாக அவள் நினைத்திருந்தாள். 'வந்து... உலோகத்தட்டைப் பாக்க விரும்புறேன். 1985-ல தசுயாவில கண்டுபிடிக்கப்பட்ட தட்டு. கிரீஸ்க்குத் திரும்பி போறதுக்கு முன்னாடி மாவீரன் அலெக்ஸாண்டர் பியாஸ் நதி பக்கத்தில கட்டின ஒரு பீடத்துக்கு அடியில அவரு புதைச்சதாக சொல்லப்படுற தட்டு அது.'

'நிச்சயமா; நிச்சயமா,' என்றார் சாகு, அவர் அசையவில்லை. 'அந்தக் கலைப் பொருள் மேல உங்களுக்கு என்ன ஆர்வம்ன்னு எனக்குப் புரியல. அது பொதுமக்கள் பாக்கறதுக்கில்ல.'

'நாம பேசினோமே, மிஸ்டர் சுக்லா,' என்று விஜய் இடைமறித்தான். 'உங்ககிட்ட எங்கள பத்திச் சொன்னது டாக்டர் தத்தா. உலோகத்தட்டை

எங்களுக்கு காட்டுறதாக நீங்க சொன்னீங்களே.'

'பார்வையாளர் நேரம் முடிஞ்சவுடன்தான் நான் உங்கள மியூசியத்துக்குள்ள விடுவேன்னு சொன்னேன்,' என்று சாகு பதிலளித்தார், விஜயை ஏறெடுத்துப் பார்க்காமல். அவர் கண்கள் இன்னும் அலைஸ்மீது நிலைகுத்தியிருந்தன. 'அதுவே அரசாங்க விதிகளுக்கு புறம்பானது. ஆனா நான் உங்கள கேட்கலை. அந்த தட்ல ஏன் இந்த ஆர்வம்ன்னு மிஸ் டர்னரைத்தான் கேட்கிறேன். பொதுமக்கள் பார்வைக்கு வைக்கக்கூடாத ஒரு கலைப்பொருளைப் பாக்கணும்னு கேட்கிறாங்க. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்ன்னு சொல்லிக்கிட்டு இங்க வர்ற ஒவ்வொருத்தருக்கும் நான் நிச்சயமா உதவி பண்ணமுடியாது. அவங்கள அனுப்பியது டாக்டர் தத்தாவாக இருந்தாலும்கூட.'

அவர் எதிர்பார்ப்புடன் அலைஸையே உற்றுப் பார்த்தார்.

'நான் ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்,' என்று அலைஸ் சூடாக பதில்சொன்னாள். 'என் ஆதாரச் சான்றுகள்மீது உங்களுக்குச் சந்தேகமா? இணையத்தில என்னைத் தேடிப்பாருங்க. பழங்கால கிரீஸ் வரலாறு என் ஆர்வங்கள்ல ஒண்ணு. குறிப்பாக அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பிற்பட்ட கிரேக்க வரலாற்றில எனக்கு ஆர்வம் அதிகம். அதனாலதான், மாவீரன் அலெக்ஸாண்டரோடு தொடர்புகொண்ட ஒரு கலைப்பொருள் உங்ககிட்ட இருக்குன்னு நான் கேள்விப்பட்டவுடன், நான் அதைப் பாக்க ஆசைப்பட்டேன்.'

'உங்ககிட்ட ஏதாவது அடையாளம் இருக்கும்னு எனக்கு நிச்சயமா தெரியும்,' என்று தொடந்தார் சாகு; அவள் சொன்னதையெல்லாம் காதில் வாங்காதவர் மாதிரி. 'உதாரணத்துக்கு, உங்க அடையாள அட்டை? நீங்க சொன்னதுக்கு ஆதாரமா ஏதாவது ஒரு சான்று?'

தன் கன்னங்கள் சிவப்பேறியதை உணர்ந்தாள் அலைஸ். பர்ஸைக் குடைந்து கிரீஸ் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்த அடையாள அட்டையை எடுத்து அவரிடம் நீட்டினாள். அவர் அதை வாங்கி ஒரு கணம் பார்த்துவிட்டு அவளிடம் திரும்பி தந்தார்.

'நீங்க உலோகத்தட்ட பாக்கலாம்,' என்று சாகு தன் பாக்கெட்டிலிருந்து ஓர் ஒற்றை சாவி வளையத்தை எடுத்தார். 'அது இருக்கும் இடத்த காட்டுறேன். இரண்டாவது மாடியில இருக்கு.' அவர் கண்கள் மற்றவர்கள் மீது உடன்பாடு இல்லாமல் விழுந்தன. 'இவங்க எல்லோருமா கூட வரப் போறாங்க?'

'ஆமாம், வர்றாங்க,' என்று அலைஸ் உறுதியாகச் சொன்னாள். 'மிக்க நன்றி.'

'பின்னால வாங்க,' என்று சொல்லிவிட்டு நடந்தார் சாகு, மாடிப்படி ஏறி, ஆயுதங்களின் காலரி வழியாக எல்லோரும் சென்றார்கள். காலரியில் பழங்காலத்து வாள்கள், குத்தீட்டிகள், மற்றும் எல்லாவிதமான ஆதிகாலத்து, இடைகாலத்து ஆயுதங்கள் கண்ணாடிப் பேழைகளில் இருந்தன. காலரின் ஒரு முனையில் 'தனிப்பட்ட' என்ற வாசகம் எழுதப்பட்ட கதவு ஒன்று இருந்தது. சாகு கதவைத் திறந்தார்.

ஓர் எதிர்பார்ப்புக் கிளர்ச்சியுணர்வு அவர்களைப் பற்றிக்கொண்டது. அவர்கள் எதைப் பார்க்கப் போகிறார்கள்?

28

ஒரு புதிய மர்மம்

அறை இருட்டாக இருந்தது. விஜய் தன் கைப்பேசி டார்ச் லைட்டை அடித்து, மின்விளக்கு ஸ்விட்சைத் தேடிப் போட்டான். கூரையில் தொங்கிய மின்விளக்கு உயிர்பெற்று பீறிட்டு வந்த வெளிச்சவெடிப்பில் இருட்டு தகர்ந்து போனது. அலைஸ் மூச்சுச்திணறினான்.

அறைமுழுவதும் அடுக்குகள்; அடுக்குகளில் எல்லா வடிவங்களிலும் அளவுகளிலும் சின்னச் சின்ன பேழைகள்; அவற்றில் எல்லாவிதமான லிபிகளும் எழுதப்பட்டிருந்தன. எதுவும் அவளுக்குப் பரிச்சயமானது அல்ல. இது சரித்திரப் பொக்கிஷம் என்று அவள் உணர்ந்துகொண்டாள்.

சுக்லாவுக்கு அதே உணர்வுதான் இருந்தது. பொம்மைக் கடையில் நுழைந்து தான் விளையாட விரும்பும் பொம்மையைத் தேடும் குழந்தையைப் போல அவர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

'நாம தேடும் தட்டு எது?' என்று விஜய் உரக்கவே ஆச்சரியப்பட்டான்.

'இதுதான் அது,' என்று சாகு ஒரு சின்ன, வட்டவடிவமான கறுப்பு உலோகத் தட்டை எடுத்துக் காண்பித்தார். அதில் ஆறு குறியீடுகள் பொறிக்கப்பட்டிருந்தன.

அவர்கள் அந்தத் தட்டை வெறித்துப் பார்த்தனர். அந்த ஆறு குறியீடுகளும் அவர்களுக்குப் புரியவில்லை.

சாகு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். 'உங்களுக்கு 15 நிமிசத்துக்கு மேல டைம் தரமாட்டேன். முடித்தவுடன் அறையைப் பூட்டிவிடுங்க. நான் ஆபிஸில இருக்கேன்.' மேற்கொண்டு எதுவும் பேசாமல், அவர் படிக்கட்டை நோக்கி நடைபோட்டார்.

சில கணங்கள், அவர்கள் உலோகத்தட்டு முத்திரையை வெறித்தனர். அதைப் புரிந்துகொள்ள முயன்றனர்.

அதை உற்றுநோக்கியபின் கொஞ்சநேரம் கழிந்தது. அலைஸ் பேசினாள். 'ஏதாவது தோணுதா?'

சுக்லா தலையாட்டினார். 'கனசதுரத்துக்கு சம்பந்தமான எதையும் இதில என்னால பார்க்க முடியல. நான் சொன்னது தவறுன்னு நினைக்கிறேன்.' அவர் விரக்தியாகப் புன்னகைத்தார். 'நம்பிக்கையோட இருப்பது அல்லது அனுமானம் செய்வது தப்பில்ல. நான் சொன்னது சரியாக இருந்தா, உண்மையிலே இது சுவாரஸ்யமா இருக்கும்.'

'எனக்கு எதுவும் புரியல. இந்தப் பேழைக்கு ஒரு அர்த்தமும் இல்ல,' என்று விஜய் ஒத்துக்கொண்டான்.

'சரி. நாம இங்கிருந்து போய், ராதா இடத்துக்குப் போயிடுவோம்,' என்று காலின் கைகளைத் தேய்த்தான். 'எனக்கு அவளோட சமையல் எப்பவுமே பிடிக்கும்.'

'பொறு. ஃபோட்டோ எடுத்துக்கிறேன்,' என்று விஜய் தன் கைப்பேசியினால் ஃபோட்டோ எடுத்தான்.

அவர்கள் அறையைப் பூட்டிவிட்டு காலரியைக் கடந்தார்கள். பாதி இருட்டில் கூட ஆயுதங்கள் பயங்கரமாகத் தெரிந்தன. அந்தக் காலத்துப் போர்களில் அவை எப்படி படுபயங்கரமானதாக இருந்திருக்கும் என்று அவர்கள் கற்பனை செய்தார்கள்.

படிக்கட்டுக்கு இட்டுச்செல்லும் தாழ்வாரத்தில் அவர்கள் நடந்தபோது, ஒரு சத்தமான, வலி நிறைந்த அலறல் கேட்டது. அது பொறுப்பாளரின் அலுவலகத்திலிருந்து வந்தது. அதைத் தொடர்ந்து மேலும் பல கூர்மையான, வலிமிக்க அலறல்சத்தங்கள் எழுந்தன.

மியூசியத்தில் பிரச்சினை

சாகு எரிச்சலோடு தன் ஆஃபிஸ் நோக்கி துரிதநடை போட்டார். இன்று சீக்கிரமே வீட்டுக்குப் போகவேண்டும் என்று அவர் விரும்பியிருந்தார். ஆனால் தத்தாவின் எதிர்பாராத அழைப்பு அவர் திட்டத்தைக் கெடுத்துவிட்டது. அதிகநேரம் எடுக்காது என்று தத்தா உறுதிமொழி கொடுத்ததால், தத்தாவின் வேண்டுகோளை அவரால் நிராகரிக்க முடியவில்லை. ஆனால் முப்பது வருடங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்ட புரியாத உலோகத்தட்டில் ஏன் ஓர் அமெரிக்க தொல்பொருள் ஆராய்ச்சியாளர்க்கு அவ்வளவு ஆர்வம் என்பது அவர்க்குப் புரியவில்லை. அலெக்ஸாண்டரின் பீடங்கள் கண்டுபிடிக்கப்பட்டது

அந்த நேரத்தில் ஒரு பெரிய செய்தியாக இருந்தபோதிலும், அந்த சேதாரங்கள் புகழ்பெற்ற பீடங்கள்தான் என்று யாராலும் நிரூபிக்க முடிந்ததில்லை. அந்தக் கருத்து பொய்யென்று வேகமாக விமர்சிக்கப்பட்டது. இந்நாள் வரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற சிறப்பை அலெக்ஸாண்டரின் பீடங்கள் தக்கவைத்துக் கொண்டன.

ஊடகங்கங்களுக்கு அந்த செய்தியில் இருந்த ஆர்வம் போய்விட்டது. உலோகத்தட்டு மறக்கப்பட்டு, அப்போதிருந்து மியூசியத்தின் மாடியறையில் அது தேங்கிக்கிடந்தது. இந்தப் பெண்ணுக்கு அதுபற்றி எப்படி தெரிந்தது என்று அவர்க்குப் புரியவில்லை. ஆனால் சுக்லா ஒரு நல்ல நண்பர் என்று தத்தா சொன்னபடியால், சாகு பணிந்துபோக வேண்டியதாயிற்று.

சாகு தன் ஆஃபிஸில் நுழைந்தவுடன் உறைந்து நின்றார். அங்கே இரண்டு மனிதர்கள் இருந்தனர். சொல்லப் போனால் மூன்றுபேர். தரையில் தொண்டை அறுபட்டு ரத்தவெள்ளத்தில் செத்துக் கிடக்கும் காவலாளியையும் சேர்த்து.

ஓர் உயரமான, பொன்னிற கேசம்கொண்ட இளைஞன் சாகுவின் இருக்கைக்கு பின்னாடி நின்றான். சாகுவின் 'டிஷ்யூ' பெட்டியிலிருந்து எடுத்த டிஷ்யூக்களால் அசிங்கமான பெரியதொரு கத்தியை அமைதியாகத் துடைத்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் கதவருகே துப்பாக்கி ஏந்தியபடி நின்றான். அவன் முகமூடி அணிந்திருந்தாலும், அவனது உடல் அம்சங்களும், மூக்கும், கண்களும், கைகளும் குறிப்பால் உணர்த்தின, அவன் காக்கஸ் பகுதியைச் சேர்ந்தவன் என்று.

சாகு உடனே ஓடிவிட எத்தனித்தார். ஆனால் தப்பிக்க வழியில்லை என்பதை அவர் உணர்ந்துகொண்டார். துப்பாக்கிமனிதன் அவருக்குப் பின்னாடி வந்து கதவுவழியை அடைத்துகொண்டு நின்றான். சாகு மாட்டிக்கொண்டார்.

ரிலே கத்தியை தனது இடுப்பு உறையில் செருகி அவரது கைப்பேசியைப் பார்த்தான். 'ராஜீவ் சாகு,' என்று அவரது கைப்பேசியிலிருந்து வாசித்தான். 'தொல்பொருள் காப்பாளர்.' அவன் அவரது கைப்பேசியைத் தூரதள்ளிவைத்து சாகுவைப் பார்த்துக் கேட்டான்: 'எங்கே உங்களைப் பார்க்க வந்தவர்கள்?'

சாகு அவனை வெறித்துப் பார்த்தார், அதிர்ச்சியில் பேச்சுமூச்சற்று. யார் இந்த மனிதன்? மியூசியத்திற்குள் வந்து, காவலாளியைக்

கொன்றுவிட்டு, இப்போது பேழை அறையில் தான்விட்டுவந்த மனிதர்களைப் பற்றி அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

இறுதியில் அவர் பேசினார்: 'மாடியறையில்,' என்று அவர் நாக்குழறினார். இரண்டாம் மாடியைத் தன் கட்டைவிரலால் சுட்டிக்காட்டினார்.

ரிலே தலையசைத்தான். 'நாம கொஞ்சநேரம் இங்க உக்காருவோம். அவங்கள கவனிக்கிறதுக்கு முன்னாடி, நான் உங்ககிட்ட சில கேள்விகள கேட்கவேண்டியிருக்கு.'

அவர்கள் குறிவைத்திருந்த அந்த நான்கு மனிதர்களும் குர்கான் வழியாக டில்லி நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று கிருஷ்ணன் தன்னிடம் சொன்னவுடனே, ரிலே ஓட்டலைவிட்டு வெளியேறி, டில்லியில் இருக்கும் குழுவினரைச் சந்தித்தான். அவர்கள் தேசிய மியூசியத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டவுடன், அவர்கள் அங்கே சும்மா போகவில்லை என்பதை ரிலே புரிந்துகொண்டான். கூப்பரை அழைத்தான் அவன். அவர்களைப் பின்தொடர்ந்து, மியூசியத்தில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை புலனாய்ந்து, செய்திகளைச் சேகரித்தபின் அவர்களைக் கொன்றுவிடுமாறு கூப்பர் ரிலேக்குச் சொன்னான்.

மியூசியக் காப்பாளர்தான் அவனுக்கு வேண்டிய செய்தியைத் தரமுடியும்.

'இப்போ,' என்று ரிலே ஆரம்பிக்கும் போது, சாகு தன் சேரில் உட்கார்ந்தார். 'உங்கள பாக்கவந்தவங்களுக்கு என்ன வேண்டுமாம்?'

சாகு, ரிலேயை அகன்ற கண்களால் வெறித்தார். திகிலுணர்வு அவரது தேகத்தின் ஒவ்வொரு துளையிலிருந்தும் ஒழுகிக்கொண்டிருந்தது. ரிலே புன்னகைத்தான். சாகுவிடம் அச்சத்தின் நாற்றம் அடித்தது. தன் இலக்குகளைக் கொல்வதற்கு முன்பு, அவர்களிடம் அடிக்கும் அந்த வாடை ரிலேக்கு மிகவும் பிடிக்கும். அவனுக்கு ஏற்படும் அந்த உற்சாக உணர்வை எந்த ஊக்க மருந்தாலும் தரமுடியாது.

'அவங்கள்ல ஒருத்தர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்,' என்று சாகு உளறினார்.

'அமெரிக்கப் பொண்ணு. எனக்கு அது தெரியும்.' ரிலேயின் குரல் கடுமையாக இருந்தது. அவன் பொறுமை இழந்தான். 'எனக்குத் தெரியாத விஷயத்தச் சொல்லு. அவங்க ஏன் இங்க வந்தாங்க?'

துப்பாக்கி மனிதனுக்கு ரிலே சைகை காட்டினான். அவன் சாகுவின் அருகே வந்து, அவரது மணிக்கட்டைப் பற்றி, கையை மேஜைமீது ஓங்கி அடித்தான். அவரது உள்ளங்கையும், விரல்களும் காயப்பட்டன. ரிலே உறையிலிருந்து கத்தியை எடுத்து, சாகுவின் கையின் மீது அதை வைத்து கையை ஆராய்ந்தான். இறுதியாக, சாகுவின் கையில் ஒரு புள்ளியை தேர்ந்தெடுத்து, சதைத்துண்டை வெட்டிஎடுத்தான். ரத்தம் கொப்பளித்தது.

சாகு வலியில் அலறிய கொடூரமான சத்தம் வெற்றுத் தாழ்வாரங்களிலும், காலரிகளிலும் கேட்டது. வலி பொறுக்கமுடியவில்லை. ரிலே அவரது கையில் இன்னொரு இடத்தைத் தேடிஎடுத்து இன்னும் கொஞ்சம் சதையை வெட்டினான்.

சாகு மீண்டும் கத்தினார்; மீண்டும் மீண்டும். அந்த அலறல் குரல் வலியைக் குறைக்கும் என்பது போல.

'இப்ப இன்னொரு முறை கேட்கிறேன்.' ரிலேயின் குரல் தணிவாகவும் கொடூரமாகவும் ஒலித்தது. 'அந்த அகழ்வாராய்ச்சிக்காரிக்கு உன்கிட்ட என்ன வேணுமாம்? அவ ஏன் இங்க இருக்கா?'

29

உணர்தல்

'அது சாகுவின் குரல்,' என்றான் விஜய். 'நீங்க பூட்டிட்டு இருங்க. நான் போய் அவர்க்கு என்ன ஆச்சுன்னு பாத்திட்டு வர்றேன்.'

படிக்கட்டுகள் வழியாக துரிதமாக ஓடி தாழ்வாரத்தைக் கடந்து சாகுவின் ஆஃபிஸ் நோக்கிச் சென்றான் விஜய். ஆஃபிஸை நெருங்கியதும், சாகுவின் வலியலறல்களோடு ஒரு தாழ்வான, பலமான, ஆபத்தான மனிதக்குரல் கேட்டது.

'மறுபடியும் கேட்கிறேன்,' என்று அந்த மனிதன் சொன்னான். 'அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் உன்னிடம் என்ன கேட்டாள்? அவ எதுக்கு மியூசியத்தில இருக்கா?'

விஜய் அப்படியே நின்றுவிட்டான். பயங்கர அச்சம் அவனை ஆட்கொண்டது. யாரோ அலைஸைப் பற்றிக் கேட்கிறார்கள். அலைஸ் இங்கே மியூசியத்தில் இருப்பது யாருக்கோ தெரிந்திருக்கிறது. கூப்பரா? எப்படி இருக்க முடியும்? இம்ரானுக்குத் தெரியாமல் கூப்பர் குடியேற்ற அதிகாரிகளைத் தாண்டி வந்திருக்க முடியாதே. அப்படியே அவன் வந்திருந்தாலும், இம்ரான் உடனே உஷார்ப் படுத்தியிருப்பாரே.

அவனது உள்ளுணர்வு மேலெழுந்தது; எல்லாக் கேள்விகளும் ஒதுக்கி வைக்கப்பட்டன. ஓர் அலார மணி அவனது தலைக்குள் ஒலித்தது. மற்றவர்களை அவன் உஷார் படுத்தியாக வேண்டும்.

கண்டுபிடிக்கப்பட்டது

வெளியே தாழ்வாரத்தில் ஓடும் காலடிச்சத்தங்கள் ரிலேக்குக் கேட்டன. அவன் துப்பாக்கிமனிதனை வெளியே போய் பார்க்கும்படி சைகைகாட்டினான். துப்பாக்கிமனிதன் அறையைவிட்டு பாய்ந்தான். ரிலே சாகுவின் மீது பார்வையைத் திருப்பினான்.

'நான் காத்திட்டு இருக்கேன்,' என்றான் அவன். ஒரு கையால் மியூசியப் பொறுப்பாளரின் காயப்படாத கையைப் பிடித்து, மறுகையால் கத்தியை பிடித்துக்கொண்டான்; அவரது மற்ற கையிலிருந்தும் சதையை வெட்டி எடுக்க தயாராகி. மேஜைமுழுவதும் ரத்தம் படர்ந்திருந்தது.

'உலோகத்தட்டு,' என்று கண்ணீர்மல்க உலறினார் சாகு. காயப்படாத தன் ஒரு கையைப் பிரயோஜனமில்லாமல் அசைத்து, தன்னைப் பிடித்துவைத்திருப்பவனின் கொடூரப்பிடியிலிருந்து நழுவப் பார்த்தார். 'அது அலெக்ஸாண்டரின் பீடத்தின் அஸ்திவாரத்திற்கு அடியில் புதைந்துகிடந்து, பின்னாடி கண்டுபிடிக்கப்பட்டது!'

இந்தச் செய்தியைக் கேட்டவுடன், ரிலேயின் காதுகள் விடைத்தன. அவனுக்கு சரித்திரமோ அல்லது தொல்பொருள் ஆராய்ச்சியோ ஒன்றும் தெரியாது. இவை அவனுக்கு ஆர்வமான விஷயங்கள் அல்ல. ஆனால் தான் ஈடுபட்டிருக்கும் வேலை கிரேக்க வரலாற்றை மையம் கொண்டது என்பது மட்டும் அவனுக்குத் தெரியும். அவனே கிரீஸில் கல்லறையைப் பார்த்திருக்கிறான். அவன் வெடிவைத்து தகர்த்த கல்லறையின் களத்தில் இருந்த குடிசையில் கலைப்பொருட்களையும் பார்த்திருக்கிறான். அதனால், இந்த உலோகத்தட்டும் ஏதோவொரு வகையில் முக்கியமானதுதான் என்பதை அவன் புரிந்துகொண்டான்.

'அவன் காவல்காரன் இல்ல. நான் அவன சரியாப் பாக்கமுடியல. காரிடர் வெளிச்சம் மங்கலா இருக்கு. ஆனா இந்த அளவுக்காவது என்னால புரிஞ்சிக்க முடிஞ்சுது,' என்று துப்பாக்கிமனிதன் ரிலேயின் காதுக்கருவி வழியாகச் சொன்னான். 'அவன் மாடிக்கு போயிட்டான். நாம தேடிவந்த இலக்கு ஆட்களாகத்தான் இருக்கணும். நான் மத்தவங்களயும் கூட்டிக்கிட்டு அவங்க பின்னாடி போறேன்.'

'செய், என்று சொல்லிவிட்டு ரிலே சாகுவிடம் திரும்பினான். 'அவங்க இப்ப எங்க? உலோகத்தட்டு எங்க இருக்கு?'

சாகு ஏற்கனவே உடைந்துபோயிருந்தார். அவனுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அவர் சொல்லிவிட்டார்.

'ரெண்டாவது மாடி. ஆயுத அறை.' ரிலே தன் ஆட்களுக்குத் தகவல் சொன்னான். 'அவங்களை மொத்தமா அடைச்சி வை. இன்னும் ஒரு நிமிசத்தில நான் வந்திர்றேன். அவங்கள கொல்றதுக்கு முன்னாடி அவங்ககிட்ட நான் பேசியாகணும்.'

தற்பாதுகாப்பு

விஜய் தாழ்வாரத்தின் முனைவரை ஓடி, இரண்டு இரண்டு படிகளாய்த் தாண்டினான். மற்றவர்கள் பாதிதூரம் வந்திருந்தார்கள்.

'நாம திரும்பியாகணும்,' என்று அவன் மூச்சுத்திணறிக் கத்தினான். 'நாம மறுபடியும் மாடிக்குப் போயாகணும்.' அவன் அலைஸைப் பார்த்தான். 'நீ இங்க இருப்பது அவங்களுக்குத் தெரிஞ்சுப்போச்சி.'

கேள்விகளுக்கோ அல்லது மேற்கொண்டு பேசுவதற்கோ நேரமில்லை. விஜயின் குரலில் ஒலித்த அவசரத்தொனியும் தீவிரமும் அவர்களை மீண்டும் மாடிக்கு ஓடவைத்தன.

அவர்கள் பின்வாங்கி ஓடும்போது விஜயின் மனதில் ஒரு திட்டம் உருவானது. இரண்டாவது தளத்திலிருந்த காலரிகளைக் கடந்தபோது அதை அவன் அவர்களிடம் விரைவாகச் சொல்லிமுடித்தான். 'அவங்க எத்தன பேரு இருக்காங்கன்னு தெரியல, 'என்று அவன் கிசுகிசுத்தான். 'மியூசியத்தின் வாசலுக்கு போறதுக்கு இங்கிருந்து வழியிருக்கான்னு தெரியல. மெயின் படிக்கட்டு வழியாப் போகமுடியாது. அவங்க நம்மள துரத்திட்டு வர்றானுங்க. அவங்க கையில் ஆயுதம் இருக்கும். நாம செய்ய வேண்டியது இதுதான். காலரியில பூந்து என்னஎன்ன ஆயுதங்கள் கிடைக்குதோ எல்லாத்தயும் எடுத்துக்கணும். நம்மள காத்துக்கிறதுக்கு ஏதாவது வேணும்.'

'மகனே! நாம அவங்ககூட சண்ட போடமுடியாது,' என்று சுக்லா மென்மையாகச் சொன்னார். 'அவங்ககிட்ட துப்பாக்கிகள் இருந்தா. இங்க இருக்கிற வாள்களும், கத்திகளும் துப்பாக்கி முன்னால பிரயோஜனமில்ல.'

விஜய் தலையாட்டினான். அவர்கள் ஆயுதக் காலரிக்குள் நுழைந்தார்கள். 'நாம இங்க நிக்கப்போறோம்னு நான் சொல்லலை. இந்த ஆயுதங்கள் சும்மா தற்பாதுகாப்புக்கு. ஒத்துக்கறேன், நாம அவங்கள எதிர்த்து போராட முடியாதுதான். அது முட்டாள்தனம். ஆனா ஏதாச்சும் தப்பா போச்சுன்னா நமக்கு ஆயுதங்கள் தேவப்படலாம். நாம செய்ய வேண்டியது இதுதான். இதுதான் நமக்கு ஒரே வாய்ப்பு.' அவன் திட்டத்தை வரைபடம் போல வகுத்துச் சொன்னான். அவர்கள் தலையாட்டினார்கள்.

விஜயும் காலினும் தாழ்வாரத்தில் வரிசையாக நின்ற சிலைகளிலிருந்து ஒரு சின்ன கல்சிற்பத்தை எடுத்தார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த ஆயுதங்களை மூடியிருந்த கண்ணாடியை உடைத்தார்கள்.

சுக்லா வாசகம் பொறிக்கப்பட்டிருந்த ஒரு கோடரியை

எடுத்துக்கொண்டார். அது கிபி 1739-வைச் சேர்ந்த நாடிர் ஷாவுக்குச் சொந்தமான போராயுதம். வெறும் 52 செண்டிமீட்டர் நீளம் கொண்டது. அதன் எடையும் வடிவமும் அவர் அதைச் சிரமமில்லாமல் ஏந்திக்கொள்ளும் அளவுக்குச் சரியாக இருந்தன.

காலின் வாசகம் பொறிக்கப்பட்ட திப்பு சுல்தானின் வாளையும், விஜய் 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த காஷ்மீர் தண்டாயுதத்தையும் எடுத்துக்கொண்டனர்.

'உன்ன மாதிரியே நானும் பெரிய ஆயுதத்த எடுத்துக்கிட்டேன்,' என்று காலின் விஜயைப் பார்த்து பல்லிளித்தான். அவனின் நகைச்சுவை உணர்வு அந்த இறுக்கமான சூழ்நிலையைச் சற்று இளக்கியது. 'தேவைப்படும்போது உன்னால இதை சுழற்றமுடியும்னு நினைக்கிறியா?'

'தேவைப்படாதுன்னு நம்புவோம்,' என்று விஜய் நிதானமாக சொன்னான். 'நீ என்ன எடுத்திருக்க, அலைஸ்?'

அலைஸ் குழப்பமாகவும் திகிலாகவும் தோன்றினாள். நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அவளுக்குத் தெரியும். ஆனால் எதைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் முழித்தாள். கிரீஸில் தன்னைத் தொடர்ந்த வேட்டைக்காரர்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள் என்ற எண்ணம் அவள் மனதில் திகில் அலையை உருவாக்கிவிட்டது. இறுதியாக, விஜய் அவளுக்காக ஒரு ரஜபுத்திர மரக்கட்டையையும், 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த யானைத்தந்த குத்தீட்டியையும் எடுத்துக் கொடுத்தான். வெறும் 38.5 சென்டிமீட்டர் நீளம்கொண்டது. தூக்கிப்பிடிக்க அவளுக்கு பிரச்சினை தராத பாரமுடையது. தான் அதைப் பயன்படுத்த அவசியமிருக்காது என்று அவளும் நம்பினாள்.

விஜய் வகுத்துத்தந்த திட்டத்தின்படி அவர்கள் ஆயுதங்களோடு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்று காத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் திட்டம் வெற்றிபெறும் என்று நம்புவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

30

திட்டம் வேலை செய்யுமா?

மூன்று துப்பாக்கி மனிதர்கள் இரண்டாவது தளத்திற்குச் செல்லும் படிக்கட்டின் அடிப்பகுதியில் சந்தித்தார்கள். அவர்களில் இருவர் தரைத்தளத்தில் காவல் காத்தவர்கள். யாரும் மியூசியத்திற்குள் வராமல் இருக்கவும் அல்லது மியூசியத்தைவிட்டு வெளியேறாமல் இருக்கவும், மெயின் லாபிக்குப் போகும், லாபியிலிருந்து வரும் இரண்டு தாழ்வாரங்களில் நின்றுகொண்டிருந்தவர்கள்.

கண்ணாடி உடையும் சத்தம் அவர்களின் காதுகளில் ஒருசேர வந்துசேர, அவர்கள் ஒரே நேரத்தில் தலைதூக்கி மேல்தளத்தைப் பார்த்தார்கள்.

தலைமைத் துப்பாக்கிமனிதன் படிக்கட்டைச் சுட்டிக்காட்டியவுடன் அவர்கள் வேகமாக ஆனால் அமைதியாக மேலே விரைந்தார்கள்.

படிக்கட்டின் முடிவுக்கு வந்தபோது இரண்டாவது தளத்தில் நிர்ச்சலனம் நிலவியது. பாதி இருட்டாய் இருந்தது. தாழ்வார மின்விளக்குகள் அணைந்திருந்தன. அவர்களின் அருகே இருந்த காலரிகளிலும் விளக்குகள் எரியவில்லை. வட்டவடிவமான கட்டிடத்தின் தூரத்து முனையிலிருந்த காலரிகளிலிருந்து ஒற்றை வெளிச்சம் வந்தது.

அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். மியூசியத்தின் அடையாளக் குறிகளை வைத்து ஆயுதங்கள் கிடக்கும் காலரியைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். படிக்கட்டின் அருகே சுவரில் பொருத்தியிருந்த கட்டிடத்திட்ட வரைபடத்தை ஒருவன் அமைதியாகச் சுட்டிக்காட்டினான். தலைமைத் துப்பாக்கிமனிதன் தன் ஃபிளாஷ் லைட்டை எடுத்து தலையாட்டினான். அவனுக்கு வேறு வழியில்லை; தான் குறிவைத்த மனிதர்கள் தன்னைப் பார்த்துவிடக் கூடிய அபாயத்தை அவன் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இருட்டைச் சாதகமாக்கிக் கொள்ளும் மதிகூர்ந்த மனிதர்களை தாங்கள்

எதிர்கொண்டிருக்கிறோம் என்பது அவனுக்குத் தெளிவானது.

தாங்கள் தேடிய காலரியை வரைபடத்தில் அவன் இனங்கண்டு கொண்டான். அதை அவன் மற்றவர்களிடம் சுட்டிக்காட்டினான். அவனுக்குள் ஓர் எண்ணம் மின்னியது. தங்களின் பலிமனிதர்களிடம் ஆயுதம் இருக்கலாம் என்று அவன் சமிக்ஞை செய்தான். நிச்சயமா சொல்ல முடியாது. சாதாரண மனிதர்களைப் பின் தொடர்கிறோம் என்று ரிலே அவர்களிடம் சொல்லியிருந்த போதிலும். எதிரியைக் குறைவாக மதிப்பிட்டு தங்கள் உயிரை இழந்த மனிதர்கள் அவனுக்குத் தெரியும். அந்த எண்ணிக்கையில் சேர அவன் விரும்பவில்லை.

அவர்கள் நின்றிந்த இடத்திலிருந்து காலரி வாசலை மூன்றுபேராலும் பார்க்க முடிந்தது. கதவு திறந்திருந்தது. உள்ளே கும்மிருட்டு.

தலைமைத் துப்பாக்கிமனிதன் மீண்டும் சமிக்ஞை செய்தான். தாழ்வார மின்விளக்குகளின் மெயின் ஸ்விட்சைத் தேடவேண்டும். அவர்கள் கலைந்துசென்று சுவர்களை ஆராய ஆரம்பித்தார்கள்.

'கண்டுபிடிச்சிட்டேன்,' என்று ஒருவன் கிசுகிசுத்தான். நிர்ச்சலமான அந்த மியூசியத்தில் தன் கிசுகிசுப்பு அவர்களுக்கு மட்டும் கேட்கும் வண்ணம், அவன் கழுத்தில் உருவான அதிர்வலைகளை அவனது தொண்டை என்னும் மைக்ரோபோன் போதுமான அளவுக்கு எடுத்து ஒலிபரப்பியது.

அவன் ஸ்விட்சைப் போட்டான். தாழ்வார விளக்குகள் எரிந்தன. மூன்று மனிதர்களுக்கும் கண்கூசியது.

தலைமைத் துப்பாக்கிமனிதன் தன் முகமூடியில் முகம் சுளித்தான். தாழ்வார விளக்குகள் சன்னமாக ஏதோ கொஞ்சம் வெளிச்சம் கொடுத்தாலும், அந்த வெளிச்சமான இடத்திலிருந்து கும்மிருட்டான அறைக்குள் செல்வது அவர்களுக்குச் சிரமமாகத்தான் இருக்கும். வேறுவழியில்லை.

மூன்று மனிதர்களும் மெல்ல காலரி நுழைவாயிலை நோக்கி அடியெடுத்தார்கள்.

பூனையும், எலியும்

வெளியே வெளிச்சம் தெரிந்தவுடன், விஜய் நிமிர்ந்தான். முற்றிலும் இருளப்பிய அறைக்குள் துப்பாக்கி மனிதர்கள் நுழைய மாட்டார்கள்

என்று அவன் எதிர்பார்த்திருந்தான். விளக்கு ஸ்விட்சை அவர்கள் தேடும்போது உருவாகும் அவர்களின் கவனக்குறைவு, தங்களுக்கு மேலும் சில மதிப்புள்ள வினாடிகளைப் பெற்றுத்தரும் என்று அவன் நினைத்திருந்தான்.

ஒன்றும் கேட்கவில்லை என்றாலும், ஒரு நிழல் வாசலில் தெரிந்தது. பயிற்சிபெற்ற கொலைகாரர்கள் என்று விஜய் தனக்குள் நினைத்துக் கொண்டான். அவர்கள் துல்லியமான சாமர்த்தியக்காரர்கள்.

நிழல் மறைந்தது. மற்றொரு நிழல் தோன்றியது. அதுவும் காணாமல் போய், மூன்றாவது நிழல் வந்தது. மூன்று நிழல்களும் காலரியின் தோராயமான இருட்டில் கலந்தன. துப்பாக்கி மனிதர்கள் வாசலை விட்டும், அதன் ஊடாக பாயும் தாழ்வாரவெளிச்சத்தை விட்டும் விலகி நின்றார்கள்.

இப்போது என்ன? விஜய் யோசித்தான். தன் ஆட்கள் திட்டப்படி செயல்படுகிறார்களா என்று சோதித்துப் பார்க்க அவனுக்கு வழியில்லை. வினாடிகளை அவன் எண்ணிக்கொள்ள வேண்டும், திட்டமிட்டபடி. அவர்கள் செய்துவிடுவார்கள் என்று அவன் நம்பினான்.

கிட்டத்தட்ட அங்கே...

ரிலே தன் செவிக்கருவியில் ஒலித்த துப்பாக்கி மனிதனின் குரலைக் கேட்டு தலையசைத்தான். அவன் சாகுவை கடுமையாக அசைத்து எழவைத்தான். 'நீ எங்களோட வர்ற,' என்று சொன்னான். 'மேல்மாடியில வேல இருக்கு.'

ரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் மியூசியக் காப்பாளரை பாதி இழுத்தவண்ணம் மாடியேறினான் ரிலே. தான் குறிவைத்த மனிதர்கள் தப்பிக்கும் முன்பு அவர்கள் ஒளிந்திருக்கும் காலரியை அடைந்துவிட வேண்டும் என்று வெறியோடு முயன்றான்.

நசுக்கப்பட்டது

சுவரில் நிழல்கள் தெரிந்தவுடன் விஜய் முகம் சுளித்தான். திட்டமிட்டபடி, தன் ஆட்கள் அறையை விட்டு அமைதியாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வேட்டைக்காரர்கள் அறைக்குள் நுழைவதை அவதானிக்கும் அவர்களின் நுண்திறனைச் சார்ந்திருந்தது அவர்களின் திட்டம். அதே சமயத்தில், அவர்கள் அறையை விட்டு

வெளியேறுவதை துப்பாக்கிமனிதர்களும் கவனிப்பார்கள் என்பதை அவர்கள் யோசிக்கவே இல்லை. கீழ்மாடியில் அல்லது வெளியே இன்னும் பலர் இருக்கிறார்களா என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் செய்யக்கூடியது இதுதான்.

அவன் காத்திருந்தான். ஆனால் வாசல் வழியாக மூன்றாவது நிழல் கடந்து போகவில்லை. யார் காணாமல் போய்விட்டது? காலரியை விட்டு வெளியேறிய தன் இரண்டு ஆட்களை அந்த மூன்று வேட்டைக்காரகள் பின்தொடரவில்லை என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதோ தவறு நடந்துவிட்டது.

எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் காலரி விளக்குகள் திடுமென எரிந்தன. அதிக பிரகாசத்திற்கு அனுசரித்துப்போக முயன்ற அவன் கண்கள் படபடத்தன. என்ன நடக்கிறது?

31

மாட்டிக்கொண்டார்கள்

திட்டமிட்டபடி அலைஸ் காலரியைவிட்டு நழுவினாள். உடலோடு ஒட்டிய கவசங்களின் வெவ்வேறு பாகங்களையும், சக்கரவர்த்திகளின், அரசர்களின் ஆயுதக் கவசங்களை அணிந்த பொம்மைகளையும் காட்சிப்படுத்தும் உயரமான பேழைகளுக்குப் பின்னாடி அவர்கள் தனித்தனியே இடம்பிடித்து நின்றிருந்தார்கள். காத்திருந்தார்கள்.

தாழ்வார விளக்குகளைப் போட்டவுடன் துப்பாக்கி மனிதர்கள் அறைக்குள் வருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். கடைசி ஆள் அறைக்குள் நுழைந்தவுடன் 20 வினாடிகள் காத்திருந்து, மேற்கொண்டு யாரும் வரவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டு பின் ஒவ்வொருவராக பத்து வினாடி இடைவெளிகளில் திருட்டுத்தனமாக நழுவிவிட வேண்டும் என்பது அவர்களின் திட்டம்.

சில கணங்களுக்குப் பின்னர், காலின் அவளோடு சேர்ந்துகொண்டான். அவர்கள் சுக்லாவுக்குக் காத்திருந்தார்கள். தான் கடைசியில் வருவதாக விஜய் சொல்லியிருந்தான். 'ஏன்னா என்கிட்டதான் அதிக பலமுள்ள ஆயுதமிருக்கு,' என்றான் அவன். அவனிடம் விவாதம் செய்ய நேரமில்லை அவர்களுக்கு.

வினாடிகள் கடந்தன; சுக்லா இன்னும் வரவில்லை. காலின் அலைஸைக் கவலையோடு பார்த்தான். சுக்லா இல்லாமல் அல்லது விஜய் இல்லாமல் அவர்கள் கிளம்ப விரும்பவில்லை. என்ன செய்வதென்று தீர்மானிக்க காலின் போராடினான். மீண்டும் உள்ளே போவது உசிதமல்ல. வேட்டைக்காரர்கள் யாரும் அவர்கள் வெளியேறுவதைப் பார்க்கவில்லை என்றாலும், அவர்கள் திரும்பி வருவதைப் பார்ப்பதற்கு துப்பாக்கிமனிதர்கள் காத்திருக்கலாம்.

சஞ்சலமான எண்ணம் அவனுக்குள் உதித்தது. சுக்லா ஏற்கனவே மாட்டியிருந்தால்?

தீர்மானிக்கும் உரிமை அவன் கையிலிருந்து பிடுங்கப்பட்டது. ரிலே இரண்டாவது தளத்தில் தோன்றினான். அவனுக்குப் பின்னால் ரத்தம் நிரம்பிய சாகு இழுத்துவரப்பட்டார். 'காலரி லைட்டை போடு,' என்று சாகு ஆணையிட்டான், அலைஸையும், காலினையும் பரிகாசமாகப் பார்த்தவண்ணம். சாகு கீழ்ப்படிந்து மின்விளக்கைப் போட்டார்.

மியூசியக் காப்பாளரின் விதி

தன் முன்னே தெரிந்த காட்சியைப் பார்த்து விஜய் அச்சத்தில் அதிர்ந்து உறைந்து நின்றான். வாசலில் அலைஸும் காலினும் ஆடுமாடுகள்போல கொண்டுவரப் பட்டார்கள். கூடவே ரத்தக்களறியான சாகுவும் வருகிறார். அவர்களைக் கொண்டுவந்தவன் நெடிய, சதைப்பிடிப்பான பொன்னிறகேச மனிதன். பளபளத்த பெரியதொரு கத்தியைக் காட்டிக்கொண்டு நிற்கிறான். அவன் அலைஸையும் காலினையும் காலரிக்கு வெளியே மடக்கிப் பிடித்துவிட்டான் என்பது தெளிவானது. ஆனால் அவன் சாகுவை என்ன செய்துவிட்டான்? இப்போதுதான் விஜய்க்குப் புரிகிறது, சாகு ஏன் அப்படி வலியில் கத்தினார் என்று. அருங்காட்சியகப் பொறுப்பாளரின் முகம் இப்போது தளர்வாகத் தெரிகிறது. வலிக்குப் பதில் அதிர்ச்சி அவரின் புலன்களை மறக்கச் செய்தது.

அறையின் மற்றொரு பக்கத்தில் மூன்று துப்பாக்கி மனிதர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். முகமூடி அணிந்த அவர்கள் மூன்று கைதிகளையும் பார்த்துக்கொண்டார்கள்.

ரிலே தன் கைப்பேசியில் சோதித்துப் பார்த்தான். 'அலைஸ் டர்னர். சரிபாரு. காலின் பேக்கர்.' அவன் காலினைப் பார்த்தான். 'அது நீயாகத்தான் இருக்கணும். இந்த அறையில இருக்கிற ஒரே வெள்ளைக்காரன் நீ தான்.' அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். 'கோட்டையில நீங்க அஞ்சுபேரு இருந்தீங்க. மூணுபேர் இங்க வந்தீங்க. உளவுபார்த்த ரெண்டுபேரும் இங்க இருக்கீங்க. ஒரு ஆள் மட்டும் இல்ல.' ரிலே குரலுயர்த்தி கத்தினான். 'விஜய் சிங்! எனக்குத் தெரியும் நீ இங்கதான் இருக்கேன்னு. நீ ஒளிய முடியாது. இப்ப நீ வந்தீன்னா, இந்த ரெண்டுபேர்கிட்டேயும் நான் கடுமையா நடந்துக்க மாட்டேன்.'

விஜய்க்கு அந்தக் கணத்தில் இரண்டு விஷயங்கள் புரிந்தன. ஒன்று: அவர்கள் கோட்டையில் இருந்தபோது எப்படியோ வேவு பார்க்கப்பட்டார்கள். எப்படியென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இந்த மனிதனுக்கு அவர்களின் பெயர்களும்

தெரிந்திருக்கிறது; அவர்கள் மூன்றுபேரும் கோட்டையில் ஒன்றாக இருந்ததும் தெரிந்திருக்கிறது. இம்ரானும் ராதாவும் அவர்களிடம் தான் இருக்கிறார்கள் என்று விஜய்க்குத் தெரிந்தது போல் தோன்றியது. இரண்டாவது, இந்த மனிதனுக்குத் தெரிந்த தகவல் முழுமையில்லை. அவனுக்கு சுக்லாவைத் தெரியவில்லை. சுக்லாவை ஏன் இன்னும் காணவில்லை என்று விஜய்க்குப் புரியவில்லை. ஆனால் அவன் நம்பினான், அவர் ஒளிந்திருக்கலாம் என்று.

தண்டாயுதத்தைத் தூக்கிக்கொண்டு, உடல்கவசங்களைக் கொண்ட பெரிய பேழையின் பின்னாடியிருந்து அவன் வெளியே வந்தான். 'நான் இங்க இருக்கேன்,' என்று மட்டும் சொன்னான்.

ரிலே பிரகாசமானான், நடக்கிற விஷயங்களில் திருப்திஅடைந்தவனாய். பின் அவன் திடீரென்று சாகுவிடம் திரும்பினான். சாகுவைப் பிடித்து, ஒரே போடாய் அவரது தொண்டையை அறுத்தான். ரத்தம் கொப்பளிக்க சாகுவின் உடல் தரையில் சாய்ந்தது. தரை ரத்தக்குளமானது. 'இனி இவன் நமக்குத் தேவையில்லை,' என்று அவன் மற்றவர்களைப் பார்த்துச் சொன்னான்.

மற்றவர்கள் திகிலோடு பார்த்துக்கொண்டு நிற்க, அவன் அலைஸை இழுத்துப் பிடித்து, குருதிதோய்ந்த கத்திமுனையை அவள் தொண்டையில் வைத்து அழுத்தினான். அவள் காதில் கிசுகிசுத்தான்: 'இப்ப சொல்லு. உலோகத் தட்டு எங்க?'

இரண்டு துப்பாக்கி மனிதர்கள் விஜயின் அருகிலும் காலின் அருகிலும் வந்தார்கள், துப்பாக்கியால் குறிவைத்து. எதிராளியின் கையோ காலோ தொடமுடியாத தூரத்திலும், அதே நேரத்தில் மிக அருகிலும் துப்பாக்கிகள் குறிபார்த்து இருந்தன.

கத்திமுனை தோலைஅழுத்தியவுடன், அலைஸின் தொண்டையிலிருந்து சிறு சிகப்புப்புள்ளி தோன்றியது. அவள் பேச முயன்றாள். ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

ரிலே நமட்டாகச் சிரித்தான். 'உன்கிட்ட இருக்கான்னு நாங்க பாக்கிறோம்.'

'பொறு,' என்று விஜய் முன்னால் வந்தான், தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல். அச்சத்தால் அவள் அவளாக இல்லை என்பதை விஜய் புரிந்துகொண்டான். 'உலோகத்தட்டு அவகிட்ட இல்ல. அது அந்தக் கதவுக்குப் பின்னாடி இருக்கிற அறையில இருக்கு.' கொஞ்ச நேரத்திற்கு முன்பு அவர்கள் பூட்டியிருந்த கதவைச் சுட்டிகாட்டினான். 'சாவி

என்கிட்ட இருக்கு.' தன்னை நோக்கிக் குறிவைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை விஜய் கவனித்தான்.

துப்பாக்கிமனிதன் தலையசைத்தான். 'இப்ப லேசாயிடுச்சி,' என்று விஜயை அவன் எச்சரித்தான்; குரல் முகமூடிக்குப் பின்னாடி அடக்கமாய் ஒலித்தது. 'ஏதாவது தந்திரம் செஞ்ச, இந்த க்ளொஸ் ரேஞ்சில என் குறி தப்பாது.'

விஜய் மெதுவாக சாவி வளையத்தை எடுத்து ரிலேயிடம் எறிந்தான். அந்தப் பொன்னிறகேச மனிதன் அலைஸை பாதி இழுத்துக்கொண்டும், பாதி தூக்கிக் கொண்டும் கதவருகே சென்று திறந்தான். பேழைகளும் முத்திரைகளும் நிரம்பி நின்றதை வெறித்தான். 'இதில எது அது?' என்று வெடுக்கென்று கத்தினான்.

அலைஸ் அவனிடம் தட்டைக் காட்டினாள். ரிலே அவளை முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டான். அவள் தடுமாறி வரவும் அவளைப் பிடித்துக்கொண்டான் மூன்றாவது துப்பாக்கிமனிதன். பொன்னிறகேச மனிதன் கத்தியை உறைக்குள் போட்டுவிட்டு முத்திரையை எடுத்துப் பார்த்தான்.

அப்போது முற்றிலும் எதிர்பாராத ஒன்று நிகழ்ந்தது; விஜயும் காலினும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

32

கிமு 334
மாசிடோனியா

அலெக்ஸாண்டர் அரண்மனையில் தன் அறையில் சாளரம்வழியே பார்த்துக்கொண்டு ஏதோ சிந்தனை வயப்பட்டவராய் நின்றுகொண்டிருந்தார். அப்போது அவரது தாயார் முன்னறிவிப்பு ஏதுமின்றி நுழைந்தாள்.

'மகனே!' என்று ஆரம்பித்தாள் ஒலிம்பியாஸ். 'நான் உனக்கு ஒரு பரிசு வைத்திருக்கிறேன்.'

அலெக்ஸாண்டர் முறைத்தவாறே திரும்பினார். அவர் தன் தாயாரின் தன்னிச்சையான போக்குகளோடே வளர்ந்தவர்தான்; ஆனாலும் அவை இன்னும் அவர்க்குப் பழக்கமாகவில்லை. எதிர்பாராத கணங்களில் அவள் திடீரென்று ஆனந்த நடனம் ஆடுவதும், நாகங்கள்மீது அவளுக்கிருந்த புரியாத காதலும், அறிவிப்பு ஏதும் செய்யாமல் அவரது அறைகளுக்குள் அவள் நுழைவதும் - இவையெல்லாம் அவர்க்கு சமயங்களில் எரிச்சலை ஏற்படுத்தின. ஆனால் அவர் தன் தாயாரை ஆழமாகவே நேசித்தார். அதனால் அவளைத் திட்டக்கூட அவரால் முடியவில்லை.

அவரின் கறுப்பான ஆழமான கண்கள் அவள் சொன்ன பரிசுக்காக அவள் கைகள்மீது விழுந்தன. ஆனால் அவள் கைகள் வெறுமையாக ஒன்றையொன்று பற்றிக்கொண்டிருந்தன.

'சொல்லுங்க, தாயே!' என்று அந்த இளமையான அரசன் சிணுங்கினான். 'விளையாட்டு வேண்டாம். என்னவென்று சொல்லுங்கள். உங்களுக்குத் தெரியும், எனக்கு பரிசுகள் பிடிக்கும் என்று.'

'நான் தருவதற்கு முன்பு, நீ எனக்கு ஒன்று தருவதாக உறுதிமொழி

கூறவேண்டும்,' என்று அவள் புன்னகையுடன் சொன்னாள். அவள் தந்திரத்தால் ஆளவிரும்பாத அல்லது தன் சுயநலத்துக்குப் பயன்படுத்த விரும்பாத ஒரே மனிதன் அவள் மகன்தான். தன் மகன் ஒரு பெரிய ஆளாக வேண்டும்; அவனது கீர்த்தி அமரத்துவம் கொள்ளவேண்டும் என்பதுதான் அவள் விரும்பியது. அதற்காக அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாள்.

அலெக்ஸாண்டர் புருவம் நெரித்தார். 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது.'

'ஓ, இந்த வாக்குறுதியை நீ நிறைவேற்ற சந்தோசமடைவாய் என்று நினைக்கிறேன்,' என்று அவன் தாய் அவனது ஆர்வத்தைத் தூண்டினாள். 'அது பாரசீகர்களுக்கு எதிரான உனது போரைப் பற்றியது.'

அலெக்ஸாண்டர் அவளைத் துளைப்பது போல் அவதானித்தார். 'தாயே, உங்களுக்குத் தெரியும். அது என் இதயத்திற்கு எவ்வளவு பிடித்தமான விஷயம் என்று. பாரசீகர்கள் நம் நாட்டின்மீது படையெடுத்து நம்மை அடிமைப் படுத்தியதற்கும் அவமானப்படுத்தியதற்கும் பழிவாங்குவதற்காக அது ஒன்றுதான் என் இலக்கு. பாரசீகச் சாம்ராஜ்யத்தை மாசிடோனியாவின் ஆட்சிக்குக் கீழே கொண்டுவரும்வரை நான் ஓயமாட்டேன்.'

'எனக்குத் தெரியும், மகனே,' என்று ஒலிம்பியாஸ் பிரியத்துடன் புன்னகைத்தாள். 'ஆனால் நீ ஏன் அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்? கிழக்கே பாரசீகத்தைத் தாண்டி நாடுகள் இருக்கின்றன.' அவளது குரல் ஒரு கிசுகிசுப்பாக சுதிகுறைந்தது. 'கீழைக் கடவுள்களின் தேசம். அங்கே சிந்துவும், மற்ற நதிகளும் பாய்கின்றன.'

'பூமியின் எல்லைகள்! அந்தத் தேசத்தின் செல்வச் செழிப்பைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன், தாயே!' இப்போது அலெக்ஸாண்டர் சிந்தனையில் ஆழ்ந்தார். சிந்துப் பள்ளத்தாக்கில் கொட்டிக்கிடக்கும் தங்கம் மற்றும் விலையுயர்ந்த கற்கள் பற்றிய கதைகளையும், அங்கிருக்கும் மனிதர்கள் பாரசீகர்களுக்கு தங்கத்தூள்களைக் கப்பம் கட்டும் கதைகளையும் அவர் கேள்விப்பட்டிருக்கிறார்.' ஆனால் அதற்கு வீட்டைவிட்டு சில ஆண்டுகளைச் செலவழித்தாக வேண்டுமே. அது பிரயோஜனமானதா? நமக்குத் தேவையான எல்லாச் செல்வங்களையும் பாரசீகப் பேரரசு நமக்கு விட்டுத்தரும்.'

'அந்த தேசங்களில் நீ தேடப்போவது பொருள்சார்ந்த செல்வம்

அல்ல.' தாயாரின் கண்கள் மின்னின. 'நீ ஒரு கடவுளுக்குப் பிறந்தவன். ஜீயஸின் மகன். நான் உனக்கு முன்னாடியே சொல்லியிருக்கிறேன். ஆனால் நீ இன்னும் ஒரு மனிதனாகவே இருக்கிறாய்.' சிந்து தேசத்தில் ஒரு தொன்மக்கதை இருக்கிறது. உன்னைக் கடவுளாக்கும் ஒரு பெரிய ரகசியத்தைப் பற்றிய ஆதிகாலத்து தொன்மம். அந்த ரகசியத்தைத் தேடித்தான் நீ போகவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'

கீழை நாடுகளிலிருந்து வந்த ஒரு தத்துவஞானியைத் தான் சந்தித்ததைப் பற்றி ஒலிம்பியாஸ் அலெக்ஸாண்டரிடம் சொன்னாள். அவர் அவளிடம் கொடுத்திருந்த தோல்காகிதத்தையும், உலோகத்தட்டையும் அவள் அலெக்ஸாண்டரிடம் ஒப்படைத்து விட்டு, அவற்றில் பொறிக்கப் பட்டிருந்த வாசகங்களை அவருக்கு விளக்கினாள், தத்துவஞானி அவளுக்கு விளக்கியிருந்ததைப் போல.'

'ஆனால் இது ஒரு ரகசிய செயல்திட்டமாக இருக்க வேண்டும். நீ என்ன தேடுகிறாய் என்று உன் படைக்குத் தெரிந்தால், அது பிரச்சினையாகிவிடும். அவர்கள் உன்னை பூமியின் எல்லை வரை பின்தொடரமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் அந்த ரகசியத்தை நம்பமாட்டார்கள்.'

அவள் பேசிமுடித்தவுடன், அலெக்ஸாண்டர் தோல்காகிதத்தை ஆராய்ந்தார். 'இதுதான் என் விதி,' என்று கடைசியாகச் சொன்னார். 'கடவுளுக்குப் பிறந்தவன். நான் கடவுளாக இருப்பேன்.'

33

நிகழ்காலம்

நாள் மூன்று
ஓர் அழைப்பு

ராதா வாசல்மணி ஓசையைக் கேட்டு கதவுதிறக்க வேகமாக ஓடினாள். விஜய் வந்துவிட்டானா?

சஃபாரி சூட் அணிந்த ஒரு மனிதன் வாசலில் நின்றிருந்தான். சோகமாக தெரிந்தான். கெட்ட செய்தியைக் கொண்டுவந்தவன் போல தோன்றினான். ராதாவின் இதயம் கலங்கியது.

'மிஸ் ராதா சுக்லா?' என்று அவன் கேட்டான்.

ராதா தலையசைத்தாள். இதயம் படபடத்தது.

'நான் ஐபி-யிலிருந்து வர்றேன். என் பேர் ஹோஷியர் சிங்.' அவன் தன் அடையாள அட்டையை அவளிடம் காட்டினான். ராதா அதைப் பார்க்கவே இல்லை. ராத்திரி இந்த நேரத்தில் அவன் ஏன் இங்கு வந்தான் என்பதைத் தெரிந்துகொள்ளவே அவள் பதற்றமாய் இருந்தாள்.

'மிஸ்டர் இம்ரான் ஆஸ்பத்திரியில இருக்கார்,' ஹோஷியர் சிங் தொடர்ந்தான். 'இன்னக்கி சாயங்காலம் யாரோ அவர வெடிகுண்டு வீசி கொலைசெய்ய பாத்திருக்காங்க. நிலமை ரொம்ப மோசமா இருக்கு. ஒருவேளை நீங்க ஆஸ்பத்திரிக்கு வரலாம்ங்றதனால, உங்ககிட்ட சேதி சொல்லச் சொன்னாங்க.'

அதிர்ச்சியில் ராதாவுக்கு சுவாசத்திணறல் ஏற்பட்டது. இம்ரான் மருத்துவமனையிலா? வெடிகுண்டா? தான் கேட்டதை அவளால் நம்பமுடியவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்புதானே அவள் அவரிடம் பேசினாள்.

'ஒரு நிமிசம்,' என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே சென்று தன் ஃபோனை எடுத்தாள். வேகமாக செய்தியை அதில் பதிவுசெய்துவிட்டு விஜய்க்கு அனுப்பினாள். தன்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்க்கவும் என்று அவனை அவள் கேட்டுக்கொண்டாள். 'நாம போகலாம்,' என்று சொல்லிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு, தோட்டப் பாதைவழியாக விரைந்தாள், காத்திருக்கும் காரை நோக்கி.

சாத்தியமில்லாத காப்போன்

அலைஸ் பேழைகள் நிரம்பிய அறைக்குள் இழுத்து வரப்படும்போது, மொகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப்புக்குச் சொந்தமான ஆயுதக்கவசம் வைக்கப்பட்டிருந்த பெட்டிக்குப் பின்னாடி ஒளிந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தார் சுக்லா. தனது இருப்பைப் பற்றி ரிலேக்குப் பிரக்ஞை இல்லை என்பதை விஜய் போலவே அவரும் புரிந்துகொண்டார். அது பயன் தருமா இல்லையா என்று அவர்க்குத் தெரியவில்லை. ஆனால் இப்போதைக்கு அங்கே ஒளிந்திருப்பது என்று அவர் தீர்மானித்தார். மற்றவர்கள் கைதிகளாக அந்த இடத்தைவிட்டுப் போனபின்பு, வெளியே சென்று தொலைபேசி மூலம் இம்ரானிடம் உதவி கேட்கலாம் என்று அவர் நினைத்தார். அவர் தன்னைத்தானே உள்ளுக்குள் சபித்துக்கொண்டார். தன்னிடம் கைப்பேசி இல்லை என்பதற்காக வாழ்க்கையில் முதன்முதலாக அவர் வருத்தப்பட்டார். பல வருடங்களாக ராதா தன்னை மாற்ற முயன்றதைத் தடுத்தார் அவர். 'மொபைல் ஃபோன் இல்லாட்டியும் என்னை யாரும் தொடர்புகொள்ள முடியும்,' என்று அவர் சொல்லியிருந்தார். 'யாராவது என்னைத் தொடர்புகொள்ள விரும்பினால், அவங்களுக்குத் தெரியும் என்னை எங்கே பார்க்கலாம் என்று.'

இன்று இந்தமாதிரியான சூழ்நிலையில் ஒரு கைப்பேசி எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஒரு வார்த்தைச் சேதி போதும், இந்தக் கணத்தில் உதவியைப் பெறுவதற்கு.

இதற்கிடையில் அலைஸ் ரிலேயால் தள்ளப்பட்டு தட்டுத்தடுமாறி முன்னோக்கி விழுந்ததையும், மூன்றாவது துப்பாக்கிமனிதன் அவளை விழாமல் பிடித்துக்கொள்ள, தான் அடைக்கலம் புகுந்திருக்கும் ஆயுதக்கவசப் பேழையிலிருந்து ஒரு அடிக்குள்ளே வந்துவிட்டதையும் சுக்லா கவனித்தார்.

துப்பாக்கி மனிதன் அலைஸைப் பிடித்துக்கொள்ளும் முயற்சியில் நிலைதடுமாறினான்.,

சுக்லாவின் தலைக்குள் ஒரு மின்னல் பாய்ந்தது.

துப்பாக்கி மனிதன் சுதாகரித்து அலைஸைப் பிடித்துக் கொள்ளும்போது, சுக்லா உடனடியாக வெளியே வந்து கோடரியால் அவன் மண்டையில் ஒரு போடுபோட்டார்.

கலைப்பொருள் பேழைக்கண்ணாடிமீது துப்பாக்கி மனிதன் தொப்பென்று விழுந்து, அலைஸின் மீதான தன் பிடியை விட்டான்.

திடீரென்று ஒரு களேபரம் ஆனது.

சுக்லா மறைவிடத்திலிருந்து வெளிவந்து கோடரியால் தாக்கியதை விஜயும் காலினும் கவனித்தார்கள். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் அவர்கள் வாயடைத்துப் போனார்கள். தங்கள் அருகே நின்ற துப்பாக்கி மனிதர்கள் மீது தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்று அவர்கள் யோசித்தார்கள்.

தன் சகவீரன் தரையில் தொப்பென்று விழுந்ததை ஆச்சரியத்தோடு பார்த்துநின்ற துப்பாக்கி மனிதர்களின் கவனம் ஒருகணம் திசைமாறியது.

அந்தக் கணத்தின் இடைவெளியைப் பயன்படுத்த விஜயும் காலினும் தீர்மானித்தார்கள். காலின் குனிந்து ஒரு கால்முட்டியில் அசைந்து தன்னருகே நின்ற துப்பாக்கி மனிதனை மறுகாலால் தாக்கி அவனது கால்முட்டியை உதைத்தான். அவன் கால்கள் மடங்கி துப்பாக்கியை கீழே போட்டுவிட்டு விழுந்தான். காலின் துப்பாக்கியை கண்ணிமைக்கும் நேரத்தில் எடுத்து அதைக் கொண்டு அவனது தலையில் அடித்து அவனை மயக்கமுறச் செய்தான்.

அலைஸ் எழுந்துகொள்ள சுக்லா உதவிசெய்தார். அவர்கள் இருவரும் கதவுநோக்கி ஓடினார்கள். காலின் தன்னைக் காவல் காத்தவனைச் சமாளித்துக் கொண்டிருக்கும்போது, விஜய் தரையில் நழுவி விழுந்து, உருண்டு, தன் பின்னாடி இருந்த துப்பாக்கி மனிதனை நோக்கி தண்டாயுதத்தை அசைத்தான். ஆயுதம் துள்ளிக்குதித்து தன்னைத் தாக்கிவிடுவதைத் தவிர்க்க, பின்னால் உருண்டான். தண்டாயுததில் எட்டு கத்திகள் ஓர் உருளைக் கம்பியில் செருகப்பட்டிருந்தன. அது தன் வீரியத்தை இழக்கவில்லை. துப்பாக்கி மனிதனின் தொடைகளைத் தாக்கி, சதைகளை வெட்டி அவனை தரையில் விழச்செய்தது தண்டாயுதம்.

முழுக்காட்சியும் விரிந்து முடிய வெறும் வினாடிகளே ஆயின. எதிர்வினை செய்ய ரிலேக்கு நேரம் கிடைக்கவில்லை. அவன்

உறையிலிருந்து கத்தியை எடுப்பதற்குள், நான்கு கைதிகளும் அறைக்கதவை ஓங்கிச் சாத்திவிட்டு ஓடிவிட்டார்கள்.

அதிர்ச்சியிலிருந்து உடனடியாக மீண்டு ரிலே கதவுநோக்கி ஓடினான். திடீரென்று காலரி இருட்டானது. அவன் சபித்தான். அந்தக் குழுவில் யாரோ ஓர் ஆள் புத்திசாலித்தனமாக மின்விளக்குகளை அணைத்துவிட்டு கீழே ஓடிவிட்டார்கள்.

அவன் இருட்டில் தட்டுத்தடுமாறி மெதுவாக நகர்ந்தான். கதவு நோக்கிச் செல்லும்போது சில கலைப்பொருட்கள் மீது மோதிக்கொண்டான். கதவை அடைந்து திறந்தபோது, வெளியே தாழ்வாரமும் இருட்டாகிக் கிடந்ததைக் கவனித்தான். மியூசியத்தின் வெளியே கார் ஒன்று புறப்படும் சத்தம் ஜன்னல் வழியாகக் கேட்டது.

அடக்கமுடியாத ஆற்றாமைக் கோபம் உள்ளுக்குள் பொங்க, அவன் கத்தியை படிக்கட்டு மரப்பிடிகள்மீது ஓங்கி அறைந்தான். கூப்பர்க்குத் தகவல் சொல்லியாக வேண்டும். ஆனால் கூப்பர் இதை எப்படி எடுத்துக்கொள்வாரோ என்ற கவலை அல்ல காரணம் அவன் கோபத்திற்கு. இந்த இரவு நிகழ்வு அவனது தொழில் சரித்திரத்தில் ஏற்பட்ட ஒரு களங்கம். அவன் மனிதர்களே அவனைத் தோற்கச் செய்துவிட்டார்கள்.

இது மாதிரி மீண்டும் நிகழக் கூடாது.

34

புது டில்லி

மியூசியத்திலிருந்து அவர்கள் அதிவேகமாக தப்பித்தவுடன், விஜய் மத்திய டில்லியின் தெருக்கள் வழியாக காரை போக்குவரத்தின் நெருக்கடிக்குள் நுழைத்துநுழைத்து எவ்வளவுதூரம் முடியுமோ அவ்வளவு தூரம் ஓட்டினான். தங்கள் கண்முன்னாலே அருங்காட்சியகப் பொறுப்பாளர் குரூரமாகக் கொலைசெய்யப்பட்ட காட்சியை அவர்களால் மனதிலிருந்து அகற்றமுடியவில்லை.

ஸ்டீயரிங் வீலைக் கெட்டியாகப் பிடித்த பிடியில் அவனது பதற்றம் தெரிந்தாலும், இறுதியாக லேசாக விஜய் தன்னைத் தளர்வாக்கிக்கொண்டான். 'அது கூப்பரா?' என்று அவன் அலைஸைக் கேட்டான்.

மரத்துப்போன அலைஸ் தலையாட்டினாள். அவள் இன்னும் அதிர்ச்சியில் இருந்தாள். அறையிலிருந்த பொன்னிறகேசம் கொண்ட அந்த இளைஞன் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் அவளுக்குப் புரிந்தது, தன்னைத் துரத்தியவர்கள் இன்னும் அவளைத் துரத்துவதை விடவில்லை என்று. கிரீஸிலிருந்து டில்லி வரைக்கும் எப்படியோ அவர்கள் அவளைப் பின் தொடர்ந்துவந்து விட்டார்கள். அவள் விஜயின் கோட்டையில் தஞ்சம் புகுந்திருப்பதைக் கூட அவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

'நாம இம்ரானுக்குத் தெரிவிக்கணும். கூப்பர் இங்க இருக்கானோ இல்லையோ, இன்னைக்கி நடந்த சம்பவம் எதேச்சையானது அல்ல. யாரோ உன்னைப் பின் தொடர்கிறார்கள், அலைஸ்,' என்று விஜய் அவளின் சிந்தனைகளுக்குக் குரல் கொடுத்தான். அவன் தன் ஃபோனை காலினுக்குக் கொடுத்தான். 'இம்ரானைக் கூப்பிடு. அவருபேரு ஸ்பீடு டயலில் இருக்கு.'

காலின் தலையசைத்தான். ஸ்மார்ட் போனின் திரையை விரலால்

விலக்கிவிட்டு விஜயின் பாஸ்வோர்டை டைப் செய்தான். 'உனக்கு ராதாகிட்ட இருந்து டெக்ஸ்ட் மெசேஜ் வந்திருக்கு,' என்றான்.

'என்ன சேதி?' என்று விஜய் ஆச்சரியப்பட்டான்.

காலினின் தாடை இறங்கியது, குறுஞ்செய்தியைப் படித்தவுடன்.

'என்ன ஆச்சு?' என்று அலைஸ்கூட பின்னிருக்கையில் உட்கார்ந்திருந்த சுக்லா கேட்டார்.

'இம்ரானைப் பத்தி,' என்ற காலின் குரல் உணர்ச்சியால் நடுங்கியது. தான் படித்துத்கொண்டிருந்த செய்தியை அவனால் நம்பமுடியவில்லை. 'அவரோட அபார்ட்மெண்ட் இன்னைக்கு சாயங்காலம் வெடிகுண்டில நொறுங்கிப் போச்சு. அவர் ஆஸ்பத்திரியில இருக்கார். ராதா யாரோ ஒரு ஐபி ஆள்கூட ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கா. நம்மள அங்க வரச்சொல்லியிருக்கா.' அவன் விஜய்க்கு மருத்துவமனை முகவரியைச் சொன்னான். விஜய் உடனே காரைத் திருப்பினான். மருத்துவமனை அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து வெகுதூரம் இல்லை. அவர்கள் அங்கே 15 நிமிடங்களுக்குள் போய்ச்சேர்ந்தார்கள்.

ஐபியா, ஐபி இல்லையா?

ராதா காரிலிருந்து போக்குவரத்தை இறுக்கமாக வெறித்துப் பார்த்தாள். அவள் தலையை ஏராளமான கேள்விகள் குடைந்தன. இம்ரானை ஏன் குறி வைத்தார்கள்? யார் அவரைக் கொல்ல விரும்பியிருப்பார்கள்? டைட்டன் கம்பெனிக்கு அன்று அவர் சென்றதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இருக்குமா? அப்படி இருந்தால், அடுத்து அவள்தான் இலக்கு என்று அர்த்தமா?

அவள் தோள்களை இறக்கிக்கொண்டாள். நல்லவேளை, இப்போது காரில் மூன்று ஐபி ஆட்களோடு அவள் இருக்கிறாள் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்த்தாள். பாதுகாப்பான உணர்வோடு அவள் இருந்தாள்.

'இம்ரான பத்தி டாக்டர்கள் என்ன சொன்னார்கள்?' என்று தன்னருகே உட்கார்ந்திருந்த உளவுத்துறை அதிகாரியைப் பார்த்துக் கேட்டாள். அவர் இறுக்கமான தோற்றத்துடன், அடர்த்தியான மீசையோடு இருந்தார்.

அவர் தோள்குலுக்கினார். முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்த ஹோஷியர் சிங் பின்னாடி திரும்பி பதில் சொன்னான்: 'அவர்க்கு

ரொம்ப ரத்தம் சேதமாயிருக்குன்னு மட்டுந்தான் எங்களுக்குத் தெரியும். அங்க போனாத்தான் நிறைய தெரியும்.'

கார் ஒரு ரவுண்டானாவைச் சுற்றி இடதுபக்கம் திரும்பியது. ராதா ஜன்னல் எட்டிப்பார்த்தாள். இன்னும் சிந்தனையிலே இருந்தவள், திடீரென்று அதிர்ந்தாள். இதுவரை கார்போகும் பாதையை அவள் கவனித்திருக்கவில்லை. தெற்கு டில்லியிருந்து மருத்துவமனை இருக்கும் பொதுவான திசையில் கார் போய்க்கொண்டிருந்தது. இம்ரானைப் பற்றிய சிந்தனையில் அவள் மூழ்கியிருந்ததால், அவர்கள் மருத்துவமனைக்குச் செல்லும் பாதையிலிருந்து விலகி வேறு திசையில் பயணிப்பதை அவள் கவனிக்கவில்லை. அவர்கள் சாணக்கியபுரி வழியாக கடந்து தெளலா குவானை நோக்கிப் போகிறார்கள் என்பதை இப்போதுதான் அவள் புரிந்துகொண்டாள். அது குர்கானுக்குப் போகும் வழி.

தன்னருகே உட்கார்ந்திருக்கும் இறுக்கமான மனிதனையும், முன்னிருக்கையில் இருக்கும் இரண்டு நபர்களையும் அவள் பார்வையிட்டாள். தவறான பாதையில் போகிறோம் என்று யாருக்கும் பிரக்ஞையிருப்பதாக தெரியவில்லை. அப்படியே இருந்தாலும், அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. கார் வானொலி ஓசை கேட்டது. நடப்பில் புகழ்பெற்ற ஒரு பாலிவுட் பாடல் வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது; அதோடு சேர்ந்து ஹோஷியர் சிங் 'ஹம்' செய்துகொண்டிருந்தான்.

ஏதோ தப்பாகத் தெரிகிறது. கலவர உணர்வு அவளைப் பிடித்துக்கொண்டது. இவர்கள் நிஜமாகவே ஐபி ஏஜெண்ட்களா? அல்லது டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ்க்கு அவள் செய்த விஜயத்தின் பின்விளைவா இது? தனக்குச் சேதி சொன்ன ஏஜெண்டின் அடையாள அட்டையை ஞாபகத்தில் கொண்டுவர முயன்றாள். ஆனால் தான் அதைச் சரியாக பார்த்திருக்கவில்லை என்று ஞாபகம்வந்தது. அவன் தன் ஓட்டுநர் உரிமத்தை அவளிடம் காட்டியிருந்திருக்கலாம். கவனமில்லாமல் இருந்ததற்கு அவள் தன்னைத்தானே நொந்துகொண்டாள்.

ஆனால் இவர்கள் ஐபி ஏஜெண்ட்களாக வேசம் போட்டிருந்தால், தன்னை ஏன் உடனடியாக கொன்றிருக்கவில்லை? சாட்சிகள் ஏதுமில்லாமலே அவளை அவள் வீட்டிலே கொன்றிருப்பது சுலபம். இம்ரானைப் பார்க்கப் போகிறோம் என்று பொய்சொல்லி அவளை ஏன் காரில் அடைத்துக் கூட்டிப்போக வேண்டும்? இம்ரான் பற்றிய செய்தி

அவளை வெளியே கொண்டுவருவதற்கான ஒரு சாக்குதான். இந்தச் சிந்தனையில் அவளுக்கு ஒரு நம்பிக்கைத் தீப்பொறி திடீரென்று மினுங்கியது. ஒருவேளை, இம்ரான் நன்றாக இருக்கலாம். ஆனால் அந்தத் தீப்பொறி உடனே அணைத்துப் போனது, அவள் தன் இக்கட்டான நிலைமையை உணர்ந்தவுடன்.

ராதா இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தாள். ஒருவேளை அவள் அளவுக்கதிகமாக மனப்பிறழ்வுச் சிந்தனையில் இருக்கலாம். அப்படியென்றால், இந்த மனிதர்கள் தன் சந்தேகங்களை அறிந்துகொள்ளாதவாறு அவள் சமாளிக்க வேண்டும். இரண்டுபக்கக் கதவுகளை அவள் பார்வையிட்டாள். மத்திய பூட்டு எந்திரத்தால், அவை பூட்டப்பட்டிருந்தன. ஆனால் கதவுகளைத் திறக்கமுடியாது என்று அர்த்தமில்லை. என்ன ஒன்று, ஓடும் காரிலிருந்து அவளால் குதிக்க முடியாது. குதித்தால் அவள் காயப்படலாம்; அவர்கள் மீண்டும் அவளைக் காருக்குள் தள்ளி கொண்டுபோய்விடுவார்கள்.

தப்பிப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அதுவும் தோற்றுப்போனால், அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகி விடுவார்கள். அப்புறம் அவளுக்கு நம்பிக்கையே இருக்காது.

ராதா கண்களை மூடிக்கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள முயன்றாள், சுவாத்தை நிலைநிறுத்தி. குறுக்குசாலைப் போக்குவரத்து சமிக்ஞை வரும்வரை அவள் அமைதியாகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. அங்கே அவர்கள் காரை நிறுத்தத்தான் வேண்டும். அதுதான் அவளுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே வாய்ப்பு.

ஏதொவொரு தெரியாத இடம் நோக்கி வேகமாக கார் போய்க்கொண்டிருக்க, அவள் முன்னாடி வெறித்துப்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு என்ன நடக்கப் போகிறது?

35

மருத்துவமனையில்

மருத்துவமனை வளாகத்தின் வண்டிநிறுத்துமிடத்தில் விஜய் வேகமாக காரை ஓட்டிவந்து கிறீச் சத்தத்துடன் நிறுத்தினான். நால்வரும் ஒரே நேரத்தில் துள்ளிக்குதித்து வெளிவந்து அவசரகாலப் பிரிவு நோக்கி ஓடினர். அலைஸ் பின்னால் நெருக்கமாக ஓடிவர விஜயும் காலினும் வரவேற்புப்பிரிவை ஒன்றாக அடைந்தனர். சுக்லா அவர்களுக்குக் கைகாட்டி முன்னால் போகுமாறு சைகை செய்துகொண்டே பின்தங்கினார். இளைஞர்கள் போல அவரால் வேகமாக ஓடமுடியவில்லை.

'இம்ரான் கிட்வாய்,' என்று விஜய் மூச்சிறைக்கச் சொன்னான். 'நாங்க அவரோட ஃப்ரெண்ட்ஸ்'

'ஒரு நிமிசம்,' என்று வரவேற்பு பெண் கத்தரிக்கப்பட்ட தொனியில் பதில் சொன்னாள். அவள் சில காகிதங்களில் தேடினாள்; பின் கணினியில் ஏதோவொன்றை தட்டச்சு செய்துவிட்டு எந்திரத்தைப் பார்த்தாள். இறுதியில் அவள் தலையாட்டினாள். 'அந்தப்பேரில யாருமே இல்லையே,' என்று அவள் விஜயிடம் தகவல் தந்தாள்.

காலினும் விஜயும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். 'நிச்சயமா தெரியுமா?' என்று விஜய் நம்ப முடியாமல் கேட்டான். 'கொஞ்ச நேரத்திற்கு முன்னாடிதான் அவர இங்க கொண்டுவந்தாங்கன்னு எங்களுக்குத் தகவல் கிடைச்சது. வெடிக்குண்டு காயமடைந்தவர். இண்டெலிஜென்ஸ் பீரோவில இருக்கார்.'

அந்தப்பெண் உறுதியாக தலையாட்டினாள். 'நான் எல்லா ரெக்கார்டுகளையும் பாத்துட்டேன். வெடிகுண்டுக்கு காயமடைந்தவர்கள் இங்க யாருமே இல்லை. அதுவும் இண்டெலிஜென்ஸ் பீரோவிலிருந்து நிச்சயமா யாரும் இல்ல. மன்னிக்கவும். நீங்க தவறான ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கலாம்.'

சுக்லா அவர்களிடம் வந்தார். வரவேற்புப்பெண் சொன்ன வார்த்தைகளைக் கேட்டார். அவர்களை அச்சம் வழிந்த முகத்தோடு பார்த்தார். தன் அச்சங்களை வெளிப்படுத்த அவருக்கு வார்த்தைகள் தேவையில்லை. அப்போது எல்லோரும் ஒரே விஷயத்தைத்தான் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இம்ரான் மருத்துவமனையில் இல்லாவிட்டால், ராதாவை யார் சந்தித்து எங்கே கூட்டிச் சென்றார்கள்?

வாய்ப்பு கதவைத் தட்டுகிறது

கார் தெளலா குவானை அடைந்தது. அவர்கள் தெளலா குவான் மேம்பாலத்தையும், விமான எக்ஸ்பிரஸ் மெட்ரோ ரயில்பாதையின் பக்கவாட்டு சாலையையும் கடந்து, இடது பக்கம் திரும்பி, சற்றுநேரம் தெளலா குவான் மெட்ரோ ரயில் நிலையத்திற்குள் காணாமல் போய், மறுபடியும் வெளிவந்து அகில உலக விமான நிலையம் நோக்கிப் போனார்கள்.

அவர்கள் மேம்பாலத்தைக் கடந்துவந்தபோது, மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அடுத்திருந்த சமிக்ஞையில் போக்குவரத்து கெட்டியாக இருந்தது. மேம்பாலத்திற்குக் கீழிருந்த வட்டச் சாலையிலிருந்து எல்லாவிதமான வாகனங்களும் சங்கமமாயின. கார்கள், பேருந்துகள், இருசக்கர வாகனங்கள் சமிக்ஞையின் வலதுபக்கம் திரும்பவேண்டி இஷ்டம்போல பாதைவிலகி, நேராகச் செல்லும் வாகனங்களோடு கலந்து ஒரு நீண்ட போக்குவரத்து நெருக்கடியை உருவாக்கின. மேம்பாலத்தின் அடிவரைக்கும் வாகனக்கூட்டம் நெரிசலில் தவித்தது.

கண்ணுக்குத் தெரியாதவாறு ராதா நேராக நிமிர்ந்து உட்கார்ந்தாள். இதுதான் அவளின் கடைசி வாய்ப்பு. இந்த சமிக்ஞையைக் கடந்தபின்பு, அடுத்து டில்லியிலிருந்து குர்கானுக்குச் செல்லும் விரைவுச்சாலை வந்துவிடும். அங்கே அதிவிரைவில் கடந்துபோகும் வாகனக்கூட்டத்திற்கு இடையில் கார் மெதுவாகப் போகக்கூடிய வாய்ப்பு இல்லை.

அவள் ஜன்னல்வழி வெளியே பார்த்தாள். ஒரே ஒரு அடி தள்ளி மிகவும் நெருக்கமாய் இன்னொரு கார் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தது. கதவைத் திறந்து வெளியேற வழியே இல்லை.

கார் மெதுவாக முன்னோக்கி நகர்ந்தது. டிரைவர் தன்முன்னே வெவ்வேறு திசைகளில் பிரிந்துசெல்லும் வாகனங்களில் கூட்டத்திற்கு இடையில் தனக்கான வழியை நெருக்கியடித்து பிடித்து

போய்க்கொண்டிருந்தான். கார்களுக்கு இடையில் இருந்த இடைவெளி அதிகமாகிக் கொண்டிருக்க, ராதா பதற்றமானாள். சமிக்ஞை விளக்கு பச்சையாக மாற, நெரிசல் தளர ஆரம்பிக்க, வண்டிகள் தங்கள் திசைகள் நோக்கி நகர ஆரம்பித்தன.

இப்போது அல்லது ஒருபோதும் இல்லை என்று அவள் தீர்மானித்தாள். ரகசியமாக தன் கையை நகர்த்தி கதவுப்பிடி நோக்கி கொண்டுபோனாள்.

அப்போதுதான் அவளது ஃபோன் ஒலிக்க ஆரம்பித்தது. மூன்று பேரும் அவளைத் திரும்பிப் பார்த்தனர். அவள் விரும்பாத சூழல் இதுதான்.

உண்மை என்ன?

'அவள் ஃபோன எடுக்கலை,' என்று விஜய் மற்றவர்களிடம் சொன்னான். கவலை முகத்தில் படர்ந்தது; சுக்லாவின் முகத்திலும் அது தாவியது. பகிர்ந்துகொள்ளப் பட்ட அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஒரு தந்தையும், ஓர் எதிர்காலக் கணவனும் கணநேரத்தில் ஒருவரை ஒருவர் பிரதிபலித்தார்கள்.

'இம்ரானுக்கு முயற்சி பண்ணு,' என்று காலின் சொன்னான். 'நாம அவர்க்கு பீட்டர் பத்தி தகவல் சொல்லியாகணும். ராதா எங்கிருக்காங்றத கண்டுபிடிக்க அவர் உதவி செய்யலாம்.' அமிழ்ந்துகொண்டிருக்கும் உணர்வு அவனுக்குள் ஏற்பட்டது; ஆனால் அதை அவன் தன் உத்வேகத்தைக் குறைக்க அனுமதிக்கமாட்டான். அது விஜயையும் சுக்லாவையும் மேலும் பாதித்துவிடும்.

விஜய் தலையசைத்தான்; இம்ரான் எண்ணை டயல் செய்தான். ஒரு வினோதமான, பரிச்சயமில்லாத குரல் பதில் சொன்னது. 'யெஸ்.'

'ம்... நான் இம்ரான் கிட்வாயோடு பேசவேண்டும்,' என்று விஜய் தயக்கமாக ஆரம்பித்தான்.

'யார் நீங்க?' குரல் அதிகாரத்தொனியிலும் கட்டளைத்தொனியிலும் ஒலித்தது.

விஜய் ஒரு நிமிடம் ஆடிப்போனான். இந்த அழைப்புக்குப் பதில் சொல்பவனுக்கு இம்ரானைத் தெரிந்தது போலிருந்தது. ஆனால் பதில் சொல்வது இம்ரான் அல்ல. பின் யார்? இதற்கு என்ன அர்த்தம்?

'நான்... ம்... அவரோட நண்பன்,' என்று அவன் சமாளித்தான்.

'விஜய் சிங்.'

'இணைப்பில் இருங்க,' என்று குரல் கட்டளையிட்டது. சில கணங்கள் மௌனம் நிலவியது. மீண்டும் இணைப்பில் வந்தான் அந்த மனிதன். 'சரி. உங்கள சரிபாத்தாச்சு. நீங்க அமெரிக்க-இந்திய பணிப்படைக் குழுவில இருக்கீங்க. மன்னிக்கவும், விஜய். அழைத்தது நீங்கதானான்னு நான் உறுதிசெய்ய வேண்டியிருந்தது. இப்ப இருக்கிற சூழல்ல, நாங்க எதிலும் அலட்சியமாக இருக்கமுடியாது.'

விஜயின் குழப்பம் அதிகமானது. பதற்றத்தின் தடம் பதிந்தது. என்ன சூழல்? இம்ரான் எங்கே இருக்கிறார்?

அவன் கேள்வி கேட்டான்.

'உங்களுக்குத் தகவல் வரல்லியா?' அந்த மனிதன் ஆச்சரியமடைந்தான். 'இன்னைக்கு இம்ரானைக் கொல்லப் பாத்தாங்க. ராக்கெட் வெடிகுண்டு அவரோட அபார்ட்மெண்ட்டுக்குள் ஏவப்பட்டது, ரொம்ப கிட்டக்க. அவர் ஆபத்தான கட்டத்தில இருக்கார். அறுவைச் சிகிச்சை நடக்குது. அவர் பிழைப்பாரான்னு தெரியல.'

விஜயின் மூளை சுழன்றது. அவர் தாக்கப் பட்ட செய்தி உண்மைதான்! செய்திகளை ஒன்றாகக் கோர்த்தது அவனது மனம். அவர்கள் சொன்னதுபோல, இம்ரான் அறுவைச் சிகிச்சையில் இருக்கிறார் என்றால், தானும் மற்றவர்களும் ஒரு தவறான மருத்துவமனைக்குத்தான் சென்றிருந்தோம் என்றால், ராதா ஏமாற்றப் பட்டிருக்கிறாள் என்று அர்த்தம். ஐபி ஆட்கள் போல பாவனை செய்து ராதாவைச் சந்தித்தவர்களுக்கு இம்ரான் வெடிகுண்டுத் தாக்குதலில் அடிபட்டது தெரிந்திருக்கும் என்றால், அது அவளுக்கு நல்லதாகத் தெரியவில்லை. இம்ரானைக் கொலைசெய்ய முயன்றவர்களுக்காக அந்தப் போலி ஐபி ஆட்கள் வேலை செய்கிறார்கள் என்று உறுதியாக நம்ப அவன் தயாராக இருந்தான்.

'விஜய்,' என்று ஃபோன்மனிதன் சொன்னான். 'இருக்கீங்களா?'

ஒருகணம் என்ன சொல்வது என்று விஜய்க்குத் தெரியவில்லை. பின் அவன் கேட்டான். 'நீங்கள் யார்?'

ஓர் இறுக்கமான தொனி அந்த மனிதனின் குரலில் நுழைந்தது. 'நான் அர்ஜுன் வைத். ஐபி இயக்குநர். நாம சந்திச்சிருக்கோம்.'

விஜய் பணிவானான். வாஸ்தவத்தில் அவனுக்கு வைத்தைத் தெரியும். இம்ரானின் தலைவர். ஆனால் இம்ரானின் தலைவர்தான்

ஃபோனை எடுப்பார் என்று அவனுக்கு எப்படித் தெரியும்? 'மன்னிக்கவும், மிஸ்டர் வைத்,' என்று அவன் திக்கினான். 'உங்க குரல என்னால அடையாளம் காண முடியல. ஆனா உண்மையிலேயே நான் எதிர்பார்க்கவில்லை...'

'பரவாயில்ல,' என்று வைத்தின் குரல் மீண்டும் வந்தது. 'இந்நேரம் நீங்க எங்க இருக்கீங்க? ராதா உங்ககூட இருக்காளா? இன்னைக்கு அவங்க டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸ்க்குப் போனதுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லேன்னு சொல்ல முடியாது.'

ஒரு குரூர அச்சம் அவனுக்குள் இறங்கியது. அவனும் ராதாவும் முன்பு இதுபற்றி நிறையவே பேசியிருக்கிறார்கள். விஜய் பணிப்படைக் குழுவில் சேரவேண்டும் என்று இம்ரான் வேண்டுகோள் விடுத்தபோது, ஆரம்பத்தில் விஜய் மறுத்தான். ராதாதான் அவனைப் பேசிப்பேசி கரைத்து குழுவில் சேரவைத்தாள்.

'உன்னவிட சிறப்பான ஆள் யாரு இருக்கா, இந்தப் பணிப்படைக் குழுவில சேர்றதுக்கு?' என்று ராதா விவாதம் செய்தாள். அவளுக்கு அவனது ரகசியம் தெரியும்; காலினுக்கும்தான். தன் வாழ்க்கையில் இருக்கும் இரண்டு முக்கிய ஆட்களிடம் தான் அந்த ரகசியத்தைக் கட்டாயம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று விஜய் உணர்ந்தான். 'தேசத்துக்கு மாத்திரம் இல்ல, இந்த உலகத்துக்கே உன்னோட பங்களிப்பைச் செய்றதுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. இது மாதிரியான வாய்ப்புகள் வாழ்க்கையில ஒரு தடவைதான் வரும்.'

அதனால் அவன் தயக்கத்துடன் சம்மதித்தான். ஆனால் ராதாவும் பணிப்படைக் குழுவில் இருக்கவேண்டும் என்று அவன் விரும்பியதில்லை. ஆனால் இம்ரான் விரும்பினார். அவன் பேசிப் பார்த்து தோற்றுப் போனான்.

'இது ரொம்ப ஆபத்தானது,' என்று அவன் எதிர்த்தான்.

'ஓ, எனக்கு ஆபத்து, உனக்கு இல்லை. அப்படித்தானே,' என்று அவள் பதிலடி கொடுத்தாள். அவளது வழமையான பாணியில் அவள் கண்கள் மின்னின. 'ஏன்னா நான் ஒரு பொண்ணு; நீ ஆம்பள.'

'இல்லை. அது அப்படியில்லை,' என்று அவன் ஈனஸ்வரத்தில் முணுமுணுத்தான். அவளது வாக்கு மூலத்தில் இருக்கும் முரண்நகையைப் பார்த்து மனதுக்குள் அவன் களைத்துப் போனான். அவனை அதில் சேர வைத்ததே அவள்! அதனால் அவன் அவளிடம் எப்படி பாரபட்சமாக இருப்பான்? ஆனால் தன் மனவோட்டங்களைச்

சொல்வதைவிட மௌனமாக இருப்பது நல்லது என்று அவனுக்குத் தெரியும். கடைசியில் அவன் விட்டுக்கொடுத்தான்.

இப்போது அந்த விவாதம் மீண்டும் ஆவிபோல வந்து அவனைத் தாக்குகிறது என்று அவன் நினைத்தான். அவனது மோசமான அச்சங்கள் உண்மையாகி விட்டன. அவளது வாழ்க்கையில் முதன்முதலாக ராதா ஒரு களப்பணியில் இம்ரானின் அறிவுரையை மீறி ஈடுபட்டாள். இப்போது வைத்துக்கும் கூட அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரியவில்லை.

இதுவரை நடந்ததை ஒன்றுவிடாமல் வைத்திடம் விஜய் சொன்னான். போலி ஐபி ஆட்கள், இம்ரானின் அபார்ட்மெண்டை வெடிவைத்து தாக்கியவர்களோடு எப்படியோ கலந்துகொண்டார்கள் என்ற விஜயின் மதிப்பீட்டை வைத் ஒத்துக்கொண்டார்.

'கவலைப் படவேண்டாம், விஜய்,' என்று அவர் ஊக்கமளித்தார். 'ராதாவின் ஃபோன்ல நாங்க உடனே அவள பின் தொடர்றோம். அதில் ஜிபிஎஸ் வசதி இருந்து அது செயல்பாட்டில இருந்தா, அவள் இருக்கிற இடத்தை உடனே கண்டுபிடிச்சிடுறோம். இம்ரானின் நிலைய பத்தி உங்களுக்கு அப்பப்ப தகவல் தர்றோம். இதிலிருந்து கடவுள் அவர காப்பாத்தட்டும். இப்ப எங்கே இருக்கீங்களோ அங்கேயே இருங்க. நான் என் ஏஜெண்ட்களை உங்ககிட்ட அனுப்பி வைக்கிறேன். இப்போதைக்கு உங்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்ல'

'நன்றி,' என்று விஜய் இணைப்பைத் துண்டித்து மற்றவர்களுக்கு விஷயத்தைச் சொன்னான். அவன் பேசும்போது ஒரு சிந்தனை மின்னல்போல அவனுக்குள் ஓடியது. அது வைத் சொன்ன ஒரு கருத்து. அவர்கள் எல்லோரும் கோட்டையிலே இருந்தார்கள் என்று எப்படி அந்த பொன்னிறகேச இளைஞனுக்குத் தெரிந்திருந்தது என்பது விஜய்க்கு திடீரென்று புரிந்தது. பொன்னிறகேச இளைஞன் ஏன் சுக்லாவைத் தெரிந்துகொள்ளாமல் விட்டுவிட்டான் என்பதும் நன்றாக விளங்கியது.

36

கிமு 328, செப்டம்பர் சமர்காண்ட், நவீனகாலத்து உஸ்பெகிஸ்தான்

சோக்டியன் அரண்மனை விளக்குகளாலும் தீப்பந்தங்களாலும் வெளிச்சமாய் இருந்தது. ஒரு பரபரப்பான ஆனந்த சூழல் நிலவியது. வெற்றிப்பேரரசர் அரண்மணையில் ஒரு விருந்து கொடுத்தார். எதிர்பாராத ஒரு தோல்விக்குப்பின், அவர் பின்வாங்கி பால்க்கிற்குச் சென்று தன் படையை மீண்டும் உருவாக்கினார். இற்றைய நாளில் தஜிகிஸ்தான் என்றறியப்படும் இடத்தில் இருந்த நதிப்பள்ளத்தாக்குகளின் வழியாக தன் நான்குப் படைப்பிரிவுகளையும், ஒரு பிரிவை நவீனகாலத்து உஸ்பெகிஸ்தான் வழியாகவும் அனுப்பிவைத்து, சமர்காண்டில் அவற்றை அவர் இணைத்தார். கலகம் செய்த ஆதிவாசிகளின் தலைவர்கள் தங்கள் குடும்பங்களுடன் பின்வாங்கி சோக்டியன் பாறைக்குச் சென்றார்கள். அதுதான் அலெக்ஸாண்டரின் அடுத்த நிறுத்தம். பல காரணங்களுக்காக.

இப்போதைக்கு அலெக்ஸாண்டர் கொண்டாடிக் கொண்டிருந்தார். அவர் பாரசீகத்தின் பேரரசர். நாளை அவர் சாக்டியன் பாறையை வென்றுவிடுவார். எதுவும் அவரது வழியில் குறுக்கே நிற்பது போல் தெரியவில்லை.

அரண்மனைக்குள் விருந்து கோலாகலமாகப் போய்க்கொண்டிருந்தது. ஒயின் தண்ணீராக மிதந்தது; மேஜைமீது சோக்டியன் பகுதியின் சுவையான பண்டங்கள் குவிந்துகிடந்தன.

தளபதிகளும் வீரர்களும் மாசிடோனியர்களும் மாசிடோனியர் அல்லாதவர்களும் ஹால்களில் கலந்து விருந்தையும் குடிபானங்களையும் உண்டும் அருந்தியும் ருசித்தனர். கொஞ்ச நேரத்திற்கு பகைகளும் அரசியலும் மறக்கப்பட்டன. நடத்திய போர்களும், நடக்கவிருக்கும் போர்களும் மறதிக்குள் தள்ளப்பட்டன;

சௌஜன்யமான சூழல் நிலவியது.

ஆனால் அது நீண்டநேரம் நிலைத்திடவில்லை.

ஹாலின் ஒரு பகுதியில் அலெக்ஸாண்டர், ஹெஃபாஸ்டியனோடும் தன் அந்தரங்க வட்டத்து மனிதர்களோடும் கம்பீரமாய் நின்றிருந்தார். வெடிச்சிரிப்புகள் அடிக்கோடிட்ட சத்தமான குரல்களும் கத்தல்களும் அந்தப் பகுதியில் நிலவிய குடிப்போதையின் உச்சத்தைக் காட்டின.

ஒயின் விளைவு மனிதர்களை சீக்கிரமே ஆட்கொண்டது. ஹெஃபாஸ்டியன் முன்னாடி வந்தான்.

'அமைதி, நல்ல மனிதர்களே!' ஒருசில தளபதிகளும் வீரர்களும் அவனைக் கவனித்தனர். ஆனால் அங்கிருந்த காட்டுக்கூச்சலில் அவன் நிராகரிக்கப்பட்டான். யாரோ ஒருவன் ஹெஃபாஸ்டியனைப் பற்றி மோசமான கருத்து ஒன்று சொன்னான். அலெக்ஸாண்டருக்கே சிரிப்பு வந்தது. கருத்தின் மையப்பொருள் நாயகனிடமும் புன்னகை வந்தது.

ஹெஃபாஸ்டியன் அங்கிருப்பவர்களுக்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதைக் காட்ட விரும்பினான். உணவுகள் நிறைந்த மேஜைமீது ஏறிநின்று, இரண்டு பித்தளைப் பாத்திரங்களை எடுத்து அவற்றில் இருந்தவற்றைக் கொட்டித் தீர்த்து வெறுமையாக்கி அவற்றைத் தட்டித்தட்டி உக்கிரமாக சத்தம் எழுப்பினான்.

பாத்திரங்களின் அதிர்வுச்சத்தம் கவனத்தை ஈர்க்க, ஹாலின் சத்தம் முணுமுணுப்பாக சுதி குறைந்தது. ஏதோவொன்று நடக்கிறது; அது என்னவென்பதை அறிந்துகொள்ள மக்கள் விரும்பினார். அலெக்ஸாண்டரின் காதலன் மேஜைமீது பாத்திரங்களைத் தட்டிக்கொண்டிருக்கிறான் என்றால், அதைப் பேரரசரும் வேடிக்கையாக பார்க்கிறார் என்றால், அது கவனிக்கப்பட வேண்டியதுதான்.

நிறைய பேர் தன்னைப் பார்க்கிறார்கள் என்ற திருப்தியோடு ஹெஃபாஸ்டியன் அலெக்ஸாண்டருக்கு அடுத்து உட்கார்ந்திருந்த மனிதர்களில் ஒருவனை சைகையால் அழைத்தான்.

'காதுகொடுத்து கேளுங்கள், நல்லோர்களே. நம் உள்ளூர்க்கவி பிரானிசஸ் எழுதிய கவிதையை,' என்று ஹெஃபாஸ்டியன் நமட்டுச்சிரிப்பு சிரித்துவிட்டு மேஜையிலிருந்து குதித்தான்.

ஊக்கம்கொடுத்த கத்தல்களினால் உந்தப்பட்டு, பிரானிசஸ் கவிதையை வாசிக்க ஆரம்பித்தான்.

இதுதான் அந்த இரவின் திருப்புமுனை. பிரானிசஸ் கவிதையை வாசிக்கும்போது, ஹாலில் இருந்த பெரும்பாலோர் சிரித்தார்கள்; கிண்டலாக நகைச்சுவைத் துணுக்குகள் சொன்னார்கள். தங்களுக்குள்ளே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். ஆனால் ஒரு பிரிவினர் முகங்கள் இருண்டன; கடுப்பாய்த் தோன்றின.

அவர்கள் பழைய ஆட்கள்; அலெக்ஸாண்டரின் தகப்பனார் பிலிப்பிடம் ஊழியம் செய்த பழம்பெரும் காவலர்கள். இளம் பேரரசன் பக்கத்தில் நின்று போர்புரிந்து, கோகமேளா போர் போன்ற அவனின் பல்வேறு வெற்றிகளில் பங்குகொண்டவர்களும் கூட. மாசிடோனியர்களுக்குச் சாதகமாக பலமுறை யுத்தங்களைத் திருப்பிவிட்டவர்கள். இப்போது கேட்டுக்கொண்டிருக்கும் கவிதை அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அந்தக் கவிதையின் அடிப்படை அலெக்ஸாண்டரின் தளபதிகள் சமார்காண்டில் பெற்ற தோல்வி. கடந்த வருடக் குளிர்காலத்தில் அலெக்ஸாண்டரை பால்க்கிற்கு ஓடவைத்த தோல்வி அது. பாக்ட்ரீயன் ஆதிவாசிகளினால் தோற்கடிக்கப்பட்ட தளபதிகளைக் கிண்டலடித்தது கவிதை.

அனுபவசாலி தளபதிகள் தங்களுக்குள் முனங்கினார்கள். அவர்களில் ஒருவர் க்ளிட்டஸ்; அவர் சமீபத்தில்தான் பாக்ட்ரீயாவுக்கும் சோக்டியாவுக்கும் சத்ரபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவரைத்தான் அதிகமாகக் கோபப்படுத்தியது கவிதை.

'மாசிடோனியர்கள் காட்டிமிராண்டிகள் முன்னாடியும் எதிரிகள் முன்னாடியும் அவமானப்படுத்தப்படுகிறார்கள்,' என்று பற்களை நறநறவென்று கடித்தவாறு கோபம் கொப்பளிக்க அவர் சொன்னார். 'இதை எப்படி நாம் கண்டுகொள்ளாமல் இருப்பது? எழுந்துநின்று இதைத் தட்டிக்கேட்க நம்மில் ஆண்கள் யாருமில்லையா? அவர்கள் நம்மைக் கேலி செய்கையில் நாம் சும்மா இருப்பதா?'

'வெற்றி வரும்போது அதற்கு அலெக்ஸாண்டர் பொறுப்பு. தோல்வி வருகையில் தளபதிகள்தான் பொறுப்பு,' என்று இன்னொரு பழம்பெரும் மனிதர் சொன்னார். 'பிலிப்பின் காலத்தில் இப்படி இல்லை.'

க்ளிட்டஸ் அவர்மீது பாய்ந்தார். 'பின் ஏன் நீங்கள் பேசவில்லை? இந்த முட்டாள்தனத்தை இப்போதே நிறுத்துங்கள்! பிலிப் இருந்தபோது, இப்போது அலெக்ஸாண்டர் இருக்கும் போதும், நமக்கு பேச்சுச் சுதந்திரம் இருந்தது; இருக்கிறது. நிச்சயமாக அவர்கள் நம் சிந்தனையின்

அறிவை புரிந்துகொள்ளுவார்கள்?'

'அவர்கள் குடித்திருக்கிறார்கள்,' என்று மற்றொருவர் எச்சரித்தார். 'நிறைய ஒயின் அவர்கள் மூளையை மழுங்கடித்துவிட்டது. இந்த நேரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. பெர்சிபோலிஸில் நடந்தது ஞாபகம் இல்லையா?' பாரசீகத்தின் தலைநகரான பெர்சிபோலிஸில் அலெக்ஸாண்டர் வெற்றிநடை போட்டு நுழைந்தபின்னர் அங்கு நடந்த ஒரு குடிபோதை விழாவை அவர் சொன்னார். அந்த விருந்தில், குடிபோதையில் அலெக்ஸாண்டர் பெர்சிபோலிஸ்க்கு தீவைக்க தீர்மானித்தார். அந்தக் காலகட்டத்தில் உலகத்தில் அற்புதமான நகரங்களில் ஒன்றாக இருந்த நகரத்தை அவர் அழித்துவிட்டார்.

'பிலிப் குடித்துவிட்டு அலெக்ஸாண்டரைக் கொல்ல முயன்றதையும் மறக்க வேண்டாம்,' என்று இன்னொரு பழமையான மனிதர் சொன்னார். அவர் குறித்தது, பிரபுத்துவ வம்சத்தைச் சேர்ந்த மாசிடோனியா பெண்ணான கிளியோபாட்ராவை பிலிப் திருமணம் புரிந்த நிகழ்வை. கிளியோபாட்ராவின் மாமா அட்டலஸ், கடைசியில் ஃபிலிப் ஒரு சட்டபூர்வமான வாரிசைப் பெற்றெடுக்கப் போகிறார் என்று ஒரு கருத்து சொன்னார். அதாவது அலெக்ஸாண்டர் சட்டத்திற்குப் புறம்பான பையன் என்று ஜாடையாகச் சொன்னார். அலெக்ஸாண்டர் பிலிப்பிற்குப் பிறந்தவர் இல்லை; அவரது தந்தை ஜீயஸ் என்னும் கடவுள்தான் என்று ஒலிம்பியாஸே சொல்லியிருந்தாலும், அட்டலஸின் கருத்து அலெக்ஸாண்டரைக் கோபப்படுத்தியது. கோபத்தில் அலெக்ஸாண்டர் குடித்துக்கொண்டிருந்த கிண்ணத்தை எடுத்து அட்டலஸ் மீது எறிய, பிலிப் எழுந்து வாளை உருவி அலெக்ஸாண்டரைக் கொல்லப் போனார். குடிபோதையின் உச்சத்தில் பிலிப் அலெக்ஸாணடரின் மீது பாயும்போது கால்தடுக்கி குப்புற விழுந்தார்.

பெருங்குடிபோதை, இரவில் எந்த அளவுக்கு சம்பவங்களை மோசமாக திசைதிரும்பும் என்பதை அந்த நிகழ்வு நிரூபித்தது. இந்த இரவு அப்படிப்பட்ட ஒன்றுதான். அதனால் பழமையான போர்த்தளபதிகள் நிகழ்வைத் தூண்ட விரும்பவில்லை.

ஆனால் க்ளிட்டஸ் தீர்மானமாய் இருந்தான். 'இதை நிறுத்தியாக வேண்டும்,' என்று அவன் வலியுறுத்தினான். 'இப்போதே. உங்களில் யாரும் ஆண்மகன் இல்லை என்றால், நான் செய்கிறேன் அதை. கிரானிக்கஸில் நான் அலெக்ஸாண்டரின் உயிரைக் காப்பாற்றியவன். ஃபிலோட்டஸை தூக்கிலிட்ட பின்பு, அவர் பாதிப்படையை

என்னிடமும், மறுபாதிப் படையை ஹெஃபாஸ்டியனிடமும் ஒப்படைத்தார். என் வேண்டுகோள்களுக்கு அவர் செவிசாய்ப்பார்.'

அவர் கூட்டத்தில் நுழைந்து முண்டியடித்து, பிரானிசஸ் ஆட்சிசெய்து கொண்டிருந்த மேஜை அருகே சென்றார்.

'போதும்!' என்று அவர் ஆணையிட்டார், பிரானிசஸை நோக்கி, 'மேற்கொண்டு எதுவும் வேண்டாம்!'

பிரானிசஸ் கவிதையைப் பாதியிலே நிறுத்தி, ஹெஃபாஸ்டியனையும், அலெக்ஸாண்டரையும் பார்த்தான்.

இளமையான அரசன் எழுந்து, தான் அருந்திய அளவுக்கு மிஞ்சிய மதுவின் போதையால் தள்ளாடியபடி நின்றார்.

'அவன் ஏன் நிறுத்த வேண்டும்?' என்று அலெக்ஸாண்டர் க்ளிட்டஸைக் கேட்டார். 'அவன் உண்மையைத்தானே சொல்கிறான்.'

ஹாலில் கனத்த மௌனம் ஊர்ந்தது. இனி இது க்ளிட்டஸ்க்கும் பிரானிசஸ்க்கும் இடையிலான உரசல் அல்ல. அலெக்ஸாண்டரே தன்னை அதில் ஈடுபடுத்திக்கொண்டார்.

அலெக்ஸாண்டர் க்ளிட்டஸை எதிர்க்கொண்டு நிற்க, க்ளிட்டஸ் அவரின் முறைப்பை பார்வையால் பற்றிக்கொண்டிருக்க, பிரானிசஸ் அமைதியாக மேஜையிலிருந்து இறங்கி பின்வாங்கினான்.

'பேரரசே! தங்களின் தகப்பனார் காலத்திலிருந்தே இது ஒரு மரபாகி விட்டது; வெற்றிக்கான பேரும் தோல்விக்கான பொறுப்பும்...' என்று க்ளிட்டஸ் ஆரம்பித்தவுடனே அலெக்ஸாண்டர் அவனைக் கத்தரித்தார்.

'என் தகப்பனார்!' என்று அவர் துப்பினார். 'என் தகப்பனார் நியாயமும் நேர்மையும் கொண்டவர் மாதிரி நீ பேசுகிறாய். அவருடைய வெற்றிகளுக்கு நான் செய்த பங்கிற்கு அவர் எனக்கு பேர் கொடுத்தாரா? என் தகப்பனாரின் மரபைப் பற்றிப் பேசுகிறாய்? எனக்குத் தெரிந்த ஒரே மரபு அவர் என்மீது வைத்திருந்த வெறுப்புதான். அவர் என்மீது கொண்ட பொறாமைதான். என்ன அது? அதுதான் ஒரு நியாயமான மனிதனின் அடையாளங்களா?' அலெக்ஸாண்டர் க்ளிட்டஸைப் பார்த்து வெறித்தவாறே கிண்ணத்திலிருந்து இன்னொரு மடக்கு ஒயினை அருந்தினார்.

'பேரரசே!' என்று கிளிட்டஸ் பதிலுக்கு பேச ஆரம்பித்தான். 'நீங்கள் உங்கள் தகப்பனாரின் ஞாபகத்திற்கு நியாயம் செய்யவில்லை. அவர்தான் பாரசீகத்தின் மீதான படையெடுப்பை ஆரம்பித்தார். அவர்

மட்டும் ஒரு கொலைகாரனின் கத்தியால் இறந்திருக்காவிட்டால், நீங்கள் இன்றைக்குச் செய்ததை அவர் அன்றைக்கே செய்துமுடித்திருப்பார்,' என்று சொல்லிவிட்டு அவர் நிறுத்தினார். காயமும் கோபமும் இப்போது பொங்கிக்கொண்டே வர, அறிவு உணர்ச்சிக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டது. 'பேரரசே! நீங்கள் இன்று என்னாவாக இருக்கிறீர்களோ அதற்குக் காரணம் உங்கள் தகப்பனார்தான். இன்றைக்கு நீங்கள் சாதித்ததற்கு எல்லாம் அஸ்திவாரம் போட்டது அவர்தான். இதுவரை நீங்கள் சாதித்ததை விட ஆகப்பெரியது அவருடைய சாதனைகள். இன்றைக்கு நீங்கள் உங்களை ஓர் உயர்ந்த மனிதன் என்றும், அம்மானின் பிள்ளை என்றும் நம்பி, உங்கள் தகப்பனார் பிலிப்பையே மறுதலிக்கிறீர்கள்.'

அவரின் கடைசி வார்த்தைகளுக்குப் பின்னர் அங்கே மௌனம் நிலவியது. அந்தக் கணத்தில் எல்லா மனிதர்களும் ஒட்டுமொத்தமாக சுவாசித்தலை நிறுத்திவிட்டது போன்று தோன்றியது.

'கயவன்!' அலெக்ஸாண்டர் எதிர்வினை ஆற்றினார். ஒயின் அவரது அறிவை மேகம் போல் மூடியது. 'என்னைத் தாக்கிப் பேசி, மாசிடோனியர்கள் மத்தியில் ஓர் அதிருப்தியை உருவாக்கிவிட்டு, தண்டிக்கப்படாமலே நீ செல்வது அனுமதிக்கப்படும் என்று நீ நினைத்துக் கொள்கிறாயா?'

ஆனால் க்ளிட்டஸ் கலங்காமல் நின்றிருந்தார். 'மனிதர்கள் தாங்கள் நினைத்ததைப் பேசுவதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியாவிட்டால், சுதந்திரமாகப் பிறந்த மனிதர்களை ஏன் நீங்கள் விருந்துக்கு அழைக்க வேண்டும்? காட்டுமிராண்டிகளையும், அடிமைகளையும் மட்டும் வைத்துக் கொண்டிருக்கலாமே. அவர்கள் உங்களைக் கொஞ்சி, உங்கள் பாரசீக அரைஞாண் ஆடையையும், வரிக்கோடுகள் போட்ட மேலங்கியையும் முத்தமிடுவார்கள்!'

அலெக்ஸாண்டர் ரௌத்திரத்தில் வெடித்தார். கிண்ணத்தை க்ளிட்டஸ்மீது தூக்கியெறிந்தார். ஒயின் அவர்மீதும், அந்தத் தளபதிமீதும் கொட்டியது. அலெக்ஸாண்டர் விருந்துணவு பாத்திரங்களை நோக்கி ஓடி மேஜைமீதிருந்த பழத்தை எடுத்து க்ளிட்டஸ் மீது விசிறியடித்தார். மக்கள் சிதறி ஓடினர். ஆயுதத்திற்காக சுற்றுமுற்றும் அவர் பார்த்தார். ஆனால் கைக்கு எதுவும் அகப்படவில்லை.

'காவலாளிகளைக் கூப்பிடுங்கள்!' என்று அலெக்ஸாண்டர் கத்தினார். குரல் வழுக்கியது. 'காவலாளிகளைக் கூப்பிடுங்கள்! எங்கே

அவர்கள்?'

க்ளிட்ரஸ் நண்பர்களில் சிலர் அவரைப் பிடித்து அரண்மனையை விட்டு இழுத்துச் சென்று அலெக்ஸாண்டரின் கோபத்திலிருந்து தப்பிக்கவைத்து அகழியில் பாதுகாப்பாக வைத்தார்கள். அலெக்ஸாண்டரின் கோபம் தணிந்தவுடன், க்ளிட்டஸ் மீண்டும் வரலாம். அதற்குள் விருந்து முடியாமல் இருந்தால், அதில் அவர் கலந்துகொள்ளலாம்.

அலெக்ஸாண்டரின் பாதுகாவலர்கள் வந்து சேர்ந்தார்கள். அவரைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையம் அமைத்தார்கள்.

கிளிட்டஸைக் காப்பாற்றிய நண்பர்கள் திரும்ப வந்து விருந்து தொடரட்டும் என்பது போல் சமிக்ஞை செய்தார்கள். சண்டை முடிந்தது. இரவு விருந்துக்குப் பின்வரும் மறுநாள் பின்விளைவில் எல்லாம் மறந்துவிடும்.

ஆனால் இந்த இரவு அப்படி முடிய விதிக்கப்பட்டதல்ல.

வாயிலில் பெரும்சத்தம் கேட்டது. க்ளிட்டஸ் நடைபோட்டு உள்ளே வந்தார். சண்டைக்குப் பயந்து ஓடிவிடுவது அவர் இயல்பல்ல. போர்க்களங்களில் அவர் நிலையாக நின்று சண்டையிட்டவர். இப்போதும் அப்படித்தான் நிற்கப் போகிறார்.

'கடவுளே! கிரீஸில் ஒரு தீய மரபு ஆள்கிறது!' அவர் குரல் ஹால்முழுவதும் எதிரொலித்தது. அவர் பேரரசரை நோக்கி நடைபோட்டு வந்தார். யூரிபிடஸ் எழுதிய 'ஆண்ரோமசி'யிலிருந்து ஒரு பத்தியை ஆணவமான குரலில் ஒப்பித்தார்.

தன் நண்பர்கள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அலெக்ஸாண்டர் திரும்பிப் பார்த்தார். க்ளிட்டஸைப் பார்த்தவுடன் அவர்க்குள் மீண்டும் கோபம் கிளர்ந்தது. அவரது எதிர்வினை உடனடியாகவும் அனிச்சையாகவும் இருந்தது. தன் பாதுகாவலர்களில் ஒருவனிடமிருந்த குத்தீட்டியைப் பிடுங்கி, க்ளிட்டஸை நோக்கி ஓடி, ஆயுதத்தை தளபதியின் உடலுக்குள் செலுத்தினார்.

'உனக்கும் பெசஸ்க்கும் வித்தியாசமில்லை,' என்று அவர் கத்தினார். க்ளிட்டஸ் தரையில் விழுந்தார். குத்தீட்டி அவரைக் குத்திய இடத்திலிருந்து ரத்தம் கொப்பளித்தது. விருந்து ஹாலில் பெரிய குருதிவெள்ளம் உருவானது. அது சபிக்கப்பட்ட ரத்தம் என்பது போல, மனிதர்கள் சுருங்கிப் பின்னால் தள்ளி நின்றார்கள். இதுபோன்ற

அலெக்ஸாண்டரை அவர்கள் பார்த்ததில்லை. ஆவிபிடித்த மனிதனைப் போல அவர் தோன்றினார்.

ரத்தம் வடிந்து உயிரும் வடிய க்ளிட்ரஸ் கிடந்தார். அலெக்சாண்டர் தரையில் முட்டிப்போட்டார். குடிபோதை தூண்டிய மயக்கத்தில், தான் என்னகாரியம் செய்துவிட்டோம் என்ற உணர்வு அவருக்குள் ஊடுருவியது. தரையில் பொத்தென்று விழுந்தார். க்ளிட்ரஸின் உயிரற்ற தேகத்தைப் பார்த்து அவருக்குக் கண்ணீர் முட்டியது தளபதியின் ரத்தம் அவரின் செருப்புக்களையும் அங்கியையும் நனைத்தது. அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை.

தன்னிடம் சவால் விட்டதற்காகவும், மாற்றுக்கருத்துச் சொன்னதற்காகவும், அலெக்ஸாண்டர் தன்வாழ்க்கையில் முதன்முதலாக ஒருவனைக் கொன்றுவிட்டார். அப்படி செய்ததனால், அவர் இரண்டு மாசிடோனியா மரபுகளை மீறீவிட்டார். முதலாவது, ஒருவனை படையினர் முன்னாடி விசாரணை இல்லாமல் அவர் கொன்றார். இரண்டாவது, விருந்துக்கு வந்த விருந்தாளியைக் கொன்று, விருந்தோம்பல் என்னும் ஜீயஸின் விதியை அவர் மீறிவிட்டார். அதிலும் அவரது உயிரைக் காப்பாற்றி ராஜகுடும்பத்திற்கு விசுவாசத்தோடும் சிறப்பாகவும் சேவை செய்த ஒரு விருந்தாளியை அவர் கொன்றார்.

அந்த இரவு ஒரு திருப்புமுனை. தன் பேராசைகள் தன்னை ஆட்டிப்படைக்க அலெக்ஸாண்டர் அனுமதித்தது அதுதான் முதல் தடவை.

அது கடைசியாகவும் இருக்கப்போவதில்லை.

37

நிகழ்காலம்

மூன்றாவது நாள்
தப்பித்தல்...

ராதா அனிச்சை உணர்வில் செயல்பட்டாள். மூன்று முகங்களும் தன்னைத் திரும்பிப்பார்த்த கணத்திலே, விடாது ஒலித்த தன் மொபைல் போனின் சத்தத்தைப் புறக்கணித்து அவள் கார்க்கதவின் பிடியை மேலே இழுத்து கதவைப் படாரென்று திறந்தாள். அது கார்க்கதவு பக்கத்தில் நின்றிருந்த காரின் பக்கவாட்டு ஃபிரேமில் மோத, அந்த வண்டி டிரைவர் உடனே இறங்கி வெளியே வந்து சேதத்தைப் பார்வையிட்டான்.

கத்திய டிரைவரையும், பின்னால் நின்றிருந்த வண்டிகளின் அலறல் சத்தங்களையும் கண்டுகொள்ளாமல் அவள் போக்குவரத்து நெரிசலின் ஊடாக வளைந்து வளைந்து, சில மீட்டர்கள் தள்ளியிருந்த மெட்ரோ ரயில்நிலையத்தைக் குறிவைத்து ஓடினாள்.

அவளுக்குப் பின்னாடி, பாதிக்கப்பட்ட டிரைவர் அவள் பயணித்த காரின் டிரைவரிடம் கோபத்தோடு போனான். ஆனால் அவனை வரவேற்றது ஒரு துப்பாக்கி. உடனே சினத்தை மறந்து, அச்சமும் உயிர்மீதான ஆசையும் மீறியெழ அவன் பின்வாங்கினான்.

காரில் இருந்த மூன்று மனிதர்களும் துரத்தினர். ராதா நடைபாதை மீதேறி, மின்படியில் பயணித்து மெட்ரோ நிலையத்திற்குள் சென்றாள். சாலையில் டிரைவர்கள் கோபமாக ஹாரன் ஒலி எழுப்பினார்கள். அந்தப் போலி ஐபி அதிகாரிகள் காண்பித்த துப்பாக்கிகளைப் பார்த்ததும் அடங்கிப்போனார்கள்.

'ரயில் வருது!' என்று அவர்களில் ஒருவன் கத்தினான். நிலைய முகப்பை உள்ளேவரும் ரயில்வண்டியின் மஞ்சள் வெளிச்சம் நிரப்பியது.

அவர்கள் தங்கள் வேகத்தைக் கூட்டினர்; துப்பாக்கிகளைப் பார்த்து நின்ற கார்களின் மீதேறி ஓடினர்; எஸ்கலேட்டரில் ராதாவைப் பின்தொடர்ந்தனர்.

ராதா பின்னால் திரும்பிப் பார்த்தாள். போக்குவரத்து நெரிசல் அவர்களை நிறுத்திவிடவில்லை. அவர்கள் ஏந்தியிருந்த துப்பாக்கிகள் கண்ணில் பட்டன. ஆனால் அவர்கள் அவளைச் சுடவில்லை. ஏன் என்று அவள் ஆச்சரியப் பட்டாள்.

ஆனால் அனுமானிக்க நேரமில்லை. எஸ்கலேட்டரை விட்டு அவள் வெளிவந்ததும், ரயில், நடைமேடையில் கிறீச்சிட்டு நின்றது. டிக்கெட் வாங்க நின்றிருக்கும் ஒரு நீண்ட வரிசையில் காத்திருந்து ஒரு நல்ல குடிமகளாக இருப்பதற்கெல்லாம் நேரமில்லை. வரிசையாக இருந்த ஒற்றை எந்திரக்கதவுகள் மேலே ஏறினாள், பின்னாடியிருந்து வந்த மக்களின் கூக்குரல்களை மதிக்காமல். நடைமேடையின் இறுதிமுனை நோக்கி ஓடி கடைசி கோச்சில் ஏறிக்கொண்டாள். அந்த மூன்று வேட்டைக்காரர்களும் இன்னும் நடைமேடையில்தான் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் அவளை அச்சுறுத்தலோடு பார்த்தான். ரயில் வேகத்தை அதிகரித்துக் கொண்டு நிலையத்தைவிட்டு வெளியே சென்றது.

அவளை முறைத்தவன் சுற்றுமுற்றும் பார்த்தான், தன் ஆட்கள் இருவரின் அலறல் சத்தம் கேட்டு. திடீரென்று அங்கே ஒரு பதற்றம் நிலவியது. அந்த மூன்று மனிதர்களும் நிலையத்தின் வெளிவாசல் நோக்கி தலைதெறிக்க ஓடினார்கள். ரயில்வேகம் எடுத்தவுடன், தன்னைப் பிடிக்கவந்த அந்த மூன்று மனிதர்களும் ஏன் பறந்துபோனார்கள் என்பதை அவள் புரிந்துகொண்டாள். சாதாரண உடைகளில் ஒரு ஐந்து மனிதர்கள் எஸ்கலேட்டரின் மீதேறி வெளிவந்து ஒற்றை எந்திரக்கதவுகளைத் தாண்டி குதித்து அந்த மூன்று போலி ஐபி அதிகாரிகளைத் துரத்திவந்தனர். புதிதாய் வந்த அவர்களும் கைத்துப்பாக்கிகளைக் காட்டினர். அவர்கள் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் தன்னைப் பிடித்தவர்களைத் துரத்துவதால், அவர்கள் நல்லவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

அவள் ஒரு வெற்று இருக்கையில் உட்கார்ந்து புருவத்தைத் துடைத்துக் கொண்டாள். காரிலிருந்து தப்பித்துவரும்போது தனக்குவந்த ஃபோன் அழைப்பிற்குத் தான் பதில்சொல்லாமல் விட்டது இப்போதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. போனை எடுத்து எண்ணைப் பார்த்து தலையாட்டினாள். விஜயின் எண். என்ன

மாதிரியான நேரம் என்று அவள் நினைத்தாள். அவன் எண்களை அழுத்தினாள்.

விஜய் உடனே போனை எடுத்தான். 'ராதா, உனக்கு ஒண்ணும் இல்லியே?' அவனது குரலில் ஒலித்த அக்கறையும், அவளின் பாதுகாப்பு பற்றிய பயமும் அவள் இதயத்திற்கு இதமாய் இருந்தன; அவளை ஓய்வாக தளர்த்தவும் செய்தன.

'ஒண்ணுமில்ல. நல்லாயிருக்கேன்.' என்று அவள் அவனிடம் சொன்னாள். ஐந்து மனிதர்கள் வந்தவுடன் அவளைக் கடத்தியவர்கள் ஓடிப்போன காட்சிவரைக்கும் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அவனிடம் ஒப்பித்தாள்.

விஜய் நமட்டாகச் சிரித்தான். 'அவர்கள் வைத் அனுப்பிய ஐபி ஆட்கள். உன் ஜிபியெஸை கவனித்து உன்ன காப்பாத்த அவர் ஒரு குழுவை அனுப்பினார். அவர் திட்டம் வேலை செஞ்சது மாதிரி தெரியது.'

ராதா புன்னகைத்தாள். ஆனால் அவள் புன்னகை மறைந்தது, ஏதோவொன்றை நினைத்தவுடன். 'இம்ரான் ஆஸ்பத்திரியில இருக்கார்ங்றது பொய்.'

'இல்ல. பொய் இல்ல.' அந்தச் செய்தியை அவளுக்குச் சொல்வது இப்போது விஜயின் முறை. 'நீ ஏர்போர்ட்ல இருப்ப. அதிகபட்சம் பத்து நிமிசத்தில. அங்க ஒரு அமைதியான இடத்தில பதுங்கியிரு, நாங்க வர்ற வரைக்கும்'

விஜயின் அமெரிக்க ஆங்கிலப் பதத்தை நினைத்து ராதா சிரித்துக்கொண்டாள். தான் படித்த லூயி லமர் புதினங்கள் அவளுக்கு ஞாபகம் வந்தன. எல்லாவற்றையும் தாண்டிவந்த பின்பு புன்னகைப்பது நல்லது; அதைவிட நல்லது, விஜய் தன்னை விமானநிலையத்திற்கு வந்து கூட்டிக்கொண்டு போகப்போகிறான் என்று தெரிந்துகொள்வது.

ஜீன்ஸ் பாக்கெட்டில் போனை வைத்துவிட்டு கண்களை மூடிக்கொண்டாள். மாலை நேரத்து நிகழ்வுகளின் பதற்றமா அல்லது ஜவுன்காரிலிருந்து குர்கானுக்கு பகலில் சென்ற பயணத்தின் களைப்பா? அவளுக்குத் தெரியவில்லை.

ரயில் நின்றது போல தெரிந்தது. யாரோ தன்னை எழுப்புவது போல தோன்ற அதிர்ந்து விழித்தாள். எங்கிருக்கிறோம் என்று ஒருகணம் பிரக்ஞையற்று விழித்தவள், தன்முன்னே நின்ற மனிதர்களை மங்கலான கண்களால் வெறித்துப் பார்த்தாள்.

மெல்ல அவளின் பார்வை தெளிவானது. ஒரு காக்கஸ் மனிதன் ஆறு மனிதர்களோடு நிற்பதை அவள் கண்டாள். அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. வெள்ளைக்காரன் கைத்துப்பாக்கியை அவள் முகத்திற்கு நேராக குறிவைத்தான். கோச் வெறுமையாக இருந்தது. எல்லாப் பிரயாணிகளும் இறங்கிவிட்டார்கள். அல்லது ஓடிவிட்டார்கள்.

அவளுக்கு நிலைமை புரிந்தவுடன் அவன் பல்லிளித்தான். 'நாம் இப்போது விமான நிலையத்தில் இருக்கிறோம், டியர்.' என்று திமிர்த்தனமாகப் புன்னகைத்தான். 'இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையத்திற்கு உங்களை வரவேற்கிறோம்.' விமான நிலைய அறிவிப்பு போல அவன் மிமிக்ரி செய்தான். அவனது குரலின் ஏற்றஇறக்கம் விமான நிலையத்தில் கேட்கும் ஆங்கில அறிவிப்புகளுக்கு இணையாக இருந்தது. 'உன் இருக்கை பெல்ட்டைப் போட்டுக்கொள், செல்லம். இப்ப ஒரு நீண்ட பயணம் போகணும்.'

இந்திராகாந்தி பன்னாட்டு விமானநிலையம். மெட்ரோ ரயில்நிலையம்

விஜய் நிலையத்தில் சுற்றுமுற்றும் பார்த்தான், குழப்பத்துடன். பத்து நிமிடத்திற்கு முன்னாடியே அவன் வந்துவிட்டான். ரயில் நிலையத்தைவிட்டு மத்திய டில்லி நோக்கிப் போவதைப் பார்த்தான். ராதா நடைமேடையில் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. அவன் பார்த்ததெல்லாம் விமானங்களிலிருந்து இறங்கி அடுத்த ரயிலுக்காகக் காத்திருக்கும் பயணிகளை மட்டுந்தான்.

எங்கே போய்விட்டாள்?

நிலையம் முழுவதும் இன்னொருமுறை நடந்தான். அவளை எங்கேயாவது பார்க்காமல் விட்டுவிட்டோமோ என்று சோதித்தான். அப்படி விடுவது சாத்தியமில்லை என்றாலும், சோதித்துப் பார்க்காமல் விடுவதற்கு அவனுக்கு மனசில்லை.

அவன் மற்றவர்களை விட்டுவிட்டு, வைத் சொன்ன ஐபி ஏஜெண்டுகளுக்காக காத்திருக்க விமானநிலையத்திற்கு விரைந்தான். போக்குவரத்து மோசமாக இருந்தது. ஆனால் தான் வருவது தெரிந்திருந்ததால் ராதா வேறு எங்கேயும் திரிந்துகொண்டிருக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளை போனில் அழைப்பதும் பிரயோஜனம் இல்லை. அது அணைக்கப்பட்டிருந்தது. அதுவேறு அவனுக்கு

உறுத்தலாய் இருந்தது. அவள் ஏன் ஃபோனை அணைத்து வைத்திருக்க வேண்டும்?

எதுவும் புரியவில்லை. அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவள் மீண்டும் பிடிபட்டிருக்கலாம். ஒருவேளை தன்னைக் கடத்தியவர்களிடமிருந்து தான் தப்பித்துவிட்டதாய் அவள் பொய்சொல்லியிருக்கலாம். அது ஒரு மோசமான எண்ணம்தான். ஆனால் இம்ரானுக்கு நேர்ந்ததைப் பார்க்கும்போது, எதையும் சாத்தியமில்லை என்று நிராகரித்துவிட முடியாது.

விஜய், காலினை அழைத்தான்; நடந்ததை ஃபோனில் சொன்னான். காலின், அலைஸ் மற்றும் சுக்லா, மூன்று ஐபி ஏஜெண்டுகளோடு விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். விஜய் போனவுடனே ஐபி ஏஜெண்டுகள் வந்துவிட்டார்கள். அவர்களின் அடையாளங்கள் 'வைத்'துடன் சோதிக்கப்பட்டன. பின்புதான் மற்றவரகள் அவர்களோடு புறப்பட்டார்கள்.

ஐபி ஏஜெண்டுகள் அவர்களுடன் ஜவுன்கார்வரை பாதுகாப்புக்காக செல்ல வேண்டும் என்பதுதான் திட்டம். அவர்கள் எங்கே போகலாம் என்பது பற்றி நிறைய விவாதம் நடந்தது. இந்த நேரத்தில் எந்த இடமும் பாதுகாப்பானது அல்ல. அலைஸ் ஜவுன்காரில் இருந்தாள் என்று தெரிந்தும் அவளின் எதிரிகள் அங்கே வராமல், அவள் கோட்டையைவிட்டு வெளியே வரும் வரை காத்திருந்தார்கள் என்ற விஜயின் விவாதம் வென்றது.

'இப்போதைக்கு பாதுகாப்பான இடம் கோட்டைதான்,' என்று விஜய் முடித்தான். மற்றவர்களும் உடன்பட்டார்கள்.

ராதாவை எப்படி கண்டுபிடிப்பது என்று தெரியாமல், விஜய் இம்ரானின் எண்ணுக்கு மறுபடியும் டயல் செய்தான். தன் எண்னை விஜய்க்குத் தரமுடியாமல் போனதால், வைத் இப்பொதைக்கு இம்ரான் எண்ணிலே தன்னைத் தொடர்பு கொள்ளச் சொல்லியிருந்தார்.

வைத் அழைப்புக்குப் பதில்சொல்லும் போது கேட்டார். 'எல்லாம் சரியா இருக்கா?'

'இல்ல சார்,' என்று விஜய் தற்போதைய நிலவரத்தைச் சொன்னான். 'ஒரு வேண்டுகோள்,' என்று மேலும் சொன்னான். 'ராதாவோட மொபைல் ஃபோனை மறுபடியும் பின்தொடரமுடியுமா? அதுல ஜிபிஎஸ் இருக்கிறதனால.'

'இப்பவே யாரையாவது விட்டு செய்ய சொல்றேன்,' என்று வைத்

பதிலளித்தார். 'ஆனா அவ ஃபோன் 'ஆன்'ல இருந்தா மட்டுந்தான் இடத்தைக் கண்டுபிடிக்க முடியும். அணைக்கப்பட்டிருந்தா, நாம பெரிசா ஒண்ணும் பண்ண முடியாது.'

விஜயின் இதயம் வலித்தது. அவன் பயந்ததுபோல அவள் கடத்தப்பட்டிருந்தால், அவர்கள் அவளது ஃபோனை அணைக்காமல் விட்டுவைத்திருப்பதற்கு வாய்ப்பு குறைவு. அப்படியே அது 'ஆன்'னில் இருந்தாகூட, அவர்கள் ஜிபியெஸைத் துண்டித்திருப்பார்கள், அவள் இருக்கும் இடம் தெரியக் கூடாது என்பதற்காக.

மியூசியத்தில் தங்களைத் தாக்கியவர்கள் ஏதோவொரு சிறப்பான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தங்கள் ஸ்மார்ட் ஃபோனில் இருக்கும் ஜிபிஎஸ் மூலம் தங்களை அடையாளம் கண்டுகொண்டு பின் தொடர்ந்திருக்கிறார்கள் என்று விஜய் கணக்குப்போட்டு புரிந்துகொண்டான். மியூசியத்தில் இருந்தவர்களுக்கு சுக்லாவைத் தவிர எல்லோருடைய அடையாளங்களும், இருப்பிடமும் தெரிந்திருக்கிறது என்பதிலிருந்தே தெரிகிறது. சுக்லாவிடம் மொபைல் போன் இல்லை என்பதால், அவர்களுக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இது தெரிந்தவுடன், விஜயும் மற்றவர்களும் தங்கள் ஃபோனிலிருந்த ஜிபியெஸைத் துண்டித்துவிட்டார்கள்.

விஜய்க்குப் பயமாயிற்று. அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் கத்துக்குட்டிகள் அல்ல. உளவுத்துறை பயன்படுத்தும் அதே தொழில்நுட்பத்தை அவர்களும் பயன்படுத்துகிறார்கள் என்றால், பின் அவர்களும் சக்திவாய்ந்த மனிதர்கள்தான். அவனது மோசமான சிம்ம சொப்பனம் நிஜமாயிற்று. அவன் ராதாவை இழந்திருக்கலாம்.

38

கைதி...

ராதாவின் கண்கள் படபடத்தன; அவள் ஈனஸ்வரத்தில் முனகினாள். அவள் முதலில் பார்த்த விசயம் அவளிருந்த சுற்றுப்புறத்தின் நிறம்.

வெள்ளையானது; சுத்தமானது; அசலானத வெள்ளைக்கூரை. வெள்ளைச் சுவர்கள். வெள்ளைத் தரையாகக் கூட இருக்கலாம். இந்த சிந்தனை வந்தவுடன், தன் கால்களையும் கைகளும் கட்டப்பட்டு தான் ஒரு படுக்கையோடு இறுக்கிக் கட்டப்பட்டிருந்ததை அவள் உணர்ந்தாள். லேசாகக் கூட அசைய முடியாமல் கிடந்தாள். அவள் இடது கையில் ஊசியொன்று பொருத்தப்பட்டு திரவப்பாட்டில் இணைக்கப் பட்டிருந்தது.

கொஞ்சநேரம் அவள் தன் கட்டுகளோடு போராடினாள்; பின்பு பிரயோஜனமில்லை என்பதை உணர்ந்துகொண்டு தன் நிலைமையின் நிஜத்தில் சரணடைந்தாள்.

தலை பாரமாக இருந்தது; அவளது தேகம் ஈயம்போல கனத்தது. எங்கே இருக்கிறாள் அவள்? எப்படி அவள் அங்கே வந்தாள்? ஒரு மெல்லிய ஞாபகம் வந்தது, பனிமூட்டத்தின் ஊடாக வருவது போல. ஒரு மனிதன் ரயில் கோச்சில் அவன்மீது துப்பாக்கியை நீட்டிக்கொண்டிருந்தான். ரயிலைவிட்டு அவள் ஆடுமாடுமாதிரி தள்ளப்பட்டு நடைமேடையில் நின்றாள்.

அவள் மூக்கில் செலுத்தப்பட்ட வேதியல் வாயுவால், நாசித்துவாரங்கள் இன்னும் எரிந்தன. அவள் முகத்தில் மூடப்பட்ட ஈரத்துணி கழுத்தின் அடிப்பகுதியை பலமாக அழுத்த, கழுத்தின் பின்பக்க பிடறியில் காயமும் வலியும் ஏற்பட்டன.

தான் மருத்துவமனை கவுனை அணிந்திருக்கிறோம் என்பதை அவள் உணர்ந்தாள். ரயிலில் அவள் அணிந்திருந்த ஜீன்ஸும், மேலாடையும் எங்கே போயின? யார் அவள் உடைகளை மாற்றியது?

யாரோ முன்பின் தெரியாத ஒருவன் தன்னை அசிங்கப்படுத்திவிட்டான் என்ற ஓர் அவமான உணர்வும், பயங்கர கோபமும் அவளை ஆட்கொண்டன. முன்னெச்சரிக்கை இல்லாமல் ரௌத்திரம் வெடித்தது.

கோபம் அவளைத் தின்றுதீர்க்க, எல்லா பகுத்தறிவு எண்ணங்களும் அவளை விட்டு விலகின. அவளுக்கு அது ஓர் அதிர்ச்சியாக இருந்தது. பலமான கத்தலோடு, கட்டுத்தளைகளோடு அவள் போராடினாள். அவள் இதுவரை காட்டாத பலமும் ஆழமும் அவளது போராட்டத்தில் வெடித்தன.

...அல்லது பரிசோதனை பெருச்சாளியா?

மருத்துவ நிலையத்தின் கட்டுப்பாட்டு அறையில் டாக்டர் வருண் சாக்ஸேனா கணினியில் காணொளிக்காட்சியை ஆர்வத்துடன் வெறித்துப் பார்த்தார். அவர் தன் சகமனிதனிடம் திரும்பி தலையசைத்தார். 'நீ சொன்னது சரிதான், காரி,' என்றார். 'இந்த மருந்துக்கு பக்கவிளைவு இவ்வளவு பலமா இருக்கும்ன்னு நான் நினைச்சதே இல்ல.'

காரி ஃபிரீமன் பல்லிளித்தான். "நான்தான் சொன்னேனே'ன்னு எனக்குச் சொல்லப் பிடிக்கல. ஆனா உங்ககிட்ட நான் அப்படித்தான் சொன்னே.' ராதாவின் உணர்ச்சி வெடிப்பைக் காட்டிய காணொலிக்காட்சியின் மீது அவன் கட்டைவிரலை ஆட்டினான். 'அவளுக்கு இப்போதே மாற்றுமருந்த குடுக்கறது நல்லதுன்னு நினைக்கிறேன். அவ இப்படியே சிதயாம இருக்கணும்ன்னு நீங்க விரும்பினீங்கன்னா. இன்னும் ரெண்டுமணி நேரத்துக்கு மருந்தோட விளைவு விலகாது. அந்த நேரத்தில அவளுக்கு கை போகலாம்; ஒன்றோ ரெண்டோ.'

தன் கையில் குத்தப்பட்டிருந்த ஊசியைச் சுத்தமாக மறந்துவிட்டு ராதா கட்டுத் தளைகளோடு குறையாத மூர்க்கத்துடன் போராடும் காட்சி திரையில் தெரிந்தது. பிரயோஜனமற்ற சினத்தோடு அவள் அடித்துக்கொண்டிருந்தபோது, திரவப்பாட்டில் குழாய்கள் உக்கிரமாக ஆடியசைந்தன.

கடைசிமுறையாக காணொளிக்காட்சியைப் பார்த்து முடித்தவுடன், அவர் இண்டர்காமை எடுத்து ஆணைகள் இட்டார். சில நிமிடங்களில் ஒரு நர்ஸ் உள்ளே வந்து திரவப்பாட்டிலில் மருந்தை ஊசிமூலம் செலுத்தினாள். மாற்றுமருந்து வேகமாக வேலை செய்தது. உடனே

ராதாவின் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் கிட்டத்தட்ட அடங்கின.

'உங்களோட வழக்கமான பரிசோதனை ஆட்கள வச்சிக்கிட்டு இந்த மாதிரி காட்சியை உண்டாக்க முடியாது,' என்று சொல்லிவிட்டு, ஃபிரீமன் தொடர்ந்தான், நமட்டுச் சிரிப்புடன். 'அவங்க எல்லாம் வெறும் சக்கை. அவங்களுக்கு ஊசி போட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான். மருந்து வேலை செய்யாது. ஏன் வேலை செய்யலேன்னு உங்களுக்குப் புரியாது. இந்தப் பொம்பள சரியான நேரத்துக்கு வந்தது நல்லதாப் போச்சு.'

'அவளா வரலை,' என்று சக்ஸேனா அவனுக்குத் தகவல் சொன்னார். மற்ற இரண்டுபேர் அறையைவிட்டு வெளியேறினர். 'அவள இங்க கூட்டிவந்தது கூப்பர். நாம சீக்கிரமாகவே அவள ஒழிச்சிக் கட்டிடணும். 'ஆபரேஷன் மகாபாரதா' பத்தி அவளுக்குத் தெரிஞ்சவுடன்.'

'நிஜமாவா?' என்று ஃபிரீமன் கவலையோடு காணப்பட்டான். 'இதோ பாருங்க. நீங்க என்ன இங்க பூட்டி வச்சிருக்கீங்க. வெளியுலகத்தில என்ன நடக்குதுன்னே எனக்குத் தெரியாது.'

'வேறு வழியில்ல உனக்கு,' என்று சாக்ஸேனா திருப்பி அடித்தார். 'நாம இங்க வெறும் மருத்துவ பரிசோதனைகள் தான் பண்ணிக்கிட்டு இருக்கோம்ன்னு எல்லோரும் நினைச்சிட்டிருக்காங்க. நான் கூட எப்போதாவது இங்க வரும்போது ரகசியமாத்தான் வர்றேன். எந்த வழியிலும் டைட்டனோட இந்த நிலையத்துக்கு தொடர்பு இருக்குன்னு யாருக்கும் தெரியக் கூடாது. நீங்க இங்க நடத்தற ஆராய்ச்சிகள் யாருடைய கண்ணிலும் பட்டுறக்கூடாது. உனக்கது தெரியும். இங்க மரபணு ஆராய்ச்சி நடக்குதுன்னு உலகத்துக்குத் தெரிஞ்சா, ரொம்ப ஆபத்தாயிடும். குறிப்பா, டைட்டன் மரபணுவியல் தலைவரோட தலமையிலதான் இந்த ஆராய்ச்சி நடக்குதுன்னு தெரிஞ்சா.'

'ஆமாம். எனக்குத் தெரியும், தெரியும். அது ஒண்ணும் எனக்கு சந்தோசமான விஷயம் இல்ல,' என்று ஃபிரீமன் முனகினான். 'இந்த ஆப்பரேஷன் ஆபத்தில் இருக்கு?'

சக்ஸேனா தோள்குலுக்கினார். 'தெரியல. அதனால தான் அவ இங்க இருக்கா. நாம கண்டுபிடிக்கணும். பத்திரிக்கைக்காரி மாதிரி வேசம் போட்டுக்கிட்டு என்கிட்ட வந்தா. ஸ்வரூப்பைச் சந்திக்க வந்த ஐபி ஏஜெண்டுக்கும் அவளுக்கும் தொடர்பு இருக்குன்னு கூப்பர் நம்ம அலெர்ட் செஞ்ச பின்னாடிதான், அவள் ஓர் உளவாளின்னு நமக்குத்

தெரிஞ்சிது.'

ஃபிரீமன் விசிலடித்தான். 'அவ ஒரு ஐபி ஆள்கிட்ட வேலை செஞ்சா; அப்படித்தானே? அவளும் ஒரு இந்திய உளவுத்துறை ஆள்தானே?'

'இன்னும் தெரியல. ஆனா அது முக்கியமில்ல. அந்த ஐபி ஆள் செத்துட்டான்... அல்லது செத்திட்டு இருக்கான். கூப்பர் அதப் பாத்துக்குவார். அவளுக்கு விஷயம் தெரிஞ்சிடுச்சின்னா, அவ அவன்கூட போயிடுவா. அதுவரைக்கும் கூப்பர் அவள ஒரு தூண்டிலாத்தான் பயன்படுத்தப் போறார். அதனால, நாம அவள எந்த தொடர்பும் இல்லாதவளா வச்சிக்கிட்டு அவள இங்க பயன்படுத்தணும். நம்ம பரிசோதனைக்கு நல்ல ஆட்கள் வரமாட்டாங்க,' என்று அவர் சந்தோசமில்லாமல் பல்லிளித்தார். ஃபிரீமன் மீண்டும் நமட்டாகச் சிரித்தான்.

39

தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டது

விஜய், காலின், அலைஸ் மற்றும் சுக்லா கோட்டையின் படிப்பறைக்குள் இருந்தனர். சற்றுநேரத்திற்கு முன்புதான் ஐபி ஆட்கள் அவர்களை இங்கே கொண்டுவந்து விட்டுப்போனார்கள். அவர்களை யாராவது பின் தொடர்ந்திருக்கக்கூடும் என்பதால், அவர்கள் ஜாக்கிரதையாக இருந்தார்கள்.

கோட்டைக்கு வந்தபின்புதான் விஜய்க்கு நிம்மதியும் பாதுகாப்பு உணர்வும் ஏற்பட்டன. அவர்கள் இங்கே பாதுகாப்பாக இருப்பார்கள். ஆனால் ஜவுன்கார்க்கு செல்லும் பயணத்தின்போதும், இங்கே திரும்பிவந்த போதும், ராதாவைப் பற்றி செய்தி ஏதும் வரவில்லை என்பதால் அவர்கள் மனம் கலங்கியிருந்தார்கள். அவள் பூமியை விட்டே மறைந்துவிட்டாள் என்பது போல இருந்தது.

சுக்லா சோகமாக உட்கார்ந்திருந்தார். முகத்தில் மகளைப் பற்றிய கவலை தெரிந்தது. 'வைத் ஏன் டைட்டனைப் பற்றி விசாரிக்காமல் இருக்கார்?' என்று அவர் பல தடவை கேட்டுவிட்டார், குறிப்பா யாரையும் பார்க்காமல். டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ் தலைமை நிர்வாக அதிகாரியிடம் வைத் தனிப்பட்ட முறையில் பேசிவிட்டார் என்பதை விஜய் அவரிடம் ஏற்கனவே சொல்லியிருந்தான். ஐபி இயக்குநரே தன்னைத் தேடி வந்துவிட்டார் என்பதால் அந்த மனிதர் அதிர்ச்சியாகி, இம்ரானுக்கும் ராதாவும் என்ன நேர்ந்திருக்கிறது என்பது பற்றி உண்மையிலேயே கவலைப்பட்டவர் போலவும் தோன்றினார். புலனாய்வுக்கும், ராதாவைத் தேடும் முயற்சிக்கும் தனது முழு ஒத்துழைப்பைத் தருவதாக உறுதியளித்தார். இந்தியா டைட்டனின் ஒவ்வொரு அலுவலகத்தையும், அதனோடு சம்பந்தப்பட்ட எல்லா அயல்பணி நிலையங்களையும் ஐபி ஏஜெண்டுகள் சோதித்துப் பார்க்க தான் அனுமதிப்பதாக அவர் சொல்லியிருந்தார்.

'ஐபி எல்லா துப்புக்களையும் சோதிச்சிட்டிருக்கு,' என்று விஜய் பொறுமையாகச் சொன்னான். சுக்லாவிற்காக அவன் தன் பதற்றத்தை மறைத்துக் கொண்டான். 'நாம அவங்கள நம்பித்தான் ஆகணும். ஏதோ ஒண்ணு சீக்கிரம் நடக்கும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு.'

அலைஸ் பேசினாள். 'மியூசியத்தில அந்த மஞ்சள்முடிக்காரன் சொன்னத பத்தி நான் யோசிச்சிக் கிட்டிருக்கேன்,' என்று அவள் விஜயைப் பார்த்தாள். 'அவன் எப்போது நம்மள நம்பாம விட்டுட்டான்னு ஞாபகம் இருக்கா? இம்ரான பத்தியும், ராதாவ பத்தியும் அவன் ஏதோ சொன்னான்.'

'அவங்க 'வேவுபாக்க' படுறாங்கன்னு சொன்னான்,' என்று விஜய் உடனே பதிலளித்தான் சோகமாக. இம்ரானும் ராதாவும் குறிவைக்கப்பட்ட இலக்குகள் என்று அவன் அந்த நேரத்திலே கணக்குப் போட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் அதை அவன் யோசிக்காமல் விட்டதற்கு அவன் தன்னையோ அல்லது மற்றவர்களையோ குற்றம் சொல்லமுடியாது என்று அவனுக்குத் தெரியும். ஒரு மெல்லிய நூலிழையில் தொங்கிக் கொண்டிருந்த தங்கள் விதியைத் தவிர அவர்களால் அந்நேரத்தில் வேறெதைப் பற்றியும் யோசிக்கமுடியாது. அங்கிருந்து தப்பித்தது அவர்கள் அதிர்ஷ்டம். அந்த மனிதர்கள் தொழில்முறைக் கொலைகாரர்கள்.

'ஆமாம். அதையும் சொன்னான். ஆனால் அவர்கள் துப்புதுலக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவன் சொன்னான்.' அலைஸ் அவனை எச்சரிக்கையுடன் பார்த்தாள். இதைப் பற்றி இப்போது பேசுவது சிக்கலானா நேரம் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் இந்த விசயத்தில் தங்களுக்கு ஒரு துப்பு கிடைக்கும் என்று அவளுக்கு ஓர் உணர்வு இருந்தது.

'ஆமாம். எனக்கு ஞாபகம் இருக்கு,' என்று காலின் முறைத்தான். விஜயும் சுக்லாவும் சோகமாக தலையாட்டினார்கள். காலின் தன் தொடையைத் தட்டினான். அலைஸ் என்ன சொல்ல வருகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. 'ரெண்டுக்குமே ஒரு தொடர்பு இருக்கு.'

விஜயும் சுக்லாவும் இன்னும் குழப்பமாக தெரிந்தார்கள். அலைஸ்க்குப் புரிந்தது, அவர்களின் உணர்ச்சிகள் அவர்களது சிந்தனையை மறைத்தது என்று. அதனால் அவள் விளக்கமளித்தாள்: 'என்னோட அகழ்வாராய்ச்சியில் பீட்டர் சம்பந்தப் பட்டிருந்தான்; கிரீஸில் எனக்கு அவ்வளவு நடந்தது; இதற்கிடையில் உயிரியல் தீவிரவாதத்தின் துப்பு கண்டுபிடித்தார் இம்ரான். இரண்டு

நிகழ்வுகளுக்கும் சம்பந்தமே இல்லன்னுதான் நாம இதுவரைக்கும் நினைச்சிக்கிட்டு இருந்தோம். ஆனால் ரெண்டுக்கும் உண்மையிலேயே சம்பந்தம் இருப்பது சாத்தியமா?'

சுக்லா விஜயைப் பார்த்தார். இது ஒரு நல்ல செய்தியா அல்லது கெட்ட செய்தியா என்று அவர்க்கு நிச்சயமாகத் தெரியவில்லை. விஜய் உடனே பதில் சொல்லவில்லை. மியூசியத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிலிருந்தும், இப்போது அவர்கள் நடத்திக்கொண்டிருக்கும் பேச்சிலிருந்தும் பெற்ற தரவுகளை அலசி ஆராய்ந்தவண்ணம் விஜயின் மனதில் சிந்தனைச் சக்கரங்கள் ஓடுகின்ற சத்தம் அலைஸ்க்குக் கேட்டது. அவளுக்கு விஜயைப் பற்றித் தெரியும், அவர்கள் ஒன்றாக இருந்த நாட்களிலிருந்தே. தரவுகளை பகுத்தாயும் விசேஷமான ஆற்றல் உண்டு அவனிடம்; அதே நேரம் அவன் தனது உள்ளுணர்வையும் சார்ந்திருப்பான் - கொலைகாரக் கூட்டுத்திறன். அவள் சொன்ன விஷயத்தைப் பலப்படுத்த அவன் இப்போது உண்மைகளையும், உள்ளுணர்வையும் ஒன்றாக சேர்த்து யோசித்துக் கொண்டிருக்கிறான்.

'நீ சொன்னது சரியா இருக்கும்,' என்று விஜய் இறுதியாகச் சொன்னான். 'நம்ம எல்லோரையும் பத்தி அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. டாக்டர் சுக்லாவைத் தவிர நம்ம இயக்கங்கள பின்தொடர்றதுக்கு அவங்ககிட்ட தொழில்நுட்ப வசதியிருக்கு. அதனாலதான் அலைஸ் கோட்டையில இருக்கிறதயும், நாம மியூசியத்துக்குப் போனதயும் அவங்க கவனிச்சிட்டாங்க. அவங்க ராதாவையும் இம்ரானயும் கூட கவனிச்சிருக்காங்க. டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ்க்கு அவங்க ரெண்டுபேரும் போனதும் அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. மியுசியத்தில அந்த மஞ்சள்முடிக்காரன் சொன்னதிலிருந்து இதுவரைக்கும் தெளிவாக புரியது. இம்ரானும் ராதாவும் குறிவைக்கப்பட்டிருக்காங்க. கேள்வி என்னன்னா, கிரீஸ் அகழ்வாராய்ச்சிக்கும் உயிரியல் தீவிரவாதக் கோணத்துக்கும் என்ன சம்பந்தம்? அவங்க அந்த கனசதுரத்தத் தேடித்தான் வந்தாங்கன்னு நமக்குத் தெரியும். இந்தியாவுக்கு வரும்போது, ஏதோவொன்றைத் தேடித்தான் அலெக்ஸாண்டர் வந்தார்ன்னும் நமக்குத் தெரியும். "கடவுள்களின் ரகசியம்,'ன்னு யூமனியஸ் சொன்னது அதுதான்.' விஜய் உரக்கச் சிந்தித்தான். விஷயங்களை ஒழுங்குபடுத்தி யோசிக்க முயன்றான்.

மற்றவர்கள் அமர்ந்து கவனித்தார்கள். விஜய் விஷயங்களின் ஊடாக தர்க்கரீதியாக பயணிக்கையில், தாங்கள் இடைமறிக்கக் கூடாது என்று தெரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு விஜயைப் பற்றி நன்றாகவே தெரியும். ராதா எங்கிருக்கிறாளோ என்ற கவலைகளால்

சுக்லாவின் கவனம் சிதைய, விஜய் சொல்லியதை அவர் பாதிதான் கேட்டுக்கொண்டிருந்தார்.

'அதனால,' என்று விஜய் தொடர்ந்தான். 'வெளிப்படையான முடிவு என்னன்னா, அலெக்ஸாண்டர் தேடிட்டு இருந்த ரகசியம்தான் உயிரியல் தீவிரவாதத்தின் சாத்தியமான ஆதிமூலம். என்னால் யோசிக்க முடியற ஒரே விஷயம் இதுதான்: அது மக்களை ஒரு நொடிக்குள்ள கொல்லக்கூடிய வைரஸ் அல்லது பாக்டீரியா. வேறு என்ன இருக்கமுடியும்? டைட்டனுக்காக மருத்துவ நிலைய சிறைகள்ல நடந்த மருத்துவ பரிசோதனைகளுக்கு அதுதான் காரணம். மேலும் பரிசோதனை அறிக்கைகள் முன்பின் தெரியாத பாக்டீரியா அல்லது வைரஸ்தான் அத்தன சாவுக்கும் காரணம்ன்னு சொல்லுது. ஆனாலும் இன்னும் நிறைய கேள்விகள் இருக்கு ஒரு பாக்டீரியாவை அல்லது வைரஸை ஏன் 'கடவுள்களின் ரகசியம்'ன்னு சொல்லணும்? அலெக்ஸாண்டர் ஏன் அந்த ரகசியத்த தேடணும். அத கண்டுபிடிச்சி அவரு என்ன செஞ்சாரு? இல்லன்னா வேறு எதுவோ நம்ம பார்வையிலிருந்து தப்பிச்சு போயிடுச்சா?'

இந்த சிந்தனைகளை மற்றவர்கள் உள்வாங்கிக் கொண்டிருந்தபோது அங்கே மௌனம் நிலவியது. விஜயின் முடிவு தர்க்கரீதியாகத் தெரிந்தது. அவன் எழுப்பிய கேள்விகளும் பொருத்தமாகத்தான் இருக்கின்றன. ஆனால் எதற்கும் ஒரு தெளிவான விடை இல்லை. குறிப்பாக, அலெக்ஸாண்டர் தேடிய ரகசியம் ஒரு பாக்டீரியா அல்லது வைரஸ் சம்பந்தப்பட்டது என்றால், அதை உயிரியல் தீவிரவாதத்திற்கு பிரயோகிக்க முடியும் என்றால், ஏன் அதை அவர் தேடிப்போனார் என்பது விளங்கவில்லை.

சுக்லா எழுந்தார். 'நான் தூங்கப் போலாம்ன்னு நினைக்கிறேன்,' என்று அவர் சுரத்து இல்லாமல் சொன்னார். இப்போது தனிமையில் இருக்க அவர் விரும்பினார். அலெக்ஸாண்டர் பற்றிய, உயிரியல் தீவிரவாதத்தின் தொடர்பு பற்றிய விவாதத்தில் அவருக்கு ஆர்வம் இல்லை. அவரது மகள் கடத்தப்பட்டுவிட்டாள். அவள் எங்கே இருக்கிறாள் என்று யாருக்கும், ஐபிக்கும்கூட தெரியவில்லை. உயிரியல் தீவிரவாதிகள் உண்மையில் இருந்தார்கள் என்றால், அவளது உயிருக்கு நிச்சயமாக ஆபத்துதான். ஒரு சீனியர் ஐபி அதிகாரியின் வீட்டையே அவர்கள் வெடிகுண்டு வைத்து தகர்த்துவிட்டார்களென்றால், கைதியாகிவிட்ட ராதாவின் உயிருக்கு என்ன உத்தரவாதம்?

விஜய் புரிதலோடு தலையசைத்தான். அவனும் சோகமாகத்தான்

இருந்தான். ஆனால் இப்போது கண்டுபிடித்த உண்மையால், அவர்களுக்கு இன்னும் போராட வாய்ப்பு இருக்கிறது என்று ஏதோவொன்று அவனுக்குச் சொல்லியது. அது என்ன வாய்ப்பு என்று அல்லது எப்படி என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் தனது உள்ளுணர்வை நம்பினான். 'நீங்க ஏன் போய் ஓய்வு எடுக்கக்கூடாது,' என்று அவன் காலினையும், அலைஸையும் பார்த்துச் சொன்னான். 'நான் இந்த கோணத்தில இன்னும் கொஞ்சம் யோசிக்கப் போறேன். பிரயோஜனமா ஏதாவது யோசிக்க முடியுமான்னு பாக்கிறேன்.'

தன் நண்பன் ஏதோவோர் உள்ளுணர்வில் உந்தப்பட்டு செயல்படுகிறான் என்று காலினுக்குப் புரிந்தது. அவன் விவாதம் செய்யவில்லை. மாறாக, அவன் அலைஸின் தோளைத் தட்டிக்கொடுத்தபடி எழுந்தான். 'நீ சொல்றது சரிதான்,' என்று அவன் விஜயிடம் சொன்னான். 'காலை பார்ப்போம்.'

எல்லோரும் படிப்பறைவிட்டு சென்றவுடன், விஜய் ஜன்னலருகே சென்று, அந்தக் கோட்டை கட்டப்பட்டிருந்த குன்றைப் பார்த்து, இருட்டான இரவை வெறித்தான்.

கோட்டைச் சுற்றுப்புறத்திற்கு இணையாக அவனது இதயத்திலும் இருட்டு சூழ்ந்திருந்தது. ஆனாலும் ஆழமான உள்ளத்திலிருந்து, எதிர்த்துப் போராடும் ஒரு கலகக்கீற்று மேலெழுந்து வந்தது. அதுவொரு குணாம்சம்; வாழ்க்கை முழுவதும் அவனுக்குப் பயனுள்ளதாக இருந்த ஓர் அம்சம். அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்திருக்க வேண்டிய நேரத்தில், அவனை விடாமல் மேலும் பிடிவாதமாக இருக்கச் செய்தது அதுதான். சில சமயங்களில், அது துக்கத்தைக் கொண்டுவந்திருக்கிறது. ஆனாலும், பெரும்பாலான சமயங்களில், அவனை தான் விரும்பியதைச் சாதிக்கச் செய்திருக்கிறது, விடாப்பிடியாகப் போராடவைத்திருக்கிறது.

இதுவும் அந்தமாதிரியான ஒரு காலகட்டம்தான் என்று அவன் நம்பினான். ராதாதான் அவன் வாழ்க்கையில் கிடைத்தற்கரிய ஒரு பொக்கிஷம். நிச்சயமாக, காலினும் இருக்கிறான், அவனின் நண்பனாக, சகோதரனாக. ஆனால், தன் பெற்றோர்கள் காலமான காலத்திலிருந்து கிடைக்காத ஒரு அன்பை ராதாதான் அவனுக்குக் கொடுத்திருந்தாள். அலைஸிடம் கூட இப்படி இருந்ததில்லை என்று அவன் யோசித்தான். ராதாவின் அன்பு சுயநலமற்றது; நிபந்தனைகள் அற்றது. அது சாத்தியமென்று அவன் ஒருபோதும் நினைத்ததில்லை.

இப்போது அவன் அவளை இழக்கப்போவதில்லை.

40

பரிவர்த்தனைத் திட்டம்

கூப்பர் பின்னாடி சாய்ந்து நிலைமையை ஆராய்ந்தான். மியூசியத்தில் ஏற்பட்ட சொதப்பலைத் தவிர்த்து, எல்லாம் திட்டமிட்டபடி நன்றாக நடந்து முடிந்திருக்கிறது. ரிலே சற்றுநேரத்திற்கு முன்புதான் கூப்பரிடம் சமீபத்திய நிகழ்வுகள் பற்றி ஒப்பித்துவிட்டு சென்றான். தன் இலக்கை தவறவிட்ட கோபம் அவன் குரலில் ஒலித்தது.

'அதப் பத்தி நீ கவலைப்படாத,' என்று கூப்பர் அவனிடம் சொன்னார். 'கெட்டது நடந்திடுச்சி. விட்டுத்தள்ளு. இப்ப அந்தப் பொண்ண பிடிச்சாச்சி. அவங்க நம்மகிட்ட வரபோறாங்க. நமக்கு போனஸ்வேற கிடைச்சிடுச்சி. உலோகத்தட்டு மாட்டிக்கிடுச்சி. அது இல்லாம கனசதுரம் பிரயோஜனமில்ல.' கூப்பர் ஃபோனை எடுத்தார். மேற்கொண்டு நகரவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஃபோனில் அழைக்கும் நேரமிது.

அவன் விஜயின் எண்ணுக்கு டயல் செய்தான். அழைப்பு உடனே எடுக்கப்பட்டது.

'விஜய் சிங்?' என்று கூப்பர் கேட்டான். தான் சரியான ஆளிடம்தான் பேசுகிறோம் என்று தெரியாமல் விளையாட விரும்பவில்லை.

'ஆமா. யாரு?'

'என்பேரு பீட்டர் கூப்பர். உன் தோழி அலைஸ் என்னப்பத்தி சொல்லியிருப்பாளே.'

மறுமுனையில் மௌனம் நிலவியது. ராத்திரி நேரம் அழைக்கப்பட்ட அதிர்ச்சி விஜய்க்கு ஏற்பட்டிருப்பதை கூப்பர் மனக்கண்ணில் பார்த்தான். ராதாவின் செய்திக்காக ஏங்கும் அவனது நம்பிக்கையையும் கூப்பர் கற்பனை செய்து பார்த்தான். சரியாகச் சொன்னால், இதுதான் கூப்பர் விரும்பியது. கூப்பர் திட்டத்தின் வெற்றி, எவ்வளவு விரக்கியான

மனநிலையில் விஜய் அவன் கோரிக்கைகளுக்கு உடன்படுகிறான் என்பதைப் பொருத்தது.

அமைதி கனக்கும் வரை கூப்பர் காத்திருந்தான்.

'ராதா எங்கே?' மர்மத்தின் மௌனத்தை மேலும் தாங்கமுடியாமல் விஜய் இறுதியில் கேட்டான். 'நீ மட்டும் அவள ஏதாவது செஞ்சீன்னா...' வாக்கியத்தைச் சரியான வார்த்தைகளால் முடிக்கமுடியாமல் அதை அரைகுறையாகவே விட்டான். அவர்கள் எங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளாமல், நேரில் பார்க்காத, முன்பின் தெரியாத எதிரியை அவன் என்ன செய்யமுடியும்?

'உன்னால ஒண்ணும் செய்யமுடியாது; முட்டாத்தனமா மிரட்டிப்பாக்காத,' என்று கூப்பர் அவனுக்கு அறிவுறுத்தினான். 'நீ கட்டிக்கப்போற பொண்ணு எங்ககிட்டதான் இருக்கா. பாதுகாப்பா இருக்கா. இப்போதைக்கு. அவளோட எதிர்காலப் பாதுகாப்பும் நன்மையும் நீ எங்ககூட ஒத்துழைக்கிறதிலதான் இருக்கு.'

மீண்டும் மௌனம் நிலவியது. இந்தத் தடவை கூப்பர் காத்திருக்கவில்லை. மேற்கொண்டு அழுத்தம் கொடுத்தான்.

'நான் ஒரு திட்டம் சொல்றேன்,' என்றான் அவன். 'ஒரு பரிவர்த்தனை. எங்களுக்கு வேண்டியது உன்கிட்ட இருக்கு; உனக்கு வேண்டியது எங்ககிட்ட இருக்கு. நாம ஏன் எக்ஸ்சேன்ஞ் செய்துக்கக் கூடாது. எல்லோருக்கும் சந்தோசமா இருக்கும். எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடும்.'

'உனக்கு கனசதுரம் வேணுமா?'

'ஆமா. அதோட அலைஸ் டர்னரும் வேணும். ரெண்டையும் ஒப்படைச்சிட்டு உன் வருங்கால பொண்டாட்டிய கூட்டிக்கிட்டுப்போ.'

மீண்டும் மௌனம். விஜய் உணர்ச்சிகளோடு போராடுகிறான் என்பதை கூப்பரால் மனச்சித்திரமாகப் பார்க்கமுடிந்தது. அது ஒரு கடினமான தேர்வு. கட்டிக்கப்போற பெண்ணுக்காக பழைய காதலியை விட்டுக்கொடுப்பது. இப்போது இருவரின் விதியும் விஜயின் கைகளில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

'நா ஒண்ணும் நியாயமில்லாத மனுசன் இல்ல,' என்று கூப்பர் தொடர்ந்தான். 'நாளை காலை 12 மணிவரைக்கும் அவகாசம் தர்றேன். யோசிச்சு சொல்லு. அதுவரைக்கும், உன் வருங்கால மனைவியின் தலமுடிக்குக் கூட சேதம் வராதுன்னு நான் வாக்கு கொடுக்கிறேன்.

ஆனா அதுக்குள்ள நீ உன் முடிவ சொல்லியாகணும்.'

அழைப்பைத் துண்டித்துவிட்டு கூப்பர் நீட்டிநிமிர்ந்தான். தூங்கவேண்டிய நேரம். அது ஒரு நீண்ட பகல்பொழுது. அவனுக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது. களப்பணியை அனுபவித்துச் செய்த காலம் ஒன்று உண்டு. இலக்கைப் பின்தொடர்வது, சமங்களில் இழந்துவிடுவது, பின்பு அதைப் பிடித்துவிடுவது - இதெல்லாம் மிகவும் திரில்லான அனுபவம்; சுவையான ஈர்ப்பு. இப்போது உடல்இயக்கம் சில நேரங்களில் அவனைக் களைப்பாக்கி விடுகிறது. ஆனால் அவனுக்கு வேலை இருக்கிறது. செய்துதான் ஆகவேண்டும். துல்லியமான மனிதனாக இல்லாவிட்டால், அவன் ஒன்றுமில்லை என்றாகிவிடுவான்.

நாளை விஜய் சிங்கை மீண்டும் அழைக்கவேண்டும். இரண்டு பெண்களின் விதியும் தீர்மானிக்கப்படும்.

41

நான்காவது நாள்
நம்பிக்கை ஒளிக்கீற்று

காலின் படிப்பறைக்குள் நுழைந்தபோது, விஜய் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். தலையை மேஜைமீது வைத்து, கைகளை அண்டக்கொடுத்திருந்தான். மேஜைமீது பிரிண்ட்-அவுட்கள் நிறைந்து கிடந்தன. அவனது குறிப்புப் புத்தகமும், அதன்மீது பேனாவும் இருந்தன. இரவு முழுவதும் விஜய் வேலை செய்திருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது. விஜய் எதையாவது உபயோகமா கண்டுபிடித்திருக்கிறானா என்று காலின் ஆச்சரியப்பட்டான்.

அவன் மெல்ல விஜயின் அருகில் சென்று அவனை அசைத்தான். 'ஹே நண்பா, எழுந்திரு.'

விஜய் தலையைத் தூக்கிப்பார்த்தான். மங்கலான கண்களோடு காலினைப் பார்த்தான். 'தூங்கிட்டேன்,' என்று முனங்கினான்.

'ரொம்ப கண்றாவியா இருக்க. கீழே போய் குளிச்சிட்டு வா.'

விஜய் தலையசைத்தான், இன்னும் நினைவு திரும்பாமல். பின்பு ஒரு சிந்தனை அவனுக்குள் உதிக்க பிரசாகமானான்.

'நான் ஒண்ணு கண்டுபிடிச்சிட்டேன்,' என்று காலினுக்குச் சொன்னான். 'முதல்ல காலை உணவு சாப்பிடுவோம்; அப்புறம் சொல்றேன்.'

அப்படி என்ன கண்டுபிடித்திருப்பான் என்று காலின் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க, விஜய் படிப்பறைவிட்டு வெளியேறினான்.

ஒருமணிநேரம் கழித்து, அவர்கள் படிப்பறையில் கூடினார்கள். விஜய் சேரில் உட்கார்ந்து காகிதங்களை எல்லாம் மேஜைமீது குவித்துப் பிரித்தான்.

மூன்று ஜோடிக் கண்கள் விஜயை எதிர்பார்ப்போடு பார்த்தன, ஆர்வம் நிரம்பி வழிய.

'மாவீரன் அலெக்ஸாண்டர் பத்தி நான் நிறைய ஆராய்ச்சி செஞ்சேன்,' என்று அவன் ஆரம்பித்தான். 'மைக்கேல் வுட் எடுத்த ஒரு பிபிசி ஆவணப்படத்தை தரவிறக்கம் செஞ்சு பாத்தேன். நாலுமணிநேரம். மாவீரனப் பத்தி நிறைய புஸ்தங்கள் வாசிச்சேன். எத்தன பேர் அவனப் பத்தி எழுதியிருக்காங்க தெரியுமா. நீங்க நம்பமாட்டீங்க. மாசிடோனியாவிலிருந்து இந்தியா வரைக்கும் அவன் கடந்த பாதைய பத்தி வாசிச்சேன். வழியில அவன் போர்தொடுத்த மக்கள பத்தி, வெவ்வேறு நகரங்கள்ல அவன் செஞ்ச காரியங்கள் பத்தின கதைகள் எல்லாம் படிச்சேன். அந்த மனுசனைப் பத்தி நிறைய தெரிஞ்சுக்கிட்டேன். அவன் பிடிவாதக்காரனா இருந்தான். எத்தன கஷ்டம் வந்தாலும் அவன் விட்டுட்டு ஓடலை. ரொம்ப தீர்க்கமாகவே இருந்திருக்கான்.'

'கொஞ்சம் உன்ன மாதிரிதான்,' என்று காலின் பல்லைக்காட்டினான். 'நீயும் உன்னப் பத்தி அப்படித்தான் வர்ணிக்கணும், தெரியுமா.'

விஜய் பதில்சொல்லாமல் அவனை முறைத்தான்.

அலைஸ் ஒன்றும் சொல்லவில்லை; ஆனால், அவளும் உள்ளுக்குள் அதேமாதிரிதான் யோசித்துக் கொண்டிருந்தாள். விஜயின் தீர்க்கம், விடாப்பிடியான முயற்சி, ஜனங்களின் நம்பிக்கைக்குப் பணிந்துபோகாத தன்மை இதுவெல்லாம்தான் அவனை பலவழிகளில் வெற்றிபெறச் செய்திருக்கின்றன. முதலில் இவைதான் அவனிடம் அவளைக் கொண்டுசேர்த்தன. தன்னை அறிந்த மனிதன். தன் அறிவுப்படி நடக்க அச்சப்படாதவன். ஆனால் அதுதான் அவர்களின் உறவு முறிதலுக்கும் காரணமானது.

'எடுத்து வச்ச ஒவ்வொரு அடியிலும் ஏதோவொன்று அலெக்ஸாண்டருக்குத் தூண்டுகோலாய் இருந்திச்சி. அவன் மாசிடோனியாவை விட்டுக் கிளம்பினபோது, பாரசீகர்களிடம் கிரேக்கர்கள் அடைஞ்சிருந்த தோல்விக்காக பழிவாங்கணும்ங்ற ஏக்கம், வெறி அது. அதனால அவன் பாரசீகத்தின் மீது படையெடுத்தான். டாரியஸைத் தோற்கடித்தான். டாரியஸை அவனது பிரபுக்களே கொலைசெஞ்சப்ப, அவர்களை மலைகள்ல ஓடஓட விரட்டிப் பிடிச்சிக் கொன்னான் அலெக்ஸாண்டர். இப்போது அவன் பாரசீகத்தின் ஆட்சியாளன். ஆனால் அவன் அத்தோடு நிற்கலை. இன்னொரு

தூண்டுகோல் அவன கிழக்குநோக்கி இழுத்துப்போச்சி. நான் படிச்ச எல்லா எழுத்தாளர்களும் அவனோட இந்த ஆசையை, தெரிஞ்ச உலகத்த ஜெயிச்சிட்டு பூமியோட எல்லை வரைக்கும் போகணுங்ற பேராசைன்னுதான் விளக்குனாங்க. சிந்துநதிக்கப்பால ஒரு பெரிய கடல் இருக்குங்றதயும், பூமியின் எல்லைங்க இருக்குங்றதயும், அவனுக்குக் கத்துக்கொடுத்ததே அரிஸ்டாட்டில்தான்.'

அவன் நிறுத்தி அலைஸைப் பார்த்தான். அவள் உடன்படுவதாக தலையசைத்தாள். 'மேல போ,' என்றாள். 'ரொம்ப பெரிசா வேலை பாத்திருக்க.'

'இங்கதான் ரொம்ப மர்மமா இருக்கு,' என்று விஜய் தொடர்ந்தான், தன் ஆராய்ச்சியை விலாவாரியாகச் சொல்லிவிட்டு. 'முதல்ல, பூமியோட எல்லைகள் வரைக்கும் போறோம்னு, கிரீஸைவிட்டு கிளம்புபோது, அலெக்ஸாண்டர் தன்னோட படைகளுக்குச் சொல்லவே இல்ல. அவங்க பாரசீகத்தை ஜெயிச்ச பின்னாடிதான், நாம கிழக்குநோக்கி போறோம்னு அவரு சொன்னாரு. இதுக்கு மறுபடியும் ஒரு தர்க்கரீதியான விளக்கம் இருக்கிறமாதிரி தெரியது. அவங்க போகப்போற இடம் தாய்நாட்டிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்னு அவரு தன்னோட படைவீரர்கள்கிட்ட சொல்லியிருந்தார்னா, முதல்ல அவங்க அவர்கூட போயே இருந்திருக்க மாட்டாங்க. ஆனால் அது அறிவுக்குப் பொருத்தமானதாக எனக்குத் தெரியல. என்னதான் இருந்தாலும், அலெக்ஸாண்டர் ஈடுஇணையில்லாத தலைவர். இருபத்தையாயிரம் மைல்கள் கடந்து தன்னோட ஆட்கள அவர் மாசிடோனியாவிருந்து இந்தியாவுக்குக் கூட்டிட்டுபோய் அப்புறம் பாபிலோனுக்குத் திருப்பி அழைச்சிட்டு வந்தார். அவங்க உறைபனிக் கணவாய்கள, கொளுத்தும் பாலைவனங்கள கடந்துபோனாங்க; சில நேரங்கள்ல குடிக்க தண்ணியில்லாம; ஏன் சாப்பாடுகூட இல்லாம. எல்லா இடத்திலேயும் அவங்க அவர் பின்னாடியே போனாங்க. எந்த எதிர்ப்பையும் காட்டாம. ஒரே ஒரு விதிவிலக்கு என்னன்னா, அவங்க பஞ்சாபில பியாஸ் நதிக்கு வந்தப்ப, இனிமேல நடக்கமுடியாதுன்னு சொல்லி வீட்டுக்குத் திரும்பலாம்ன்னு அலெக்ஸாண்டர்கிட்ட அவங்க வற்புறுத்திச் சொன்னாங்க. அவர் மட்டும் ஆணையிட்டிருந்தார்னா, அவங்க பூமியோட பாதாளம் வரைக்கும்கூட போயிருந்தாப்பாங்க.'

எல்லோரும் தான்சொல்வதைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்களா என்று விஜய் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். திருப்தியடைந்து, மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்தான். 'ஆனா, எழுத்தாளர்கள் சொன்னதுக்கு மாறுபாடான ஒரு கருத்து கிடைச்சிருக்கு.

அவங்களுக்கு கனசதுரத்தப் பத்தியோ அல்லது யூமனியஸின் ரகசிய குறிப்பேட்ட பத்தியோ தெரிஞ்சிக்கிறதுக்கு வழியே இல்ல. அலெக்ஸாண்டர் ஒரு ரகசியத்தேடலில் இருந்திருக்கலாம்னு அந்த எழுத்தாளர்கள் தெரிஞ்சிருக்க முடியாது. அந்தத் தேடல் அவருக்கும் அவரோட அம்மாவுக்கும் மட்டுந்தான் தெரிஞ்சிருந்தது. ஆனா என்ன நடந்திச்சிங்றதுக்கு நம்ம தியரி ஒரு தர்க்க விளக்கம் கொடுக்குது.'

'நீ எங்க போயிட்டிருக்கேன்னு எனக்குப் புரியது,' என்றாள் அலைஸ். 'ஒலிம்பியாஸ் தன்னோட கனச துரத்தையும், தோல்காகிதத்தையும் அலெக்ஸாண்டருக்குக் கொடுத்திருந்தான்னா, அந்தத் தேடலை ஒரு ரகசியமா வச்சிக்கோன்னு அவ அவருகிட்ட சொல்லியிருந்திருப்பா. தெரிஞ்ச உலகத்த ஜெயிக்கறதுக்காக, பூமியோட எல்லைகள் வரைக்கும் போறோம்னு சொல்லி, அலெக்ஸாண்டர் அந்தத் தேடல ஒரு ரகசியமாகவே வச்சியிருந்திருப்பார். ஆனா அவரு மாசிடோனியாவிட்டு கிளம்பும்போது, பாரசீகத்த தோற்கடிக்கப் போறோம்னுதான் தன்னோட வீரர்கள்கிட்ட அவர் சொன்னாரு; சிந்துநிலத்துக்குப் போற அவரோட திட்டத்த பத்தி ஒண்ணும் சொல்லலை. அதுக்குக் காரணம் வீரர்கள் அதுக்கு உடன்பட மாட்டாங்கறது இல்ல. 'கடவுள்களோட ரகசியத்த' அவங்க தெரிஞ்சிக்கிறதை அவரு விரும்பலங்றதுதான் காரணம். என் ஊகம் சரியா இருந்தா, அலெக்ஸாண்டர் தன் பயணத்தோட லட்சியத்த அடைஞ்சதனால, அவரே தாய்நாடு திரும்ப விரும்பினாருங்றத மூடிமறைக்கத்தான், பியாஸ் நதி கலகம் உருவாச்சி அல்லது பதிவாச்சின்னு நீங்க நினைக்கிறீங்க.'

'சரியா சொன்ன,' என்று விஜய் பிரகாசித்தான். 'அவரு தன்னோட தேடல முடிச்சதனால, உலோகத் தட்டை பியாஸ்க்கு பக்கத்தில அவர் கட்டின ஒரு பீடத்துக்கு அடியில புதைச்சிட்டாரு. ஞாபகத்தில இருக்கட்டும்; ஒரு அஞ்சுதலை பாம்புக் காவல்ல இருந்த குகைக்குள்ள போனதுக்கு அப்புறம் அலெக்ஸாண்டர் ஒரு கடவுளாயிட்டாருன்னு, யூமனியஸ் சொல்றாரு. பாக்ட்ரியாவில ஆதிவாசிகள தோற்கடிச்ச காலத்தில இருந்து அலெக்ஸாண்டர் தன்ன ஒரு கடவுள்னு அறிவிச்சுக்கிட்டார். அதனாலதான் காலிஸ்தெனிஸ் சாகடிக்கப்பட்டார். அது நமக்குத் தெரியும்.'

'அதனால நீ என்ன சொல்றன்னா,' என்று காலின் மெதுவாக ஆரம்பித்தான். 'ஒலிம்பியாஸ் அலெக்ஸாண்டருக்குக் கொடுத்த தோல்காகிதம், அவரு பாரசீகத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த பாதையோட ஒத்துப்போயிருக்கு. அதனாலதான் அவரு சென்ற

பாதையை நீ ஆராய்ச்சி செஞ்சுக்கிட்டு இருக்க.'

'அற்புதம்.' விஜயின் முகம் ஆனந்தக் கிளர்ச்சியில் ஜொலித்தது. அவன் இப்படித்தான் தர்க்கரீதியாக யோசித்து வைத்திருந்தான். மற்றவர்கள் தன் சிந்தனையோட்டத்திற்கு ஏற்ப சிந்திக்கிறார்கள் என்பது அவனுக்கு உற்சாகத்தைத் தந்தது. அவனது பகுத்தாய்வுச் சிந்தனைத்திறனுக்குக் கிடைத்த ஓர் அங்கீகாரமாய் அது தெரிந்தது. தனது அடுத்தக்கட்ட நடவடிக்கையைப் பற்றி அவன் ஏற்கனவே தீர்மானித்திருந்தான். இந்த விவாதம் என்ன கருத்தில் முடியும் என்பதைப் பொறுத்தது அது.

'அதனால, நீ என்ன கண்டுபிடிச்ச?' என்று கேட்டான் காலின்.

42

கைதி

ராதா அதிர்ச்சியோடு விழித்தாள். சில கணங்கள் குழப்பமாக இருந்தாள். தன்னைச் சுற்றியிருந்த அசலான வெள்ளைச் சூழல் அவளுக்குப் பரிச்சயமில்லாததாக இருந்தது.

பின்பு அவளுக்கு எல்லாம் பிரக்ஞைக்குள் மீண்டுவந்தது. விமானநிலையத்து ரயில்; துப்பாக்கி மனிதன்; நழுவிக்கொண்டிருந்த அவளது பிரக்ஞை. மருத்துவமனை கவுன்; அவளைக் கட்டிப்போட்டிருந்த பிடிகள்; வெடிக்கவிருந்த தன் கோபத்தைப் பற்றி தன்னை அச்சுறுத்திய அசௌகரிய புரிதல். அவள் என்னதான் முயன்றாலும், அவற்றிற்கு அப்பால் அவளால் எதையும் ஞாபகப்படுத்திப் பார்க்கமுடியவில்லை. என்ன நடந்தது? முன்பு விழித்தபோது பார்த்திருந்த பெரிய அறையைவிட சின்னதாய் இருந்த ஓர் அறையில் தான் நகர்த்தப்பட்டிருந்ததை அவள் புரிந்துகொண்டாள்.

கீழே பார்த்தாள். இன்னும் அந்த கவுனைத்தான் அணிந்திருந்தாள். ஆனால் இப்போது கட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வளவு நேரம் அவள் சுயநினைவின்றி இருக்கிறாள்?

எச்சரிக்கையுணர்வுடன் அவள் படுக்கையில் எழுந்து கால்களைத் தொங்கப்போட்டு உட்கார்ந்தாள். ஏதோவொரு பெரியவேலையை உடலால் செய்துமுடித்தது போன்று சுத்தமாக வடிந்து பலகீனமாய் களைத்திருந்தாள்.

மணிக்கட்டுகளும் கணுக்கால்களும் திடீரென்று வலித்தன. அவற்றை ஒவ்வொன்றாய் ஆராய்ச்சி செய்தாள். நைலான் கயிறுகள் அவள் சதைகளைத் இறுக்கியதால் உண்டான ஆழமான காயங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

படுக்கையைவிட்டு எழுந்தாள். அவளின் வெற்று பாதங்கள் தொட்டவுடன் பளிங்குத்தரை குளிர்ந்திருந்தது. அறையில் செருப்புகள்

இல்லை. சுவர்கள் திடகாத்திரமாய் இருந்தன. அறையில் ஒரு பனிமூட்டக் கண்ணாடிக் கதவு இருந்தது. ஆனால் அது பூட்டியிருந்தது. கைப்பிடியை இழுத்தும் அசைத்தும் பார்த்தாள். கதவு திறக்கவில்லை. கதவைத் திறக்க ஒரே ஒரு வழிதான் இருந்தது. வெளியே இருந்துதான் அதைத் திறக்கமுடியும். மக்கள் உள்ளே வரலாம்; ஆனால் அவள் வெளியே போகமுடியாது. கதவோரம் பொருத்தப்பட்டிருந்த உணரியில், ஏற்பு அட்டையைத் தேய்த்தால்தான் கதவு திறக்கும். நிஜத்தில் அவள் ஒரு கைதியாகிவிட்டாள்.

அவள் கைகள் கதவுப் பிடியை விட்டவுடன், பிடி திடீரென்று நழுவி, கதவு வெளிப்பக்கமாக அதிர்ந்து திறந்தது. திகிலடைந்து அவள் பின்னாடி தடுமாறிப் போனாள். அப்போது சக்ஸேனாவும் ஃபிரீமனும் உள்ளே நுழைந்தார்கள்.

'எங்க நோயாளி எப்படி இருக்கீங்க?' என்று சக்ஸேனா அவளை மென்மையாக வரவேற்றார்.

'நா ஒண்ணும் நோயாளி இல்ல!' என்று ராதாவின் கண்கள் கோபத்தில் மின்னின. 'நா ஏன் இங்க இருக்கேன்?'

'இன்னைக்கு கேள்விகள நான்தான் கேட்கணும்.' சக்ஸேனா படுக்கையைச் சுட்டிக்காட்டினார். 'உட்கார்.'

வாந்தி உணர்வும் திடீர் பலகீனமும் சேர்ந்து அவளுக்குள் நிரம்பின. படுக்கைக்குத் திரும்பி உட்கார்ந்தாள். நிற்பதை விட உட்கார்வது சௌகரியமாக இருந்தது. ஏதோவொரு காரணத்தினால், அவள் கால்கள் தள்ளாடின.

'சைக்கோடிராபிக் என்ஹான்ஸ்ரோட பக்கவிளைவுகள்,' என்று ஃபிரீமன் சாச்ஸெனாவிடம் சொன்னார். அவளின் அசௌகரியத்தைப் பார்த்து அதன் காரணத்தைச் சரியாகச் சொன்னார். 'வாந்தி உணர்வும், களைப்பும்.'

'யார் அவர்?' என்று ராதா எதிர்ப்பது போல கேட்டாள்.

'ஓ. நான் அறிமுகம் செய்துவைக்க மறந்துட்டேன்.' சக்ஸேனா ஃபிரீமனைக் காட்டினார். 'டாக்டர் காரி ஃபிரீமன். மரபணுவியல் நிபுணர். டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸ் மரபணுவியல் பிரிவின் தலைவர். பல வருசங்களாக அவர் ஒரு பெரிய ரகசியத் திட்டத்தில் எங்களுக்காக வேலைசெய்றார். கிட்டத்தட்ட சாதிக்கற அளவுக்கு வந்துட்டார். இப்போ சில பதில்கள் வேண்டும். முதல் கேள்வி: எங்க திட்டத்த பத்தி ஐபிக்கு என்ன தெரியும்?'

ராதா வெறுமையாகப் பார்த்தாள். அவர் என்ன திட்டத்தைப் பற்றி பேசுகிறார் என்றே அவளுக்குப் புரியவில்லை. இப்போது அவளுக்குத் தெரிந்தது, இம்ரானின் சந்தேகங்கள் ஊர்ஜிதம் ஆகிவிட்டன என்பது மட்டுந்தான். தீயில் அழிந்துபோன மருத்துவ நிலையத்தில் நடந்த பரிசோதனைகளில் டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ் ஏதோவொரு வகையில் சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆனால் மரபணுவியல் நிபுணர்க்கும் அந்த மருத்துவப் பரிசோதனைகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கமுடியும்?

ஓர் எரிச்சலான பாவம் சக்ஸேனாவின் முகத்தில் குறுக்கிட்டது. 'எனக்குப் பதில் வேணும்,' என்றார் உறுதியாக. 'மௌனம் பதிலாகாது. உன்ன பேச வைக்கிறதுக்கு எங்ககிட்ட வழிகள் இருக்கு; ரொம்ப வலியான வழிகள். இப்போதைக்கு நா உன்கிட்ட மென்மையாத்தான் இருக்கேன். என் பொறுமையைச் சோதிக்காதே.'

'நீங்க என்ன சொல்றீங்கன்னே எனக்குப் புரியல.' தன்னிடமிருந்து பதில்களைப் பிடுங்குவதற்கு சக்ஸேனாவிடம் என்ன வழிகள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளும் ஆசை ராதாவுக்கு இல்லை.

'அதை என்னால நம்பமுடியலை. நீ என் ஆஃபிஸுக்கு வந்த பத்திரிக்கையாளர் வேஷம் போட்டு வேவு பார்த்த. உளவுத்துறையோட உனக்கு சம்பந்தம் இருக்கு. என்ன வகையிலன்னு எனக்குத் தெரியாது. கிழக்கு டில்லியில இருந்த மருத்துவ நிலையத்தில ஏற்பட்ட தீவிபத்து பத்தின எல்லா விவரங்களும் உன்கிட்ட இருந்திச்சி. நோயாளிகளோட சிறைகள பத்தின விவரங்கள் கூட. எங்கள பத்தி உனக்கு நிறைய தெரிஞ்சிருக்கு.'

ராதாவின் முகத்தில் ஆச்சரியம் பதிந்தது. ஐபியோட அவளுக்கிருந்த தொடர்பு பற்றி அவர்களுக்கு எப்படி தெரியும்? 'நீங்க என்ன பேசிக்கிட்டு இருக்கீங்கன்னே எனக்குத் தெரியல,' என்று அவள் ஈனஸ்வரத்தில் எதிர்த்தாள். அவர்களின் அறிவு நிலையைப் பார்த்து உள்ளுக்குள் ஆச்சரியப்பட்டாள். 'எனக்கும் ஐபிக்கும் எந்த சம்பந்தமும் இல்ல.'

சக்ஸேனா எரிச்சலடைந்தார். 'எங்கள குறைவா எடபோடாத,' என்று அவர் அவளை எச்சரித்தார். 'உங்கள எல்லாம் எங்களோட ரெண்டாவது குழு கண்காணிச்சது. அந்த ஐபி ஏஜெண்ட் உட்பட நீங்க எல்லாரும் ஜவுன்கார் கோட்டயில் இருந்தீங்க. அது உன் வருங்கால புருஷனோடது.'

'சரி. நான் ஒத்துக்கறேன், எனக்கு இம்ரான் கிட்வாயைத் தெரியும்னு. ஆனா நா உண்மையத்தான் சொல்றேன்,' என்று ராதா பிடிவாதமாகச் சொன்னாள். 'எங்களுக்கு சந்தேகம் இருந்திச்சி. தீயில கருகிப்போன மையத்தில என்ன நடந்திருந்தாலும் அதில டைட்டனுக்கு சம்பந்தம் இருந்திச்சின்னு நாங்க நினைச்சோம். ஆனா அது என்னன்னு எங்களுக்குத் தெரியாது.'

சக்ஸேனா ஃபிரீமனைப் பார்த்தார். பின் அவள்மீது ஒரு கடுமையான பார்வையை எறிந்தார். 'உன்ன நம்புவதா இல்லியான்னு எனக்கு நிஜமாவே தெரியல. நாங்க என்ன வேலை செஞ்சிட்டு இருக்கோம்ன்னு தெரியாம, நீ ஏன் எங்களபத்தி விசாரணை செஞ்ச?'

ராதா தயங்கினாள். இந்த மனிதனிடம் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்று அவள் உள்ளுக்குள் பயந்தாள். ஆனால் அவள் பெரும் அச்சத்தில் அவள் இருந்தாள்; வலியைப் பற்றிய அச்சம்; தன் கைகளிலும் கால்களிலும் ஏற்பட்ட காயங்கள் பற்றிய அச்சம்; சற்று நேரத்திற்கு முன்புவரை தான் தனது கட்டுப்பாட்டிலே இல்லை என்ற பயங்கரமான உணர்வைப் பற்றிய அச்சம். அவளுக்குத் தெரியும், இந்த மனிதர்கள் எதையும் செய்யக்கூடியவர்கள். தாங்கள் விரும்பியதை அடைவதற்கு அவர்கள் எதையும் செய்வதற்கு தயங்கமாட்டார்கள்.

'டைட்டன் உயிரியல் தீவிரவாதத்தில ஈடுபட்டிருக்குன்னு நாங்க நினைச்சோம். தீவிரவாதிகளும் கொடுங்கோலர்களும் பயன்படுத்தறதுக்காக நோய்களைக் கிளப்பும் புதுவகையான வைரஸ் அல்லது பாக்டீரியத்தை நீங்க உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்னு நாங்க நினைச்சோம்'

ஒருகணம் சக்ஸேனா அவளை வெறித்துப் பார்த்தார். பின்பு, அவர் வெடிச்சிரிப்புச் சிரித்தார். 'உயிரியல் தீவிரவாதம்!' அவர் ஃபிரீமனைச் சன்னமாய் உரசினார். ஃபிரீமன் நமட்டாகச் சிரித்தார். 'புதுவகையான வைரஸ்!' சக்ஸேனா தலையாட்டினார். 'உனக்கு உண்மையிலேயே எங்க பிராக்ஜெட் பத்தி தெரியாது. தெரியுமா என்ன?' அவர் ஃபிரீமனைப் பார்த்தார். 'இனியும் இவ நமக்குத் தேவை இல்லைன்னு நினைக்கிறேன். கூப்பரைக் கேட்கலாம்; அவர் இவளை வச்சு என்ன செய்ய போறார்னு. அவரு இவள தீர்த்துக்கட்டுறதுக்கு முன்னாடி, நாம இன்னும் சில பரிசோதனைகளுக்கு பயன்படுத்திக்கலாம்.'

அவர்கள் அறையைவிட்டு வெளியேறினார்கள். ராதா தனித்துவிடப் பட்டாள்; குழப்பம், அச்சம் அவளை ஆட்கொண்டன. தன்விதியைப் பற்றி அவளுக்குச் சந்தேகமே இல்லை. அவள் மருத்துவப் பரிசோதனை

எலியாகப் பயன்படுத்தப் படாவிட்டால், நிச்சயமாக இறந்துவிடத்தான் போகிறாள்.

43

புதிரின் ஒரு பகுதி

'இங்க பாருங்க,' என்று விஜய் மேஜையிலிருந்து ஒருகட்டுக் காகிதங்களைச் சுமந்துவந்து காஃபி மேஜையில் வைத்தான்; அவர்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள். 'இந்தப் பயணத்தில அலெக்ஸாண்டர் போன பாதையைப் பத்தி ரெண்டு மர்மங்கள் இருக்கு.'

அவன் ஒரு வரைபடத்தை எடுத்தான். அலெக்ஸாண்டர் கடந்துசென்ற இன்றைய நாடுகளான ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகியவற்றின் மீது சிகப்புப்புள்ளிகள் குறிக்கப்பட்டிருந்தன.

'முதலிடம் இங்க இருக்கு,' என்று பாகிஸ்தானில் தெற்கே கடலோரத்தின் அருகில் இருந்த ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டினான். 'சிந்துநதிப்பக்கம் சென்றபின்பு பாபிலோனுக்குத் திரும்பிப்போகும் வழியில் அலெக்ஸாண்டர் படையைப் பிரித்தார். ஒருபகுதி படையினரை கடல்வழியாக பாரசீக வளைகுடாவுக்கு அனுப்பினார். மற்றொரு படையை கடலோரத்திலிருந்து டர்பட்டுக்கு தன் தலைமையிலே கொண்டுபோனார்.' வரைபடத்திலிருந்த நகரத்தை அவன் சுட்டிக்காட்டினான். 'பின்பு, ஏன்னு தெரியல, அவரு தெக்கால பாஸ்னி வழியா கடலுக்குப் போனாரு. கடுமையான பாதைவழியா நூறு மைல்தூரம் அவர் படைநடத்திட்டுப் போனாரு. அது மக்ரன் பாலைவனம். அவருக்கு அதைக் கடக்க 60 நாட்கள் ஆச்சு. வழியில் தனது படையில பெரும்பகுதியை அவர் இழந்திட்டார்.'

'ரொம்ப விநோதம்,' என்று குறிப்பிட்டார் சுக்லா. 'அவரு ஏன் கடல்வழியாக திரும்பிப் போகலை? எதுக்கு படையைப் பிரிச்சாரு?'

'மேலும், அது மட்டுமல்ல,' என்று அலைஸ் வர்ணனைப் பொறுப்பை எடுத்துக்கொண்டாள். ஏனென்றால் அவளுக்கு இந்தக் கதை பரிச்சயம். 'டர்பட்டிலிருந்து பெர்ஸிபோலிஸ்க்கு நேரான பாதை.' அவள் பாதையை வரைபடத்தில் சுட்டிக்காட்டினாள். 'அலெக்ஸாண்டர்

மக்ரன் வழியா படைநடத்தி பாஸ்னிக்குப் போனார். பின்னாடி பெர்ஸிபோலிஸ்க்குப் போனார். படைகள பிரிக்கிறதுக்கு அவருக்கு ஒரு தர்க்கரீதியான காரணம் இருந்தாலும், அவர் நிலம்வழியா பெர்ஸிபோலிஸ்க்குப் போனார்னா, பாலைவனத்துக்கு போக வேண்டாமே. நவீன எழுத்தாளர்ங்க அதுக்கு ஒரு காரணம் சொல்றாங்க. மகாராணி செமிராமிஸ்ம், மாவீரன் சைரஸ்ம் கடந்த பாலைவனம் அதுங்றதனால, அலெக்ஸாண்டர் அதை ஜெயிக்க நினைச்சார்ன்னு சொல்றாங்க.'

'ஒருவேளை அவரு தன்னோட ஆட்களுக்கு தான் ஒரு கடவுள்னு நிரூபிக்க நினைச்சிருக்கலாம்,' என்று காலின் தன் ஊகத்தைத் துணிந்து அடித்தான்.

'ஏன்ங்றது முக்கியமில்ல,' என்று விஜய் பதில் சொன்னான். 'அவர்க்கு ஒரு ரகசிய தேடல் இருந்ததுங்கறதுக்கு சாட்சியாய் இரண்டு விசயங்கள பத்தி யோசிச்சு ஆகணுங்றத காட்டுறதுக்காக நான் இதக் கொண்டுவந்தேன். மக்ரன் பாலைவனம் ஒண்ணு. அலெக்ஸாண்டர் ஒரு ரகசிய தேடலில் இருந்திருந்தார்னா, அந்த ரகசியம் இருக்கிற இடத்த மக்ரன் பாலைவனத்தில அவர் தேடியிருந்திருக்கலாம். அவரு சுத்திவளைச்சு வந்ததை அது விளக்குதே.'

'ஆனா விளக்கலியே,' என்று காலின் தொடர்ந்தான். 'ஏன்னா, அதற்குள் அவர்தான் உலோகத்தட்ட பியாஸ் நதியில பீடத்துக்கு அடியில புதைச்சிட்டாரே. அவரு ஏற்கனவே தன் தேடலின் நோக்கத்த நிறைவேத்திட்டாருன்னு தானே அர்த்தம். அப்ப ரெண்டாவது மர்மம் என்ன? நீ அங்க ஏதோவொண்ண கண்டுபிடிச்சிட்டேன்னு நினைக்கிறேன்.'

விஜய் அவனைப் பார்த்து பல்லிளித்தான். 'அலெக்ஸாண்டர் வெளிப்படையான காரணமில்லாமல் தன் படையைப் பிரிச்சது, மக்ரன் வீரநிகழ்வு நேரத்தில மட்டுமல்ல. அது ரெண்டாம் தடவை. முதல் தடவை இங்க இருக்கு.' அவன் அவர்களுக்கு வரைபடத்தில் ஒரு நகரத்தைக் காட்டினான். 'இது ஜலாலாபாத். ஜலாலாபாத்திலிருந்து அவரு ஒரு படைப்பிரிவை ஹெபாஸ்டியன் தலைமையில கைபர் கணவாய் வழியா இப்ப இருக்கிற பாகிஸ்தானுக்கு அனுப்பிவச்சாரு. இன்னொரு படைப்பிரிவை தானே நடத்தி இந்த நதிப்பள்ளத்தாக்கைத் தாண்டி, கைபர் கணவாயிலிருந்து வடக்குப்பக்கமா தள்ளி இருக்கிற நவா கணவாய் வழியா பாகிஸ்தானுக்கு அவரு போனாரு.' அவன் இன்னொரு வரைபடத்தை எடுத்தான். அது ஆஃப்கானிஸ்தான்

வரைபடம். அதில் அவன் இரண்டு கணவாய்களைக் காட்டினான். 'இத புரிஞ்சுக்கோங்க. அலெக்ஸாண்டர் ஏன் வடக்கு நோக்கிப் போய் அப்புறமா கிழக்குப் பக்கமா போனாருன்னு யாரும் சரியான விளக்கம் கொடுத்தது இல்ல. சில எழுத்தாளர்களும், சில இணையதளங்களும் ராணுவ விளக்கம் கொடுத்திருக்காங்க. அலெக்ஸாண்டர் தன் படையினரை குன்று ஆதிவாசிகளிடமிருந்து காப்பாத்திக்க விரும்பினார். ஆனா, குன்று ஆதிவாசிகள அவர் ஜெயிக்கிறதுக்கு நடத்துன போர்கள் குனார் பள்ளத்தாக்கில இல்ல. அந்தப் போர்கள் இங்க ஆஃப்கானிஸ்தான் எல்லையில பாகிஸ்தான் பக்கத்தில நடந்திச்சு. அவரு ரொம்ப சுலபமா கைபர் கணவாயைக் கடந்தபின்னாடி, தன் படையைப் பிரிச்சி, ஒரு பகுதிய கிழக்குப்பக்கமும், இன்னொன்றை வடக்குப்பக்கமும் அனுப்பி குன்று ஆதிவாசிகள அடக்கியிருக்க முடியும். ஆதிவாசிகளோட நடந்த கடைசிப்போர் பிர்சாரில் நடந்திச்சு. அதை கிரேக்கர்கள் ஆர்னோஸ்னு சொன்னாங்க. அது நிச்சயமா பாகிஸ்தான்ல இருக்கு; குனார் பள்ளத்தாக்கில இல்ல. அலெக்ஸாண்டரின் படை இயக்கங்கள பத்தி கொடுக்கப்பட்ட ராணுவ விளக்கங்களோட எனக்கு உடன்பாடு இல்ல.'



'குனார் நதிப்பள்ளத்தாக்கு,' என்று காலின் வரைபடத்திலிருந்து பெயரை வாசித்தான். 'இங்கதான் அந்த ரகசியம் மறைஞ்சிருக்குன்னு நீ

நினைக்கிறீயா?'

'எனக்குப் புரியலை,' என்று அலைஸ் இன்னும் குழம்பியிருந்தாள். 'குனார் பள்ளத்தாக்குக்கு அலெக்ஸாண்டர் போனதுக்கு ஒரு காரணம் இருக்கிற மாதிரிதான் தெரியது. அவரது தேடல் அந்தக் காரணத்த கொடுக்கலாம். ஆனால் இது இன்னும் ஒரு அனுமானம்தான். உன் விளக்கத்த - அதாவது நம்ம தியரியை - மத்தவங்களவிட ரொம்ப பலமானதாக எது ஆக்குது?'

'இது,' என்று விஜய் மொழிபெயர்க்கப்பட்ட யூமனியஸ் குறிப்பேட்டைக் காட்டினான். 'மேலும் கனசதுரத்தில இருக்கிற கவிதைகள்.' அவன் சுக்லாவிடம் திரும்பினான். 'மறுபடியும் நீங்க கவிதைகள மொழிபெயர்த்துச் சொல்லமுடியுமா, எங்களுக்காக?'



சுக்லா தலையசைத்தார். விஜயின் மனதில் என்ன இருக்கிறது என்று அவர்க்குப் புரியவில்லை. ஆனா ஒன்று புரிந்தது அவர்க்கு. இது மிகவும் முக்கியமானது என்று விஜய் நினைக்கிறான் என்பது. தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் ஆபத்தில் இருக்கும்போது, ஒரு மர்மப்புதிரை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு பாதைவிலகமாட்டான் விஜய்; அது ஏதோவொரு வகையில் பிரயோஜனம் என்று அவன் நினைக்கிறான்.

அவர் கனசதுரத்தை எடுத்து கவிதைகளை வாசிக்க ஆரம்பித்தார்.

ஒவ்வொரு கவிதையும் வாசிக்கப்படும்போது, விஜய் தலையசைத்தான். மூன்று கவிதைகளை அவர் வாசித்து முடித்தார். நான்காவதை அவர் ஆரம்பித்தபோது, விஜய் தலையசைத்துச் சொன்னான்: 'இதுதான். இதுதான் அது.' விஜய் அவர்களைப் பார்த்தான். 'இப்ப இத நீங்க பாக்கிறீங்களா?'

44

முதல் தடயம்

எல்லோரும் விஜயை வெறுமையாக வெறித்தனர். அவர்களுக்கு இன்னும் புரியவில்லை. சுக்லா வாசித்த கவிதை:

'பின்பு வாசலில் நுழைந்து நீ செல்வாய்
கிழக்குமேற்காய்ப் பிரியும் பள்ளத்தாக்குகளில்
சரியாக விவேகமாய்த் தேர்வுகொள்; ஞாபகம்கொள்,
நீ நடந்துசெல்வாய், சூர்யா இருக்கும் இடத்தில்'

'சரி,' என்றான் விஜய், கைகளைத் தூக்கியபடி. 'ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்; இது அப்படி ஒண்ணும் தெளிவாக இல்ல. அப்படி இருக்கிறதுக்காகவும் அது எழுதப்படல. இது ஒரு ரகசியத்தின் தேடல், சரியா? மர்மமான கவிதைகளால் மறைக்கப்பட்டது. நீ எதை தேடுறதுன்னு உனக்குத் தெரியலைன்னா, இந்தக் கவிதைகளுக்கு நீ விளக்கம் சொல்ல முடியாது. இப்படித்தான் இருக்கு இந்தப் புதிர்கள், சரியா?'

'அலெக்ஸாண்டருக்குத் தெரிஞ்ச ஏதோவொண்ண நாம தேடிக்கிட்டு இருக்கோம்,' என்று காலின் சொல்லி விளக்கம் சொல்ல முயன்றான். 'ஆறு கவிதைகளும் இருந்த அந்த தோல்காகிதம், ரகசியத்த தேடறதுக்கு அலெக்ஸாண்டருக்கு வழிகாட்டியா இருந்திச்சின்னா, ஒவ்வொரு பாட்டும், அந்த ரகசியம் இருக்கிற இடத்தோட அடையாளங்கள்ல ஒண்ணு அல்லது அதுக்கு மேற்பட்டத பத்தி சொல்லுதுன்னு அர்த்தம்.'

'சரி,' என்று விஜய் பிரகாசமானான். 'ராத்திரி முழுக்க நா இதப்பத்தி யோசிச்சேன். விஷயம் எனக்குள் விடியலைத் தந்தது. முன்னாடி, மணிக்கணக்கான ஆராய்ச்சியும் சிந்தனையும் தேவைப்பட்டிச்சி.'

காலின் நக்கலடித்தான். 'உனக்கு விடிஞ்சிதா, லூசு? நான்

காலையில வந்து பாத்தப்ப நீ நல்லா தூங்கிக்கிட்டு இருந்த.'

அலைஸ் வரைபடத்தை கூர்மையாக ஆராய்ந்து கொண்டிருந்தாள். விஜய் சொல்வது சரியென்றால், கவிதை வர்ணனைக்குப் பொருத்தமாக வரைபடத்தில் ஏதோவொன்று இருந்தாகவேண்டும். ஏதோவொன்று; இரண்டு பள்ளத்தாக்குகளுக்குச் செல்லும் ஒரு வாசல்.

திடீரென்று அந்த எண்ணம் ஒரு டன் செங்கலை அவள்மீது கொட்டியது போல தாக்கியது.

'அருமையான வேலை,' என்று சொல்லிவிட்டு விஜய் கட்டைவிரலை நிமிர்த்திக்காட்டினான். 'வரைபடத்தில பாருங்க. ரெண்டு நதிப்பள்ளத்தாக்குகளோட நுழைவாயில்ல ஜலாலாபாத் இருக்கு. ஒண்ணு கிழக்குநோக்கிப் போவுது; அது குனார் பள்ளத்தாக்கு. இன்னொண்ணு மேக்குநோக்கிப் போவுது; அது லக்மன் பள்ளத்தாக்கு. நாம் முதன்முதலா இந்தக் கவிதைகள கேக்கும்போது, அது ஏதோ கட்டளைகள், இல்லாட்டி ஒரு வழிகாட்டின்னு நினைச்சோம்; ஆனா நமக்கு அப்ப தெரியல, அது எங்ககொண்டு விடும்னு. ஞாபகம் இருக்கா, இப்ப நமக்கு விடை கிடைச்சிடுச்சி. பாட்டில சொன்ன "வாசல்" தான் ஜலாலாபாத். சூர்யா அல்லது சூரியன் இருக்கிற கிழக்கில உள்ள பள்ளத்தாக்கைத் தேர்வுசெய்யுன்னு பாட்டு வாசகனுக்குச் சொல்லுது. ராதா சொன்னது சரிதான்' விஜய் அமைதியானான், ராதாவின் பெயரைச் சொன்னதும்.

'கிழக்கில இருக்கிற பள்ளத்தாக்கு குனார் பள்ளத்தாக்கு,' என்று காலின் தலையசைத்தான். 'நிச்சயமா எல்லாம் பொருந்திவருது.'

'ஆனா மத்தப் பாட்டுகளுக்கு என்ன அர்த்தம்?' என்று அலைஸ் கேட்டாள். 'அவையும் அலெக்ஸாண்டரோட பாதையில இருந்த இடங்களத்தான் குறிக்கணும். ஆனா அந்தப் பாட்டுகள்ல சொன்னதுக்குப் பொருத்தமா என்னால எந்த இடத்தயும் யோசிக்கமுடியல.'

'அதில ஒண்ணு ஒரு பாறையைப் பத்திச் சொல்லுது. அது சோக்டியன் பாறையா இருக்கலாம்,' என்று விஜய் அவளுக்கு ஞாபகப்படுத்தினான். 'நாம இன்னும் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணினோம்னா, ஒருவேளை மத்த இடங்களயும் கண்டுபிடிச்சிரலாம். ஆனா முக்கியமான விஷயம் என்னன்னா அந்த ரகசியமே குனார் பள்ளத்தாக்கிலதான் இருக்கு.'

'நா உங்க சந்தோசத்த கெடுக்க விரும்பல. ஆனா நாம சொல்றது

வெறும் அனுமானம்தான்.' அலைஸ் சந்தோசமாக இல்லை. 'நாம சொல்றது சரியா இருக்கலாம். ஆனா அலெக்ஸாண்டர் குனார் பள்ளத்தாக்குக்குப் போனாருங்றதனால, அவர் ரகசியத்த தேடிப்போனார்ன்னு அர்த்தமில்ல. அது அவரு போன வழியில இருந்த ஒரு இடமா கூட இருக்கலாம்; அது அவர் செல்ல விரும்பிய இடமா இருக்கவேண்டிய அவசியமில்ல. உலோகத் தட்டு இல்லாம, நாம இந்த கவிதைகள எந்த வரிசையில படிக்கணும்னு தெரியாது. கவிதைகளோட வரிசை தெரியாம, இந்தக் கவிதை ரகசியம் இருக்கிற இடத்த சொல்றதுன்னு நம்மால நிச்சயமா சொல்லமுடியாது.'

'இங்கதான் நீங்க எல்லாம் உதவிசெய்யணும்னு நா நினைக்கிறேன்,' என்று விஜய் பதில் சொன்னான். 'என்னோட ஆராய்ச்சிய வச்சு கிடச்ச தகவல்கள எல்லாம் பிரிண்ட்-அவுட் எடுத்து வச்சிருக்கேன். வரைபடங்கள், விவரணைகள், கூக்குள் பூமிக்காட்சிகள், படைப்புகள். இதுவரைக்கும் நான் சொன்னது தர்க்கரீதியா சரின்னு நீங்க ஒத்துக்கிட்டீங்க. அப்படின்னா, ஒருவேளை நாம எல்லாரும் சேர்ந்து வேலை செஞ்சா, நமக்கு புதிசா ஒண்ணு கிடைக்கலாம்.'

'அது எப்படி ராதாவ காப்பாத்தறதுக்கு உதவும்?' என்று சுக்லா இறுதியாக பேசினார். விஜயின் மீதும், அவனது அறிவின்மீதும் அவருக்கு நம்பிக்கை இருந்தாலும், அவரால் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. அங்கே அவர்மகள் ஒரு பெரிய ஆபத்தில் இருக்கிறாள். இங்கே இவர்கள் ஒரு பழங்காலத்துப் புதிரை விடுவிக்க ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது முன்னுரிமைகள் வரிசைச் கிரமத்தில்தான் வரும் என்று அவர் தனக்குத்தானே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

விஜய் தயங்கினான். தன்னால் விளக்கமுடியுமா என்று அவனுக்குத் தெரியவில்லை. தனக்கு கூப்பர் செய்த ஃபோன் அழைப்புபற்றி அவன் சுக்லாவுக்குச் சொல்லவில்லை. எப்படி முடியும்? ஆனால் சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்களுக்கு விளக்கம் சொல்லும் கடமை அவனுக்கு இருக்கிறது.

'நான் இத பேரத்துக்குப் பயன்படுத்த முடியும்னு நினைக்கிறேன்,' என்று அவன் இறுதியாகச் சொன்னான். 'கூப்பர் நேற்றிரவு கூப்பிட்டான். அவனுக்கு கனசதுரம் வேண்டுமாம். அதுதான் ரகசியத்த சொல்லக்கூடியது. இந்தப் பாட்டுக்களோட புதிரை நாம கண்டுபிடிச்சோம்னா, இந்த தகவல சொல்லி ராதாவ பாதுகாப்பா கொண்டுவந்திரலாம். இதச் சொல்றது எனக்குப் பிடிக்கலைதான். ஆனா

ராதாவ காப்பாத்தறதுக்கு இது ஒண்ணுதான் நம்மோட ஒரே நம்பிக்கை. அவ எங்கிருக்கான்னு ஐபியால இன்னும் கண்டுபிடிக்க முடியலன்னா, நாம எப்படி கண்டுபிடிக்கப் போறோம்னு எனக்குத் தெரியல. நமக்கு இருக்கிற ஒரேவழி அவர்களையே ராதாவ விடுதலை செய்ய வைக்கணும். அதுதான் சிறந்த வழி.'

சுக்லா கொஞ்சநேரம் யோசித்தார். 'நீ சொல்றது சரிதான்னு நினைக்கிறேன்,' என்று அவர் உடன்பட்டார். 'இந்த ஆராய்ச்சியில மேற்கொண்டு ஏதாவது முன்னேற்றம் கிடைக்குதான்னு பார்ப்போம்.'

இரவு முழுவதும் விஜய் சேகரித்துவைத்திருந்த தகவல் குவியல்களில் அவர்கள் சிந்தனையை மையப்படுத்தினார்கள். கூப்பர் கேட்டிருந்த தகவலைக் கண்டுபிடிக்க உதவும் தடயங்களைத் தேடுவதில் அவர்கள் வெற்றிபெறுவார்களா?



45

ஓர் எதிர் சலுகை

கூப்பர் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். முற்பகல் 12. விஜயை அழைக்கும் நேரம். அவனது எண்ணை டயல்செய்து காத்திருந்தார். ஃபோன் மணி ஒலித்துக்கொண்டே இருந்தது. எதிர்முனையில் விஜய் இன்னும் ஃபோனை எடுக்கவில்லை. கூப்பர் முறைத்தான். புரியவில்லை. அந்த மனிதனின் வருங்கால பொண்டாட்டி கைதியாக இங்கே இருக்கிறாள். துரிதமான வேகத்தோடு விஜய் ஃபோனை எடுத்திருக்க வேண்டுமே.

இணைப்பைத் துண்டித்து மீண்டும் முயற்சி செய்தான். இந்தத் தடவை அழைப்பு உடனே எடுக்கப்பட்டது.

'கூப்பர்?' விஜயின் குரலில் வலிந்துவந்த ஒரு பதற்றம் தெரிந்தது. கூப்பர்க்கு பிடித்திருந்தது.

'நல்லது,' என்று கூப்பர் நேராக விசயத்திற்கு வந்தான். 'நீ என்ன முடிவு பண்ணியிருக்க? வருங்கால பொண்டாட்டியா அல்லது முன்னாள் காதலியா? யார் வேண்டும்?'

'நான் வேறு ஒரு சலுகை தர்றேன்,' விஜயின் குரல் இப்போது பலமானது. ஆனால் இன்னும் பதற்றம் ஓர் அடிநாதமாக ஒலித்தது.

கூப்பர் நெற்றிச்சுருக்கினான். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. அவன் இதை எதிர்பார்க்கவில்லை. எப்படித்தான் போகிறது என்று பார்ப்போம் என்று அவன் முடிவுசெய்தான்.

'சொல்லு,' என்று அவன் கட்டளையிட்டான்.

'உன்னோட முதல் அக்கறை அலைஸோ ராதாவோ இல்ல,' என்று விஜய் ஆரம்பித்தான். 'மாவீரன் அலெக்ஸாண்டர் சிந்துநிலத்தில தேடிப்போன ரகசியம் இருந்த இடம் உனக்குத் தெரியணும்,' என்று சொல்லிவிட்டு விஜய் நிறுத்தினான். 'அந்த இடத்தக்

கண்டுபிடிக்கிறதுக்கு நா உனக்கு உதவிசெய்றேன்.'

கூப்பர் ஆச்சரியமானான். இந்த மனிதனையும், அவன் நண்பர்களையும் பற்றி வான் குளூக் தன்னிடம் சொல்லியிருந்தது இப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது. விஜயின் மீதான மரியாதை மேலும் சில அங்குலம் உயர்ந்தது. ஆனாலும் அவனுக்கு அவனது வருங்கால மனைவியும் வேண்டும்; பழைய காதலியும் வேண்டும்; அதற்காக தீவிரமாக அவன் போராடுகிறான் என்று கூப்பர்க்குப் புரிந்தது. விஜய் மிகவும் சிரமப்பட்டு தன்நேரத்தையும் சக்தியையும் முதலீடுசெய்து சில தடயங்களை ஆராய்ச்சி செய்து சரியான விடையைக் கண்டுபிடித்திருக்கிறான் என்றால், அவன் தன் உறவுகள்மீது ஆழமான பிரியம் வைத்திருக்கிறான் என்பது தெளிவாகிறது.

ராதாவும் அவளது சக ஐபி பணியாளரும் தன் பணித்திட்டத்தின் இலக்கைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறார்களா என்று சக்ஸேனா அறிந்துகொள்ள விரும்புகிறார் என்று கூப்பர் யோசித்தான். அவள் கடத்தப்பட்டபின், விஜய் சிங் இது சம்பந்தமாய் ஏதாவது செய்திருக்கிறானா? அல்லது அவர்களுக்கு முதலில் இருந்தே இது தெரியுமா? சக்ஸேனாவும் அவரது மேலிடத்து ஆட்களும் தேடிக்கொண்டிருந்த ரகசியத்தின் உண்மையான இயல்பு பற்றி சந்தேகம் கொள்வது யாருக்கும் சாத்தியமானது இல்லை. இது அந்த அமைப்புக்கு மட்டுமே தெரிந்த விசயம். ஆனால் பல பதின்ஆண்டுகளாக ரகசியமாக வைக்கப்பட்டிருந்த பிராஜெக்ட் இது. இனிமேலும் இந்தப் பணித்திட்டத்தில் எந்த சமரசமும் செய்துகொள்ளக்கூடாது; அதுவும் அவர்கள் பலனை நோக்கி நெருங்கிவிட்ட இந்த நேரத்தில்.

பதில்சொல்ல தான் நீண்டநேரம் எடுத்துக்கொண்டதை கூப்பர் புரிந்துகொண்டான். தான் சரியான நரம்பைத் தொட்டுவிட்டோம் என்று விஜய் திறமையாகப் புரிந்துகொண்டான். இதைத் தனது நன்மைக்குத் திருப்பிவிடும் வழி அவனுக்குத் தெரியும். துருப்புச்சீட்டு இன்னும் அவனிடம் இருக்கிறது.

'இடத்த கண்டுபிடிக்க நீ எப்படி எங்களுக்கு உதவமுடியும்?' விஜய் சொன்னது புரியாதது போல பாவனை செய்வது அல்லது மறுப்பது அர்த்தமற்றது.

விஜய் பதில் சொன்னபோது அவன்குரலில் ஒரு தெளிவான வெற்றியுணர்வு தொனித்தது. 'கனசதுரத்தில இருந்த பாட்டு ஒண்ணை

நாங்க படிச்சி புரிஞ்சுக்கிட்டோம். உன்னால அது முடியாது. மிச்சமிருக்கும் ஐந்து பாட்டுகளையும் படிச்சி புரிஞ்சி ரகசியம் இருக்குமிடத்த நா உன்கிட்ட ரொம்ப சரியா சொல்லமுடியும்.'

'அங்கதான் நீ தப்புபண்ற,' என்று கூப்பர் திருப்பியடித்தான். 'அலெக்ஸாண்டர் பியாஸ் நதியோரம் புதைச்ச உலோகத்தட்டு எங்ககிட்டதான் இருக்கு. கனசதுரத்தயும், உலோகத்தட்டையும் ஒண்ணா வச்சுக்கிட்டு கவிதைகள படிச்சோம்னா குழந்தைக்குக்கூட தெளிவா புரியும். நீ எங்களுக்கு எதுக்குத் தேவை?'

'யோசிச்சுப் பாரு. அலெக்ஸாண்டரோட உலோகத்தட்டு இல்லாமலே கவிதைகள நாங்க புரிஞ்சிக்கிட்டோம். உங்ககிட்ட இல்லாத ஆதாரப்பொருட்கள் எங்ககிட்ட இருக்கு ஒன்று அலைஸ்; மற்றொன்று டாக்டர் சுக்லா, நீங்களே தேடிக் கண்டுபிடிக்கறதுக்கு முன்னாடி எங்களால் ரொம்ப வேகமா விடையைத் தரமுடியும்.'

கூப்பர் யோசித்தான். விஜய் சொல்வதில் ஏதோ ஒரு சிறப்பு இருக்கிறது. அமைப்பின் ஆதார வளங்களைப் பயன்படுத்தி தனது குழு கவிதைகளை உடைத்து விடையைக் கண்டுபிடித்துவிடும் என்று கூப்பர்க்குத் தெரியும். ஆனால் இதையே விஜயின் குழுவை வைத்துக்கொண்டு செய்தால் அதிவேகமாக முடித்துவிடலாம் என்னும்போது பாதகம் இல்லை. விஜய் இந்தத் தகவலை ஐபிக்கு கொடுத்துவிட்டால், அவர்கள் கதை முடிந்துவிடும். இந்த விஷயத்தில் வான் குளூக், கூப்பர்க்கு ஒரு வெற்றுக்கா சோலை கொடுத்திருக்கிறார்.

'நீ சும்மா பொய் சொல்லலைன்னு எனக்கு எப்படித் தெரியும்?'

கவிதையின் அர்த்தத்தைக் கண்டுபிடித்தது பற்றியும், அவர்கள் எப்படி ஒரு முடிவுக்கு வந்தார்கள் என்பது பற்றியும் விஜய் விளக்கிக்கொண்டிருக்க கூப்பர் ஆழமாகக் கவனித்தான்.

கூப்பர் முடிவெடுத்தார். 'உன் நிபந்தனைகள்?' அவர்கள் எதைக் கேட்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். ஆனாலும் தான் எளிதாகப் பணிந்துவிட்டோம் என்று அவர்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது என்று அவன் நினைத்தான்.

'அலைஸையைப் பின்தொடர்வதை நிறுத்து, ராதாவை விடுதலை செய்.'

கூப்பர் பல்லிளித்தான். விஜயைப் பற்றி அவன் நினைத்தது சரிதான். இந்த மனிதனுக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்; பாதகமான சூழ்நிலையிலும்கூட அவன் காட்டிய விடாமுயற்சிக்கும்

தீர்க்கத்திற்கும் முழுமதிப்பெண்கள் தந்தாக வேண்டும். 'ஏத்துக் கொள்கிறேன்: ஆனா ரெண்டு நிபந்தனைகள்: ஒண்ணு, இன்னைக்கு சாயங்காலம் 4 மணிக்கு நீயும் உன்குழுவும் என்ன பன்னாட்டு விமான நிலயத்தில சந்திக்கணும். இன்னைக்கு ராத்திரியே நாம ஒண்ணாக ஜலாலாபாத்துக்குக் கிளம்புறோம். நாளைக்கு குனார் பள்ளத்தாக்குக்கு போறோம். ரெண்டு: நீ சொல்றத உண்மைன்னு நா சரிபாக்கிற வரைக்கும் ராதா என்னோட கஸ்டடியிலதான் இருப்பா. நீ ஏதாவது எடக்குமடக்கா செஞ்ச, மருத்துவ மையத்தில நோயாளிகளுக்குக் கொடுத்து கொன்னோமே அதே காக்டெயில் மருந்த ராதாவுக்கும் ஊசிமூலம் கொடுத்திடுவோம்.'

அந்த வெளிப்படையான மிரட்டலில் ஏற்பட்ட கோபத்தைக் கட்டுப்படுத்த விஜய் முயன்றபோது ஒருகணம் மௌனம் நிலவியது. 'எனக்கு வேறு வழியில்ல. ஆனா நான் மட்டுந்தான் உங்கூட வருவேன். மத்தவங்க இங்கேயேதான் தங்கியிருப்பாங்க. ஆனா நீ வாக்குறுதி தவறமாட்டேன்னு நா எப்படி நம்புறது?'

கூப்பர் யோசித்தான். ரகசியம் இருக்கும் இடத்தைப் பற்றி அவர்களுக்கு சரியான தகவல் தெரியும் என்றால், எல்லோருக்கும் அது தெரிவதை அவன் விரும்பவில்லை. குனார் பள்ளத்தாக்கு வரைக்கும் எல்லோரும் போகவேண்டிய அவசியம் இல்லை. எல்லோரும் சேர்ந்து போனால், காரியம் முடிந்தவுடன் வெளிநாட்டில் யாருக்கும் தெரியாமல் அவர்களின் கதையை ஒரே போடாய்ப் போட்டு கூப்பர் முடித்துவிடுவான் என்பதால் விஜய் அப்படி சொன்னான். மற்றவர்கள் இங்கேயே இருந்து, விஜய் மட்டும் கூப்பர்கூட சென்றால் திட்டம் சரியாக வேலைசெய்யும். ஆஃப்கானிஸ்தானில் தேவைப்படும் செயற்கைக்கோள் தொலைபேசி மூலமாக அவர்கள் தொடர்பில் இருந்துகொள்ள முடியும். விஜய் அதைச் செய்வான். எப்படியிருந்தாலும், விஜயும் அவன் நண்பர்களும் தீமைசெய்யாதவர்கள் என்று கூப்பர் நம்பினான். ராதாதான் ஐபியோடு தொடர்பு கொண்டவள்; அவர்கள் அல்ல. இங்கே தங்கியிருக்கும் விஜயின் ஆட்கள் வேறு எங்கும் போகிறார்களா என்று கண்காணிப்பதற்கு கூப்பர் ஏற்பாடு செய்துவிடுவான், இதோ இந்த தொலைபேசி உரையாடல் முடிந்தவுடனே.

கூப்பரின் பதில் ரத்தினச்சுருக்கமாக இருந்தது. 'சரி. நீ சொன்னபடியே நீ மட்டும் வா. ஆனா நீ சொன்னதுபோல, உனக்கு வேறு வழியில்ல. சாயங்காலம் சரியா 4 மணிக்கு நா உன்ன சந்திக்கிறேன். தாமதம் செய்துவிடாதே.'

46

சூதாட்டம்

விஜய் இணைப்பைத் துண்டித்துவிட்டு மெதுவாக தன் படிப்பறைக்குள் சென்றான். அங்கு இருந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுதான் கீழே இருந்த அமர்வு அறைக்குள் வந்து கூப்பருடன் ஃபோன் பேசினான். உரையாடலை மற்றவர்கள், குறிப்பாக அலைஸ் கேட்பதை அவன் விரும்பவில்லை. அவர்களிடம் விசயத்தை எப்படிச் சொல்வது என்று விஜய் யோசித்தான். ராதாவைக் காப்பாற்றும் தன் மூர்க்கத்தனமான முயற்சியில், கூப்பரின், அவனோட ஆட்களின் பிடிக்குள் இன்னும் ஆழமாக மாட்டிக்கொள்ளத்தான் தான் ஜெயித்திருக்கிறோமா என்று அவன் ஆச்சரியப்பட்டான். ஒரே ஒரு ஆறுதல் அவன் மட்டுந்தான் கூப்பரோடு போகப்போகிறான். மற்றவர்கள் இங்கே ஜவுன்காரில் பத்திரமாக இருப்பார்கள்.

அவன் படிப்பறைக்குள் நுழைந்தபோது எல்லோர் முகங்களிலும் ஆர்வம் ததும்பிவழிந்தது. அவன் ஏன் வெளியே போய் ஃபோன்பேசிவிட்டு வருகிறான் என்று அவர்கள் ஆச்சரியப்படுவது அவனுக்குத் தெரியும்.

'கூப்பர்,' என்று ஆரம்பித்து, பேசப்போகும் ஒவ்வொரு வார்த்தையையும் அவன் யோசித்தான். 'நாள முற்பகல் 12 மணிக்குக் கூப்பிறேன்னு அவன் சொல்லியிருக்கான். நாங்க ஒரு உடன்படிக்கை செஞ்சிருக்கோம்.' கூப்பர்க்குத் தான்கொடுத்த சலுகையைப் பற்றி அவன் விளக்கமாக சொன்னான். அலைஸ் மற்றும் ராதாவைப் பற்றி அவன் எடுத்த முடிவையும், அதற்கு கூப்பர் கொடுத்த பதிலையும் சொல்லாமல் விட்டுவிட்டான்.

அவன் பேசிமுடித்த போது எல்லோர் முகங்களிலும் ஆச்சரியம் தென்பட்டது. கிட்டத்தட்ட விஜய் பேசிமுடித்தபோது, காலின்தான் முதலில் பேசினான். 'உனக்கு என்ன பைத்தியமா? நீ மட்டுமே

போறேங்ற, அந்த கும்பலோட... அவங்க யாருன்னு எனக்குத் தெரியல; ரொம்ப ஆபத்தானவங்க! நாம பாக்கலியா அத?'

அலைஸ் தலையசைத்தாள். 'விஜய் நீ என்ன யோசிக்கிறேன்னு எனக்குத் தெரியல. கிரீஸில அவங்க அப்படி செஞ்சதுக்கப்புறமும், மியூசியத்தில அவங்க நம்மளை தாக்கினதுக்கு அப்புறமும், நீ எப்படி போகமுடியும்?'

விஜய் அமைதியாக இருந்தான். இந்த இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கு இதுதான் ஒரேவழி என்று அவன் எப்படி அவர்களுக்குச் சொல்லமுடியும்? ராதாவின் விதியையும், அலைஸின் விதியையும் சரிசமமாகச் சீர்தூக்கும் முயற்சியில், அவன் எதிர்கொண்டிருக்கும் வலிமிகுந்த முடிவை எப்படி அவன் வெளிப்படுத்துவான்? 'ராதாவ காப்பாத்தறதுக்கு இதுதான் ஒரே வழி,' என்று மட்டும் அவன் சொன்னான். 'நீங்க எல்லோரும் இதில இருந்து விலகி நில்லுங்க. குறிப்பா, நீதான், அலைஸ். நான் அவங்ககூட இருக்கும்போது, நீங்க எல்லோரும் அந்தப் பாட்டுகள ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருங்க. ஏதாவது சாதிக்க முடிஞ்சதுன்னா, உடனே எனக்குத் தெரியப் படுத்துங்க. எவ்வளவு வேகமா இந்தப் புதிர கண்டுபிடிக்கிறமோ, அவ்வளவு வேகமா நாம ராதாவ திரும்பக் கொண்டுவர முடியும்.'

'நீ ஒண்ணும் தனியா போவேண்டாம்,' என்று காலின் எழுந்து விஜய் அருகில் சென்றான். அவன் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான். 'நாம ஆருயிர் நண்பர்கள். நாம சேர்ந்தே செய்வோம். நானும் உன்கூட வர்றேன்.'

விவாதம் செய்வதைவிட வேறுநல்ல விஷயம் விஜய்க்குத் தெரியும். இப்போது அவன் நேர்மையானவனாக இருந்திருந்தால், காலின் கூடவருவது தனக்குச் சந்தோசம் என்று உணர்ந்திருப்பான். ஆனால் அவன் ஏற்கனவே தீர்மானித்து விட்டான். பெருமூச்சு விட்டான். 'மன்னிக்கணும் நண்பா,' என்றான் அவன். 'நீ இங்க இவங்ககூட இருந்து இந்த விளையாட்டில ஏதாவது கண்டுபிடி. நா விவாததுக்கு வரல.'

காலின் பதில்சொல்ல வாயெடுத்தான். ஆனால் விஜயின் ஃபோன் ஒலித்தது. வைத் அழைக்கிறார்.

'மன்னிக்கணும். ராதா பத்தின புதுசா தடயமொண்ணும் கிடைக்கல,' என்று வைத் அவனிடம் சொன்னார். 'நாங்க இன்னும் தேடிக்கிட்டுதான் இருக்கோம். இந்தப் பசங்க தொழில் தெரிஞ்சவங்க மாதிரி இருக்கானுக. இவ்வளவு நேரம் நம்ம கண்காணிப்பு எந்திரத்தில தெரிஞ்சானுக. இப்ப

திடீர்ன்னு பாதையை மூடிட்டானுங்க. பெரிய எக்ஸ்பெர்ட்கள் மாதிரி தெரியது. ஆனா சீக்கிரமே அவங்க தடத்த கண்டுபிடிச்சிடுவோம்.'

'நானும் அப்படித்தான் நம்புறேன்,' என்று விஜய் பதிலளித்தான். 'நா உங்களுக்கு ஒரு தகவல் வச்சிருக்கேன்.' கூப்பருடன் தான் கொண்ட உடன்படிக்கையைப் பற்றி வைத்திடம் அவன் சொன்னான்.

வைத் பேசுவதற்கு முன்பு ஒரு கனத்த இடைவெளி ஏற்பட்டது. 'நீங்க ஒரு பெரிய ஆபத்தை நோக்கிப் போயிட்ருக்கீங்க,' என்று அவர் விஜயிடம் சொன்னார். 'ரொம்ப பெரிய ஆபத்து. அவனுக அவ்வளவு சுலபமா ராதாவ விடமாட்டானுக. மேலும் நீங்களும் பெரிய ஆபத்திலதான் இருக்கீங்க. ராதா உட்பட நீங்க எல்லோருமே ஐபியோட தொடர்பில இருக்கீங்கன்றது அவனுகளுக்குத் தெரியும். நாங்க சந்தேகப்படுற மாதிரி உயிரியல் தீவிரவாதக் கோணம் இதில இருந்தா, நீங்க அவனுகளுக்கு பெரிய அச்சுறுத்தல்தான்.'

'நா அப்படி நினைக்கலை,' என்று விஜய் பதில் சொன்னான். 'ராதா மட்டுந்தான் ஐபியோட தொடர்பில இருக்கான்னு அவங்க நினைக்கிறாங்கன்னு நான் நம்புறேன். இம்ரான் கோட்டையில இருந்ததற்கு காரணம் அவருக்கும் ராதாவுக்கும் ஐபி தொடர்பு இருந்ததும், அவள் என் வருங்கால மனைவி என்பதும்தான் என்று அவங்க ஒருவேளை நினைச்சிருக்கலாம். இல்லன்னா, அவங்க எங்களயும் சேத்தே தாக்கியிருக்கலாம். மியூசியத்தில கூட அலைஸ்தான் அவங்க இலக்கு. நாங்க அவசுவட இல்லைன்னா, எங்கள ஒண்ணும் செய்யாம விட்டிருப்பாங்க.'

'நீங்க ஆஃபிஸ் வர்றது நல்லதுன்னு நினைக்கிறேன்,' என்று வைத் பதில்சொன்னார். 'நாம் பேட்டர்சன்னுக்கு சொல்லியாகணும். அவர்தான பணிப்படைக்குழுத் தலைவர். என்ன நடக்குதுன்னு அவருக்குத் தெரிஞ்சாகணும். அவர கேக்காம நீங்க இந்த முடிவ எடுத்ததற்கு அவரு சந்தோசப்படுவார்னு நான் நினைக்கலை.'

'நா நேரா அங்க வர்றேன்,' என்று விஜய் உறுதியளித்தான். 'அங்கிருந்து ஏர்போர்ட்டுக்குப் போயிடுறேன்.'

'அதுக்கு முன்னாடி சுத்திப்போய் ஆஸ்பத்திரிக்கு நீங்க போயாகணும்.' அவர் குரலில் சந்தோசத்தொனி ஒலித்தது. 'இம்ரான் அபாயக்கட்டத்த தாண்டிட்டார். சுயநினைவு வந்திச்சு. அவரு உங்களைச் சந்திக்க ஆசப்படுறாரு.'

விஜய் போனைத் தள்ளிவைத்துவிட்டு இன்னும் வெறுப்புமிகுந்த

முகத்தோடு தென்பட்ட காலினைப் பார்த்தான். 'சந்தோசமா இரு, மவனே!' என்றான். 'நீ இங்க தேவை.' விஜய் பல்லிளித்து சூழலை இலகுவாக்க முயன்றான். 'என்னவிட உனக்கு மூளை அதிகம்ன்னு சொல்வீயே. நல்லது! அதை நீ நிரூபிச்சுக் காட்டு. புதிர உடைக்க அலைஸ்க்கும் சுக்லாவுக்கும் உதவிசெய். நீ எனக்கு ஆதரவு காட்ட அதுதான் சிறந்த வழி.'

காலின் உடனே பதில் சொல்லவில்லை. விஜயின் முடிவை ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு வர முயன்றான். அவனுக்குத் தன் நண்பனைப் பற்றித் தெரியும். அவன் ஒரு முடிவெடுத்துவிட்டால், பூமியில் உள்ள எந்த சக்தியாலும் அதை அசைக்கமுடியாது. இறுதியாக அவன் தலையசைத்துச் சொன்னான்: 'நான் சந்தோசமா இருக்கேன்னு சொல்லமுடியாது. ஆனா இதுதான் நீ விரும்புவதுன்னா...' அவன் இடைவெளி விட்டு தன் நண்பனைக் கட்டித்தழுவினான்.

விஜய் எல்லோருக்கும் தலையசைத்துவிட்டு, படிப்பறையைவிட்டு வெளியேறினான். இது ஒரு சூதாட்டம் என்று அவனுக்குத் தெரியும். இது பலன் தருமா?

மத்திய உளவுத்துறை, புது டில்லி

மாநாட்டு அறையில் திரையில் தெரிந்த பேட்டர்சன்னின் உருவத்தை விஜயும் வைத்தும் உற்றுநோக்கினர். அந்த ஆஃப்ரிக்க-அமெரிக்கனின் வழக்கமான இறுக்கமான முகத்தில், பாதி ராத்திரியில் எழுப்பப்பட்டதனால் ஏற்பட்ட எரிச்சலின் தடங்கள் ஆழமாகப் பதிந்திருந்தன.

அறையில் இருந்த இரண்டு மனிதர்களையும் பார்த்து அவர் பேசினார்: 'இது ரொம்ப முக்கியமான விஷயமாக இருந்தால் நல்லது. நாளக்கு எனக்கு ஜனாதிபதியோட சந்திப்பு இருக்கு. தூங்குறதுக்கு இன்னும் ரொம்ப நேரம் மிச்சமில்ல. நீங்க கூப்பிடும்போதுதான் நான் தூங்கப் போயிருந்தேன்.'

விஜய் தன்னிடம் சொல்லியிருந்த நிகழ்வுகளை, ஒரு வரைபடம் போல வேகமாகச் சொல்லிமுடித்தார் வைத். பேட்டர்சனின் முகம் இருட்டானது; கண்கள் கோபத்தில் மின்னின. கப்பற்படையில் இருந்ததால் கட்டுப்பாடும் ஒழுக்கமும் கொண்ட மனிதர் அவர்; விதிமுறைகளை மதிக்காதவர்களை அவர் மதிக்கமாட்டார்.

வைத் தன் புகாரைச் சொல்லிமுடித்தவுடன் பேட்டர்சன் அவர்களை

முறைத்தார். ஆனால் உடனடியாகப் பேசவில்லை. கொடுக்கப் பட்ட தகவல்களை எல்லாம் ஆழமாய் யோசிப்பதுபோல தெரிந்தது.

'முதல் விஷயங்கள் முதல்ல,' என்று பேட்டர்சன் சொன்னார், சில கணங்கள் கடந்தபின்பு. 'கிட்வாயிடம் நான் மன்னிப்புக் கேட்கணும். அவர் சொன்னது ரொம்ப சரி. கிரீஸில் நடந்த சம்பவங்களுக்கும் டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸ்க்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கு. நாம இன்னும் ஆழமா தோண்டியெடுக்கணும். நாள காலையில நான் கண்டுபிடிச்சிறேன். ஆனா நாம கவனமா இருக்கணும். வாலஸ் கூட இதில சம்பந்தப்பட்டிருக்கலாம். அப்படி இல்லன்னா, நாம யார்கிட்ட பேசுறோம், என்னத்த பேசுறோம்ன்னு நாம கவனமா இருக்கணும். இது ஒரு ஆபத்தான விஷயம். வாலஸ் காங்கிரஸ்காரர்களுக்கும் செனட்டர்களுக்கும், ஏன் ஜனாதிபதிக்கும் கூட ரொம்ப நெருக்கமானவர். நாம எல்லாத்தயும் சும்மா ஊகம் பண்ணிக்கிட்டே போகமுடியாது.'

விஜயும், வைத்தும் தலையசைத்தார்கள். மேற்கொண்டு பேட்டர்சன் பேச அவர்கள் காத்திருந்தார்கள்.

'அடுத்து,' என்று சொல்லிவிட்டு, பேட்டர்சன் விஜயை பார்வையால் ஊடுருவினார். 'புதிர்களயும், ரகசிய விடுகதைகளையும் தீர்த்துவைக்கிற உன் திறமையை நான் பாராட்டுறேன். ஆனால் அதே நேரத்தில, தீவிரவாதிகளோட பேச்சுவார்த்தை நடத்தறதுக்கு உனக்கு அதிகாரம் இல்ல. அல்லது அனுபவம் இல்ல. பணிப்படைக் குழுவில நீயும் ஓர் உறுப்பினர்தாங்றத நீ மறந்திட்ட மாதிரி தெரியது. இந்தக் குழுவில யார் என்ன பண்ணனுங்றத நான்தான் தீர்மானிக்கணும். நீ இல்ல. இந்த மாதிரி நீயே முடிவுகள எடுத்திட்டு திரியமுடியாது.'

அவர் இடைவெளி விட்டார், தன் அடுத்த வார்த்தைகளை ஆய்வது போல. 'ஆனா இப்ப நீயே முடிவெடுத்திட்டதால,' என்று அவர் தொடர்ந்தார். 'இந்த விஷயத்தில் நமக்கு வேறு வழியில்ல. ஆனா நீ இதை புரிஞ்சுக்கணும்னு நா விரும்பறேன். நீ இதை உன் காதலிக்காக செய்றேன்னா, நீ ஒரு முட்டாள். ரொம்ப தன்னம்பிக்கை கொண்ட பிரயோஜனமில்லாத முட்டாள். உன் காதலி செத்திட்டான்னு அர்த்தம். நிச்சயமா அவள் இப்ப உயிரோடு இருக்கலாம்; ஆனா, நீ இந்த ரகசியத்தை ஒரு வெள்ளித் தாம்பாளத்தில வச்சி அவங்களுக்குக் கொடுத்தபின்னாடி, அவங்க அவள விட்டுடுவாங்கன்னு நீ நினைச்சீன்னா, திரும்பவும் யோசிச்சு பாரு. நீயும் செத்துருவ; அவளும் செத்துருவா. ரெண்டுபேருமே. அதனால நீ இத இப்ப செஞ்சீன்னா, அது

அவளுக்காக அல்ல; பணிப்படைக் குழுவுக்காக. ஆஃப்கானிஸ்தான் குகையில அல்லது வேறு எந்த இடத்திலோ இருக்கிற ஏதோ ஒண்ணு இந்த உலகத்துக்கு பெரும் ஆபத்தாக ஆகிவிடக் கூடாதுங்றதுக்காகத்தான் நீ இத பண்ற. அதுக்காகத்தானே இந்தப் பணிப்படைக்குழுவே உருவாக்கப்பட்டிருக்கு. அது உன் பொறுப்பு. தெளிவாயிடுச்சா?'

விஜய் மென்றுமுழுங்கினான். பேட்டர்சன்னின் வார்த்தைகளில் இருந்த சத்தியம் அவனுக்கு உறைத்தது. பேட்டர்சன் முன்வைத்த தர்க்கத்திற்கு எதிராகவே அவனது முழு ஆளுமையும் போராடியது. ஆனால் அவனின் உள்ளே ஆழத்தில், அவர் சொன்னது சரிதான் என்று ஒலித்துக் கொண்டிருந்தது.

அவன் பதில்சொல்லும்போது பொங்கிஎழ முயன்ற கண்ணீரைக் கட்டுப்படுத்தினான். 'தெளிவாயிச்சி. ரொம்பவே.'

'இப்ப,' என்று பேட்டர்சன் தொடர்ந்தார். 'இந்தப் பெரிய ரகசியத்துக்கும், உயிரியல் தீவிரவாதத்துக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்குதுன்னா, நாம சும்மா வேடிக்க பாத்திட்டு இந்த ஆட்கள தப்பிக்கவிட முடியாது. கிறிஸ்துவின் பேரால் சொல்றேன்; அவங்க யாருன்னுகூட நமக்குத் தெரியாது.'

'அதனால நீங்க என்ன திட்டம் வச்சிருங்கீங்க?' என்று வைத் கேட்டார். பேட்டர்சன் என்ன சொல்ல வருகிறார் என்பது அவர்க்குப் புரிந்தது.

'நீ உன் உடன்படிக்கைப் படி போ,' என்று அவர் விஜய்க்கு அறிவுறுத்தினார். 'நாங்க இங்கிருந்தே உன்ன பின்தொடர்றோம்.'

விஜய் குழப்பமானான். 'நீங்க அதை எப்படி செய்ய போறீங்க? ராதாவை எங்க அடைச்சி வச்சிருக்காங்கன்னுகூட உங்களுக்குத் தெரியாதே.'

'கவனமா கேளு,' என்று பேட்டர்சன் குரலைத்தாழ்த்திப் பேசி முடித்தார். அவர் பேசியதும், விஜயை ஓர் ஆழமான பார்வையால் துளைத்தார். 'அங்க நீ ரொம்ப கவனமா இரு, பையா. நாம ஒண்ணும் அற்புதங்கள நிகழ்த்துவதில்ல. போன வாரம்தான் குழுவில இருந்த ஒரு ஆளை ஏறக்குறைய இழந்துட்டோம்னு சொல்லலாம். இன்னும் ரெண்டு பேரை இழக்க நான் தயாரா இல்ல.'

47

ஜலாலாபாத், ஆஃப்கானிஸ்தான்

ஜலாலாபாத் தெருக்களில் அதிர்ந்து சென்ற 'லாண்ட் ரோவர்' காரில் விஜய் கூப்பருடன் இருந்தான்.

புது டில்லியில் விஜய் விமானநிலையத்தை அடைந்தவுடன், அங்கே காத்துக்கொண்டு நின்ற கல்ஃப்ஸ்டீரிம் G550 ஜெட் விமானத்தில் அவசர அவசரமாக ஏற்றப்பட்டான். அவர்கள் டில்லியிலிருந்து காபுலுக்கு 90 நிமிடங்களில் வந்தனர். கூப்பர்கூட ஐந்து தடித்த, சதைப்பிடிப்பான மனிதர்கள், அவர்களின் திறமை நிரூபித்திருந்த வெட்டுக்காயத் தழும்புகளுடன் வந்திருந்தனர். எல்லோரும் ஆயுதங்கள் வைத்திருந்தனர்.

விமானம் காபுலில் இறங்கியவுடன், நிலையமை தானத்தில் இன்னொரு தனியார் ஜெட் நிறுத்தப்பட்டிருந்ததை விஜய் கவனித்தான். அது கல்ஃப்ஸ்டீரிம் 650*ER* - நீண்ட வீச்சுகொண்ட ஜெட். அது யாருடையது என்று அவன் அதிசயமாகப் பார்த்தான். விமானநிலையம் ராணுவ வேலைகளுக்காகவும், சில நேரங்களில் ஐக்கிய நாட்டு சபை விமானங்களுக்காகவும் பயன்படுத்தப்படுவதால், அவர்கள் நேராக ஜலாலாபாத்திற்கு பறக்க முடியாது என்று கூப்பர் அவனிடம் சொல்லியிருந்தான். வணிக விமானக் கம்பெனிகளுக்குச் சொந்தமாக இரண்டு அகன்ற விமானங்கள் அங்கே இருந்தன. ஆனால் வேறு சின்ன விமானங்கள் அங்கே இல்லை.

90-நிமிட பயணம் முடிந்து ஜலாலாபாத்தில் இறங்கி குடியேற்ற அதிகாரிகளின் சோதனை முடிந்தபின்பு, அவர்கள் 'லாண்ட் ரோவரில்' ஏறினர். இறுதியாக தனக்குக் கிடைத்த சவாரியை விஜய் எதிர்பார்த்திருக்கவில்லை. சாலை மென்மையாக இருந்தது; நன்றாகவே சமன்செய்யப் பட்டிருந்தது; ஐரோப்பிய யூனியன் திட்டத்தின்கீழ் மீளுருவாக்கம் செய்யப் பட்டிருந்தது. ஆனால் சாலையின் தரம், வண்டி ஓட்டுநர்களை சாலையைச் சுற்றியிருந்த நிலவியல் வரைகோடுகளுக்குச்

சவாலிட செய்தது.

காபூல் நதிக்கு 2000 அடிமேலே சாலை கடந்துசென்ற மலைப் பகுதியின் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சிகளை விஜயால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை என்றபோதும், பயணம் முழுவதும் மரணமும் அபாயமும் அவனைத் துரத்தின. நெடுஞ்சாலையில் இரண்டு பாதைகள் மட்டுமே இருந்தன; ஒரே நேரத்தில் இரண்டு கார்கள் ஒன்றையொன்று தொடாமல் போகமுடியாத அளவுக்குத்தான் அகலமாக இருந்தன. உள்பாதையில் ஓர் உலர்வான குன்று சாலைக்கு மேலே, கிட்டத்தட்ட செங்குத்து வடிவான சாய்மானத்தில் இருந்தது. வெளியே இருந்த பாதை, ஓரடிக்கும் கீழான ஒரு விளிம்பால் பாதுகாப்பாக இருந்தது. அதற்கப்பால் ஒரு வெற்றுவெளியும், கீழே பள்ளத்தாக்கிற்கு இட்டுச் செல்லும் ஒரு செங்குத்து வீழ்ச்சியும் இருந்தன.

சோவியத் யுகத்திலிருந்து தப்பித்த ஆதிகாலத்து லடாஸ் (கார்கள்), உடையக்கூடிய நிலையில் இருக்கும் பேருந்துகள், சேதப்பட்ட டொயோட்டா டாக்ஸிகள் ஆகியவை சாலையில் இடத்தைப் பிடிக்கவும், வேகத்தைக் கூட்டவும் போட்டி போட்டுக்கொண்டு ஓடின. சோவியத் படையெடுப்புக்குப் பின்னர் குண்டும்குழியுமாக மாறிப்போயிருந்த சாலையாக மீண்டும் அது சிதைந்து விடுவதற்கு முன்னர், சாலை நீடிக்கும்வரை வண்டியோட்டும் சுகத்தை அதிகப்பட்சமாக அனுபவித்து விடவேண்டும் என்பது போல வாகனங்கள் தலைதெறிக்க ஓடின. கொண்டை ஊசி வளைவுகளிலும், கூர்மையான திருப்பங்களிலும், வாகனங்களுக்கிடையே வெறும் மில்லிமீட்டர் இடைவெளியை உருவாக்கிக்கொண்டு அதிவேகத்தில் போக்குவரத்து நெரிசலின் ஊடாக உள்ளூர் கார்கள் 'லாண்ட் ரோவரை' விர்விர்ரென்று கடந்துபோயின. அந்தச் சூழலுக்குப் பொருத்தமில்லாமல் மெதுவாகப் போய்க்கொண்டிருந்த, சரக்குப்பாரத்தைச் சுமந்துசெல்லும் டிராக்ட்டர் ட்ரெய்லர்கள், சாலையில் அன்னநடை போட்டு போய்க்கொண்டிருந்தன; நேரம் முக்கியமில்லை என்பது போல. போக்குவர நெருக்கடியில் மற்ற வாகனங்களுக்கு அவை முரண்பாடாகத் தெரிந்தன.

தினமும் அந்தச் சாலையில் நடக்கும் விபத்துக்களின் சாட்சியை விஜய் இரண்டு தடவை தன் பயணத்தில் பார்த்துவிட்டான். முதல் சாட்சி, ஒரு பள்ளத்தாக்கின் அடியில் நொறுங்கிக் கிடந்த ஒரு காரின் சேதக்காட்சி. இரண்டாவது, ஒரு டிரக்கும், ஒரு செடான் காரும் நேருக்குநேர் மோதிக்கொண்ட காட்சி. துரதிர்ஷ்டமான செடான் கார் டிரைவர் தன் பாதைக்கு சரியான நேரத்தில் திரும்பமுடியாமல்

அதிவேகத்தில் டிரக்கின்மீது மோதிக்கொண்டான். விபத்து நெடுஞ்சாலையில் தடை ஏற்படுத்தியது. வாகனங்கள் மெதுவாக ஊர்ந்துசென்றன. நொறுங்கிக் கிடந்த காரைச் சுற்றிவளைத்தும், டிரக்கின் பிரமாண்டமான உருவத்தைக் கடந்தும் போயின.

இறுதியாக அவர்கள் ஜலாலாபாத் சென்றனர். உள்ளூர்க் காவலாளியுடன் அவர்களின் வழக்கமான இடத்திற்குச் சென்றார்கள். அந்தக் காவலாளிதான் நாளை குனார் பள்ளத்தாக்கிற்கு அவர்கள் கூட செல்வான்.

'லாண்ட் ரோவர்' ஒரு பாழடைந்த கட்டிடத்தின் முன்னால் நின்றது. கட்டடத்தின் கலவை உரிந்துகிடந்தது; ஜன்னல் கதவுகள் உடைந்திருந்தன. பழுது பார்க்கப்பட வேண்டிய, பேணிக் காக்கப்பட வேண்டிய கட்டிடம் என்று தெளிவாகத் தெரிந்தது. சௌகரியமும் ஆடம்பரமும் இந்த ஜனங்களுக்கு முக்கியமாகத் தெரியவில்லை. கோடிமுறையாக விஜய் அதிசயித்தான், கூப்பர் எந்த மனிதர்களுக்காக வேலை பார்க்கிறான் என்று.

அந்த இரண்டுமாடிக் கட்டடத்தில் தரைத்தளம் முழுவதையும் ஆக்ரமித்திருந்தது ஹால். விஜய்க்கு பாதிவிடை கிடைத்தது. கறையான் அரித்த, துணியால் தைக்கப்பட்டிருந்த, ஒருகாலத்தில் இளமஞ்சளாக இருந்திருக்கக்கூடிய சோஃபாவில் நெடிய, சிறப்பான தோற்றத்தோடு ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். உயர்ந்த நெற்றி, கழுகின் அலகு மூக்கு, வெள்ளி சாம்பல்நிற கேசம். உள்ளே நுழைந்த விஜயை அளவெடுத்தன, ஓரமில்லாத கண்ணாடி அணிந்த அவன் கண்கள்.

அவன் முன்னாடி மேஜைமீது உலோகத்தட்டு இருந்தது. விஜய் தேசிய அருங்காட்சியகத்தில் பார்த்தது; பியாஸ் நதிஅருகில் ஜீயஸ் கடவுளின் பீடத்தின் அடியில் அலெக்ஸாண்டர் புதைத்தது.

'மாலை வணக்கம், கிறிஸ்டியன்,' என்று கூப்பர் அவனைப் பார்த்து தலைகுனிந்து வணக்கம் வைத்தான். பதிலுக்கு அந்த மனிதனும் தலைகுனிந்தான், புன்னகைக்காமல்.

அந்த அந்நியன் இன்னும் பேசவே இல்லை. ஆனால் அவன் தோற்றம் அபரிமிதமான அதிகாரத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்தியது. அவன் யாரென்று விஜய்க்குத் தெரியவில்லை. ஆனல் சந்தேகமே இல்லை; அவன் கூப்பரின் பாஸ். இந்த முழுத்திட்டத்தின் பின்னால் இருக்கும் மனிதன்.

அவன் இங்கே இருப்பது நல்லதா இல்லை கெட்டதா என்று

தெரியவில்லை. ஆனால் தன்னை இதுவரை வாட்டிக்கொண்டிருந்த ஏராளமான கேள்விகளுக்கு சில விடைகள் கிடைக்கும் என்று விஜய் நம்பினான்.

'கடைசியில,' என்று அந்த அந்நியன் சொன்னான். விஜயை கூர்ந்து அவதானித்தான். அவனின் சாம்பல் கண்கள் விஜயை மதிப்பீடு செய்துகொண்டிருந்தன. பக்கத்தில் இருந்த இன்னொரு சோஃபாவைக் காட்டினான். அதுவும் சேதப்பட்டிருந்தது. விஜய் அமர்ந்தான்.

'என் பெயர் கிறிஸ்டியன் வான் குளூக்,' என்று அந்நியன் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான். 'நீ என்னப்பத்தி கேள்வி பட்டிருக்கலை. இல்ல?'

விஜய் தலையாட்டினான். அந்தப் பெயர் எந்த நினைவையும் கிளறவில்லை.

'பரவாயில்ல. நீ யாருன்னு எனக்குத் தெரியும்,' என்று வான் குளூக் தொடர்ந்தான். அவன் கூப்பரைப் பார்த்தான். 'அருமையான வேலை, கூப்பர். எப்பவுமே நம்பலாம். நாளக்கி நம்மோட மலைப்பயணத்துக்கு ஆட்கள திரட்டி தயாரா வச்சிரு. நான் அதுக்குள்ள இந்த ஜெண்டில்மேனோட பேசிக்கிட்டு இருக்கேன்.'

கூப்பர் தலையசைத்துவிட்டு நகர்ந்தான். வான் குளூக் விஜய் பக்கம் திரும்பினான். காபுல் விமானநிலையத்தில் தான்பார்த்த கல்ஃப்ஸ்டீம் ஜெட் இந்த மனிதனுக்குச் சொந்தமானது என்று விஜய் உணர்ந்துகொண்டான். யார் இவன்? ஐரோப்பிய பாஷையின் ஒலி அழுத்தம் இருக்கிறது இவனுக்கு. ஒருவேளை ஜெர்மனி அல்லது ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்தவனாக இருக்கலாம். பெரும்பணக்காரன்; சந்தேகமில்லை. விஜயை இவனுக்கு எப்படி தெரியும்?

'நீ எங்களுக்கு பெரிய தலைவலி,' என்று வான் குளூக் சொன்னான். அவன் அப்படி சொன்னாலும் அவன் விரக்தி அல்லது எரிச்சல் அடைந்தவனாகத் தோன்றவில்லை. 'உன்னால போன வருசம் நான் ஒரு நல்ல நண்பன இழந்திட்டேன். அமைப்பு ஒரு நல்ல உறுப்பினரை இழந்திடுச்சி.' அவன் தலையாட்டினான். 'ஆயிரம் வருசத்துக்கு நான் உன்ன மறக்கமாட்டேன்.' மீண்டும் அவன் குரலில் அல்லது பாவனையில் வெறுப்பு வெளிப்படவில்லை. அதுதான் அவன் வார்த்தைகளை மேலும் குரூரமாக்கியது.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு திகிலுணர்வு விஜயின் முதுகுத்தண்டில் சில்லென்று ஊர்ந்தது.

'பரவாயில்ல,' என்று வான் குளூக் தொடர்ந்தான். 'அதெல்லாம் கடந்தகாலம். நான் எப்பவுமே கடந்தகாலத்த நம்புறதில்ல. எதிர்காலம் காத்திட்டிருக்கு மேற்கொண்டு என்ன செய்யணுமோ அதிலதான் கவனம் செலுத்தணும். நிறைய லாபம் காத்திட்டு இருக்கு. வாஸ்தவம்தான். இறந்தகாலம் முக்கியந்தான். இல்லியா?' அவனது பார்வை விஜயை ஊடுருவியது. 'நாம கடந்தகாலத்திலிருந்து பாடம்படிச்சி எதிர்காலத்த உருவாக்கணும்.'

அவன் என்ன பேசிக்கொண்டிருக்கிறான் என்று விஜய்க்குப் புரியவில்லை. உளறல் மாதிரி தெரிந்தது. ஆனால் முன்னாடி உட்கார்ந்திருக்கும் இந்த மனிதன் உளறும் ரகமல்ல. துல்லியம், திட்டம், கணக்கு போட்டு நகர்த்தும் அசைவுகள் ஆகியவற்றைச் செய்யும் ஒரு மனிதனாகவே அவன் விஜய்க்குத் தோன்றினான். எதுவும் உணர்ச்சிவேகத்தில் செய்வதில்லை.

'கூப்பர் சொன்னான், நீ ஏதோ ஒரு பாட்டை உடைச்சி புரிஞ்சிக்கிட்டியாமே,' என்று சொல்லிய வான் குளூக், விஜயின் குழப்பத்தைக் கண்டுகொள்ளாமல், மேலும் தொடர்ந்தான். 'குனார் பள்ளத்தாக்கில என்ன இருக்கு?' அவன் முன்னால் சாய்ந்து, விஜயின் கண்களுக்குள் எட்டிப் பார்த்தான். 'சொல்லு.'

இந்த உரையாடலில் முதன்முதலாக இப்போதுதான் இந்த ஐரோப்பியன் விஜய்க்கு பரிச்சயமான விசயத்தைப் பேசியிருக்கிறான். ஆனால் இப்போது கூட, விஜயிடம் விடை தயாராக இல்லை.

'எனக்குத் தெரியாது,' என்று விஜய் தோள்குலுக்கினான். 'அந்தப் பாட்டு ஜலாலாபாத் பத்தி விவரிக்கிற மாதிரி மட்டுந்தான் தெரியது. இந்தப் பகுதியில அலெக்ஸாண்டர் இருந்ததனால, குனார் பள்ளத்தாக்கா இருக்கும் என்பது வெறும் ஊகம்தான்.' குனார் பள்ளத்தாக்கில் ரகசியம் இருக்கின்ற சாத்தியத்தைத் தானும் தன் நண்பர்களும் எப்படி அடைந்தோம் என்பதை அவன் விளக்கினான்.

வான் குளூக் விஜயின் வார்த்தைகளை அசைபோட்டான். 'அதனால, உனக்குச் சரியான இடம் தெரியாது. நம்ம தேடல் இங்கதான் முடியுதுன்னு நீ நம்பற.'

பதில்சொல்ல விஜய் தயங்கினான். இந்த வாய்ப்பைத்தான் அவன் எதிர்பார்த்திருந்தான். 'நீங்க என்ன தேடுறீங்கன்னு எனக்குத் தெரிஞ்சா உதவியாய் இருக்கும். இப்போதைக்கு, நாங்க பாட்டுகள விளங்கிக்கொள்ள முயற்சிக்கிறோம்; அவ்வளவுதான்; அது எதைப் பத்தி

சொல்லுதுன்னு தெரியாது. அலெக்ஸாண்டருக்குத் தெரியும். எங்களுக்குத் தெரிந்தால், அந்தப் பாட்டுகள இன்னும் வேகமா விளங்கிக்கொள்ள முடியும்.' இழப்பதற்கு ஒன்றுமில்லாத மனிதனின் எதிர்ப்புணர்வோடு, விஜய் வான் குளூக்கின் நிலைகுத்திய பார்வைக்குப் பதில்பார்வை பார்த்தான். அவனும் ராதாவும் அழியப் போகிறார்கள் என்று பேட்டர்சன் சொல்லியிருந்தார். அப்படி அவன் சாகப்போகிறதாக இருந்தால், அதுக்கு முன்னாடி விடைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

வான் குளூக் சிந்தனைவயப் பட்டான். இந்த மாதிரியான தைரியத்தை அவன் விஜயிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. இறுதியில் அவன் தலையசைத்தான். புன்னகைத்தான்; அவன் கண்களுக்குள் செல்லாத ஒரு குரூர புன்னகை. 'ஒருவேளை நீ சொல்றது சரியா இருக்கலாம். உனக்கு இன்னும் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சா, நீ எங்களுக்குப் பிரயோஜனமா இருப்ப.'

என்ன சொல்லலாம்; எதை இன்னும் ரகசியமா வைத்துக்கொள்ளலாம் என்றெல்லாம் அந்த ஐரோப்பியன் மனதிற்குள் கணக்குப் போடுவது போல தெரிந்தது. விஜய் காத்திருந்தான்.

48

அலெக்ஸாண்டர் பற்றிய உண்மை

'நீ ஏற்கனவே அலெக்ஸாண்டர் பத்தின உண்மையில ஒரு பகுதிய கண்டுபிடிச்சிட்டேன்னு நினைக்கிறேன்,' என்று வான் குளூக் இறுதியில் சொன்னான். 'நிஜத்தில் அவரோட வாழ்க்கையைப் பத்தி நமக்குத் தெரிஞ்சதெல்லாம், பலநேரங்கள்ல திரிக்கப்பட்ட உண்மைகள அடிப்படையா கொண்டது. எழுத்தாளர்களோட சார்பு, நோக்கங்கள் அல்லது தத்துவம் இதுக்கேத்தாற்போல உண்மைகள் திரிக்கப்பட்டிருக்கு. அதனாலத்தான், அந்த மனுசன பத்தி சரித்திரபூர்வமான சரியான உண்மை எது, கீர்த்திமயமாக்கப்பட்ட புனைவு எதுன்னு கண்டுபிடிக்கறது நமக்கு சிரமமா இருக்கு.'

தன் கருத்துக்களை விஜய் ஒத்துக்கொள்வதற்காக அவன் காத்திருந்தான். விஜய் தலையசைத்தவுடன், அவன் தொடர்ந்தான். 'அங்கதான் கனசதுரம் போன்ற கலைப்பொருட்கள் உபயோகமா இருக்கு. அலெக்ஸாண்டரின் வீரச் செயல்கள பத்தி எவனோ ஒரு தீவிரமான ரசிகன் அல்லது ஜால்ரா அடிப்பவன் சொன்ன வெறும் கட்டுக்கதைன்னு புறக்கணிக்கப்பட்ட கதைகளோட சில பகுதிகள சரியானதுதான்னு நிரூபிக்கிறதுக்கு கலைப்பொருட்கள் உதவிசெய்யது.'

விஜய் மீண்டும் தலையசைத்தான். அவர்களின் ஆராய்ச்சிக்கு அலைஸ் எழுப்பியிருந்த ஆட்சேபனைகள் விஜய்க்கு ஞாபகம் வந்தன. அலெக்ஸாண்டர் பற்றிய ஆவணங்களில் நிறைய குப்பை இருக்கு; அதனால் அவரைப் பற்றி எழுதப்பட்ட எல்லாவற்றையும் நம்புவது கடினம்.

வான் குளூக் கையை நீட்டினான். 'கியூப் கொடு'

விஜய் கனசதுரத்தை அவனிடம் கொடுத்தான். அதை அவன் உலோகத்தட்டில் பொருத்தியதை விஜய் கவனித்தான். சரியாகப் பொருந்தியது.

'அலெக்ஸாண்டர் கதைகள்ல எது உண்மை, எது பொய்ன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?' விஜய் ஆர்வமானான். இந்த மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எது ஆதிமூலம்?

'உனக்குத் தெரிஞ்சிக்கணும்னு ஆசையில்லியா?' வான் குளூக் திமிராகப் புன்னகைத்தான். 'ஆனா நான் உனக்கு ஒண்ணு சொல்றேன். ஒலிம்பியாஸ் எங்க அமைப்பில ஒரு அங்கத்தினர். அவளுக்கு இந்த கியூப்பைப் பத்தி தெரியும். ஏன்னா அத உண்டாக்கினதே எங்க அமைப்பின் முதல் உறுப்பினர்கள்தான்.'

விஜய் அதிர்ந்தான். வான் குளூக் சொல்வது உண்மையென்றால், அந்த அமைப்பு எதுவாக இருந்தாலும் அது, அவர்கள் கடந்த வருடம் கண்டுபிடித்த மாவீரன் அசோகர் ஏற்படுத்திய சகோதரத்துவ அமைப்பைவிட, மிகவும் தொன்மையானதுதான்.

விஜயின் முகத்தில் தெறித்த அதிர்ச்சியைப் பார்த்து வான் குளூக் சந்தோசமடைந்தான். 'அப்படித்தான் எங்களுக்குத் தெரிந்தது, சிந்துநிலத்தில நடந்த அலெக்ஸாண்டரோட தேடல்படலம் யாரோ சில புளுகர்கள் அடித்துவிட்ட கதையல்ல என்று. அவர் விரும்பிய ஏதோ ஒன்றை தேடுதற்கு அவர்க்கு வழிகள் கொடுத்ததே நாங்கள்தான்.'

இந்தக் கருத்தில் ஒரு பலகீனமான கண்ணியை விஜய் கண்டுபிடித்தான். 'அறிவுப்பூர்வமானதா தெரியலயே,' என்று அவன் திருப்பி அடித்தான். 'அவரு கண்டுபிடிச்ச ரகசியத்த நீங்க இப்ப தேடுறீங்க. ஆனா, அத கண்டுபிடிக்கிறதுக்கான வழி, நீங்க சொன்னதுபோல, 2,000 வருசத்துக்கு முந்தியே உங்களுக்குத் தெரிந்சிருக்குன்னா, அதை நீங்க அப்போதே கண்டுபிடிச்சிருக்கலாமே. ஏன் அத அலெக்ஸாண்டர்க்கு தாரை வார்த்து கொடுத்து, உலோகத்த மறைக்க அவர அனுமதிச்சி, இப்போ 2000 வருசம் கழிச்சி அத தேடிக்கிட்டு இருக்கீங்க?'

வான் குளூக்கின் முகம் இருண்டது. 'அதுக்குக் காரணம் ஒலிம்பியாஸ் எங்கள தந்திரம்செஞ்சு ஏமாத்திட்டாள். அலெக்ஸாண்டருக்கு முன்னாடியே இந்த ரகசியம் பல்லாயிரம் வருசங்களா பாதுகாக்கப் பட்டிச்சி. ஞாபத்தில் வைத்துக்கொள். இது கடவுள்களின் ரகசியம். சிந்துநிலக் கடவுள்கள். ரகசியத்த காப்பாத்தவே இந்த கனசதுரமும் உலோகத்தட்டும் உருவாக்கப் பட்டிச்சி. வேத முனிவர்களோட சின்ன சகோதரத்துவக் குழுவும் ஏற்பட்டிச்சி. அவங்களால் மட்டுந்தான் ரகசியத்த அடையமுடியும். ஒலிம்பியாஸ் அவங்கள்ல ஒருத்தர தன் சபைக்குக் கூப்பிட்டு, அமைப்பின் தோற்றத்த

பத்தி விசாரிக்கிற மாதிரி பேசினாள். எப்படியோ அவர்கிட்ட இருந்து அந்த ரகசியம் இருக்கிற இடத்தப் பத்தின தகவல கறந்துட்டா. அந்த விதிமீறலுக்காகத்தான், அலெக்ஸாண்டர் செத்தவுடன் அவளுக்கு கொடுத்த பாதுகாப்ப அமைப்பு விலக்கிடுச்சி. அமைப்பு மட்டும் தொடர்ந்து பாதுகாப்பு கொடுத்திருந்திச்சின்னா, அவள் அப்படி அவமானப் பட்டு செத்திருக்க மாட்டாள்.'

'நீ சார்ந்திருக்கிற அமைப்பு என்ன அமைப்பு?' விஜய் இன்னொரு விசாரணைத் தடத்தைத் திறந்தான்.

வான் குளூக் தலையாட்டினான். 'நான் ஏற்கனவே போதுமான அளவுக்கு உனக்குச் சொல்லிட்டேன். நாங்க மனிதகுலம் மாதிரி ரொம்ப தொன்மையானவர்கள்னு உனக்கு தெரிஞ்சா போதும். ஒருகாலத்தில எங்கள பத்தி உலகம் முழுக்க தெரியும்; எங்கள கண்டு பயந்தாங்க. ஆனால் மறைமுகமாகவும், மனுசங்க மனசிலிருந்து விலகி தள்ளிநின்னு அதிகாரத்தையும் செல்வாக்கையும் உருவாக்கிக் கொள்ளலாம்னு நாங்க முடிவெடுத்தோம்.'

தொடர்வதற்கு முன் சற்று இடைவெளி விட்டான். 'எப்படியோ, அலெக்ஸாண்டர் ரகசியத்த கண்டுபிடிச்சார். ஆனால் விஷயங்கள் தப்பிப்போய் அவரு செத்துப் போனார். உனக்கு வரலாறு தெரியும்தானே. அவரது பிண ஊர்வலத்த தாலமி கடத்திக்கொண்டு போயிட்டாரு. பதப்படுத்தப்பட்ட அவரோட பிணம் அலெக்ஸாண்ட்ரியாவில புதைக்கப்பட்டிச்சி. அது நாலாம் நூற்றாண்டுவரை அங்கதான் இருந்திச்சி.'

'அப்போதுதான் அது காணாம போச்சி,' என்று விஜய் முணுமுணுத்தான், தான் செய்த ஆராய்ச்சியை ஞாபத்தில் வைத்துக்கொண்டு.

'அது காணாம போகலை,' என்று வான் குளூக் நம்பிக்கையுடன் சொன்னான். 'கிறிஸ்துவம் உலகம் முழுக்கப் பரவிட்டு இருந்திச்சி. அதனோட அறிகுறிகள பாத்தோம். கிறிஸ்துவர் அல்லாத கடவுள்கள் சம்பந்தமா எது இருந்தாலும் அத அழிச்சாங்க. அலெக்ஸாண்டர கடவுளா நினைச்சி கும்பிட்டவங்களும் இருந்தாங்க. சீக்கிரமே அவரோட நினைவுச்சின்னமும் பிரேதமும் அழிஞ்சுப் போயிடும். அதனால் நாங்களே இந்தப் பிரச்சினையை எங்க கையில எடுத்துக்கிட்டோம். அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து பிணத்த எடுத்து இன்னொரு ரகசியமான இடத்தில புதைச்சோம். யாருக்கும் அந்த இடம் தெரியாது. ஆனாலும், அந்த நேரத்தில அமைப்புக்குத் தெரியாம, ஒரு

வரைபடம் உருவாச்சி. இத்தனை நூற்றாண்டுகளா அது எங்கோ மறைக்கப்பட்டிருந்திச்சி. சில பத்தாண்டுகளுக்கு முன்புதான் நாங்க எதேச்சையா வரைபடத்த கண்டு பிடிச்சோம். பிணத்த தோண்டியெடுத்தோம். அது எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமா அமைஞ்சிடுச்சி. அலெக்ஸாண்டர் கண்டுபிடிச்ச ரகசியம் நூற்றாண்டுகள் கடந்து வெறும் கட்டுக்கதையா மாறிடுச்சி. அது சாத்தியம்ன்னு நாம நம்பறதே இல்ல. அதனால் நாங்க பிணத்த சோதிச்சோம். கட்டுக்கதை நிஜக்கதைன்னு நாங்க கண்டுபிடிச்சோம். கடவுள்களோட ரகசியம் கட்டுக்கதயே இல்ல. உண்மையிலே அலெக்ஸாண்டர் அத கண்டுபிடிச்சிருந்தார். அப்போதுதான் அந்த ரகசியத்த கண்டுபிடிக்கணும்னு நாங்க தீர்மானிச்சோம். ஆனா எங்களுக்கு கியூப்பும், உலோகத் தட்டும் கிடைக்கலை. கடைசியா அது ரெண்டும் ஒலிம்பியாஸை சந்திச்ச முனிவர்கிட்ட இருந்திச்சின்னு நாங்க தெரிஞ்சுக்கிட்டோம். ஆனா அவரு அதுக்கப்புறம் மாயமா மறைஞ்சி போனார். அவர்க்கு என்ன ஆச்சுன்னு யாருக்கும் தெரியல. ஒலிம்பியாஸோட கல்லறையைக் கண்டுபிடிக்கிற சாத்தியத்த பத்தி நாங்க கேள்விபட்டவுடனே, கியூப்பும் உலோகத்தட்டும் அவள்கூடவே புதைக்கப்பட்டிருந்திக்க வாய்ப்பு இருக்கும்ன்னு நாங்க புரிஞ்சுக்கிட்டோம்.'

'அதனால நீங்க உங்க அகழ்வாராய்ச்சிக்கு கூப்பரை சேத்துக்கிட்டு, கலைப்பொருள்கள மீட்டு கொண்டுவர்றதுக்கு ஸ்டாவ்ரோஸையும் உங்க பக்கத்தில கொண்டுவந்தீட்டீங்க.'

'சரியா சொன்ன. இப்ப உனக்குப் புரியது.'

விஜய் முறைத்தான். 'எங்களுக்கு கிடைச்ச தகவல்ல இருந்த இடைவெளிகள இது சரிபண்ணிடுச்சி; நடந்திட்டு இருக்கிற சமாச்சாரங்களுக்கு விளக்கமும் கிடைச்சிடுச்சி. அகழ்வாராய்ச்சிக்கும், நீங்க நடத்துற மருத்துவ பரிசோதனைகளுக்கும் இருக்கிற தொடர்புகள நான் ஊகிக்க ஆரம்பிச்சிட்டேன். அலெக்ஸாண்டரோட பிணத்தில நீங்க நடத்தின சோதனைகள்... அதில கிடைச்ச விளைவுகள் சரிதானான்னு பாக்குறதுக்கு மருத்துவ பரிசோதனைகள் தேவைப்பட்டிச்சி. சரியா?'

வான் குளூக் மீண்டும் சிரித்தான். 'கிட்டத்தட்ட ஆனா பாதிதான் சரி. மருத்துவ பரிசோதனைகள் தேவைப்பட்டிச்சி. ஏன்னா அலெக்ஸாண்டரோட பிணத்துமேல நாங்க நடத்தின சோதனையில நாங்க எதிர்பாராத ஒரு கண்டுபிடிப்பு கிடைச்சது. உங்களோட பெரிய

இதிகாசமான மகாபாரதத்தில இருந்த ஒரு தொன்மக்கதையை அடிப்படையா வச்சித்தான் அந்தக் கியூப் உருவாக்கப் பட்டிச்சி. அலெக்ஸாண்டர் என்ன கண்டுபிடிச்சாரோ அதப்பத்தி தெளிவா விவரிக்கிற கதை ஒண்ணு அந்தக் காப்பியத்தில இருக்கு. மேலும் நாங்க அவரோட பிணத்தில நடத்தின சோதனைகளயும் அது விளக்குது. அந்தச் சோதனைகளோட ரிசல்ட்களைப் புரிஞ்சிக்கிறதுக்கு, உயிரோடு இருக்கிற ஜனங்க மேல பரிசோதனைகள நடத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இருந்திச்சி.'

விஜய் மூளையைக் கசக்கினான். மகாபாரதத்தில் இருக்கும் ஒரு தொன்மக்கதை மருத்துவ பரிசோதனைகளுக்கு இட்டுச் சென்றிருக்கிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தி செத்துப்போன ஒரு மனிதனின் பிணத்தின் மீது நடத்தப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் எழுந்த ஒரு கண்டுபிடிப்புக்கு அந்தத் தொன்மம் வழிவகுத்திருக்கிறது. என்ன கதை அது? அவனால் ஒன்றும் யோசிக்க முடியவில்லை.

'நீங்க எத சொல்றீங்கன்னு எனக்குத் தெரியல,' என்று அவன் இறுதியில் சொன்னான்.

'அந்த தொன்மத்துக்குப் பெயர் 'கடலைக் கடைதல்,' அல்லது சரியாகச் சொன்னால், சமுத்திரமந்தன்.' வான் குளூக்கின் சமஸ்கிருத உச்சரிப்பு முழுமையாக இருந்தது. ஆனால் விஜய் அதை அவதானிக்கவில்லை. அவனது கவனம் முழுவதும், ஆதிகாவியத்திலிருந்த புகழ்பெற்ற அந்தக் கதையைப் பற்றி இருந்தது.

'ஆனால்... எப்படி?' அவன் குழம்பினான். 'அந்தத் தொன்மம் வெறும் புனைவுதான்; மலையை மத்தாக்கி, வாசுகியைக் கயிறாக்கி கடலைக் கடைஞ்சி அம்ருதம் எடுத்த கதை; அதில ஒன்றும் விஞ்ஞானம் இல்லியே?'

வான் குளூக் புன்னகைத்தான் அனுதாபத்துடன். 'ஒவ்வொருத்தரும் மகாபாரதத்த வெறும் காவியக்கவிதையா அல்லது புனைவாத்தான் பாக்குறாங்க. அப்படியே பழகிட்டாங்க. அதனால அதுக்குள்ள விஞ்ஞானம் பதிஞ்சிருக்குன்னு நம்ப சிரமப் படுறாங்க.'

கிளர்ந்த ஆர்வத்தை அடக்க முயன்று விஜய் காத்திருந்தான். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக மகாபாரதத்தின் ஆழத்தில் ஒளிந்திருந்த இன்னொரு ரகசியத்தைப்பற்றி தான் தெரிந்துகொள்ளப் போகிறோம் என்று அவன் அறிந்துகொண்டான்.

'நான் உனக்கு விளக்குகிறேன்,' என்று சொல்லிவிட்டு வான் குளூக் முன்னால் சாய்ந்து ஆரம்பித்தான்.

49

ஐந்தாவது நாள்
ஒரு மர்மத்தின் தரிசனம்

தன்னைப் பார்த்து சக்ஸேனா புன்னகைக்கும் காட்சியில் ஆச்சரியப்பட்டு ராதா முழித்தாள். அவர் முன்னறிவிப்பு இல்லாமல் அவளின் சிறையறைக்குள் வந்தார்; மருத்துவ மையத்தைச் சுற்றி நடைப்பயிற்சிக்காக அவளை அழைத்துச் செல்வதாக அவர் சொன்னார்.

'உன்ன நல்லாப் பாத்துக்கும்படி எனக்கு உத்தரவு வந்திருக்கு,' என்று அவர் அவளிடம் மென்மையாகச் சொன்னார். 'கூப்பர் உன்ன இங்க கொண்டுவந்ததில கைமேல பலன் கிடச்சிருக்கு. திட்டத்தில அவரோட பங்கு வேலை கெடுமுடியறதுக்கு முன்னாடியே முடிஞ்சிடும் போல தெரியது. அதாவது, என்னோட வேலையும் வேகமாக முடிஞ்சிடும்.'

அவர் அவளை அழைத்துக்கொண்டு சிறையறையை விட்டு வெளியேறி, அவள் இதுநாள்வரை சென்றிராத தாழ்வாரங்களின் பின்னல் வழியாகச் சென்றபோது, அவள் அவர் சொல்லியிருந்த வார்த்தைகளை அசைபோட்டாள். கண்ணாடிச் சுவர்கள்கொண்ட ஒரு செவ்வக அறையைச் சுற்றியிருந்த மேல்மாடத்திற்கு அவர்கள் வந்தபோது, அவள் தன் மனதிலிருந்து எல்லா சிந்தனைகளையும் துரத்திவிட்டாள். அறைக்குள் அதிபிரகாசமான மின்விளக்குகள், வெளிமாடங்களின் விளக்குகளோடு இணைந்து பரந்தவெளி முழுக்க வெளிச்சம் பரவியது. செவ்வக அறையின் நான்குபக்கங்களிலும் பால்கனி தொடர்ந்தது. இந்தக் கட்டிடத்தில் எட்டு மாடிகள் என்று அவள் எண்ணினாள்.

கட்டிடத்தின் பிரம்மாண்டத்தைப் பிரமித்துப் பார்த்தாள். அவளது சிறையறையிலிருந்து தாழ்வாரம் வழியாக கழிவறைப் பகுதிவரை அவளது நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மற்ற கைதிகளுக்கு

பொதுக்கழிவறைகளும், குளியலறைகளும் இருந்ததை அவள் கவனித்த போது, கட்டிடம் இவ்வளவு பெரியதாக இருக்கும் என்று அவள் கற்பனை செய்து பார்த்ததில்லை.

'இருநூற்றுஐம்பது சிறைகள்,' என்றார் சக்ஸேனா, அவள் வாய்பிளந்ததைப் பார்த்து. 'இங்கே எட்டுத் தளங்கள் தரைக்குக் கீழே இருக்கு. நீ முன்னாடி பார்த்தியே. ரெண்டு தளங்கள் தரைக்கு மேலே. வெளியே இருந்து பாக்கும்போது இது ஒரு சின்னக் கட்டிடமா தெரியும்; என்னவகையானதுன்னு தெரியாது. இங்க இருக்கிறதெல்லாம் யாருக்கும் தெரியாது.'

'கூப்பர் யாரு?' என்று ராதா கேட்டாள், ஆரம்பக்கட்ட ஆச்சரியத்தைக் கடந்து.

'உனக்குத் தெரியாதா? அந்த அமெரிக்கன் தொல்பொருள் ஆராய்ச்சியாளன் உனக்குச் சொல்லியிருந்திருப்பான்னு நினைச்சேன். அவளோட அகழ்வாராய்ச்சிக்கு அவன்தான் இணை இயக்குநர். பீட்டர் கூப்பர். நாங்கதான் அவன அங்க கொண்டு வச்சோம்.'

இது ராதாவுக்கு இன்னொரு அதிர்ச்சி. இந்த மனிதர்களுக்கும் கிரீஸில் அலைஸ் பெற்ற அனுபவங்களுக்கும் சம்பந்தம் இருக்கு. ஆனா அது என்ன? 'நாங்க'ன்னா யாரு?'

அவளுக்கு ஒரு சிந்தனை உதித்தது. அவர்கள் மியூசியத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது தான் விஜயோடு கொண்ட உரையாடல் அவளுக்கு ஞாபகம் வந்தது. யூமனியஸ் குறிப்பேட்டைப் பற்றியும், 'கடவுள்களின் ரகசிய'த்தைத் தேடிய அலெக்ஸாண்டரின் முயற்சியைப் பற்றியும் விஜய் அவளுக்குச் சொல்லியிருந்தான். சக்ஸேனாவின் ஆபரேசனுக்கும் கிரீஸ் அகழ்வாராய்ச்சிக்கும் இடையில் இருந்த தொடர்பு அதுதானா?

'கனசதுரத்தில இருந்த புதிர்களின் ரகசியத்தை கண்டுபிடிக்க நீங்க முயற்சி செஞ்சிட்டு இருக்கீங்க?' என்று அவள் தன் சிந்தனைகளுக்குக் குரல்வடிவம் கொடுத்தாள், அந்தக் குறிப்பேட்டைப் பற்றி எதுவும் சொல்லாமல். அது ரகசியமாகவே இருந்தால், சாக்ஸேனா அதைத் தெரிந்துகொள்வதை அவள் விரும்பவில்லை.

சக்ஸேனா ராதாவை அளவெடுத்துப் பார்த்தான். 'உனக்கு நிறைய தெரிஞ்சிருக்கு நீ சொல்றது சரிதான். உலகத்திலே இருக்கிற ஒரு பெரிய ரகசியத்தோட முடிச்ச அவிழ்க்கிறதுக்கு நான் வேலை செஞ்சிட்டிருக்கேன். யாராலும் புரிஞ்சிக்க முடியாத அளவுக்கு, உலகத்த

அமைப்பு ஆள்றதுக்கு அது உதவும். நாங்க ஆட்டிவைப்போம்; ஜனங்க பொம்மைகள் மாதிரி எங்க இஷ்டத்துக்கு ஆடுவாங்க.'

ராதாவின் ஆர்வம் தூண்டப்பட்டது. அவள் நிறைய தெரிந்துகொள்ள வேண்டும். எதைப்பற்றி சக்ஸேனா உளறுகிறான்? அவனை மேலும் உசுப்பேடுத்திவிட அவள் முடிவுசெய்தாள். 'நீங்க அப்படி சொல்றீங்களா?' என்று அவள் நக்கலுடன் சொன்னாள். 'நான் பாக்கிறதெல்லாம் ஜனங்கள சாவடிக்கிற வெறும் மருத்துவ பரிசோதனைகள் தானே. ஒவ்வொருத்தரும் செத்துப் போறாங்க. அதில என்ன பெரிய ரகசியம்? அமைப்பு என்ன செத்த ஜனங்க இருக்கிற உலகத்தையா ஆளப்போகுது? அமைப்ப மட்டும் ஒன்றும் செய்யாம, உலகத்தையே துடைச்சிப் போடும் ஒரு வைரஸையா நீங்க கண்டுபிடிச்சிருக்கீங்க? யாருமே இல்லன்னா நீங்க யார ஆள்வீங்க?'

சாக்ஸேனா அவளை வெறித்துப் பார்த்தார். 'நாங்க ஜனங்கள கொல்லப் போறதில்ல,' என்றார் அழுத்தமாக. 'உயிர் கொடுக்கப் போறோம்; உயிர் எடுக்க அல்ல.'

ராதா அவரைப் பார்த்தாள். அவளது முகபாவம் நம்பிக்கையின்மையைக் காட்டியது. 'அமைப்பின் திட்டத்தில நீங்க முக்கியமானவர்னு நம்புறீங்களா? ஆனால் நீங்க செஞ்சிக்கிட்டு இருக்கிறதெல்லாம் தோல்வியில முடியற வெறும் மருத்துவ பரிசோதனைகள்தானே.'

அவள் மீது ஏற்பட்ட கோபத்தை அவரது முகம் வெளிக்காட்டியது. தான் சாதிக்க எடுக்கும் முயற்சிகள்பற்றி அவர்க்கு பெரியதொரு கர்வம் உண்டு. கிட்டத்தட்ட வெற்றியின் அருகில் அவர் இருக்கிறார். தனக்குரிய ஓர் அங்கீகாரத்திற்காக அவர் ஏங்கினார். பணித்திட்டம் முடியும்வரை அமைப்பு அவரை அங்கீகரிக்கப் போவதில்லை. ஆனால் அவர் நிறையவே சாதித்துவிட்டார்! இங்கே ஒரு பெண், அவர் செய்துகொண்டிருக்கிறதை அறிந்துகொள்ளாமல், அவரின் சாதனைகளைக் குறைத்துப் பேசுகிறாள்! அவரால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'நான் சொல்றத நீ நம்பலியா?' என்று அவர் ராதாவிடம் சவாலாகச் சொன்னார். 'இது வெறும் பரிதாபமான வைரஸ் பத்தின மருத்துவ பரிசோதனைகள்னு நினைச்சியா? நீ...'

ராதா இடைமறித்தாள். 'நீங்க உங்களோட சின்ன திட்டத்தை ரொம்ப பெரிசா சொல்றீங்க. ஏதோ அதிமுக்கியமானதுன்னு

நினைக்கிறீங்க. ஆனா அது அப்படியல்ல; நீங்க சொல்ற ஒரு வார்த்தயகூட நா நம்பலை.'

'அப்படியா நல்லது.' சக்ஸேனாவுக்கு ஆத்திரம் வந்தது. அங்கீகாரத்திற்கான, புகழப்படுவதற்கான ஏக்கமும் கட்டாயமும் அவரை மீறின. இந்தப் பெண் எங்கேயும் போய்விடப் போவதில்லை. அவளை யாரும் கண்டுபிடிக்கவும் வழியில்லை. 'என்னோட வா. நான் உனக்கு நிரூபிக்கிறேன்.'

அவர் அவளை மின்னேணிகள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். கட்டிடத்தின் அடிப்பகுதிக்குச் செல்ல பொத்தானை அழுத்திவிட்டு, அனுமதி அட்டையை அழுத்தினார். அந்த அதிவேக மின்னேணி படுதுரிதமாக கீழிறங்கியது. அவர்கள் சேருமிடத்தை அடைந்தனர்.

அமைப்பைப் பற்றியும், ஒலிம்பியாஸ் எப்படி கியூபைப் பெற்றாள் என்பது பற்றியும், அவள் எப்படி தன் மகன் அலெக்ஸாண்டரை பாரசீகப் பேரரசைச் தாண்டி சென்று அவனது லட்சியதை அடையும்படி வற்புறுத்தினாள் என்பது பற்றியும், அவர் அவளுக்குச் சுருக்கமாகச் சொன்னார். மின்னேணிக் கதவுகள் திறந்தவுடன், இரண்டுபக்கமும் கதவுகள் வரிசையாக நிற்கும் ஒரு நீண்ட வெள்ளைத் தாழ்வாரம் தெரிந்தது. பெரும்பாலான கதவுகள் மூடியிருந்தன; ஆனால் சில திறந்திருந்தன; உள்ளே பரிசோதனைக்கூடங்கள் இருந்தன; எல்லாவிதமான கருவிகளும் உபகரணங்களும், கணினிகளும் குவிந்து கிடந்தன; வெள்ளைக் கோட்டில் தொழில்நுட்ப வினைஞர்கள் கூடத்தை இயக்கிக்கொண்டிருந்தார்கள்.

'இதுதான் எங்க பணித்திட்டத்தோட ஆபரேஷன்களின் நரம்புமையம்,' என்று சக்ஸேனா விளக்கினார். 'ஃபிரீமனின் ஆபரேஷன் இரண்டு தளங்களுக்குக் கீழே நடக்குது.' அவர் ராதாவை தாழ்வாரத்தின் முனையில் இருந்த அலுவலகத்திற்கு இட்டுச் சென்றார். அங்கே ஒரு மூலையில் ஒரு பெரிய மேஜையும், தோல்நாற்காலியும் போடப்பட்டிருந்தன. எதிர்சுவரை ஒட்டி துருப்பிடிக்காத எஃகால் ஆன பணிமேசைகள் இருந்தன. நெடிதுயர்ந்த புத்தகப் பேழை ஒன்று மேஜையின் ஒரு பக்கமாய் நின்றது. அதன் அடுக்குகளில் மருத்துவப் புத்தகங்கள் கனகனமாய் நிரம்பி வழிந்துகொண்டிருந்தன. மேஜையில் ஒரு *LCD* திரையும், கீபோர்டும், மௌஸும் இருந்தன.

'உட்கார்,' என்றார் சக்ஸேனா, தன் மேஜைக்கு எதிராகப் போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டி.

அவர் தன் தோல் இருக்கையில் அமர்ந்தார்.

சற்றுநேரம் கழித்து, அந்த நுண்ணுயிரியல் விஞ்ஞானி கணினித்திரையைச் சுழற்றி அவள் பக்கமாகத் திருப்பினார். பிரமித்த பார்வையாளர்களுக்கு தன் ஆராய்ச்சியைச் சமர்ப்பிக்கப்போகும் ஒரு விஞ்ஞானியின் பாணியில் அவர் செயல் இருந்தது.

'நீங்கல்லாம் நினைக்கிறீங்க, நாங்க என்னமோ நுண்ணுயிரை உயிரியல் தீவிரவாதத்திற்காக துஷ்பிரயோகம் செய்றோம்னு,' என்று அவர் தற்பெருமையுடன் புன்னகைத்தார். 'அது உண்மைக்கு ரொம்ப தூரமானது. உனக்கே புரியும். நிஜம் வேறுமாதிரியானது. நாங்க ஜனங்கள கொல்ல விரும்பல. அவங்கள நோயிலிருந்து காப்பாத்தத்தான் விரும்புறோம்.'

'நான் இத நம்பணும்னு நீங்க எதிர்பாக்கிறீங்களா?' என்று அவள் பரிகசித்தாள். நீங்களும், உங்க ஆட்களும் அவ்வளவு பெரிய ரத்தக்களறிய உருவாக்கிட்டு, இதுக்கெல்லாம் காரணம் உங்களோட மேலான இலட்சியம்னு நான் சொல்லணும்னு விரும்புறீங்களா?'

'ஷ்... ஷ்...' என்று சக்ஸேனா அவளைக் கடிந்துகொண்டார். 'ஒவ்வொரு நாணயத்துக்கும் ரெண்டு பக்கம் உண்டு. நீ ஒருபக்கம்தான் பாத்திருக்க. கொஞ்சநாள் அல்ல, பல பத்துவருசங்களா நாங்க செஞ்சது எல்லாம் எங்க வெற்றிக்கு ரொம்ப முக்கியமானது. ஒரு பெரிய விஞ்ஞானச் சாதனையை செய்துமுடிக்கிற தறுவாயில இருக்கோம். நவீன தொழில்நுட்பம்கூட செய்ய முடியாத ஒரு பெரிய விசயம். ஆனா, இந்த மருத்துவப் புரட்சிக்குப் பின்னாடி இருக்கிற ரகசியம் பல்லாயிரக் கணக்கான வருசங்களா எங்ககிட்டதான் இருக்கு. ஆனால் புதிர்களும், தொன்மக் கதைகளும் அத திரைபோட்டு மூடிவச்சிருக்கு அப்படி ஒரு திரை இருக்கிறதே நிறையபேர்க்குத் தெரியாது. பின்ன எப்படி அத திறக்கறத பத்திபேசுவது?'

'நீங்க சொல்வது எனக்கு ஒண்ணும் புரியல,' என்று ராதா ஒத்துக்கொண்டாள்.

'நீ செய்தித்தாள்கள் வாசிக்கிறது உண்டா?'

ராதா சக்ஸேனாவை எரிச்சலோடு பார்த்தாள். ஆனால் அந்த நுண்ணுயிரியல் விஞ்ஞானி கேள்வியை நிஜமான தொனியிலே கேட்டார். 'ஆமாம். வாசிக்கிறதுண்டு,' என்று அவள் பதிலளித்தாள்.

'நல்லது. அப்படின்னா, இன்னைக்கு மருத்துவ உலகத்தில இருக்கிற ஒரு பெரிய பிரச்சினையைப் பத்தின செய்தியை நீ படிச்சிருக்கணும். பல

வருசங்களாகவே உருவாயிட்டு வர பிரச்சினை இது; ஊடகங்கள் சமீபத்திலதான் அதப் பிடிச்சுது. ஆண்டிபயாடிக்ஸை ஜனங்க வருசக்கணக்கா அதிகளவுக்கும் தவறாகவும் பயன்படுத்திக்கிட்டு இருக்காங்க. அதன் விளைவு? பாக்டீரியாக்கள் உருவாகி, மனுசகுலம் அறிந்த, உயிர்க்கொல்லி நோய்கள குணப்படுத்தறதுக்குக் கொடுக்கிற மருந்துகளையே எதிர்க்கும் சக்தி கொண்டதாக ஆகிவிட்டது. அதில சில பாக்டீரியாக்கள் பல மருந்து சிகிச்சையைக் கூட நாசமாக்குது. பெனிசிலின் கண்டுபிடிச்சதுக்கப்புறம், உயிர்க்கொல்லி நோய்கள்ல இருந்து மனுசன காப்பாத்தின ஆண்டிபயாட்டிக்ஸ், சீக்கிரமே பயனற்றுப் போயிடும்; அப்படியொரு அச்சுறுத்தல் இருக்குது. உதாரணமா, எலும்புருக்கி நோயைப் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள்ல இருந்து நம்ம காப்பாத்தின கவசம் பலகீனமாயிட்டே இருக்கு; சீக்கிரமே அது போயிடும். மருத்துவரீதியாகப் பேசினால், நாம் சரித்திரத்துக்கு முந்தைய காலகட்டத்துக்குப் போயிடுவோம். உயிர்க்கொல்லியான பாக்டீரியாத் தொற்றுக்கள குணப்படுத்தவே முடியாமல் இருந்த அந்த இருட்டு யுகத்துக்கு மறுபடியும் நாம போயிடுவோம்.'

ராதா மேலும் கீழும் தலையசைத்தாள். இந்தப் பிரச்சினை பற்றி உலக ஊடகங்களில் நிறைய பேசப்பட்டிருக்கிறது. பயங்கரமான எதிர்காலப் பிரச்சினையை சமாளிக்க, புதிய தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சிகள் நடக்கின்றன; புதிய சாதனைகள் தேடப்படுகின்றன. இந்தக் கும்பலின் நோக்கத்தைப் பற்றி அவள் புரிந்துகொள்ள ஆரம்பித்தாள்; அவர்கள் யாராக இருந்தாலும் சரி. 'ஆண்டிபயாக்டிக்ஸ்க்குப் பதிலான ஒரு மாற்றுவழியைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடுதான் அந்த பரிசோதனைகள் நடந்திச்சா?' அவர் சொன்ன அந்த மருத்துவ அச்சுறுத்தலை எதிர்த்து சக்ஸேனா எப்படி போராட உத்தேசித்திருக்கிறார் என்று இன்னும் அவளுக்கு விளங்கவில்லை.

சக்ஸேனா கீபோர்டில் ஒரு பட்டனைத் தட்டினார். திரையில் ஒரு முப்பரிமாண சித்திரம் மெதுவாகச் சுழன்றுவந்தது. அது ஒரு ஐகோசகீட்ரன் - இருபது பக்கங்கள் கொண்ட பலகோண உருவம். அவர் இன்னொரு பட்டனைத் தட்டினார். திரைப் பிளவுப்பட்டது. முதல் உருவத்தின் வலதுபக்கம், இன்னொரு உருவம் தோன்றியது; அதுவும் முப்பரிமாணம்; ஒழுங்கான வடிவங்கள் இல்லாத வட்டங்கள்.

'இடதுபக்கம் இருப்பது ரெட்ரோவைரஸ்,' சாச்ஸெனா விளக்கினார், முதல் உருவத்தைச் சுட்டிக்காட்டி. 'வலதில இருக்கிறது

ஒரு பாக்டீரியம்,' என்று சொல்லிவிட்டு அவர் மௌனமானார். 'ரெண்டுமே முன்பின் தெரியாத பாக்டீரியாக்கள்தான். 'ரெண்டுமே மாவீரன் அலெக்ஸாண்டரின் உடம்பிலிருந்து கிடச்சது.'

50

கிமு 328
பால்க், இன்றைய ஆஃப்கானிஸ்தான்

'எது உன்னை உறுத்திக்கொண்டிருக்கிறது, என் அருமை காலிஸ்தெனிஸ்?' என்று அலெக்ஸாண்டர் சரித்திர ஆசிரியனைப் பார்த்து கேட்டார். 'நல்லபடியாகத்தான் எல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. என் திட்டம் வேலைசெய்கிறது. நாம் பாரசீகத்தை ஜெயித்துவிட்டோம். பாக்ட்ரியா ஆதிவாசிகளை அடக்கிவிட்டோம். பலம்கொண்ட சோக்டியன் பாறையைக் கூட வென்றுவிட்டோம்.' அவர் காலிஸ்தெனிஸ் தோள்மீது கைப்போட்டார். 'என்னருமை சரித்திர ஆசிரியனே! நான் உனக்கு தந்த பெரும்பணியை வெற்றிகரமாக முடித்துவிட்டாய். மிகப்பெரும் பணி. என்னைக் கடவுளாக்கும் பணி!' சரித்திர ஆசிரியனின் தோளிலிருந்து தன்கையை எடுத்துவிட்டு, அவரையே பார்த்தார் அந்த இளம்வெற்றிவீரர். 'நீ கவலையோடு இருக்கிறாய். அதைப் பற்றி எனக்கு சந்தேகம் இல்லை. ஏனென்று என்னிடம் சொல். எனக்குத் தெரியவேண்டும்.'

காலிஸ்தெனிஸ் அலெக்ஸாண்டரின் பார்வையைப் பற்றிக்கொண்டான். ஆனால் தயங்கினான். க்ளிட்டஸின் விதி அவன் மனதில் இன்னும் அழியாமல் இருந்தது. பாரசீகத்தை வெற்றிகொள்ள மாசிடோனியாவிலிருந்து தான் உடன்சென்ற அலெக்ஸாண்டர் அல்ல இவர். அவர் ஓர் இளைஞர்; தன் தகப்பனாரின் கனவுகள் மீதும், வெற்றிகள் மீதும் ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டிமுடிக்க தீர்மானித்த இளைஞர் அவர். உலகத்திலே பெரும்பலம் வாய்ந்த சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போர்புரிவதற்கு தைரியமும், துணிச்சலும் கொண்டவர். ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் களைப்பையும் தாகத்தையும் மீறி, பயங்கரமான குளிரிலும் பட்டினியிலும் படைகள் தன்னைத் தொடர்ந்துவரும் அளவுக்கு ஓர் அதீதக்கவர்ச்சி உடையவர். அந்த அலெக்ஸாண்டருக்காக, காலிஸ்தெனிஸ் மிகவும் விருப்பத்துடன் தன்

உயிரைக் கூட துறந்திருப்பான்.

ஆனால் இன்று முன்னால் நிற்கும் அலெக்ஸாண்டர் வேறு மனிதர். வெற்றி அவரைத் திமிர்ப்பிடித்தவர் ஆக்கிவிட்டதா? முதலில் டாரியஸின் வீழ்ச்சி, பின் டாரியஸைக் கொலைசெய்து பாரசீகச் சிம்மாசனத்திற்கு ஆசைப்பட்ட பெஸாஸைப் பிடித்தது, இறுதியாக சோக்டியன் பாறையை வெற்றிகொண்டது, அதன்பின் பாக்ட்ரியன் ஆதிவாசிகள் மீதான ஆதிக்க உரிமையை எடுத்துக்கொண்டது. இவை போதும் ஒரு முதிர்ச்சியான மனிதனின் மனதைத் திருப்ப, மேலும் அலெக்ஸாண்டர் இன்னும் இளமையாகத்தான் இருக்கிறார்.

அல்லது மாசிடோனியாவை விட்டு வந்ததிலிருந்து அலெக்ஸாண்டர் தன்மனதிற்குள்ளே வைத்திருந்த ரகசிய பணித்திட்டமா? பாக்ட்ரியன் காடுகளிலும், ஆக்ஸஸ் நதியிலும் செய்யவிருக்கும் வேலைகளைப் பற்றி சில மாதங்களுக்கு முன்னால் அவர் பேசினாரே, அப்போது வரைக்கும் காலிஸ்தெனிஸ்க்கு அதுபற்றி தெரியாது. பெஸாஸ் ஹிண்டு குஷ் ஊடாக தப்பித்து ஓட தீர்மானித்தபோது, அலெக்ஸாண்டருக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது, தன் முழுப்படையையும் மலைகள் வழியாக கொண்டுசென்று பாக்ட்ரியாவுக்குள் நுழைவதற்கு.

அலெக்ஸாண்டரின் வெற்றிப் பயணத்தில் முதன்முதலாக ஏற்பட்ட தோல்வியையும் சேர்த்து எல்லாப் போர் நிகழ்வுகளும் நடந்துகொண்டிருந்த போது, காலிஸ்தெனிஸ் பாசறையைவிட்டு நாட்கணக்காக காணாமல் போனதை யாரும் கவனிக்கவில்லை. நிகழ்வுகள் அலெக்ஸாண்டருக்குச் சாதகமாக சதிசெய்தன.

ஒருவேளை நிஜமாகவே அவர் ஜீயஸின் மகனாக இருக்கலாம். அவனது தெய்வத்தந்தை அவனைத் தேடிக்கொண்டு இருக்கலாம். ஆனால் அதனால் அலெக்ஸாண்டருக்கு தன் இஷ்டப்படி செயல்படுவதற்கு உரிமையில்லை என்று காலிஸ்தெனிஸ் உணர்ந்தார்.

'அரசே,' என்று அவன் எச்சரிக்கையுடன் தொடர்ந்தான். 'நீங்கள் மாறிவிட்ட மனிதர்.'

'ஆம் நான் மாறிவிட்டேன்,' என்று அலெக்ஸாண்டர் சரித்திர ஆசிரியனின் முதுகில் சந்தோசமாகத் தட்டினார். இப்போதெல்லாம் பேரரசர் அளவுக்கதிகமாக ஒயின் குடிப்பதும், ஆனந்த மனநிலையில் சஞ்சரிப்பதும் வழக்கமாகிவிட்டது. ஆனால், அந்த மனநிலை வேகமாகவும் இருட்டாகவும் பழிவாங்கும் புத்தியோடும் எப்படி

மாறிவிடும் என்பதையும் காலிஸ்தெனிஸ் பார்த்திருக்கிறான்.

'ஒருவேளை, நாம் இதைப் பற்றி வேறு ஏதாவது நேரத்தில் பேசலாம்,' என்று அவன் சொன்னான், அலெக்ஸாண்டரின் கோபத்தைத் தூண்ட விரும்பாமல். தன் அரசரிடம் உண்மையான பதிலை அவரைக் கோபப்படுத்தாமல் சொல்லும் வழி அவனுக்குத் தெரியவில்லை.

மேலும் அவன் அவரிடம் பொய் சொல்ல விரும்பவில்லை. எழுத்துக்களில் வேண்டுமானால் அவன் அந்த மகா வெற்றிவீரரைப் பற்றி உண்மையும் புனைவும் கலந்து மிகைப்படுத்தி எழுதி அவரின் கீர்த்தியை பெருக்கி இருந்திருக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் அவன் தன் பேரரசரிடம் நேர்மையாகவே இருந்தான். அதுதான் அவன்வழி.

அலெக்ஸாண்டர் அவனின் கண்ணுக்குள் பார்த்தார். 'ம்,' என்று அவர் தன் மோவாயை சிந்தனையுடம் தேய்த்தவாறே சொன்னார்: 'என் சரித்திர ஆசிரியன் ஏதோ சொல்ல இருக்கிறான். எனக்குப் பிடிக்காது என்று அவன் நினைக்கும் ஏதோவொன்று.'

இவ்வளவு நுட்பமாய் அலெக்ஸாண்டர் இருப்பதை அவன் வெறுத்தான். அடிக்கடி அவர் அப்படித்தான் இருக்கிறார். அவன் ஒன்றும் சொல்லவில்லை.

'சொல்லு காலிஸ்தெனிஸ்,' அலெக்ஸாண்டர் தூண்டினார். 'நான் நிறைய ஒயின் குடித்திருக்கிறேன் என்று நினைக்கின்றாயா? நீ சொல்வதை என்னால் கேட்கமுடியாதா? நீ என் மரியாதைக்குரிய சரித்திராசிரியன். ஏன், நீ சொல்வதை நான் கேட்பது போல் நான் யார் சொல்வதையும் கேட்பதில்லை. பேசு, மனிதனே, சொல் எது உன்னை உறுத்திக்கொண்டிருக்கிறது என்று! நீ சொல்வதை நான் முழுதாய்க் கேட்கிறேன் என்று நான் வாக்குத் தருகிறேன், பேசு.'

தான் மாட்டிக்கொண்டதை காலிஸ்தெனிஸ் புரிந்துகொண்டான். மேலும் இந்த உரையாடலைத் தள்ளிப்போட்டால், அது அலெக்ஸாண்டரின் மனதிற்குள் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள் சரிதான் என்ற நேர்மறையான பதிலைத் தந்துவிடும்.

'நல்லது, என் பேரரசரே.' காலிஸ்தெனிஸ் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டான். 'உங்கள் அறிவிப்புதான் எனக்கு கவலையைத் தருகிறது. பாரசீக சடங்குகளைப் பயன்படுத்தி தங்களை ஒரு கடவுளாக மக்கள் வழிபட வேண்டும் என்று நீங்கள் பிரியப்படுகிறீர்களே, அதுதான்.'

அலெக்ஸாண்டர் சிரித்தார். சுவர்களில் பட்டுத்தெறித்தது சிரிப்பின் எதிரொலி. 'நீ அதற்கு உடன்படவில்லையா?'

காலிஸ்தெனிஸ் அமைதியாக இருந்தான்.

அலெக்ஸாண்டர் சிந்தனைவயப் பட்டார். 'நீ ஏன் அதைத் தவறென்று நினைக்கிறாய்?' என்று அவர் இறுதியில் கேட்டார். 'ஜீயஸ்-அம்மானின் மகன் நான் என்று உலகத்திற்கு அறிவித்தவனே நீதான். எனது தெய்வீகத்தைப் பற்றி சிவாவில் சொல்லப்பட்ட ஆருட அறிவிப்பை, நாளை சரித்திரம் படைக்கப்போகும் உன் புத்தகம் சொல்கிறது. கடல் பிரிந்து வழிவிட்டதைப் பற்றி நீ எழுதியிருக்கிறாய்.' அவர் தன்தலையைச் சாய்த்து காலிஸ்தெனிஸைப் பார்த்தார். 'ஞாபகம் இருக்கிறதா? இன்னும் நிறைய இருக்கிறது.' அவர் அவன் தோளின்மீது கைவைத்தார். 'நான் ஒரு கடவுள் என்று நீ நம்புகிறாய், காலிஸ்தெனிஸ். நிச்சயமாக, எழுதும்போது நீ பொய் சொல்வதில்லை. நான் ஒரு கடவுள் என்று நீ நம்பும்போது, மக்கள் என்னை தொழவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதில் நீ என்ன தவறைக் கண்டாய்?'

காலிஸ்தெனிஸ் பதில் சொல்லவில்லை. அலெக்ஸாண்டருக்குச் சொல்வதற்கு தன்னிடம் பதிலில்லை என்று அவன் புரிந்துகொண்டான். பேரரசன் சொன்னதெல்லாம் சரி. காலிஸ்தெனிஸ் அலெக்ஸாண்டரின் தெய்வீகத்தை நம்புகிறான் என்பதைத் தவிர, தன் புத்தகம் வெறும் முகஸ்துதி என்று அவன் எப்படி அரசனிடம் சொல்வான்? அவர் கடவுள் ஆனபின்பு, அலெக்ஸாண்டரின் சபையில் தன் அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கா?

'உன் மௌனம் கலவரப்படுத்துகிறது,' என்று அலெக்ஸாண்டர் யோசிக்க ஆரம்பித்தார். 'இதை நான் சம்மதம் என்று எடுத்துக்கொள்வதா? இல்லை மாறுபாடு என்று எடுத்துக்கொள்வதா? நீதான் சொல்லவேண்டும். நான் வாக்குகொடுத்தது போல, நீ சொன்னதையெல்லாம் நான் கேட்டுவிட்டேன்.'

'நீங்கள் சொன்னது சரிதான், பேரரசே!' இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்கும் வழிக்காக காலிஸ்தெனிஸ் போராடினான். 'ஒவ்வொரு வார்த்தையும் சரியே.' அவனது குரல் சுதிகுறைந்து முணுமுணுப்பானது. 'ஆனால், என் அரசே! திட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை. நீங்கள் அந்த ரகசிய இடம்சென்று, இட்ட கட்டளைகளை மதித்து, தண்ணீரைக் குடித்தால்தான், நீங்கள் உண்மையிலேயே கடவுளாக முடியும். இப்போது இல்லை. இன்னும் இல்லை.'

அலெக்ஸாண்டரின் கண்கள் மின்னின. 'என் தாயார் எனக்குக் கொடுத்த வரைபடத்தில் சொல்லப்பட்டிருந்த ஒவ்வொரு கட்டளையையும் நான் நிறைவேற்றி முடிக்கும்வரை நான் கடவுள் இல்லைஎன்று நீ நினைக்கிறாய். அப்படித்தானே?'

காலிஸ்தெனிஸ் கண்களைத் தாழ்த்தினான்.

தன் கேள்விக்கான விடை 'ஆமாம்' என்று அலெக்ஸாண்டர் விளங்கிக் கொண்டார்.

'என்னுடைய தெய்வீகப் பிறப்பை என்னென்று சொல்வது? என் தாயார் ஜீயஸுடன் படுத்து எழுந்ததாக சொன்னாளே, அது பொய்யா? அந்த அசிங்கம் பிடித்த பிலிப்பின் மகனாக நான் இருக்கமுடியாது.' ஒவ்வொரு வார்த்தையிலும் அலெக்ஸாண்டரின் கோபம் அதிகரித்தது. 'சிவாவில் சொல்லப்பட்ட அந்த மஹா ஆருட வார்த்தைகள் - அவை உனக்கு ஒரு அர்த்தத்தையும் தரவில்லையா? அதுவும் பொய்யா?'

மேஜையொன்றை அவர்கள் கடந்தார்கள். மேஜையின் கால்களுக்கு மேலே ஒரு வெண்கலத்தட்டு அண்டக்கொடுக்கப் பட்டிருந்தது. அலெக்ஸாண்டர் குனிந்து வெண்கலத் தட்டை எடுத்து தாழ்வாரத்தில் விசிறியடித்தார், தன் கோபத்தின் வடிகாலாக, 'நீ யார், காலிஸ்தெனிஸ், என் பிறப்பைப் பற்றி, என் தெய்வீகத்தைப் பற்றி தீர்ப்பெழுத? ஒரு சரித்திராசிரியன். அவ்வளவுதான். நான் உன் அரசன். மறந்துவிடாதே. உன் உயிர் என் கையில். என் ராஜ்ஜியத்தில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனின் உயிரைப் போலத்தான். என் ராஜ்ஜியம் மாசிடோனியாவிலிருந்து பாக்ட்ரியா வரை பரவிக்கிடக்கிறது. இது ஒரு கடவுளின் சக்தி இல்லையா? உயிரை எடுக்கும் சக்தி?'

உரையாடலைத் தடுத்துநிறுத்தும் நேரம் கடந்துவிட்டது என்று காலிஸ்தெனிஸ் புரிந்துகொண்டான். அவனுக்கு அவனது அரசரைப் பற்றி நன்றாகவே தெரியும். அலெக்ஸாண்டர் ஏற்கனவே அவனுக்குத் தண்டனை விதித்துவிட்டார். தான் தூக்கிலிப்படப்போகிறோம் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. மரணம்வரும் தறுவாயில் அவன் கோழையாகத் தோன்ற விரும்பவில்லை.

'ஒரு கடவுளின் சக்தி,' என்று சினம்கொண்ட அரசனைப் பார்த்து அவன் அமைதியாகச் சொன்னான். 'உயிரை எடுப்பது அல்ல; உயிரைக் கொடுப்பது. அதைத்தான் நீங்கள் செய்ய தவறிவிட்டீர்கள்.'

அலெக்ஸாண்டரின் கோபம் ஊழித்தீயாக மாறியது. 'நான் அலெக்ஸாண்டர்! ஒரு கடவுளாக நான் வழிபடுவதற்கு எனக்கு நீயோ

அல்லது உன் ஒப்புதலோ தேவையில்லை,' என்று கத்தினார். கோபம் அவரின் புலன்களை ஆக்ரமித்தது. 'கடவுளாக இருப்பதற்கு, எனக்கு உன் வழிமுறைகள் தேவையில்லை. நான் ஒரு கடவுள். கடவுளாகவே வழிபடப்படுவேன். இதுக்கு மாறாக யார் யோசித்தாலும் அவர்களும் நீயும் நாசமாகப் போய்விடுவீர்கள். காவலர்களே'

காலிஸ்தெனிஸ் நின்று அலெக்ஸாண்டரின் கண்ணைப் பார்த்தான். 'பாட்ரோகிளஸ் உங்களைவிட சிறந்த மனிதன், அலெக்ஸாண்டர். ஆனாலும் மரணம் அவனை விட்டுவைக்கவில்லை.'

காவலர்கள் வந்தார்கள்; காலிஸ்தெனிஸைப் பிடித்தார்கள். அலெக்ஸாண்டர் குரூரமாகப் புன்னகைத்தார். 'உனக்குத் தெரியும்,' என்று அவன் சரித்திர ஆசிரியனிடம் சொன்னார்: 'வேலைக்கார இளைஞர்களுக்கு என்னைக் கொல்ல எங்கிருந்து தைரியம் வந்தது என்று இப்போது எனக்குப் புரிகிறது. எனக்கு நெருக்கமான யாரோ ஒருவர்தான் கலகம் செய்யும் ஆர்வத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்க முடியும். வாய்ப்பையும். அது யாரென்று நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் இப்போது எனக்குத் தெரிகிறது. அது நீதான், காலிஸ்தெனிஸ். நாளை உனக்கு விசாரணை, துரோகத்திற்குத் தண்டனை சிலுவையில் அறைதல். உனக்கு அது நன்றாகவே தெரியும். போய்வா, நண்பனே!'

அலெக்ஸாண்டர் திரும்பிப்போக எத்தனித்தார். ஆனால் காலிஸ்தெனிஸ் இன்னும் முடிக்கவில்லை. காவலாளிகள் இழுத்துச் செல்லும் போது, சரித்திர ஆசிரியன் சொன்ன இறுதிவார்த்தைகளில் அலெக்ஸாண்டர் உறைந்துநின்றார்.

'நீ ஒரு கடவுள்போல பாவனை செய்யலாம், அலெக்ஸாண்டர். நீ ஒரு கடவுள் என்று நீ நம்பலாம். ஆனால் நீ ஒருபோதும் கடவுளாக இருக்க முடியாது. மாசிடோனியாவுக்குத் திரும்புவதற்கு முன்பே நீ இறந்துவிடுவாய். மீண்டும் நீ உன் தாய்மண்ணில் காலடி எடுத்துவைக்க முடியாது!'

51

நிகழ்காலம்

ஐந்தாவது நாள்
அலெக்ஸாண்டரின் ரகசியம்

'நீங்க ஜோக் அடிக்கிறீங்க,' என்று ராதா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் சொல்லிவிட்டாள். இது நம்பகத்தன்மையின் எல்லைகளை விரிவாக்கிக் கொண்டிருந்தது. 'அலெக்ஸாண்டரோட உடம்பு பலநூறு வருசங்களுக்கு முன்பே அலெக்ஸாண்ட்ரியாவை விட்டு காணாமல் போச்சு. எல்லோருக்கும் அது தெரியும்.'

'கிபி நான்காம் நூற்றாண்டில், என்று சக்ஸேனா அவளைத் திருத்தினார். 'இன்னும் சரியாகச் சொன்னா, கிபி 391 வாக்கில். பதப்படுத்தப்பட்ட அவரோட உடம்பை அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து அமைப்பு எடுத்துக்கொண்டு போய், யாரும் அதை அவமரியாதை செய்யக்கூடாதுங்றதுக்காக, வேறொரு இடத்தில புதைச்சிது.'

'ஆனா அந்த உடம்பிலிருந்து வைரஸையும் பாக்டீரியத்தையும் எடுக்கிறதுக்கு, அதவச்சி பரிசோதனைகள் செஞ்சி, இந்த அமைப்பு அதுக்கு அவமரியாதை செஞ்சுதே.' அமைப்புக்கு ஒன்றே ஒன்றைப் பற்றித்தான் கவலை. தன்னைப்பற்றி. எதுவும் புனிதமில்லை; எதற்கும் எல்லை இல்லை. அவள் சிறைப்பட்டிருந்த மையத்தைப் போல என்று அவள் புரிந்துகொண்டாள். தரவுகளை ஒன்றாக வைத்துபார்த்தபோது, இரண்டு நுண்ணுயிரிகளும் அந்த பரிசோதனைகளில் வெளிப்பட்டன; அவற்றைப் பற்றித்தான் இம்ரானும் அவர்களுக்குச் சொல்லியிருந்தார் என்று இப்போது ராதா புரிந்துகொண்டாள். அப்பாவி ஜனங்களை சோதனை எலிகளாக்கி முன்பின் தெரியாத நுண்ணுயிரிகளைச் சோதித்துப் பார்க்கிறார்கள், சக்ஸேனாவும், அவரது குழுவும். அந்த ஜனங்களுக்கு நிச்சயமாக அது மரண தண்டனை. மெதுவான மரணம்.

தனக்குள் சினம் பொங்கி எழுவதைக் கட்டுப்படுத்த அவள் முயன்றாள். அவர்கள் தனக்குக் கொடுத்திருந்த மாத்திரைகளின் விளைவு கடந்துபோய்விட்டதா என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. இந்த நேரத்தில் கோபத்தில் வெடிப்பது உசிதமல்ல. அவளுக்கு இப்போது தடையில்லை என்பதால், அவள் கோபத்தில் வெடித்தால் அது அவளைக் காயப்படுத்தி விடலாம்.

சக்ஸேனா தோள்குலுக்கினார். 'நல்லது. விஞ்ஞான வளர்ச்சிக்காக அத செஞ்சித்தான் ஆகவேண்டியிருக்கு,' என்று அவர் சகஜமான தொனியில் பதில்சொன்னார். 'எப்படியோ, இந்த இரண்டு நுண்ணுயிரிகள்லதான், நோயிலிருந்து காப்பாத்தக்கூடிய பாதுகாப்பு ரகசியம் இருக்கு.'

'எனக்கு இன்னும் புரியலை.' ராதா நம்பவில்லை என்பது அவளின் முகபாவனையிலும், தொனியிலும் தெரிந்தது. 'இந்த பெரிய ரகசியத்த அலெக்ஸாண்டர் தேடிப்போனார்னு நீங்க சொல்றீங்க. அத அவரு கண்டுபிடிச்சார். ஆனால் ரெண்டு வருசம் கழிச்சி அவர் செத்துப்போனார். சில வருசம் கழிச்சி அலெக்ஸாண்டர்கிட்ட தெரிஞ்ச அதே அறிகுறிகள்தான் உங்க பரிசோதனைக்குப் பலியான ஆட்கள்கிட்டேயும் தெரிஞ்சுது. இந்த நுண்ணுயிரிகள் சாவைத்தானே கொண்டுவருது.'

'அங்கதான் நீ தப்பு பண்ற!' சக்ஸேனா 'உஷ்' என்றார். அவரது எரிச்சல் இப்போது தெளிவாக வெளிப்பட்டது. 'இந்த நுண்ணுயிரிகள் உயிர கொடுக்கும். கணினித் திரையில நீ பார்த்தது அலெக்ஸாண்டருக்கு தொற்று ஏற்படுத்தின அசலான உயிரிகள் இல்ல. அது ரெட்ரோவைரஸ்; அதுவொரு பாக்டீரியோஃபேஜ். பாக்டீரியாவுக்கு தொற்று ஏற்படுத்தும் ஒரு வைரஸ்.'

அவர் திரையில் உருவத்தை மாற்றினார். 'வைரஸ்கள் தங்கள தாங்களே மறுஉருவாக்கம் செய்யமுடியாது. மறுஉருவாக்கத்துக்கு உதவிசெய்யும் செல்களை அவை கடத்திக்கொள்ள வேண்டியிருக்கு. இதுதான் வைரஸ் மறுஉருவாக்க முறை.' அவர் திரையில் தெரிந்த விளக்கவரைபடத்தைக் காட்டினார். 'ஒரு வைரஸ் தான்குறிவைத்த செல்லோடு தன்னை இணைத்துக்கொள்ளுது; அப்புறம் அந்த செல்லோட ஜவ்வுக்குள் கலப்பதின் மூலமா அல்லது செல்லினுடைய ஜவ்வுல நுண்ணுயிர் மரபணுச் சரக்கை இடமாற்றி வைப்பது மூலமா, வைரஸ் தான்குறிவைத்த அந்த செல்லோட சுவரைக் கிழிச்சித் துளைச்சிப் போவுது. குறிவைக்கப்பட்ட செல் துளைக்கப்பட்டவுடன்,

வைரஸானது அந்தச் செல்லோட கட்டமைப்பைப் பயன்படுத்தி, செயல்படக் கூடிய, கட்டமைக்கப்பட்ட நுண்ணுயிர்ப் புரதங்களை உற்பத்தி செய்யும். புதிதாக உருவாக்கப்பட்ட நுண்ணுயிர் கரு அமிலமும் *(viral nucleic acid)* அமைப்பியல் புரதங்களும் *(structural proteins)* ஒன்றாக சேர்ந்து வைரஸின் அமிலப் புரதக்கூட்டை *(nucleocapsid)* உருவாக்குது. புதிதாக உருவாக்கப்பட்ட நுண்ணுயிரிகள் அல்லது தொற்றுவடிவ நுண்ணுயிரிகள் விடுவிக்கப்படுது. அந்த முறைக்குப் பேரு செல் வீழ்ச்சி அல்லது அழிவு. அந்த முறையில்தான் முதலில் குறிவைக்கப்பட்ட செல் வெடித்து தொற்றுவடிவ நுண்ணுயிரிகளை விடுவிக்குது. அப்படியே அந்த செல்லும் செத்துப்போகுது.'

மற்றொரு சித்திரம் திரையில் தோன்றியது. 'நாங்க சோதனை செய்யறது ரெட்ரோவைரஸை. அதனோட மரபணுத் தகவல் ரைபோ கரு அமிலத்தில் *(ribonucleic acid - RNA)* சங்கேதக்குறியாக வைக்கப்பட்டிருக்கு; டீஆக்ஸிரைபோ கரு அமிலத்தில் *(Deoxyribonucleic acid - DNA)* அல்ல. ஒரு ரெட்ரோவைரஸில் ரைபோ கரு அமிலத்தைச் சார்ந்த டீஆக்ஸிரைபோ கரு அமில பலபடிமநொதி *(polymerase)* இருக்குது. அதுக்குப் பேருதான் தலைகீழ் நொதிமாற்றம் *(reverse transcriptase).* குறிவைக்கப்பட்ட செல் தொற்றுக்கு ஆட்பட்டவுடன், அதுதான் நுண்ணுயிர் மரபணுக்களின் டிஎன்ஏ வடிவத்தைச் சேர்த்துவைத்து உருவாக்குது.'

ராதாவின் முகத்தில் வெறுமையான பாவம் தெரிந்ததும் அவர் நிறுத்தினார். அவர் சொன்னதில் ஒரு வார்த்தைகூட அவளுக்குப் புரியவில்லை என்பது நிதர்சனம். 'சரி,' என்று அவன் மீண்டும் முயன்றார். 'எல்லா உயிரிகளிலும் மரபணுத்தகவல் டிஎன்ஏவில் மறைத்து வைக்கப்பட்டிருக்கு; அது உனக்குத் தெரியும்தானே. அது ரெட்டை இழையால் ஆனது. சரியா? ரெட்ரோ வைரஸ்கள்ல மரபணுத்தகவல் ஆர்என்ஏ-வில வைக்கப்பட்டிருக்கு. அது ஒற்றை இழை கொண்டது. வழக்கமா, செல் பெருக்கத்தின்போது எந்த உயிரியிலும் மரபணுத்தகவல் நகல்செய்யப்படும். அப்போ டிஎன்ஏ, ஆர்என்ஏவுக்கு மாற்றப்படுது. டிஎன்ஏ பெருக்கம் உருவாக்குவதற்கு புரதங்கள் தேவைப்படுது; அந்தப் புரதங்கள உருவாக்க அவசியமான மரபணுத்தகவலை ஆர்என்ஏ கொண்டுவந்து கொடுக்குது.'

ராதா இன்னும் தன்னோடுதான் இருக்கிறாளா என்பதைத் தெரிந்துகொள்ள சாக்ஸேனா பேசுவதை நிறுத்தினார். அவள் தலையசைக்க, அவர் தொடர்ந்தார். 'ரெட்ரோ வைரஸ்களின்

பெருக்கத்துக்கு, ஆர்என்ஏ டிஎன்ஏ-யாக மாற்றப்படணும். அதனாலதான் அதுக்கு தலைகீழ் மாற்றம்னு பேரு. இதுக்கு மாற்றுநொதி புரதங்கள் தேவைப்படுது. ரெட்ரோ வைரஸ், குறிவைக்கப்பட்ட செல்லால் உள்வாங்கப்படும்போது, அதன் ஆர்என்ஏ விடுவிக்கப்பட்டு தலைகீழாக மாறி ஒற்றை இழைகொண்ட டிஎன்ஏ-வாக ஆகிவிடுகிறது. இந்த ஒற்றை இழை டிஎன்ஏ மேலும் தலைகீழ் மாற்றமாக ரெட்டை இழைகொண்ட புரோவைரல் டிஎன்ஏ-வாக ஆகிவிடுகிறது. இந்த புரோவைரஸ், குடியேற்ற செல்லின் மரபணுத்தொகுதியில் சொருகப்படுகிறது; இதற்கு வைரஸிலிருந்து இன்னொரு நொதி அல்லது வேதியல் பொருள் பயன்படுத்தப்படுகிறது. அதுக்குப் பேரு இண்டகிரேஸ். அப்படி சொருகப்பட்ட புரோவைரஸ் ஆர்என்ஏவாக இடம்பெயர்கிறது. வழக்கமான பெருக்கத்தில் நிகழ்வது போல, ஆர்என்ஏ மொழிபெயர்க்கப்பட்டு, புது வைரஸையும், முதிர்ந்த வைரஸ் கூட்டத்தையும் உருவாக்கத் தேவையான புரோட்டீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பின்பு குடியேற்ற செல்லிலிருந்து *(host cell)* ஆர்என்ஏ வெளியேற்றப்படுகின்றன.'

சாக்ஸேனா ஏன் அவ்வளவு விவரங்களைக் கொட்டுகிறான் என்று ராதாவுக்குப் புரிய ஆரம்பித்தது. 'ஒரு ரெட்ரோவைரஸ் குடியேற்ற செல்லோட மரபணுத்தொகுதியின் ஒரு பாகமாகவே மாறிவிடுகிறது. அப்படித்தானே?'

'ரொம்ப சரி. அந்த நிலையில்தான் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் தொற்றுநோய் ஏற்படும். குடியேற்ற அணு வரிசைமுறையின் கட்டமைப்பைப் பெறவும் அதை மாற்றவும் கூடிய திறமை ரெட்ரோவைரஸ்களுக்கு உண்டு. அவை தங்களை தாங்களே குடியேற்ற அணுவோட நோய்க்கிருமிகளுக்குள் நுழைத்துக்கொண்டு, அசையும் அல்லது இடமாறும் கூறுகளாக நடந்துகொள்ளும். ரெட்ரோவைரஸ்கள் டிஎன்ஏ துண்டுகளாக மாறி குடியேற்ற மரபணுத்தொகுதிக்குள்ளே இஷ்டம்போல குதித்தாடி, அதை மாற்றியமைத்து, குடியேற்ற டிஎன்ஏவில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்று அதற்கு அர்த்தம். மரபணுத்தொகுதியை ஊடுருவும் களத்தின் அருகே இருக்கும் மரபணுக்கூறுகளை ரெட்ரோவைரஸ்கள் உயிர்ப்பிக்கும் அல்லது செயலற்றதாக்கிவிடும். குறிப்பிட்ட சூழ்நிலை ஊக்கிகளால், மறுகூட்டு முறை அல்லது சடுதிமாற்றத்தில், ரெட்ரோவைரஸ் வேகமாக தங்கள் மரபுத்தொகுதியையே மாற்றிவிடுகிறது. அதனால்தான் எச்ஐவி வைரஸ் மிக ஆபத்தானதாக இருக்கிறது. அது ஒரு ரெட்ரோவைரஸ். ஆரோக்கியமான மனிதர்களுக்குள் செயலற்று கிடக்கும் டிஎன்ஏவை

அது தூண்டிவிடுகிறது.'

ராதாவுக்கு தலை சுற்றியது. இதுவரை பெற்ற தகவல்களை எல்லாம் புரிந்துகொள்ள அவள் முயன்றாள். 'புரியது. ஆனா, ரெட்ரோ வைரஸ் அவ்வளவு ஆபத்தானது என்றால், நோய்க்கு எதிரான கவசத்தை உருவாக்க அது எப்படி உதவி செய்யும்?'

52

அமரத்துவம்

'அதுதான் பிரச்சினை,' என்று சக்ஸேனா பெரு மூச்செறிந்தார். 'வைரஸ்களுக்கு ஒரு கெட்ட பேரு உண்டு. அது சரியானதுதான். பெரும்பாலான வைரஸ்கள் தீர்க்கமுடியாத, கடுமையான தொற்றுக்களை ஏற்படுத்துது. வைரஸ்களைக் கொல்றது ரொம்ப கஷ்டம். ஏன்னா அவை கடுமையான மிகமிக நுண்மையான ஜீவன்கள். அவற்றிற்கு இடம்கொடுத்த குடியேற்ற செல் இறந்துபோனாலும், அவை செயலற்று கிடந்து, இன்னொரு செல்லைத் தொற்ற காத்திருந்து அது கிடைத்தவுடன் தனது வைரல் சைக்கிளைத் தொடர்ந்து கொண்டு போகும். ஆயிரக்கணக்கான வருசங்கள் கூட வைரஸ்கள் செயலற்று கிடக்கும்; அதே நேரத்தில் வீரியத்தை இழந்துவிடாது. ஆனால் வைரஸ்களுக்கு இன்னொரு பக்கம் உண்டு. அது பத்தி நிறைய தெரியாது. உனக்கு மைக்ரோபையோம்னா என்னன்னு தெரியுமா?'

எங்கோ அதைப் பற்றி தான் படித்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. 'மனுசங்களுக்குள்ள இருக்கிற நுண்ணுயிரிகளின் கூட்டம்.'

'சரி. அது ஒரு பரஸ்பர நன்மை தரும் இருத்தல். நட்புரீதியான கூட்டுறவு. நல்லா தெரிஞ்சது நம்மோட குடல்நாளங்கள்ல இருக்கிற பாக்டீரியா. உணவுக்கும் இருப்பிடத்திற்கும் பதிலாக, பாக்டீரியா உணவு செரிமானத்துக்கு உதவி பண்ணி வளர்சிதை மாற்றத்தை (மெட்டபாலிஸம்) ஒழுங்குபடுத்துது. ஆனா, பரஸ்பரம் நன்மை தரும் வைரஸ்கள் பத்தி, மோசமான பாக்டீரியாவை அழிக்கிற வைரஸ்கள் அதிகம் தெரியாத கதை உண்டு. அங்கதான் எங்களோட சின்ன ரெட்ரோவைரஸ் வருது. நான் ஏற்கனவே சொன்னது போல, அது ஒரு பாக்டீரியோஃபேஜ். உதாரணமா, மனுச ஜீவன்களோட சளிப்படலங்கள், அதாவது தொண்டை, மூக்கில இருக்கிற மெல்லிய தசைகள்ல நிறைய பாக்டீரியோஃபேஜ்கள், அதாவது பாக்டீரியா உண்ணிகள், செழிப்பா இருக்கு. அது நமக்கு ரொம்ப நல்லது. ஏன்னா

சளியில் பாக்டீரியா நிறைய பெருகுது. அதனால், சளிதொடர்பான தொற்றுக்கள உண்டாக்கும் பாக்டீரியாக்களைத் தின்னு இந்த வைரஸ்கள்தான் ஒரு கவசத்தை அல்லது நோயெதிர்ப்புச் சக்தியை உடம்புக்குள்ள உருவாக்குது.'

'அலெக்ஸாண்டரோட உடம்பில நீங்க கண்டுபிடிச்ச ரெட்ரோவைரஸ் பாக்டீரியாவை அப்புறப்படுத்திச்சா?'

'அதைவிட ரொம்ப சிறப்பா பண்ணிச்சு. இங்கேதான் மருத்துவப் பரிசோதனைகள் ரொம்ப உதவியா இருந்திச்சு. அந்தச் சோதனைகள் இல்லாம, நாங்க வெற்றிக்கு இட்டுச் செல்லும் கண்டுபிடிப்புகள நாங்க செஞ்சிருக்க முடியாது. இங்க பாரு, நாங்க அலெக்ஸாண்டரோட பதப்படுத்தப்பட்ட உடம்பில வைரஸையும், பாக்டீரியத்தையும் கண்டுபிடிச்சோம். ஆனா பரிசோதனைக்குட்பட்ட ஆட்களுக்குள்ள வைரஸையும், பாக்டீரியத்தையும் செலுத்தி அதிலிருந்து வந்த விளைவுகள நாங்க கண்காணிச்சோம்; அதுக்கப்புறம்தான் அவற்றின் தொடர்பு எங்களுக்குப் புரிய ஆரம்பிச்சுது. அதில ஒரு விளைவு என்னன்னா, பாக்டீரியா இல்லாத போது, ரெட்ரோவரைஸே ஒரு குடியேற்ற உயிரியான மனுச உடம்புக்கு தன்னை அனுசரிச்சுக்கிட்டுது. மனுச உடம்புங்ற குடியேற்ற சூழலில் அது ஒத்துப்போனவுடன், மரபணுக்களுக்கு அது உயிர்கொடுத்திச்சி. அப்புறம் அந்த மரபணுக்கள் முதுமை அடைவதைத் தடுக்கும் புரோட்டீன்கள உற்பத்தி பண்ணிச்சி உதாரணமா, *IGF*1. *(Insulin-like Growth Factor:* குரோமோசோமில் இருக்கும் ஒருவகையான மரபணு; வளர்ச்சிக்கு உதவும் புரோட்டீன்கள் குடும்பத்தைச் சேர்ந்தது.) சதைகளைக் கட்டமைக்க உதவும் ஒரு முக்கியமான புரோட்டீன் அது. இந்தப் புரோட்டீன் இல்லன்னா தசைகள் பலகீனமாகிவிடும்; மேலும் மேலும் தசைகள் உருவாகிற திறன் அற்றுப் போகும். அப்புறம் இன்னொரு புரோட்டீன் டெலோமெரேஸ் *(telomerase).* முதுமையின் வேகத்தைக் கட்டுப்படுத்துவது பத்திய விவாதங்கள்ல அடிபடுற முக்கிய சமாச்சாரம் அது. இந்த டெலோமெரேஸ்ங்ற புரோட்டீன் இல்லைன்னா நமக்கு சீக்கிரம் முதுமை வந்து செத்துப் போறோம். இதுக்கு பலமான ஆதாரம் இருக்கு. இந்தப் புரோட்டீன்ல பிரச்சினை என்னன்னா, அது இருக்கும்போது, செல்களை இடைவிடாமல் உற்பத்தியாகச் செய்துவிடுகிறது. வேறு வார்த்தைகள் சொல்வதென்றால், புற்றுநோயை உருவாக்குகிறது. ஆனா, ரெட்ரோவைரஸின் இருப்பு, *BRAF*-ங்ற புரோட்டீன் உற்பத்திக்கு இட்டுச் செல்லுது. இந்தப் புரோட்டீன்தான் ஆரோக்கியமான செல்களோட பகுப்புக்கும் வளர்ச்சியையும் ஒழுங்குபடுத்துது.

புற்றுநோய் மீதான ஒரு வகையான பிரேக் அது. ரெட்ரோவைரஸ், *p*53-ங்ற புரோட்டீனையும் எப்படியோ உயிர்ப்பித்து விடுவது போல தெரியது. அந்தப் புரோட்டீன் எல்லா செல்களிலுல் செயலற்றுதான் இருக்கும்; தீய செல்களின் பெருக்கத்தைத் தடுத்து செல் வளர்ச்சியை நிறுத்தி செல்களின் மரணத்தை உண்டாக்கும் மரபணுக்களின் வெளிப்பாட்டை *p*53-ங்ற புரோட்டீன் தூண்டிவிடுது. இது ரொம்ப எளிதாகவே விளக்கப்படுது. உடம்புக்குள்ளாற இருக்கிற புது ரெட்ரோவைரஸ், இண்டர்ஃபெரான்-ங்ற *(Interferon)* புரோட்டீன் உற்பத்தியை அதிகமாக்க தூண்டுது. இந்தப் புரோட்டீன், *p*53-ங்ற புரோட்டீனை மறைமுகமாக வைத்திருக்கும் மரபணுவின் மாற்றத்தை தூண்டிவிடுது. விளைவாக, *p*53-ங்ற செல்புரோட்டீன் அபரிமிதமாக உருவாகிறது.' அவர் நிறுத்தி ராதாவைப் பார்த்தார். 'நான் இன்னும் நிறைய சொல்லமுடியும். ரெட்ரோவைரஸ் புது மரபணுக்களை எழுப்பிவிடுது; அந்தப் புதிய மரபணுக்கள் முன்பின் தெரியாத புரோட்டீன்கள நிறையவே உற்பத்தி செய்யுது. எங்க ஆராய்ச்சிகள் மூலமா அந்தப் புரோட்டீன்கள் மனித உடம்பில பலம், மீளுருவாக்கம், பழுதுபார்த்தல் என்ற வகைகளில் நல்ல விளைவுகளையே ஏற்படுத்துது.'

'அற்புதம்,' என்று ராதா ஒத்துக்கொண்டாள். இது ஒரு பெரிய மருத்துவ சாதனை போல் தெரிந்தது. 'வைரஸ் பாக்டீரியாவைத் தொற்றுதுன்னும் சொன்னீங்க. அது அவற்றைக் கொல்லுதா? அதுதான் நீங்க சொன்ன வைரஸ் கவசமா?'

சாக்ஸேனா இல்லை என்பதுபோல் தலையாட்டினார். 'அதவிட ரொம்ப பெரிசு. மக்களுக்கு பாக்டீரியாவை வைத்து மட்டும் தொற்று ஏற்படுத்தினா, ரெண்டு விசயங்கள் நடந்ததை நாங்க கண்டுபிடிச்சோம். ஒன்றாவது, பாக்டீரியாக்கள் மனுசங்களுக்கு மரணத்தை உண்டாக்கும். ஆனா உடனே இல்ல. உள்வாங்கப் பட்டவுடன், பாக்டீரியா ஓர் உயிர் மென்படலத்தை உருவாக்குது. அந்தப் படலத்துக்குள்ள செல்களை சுத்தி பெரிய திசுப்பொருள் பரப்புகள் சூழ்ந்துகொள்ளுது. உடம்போட நோய் எதிர்ப்புச் சக்தியிலிருந்து பாக்டீரியாவைக் காப்பாத்த இது நிகழுது. செல் தலையீட்டால் உண்டான நோய் எதிர்ப்பு எதிர்வினை தொற்றைக் கட்டுப்படுத்தும்; ஆனால் அழித்துவிடாது. அதனால பாக்டீரியா இந்தக் கட்டத்தில் செயலற்று இருக்கும். அதனால், கொஞ்சகாலம், மருத்துவரீதியிலான அறிகுறிகள் எதுவும் தோன்றாது. ரெட்ரோவரைஸ் பாக்டீரியாவை தொற்றும்போது, அது பாக்டீரியா மரபணுத்தொகுதிக்குள்ள மாற்றங்களை ஏற்படுத்தி, மனிதஜீவனைக் கொல்லும் இந்த புரோட்டீன்களின் உற்பத்தியை நிறுத்துதுன்னு நாங்க

சந்தேகப்படுறோம். ஒருவேளை, மனுசங்களுக்கு நன்மை செய்ற புரோட்டீன்கள உற்பத்தி செய்யறதுக்கு பாக்டீரியாவை அது திறனுடையதாக்கலாம். நமக்குத் தெரியாது. அதுக்கு எங்களுக்கு அசல் வைரஸ் வேணும்.'

'அலெக்ஸாண்டரோட உடம்பிலிருந்து வைரஸை பாக்டீரியாவை விட்டு பிரிச்சி எடுத்ததாக நீங்க சொன்னீங்களே?' என்று சுட்டிக்காட்டிவிட்டு ராதா சொன்னாள்: 'அது அசல் வைரஸ் இல்லியா?'

'இல்ல. மருத்துவ சோதனைகள்ல நாங்க ரெண்டு விசயங்கள் கண்டுபிடிச்சோம்னு நான் சொல்லியிருந்தேன். முதலாவத பத்தி மட்டும்தான் நான் சொன்னேன். ரெண்டாவது விஷயம் இதுதான்: பாக்டீரியாவின் மரபணுத்தொகுதியில் ஏற்கனவே வைரஸ் மரபணுவடிவத்தில (புரொஃபேஜ் - *prophage)* இருக்கு. ஏதோ ஒரு காலகட்டத்தில, ரெட்ரோவைரஸ் பாக்டீரியத்தைத் தொற்றுக்கு ஆளாக்குது; ஆனா நான் முதல்ல விவரிச்ச முறையில், அது பல்கிப்பெருகி ஜீவித்திருப்பதில்லை. ஒருவேளை அது ஏதோவொரு காரணத்துக்காக செத்துப்போய், பாக்டீரியாவின் மரபணுத்தொகுதியில ஒரு மரபணுச் சரக்காக மட்டும் உள்ளே போய் உட்கார்ந்திருக்கலாம். அதாவது புரோஃபேஜாக. இங்கதான் விசயம் ரொம்ப சுவாரஸ்யமாகுது. பாக்டீரியா தொற்று உருவானவுடன், ஏதோ ஒண்ணு புரோஃபேஜ் உள்சேர்ப்பை (மரபணு வடிவம் உள்வாங்கப்படுதலை) தூண்டுது. ரெட்ரோவைரஸ் மனித செல்களுக்குள் இனப்பெருக்கம் கொள்கிறது, லைசோஜெனிக் சைக்கிள் மூலமாக.'

(லைசோஜெனிக் சைக்கிள் - *lysogenic cycle or lysogeny* என்பது வைரஸ் இனப்பெருக்கச் சுழற்சிகளில் ஒன்று. பாக்டீரியாவுக்குள் தொற்றும் வைரசின் கரு அமிலம் பாக்டீரியாவின் மரபணுத் தொகுதிக்குள் இணைந்துவிடுகிறது.)

தான் அளவுக்கு மிஞ்சிய மருத்துவ வார்த்தைகளைப் பிரயோகித்து விட்டோம் என்று உணர்ந்த சக்ஸேனா கைகளை உயர்த்தினார். 'அடிப்படையில இதுக்கு என்ன அர்த்தம்னா, ரெட்ரோவைரஸின் மறைவான வடிவம், அதாவது புரோஃபேஜ், பாக்டீரியா குரோமோசோமிலிருந்து துண்டிக்கப்படுது. இதுக்குப் பேர்தான் புரோஃபேஜ் இண்டக்ஷன். அது நிகழ்ந்தவுடன், வைரஸ் வழக்கமான முறையில் பெருக்கம் கொள்கிறது; தன்னை நகலெடுக்கச் சொல்லி மனித செல்களுக்கு ஆணையிடுகிறது. இது ரெட்ரோவைரஸ் தொற்று நிகழும்போது நடக்கிறது. ஆனா, நான் முன்னாடி விளக்கினமாதிரி, இது

ரெட்ரோவைரஸ்க்கு இடம் கொடுத்த செல்லுக்கு நல்லது. ஏன்னா ரெட்ரோவைரஸ் நன்மை செய்யக்கூடியது.'

சாக்ஸேனா கைகளை மடித்து மார்பின் குறுக்காக வைத்துக்கொண்டு ராதாவைப் பார்த்தார். 'இந்த வைரஸ் எவ்வளவு சக்திகொண்டதுன்னு உனக்குப் புரியதா? மனிதகுலத்துக்கு அது எவ்வளவு நன்மை செய்யக்கூடியதுன்னு விளங்குதா? சும்மா யோசிச்சுப் பாரு, அமைப்பு இதைத் தன்னோட கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவரும். முதுமையைத் தடுக்கும் சக்தி. எந்த நோயையும் எதிர்க்கும் ஆற்றல். ஆண்டிபயாடிக்ஸை மறந்திரு. சாகாத ஓர் அமரத்துவத்தை உண்டாக்கும் சக்தி எங்களுக்குக் கிடைக்கும்! உலகமே எங்கள் காலடியில் விழுந்து, இதைப் பிச்சை கேட்கும். இதை அவர்கள் கடவுள்களின் ரகசியம்னு சொன்னதில ஆச்சரியமில்ல.'

ராதா முறைத்தாள். ஏதோ ஒன்று சரியாகப் பொருந்தவில்லை. 'அந்த வைரஸ் அவ்வளவு சக்திகொண்டதுன்னா, அலெக்ஸாண்டர் அதை நுகர்ந்தவுடன் ஏன் செத்துப் போனார்? அது ஏன் பாக்டீரியாவோட மரபணுத்தொகுதியை மாத்தவில்லை, நீங்க சந்தேகப்பட்ட மாதிரி?'

'ஏன்னா அவரு அதை உள்வாங்கியதுக்கு அப்புறம் ஏதோ ஒரு தவறு நடந்திச்சி. அசல் வைரஸ் எங்களுக்கு கிடைக்கலை. புரோஃபேஜ் மட்டும்தான் கிடைச்சிது. என்ன தவறு நடந்திச்சின்னு எனக்கு தெரியல. ஆனால் அசல் வைரஸ் இல்லாம பாக்டீரியா மாறாது. ஏதோவொண்ணு நோய்த்தன்மையைத் தூண்டுறவரை, பாக்டீரியா செயலற்றுதான் இருக்கும். நோய்த்தன்மை தூண்டப் பட்டவுடன், அவர்க்கு ஜீவித்திருக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இதை நாம படிச்ச பாடங்கள்ல பார்த்திருக்கோம். மறுபடியும், மறுபடியும். பாக்டீரியா தூண்டப்பட்டவுடனே, ஆள் சில நாள்கள்லே காலியாடுவான். சில சமயங்கள்ல அவை ஒரு மாசமோ அல்லது ரெண்டு மாசமோ கூட தங்கியிருக்கலாம். அதற்காகத்தான் எங்களுக்கு அசல் வைரஸும், அசல் பாக்டீரியாவும் தேவைப்படுது. அலெக்ஸாண்டருக்கு அவை கிடைச்ச இடத்தைக் கண்டுபிடிக்கிறது எங்களுக்கு அவசியம். அவை மட்டும் எங்களுக்கு கிடைச்சிதுன்னா, ரெட்ரோவைரஸ் எப்படி வேலை செய்யும்ங்றத நாங்க கண்டுபிடிச்சிடுவோம்.'

'அந்த அசல் நுண்ணுயிரிகளோட மூலத்தைக் கண்டுபிடிக்கறதுக்கு உதவிசெய்யும் கனசதுரத்தைத் தேடித்தான் ஒலிம்பியாஸோட கல்லறையைத் நீங்க தோண்டுனீங்க?' இப்போது ராதாவுக்குப் புரிந்தது அந்த தொடர்பு.

'சரியா சொன்ன. அது எங்களுக்குக் கிடைச்சாலே போதும். ரகசியம் எங்க கைக்கு வந்திடும்.'

'அலெக்ஸாண்டர் தவறு பண்ணிட்டார்னு நீங்க எப்படி நிச்சயமா சொல்றீங்க? ஒருவேளை அவரு தவறு செய்யாம இருந்திருக்கலாம். ஒருவேளை அவர் சாப்பிட்டது நோயைக்கொடுக்கிற நுண்ணுயிரிகளா இருக்கலாம். வலியையும் மரணத்தையும் கொடுத்திருக்கலாம்.'

சக்ஸேனா முறைத்தார். 'ரெண்டு காரணங்கள். ஒன்று எங்களோட பரிசோதனைகள். நான் உனக்கு இப்போ சொன்னது எல்லாம் நிஜம்னு சோதனைகள் நிரூபிச்சிடுச்சி. இரண்டாவது காரணம் ரொம்ப பழசு. மிகவும் நம்பக்கூடிய காரணம்.' அவர் நிறுத்தினார். 'ஏன்னா அந்த ஆதாரம் மகாபாரதத்தில இருக்கு.'

ராதாவுக்கு தூக்கிவாரிப் போட்டது. இந்தப் பதிலை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. சக்ஸேனா புன்னகைத்தார், அவளது தெளிவான எதிர்வினையைப் பார்த்து. 'ஆமாம்,' என்றார் அவர். 'நீ அந்தத் தொன்மத்தைக் கேள்விப்பட்டிருக்கணும். அதுக்கு நிஜமான அர்த்தம் என்னன்னு உனக்குத் தெரியாது.'

அவர் நிறுத்தினார். பின்பு ஒரு நீண்ட விளக்கத்திற்குள் இறங்கினார். பேசி முடித்தபின்பு, ராதா அதிர்ந்து உறைந்து மௌனமானாள். அவள் இப்போது கேட்ட விசயங்கள் உலகத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிடும்.

ஆம், அவர் சொன்னது சரியென்றால், இந்த உலகம் அந்த அமைப்புக்கு அடிமையாகிவிடும்.

53

அலெக்ஸாண்டரின் தடத்தில்

அலைஸ், காலின் மற்றும் சுக்லா ஒருவரை ஒருவர் சோகமாகப் பார்த்துக் கொண்டனர். நாளின் பெரும்பகுதி மேற்கொண்டு எந்தக் கண்டுபிடிப்பும் இல்லாமல் கழிந்தது. எல்லாக் காகிதங்களையும், வரைபடங்களையும், நிழற்படங்களையும் படித்தாயிற்று. கனசதுரத்தில் மிச்சமிருந்த நான்கு பாட்டுகளையும், மேற்கொண்டு யூமனியஸின் குறிப்பேட்டில் இருந்த கவிதையையும் சேர்த்து விவாதித்தாயிற்று. ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரே கவிதையைத்தான் படித்து புரிந்து வைத்திருக்கிறார்கள்; அது நேற்று நடந்தது.

நாளின் முற்பகுதியில் விஜய் அவர்களை கோட்டையில் இருந்த நிலவழி தொலைபேசியில் அழைத்து சுருக்கமாகப் பேசினான். கூப்பர் தனக்கு ஒரு செயற்கைக்கொள் தொலைபேசி கொடுத்திருப்பதாகவும், அதை வைத்துக் கொண்டு, கைப்பேசி சமிக்ஞைகள் எடுபடாத குனார் பள்ளத்தாக்கு மலைகளிலிருந்து கூட அவனால் அவர்களிடம் பேச முடியும் என்றும் அவன் சொன்னான். அந்த அழைப்பு மிகவும் சுருக்கமாக முடிந்தது; அவனால் நிறைய பேச முடியவில்லை. ஆனால் மிகவும் உற்சாகமாக ஒலித்தான். 'கடவுள்களின் ரகசியம்' என்பது 'அம்ருதா'; அதாவது அமரத்துவத்தின் ரகசியம்; அது மகாபாரதத் தொன்மத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது என்று அவன் சொன்னான். ஆனால் அது பற்றி அவனால் நிறைய பேச முடியவில்லை. ஏனெனில் அவனது அந்த அழைப்புக்கு கொடுக்கப்பட்டிருந்த நேரம் குறைவானது. விடைபெறும்போது அவன் சொன்ன ஒரே விஷயம் ஓர் அவசரகதியிலான வேண்டுகோள். அவனுக்கு நேரம் இல்லை. அவர்கள் சீக்கிரம் மேலும் பலவிடைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இதற்குள் விஜய்க்குச் சொல்வதற்கு தகவல் தயாராகிவிடும் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். சாத்தியமான தீவிரவாதிகளாலும் நிச்சயமான கொலைகாரர்களாலும் அவன் சூழப்பட்டிருக்கிறான் என்ற

சிந்தனையே நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு படுபயங்கரமாக இருந்தது. அவர்களின் உயிர்கள், ராதாவின் உயிர் உட்பட, விஜய் அளித்திருந்த வாக்குறுதியை - அவர்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்த வாக்குறுதியை - சார்ந்திருக்கின்றன.

'நாம திரும்பவும் இத படிப்போம்,' என்று அலைஸ் சுக்லாவுக்கு அழுத்தம் கொடுத்தாள். அந்த மொழியியலாளரும் தன் மகளைப் பற்றிய கவலையில் துவண்டிருந்தார். அவள் இருக்குமிடம் பற்றி இதுவரை எந்த தகவலும் இல்லை.

அலைஸ் காகிதங்களைப் பிரித்தெடுத்து முறைத்தாள். ஆரம்பத்தில் இருந்தே அவளைப் பாடாய்ப்படுத்திய ஒரு வரைபடத்தில் ஏதோவொன்று இருந்தது. ஆனால் அவளால் அதன்மீது கைவைக்க முடியவில்லை. என்ன அது?

வரைபடத்தைத் தன்பக்கம் இழுத்து, அதை அவள் மீண்டும் ஒருமுறை ஆராய்ந்தாள். அது ஆஃப்கானிஸ்தான் ஊடாக அலெக்ஸாண்டர் சென்ற பாதையின் வரைபடம். அவர்கள் இதை பலமுறை படித்திருக்கிறார்கள். இந்தியாவுக்குச் செல்லும் வழியில் அலெக்ஸாண்டர் விஜயம் செய்த இடங்களுக்கும், பாட்டுகளுக்கும் இருந்த தொடர்புகள் பற்றி அவர்களால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

அவள் வரைபடத்தை ஆராய்வதை காலின் பார்த்தான். 'ஏதாவது கிடைத்ததா?' என்று கேட்டான்.

அலைஸ் வாய் திறந்தாள். 'ஏதோ ஒண்ணு உள்ள உறுத்திட்டே இருக்கு என்னன்னு தெரியல. ரொம்பவும் பரிச்சயமானதா தெரியது,' என்று அவள் தலையாட்டினாள்.

காலின் வரைபடத்தைத் தன்பக்கம் சரிசெய்தான், அதை நன்றாகப் பார்ப்பதற்கு. 'அலெக்ஸாண்டரின் பாதை,' என்று அவன் குறிப்பிட்டான். 'சுவாரஸ்யமா இருக்கு. அவர் ஆஃப்கானிஸ்தானுக்குப் போனார்; தெற்குநோக்கிப் போய் பின்னாடி வடக்கால திரும்பி காண்டகார், கஜனி, காபூல் வழியா போனார். அப்புறம் வடக்கு நோக்கி ஹிந்து குஷ் மலைகள் மீது பயணித்து, சோக்டியன் பாறையைச் சுத்திவந்து, பால்க்குக்கு திரும்பி, அப்புறம் ஜலாலாபாத், குனார் பள்ளத்தாக்குநோக்கி திரும்பி இருக்கிறார். அந்தப் பகுதியில அவர் திட்டமிட்டு நடத்தின போர்ப்படை நடைப்பயணம் மாதிரி தெரியது. இதெல்லாம் எதேச்சையா நடந்தமாதிரி தெரியலை.'

தன் கண்களைத் தானே நம்பமுடியாதவள் போல அவள் வரைபடத்தை உற்றுநோக்கி வெறித்தாள். காலின் இப்போது சொன்ன ஏதோ ஒன்று அவளது மூளையில் அதீதமான வெளிச்சத்தைப் பாய்ச்சியது. இவ்வளவு நேரமாக அது அவள் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. அவள்தான் அதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறாள்.

'அதுதான்!' என்று அவள் காலினைப் பார்த்து விரல்களைச் சொடுக்கினாள். அவன் அவளை புதிராகப் பார்த்தான்.

'என்ன அது?' என்று கேட்டான்.

'முதலில் இருந்தே விஜய் சொன்னது சரிதான்,' என்றாள் அலைஸ். 'நான் அப்போதே பார்த்திருக்கணும். ரகசியம் குனார் பள்ளத்தாக்கில்தான் இருக்கு. அதுதான் அவர்கள் போய்ச்சேர வேண்டிய இடம்.'

சுக்லா குழப்பமாக தெரிந்தார். 'எப்படி அந்த முடிவுக்கு வந்த, அலைஸ்?'

'இங்க பாருங்க,' என்று அலைஸ், வரைபடத்தில் குறிக்கப்பட்டிருந்த சோக்டியன் பாறை இருக்கும் புள்ளியின்மீது விரலை வைத்தாள். 'இந்த வரிசையைப் பாருங்களேன். சோக்டியன் பாறை ஜலாலாபாத்துக்கு முன்னாடி வருது. சொல்லப் போனா, நமக்கு உலோகத் தட்டு தேவைப்படாது. யூமனியஸின் குறிப்பேட்டுக் கவிதைகள் ஒரு பூகோள வரிசையில் இருக்கு. அதே வரிசையில்தான் அலெக்ஸாண்டர் தன்னோட பாதையைத் திட்டம் போட்டிருக்கிறார். முதல் ரெண்டு கவிதைகள் குறிப்பிட்ட இடங்கள நாம கண்டுபிடிச்சோம்னா, என்னோட தர்க்கம் சரியான்னு நாம சோதிச்சு பார்க்கலாம்.'

அவர்கள் வரைபடத்தின்மீது குனிந்தார்கள்.

சற்றுநேரம் கழித்து, சுக்லா ஏறிட்டார். 'எனக்கு கவனம் சிதைஞ்சிடுச்சின்னு நினைக்கிறேன்,' என்றார் அசடுவழிய. 'நான் இதை முன்னாடியே பாத்திருந்திருக்கணும். இன்னைக்கு காலையில பேசும்போது விஜய் நமக்கு ஒரு தடயம் கொடுத்தான். என்னால இன்னும் அத கண்டுபிடிக்க முடியல. ஆனா குறிப்பேட்டில இருக்கிற கவிதைகளின் வரிசைக்கும், அலெக்ஸாண்டர் போன பாதைகளின் வரிசைக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறத அலைஸ் சொன்னபோது, எனக்கு திடீர்னு தோணிச்சி.' அவர் அலைஸைப் பார்த்தார். 'நீ சொல்றது சரின்னு நினைக்கிறேன்.'

வரைபடத்தின் குறுக்காக ஓடும் ஒரு நதியை அவர் சுட்டிக்காட்டினார். 'இது ஆக்ஸஸ் நதி. ரெண்டாவது பாட்டு இந்த நதியைச் சொல்லுதுன்னு நான் நினைக்கிறேன். இந்தப் பாட்டில இருக்கிற சமஸ்கிருத வார்த்த 'சக்ஷு.' அதுக்கு அர்த்தம் 'கண்.' இவ்வளவு நேரமா நான் அப்படித்தான் மொழிபெயர்த்திருந்தேன். ஆனா, மகாபாரதத்தில, ஆக்ஸஸ், 'சக்ஷு'ன்னு சொல்லப்படுது. ஆக்ஸஸைக் குறிக்கிற பாட்டு, சோக்டியன் பாறையைக் குறிக்கிற பாட்டுக்கு முன்னாடி வருது. கடவுள்களோட ரகசியம் மகாபாரதத்தில வர்ற 'அம்ருதா'தான் என்றால், தடயங்கள்ல மஹாபாரதக் குறிப்புகள் இருக்கிறது சாத்தியம். சுக்ராவைப் பத்தின குறிப்பையும் அது விளக்கலாம். சுக்ரா அந்தக் காப்பியத்தில் வர்றாரு.'

அலைஸ் மீண்டும் வரைபடத்தை ஆராய்ந்தாள். 'நீங்க சொல்றது சரின்னு நினைக்கிறேன், டாக்டர் சுக்லா,' என்றாள். 'அர்த்தமுள்ளதா இருக்கு. இந்தப் பாட்டு ஆக்ஸஸைக் கடப்பதற்கான வழிமுறைதான். நதிமட்டும்தான் 'வேகமாக தவழும்.'

'மேலும் முதல்கவிதை இருக்கு; கனசதுரத்தில இல்லாதது; ஆனா குறிப்பேட்டில சொல்லப்படுது,' என்று சுக்லா தொடர்ந்தார். 'ரகசியத்துக்கும் மகாபாரதத்துக்கும் தொடர்பு இருக்குன்னு நமக்கு தெரிஞ்சதனால, இந்தப் பாட்டு அர்த்தமுள்ளதா இருக்கு. வீழ்த்தப்பட்ட பலமான அரசனின் வரிசை என்பது கௌரவர்களோட வரிசை. இந்தப் பாட்டு சொல்ற அரசன்றது திருதராஷ்டிரன். கௌரவர்கள் அவன் மகன்கள். அவங்க எல்லோரும் கொல்லப்படுறாங்க. கடைசி ரெண்டு வரிகள்ல, கௌரவர்களின் அழிவுக்கு இட்டுச் சென்ற 'தந்திரத்தின்' தன்மையைப் பத்தின குறிப்பு இருக்கு: அதாவது, 'தாயக்கட்டை உருட்டுதல்.' அது சகுனி உருட்டின தாயத்த குறிக்குது. அவன் கௌரவர்களோட மாமா; காந்தாரியோட சகோதரன்; காந்தாரி, நூறு கௌரவர்களோட அப்பாவான திருதராஷ்டிரனின் மனைவி. காந்தாரி, காந்தார் இளவரசியா இருந்தவா. சகுனி காந்தார் இளவரசன். இன்னொரு மகாபாரதக் கதையில - அது ஆந்திராவிலிருந்து வந்ததுன்னு நினைக்கிறேன் - சகுனியோட அப்பா சுபலாவை குடும்பதோட பீஷ்மர் சிறைவச்சார். சகுனி தன் குடும்பம் அழிஞ்சத பாத்தான். குடும்பத்தார்கள் தங்கள் உணவை சாப்பிடாமல் சகுனிக்குக் கொடுத்தாங்க. அப்போதுதான் அவன் உயிரோடு இருந்து பழிவாங்க முடியும். அந்தத் தொன்மத்தின்படி, சுபலா தன்னோட எலும்புகளை வைத்து தாயக்கட்டைகள் செய்யும்படி மகன்கிட்ட சொன்னார்; அந்தக் கட்டைகள்தான் மகாபாரதத்தில பயன்படுத்தப்பட்ட கட்டைகள்.

அதுதான் 'மரணத்திலிருந்தும், பழிவாங்கும் சூளுரையிலிருந்தும் பிறந்த தந்திரம்'. சுபலாவின் மரணத்திலிருந்து உருவான தாயக்கட்டைகள், பழிவாங்குவேன் என்ற சகுனியின் சூளுரை. காந்தார் என்பது காந்தகாரின் ஆதிகாலப் பெயர்.'

அவர்கள் வரைபடத்தை மௌனமாகப் பார்த்தார்கள். அவர்கள் இப்போது விவாதித்த கவிதைகளின் அர்த்தங்களை, அலெக்ஸாண்டர் சென்ற பாதை பிரதிபலித்தது. காந்தகாரிலிருந்து காபுல். காபுலிலிருந்து பால்க். பால்க்கிலிருந்து ஆக்ஸஸ் நதிவழியாக சோக்டியன் பாறைப் பகுதி. பின் காபுலுக்குத் திரும்புதல்; அப்புறம் ஜலாலாபாத்துக்கு செல்லுதல்.

'அந்த 'உப்பில்லாக் கடல்' என்னன்றது இன்னும் நமக்குப் புரியல,' என்று காலின் அதிசயித்தான். 'அந்தப் பாட்டு சொல்றத வச்சிப் பாத்தா, அங்க ஏதோ ஒரு முக்கியமான விஷயம் இருக்கிற மாதிரி தெரியது. 'தேடலின் மையம்.'

'அது ஆக்ஸஸ் நதிக்கு வடக்கில அல்லது மேற்கில இருக்கிற ஏதோவொண்ணு,' என்று சுக்லா யோசித்தார். 'ஆனா அது சரியா இல்ல. யாரு அந்த 'மூன்று சகோதர்கள்'? வில்முனை என்றால் என்ன? அப்புறம் 'நாகமுத்திரை'

'அலெக்ஸாண்டருக்கு ஏற்கனவே தயாரித்திருந்த வரைபட வசதி இருந்திருக்கு,' என்று சலித்துக்கொண்டான் காலின். 'இங்க நாம ஒண்ணும் புரியாத விடுகதைகளோட அர்த்தத்தைத் தேடிட்டு இருக்கோம்.'

'முக்கியமான விஷயம் என்னன்னா, குனார் பள்ளத்தாக்குதான் இந்தப் பயணத்தில கடைசி இடம்ங்றத நாம நிறுவிட்டோம்,' என்று சுக்லா முடித்தார். 'அதுக்கு அர்த்தம் இதுதான்: கடைசி ரெண்டு பாட்டுகள் பள்ளத்தாக்கில இருக்கிற இடங்கள குறிக்குது. கடைசியா விஜய்கிட்ட சொல்றதுக்கு நம்மகிட்ட விசயம் இருக்கு.' அவரது குரலில் நம்பிக்கை ஒலித்தது.



சொல்லிவைத்தது போல மேஜைமீது ஃபோன் ஒலித்தது. காலின் படிப்பறையை விட்டு துள்ளிக்குதித்தோடி ஃபோனை எடுத்தான். விஜய். தங்கள் ஆராய்ச்சியைப் பற்றி காலின் சொன்னான்.

'நிச்சயமா தர்க்கரீதியா இருக்கு,' என்று விஜய் உடன்பட்டான். 'காலின். எல்லோருக்கும் என் நன்றியைச் சொல்லு. நான் இப்ப போய் ஆகணும். அவர்கள் புறப்பட காத்திட்டிருக்காங்க. நாம மேற்கொண்டுபோக இப்ப நமக்கு ஒண்ணு கிடைச்சிருக்கு.'

54

ஜலாலாபாத், ஆஃப்கானிஸ்தான்

விஜய் அழைப்பைத் துண்டித்தவுடன், வான் குளூக் அவனை கேள்விக்குறியோடு பார்த்தான். விஜய் தன் வீட்டுக்கு ஃபோன் போட்டபோது, இரண்டு தடவையும் அவன் கூட இருந்து பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான். விஜயால் எதுவும் செய்யமுடியவில்லை; ஆனால் அவனால் என்ன செய்யமுடியுமோ அதை மட்டுந்தான் செய்தான்; தன் குழுவினரோடு பேசி புதிரை விடுவிக்கச் சொல்வது.

'குனார் பள்ளத்தாக்குதான் கடைசி நிறுத்தம்.' விஜய் தான் காலினொடு பேசிய உரையாடலை வான் குளூக்கிற்குச் சுருக்கமாகச் சொன்னான். 'பகலையும், இரவையும், கம்பையும், பாம்பின் நெருப்புப்பார்வை இவற்றைப் பத்தியெல்லாம் சொல்ற பாட்டு குனார் பள்ளத்தாக்கில இருக்கிற இடங்களக் குறிக்குது.'

தன்னருகே நின்றுகொண்டிருந்த கூப்பரை வான் குளூக் பார்த்தான். 'நம்மோட கைட் என்ன சொல்றார்?'

'மலைகள்ல இருக்கிற சிவாவின் சூலக் குறிப்பைப் பத்தி அவனுக்கு ஒண்ணும் நிச்சயமா தெரியல,' என்று கூப்பர் சகஜமான தொனியில் சொன்னான். 'ஆனா, அவன் சொல்றான், தான் உள்ளூர்க்காரன் இல்லைன்னு. அவன் ஜலாலாபாத்திலிருந்து வர்றான். பள்ளத்தாக்க சுத்தியிருக்கிற கிராமங்கள்ல கேட்டுப் பார்க்கணும். இங்கிருந்து அசாதாபாத்துக்கு 90 நிமிசத்தில வண்டியில போயிரலாம். ரோடு நல்லாயிருக்கு. கொஞ்ச வருசத்துக்கு முன்னாடிதான் அமெரிக்க நாட்டு ஏஜென்சி திட்டத்தில காபுலை பாகிஸ்தான் எல்லையோட இணைக்கிறதுக்கு ரோடு போட்டாங்க. நாம போய் பாத்துட்டு வரலாம்.'

'அசாதாபாத் வரைக்கும் போய் பாக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா நான் நினைக்கலை,' என்று வான் குளூக் யோசித்தார். 'சாலையை விட்டு விலகி மலைக்குப் போறதுக்கு ஒரு வழி இருக்கணும்.

அலெக்ஸாண்டர் வேறு எப்படி அந்த இடத்த கண்டுபிடிச்சிருப்பார்?'

விஜய் மௌனமாக உடன்பட்டான். ரகசிய குறிப்பேடு சொல்வது போல, அலெக்ஸாண்டரும், யூமனியஸும் அந்த இடத்துக்கு வெறும் தீப்பந்தங்கள் ஏந்தித்தான் இருட்டில் சென்றார்கள். பள்ளத்தாக்கைச் சுற்றியிருந்த மலைகளுக்குள் கால்நடையாகவே சிரமமில்லாமல் செல்வதற்கு ஒரு வழியிருந்தால் மட்டுந்தான் அவர்கள் அப்படி செய்திருக்க முடியும்.

ஆனால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் ரகசியக் குறிப்பேட்டைப் பற்றி தெரிந்துகொள்வதை அவன் விரும்பவில்லை. வான் குளூக் கிளம்ப ஒத்துக்கொண்டதையும், கூப்பர் தன் ஆட்களைப் பரபரப்பாகத் தயார் செய்ததையும் அவன் கவனித்தான்.

இன்னும் காணாமல் இருக்கும் ஒரு துண்டு

யானைத்தந்த கனசதுரத்தில் இருந்த கவிதைகளின் பிரிண்ட்-அவுட்களை வெறுப்போடு பார்த்தான் காலின். பெரும்பாலான ரகசியங்கள் தெரிந்துவிட்டன. ஆனால் அலெக்ஸாண்டர் சென்ற பாதையில் இருந்த ஒரு இடத்தைப் பற்றிய கவிதை மட்டும் இன்னும் புரியவில்லை. மூன்று சகோதரர்களைப் பற்றியும், பாம்பின் முத்திரையைப் பற்றியும் சொல்கின்ற கவிதை அது.

'எனக்குத் திருப்தியில்லை,' என்றான் அவன். 'கியூப்பில இருக்கிற எல்லாக் கவிதைகளும் முக்கியம்னா, இந்த ஒரு கவிதையை நாம விட்டுவிட முடியாது. காணாமல் இருக்கும் இந்த ஒரு துண்டு இல்லாமல், புதிர் முழுமையாகாது. அவங்க குனார் பள்ளத்தாக்கில அவங்க என்னத்த கண்டுபிடிக்க போனாலும், அவங்க தேடினது கிடைக்காது. இந்தப் பாட்டு 'தேடலின் மையத்தை' குறிக்குது. ரகசியம் குனார் பள்ளத்தாக்கில இருக்குதுன்னா, மையம்னா என்ன? இதுதான் மிகவும் முக்கியமான பகுதி. இல்லையா?'

அலைஸ் கவிதையைப் பற்றி குழம்பியிருக்கும் போது, அலைஸின் புருவங்கள் சுருங்கின. 'இது நிஜமாகவே இருண்மையாக இருக்கு. ஆக்ஸஸ் நதிபத்தின பகுதிக்கு அர்த்தம் கண்டுபிடிச்சிட்டோம். ஆனா இந்தப் பாட்டில வேறு எதுவும் விளங்கற மாதிரி தெரியலியே.'

சுக்லா முகப்பாவனை எதுவுமில்லாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவர் மனதில் அடித்துக்கொண்டிருக்கும் புயலை அவர்கள் ஊகித்துக் கொண்டார்கள்.

'இதைப் புரிஞ்சிக்கிறதுக்கு நமக்கு ஒரே வழிதான் இருக்கு,' என்று இறுதியாக காலின் சொன்னான். 'இந்த மாதிரி சூழல்ல விஜய் என்ன பண்ணுவானோ அதத்தான் நான் பண்ணப் போறேன். இணையத்த தேடுவோம் ராஜ்யம் வர்றவரை. ஏதாவது ஒண்ணு வந்துதான் ஆகணும்.'

குனார் பள்ளத்தாக்கு, ஆஃப்கானிஸ்தான்

முன்னாடி சென்றுகொண்டிருந்த 'லாண்ட் ரோவரில்' உட்கார்ந்திருந்தான் விஜய். பின்னாடி வந்துகொண்டிருந்த 'லாண்ட் ரோவர்களை' அவன் திரும்பிப் பார்த்தான். ஆயுதமேந்திய ஆட்கள் நிரம்பிய ஆறு ஸ்போர்ட்ஸ் வாகனங்கள் வந்துகொண்டிருந்தன. உள்ளூர் ஆஃப்கன் வழிகாட்டியைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் காகஸியன்கள் என்பதை விஜய் அவதானித்தான். ஒருவேளை ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்திருக்கிற கூலிப்படையினராய் இருக்கலாம் என்று அவன் ஊகித்தான். அல்லது அமைப்புக்குச் சொந்தமான படையின் ஒரு பகுதியினராக இருக்கலாம். எப்படி என்றாலும், அமைப்பிடம் இருக்கிற ஆள்பலம் பயங்கரமானதுதான்.

இந்தச் சாலை காபுலிலிருந்து ஜலாலாபாத்திற்குச் சென்ற சாலை மாதிரி இல்லை. பள்ளத்தாக்குகளும் செங்குத்தான வீழ்ச்சிகளும் இங்கே இல்லை. இதுவரை, சாலை குனார் நதிக்கு இணையாக அதன் பாதையிலே வந்துவிட்டது. இரண்டு பக்கமும் களங்கள் கொண்ட ஒரு தட்டையான பள்ளத்தாக்குகளின் ஊடாக அது சென்றது. சில இடங்களில் பள்ளத்தாக்கு குறுகியிருந்தாலும், இதுவரை அது அகலமாகத்தான் இருந்தது.

அவர்களின் வலதுபுறத்தில் சாலை, பள்ளத்தாக்கின் ஊடாக பாம்பாக நெளிந்துசெல்லும் குனார் நதியின் கரையோரம்வரை அகன்றிருந்தது. தெற்கில், பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதியின் விளிம்பில் இருந்த சாஃபெட் கோ மலைகளை விஜய் பார்த்தான்

அவர்களின் இடதுபுறம் ஹிண்டு குஷ் மலைகள் ஆஃப்கானிஸ்தானின் முதுகெலும்பாக உயர்ந்து திகிலூட்டுவதாக எழுந்தன. அந்த மலைகளில்தான் எங்கோ கடவுள்களின் ரகசியம் ஒளிந்துகிடக்கிறது.

அலெக்ஸாண்டர் பற்றி தான் செய்த ஆராய்ச்சியை ஞாபகப்படுத்தி

பார்த்தான் விஜய். பாரசீக சக்கரவர்த்தி டாரியஸ் அலெக்ஸாண்டரிடம் தோற்றுப்போன பின்பு, அவனை அவனுடைய பிரபு பெஸ்ஸஸ் என்பவன் கொலைசெய்தான். அவன் அவமானப்பட்டு செத்தான். பெஸ்ஸஸ் ஐந்தாம் ஆர்ட்டசெர்க்செஸ் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டு ஹிண்டு குஷ் மலைகள் வழியாக ஓடி பாக்ட்ரியாவுக்குள் மறைந்திருந்தான், அலெக்ஸாண்டர் தன்னைத் துரத்திவர மாட்டார் என்று நினைத்து. ஆனால் அலெக்ஸாண்டர் ஹிண்டு குஷ் மலைகளை கவாக் கணவாய்வழியாக கடந்தார், ஆபத்துகளைப் பற்றி கவலைப்படாமல். அப்போது அவரின் படைகளுக்கு உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டது. தாங்கள் கொண்டுவந்த மிருகங்களைக் கொன்று மாமிசத்தை உண்டு உயிர்பிழைத்தார்கள். ஆனால் இறுதியில் அலெக்ஸாண்டர் பெஸ்ஸஸைப் பிடித்து, சித்ரவதை செய்து கொன்றார்.

பின்பு அலெக்ஸாண்டர் சோக்டியன் பாறை நோக்கிச் சென்றார். அங்கே ஏதொவொரு இடத்தில் காலிஸ்தெனிஸ் படையை விட்டுச்சென்று, ஒரு ரகசியத் திட்டம் போட்டு, சோக்டியன் பாறைப் பகுதிக்கும், வேறொரு பகுதிக்கும் பயணமானார். அது ஒரு பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் இன்னும் படித்து புரிந்துகொள்ளவில்லை. அவர் அங்கே என்ன சேகரித்து அதை அலெக்ஸாண்டரிடம் கொடுத்தார்? குனார் பள்ளத்தாக்கில் அவர்களுக்கு விடை கிடைக்குமா?

55

ஒரு கைதியின் நினைவுகள்

ராதா முழங்காலைக் கட்டிக்கொண்டு தன் சிறையில் அமர்ந்திருந்தாள். சக்ஸேனா அன்று சொல்லியிருந்த விசயங்களால் அவள் மரத்துப் போயிருந்தாள். அவளைத் தவிர அதைப் பற்றி யாருக்கும் தெரியாது. அமைப்பு தன் பணித்திட்டத்தை முடித்து தன் இலக்குகளை அடைவதை யாரும் தடுக்க முடியாது என்று அவள் மனப்பூர்வமாக நம்பினாள்.

தன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்ற நிஜம் அவளுக்குக் கசப்பாக இருந்தது. அது அவளைத் தின்றுகொண்டிருந்தது. உண்மையிலே இங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது, ஏன் மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன என்பதைப் பற்றியெல்லாம் ஓடிப்போய் உலகத்திற்குச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் அவள் இங்கிருந்து தப்பித்துச்செல்ல வழியே இல்லை என்பதினால்தான், சக்ஸேனா தன்னிடம் அமைப்பின் திட்டங்களை மனம்திறந்து சொன்னார் என்று அவளுக்குத் தெரியும். உள்ளிருந்து திறக்கமுடியாத சிறையில் அவள் அடைபட்டிருக்கிறாள். வெளியே தாழ்வாரத்தில் பொருத்தப்பட்டிருந்த கேமராவின்மூலம் அவளது சிறை கண்காணிப்புத் தொலைக்காட்சியில் 24 மணிநேரமும் தெரிகிறது. எந்த அசாதாரணமான அசைவும் உடனே கண்காணிக்கப்படும். ஒரு ஆண் காவலாளி அவ்வப்போது உள்ளே வந்து அவளைக் கண்காணிக்கிறான். அந்தக் காவலாளியைத் தாக்கிவிட்டு அவள் ஓடி வெளியேறினாலும் பயனில்லை. இந்த மையத்தை அவள் வெளியே இருந்து பார்த்திருக்கிறாள். பூமிக்கடியில் அது புதைக்கப்பட்டிருந்தது. வெளிக்கதவுகளை அவள் பார்த்ததில்லை.

குரூரமான நிஜத்தை அவள் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இங்கிருந்து தப்பிக்க வழியில்லை. யாராவது அதிரடியாக உள்ளே நுழைந்து அவளைக் காப்பாற்றினால் தான் உண்டு. அது சாத்தியமும் இல்லை. ஏனென்றால் அவள் இங்கே இருப்பது யாருக்கும் தெரியாது.

அடையாளக் கம்பங்களைத் தேடுதல்

அவர்கள் ஜலாலாபாத்தை விட்டு வந்ததிலிருந்து ஏற்றம் நிலையாக உயர்ந்துகொண்டே போனது. பள்ளத்தாக்கு இப்போது கணிசமாக குறுகிவிட்டது. இரண்டு பக்கமும் இருந்த களங்கள் மறைந்துவிட்டன; வலதுபுற நதியை இன்னும் பற்றிக்கொண்டு சாலை ஹிண்டு குஷ் மலையடிவாரத்தின் ஊடாக வளைந்து நெளிந்து சென்றது.

கடந்துவந்த பல கிராமங்களில் அவர்கள் விசாரித்து விட்டார்கள். ஆனால், அவர்கள் தேடிய இடத்திற்கு வழிகாட்டும் அடையாளக்கம்பங்கள் எதுவும் தென்படவில்லை.

அவர்கள் இப்போது ஓர் ஆபத்தான பகுதிக்குள் நுழைந்தார்கள். அவ்வப்போது ராக்கெட்வெடிக்கும் நெருப்புச்சத்தம் காதில் விழுந்தது. ஆஃப்கானிஸ்தானில் நடக்கும் யுத்தத்தின் களம் இந்தப் பள்ளத்தாக்கில்தான் இருந்தது. அலெக்ஸாண்டருக்குப்பின் 2,000 வருடங்கள் கழிந்தும், இன்னும் ரத்தக்களறி முடியவில்லை. அவர்கள் பள்ளத்தாக்கில் இருக்கும் செய்தி தலிபனின் உள்ளூர்ப் பிரிவுகளுக்குப் போய்விட்டது என்று கூப்பர், வான் குளூக்கிடம் சொன்னான்.

'அவங்க ஏவுகணைகளை நம்ம வழியில ஏவமாட்டாங்க,' என்று அவன் வான் குளூக்கிடம் சொல்லியிருந்தான். இதுவரை அந்த வாக்குறுதி உண்மையாக இருந்தது. அவர்கள் ஜலாலாபாத்திற்குத் திரும்பிசெல்லும்வரை அது அப்படியே இருக்கும் என்று விஜய் நம்பிக்கை கொண்டான்.

மண்குடிசைகள் நிறைந்த இன்னொரு கிராமம் முன்னே தெரிந்தது. வாகனக் கூட்டம் நின்றது. உள்ளூர் வழிகாட்டி குதித்து தன் வழக்கமான விசாரணையை மேற்கொண்டான்.

இந்த தடவை ஏதோ ஒன்று அவனுக்கு கிடைத்தது. அவன் அகலமாக புன்னகைத்துக்கொண்டு, மலைகளை சைகையால் சுட்டிக்காட்டினான்.

வரிசையில் முதலில் நின்றிருந்த ஸ்போர்ட்ஸ் வண்டியை நோக்கித் தாவினான். அதில் வான் குளூக், கூப்பர் மற்றும் விஜய் அமர்ந்திருந்தனர். கூப்பர் இறங்கிவந்து அவனிடம் ஒருசில வார்த்தைகள் பரிமாறிக் கொண்டான். பின் வான் குளூக்கிடம் திரும்பினான்.

'இந்த கிராமத்துக்காரங்க சொல்றாங்க, இங்கே இருந்து ஒரு

கிலோமீட்டர் தாண்டி மலைக்குச் செல்ற பாதை இருக்குன்னு. ரெண்டுமணிநேரம் மலையேறினா, அங்க பாறைவடிவங்களும், பழங்காலத்து பாறை கல்வெட்டுக்களும் இருக்கிறத பாக்கலாம். அடையாளக் கம்பங்கள அங்க பாக்கலாம்னு கைட் சொல்றான்.'

வான் குளூக் வழிகாட்டிமீது பார்வையை ஏவினான். 'அவன் பொய் சொல்லலைங்றது நமக்கு எப்படி தெரியும்? நாம அங்க போம்போது, 45,000 வருசங்களுக்கு முன்பு குகைமனுசங்க விட்டுட்டு போன பாறைகள்ல வெறும் கீறல்கள்தான் இருக்கும்.'

கூப்பர் பல்லிளித்தான். 'நா அவன்கிட்ட செக் பண்ணினேன். அவன் நம்மகூட வர்றான். நாம தேடுறது கிடைக்கலைன்னா என்ன ஆகும்னு அவனுக்குத் தெரியும்.'

'நல்லது. அப்போ போகலாம்.'

வாகனவரிசை மீண்டும் புறப்பட்டது.

தப்பிக்கும் திட்டம்

ராதாவின் மனதில் ஒரு சிந்தனைவிதை துளிர்த்தது. யாரோ ஒருவர் வெளியே இருந்து இந்த மையத்தின் பாதுகாப்பு அரண்களைத் தாண்டி உள்ளே வந்தால்தான் அவளைக் காணமுடியும் என்ற புரிதல்தான் அந்த சிந்தனையைத் தூண்டியது.

ஒருவேளை இங்கிருந்து அவள் ஒரு சேதியை அனுப்பும் வழியைக் கண்டுபிடித்தால்? அன்வர் அப்படித்தான் இம்ரானுக்கு அனுப்பினார். அன்வரின் முடிந்துபோன விதியைப் பற்றிய கசப்பான ஞாபகமும் சேர்ந்துவந்தது; அதை அவள் கவலை உணர்வோடு புறந்தள்ளினாள்.

தான் அழியப்போகிறோம் என்று அவள் உணர்ந்தாள். விஜய் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் அவளை பேரத்திற்கான பண்டமாக பிடித்துவைத்திருக்கிறார்கள். அவர்களின் நோக்கங்கள் நிறைவேறியவுடன், அவள் கொல்லப்பட்டுவிடுவாள். அல்லது இன்னும் மோசமாக, அவர்களுடைய பயங்கரமான பரிசோதனைகளுக்கு அவள் இன்னொரு எலியாகப் பயன்படுத்தப்படுவாள். ஃபீரிமனின் பிராக்ஜெட்டைப் பற்றி சக்ஸேனா தன்னிடம் சொல்லியது அவளுக்கு ஞாபகம் வந்தது. மரபியல் சம்பந்தமாக அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

அது முக்கியமில்லை இப்போது. தகவல்தொழில்நுட்பப் பிரிவுக்குள்

சென்று அங்கிருந்து செய்தி அனுப்பமுடியுமா என்று பார்க்கவேண்டும். அதுதான் முக்கியம்.

முயற்சியாவது பண்ணிப் பார்க்கலாம் என்று ராதா முடிவெடுத்தாள். தோல்வியின் விளைவுகள் அவளுக்குத் தெரியும். சக்ஸேனாவும் குழுவும் சேர்ந்து தங்கள் திட்டப்பணியைக் கேள்விகேட்பார் யாருமில்லாமல் செய்துகொண்டிருப்பதை அவள் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

நம்பிக்கை ஒளிக்கீற்று

காலின் மடிக்கணினிமுன் உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டான். வெளியே இருட்டு. அவன் பலமணி நேரமாகவே வேலை செய்துகொண்டிருந்தான். எழுந்து ஜன்னலுக்குப் போனான். குன்றின் அடிவாரத்தில் சின்ன கிராமத்தின் விளக்குகள் தெரிந்தன.

பாட்டின் ஒரு பகுதியில் அவன் வேலை செய்து முடித்துவிட்டான். அல்லது அப்படி அவன் நினைத்துக் கொண்டான். ஆனால் அது ஒன்றும் பிரயோஜனமில்லை.

மற்றவர்களுடன் செய்த விவாதத்தையும், தன் சுயசிந்தனையையும், இணையத்தில் செய்த தேடல்களையும் வைத்து, ஒரு முடிவுக்கு வந்தான்: அந்த "உப்பில்லாத கடல்" ஆரல் கடல் என்னும் ஏரியைக் குறிக்கிறது என்று. அதற்கு ஆக்ஸஸ் நதி போஷாக்கு அளிக்கிறது. இன்றைய காலத்தில் அதன் பெயர் அமு டார்யா.

ஆரல் கடல் 60 வருடத்திற்கு இருந்த நீர்நிலையின் மெலிந்த நிழலாக இன்று இருந்தாலும், அது வளமானதாக இருந்தது போன்றுதான் தெரிந்தது. முதலில், ஆக்ஸஸ் நதிக்கு மிக நெருக்கமான கடல். இரண்டாவது, ஒருவர் பால்க்கிலிருந்து வருகிறார் என்றால், அவர் ஆக்ஸஸைக் கடந்துதான் ஆரல் கடலுக்குப் போகமுடியும். மூன்றாவது, ஆரல் கடல் அசலான புத்தம்புதிய நீர்க்கடல். அதற்குள் வந்துகொண்டிருந்த நதிகளின் நீர் திசைதிருப்பிவிடப்பட்டதால், கடல் முன்னாடி இருந்த வடிவத்தை இழந்து சுருங்கி பல பதின்ஆண்டுகளில் உப்பாக மாறிவிட்டது. அதனால் நீரில் விஷப்பொருட்களும் உப்பும் குவிந்தன.

பாட்டில் குறிக்கப்பட்ட கடல் அதுதான் என்பதற்கு குறைந்த பட்சம் மூன்று நிபந்தனைகளை ஆரல் கடல் திருப்திபடுத்துகிறது. ஆனால் அதைத் தாண்டி அவனுக்கு வெறும் வெறுமைதான் கிடைத்தது.

ஆக்ஸஸ் நதிக்கு அல்லது ஆரல் கடலுக்குத் தொடர்புடைய மூன்று சகோதரர்களைத் தேடிப்பார்த்ததில் ஒரு மண்ணும் கிடைக்கவில்லை.

"கண்" என்பதை மொழிபெயர்த்த சுக்லாவின் மொழிபெயர்பின் மீது அவனுக்குச் சந்தேகம் வந்தது. ஒருவேளை அது வெறும் "கண்" என்று மட்டுமாகவே இருந்து, நதியைக் குறிப்பிடாமல் இருந்தால்? அது ஒரு புதிய புதிர்க்குத்தான் இட்டுச்செல்லும்: "வேகமாக தவழும் கண்" என்றால் என்ன அர்த்தம்?

காலின் பெருமூச்செறிந்தான். அவன் நினைத்தது அது ஒன்றும் எளிதானது அல்ல. விஜய் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறான் என்று அவன் ஆச்சரியப்பட்டான். அவனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லையே.

அவன் மீண்டும் மடிக்கணினியின் முன் அமர்ந்தான். நேரமாகிக் கொண்டிருக்கிறது. அவனுக்கு; விஜய்க்கும் ராதாவுக்கும்.

56

மலைகளில்

வான் குளூக் ஒரு சிறிய பாறைமீது உட்கார்ந்து, தன்குழு அடையாளக் கம்பங்களைத் தேடுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். பகல்வெளிச்சம் மங்க தொடங்கியது. ஆனால் அவர்கள் கொண்டுவந்திருந்த திறன்மிக்க அசையும் விளக்குகளால் மலைப்பகுதியிலும் பாறைகளிலும் வெளிச்சம் பரவியது.

மலையேற்றம் சொன்னமாதிரியே இரண்டு மணிநேரத்தை எடுத்துக் கொண்டது. இங்கேதான் கைட் நிற்கும்படி சொன்னான்; கவிதையில் சொல்லப்பட்டிருந்த அடையாளங்களைத் தேடும் இடம் இதுதான் என்று சுட்டினான்.

அந்தச் சுற்றுப்புறம், குறைந்தபட்சம் கவிதையின் ஒரு பகுதியோடு பொருந்தித்தான் இருந்தது. அவர்கள் இப்போது குனார் நதிக்கு மேலே இருந்தார்கள். பள்ளத்தாக்குத் தரையிலிருந்து குறைந்தபட்சம் 2000 அடிக்கு மேலே ஒரு மாதிரியான விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறோம் என்று வான் குளூக் கணக்கு போட்டான்.

தன் இலக்குகள் நிறைவேறினால் என்ன நடக்கும் என்பது பற்றி அவன் உட்கார்ந்துகொண்டே யோசித்தான். அமைப்பில் இன்னும் ஒரு படி மேலே; உயர்ந்த இடத்தின் அருகில். ஒருவேளை அமைப்பை நடத்தும் ரகசியக்குழுவில் ஓர் இடம். அவனது குடும்பத்தார்கள் பல நூற்றாண்டுகளாக அமைப்பின் உறுப்பினர்கள். அவர்கள் விசுவாசத்தோடு சேவை செய்தார்கள், அவர்களின் சுதந்திரமான கடற்கொள்ளை நாட்களில் கூட. ஆனால் அந்த கால கட்டத்திலிருந்து வான் குளூக் நீண்ட தொலைவு வந்துவிட்டான். அவர்கள் பணக்காரர்கள்; நிறைய அதிகாரம் படைத்தவர்கள்; மிகவும் மரியாதைக்குரியவர்கள். இத்தனை வருடங்களில் அமைப்பில் படியேறி முன்னேறியவர்கள்.

அமைப்பில் கிடைக்கப்போகும் அதிகபட்ச வெகுமதிக்கு மிக அருகில் கைக்கெட்டும் தூரத்தில் அவன் இன்று வந்துவிட்டான். அமைப்பை நடத்தும் மனிதனோடு ஒரே இடத்தில் அவனை அமரவைக்கும் பதவி அது. அசலான வம்சாவளி கொண்ட பெரிய அந்தஸ்து அது. அமைப்போடு ஆரம்பமாகி ஆயிரக்கணக்கான வருடங்களாக உடைபடாமல், தூய்மையோடு தொடர்ந்து கொண்டே இருக்கும் ஒரு வம்சாவளி.

அவன் கவனித்துக் கொண்டிருந்தபோது, கைவிளக்குகள் வளரும் இருட்டைத் துளைத்து தேடுகின்ற மனிதர்களை நிதர்சனமாகக் காட்டின. அவனது ஆழ்பார்வை விஜயின்மீது விழுந்தது. அவனை வான் குளூக்கால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனும் அவனது வருங்கால மனைவியும் அழியப்போகிறார்கள் என்று அவனுக்குத் தெரியாதா? அவன் நிச்சயமாக முட்டாள் இல்லை. ஆனாலும் கனமான பாதகங்களின் மத்தியில் கூட அவன் விடாப்பிடியான உத்வேகத்தோடு இருப்பது போல தோன்றுகிறான். அவனிடம் மாற்றுத்திட்டம் ஏதாவது இருக்குமோ? ஆனால் விஜய் நிராயுதபாணி என்று வான் குளூக்குக்குத் தெரியும். அவன் தலையாட்டினான். அது ஒன்றும் முக்கியமில்லை. புதிர்களை விடுவிப்பதிலும் விடுகதைகளை உடைப்பதிலும் இந்த மனிதன் திறனுடையவன். இன்று அவனாகவே அவர்களுக்கு உதவிசெய்கிறான். இதற்கு மேல் அந்த ஐரோப்பியன் வேறொன்றும் கேட்பதற்கில்லை.

கைவிளக்குகள் ஏந்திய இரண்டு ஆயுதந்தரித்த மனிதர்களோடு விஜய் இருட்டில் நகர்ந்தான். தன்விதியைப் பற்றி யோசிக்க முயலாமல், பாறைகளிலும் மலைப்பக்கத்திலும் கவனம்குவித்தான். கல்வெட்டுக்களையும், படங்களையும் பற்றி கிராமத்தார்களும், வழிகாட்டியும் சொன்னது சரிதான். சுற்றியிருந்த சிறுபாறைகளில் கரடுமுரடாக வரையப் பட்டிருந்த கலைச்சித்திரங்களும், எழுத்தும் நிரம்பியிருந்தன. ஆனால் எதுவும் கவிதையில் சொல்லப்பட்டிருந்த வர்ணனையோடு ஒத்துப்போகவில்லை.

மலையின் இன்னொரு பக்கம் சென்று, மலையைக் குடைந்த ஓர் ஆழமான குகை, சிறுவாசல் போல இருப்பதைக் கண்டான். சில அடிகள் நீளத்தில் அது ஒரு பாறைச்சுவரில் முடிந்தது. நுழைவாயில் செவ்வக வடிவத்தில் இருந்தது. அதற்கு மேலே ஒரு சதுரத் துவாரம், பாறைமீது வரைந்தது போன்று தெரிந்தது. ஆனால் அது மிகவும் சிறியது; யாரும் ஊர்ந்து உள்ளே போகமுடியாது. நுழைவாயில் அடைபட்டால், நுழையும்வழியாக அந்தச் சதுரத்துவாரம் பயன்படாது எனும்போது

அதன் நோக்கம்தான் என்ன என்று அவன் ஆச்சரியப்பட்டான். குகையின் பின்பக்கம் இருந்த பாறையின்மீது கைவிளக்குகளைத் திருப்புமாறு அவன் காவலாளிகளுக்கு கைகாட்டினான்.

இயற்கையான குகைக்குள் அடங்கியிருந்த பாறை முகத்தில் ஒரு வேட்டைக் காட்சி வரையப்பட்டிருந்ததை விஜய் கவனித்தான். இரண்டு வில்வீரர்கள் என்னவென்று தெரியாத ஒருமிருகத்தை வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அருகில் ஒரு சின்ன மிருகம் இருந்தது. ஒருவேளை அது நாயாக இருக்கலாம். சரியாக சொல்வது கடினம்; ஏனென்றால் படங்கள் கரடுமுரடாக வரையப்பட்டிருந்தன.

விஜய்க்குள் ஏற்பட்ட எதிர்வினை, சற்றுமுன்பு வெளிப்பட்ட வான் குளூக்கின் எதிர்வினையைப் போல்தான் இருந்தது. இவையெல்லாம் கரடுமுரடான குகை ஓவியங்கள்; ஆயிரக்கணக்கான வருடங்கள் வயதுடையவை. குகைகளில் வாழ்ந்து வேட்டையாடி பிழைத்த மனிதர்கள் வரைந்தவை. அவர்களின் தேடலுக்கும் இந்த பாறை ஓவியங்களுக்கும் என்ன சம்பந்தம்?

கலைப் படைப்புகளை விட்டு விஜய் விலகிச் செல்ல முயன்றபோது திடீரென்று அவனது கவனத்தை ஏதோவொன்று ஈர்த்தது.

ஓவியத்தில் இருந்த ஓர் அம்சத்தை அவன் கவனிக்கத் தவறியிருந்தான். அவன் உற்றுப்பார்த்து நின்ற காட்சிக்கு மேலே, பாறையில் குடைந்து வரையப்பட்ட, ஐந்துமுனைகள் கொண்ட ஒரு நட்சத்திரத்தையும், புறத்தே ஒளியுமிழும் சின்னகோடுகள் சூழ்ந்த ஒரு வட்டத்தையும் அவன் பார்த்தான். தான் பார்த்துக்கொண்டிருந்தது என்ன என்பது அவனுக்குப் புரிந்தது.

'இது இங்கே இருக்கு,' என்று அவன் கூவினான். 'முதல் அடையாளக்கம்பம்.' அவன் ஓவியத்தை உற்றுநோக்கினான். இதில் சுக்ரா எங்கே இருக்கிறார்? பிருகு முனிவரின் மகன். இங்கே வரையப்பட்டிருக்கும் இரண்டு வேட்டைக்காரர்களில் அவரும் ஒருவரா?

வான் குளூக் வேகமாக ஓடிவந்தான், விஜயின் கண்டுபிடிப்பைச் சரிபார்க்க. மற்றவர்கள் அப்படியே ஓடிவந்தார்கள்.

'பகலும் இரவும் சந்திக்குது,' என்று விஜய் விளக்கினான். 'சூரியனும் நட்சத்திரமும் பகலையும் இரவையும் குறிக்குது. ஒரே ஓவியத்தில. அதுதான் இது.'

'ம்ம்ம்ம்.' வான் குளூக் ஓவியத்தை ஆழமாய் கவனித்தான். 'நீ

சொல்வது சரிதான். ஆனால் நாம இப்ப எப்படி சிவாவின் கம்பை கண்டுபிடிக்கிறது?'

கண்டுபிடிப்பில் ஏற்பட்ட விஜயின் கிளர்ச்சி அடங்கியது. அவனிடம் விடை இல்லை.

57

முதல் அடி

அதைச் செய்வதற்கு நேரம் வந்துவிட்டது என்று ராதா தீர்மானித்தாள். காலம் கடக்கும்வரை அவள் காத்திருக்க விரும்பவில்லை. மூச்சை உள்ளே இழுத்துக்கொண்டாள். குளிப்பதற்கோ அல்லது கழிவறை செல்வதற்கோ விரும்பும் போதெல்லாம் அவள் காவலாளியை அழைப்பதற்கு அழுத்தும் பட்டனை இப்போது அழுத்தினாள். எல்லோருக்கும் பொதுவான ஒரு பெரிய குளியலறை அந்தத் தளத்தில் இருந்தது. எல்லோரும் ஒரே நேரத்தில் அதைப் பயன்படுத்துவதற்காக, அது சின்னச்சின்ன தடுப்புகளால் பிரிக்கப்பட்டிருந்தது.

வழக்கம்போல் மணிச்சத்தம் கேட்டவுடன் காவலாளி உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு சிறிய கம்பு இருந்தது. அது மின்னதிர்ச்சி கொடுக்கும் ஆயுதம் போல் பயன்படுத்தப்படுவது. அதிலிருக்கும் மின்சக்தியால் எதிரிகளை அதிர்ச்சியடைய செய்யலாம்; காயப்படுத்தலாம்; அசையாமல் இருக்கச் செய்யலாம். காவலாளி அதை அவள் மீது பயன்படுத்தியதில்லை. ஆனால் அவன் அதை மற்றவர்களிடம் பிரயோகித்ததை அவள் பார்த்திருக்கிறாள். மற்றவர்கள், குறிப்பாக பெண்கள், கம்பின் மின்னழுத்தத்தில் நெளிவதைப் பார்ப்பதில் அவனுக்குப் பரமசந்தோசம். தான் போட்ட திட்டத்தில் அவள் அசௌகரியமாக உணர்ந்தாலும், காவலாளிமீது அவளுக்கு இரக்கமில்லை; அவனுக்கு அவள் செய்ய நினைத்ததுபற்றி வருத்தமும் இல்லை.

ராதா வேகமாக தாழ்வாரத்தில் விரைந்தாள்; மிக அவசரமாக ஓடுவதுபோல் நடித்தாள். அவள் வேகத்திற்கு ஈடுகொடுக்க அவனும் வேகமாக நடைபோட்டான். அவன் முகம் முழுவதும் பல்லிளித்ததை ஓரக்கண்ணால் அவள் திரும்பிப் பார்த்தாள். அந்த மனிதனின் தேகம் வளைந்திருந்தது. தன் திட்டத்தை நிறைவேற்ற அவளை மேலும் உறுதியாக்கியது அது.

கழிவறைகளின் வரிசையை அவள் அடைந்தாள். வெளியே இருந்து திறக்கக்கூடிய கதவைக் கொண்டிருந்தது ஒவ்வொரு கழிவறையும். அவள் கதவின் தாழ்ப்பாளைத் திறந்தபோது, தீர்க்கமாக யோசித்தாள். கதவு மெலிதான தட்டியால் அமைக்கப்பட்டிருந்தது. அது அவளது நோக்கத்திற்கு சரிபட்டு வருமா?

அதைக் கண்டுபிடிக்க ஒரேஒரு வழிதான் இருக்கிறது. அவள் உள்ளே சென்றாள். உள்பக்கம் தாழ்ப்பாள் இல்லை. அப்படி இருந்தால், கைதிகளுக்கு அவர்களுக்கே உரிய ஓர் அந்தரங்க வசதி ஏற்பட்டு விடும் என்று கருதப்பட்டிருந்தது.

அவள் காத்திருந்தாள். அவளது திட்டம் அதிர்ஷ்டம் தீர்மானிக்கும் பல காரணிகளைச் சார்ந்திருந்ததால், அது வேலை செய்யுமா என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அந்த எண்ணத்தை மனதிலிருந்து எறிந்துவிட்டு தான் நினைத்தது நடக்கவேண்டும் என்று உறுதியாக எண்ணினாள்.

நிமிடங்கள் கடந்தன.

ஒன்றும் நடக்கவில்லை.

உள்ளே கழிவறையில் நிசப்தம்.

வெளியேயும் அப்படித்தான்.

அவள் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டாள். பொறுமை.

இன்னும் ஒன்றும் நடக்கவில்லை.

சரி, விட்டுவிடலாம் என்று அவள் தீர்மானித்தபோது, காவலாளி கதவுப்பக்கம் வரும் சத்தம் கேட்டது.

அவள் எழுந்துநின்றாள். இதுதான் சரியான நேரம். தாக்குவதற்கான சரியான கணத்தை அவள் கணக்கிடவேண்டும்.

தாக்கப்படும் தூரத்தில்தான் காவலாளி இருக்கிறான் என்பதை ஊகித்தவளாய், அவள் தன் உடலின் முழுபாரத்தையும் பலத்தையும் கொண்டு கதவுமீது மோதினாள்.

கதவு அதிரடியாய் திறந்து காவலாளியின் முகத்தில் அறைந்தது. அவன் பின்னாடி தள்ளாடிச் சரிந்துவிழுந்தான்.

அவன் மூக்கைப் பிடித்துக்கொண்டு தரையில் கிடந்தபோது அவனைத் தாண்டி அவள் ஓடினாள்.

ஆனால் அவன் வேகமாக சுதாகரித்தான். ராதா என்ன செய்ய முயல்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டவனாய், அவன் எழுந்துநிற்க முயன்றான். உடைபட்ட மூக்கிலிருந்து கொட்டிய ரத்தம் அவன் முகம் முழுவதும் பெருக்கெடுத்தது. அவனின் வலதுகை மின்கம்பைப் பற்றிக்கொண்டு அதைப் பயன்படுத்தும் தயார்நிலையில் இருந்தது.

ஒரு வினாடி ராதா பீதியடைந்தாள். அவள் திட்டம் தோற்றுவிட்டது. அவனை ஓங்கி அறைந்துவிடலாம் என்று நினைத்தாள்.

பின்பு அவளது மனம் எஃகைப்போல உறுதியானது. பணிப்படைக்குழுவில் இணைந்தவுடன் அவள் பெற்றிருந்த தாக்குதல் பயிற்சியில் தான் கற்றுக்கொண்ட விஷயங்கள் அவளுக்கு ஞாபகம் வந்தன. தன் இடுப்புகளைக் நெம்புகோலாக்கி, அவள் ஒருகாலை காவலாளிமீது இறக்கினாள். கராத்தே அறையின் வன்மையோடு, அவளது குதிக்கால் அவனது தலைப்பக்கத்தில் விழுந்து அடித்தது.

காவலாளி மீண்டும் விழுந்தான்.

அவள் அவனது மின்கம்பைப் பிடுங்கி அதை உற்று கவனித்தாள். மின் ஆயுதத்தின் மாற்றப்பட்ட வடிவம் அது என்று அவள் நினைத்தாள். அதில் வெவ்வேறு மின்னதிர்ச்சி நிலைகளை உண்டாக்கும் வசதி இருந்தது. அதை அவனது உடலின் மீது வைத்து அழுத்தினாள்.

காவலாளி கொஞ்சநேரம் அதிர்ந்தான். பின்பு நிர்ச்சலனமானான். ஆனால் அவன் மூர்ச்சையாகி விடவில்லை; கொஞ்சம் அசைவற்று கிடக்கிறான்; அவ்வளவுதான். அவன் மீள்வதற்கு எவ்வளவு நேரம் ஆகுமென்று அவளுக்குத் தெரியவில்லை. இந்த நேரத்தை அவள் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன் சுவாசம் கனமானதை, உடல்முழுவதும் வேர்த்துக் கொட்டுவதை அவள் புரிந்துகொண்டாள். இதுவரை அவள் சரியாகவே பண்ணிவிட்டாள்.

மிகக்கடினமான கட்டம் இன்னும் வர வேண்டியிருந்தது.

சிவாவின் கம்பைத் தேடி

விஜய் உட்கார்ந்து மண்டையை பிய்த்துக் கொண்டான். கவிதையைப் பற்றி அவர்கள் சொன்னது சரிதான். அது குனார் பள்ளத்தாக்கைத்தான் குறிக்கிறது. நதிக்கு மேலாக இருந்த விளிம்பை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். பகல் இரவைச் சந்திப்பதையும்

கண்டுகொண்டார்கள்.

ஆனால் சுக்ரா எங்கே? சிவானின் கம்பை எப்படி தேடுவது?

'நான் மத்தவங்கள கூப்பிடுறேன்,' என்று அவன் வான் குளூக்கிடம் சொல்லிவிட்டு, செயற்கைக்கோள் போனிலிருந்து தன் கோட்டை ஃபோனுக்கு தொடர்புகொண்டான்.

'சுருக்கமா முடிச்சிட்டா நல்லது,' என்று ஐரோப்பியன் சொன்னான். இருட்டாகிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் இரவைக் கழிப்பதற்கு அவர்கள் கருவிகளையும் அத்தியாவசியப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தாலும், தேடலை முடித்துவிட்டு திரும்புவதிலே அவன் கவனமாக இருந்தான்.

ஃபோன் கொஞ்சநேரம் ஒலித்துக்கொண்டே இருந்தது. பின் ஒரு களைத்த குரல் இணைப்பில் வந்தது. 'யாரு?' அது காலின்.

'ஹே. எனக்கு ஒரு உதவி வேணும்,' என்று நிலைமையை வேகமாகச் சொன்னான் விஜய். 'மத்தவங்களும் அங்க இருக்காங்களா? இத கண்டுபிடிக்கிறதுக்கு கொஞ்ச நேரத்த செலவு பண்ண முடியுமா?'

'அவங்க எங்க இருக்காங்கன்னு தெரியல,' என்று பதில் வந்தது. 'ஆனா, நீயும் நானும் சேர்ந்து கண்டுபிடிக்க முடியுமான்னு பார்ப்போம். வேட்டையாடுற படம் ஒண்ணு இருக்குன்னு நீ சொல்ற. அதுக்கு மேல ஒரு நட்சத்திரமும், 'சூரியனும் இருக்குது.'

'சரியா சொன்ன. பாட்டு சொல்றது, பகலும் இரவும் சந்திக்குதுன்னு; சுக்ரா சிவாவின் கம்புக்கான வழியை காட்டுறார். ஆனால் சுக்ராவுக்கு பொருத்தமா இருக்கிற மாதிரி என்னால எதையும் பாக்க முடியல.'

'ம்ம்ம்ம். ரொம்ப சிக்கலா இருக்கு. சரி. எனக்கு மறுபடியும் ஓவியத்த விளக்கமா சொல்லு, சின்ன சின்ன விவரங்களையும் சேத்து. பாத்துக்கோ.'

மலைப்பக்கம் இருந்த ஓட்டையைப் பற்றியும் பாறைமுகத்தின் ஓவியங்களைப் பற்றியும் விஜய் விவரித்தான்.

'பைத்தியகாரத்தனமா இருக்கு,' என்று காலின் புலம்பினான். 'படத்தில எல்லா விவரங்களும் இருக்கும்னு நாம நினைச்சோம். பகல், இரவு, சுக்ரா. ஒரு சந்தோசமான குடும்பமா. எல்லாம் ஒரு சூலாயுதத்தை நோக்கி. ஆனா அவ்வளவு சுலபமா இல்ல. இல்லியா?'

காலின் பிதற்றிக்கொண்டே இருக்கும்போது விஜய் கவனித்தான். இதுதான் அவனது நண்பனுடைய சிந்திக்கும் பாணி.

'அந்தப் படம் நினைச்சது மாதிரி வழியைக் காமிக்கலன்னா, வேறு ஏதாவது காமிக்கலாம்.'

'சரி. என்ன அது?'

'இது ஒரு பெரிய ஊகம்தான். ஆனால் நீ முயற்சி பண்ணிப் பாக்கலாம். நாம பேசிக்கிட்டே இருக்கும்போது, நான் கூக்குள்ல சுக்ராவ தேடிப்பார்த்தேன். என்ன வந்திச்சுன்னு நினைக்கிற?

58

ராதாவின் தீரச்செயல் ஆரம்பமாகிறது

தரையிலிருந்து மின்கம்போடு எழுந்தாள் ராதா, அதைத் தானே எடுத்துக்கொவது என்று அவள் தீர்மானித்தாள். காவலாளியின் அனுமதி அட்டை தனக்குப் பயன்படும் என்பதால் அதையும் அவள் எடுத்துக்கொண்டாள். அவன் பாக்கெட்டில் வேறெதுவும் உபயோகமா இல்லை.

அவன் எப்போது எழுந்திடுவான் என்று தெரியாது. அதனால் நேரத்தை வீணடிக்காமல் உடனே அந்த இடத்தைவிட்டு ஓடிவிடுவது என்று அவள் தீர்மானித்தாள். அவனுக்கு சுயநினைவு வந்துவிட்டால், நிச்சயமாக அவன் எழுந்து கூக்குரல் எழுப்புவான். அப்புறம் ஒரே நரகக்கூச்சல்தான்.

அப்புறம் என்ன நடக்கும் என்று அவள் யோசித்தாள். அவளைப் பொறுத்தவரையில் எதுவும் சந்தோசமா நடக்கப்போவதில்லை; அது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் அவள் பாலத்தை அடைந்துவிட்டால், அதைக் கடந்துவிடுவாள்.

மின்னேணி அவளது அடுத்த இலக்கு. இந்தத் தளங்களில் ஒன்றும் இல்லை. மையத்தின் நரம்பு அடிமட்டத் தளங்களில் இருக்கிறது.

மிகவும் தாழ்வான மூன்று அடிமட்ட நிலைகள், என்று அவள் தனக்குத்தானே ஞாபகப்படுத்திக் கொண்டாள். எட்டு சிறைக்கூடத்தளங்கள் தரைநிலைக்குக் கீழே இருக்கின்றன.

சக்ஸேனா முன்பு காட்டியிருந்த இடத்தில் தகவல்தொழில்நுட்பப் பிரிவை அவள் பார்த்திருக்கவில்லை. ஃபிரீமனின் பிராஜெக்ட் ஆக்ரமித்திருக்கும் தளங்களில் ஏதாவது ஒன்றில்தான் அது இருக்கவேண்டும்.

ஆனால் மருத்துவமனை கவுனில் அவள் இப்படியே தளங்களில்

சுற்றிக்கொண்டிருக்க முடியாது. அவள் ஒரு சிறைக்கைதி என்று எளிதாக அடையாளம் காணப்படுவாள். ஆடை மாற்றுவதற்கு வழியில்லை என்பது அவளது பிரச்சினை; தன்னுடைய ஆடைகள் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்று அவளுக்குத் தெரியாது.

ஒரு நிமிடம் யோசித்தாள். ஒரு வழி அவளுக்குள் தோன்றியது. அவளுக்கு அதுபற்றி நம்பிக்கை வரவில்லை. ஆனால் அது ஒன்றுதான் வழியென்று தோன்றியது.

மின்னேணிக் கதவுகள் திறந்தன. மூச்சைப் பிடித்துக்கொண்டு, மின்கம்பை கெட்டியாகப் பற்றிக்கொண்டாள்; யாராவது திடீரென்று வெளியே வந்தால்.

ஆனால் மின்னேணிக்குள் யாருமில்லை. காவலாளியின் அனுமதி அட்டையைப் பயன்படுத்தி, தான் முன்னே சென்றிருந்த தளத்திற்குச் செல்ல, பட்டனை அழுத்தினாள்.

மின்னேணி சப்தமில்லாமல் இறங்கி அவள் சொன்ன தளத்திற்கு வந்து சேர்ந்தது.

கதவுகள் அமைதியாக பக்கவாட்டில் விரிந்து திறந்தன.

ராதா ஒரு கணம் படபடத்த இதயத்தோடு நின்றாள். மேற்கொண்டு தப்பிக்கும் பாதையிலே சென்றுவிட வேண்டும் என்று அவள் தீர்மானமாக இருந்தாள். ஆனால் கதவை மூடிவிட்டு அவளை சிறைக்குள் திரும்பிப் போகச்சொனனது அவளது உடம்பிலிருந்த ஒவ்வொரு நரம்பும்.

ஆனால் இப்போது திரும்புதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவள் ரொம்ப தூரம் வந்துவிட்டாள். காவலாளியை அவள் தாக்கியது கவனிக்கப்படாமல் இருக்கப்போவதில்லை. அல்லது தண்டனை கிடைக்காமல் இருக்கப்போவதில்லை.

ராதா மூச்சைப் பிடித்துக்கொண்டு மின்னேணியை விட்டு வெளியேறினாள்.

மந்திரத்திற்குக் காத்திருத்தல்...

விஜய் அழைப்பைத் துண்டித்தான். காலின் சொன்னதில் அர்த்தமிருக்கிறது. அவனால் இதைத்தவிர வேறெந்த வழியையும் யோசிக்கமுடியவில்லை. அவனும் காலினும் அதைப் பற்றி யோசித்தது சரிதான் என்று அவன் நம்ப மட்டுமே முடியும்.

அவன் மீண்டும் மற்றவர்களோடு இணைந்தபின்பு அவனை வான் குளுக் கேள்விகேட்பது போல பார்த்தான்.

'நாம இங்க காத்திருக்கணும்,' என்று விஜய் அவனிடம் சொன்னான். காலின் என்ன கண்டுபிடித்து வைத்திருக்கிறான் என்பதையும் சொன்னான். 'இன்னும் கொஞ்சநேரம். சூரியன் கிட்டத்தட்ட மறைந்துவிட்டான். நாம வடமேற்கு நோக்கிப் பாக்கணும்.'

கூப்பர் அவநம்பிக்கையாகத் தெரிந்தான். 'இது சரியா வரும்னு நினைக்கிறியா? எனக்கென்னமோ புரியாத பாஷைமாதிரி தெரியது.'

'இன்னும் கொஞ்ச நேரத்தில நீங்க பாக்கபோறதில ஒரு விஞ்ஞானம் இருக்கு; கடவுள்களோட ரகசியத்தில இருக்கிற மாதிரி,' என்று விஜய் திருப்பிக்கொடுத்தான்.

அடிவானத்தின் கீழே சூரியன் இறங்கி மூழ்கியது. மலைகள் முழுவதும் இருட்டு பரவியது. கனத்த மௌனம் காற்றில் தொங்கியது. அவர்கள் காத்திருந்து கவனித்தனர்.

பல நிமிடங்களாக அங்கு ஒன்றும் நிகழவில்லை.

விஜய்க்கு வேர்த்தது. அது ஏன் நிகழமறுக்கிறது?

மருத்துவமனையில்

இம்ரான் மருத்துவமனைப் படுக்கையில் இறுக்கமான முகத்துடன் படுத்துக் கிடந்தார். வலியினால் அல்ல; ராதாவைத் தேடாமல், தன்னைக் கொல்ல முயன்றவர்களை வேட்டையாடாமல், தான் இங்குவந்து படுத்துக்கிடக்கிறோமே என்ற கவலையால்.

விஜய் நேற்று வந்து அவரைப்பார்த்து நடந்தவற்றை எல்லாம் சொன்னான். விஜயைப் பார்த்ததில் அவர்க்கு சந்தோசம்; அதை அவனும் பகிர்ந்துகொண்டான்.

'நீங்க செத்துபோயிடுவீங்களோன்னு நாங்க எல்லோரும் நினைச்சோம்,' என்று விஜய் இம்ரானிடம் சொன்னான். 'கடவுளுக்கு நன்றி. நீங்க பிழைச்சிட்டீங்க.'

'கிட்டத்தட்ட,' என்று அவர் பலகீனமாகப் புன்னகைத்தார். குண்டின் சிறுதுண்டு அவரின் முக்கிய உறுப்புகளையும், இதயக்குழாய்களையும் தொடாமல் விட்டுவைத்தது. அதனால் அவர் உயிர்பிழைத்தார். ஜன்னல் கண்ணாடிக்கதவு உடைந்த நேரத்தில் அடுத்த அறைக்குள் தாவிய

அவரது கணநேர புத்திசாதுர்யம் அவரைக் காப்பாற்றிவிட்டது. காயங்களினால் ரத்த இழப்பு ஏற்பட்டு அவரைப் பலகீனமாக்கியது. ஆனால் இன்னொரு நாள் சண்டைபோட அவர் உயிரோடு இருப்பார். நிஜமாகவே, என்று இம்ரான் சோகமாக நினைத்தார்.

விஜய் சென்றவுடன் அவர் வைத்துக்கு ஃபோன் பண்ணி, ராதாவைத் தேடும் முயற்சியிலும், பணிப்படைக்குழுவின் செயல்பாடுகளிலும் தன்னையும் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினார்.

இம்ரானோடு விவாதம் செய்யமுடியாது என்று வைத்துக்குத் தெரியும். அதனால் அவர் தயக்கத்துடன் ஒத்துக்கொண்டார். அவர்க்கு நிலைமை புரியும். இம்ரான் களத்தில் இல்லையென்றால், அவர்தான் தன் அறையிலிருந்து எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால் அவர்தான் இந்தியாவில் இருக்கும் பணிப்படைக்குழுவுக்குத் தலைவர்.

முடிவில் இம்ரானின் அறை சின்ன தகவல்தொடர்பு மையமாக மாறியது. கருவிகள், கணினிகள், செர்வர்கள், கேபிள்கள் என்று அறை நிரம்பி வழிந்தது. மூன்று தட்டையான கண்காணிப்புத் திரைகள் வெவ்வேறு கோணங்களில் வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கில் வேலைசெய்துகொண்டிருக்கும் குழுக்கள் இருக்கும் இடங்களிலிருந்து உடனடிச் செய்திகள் அதில் பிரதிபலித்தன. ஒரு திரை பேட்டர்சன்னோடு நேரடியான தொடர்பில் வைக்கப்பட்டிருந்தது.

குழுக்களோடு பேசி அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொண்டு, துப்புக்களை அலசி ஆராய்ந்து, முழுநாளையும் இம்ரான் செலவழித்தார். ஆனால் மேற்கொண்டு போவதற்கு அவருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

முற்றிலும் ஒன்றுமில்லை.

ராதா உயிர்வாழ்வதை நிறுத்திவிட்டது போல இருந்தது.

59

உதவும்கை

சக்ஸேனா முன்புதன்னைக் கூட்டிவந்த அறைநோக்கி ராதா சென்றாள். யார் கண்ணிலும் படாமல் அவள் வேகமாக நகர்ந்துசென்றாள். இதுவரை, அதிர்ஷ்டம் அவளுக்குக் கைகொடுத்தது. முன்பு போலவே தாழ்வாரத்தில் இருந்த அறைக்கதவுகள் மூடியே கிடந்தன. திறந்த கதவுகள் கொண்ட பரிசோதனைக்கூடங்களில் ஆட்கள் தங்கள் வேலையில் மூழ்கியிருந்ததால், வெளியே தாழ்வாரத்தில் நடப்பதை அவர்கள் கவனிக்கவில்லை.

அவள் மேற்கொண்டு தாழ்வாரத்தில் நடந்தபோது, மூடிய கதவுகளில் பொருத்தப் பட்டிருந்த சிறுகண்ணாடி ஜன்னல்கள் வழியாக நோட்டமிடுவதை அவளால் தவிர்க்கமுடியவில்லை. அந்த அறைகளிலும், சர்ஜிக்கல் முகமூடிகளும் கையுறைகளும் அணிந்துகொண்டு மனிதர்கள் வேலையில் மும்முரமாக காணப்பட்டனர்.

அங்கே பெண்கள் யாருமில்லை என்பதைக் கவனித்தாள். ஆண்கள் மட்டுமே. ஏனென்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அது முக்கியமில்லை இப்போது. அவளது வயிற்றின் ஆழத்தில் நரம்புப்பிறழ்வான அச்சம் பந்தாக உருண்டது. அது அவளைப் பிய்த்துக்கொண்டு அவளின் சந்தேகங்களை அதிகரித்தது.

சக்ஸேனாவை எதிர்கொண்டு சந்தித்த போதெல்லாம் அவனை அணுக்கமாக அவதானித்திருந்தாள், அவன் தீமைசெய்பவன் என்று. மற்ற தீயவர்களைப் போலவே, மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தும்போது, அவன் மிகவும் சௌகரியமாக இருந்தான். அவர்களின் வாழ்க்கைமீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய அவனது திறமையும், அவர்களின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கக்கூடிய, அவர்கள் உயிரோடு இருப்பதா அல்லது சாவதா என்பதைத் தீர்மானிக்கக்கூடிய

அவனது ஆற்றலும், அவனுக்கு அதீதமான தன்னம்பிக்கையைக் கொடுத்தன. மற்ற தீயவர்களைப் போலவே உள்ளுக்குள் அவன் ஒரு கோழை என்று அவள் நம்பினாள். அவனது மனப்பான்மையும், நடத்தையும் ஆழமாக வேரூன்றியிருக்கும் சிக்கலான உணர்வுகளிலிருந்தும், பாதுகாப்பற்ற உணர்வுகளிலிருந்தும் வந்தவை என்று அவளுக்குத் தெளிவாக தெரிந்தன. அவனைவிட வலியன் அவனை ஆட்டிப்படைத்தால், அவன் பணிந்து போவான் என்ற நிஜத்தின்மீது அவள் நம்பிக்கை வைத்திருந்தாள்.

தான் நினைப்பது சரியென்று அவளால் நம்பமட்டுமே முடியும். சரியில்லை என்றால்....

சாக்ஸேனா தன் ஆஃபிஸில் இருப்பான் என்று நினைத்து அவள் நகர்ந்தாள். நிம்மதி. அவன் அங்கேதான் இருக்கிறான், கணினி முன்பாக உட்கார்ந்து குறிப்புப் புத்தகத்தில் ஏதோ கிறுக்கிக்கொண்டு.

ராதா ஒருகணம் தயங்கினாள், நிச்சயமில்லாமல். ஆனால் அவள் இங்கே வந்துவிட்டாள். இனி திரும்பிப்போக முடியாது. நேரம் வேறு ஓடிக்கொண்டிருக்கிறது. *CCTV* கேமராக்கள் அவளின் அசைவுகளைப் படம்பிடித்திருக்கும். யாராவது ஒருத்தர் அவள் இங்கே வந்ததைக் கவனித்திருக்கக் கூடும். அவள் வேகமாக செயல்பட்டாக வேண்டும்.

அவள் மெதுவாக அறையில் பிரவேசித்தாள். கதவை இழுத்துமூடி உள்ளே தாழ்ப்பாள் போட்டாள். ஏறிட்டுப் பார்த்த சக்ஸேனா ஆச்சரியமானார்.

அவரது ஆச்சரியம் அதிர்ச்சியாக மாறியது. பின் கோபமாக நிறம்மாறியது. என்ன நடக்கிறது என்பது அவர் மண்டையில் உறைத்தது.

'சத்தம் போடாத,' என்று தன் கையிலிருந்த மின்கம்பால் மேஜையின் மீது தட்டினாள், அவன் எதிர்வினை செய்வதற்குள்.

அந்த நுண்ணுயிரி விஞ்ஞானிக்குப் புரிந்தது அந்தக் கம்பு என்னவென்பது. அனிச்சையாக அவன் பின்வாங்கி சுருங்கினான். ராதா புன்னகைத்தாள். இந்த மனிதனைப் பற்றி அவள் நினைத்தது சரிதான். அவன் முழுக்க ஒரு தீயவன்தான். இப்போது அரண்டுபோய்விட்டான்.

'நீ இப்படி பண்ணிட்டு தப்பிக்க முடியாது,' என்று சக்ஸேனா அவளை எச்சரித்தான். பேசும்போது, அவன் கண்கள் அவளுக்கும், மின்கம்புக்கும் இடையில் ஊசலாடின. 'பாதுகாப்பு ஆட்கள் இங்குவந்து உன்ன பிடிக்க எவ்வளவு நேரம் ஆகும்னு நினைக்கிற?'

'நான் செய்ய வேண்டிய காரியத்துக்கு தேவைப்படுற நேரம் வரைக்கும்,' என்று ராதா திருப்பியடித்தாள். 'உன்னோட இண்டர்நெட்டை திற,' என்று அவள் மின்கம்பை மிரட்டலோடு ஆட்டினாள்.

'உன்னால இவ்வளவு தைரியமா இருக்கமுடியாது' என்று அவளையே வெறித்துப் பார்த்தான்.

'என்ன சோதிச்சி பாரேன்.' தப்பிக்கும் வாய்ப்பு மிகமிகக் குறைவு என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். இப்போது அவள் செய்துகொண்டிருக்கும் காரியத்திற்கு சக்ஸேனா எப்படியும் திருப்பி அடிப்பான். எப்படியோ அவள் விதி முடிந்துவிட்டது. வெளியுலகத்திற்கு தகவல் அனுப்புவதற்கு இதுதான் அவளுக்குக் கிடைத்திருக்கும் ஒரே வாய்ப்பு. இன்னொரு வாய்ப்பு அவளுக்குக் கிடைக்கப் போவதில்லை.

அவள் முகத்தில் இருந்த தீர்மானமான உறுதியை அவன் பார்த்தான். ஒரு வினோதமான உணர்வு அவனுக்குள் இறங்கியது. எப்போதுமே அதிகாரம் செய்பவனாக, தண்டிப்பவனாக, வெகுமதி தருபவனாக அவன்தான் இருந்து பழக்கம். அவன் அந்த உணர்வை ரசித்து அனுபவித்தான். இப்போது நிலைமை தலைகீழாகிவிட்டது. இது அவனுக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. அருவருப்பாக இருந்தது. குரூரமாகவும் இருந்தது. இதே உணர்வு பள்ளியில் இருந்தபோது அவன் பையன்களின் அறையில் புகைபிடித்து மாட்டிக் கொண்டவுடன் வந்தது. அப்போது கிடைத்த தண்டனை அவன் ஞாபகத்தில் தீத்தழும்பாக இருக்கிறது. அந்த நிகழ்வுக்குப் பின்னர் எப்போதுமே தன் கைதான் ஓங்கியிருக்குமாறு செய்தான். தண்டனையைக் கொடுப்பவனாக அவன் இருந்தான்.

இன்று, பல வருடங்கள் கழித்து, அவன் மீண்டும் பையன்களின் அறைக்கே வந்துவிட்டான். கையில் கழியை வைத்துக்கொண்டு யாரோ ஒருவர் அவன் முன்னாடி நிற்கிறார். அவனைக் காயப்படுத்தி அவமானப் படுத்தும் திறன்கொண்ட யாரோ ஒருவர்.

பல வருடங்கள் கழித்து அச்சத்தின் சுவையை அவன் மீண்டும் உணர்ந்தான். இது நேர்மையான சண்டை அல்ல. உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மீண்டும் காயப்படுகிற எண்ணத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. 'சரி. நான் ஒத்துழைக்கிறேன். ஆனால் நீ இங்கிருந்து ஈ-மெயில் அனுப்பமுடியாது. இது ரகசியமான அமைப்பு. ஈ-மெயில் கிடையாது; ஃபோன் கிடையாது. நாம மாடிக்குத்தான் போகணும். தரைத்தளத்துக்கு.'

'சரி. போவோம்,' என்று ராதா கதவை கைகாட்டினாள்.

அவர்கள் இருவரும் ஒன்றாகவே அலுவலகத்தை விட்டு வெளியேறினார்கள். அவள் அவனுக்கு மிகவும் அணுக்கமாகவே சென்றுகொண்டிருந்தாள். தேவைப்பட்டால் மின்கம்பைப் பிரயோகிக்க வசதியாக.

அவளது ஆச்சரியத்தைத் தூண்டும்விதமாக, அவள் வந்திருந்த மின்னேணி நோக்கிச் செல்ல இடதுபுறம் திரும்புவதற்குப் பதில், சக்ஸேனா வலதுபக்கம் திரும்பினான், காரிடரின் முடிவில் இருந்த பெரிய வெள்ளைக் கதவுகள் நோக்கி. கதவுகள் படிக்கட்டுக்கு இட்டுச்செல்லும் என்று ராதா ஊகித்தாள். ஆனால் அவள் ஊகம் தவறானது.

சக்ஸேனா தன் அனுமதி அட்டையைத் தேய்த்தான். கதவுகள் திறந்து இன்னொரு மின்னேணியின் முடிவுப்பகுதியைக் காட்டியது. ராதா உணர்ந்திருந்ததை விடவும் இந்த வசதி மிகவும் பெரியதாக இருந்தது. ஆனால் அவள் ஆச்சரியப்படவில்லை. அவர்கள் இங்கே பண்ணிக் கொண்டிருக்கும் வேலையை நினைத்தால் இது ஒன்றும் இல்லை.

அவர்கள் மின்னேணியில் ஏறினார்கள். சக்ஸேனா மீண்டும் அனுமதி அட்டையைத் தேய்த்து, தரைத்தளத்தைத் தேர்ந்தெடுத்தான். மின்னேணி மேலே போனது.

மின்னேணி மேலேறி போனபோது, அது கைதிகள் இருக்கும் எட்டுத் தளங்களையும் கடந்து செல்லும் வகையில் கட்டமைக்கப்பட்டிருந்ததை ராதா உணர்ந்தாள். பரிசோதனைக் கூடங்களில் பணிபுரியும் வேலையாட்களுக்கு இந்தத் தளங்களுக்குள் செல்ல அனுமதி கிடையாது.

மின்னேணி நின்றது. கதவுகள் திறந்தன. அவளின் இடதுபுறமும் வலதுபுறமும் இருந்த வெள்ளைக் கதவுகள் தாழ்வாரத்தின் இரண்டு முனைகளையும் அடைத்தன. சக்ஸேனா வலதுபுறம் திரும்பினார். ராதா அவனைப் பின்தொடர்ந்தாள்.

'கதவுக்குப் பின்னாடி என்ன இருக்கு?' என்று அவள் கேட்டாள். அவர்களின் பின்னால் இருந்த கதவைச் சுட்டிக்காட்டி.

'மெயின் கிளினிக்குக்கும், ரிசப்ஷனுக்கும் போற வழி,' என்றான் சக்ஸேனா கடுமையாக. அவன் அவளை சிந்தனையோடு பார்த்தான். 'செய்தி அனுப்புற முடிவை மாத்திக்கோ. உன் கையில இருக்கிற இத

வச்சு என்ன உன்னால ஜெயிக்கிறது ரொம்ப சுலபம்,' என்று அவன் மின்கம்பைச் சுட்டிக்காட்டி மேலும் சொன்னான்: 'என் கார்டை பயன்படுத்தி நீ சுதந்திரமா விடுதலை ஆயிடலாம்.'

ராதாவுக்குள் வேதனை அதிகமானது. சாக்ஸேனா தன்னை கிண்டலடிக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். அவள் விடுதலைக்கு மிக அணுக்கமாக வந்துவிட்டாள். அவளுக்கும் வெளியுலகத்திற்கும் இடையில் இருப்பது ஒருசில கதவுகள் மட்டுமே. ஆனால் தன்னால் தப்பித்து ஓடிவிட முடியாது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். இந்நேரம் அலாரம் ஒலித்திருக்க வேண்டும். அங்கிருக்கும் மனிதர்கள் *CCTV*-யை அலசி ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டும், அவள் எங்கே இருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க.

இன்று அவளுக்கு வேறெந்த வழியும் இல்லை. தன் சொந்த விதியை விடவும், யோசிப்பதற்கு மிகப்பெரிய விஷயம் இருக்கிறது. மனிதர்களின் ஆயுளைக் கட்டுப்படுத்தும் அமைப்பிற்கு ஓர் அதீத அதிகாரம் கிடைக்கும். உலகம் அவர்களுக்கு அடிமையாகிவிடும். பிரக்ஞையில்லாமலே. அவள் அதை அனுமதிக்கக் கூடாது. அனுமதிக்க முடியாது.

அவள் போட்ட திட்டத்தின்படி செயல்படுவதுதான் உசிதம். அவள் கிட்டத்தட்ட அங்கே வந்துவிட்டாள்.

'போய்க்கிட்டே இரு,' என்று அவள் சக்ஸேனாவிடம் சொன்னாள்.

சக்ஸேனா ஓர் அலுவலகத்திற்குள் சென்றான். மேஜைமீதிருந்த மடிக்கணினியில் இண்டர்நெட்டைத் திறந்தார். 'போ,' என்று அவன் கணினியிடம் சொல்ல, திரையில் இணையத்தளம் தெரிந்தது.

ராதா சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் மின்னஞ்சல் செய்தியைத் தட்டச்சு செய்கையில், சக்ஸேனாவைப் பக்கத்தில் நிற்க வைக்கும் அபாயகரமான செயலை செய்ய அவள் விரும்பவில்லை. அவள் மின்கம்பை கீழே வைக்க வேண்டும். அது பெரிய அபாயம். அவளை மாட்ட வைத்துவிடும். அறையில் அவளுக்கு உபயோகமாக வேறொன்றும் இருப்பது போல தெரியவில்லை.

அவள் வேகமாக முடிவெடுத்தாள். 'இங்கே உட்கார்.' மேஜையருகில் இருந்த சேரைக் காட்டினாள். சக்ஸேனா அமைதியாக உட்கார்ந்தான். அவள் மடிக்கணினியை அதன் மின்கம்பிகளிலிருந்து உருவி அதை எடுத்துக்கொண்டு கதவுப்பக்கம் சென்றாள். அவள் என்ன செய்யப்போகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

'நீ போறதுக்கு முன்னாடி,' என்றான் அவன். 'ஒண்ணு தெரிஞ்சுக்கோ. இது எல்லாம் முடிஞ்சதுக்கப்புறம், நீ சிறைக்குப் போன பின்னாடி, நீ உன் ஆயுளின் மிச்சத்தையும் வேதனையோடு கழிக்கிறபடி நானே ஏற்பாடு பண்ணிடுவேன். நான் உனக்கு வாக்கு கொடுக்கிறேன்.'

சர்வாங்கமும் ஒடுங்க ராதா உள்ளுக்குள் நடுங்கினாள். சக்ஸேனா சொன்னதைச் செய்வான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் இந்தத் திட்டத்தை முடிவு செய்தபின், வருவது வரட்டும் என்று அவளே எதற்கும் தயாராகிவிட்டாள். அதை அனுபவித்துதான் ஆகவேண்டும்.

அறையை விட்டு வெளியேறி, அவள் வெளியே பூட்டினாள். தன் ஈ-மெயில் கணக்கை வேகமாகத் திறந்தாள். அவள் சிறையிலிருந்து தப்பித்தது இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் இருந்தாலும், அறைக்குள் இருக்கும் சக்ஸேனா கூக்குரல் இடுவான் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும்.

அவள் வேகமாக மின்னஞ்சல் செய்தியை தட்டச்சு செய்து பலபேர்க்கு அனுப்பினாள். அவர்கள் அதை எப்போது பார்ப்பார்கள் என்று சொல்லமுடியாது. அது சீக்கிரமே நடந்துவிடும் என்று அவள் நம்பினாள்.

செய்தி அனுப்பப்பட்டது மின்னஞ்சல் நிர்வாகம் உறுதிசெய்தது. மடிக்கணினியைக் கீழே வைத்துவிட்டு அவள் தரையில் சரிந்தாள். இதுவரை அவள் தள்ளிவைத்திருந்த அச்சமும் திகிலும் இப்போது அவளை ஆட்கொண்டன.

உணர்ச்சிகளோடு போராடி அவள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள். பாதுகாவலாளிகள் யாரும் இன்னும் வரவில்லை. அதுவரை அவள் ஓய்வு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யலாம்.

அவள் எழுந்து வெள்ளைக் கதவுகள் நோக்கிப் போனாள். அவற்றிற்கு வெளியேதான் அவளது சுதந்திரம் இருக்கிறது என்று சக்ஸேனா சொல்லியிருந்தான்.

இதுவரை நடந்தது மிகவும் நல்லதாக இருந்தது.

இன்னும் சில அடிகள்தான்.

அப்போதுதான் அவளின் மோசமான அச்சங்கள் நிஜமாயின. சுதந்திரத்தின் கதவுகள் திடீரென்று நரகத்தின் கதவுகளாக மாறின. அவை திறந்துகொள்ள, மூன்று ஆயுதந்தரித்த காவலாளிகள் அதிரடியாய் உள்நுழைந்தனர். தாழ்வாரத்தின் வழியாக ஓடி

ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு வந்தனர்.

விளையாட்டு முடிந்தது என்று ராதா உணர்ந்தாள். இனி மீண்டும் வெளியுலகத்தை அவள் பார்க்கப்போவதில்லை.

60

சுக்ரா வழிகாட்டுகிறார்

விஜய் வடமேற்கு ஆகாயத்தை ஊடுருவி வெறித்துப் பார்த்தான்; காலின் விவரித்திருந்ததுபோல அந்த இயற்கை நிகழ்வு நடக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு முயன்றான்.

அவனுக்குப் பின்னாலிருந்த வான் குளூக் பொறுமையிழந்து சத்தமெழுப்பினான். முகத்தில் எந்த பாவனையும் இல்லாமல் கூப்பர் பக்கத்தில் நின்றான். இதைப் பற்றி தன் அச்சத்தை அவன் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தான்.

சூரியனின் கடைசிவெளிச்சக் கீற்றும் மறைந்தது. இரவின் ஆட்சி தொடங்கியது.

'உனக்குத் தெரியும்,' என்று ஆரம்பித்த வான் குளூக் உறைந்துநின்றான்.

விஜயும் அதைப் பார்த்தான்.

அது ஆரம்பமானது.

'கவனியுங்கள்,' என்று அவன் மற்றவர்களைப் பார்த்து பரபரப்பாக கட்டளையிட்டான். 'அது தெரியும் இடத்த சரியாகக் கவனியுங்க.' அந்த சின்ன குகையில் பாறை ஓவியத்தின் முன்பாக யாரும் நிற்கக்கூடாது என்பதை உறுதிசெய்து கொள்வதற்காக அவன் திரும்பிப் பார்த்தான்.

அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தபோது, ஆகாய வானத்தின் திரைத்துணியில் இங்கிருந்து தெரிந்த உயரத்தில் ஒரு பிரகாசமான புள்ளி தோன்றியது. அது அதி ஜோதிமயமாய்த் தெரிந்தது; அதன் அதீத வெளிச்சத்தில் மற்ற நட்சத்திரங்கள் பலகீனமாய் மின்னின.

தன்னைக் கைதியாக வைத்திருந்த பகல் வெளிச்சத்திலிருந்து, அந்த ஒளிப்புள்ளி தன்னை விடுவித்துக்கொண்ட கணத்தில், கத்தி போன்ற

ஒரு ஜோதிக்கீற்று குகையிலிருந்த பாறைமுகத்தில் வரையப்பட்டிருந்த ஐந்துமுனை நட்சத்திரத்தைப் பிரகாசமாக்கியது.



கக்ரன் பின்பக்க பெருஅறையின் ஒளிப்பெட்டகம் மூலம் பாறைமுகப்பு மேல்பட்டு மிளிர்கிறது.

'அதுதான்!' என்று விஜய் கத்தினான். 'அதுதான் சுக்ரா அல்லது வீனஸ். அப்படித்தான் மேலைநாட்டில் அது அறியப்படுது. அதுக்குக் கீழே இருக்கும் மலையின் முனைதான் சிவாவின் சூலத்தை நாம கண்டுபிடிக்கப்போற இடம். அது இங்கிருந்து ரொம்ப தூரம் இல்லை.' குகையின் நுழைவாயிலுக்கு மேலே காணப்பட்ட துவாரத்தின் நோக்கம் என்னவென்று அவனுக்கு இப்போது புரிந்துவிட்டது. அது ஒரு ஒளிப்பெட்டி; குகையின் பின்புறம் வரையப்பட்டிருந்த ஐந்துமுனை நட்சத்திரத்தின்மீது கிரகத்தின் ஒளி படுவதற்காக அது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

விஜய் சுட்டிக்காட்டிய இடத்தை நோக்கி முன்னால் சென்றுகொண்டிருந்த மனிதர்கள் மத்தியில் மௌனம் நிலவியது. கூப்பர் அந்தச் சின்னகுழி போன்ற குகையை மீண்டும் ஒரு தடவை பார்த்தான். தான் பார்த்ததை நம்பமுடியாதவன் போல அவன் தோன்றினான்.

ஆச்சரியமே இல்லை, அலெக்ஸாண்டர் இங்கே ராத்திரியில் வந்திருக்கிறார் என்று விஜய் தனக்குள் நினைத்துக்கொண்டான். தன் திட்டம் படைகளுக்குத் தெரியாத ஒரு ரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல அவர் இங்கே வந்தது. அவரது முக்கிய நோக்கம் சுக்ர கிரகத்தின் ஒளி சிவாவின் சூலத்தின்மீது படுவதை பார்ப்பதுதான்.

அவர்களின் கைவிளக்குகள் மலைப்பகுதியை வெளிச்சமாக்க, அவர்கள் தங்களின் சேருமிடம் நோக்கி இயற்கையான வழியைப் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் அந்தப் புள்ளிக்கு வந்தபோது, விஜய் அதிசயித்தான், அங்கே தங்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது என்று.

அவள் தப்பித்துவிடுவாளா?

காவலாளிகள் தாழ்வாரத்தில் வேகமாக ஓடிவந்த போது, முன்னால் வந்தவன் சடாரென்று நின்று ராதாவை துப்பாக்கிக் குண்டுகளால் சரமாரியாக சுட்டான்.

வெடிக்குண்டு ஒன்று தன் மார்புக்குள் சென்றது போன்று உணர்ந்த ராதா தடுமாறினாள். தான் ஐந்து அடி தூரம் பின்னுக்குத் தூக்கி எறியப்பட்டது போலவும், கால்கள் தன்னிடமிருந்து பிரிந்து விழுந்தது போன்றும் அவள் உணர்ந்தாள். அவள் தரையில் சரிந்தபோது, அவளைச் சுற்றியிருந்த எல்லாமும் ஒரு மெதுவான அசைவில் உறைந்துபோனது போல தோன்றியது. அதே நேரத்தில் அவளின் அட்ரினெலின் (ரத்தத்தை வேகமாக்கும் ஒருவகை இயக்குநீர்) விடுவிக்கப்பட்டு, நரம்பு செல்கள் துரிதமாக சுட்டுக்கொண்டிருந்தன. ஓர் அதிவேக நிழற்படக்கருவி மெதுவாக அசையும் காட்சியை உருவாக்குவது போல் இருந்தது. அவள் தரையில் கிடந்தபோது எரியும் உணர்வு அலையாக அவள் உடம்புக்குள் மிதந்தது. அவளது வலது நுரையீரல் குறுகிப்போனது; அவளது மூச்சுக்காற்று குறைவாகவும் வலியோடும் வந்தது. அவளது வலது நுரையீரலில் கத்தி ஒன்று திருகிக்கொண்டிருப்பது போல ஒவ்வொரு சுவாசமும் வெளிவந்தது. அந்த வலியில்கூட அவளுக்கு இன்னொரு உணர்வு ஏற்பட்டது: கதகதப்பான குருதி குண்டுக் காயங்களிலிருந்து கொட்டி அவள் உடம்போடு ஒட்டியிருந்த மருத்துவமனை கவுனை நனைத்தது. அவள் சிந்திக்க விரும்பினாள்; ஆனால் அவள் இருந்த அதிர்ச்சி நிலையில்

சிந்தனைகள் மரத்துப்போன அவள்மனதுக்குள் வரமுடியவில்லை.

துப்பாக்கிச்சூடு முடிந்தது. சுற்றிலும் காட்டுக்கத்தல்கள் எழுந்தன. சக்ஸேனாவின் குரலை அவளால் சன்னமாக அடையாளங்காண முடிந்தது. அவன் கோபத்தில் இருப்பது போலத் தோன்றியது. யாரையோ திட்டிக்கொண்டிருந்தான். வார்த்தைகள் மங்கலாக கேட்டன. ஒரு வெள்ளைப் படலம் அவளைச் சுற்றியிருந்த எல்லாவற்றையும் மூடுவது போல தெரிந்தது. அவள் பார்வை மங்கத்தொடங்கியது. அதிகரத்தம் கொட்டிப்போனதால், இதயம் உடலுக்கு ரத்தத்தைக் கொடுக்கமுடியாத ஓர் அதிர்ச்சி நிலைக்குள் அவள்வீழ ஆரம்பித்தாள்.

பின்பு, எல்லாமும் கறுப்பாகின.

61

சிவாவின் சூலம்

விஜய் பிரமித்துப்போய் நின்றான். வீனஸ் அல்லது சுக்ரன் தோன்றிய அதே மையத்தில் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மலை அதைச் சுற்றி ஒரு முகட்டை ஏற்படுத்தியிருந்தது.

அந்த முகட்டில் குடையப்பட்டு, கைவிளக்குகளின் வெளிச்சத்தில் மிகத்தெளிவாகத் தனித்து தெரிந்தது ஒரு 20-அடி உயரமுள்ள திரிசூலம்.

சிவாவின் சூலம்.

அல்லது, யூமனியஸ் சொன்னதுபோல, கிரேக்க சூழலில் பொசெய்டானின் கழி.

அவர்களை அப்படியே மெய்மறந்து நிற்கச் செய்தது, சூலத்தின் காட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தாங்கள் தேடிய இலக்கு இடத்தை அவர்கள் நெருங்கிவிட்டார்கள் என்ற உண்மையாக இருந்தாலும் சரி, அவர்கள் சில கணங்கள் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டார்கள்.

வான் குளூக்தான் அந்த மாயமந்திரத்தை முதலில் உடைத்து வெளியில் வந்தது. 'சரி. நமது கடைசி இடம் எது? ஐந்துதலைப் பாம்பு.' அவன் விஜயிடம், 'இதற்காகத்தான் நீ இங்கிருக்கிறாய். சொல்' என்று சொல்வதுபோல, விஜயைப் பார்த்தான்.

யூமனியஸ் குறிப்பேட்டில் எழுதியிருந்ததை ஞாபகத்திற்குக் கொண்டுவர முயன்றான் விஜய். திரிசூலத்தைக் கடந்தவுடன், பாம்பின் இடத்தைக் கண்டுபிடிக்க அலெக்ஸாண்டர் சிரமப்பட்டதில்லை. அதனால் அசாதாரணமான பாறைவடிவம் இங்கேதான் அருகில் இருக்கவேண்டும்.

யூமனியஸ் என்ன சொல்லியிருந்தான்?

'நாம ஒருகிலோமீட்டர் தூரத்துக்குள்ள போய் தேடுவோம்,' என்று விஜய் கட்டளையிட்டான். பாம்புப்பாறை இடத்தைக் கண்டுபிடிக்கும் முன்பு நீண்ட நேரம் ஆனதென்று யூமனியஸ் சொன்னது விஜய்க்கு ஞாபகம் வந்தது. அது எந்த திசையிலும் கிடக்கலாம்.

மூன்றுபேர் கொண்ட ஒவ்வொரு குழுவாய் அவர்கள் பரந்துசென்று தேட ஆரம்பித்தார்கள். தாங்கள் என்ன தேடுகிறோம் என்று அவர்களுக்குத் தெரியும். அதைமட்டும் கண்டுபிடித்துவிட்டால், கடவுள்களின் ரகசியம் அவர்களின் பிடிக்குள் வந்துவிடும்.

காணாமல்போன கண்ணி

காலின் உட்கார்ந்து மடிக்கணினியை வெறித்தான். அவனுக்கு இது பழக்கமில்லை. வழக்கமாக விஜய்தான் ஆராய்ச்சியாளன். நிறுவனம் ஆரம்பித்த செயல், அவர்களைப் பணக்காரர்களாக ஆக்கிய திட்டம் ஆகியவை உட்பட அவர்கள் ஒன்றாக சேர்ந்துசெய்த எல்லா விசயங்களிலும், விஜய்தான் எல்லா ஆராய்ச்சிகளையும் செய்தான். காலின் அறிவுப்பூர்வமாக யோசிப்பதிலும் பகுத்துப்பார்ப்பதிலும் இயங்குவதிலும் கில்லாடி. விஜய் ஒரு சிந்தனையாளன். ஒருவருக்கொருவர் பயனுள்ளவராய் இருவரும் இருந்தார்கள்.

ஆனால் இப்போது, நெருக்கடியான காலகட்டத்தில் விஜய் அனாயசமாக செய்வதைத் தான்செய்வதற்கு மிகவும் போராடினான் காலின்.

அவன் பெருமூச்செறிந்தான். முடிக்குள் கைகளை ஓடவிட்டு கோதினான். அப்போது அலைஸ் உள்ளே வந்தாள்.

'ஏதாவது கிடைச்சிதா?' என்று கேட்டாள். காலின் அவளுக்கும் சுக்லாவுக்கும் தான் விஜயிடம் பேசியதையும், வீனஸ் பற்றிய விசயத்தையும் இறுதிவிவரம் வரை எல்லாம் சொன்னான்.

'விஜய் அப்புறம் பேசவே இல்ல. அதனால நான் நினைச்சேன், வீனஸ் விஷயம் சரியானதுன்னு. ஆனால் கடைசிப் பாட்டை இன்னும் என்னால புரிஞ்சுக்க முடியல. நானும் எவ்வளவோ கூக்குள் பண்ணிப்பாத்துட்டேன். ஆனா ஒன்றுமே தேரலை.'

காலின் கணினித்திரையில் கொண்டுவந்த வரைபடத்தை அலைஸ் பார்த்தாள்.

'ஆரல் கடலைப் பத்தி நாம நினைக்கிறது சரியாக இருந்தா,' என்று

அவள் ஆரம்பித்தாள். 'அப்போ, 'மூன்று சகோதரர்கள்' அதுக்கு தெக்கால எங்கேயோ இருக்கணும். நமக்கு அது தெரியும். ஏன்னா அலெக்ஸாண்டர் ஆரல் கடலைத் தாண்டி போகல. தெக்குநோக்கிப் பாத்தோம்னா, அங்கே ரெண்டு நாடுகள் இருக்கு உஸ்பெகிஸ்தானும் கஜக்கிஸ்தானும்.'

'சரியா சொன்ன.' ஒரு புதிய ஆற்றல் காலினுக்குள் பாய்ந்தது. 'நாடுகளோட பேர்கள திறவுகோல் வார்த்தைகளா போட்டு நான் தேடலை.'

'முயற்சி பண்ணி பாரு.' அலைஸ் அவனை தைரியப்படுத்தினாள். 'பாக்கலாம்.'

காலின் 'மூன்று சகோதரர்கள் உஸ்பெகிஸ்தான்,' என்று தட்டச்சு செய்தான். தேடல் எந்திரம் அள்ளிக்கொடுத்த விவரங்களுக்குள் பயணித்தான். முதல் மூன்று பக்கங்களைப் படித்துவிட்டு, அலைஸை சோகமாகப் பார்த்தான். 'மூன்று சகோதரர்கள பத்தி கூக்குளுக்குத் தெரியும்னு நமக்கு எப்படித் தெரியும்? சொல்லப்போனா, கியூப் பல்லாயிர வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருக்கு.'

'கஜாக்ஸ்தானை முயற்சி பண்ணிப்பாரு,' என்று அலைஸ் அவனை மென்மையாகத் தூண்டினாள். 'நாம எல்லாத்தயும் முயற்சி பண்ணிப் பாப்போம்'

காலின் தலையாட்டிவிட்டு தட்டச்சு செய்தான்: 'மூன்று சகோதரர்கள் கஜாக்ஸ்தான்.'

மீண்டும் முதல் பக்கத்தில் பொருத்தமாக எதுவும் வரவில்லை. இரண்டாவது பக்கத்தை அமுக்கினான்.

மறுபடியும் ஒன்றுமில்லை.

மூன்றாவது பக்கம்.

அவன் உறைந்தான். தன் பக்கத்தில் நின்ற அலைஸ் மூச்சை உள்ளே இழுத்துக் கொள்வதை அவனால் உணரமுடிந்தது.

திரையில் வரிசையாக நிழற்படங்கள் தோன்றின, பின்வரும் தலைப்போடு: 'மூன்று சகோதரர்கள் கஜாக்ஸ்தான் சித்திரங்கள்.'

62

நம்பிக்கைத் துண்டு

பேட்டர்சன் பேசியதை இம்ரான் கவனித்தார். இம்ரான் மருத்துவமனை அறையில் கருவிகளை வைத்துக்கொண்ட நாளிலிருந்து இது அவர்களின் இரண்டாவது அழைப்பு. தற்போதைய சூழலில் சாத்தியமான வழிகளைப் பற்றி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். பேட்டர்சனின் மீது அவருக்கு ஏற்பட்டிருந்த ஆரம்பக்கட்ட உணர்வுகள் மறைந்து, இப்போது அந்த மனிதனின் அறிவுமீதும் ராஜதந்திர திறமையின் மீதும் ஒரு விருப்பமில்லாத மரியாதை ஏற்பட்டது. பேட்டர்சன் கொஞ்சம் நியாண்டர்தால் (ஆதிமனிதனுக்கு முந்தைய மனித இனம்) வகையான மனிதர் என்று இம்ரான் இன்னும் நினைத்திருந்தாலும், அவர் இன்று சொன்ன அதிமுக்கியமான கருத்துக்களோடு இம்ரானால் முரண்பட்டு விவாதிக்க முடியவில்லை.

பேட்டர்சன் திட்டத்தின் சில பகுதிகளைப் பற்றி இம்ரானால் மகிழ்ச்சி கொள்ளமுடியவில்லை. உதாரணத்திற்கு, ராதா தொலைந்துபோய் விட்டாள் என்ற அவரது எண்ணம். இனி அவளைப் பற்றி நம்பிக்கை இல்லை என்று அவர் வற்புறுத்திச் சொன்னார். இறுதியில் அவளைக் கண்டுபிடித்து காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையைக் கைவிடமுடியாது என்று இம்ரான் நினைத்தார்.

'போரில் வெறும் நம்பிக்கையால் நீங்க ஜெயிக்க முடியாது. செயலால்தான் ஜெயிக்கமுடியும்,' என்று அந்த பெரிய ஆஃப்ரிக்க-அமெரிக்கன் தட்டையான திரையில் அதிரடிக்குரலில் ஒலித்தார். 'ராதாவ பொறுத்தவரையில், நமக்கு ஏதாவது துப்பு கிடைச்சா, அவள் இருக்கும் இடத்த பத்தி தடயம் கிடைச்சா, அவள கண்டுபிடிக்க நம்ம முயற்சிகள தீவிரப்படுத்தலாம். ஆனா இப்போதைக்கு நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. மாறாக, இந்த வழக்கில இருக்கிற மத்த விஷயங்கள்ல நம்ம நிறைய செய்யமுடியும். சும்மா உட்காந்து, நம்பிக்கை

கொள்றதுக்கும், பிரார்த்தன செய்றதுக்கும் பதிலா, நாம அந்த விஷயங்கள கவனம் செலுத்தறது நல்லது. அவள் உயிரோடு இருந்தா, அற்புதம். பணிப்படைக்குழு உறுப்பினரை நாம இழக்கமாட்டோம். ஆனா நாம அத நம்பிக்கிட்டு இருக்க கூடாது.'

திட்டத்தின் மற்ற பகுதிகளிலும்கூட இம்ரானுக்கு திருப்தி இல்லை. ஆனால் வேறுவழி இல்லை என்பதை அவர் ஒத்துக்கொண்டார். எதிர்கொள்ளும் அபாயம் மிகவும் பெரியது. எல்லாம் கிடைக்கலாம்; இல்லை என்றால் ஒன்றுமில்லை.

'சரி. ராத்திரி நல்லா தூங்கு. நாளை பெரிய நாள். ஏதோ ஒரு வகையில. நாம சிறப்பா வருவோம் நம்பிக்கையோட,' என்று பேட்டர்சன் முடித்தார்.

திரை மங்கலாகி கறுப்பானவுடன் இம்ரான் பெரு மூச்செறிந்தார். பின்பு அவருக்கு போன் ஞாபகம் வந்தது. பேட்டர்சனோடு பேசிக்கொண்டிருந்த போது அவர்க்கு ஈமெயில் வந்தது. யார் அது என்று அவர் யோசித்தார்.

அவர் செய்தியைத் திறக்கும் முன்பே அனுப்புநர் பெயர் கண்ணில் பட்டது. அவர் கண்கள் அகன்றன.

தன் கண்ணையே அவரால் நம்பமுடியவில்லை. அது ராதா! அவள் உயிரோடு இருக்கிறாள்! அவள்தான் அவருக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள். எப்படியோ, எங்கிருந்தோ, அவர்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது என்பதற்காக விஷயத்தைத் தெரியப்படுத்திவிட்டாள்.

மூடியிருந்த போர்வைகளை எறிந்துவிட்டு, படுக்கையைவிட்டு நடந்தபோது வலியில் முகம்சுளித்தார். மருத்துவமனை கவுனை உதறிவிட்டு தன் ஆடைகளுக்கு மாறி, தன் அலுவலகத்திற்கு அதே நேரம் போன் செய்தார்.

'அர்ஜுன், இப்பவே வந்து என்ன கூட்டிக்கிட்டு போ. நான் உனக்கு ஒரு மெயில் அனுப்பி வைக்கிறேன். உடனே இடத்த கண்டுபிடிக்கணும். இப்போதே செய்.'

மூலம்

ஒரு மணிநேரம் கழிந்தது. ரகசியத்திற்கு இட்டுச்செல்லும் ஐந்துதலைப் பாம்பின் அறிகுறி எதுவும் தெரியவில்லை. தங்கள் இலக்கை அடையும்

தூரத்தில் அவர்கள் இருப்பதால், வான் குளூக்கால் தூண்டப்பட்டு ஒரு புதிய சக்தி அந்தக் குழுவின் மத்தியில் உருவானது.

கூப்பரின் செயற்கைக்கோள் ஃபோன் ஒலித்தது. அவன் ஒரு பக்கமாகச் சென்று தணிந்த குரலில் பேசினான். அவன் என்ன பேசுகிறான் என்று காதைத்தீட்டிக் கேட்டான் விஜய். ஆனால் ஒரு சில வார்த்தைகள்தான் காதில் விழுந்தன. 'என்ன வேணுமானாலும் செய்றேன்... பாத்துக்கிறேன்... நான் செய்றேன்...' ஆனால் அந்த மனிதன் கவலையோடு தெரிந்தான். அவன் சுருக்கமாகப் பேசினான். ஆனால் வேகமாகப் பேசினான். பேசிமுடித்துவிட்டு போனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

மற்ற மனிதர்களைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவனுக்கு களைப்பு ஏற்பட ஆரம்பித்தது. இவ்வளவு உயரத்தில் தொடர்ந்த ஒரு அழுத்தமான பயணம் அவனைப் பாதிக்க ஆரம்பித்தது. கொஞ்சநேரம் ஓய்வெடுக்க முடிவுசெய்தான். அந்தப் பாம்பைக் கண்டுபிடிக்க மேலும் 15 நிமிஷங்கள் ஆனாலும் பரவாயில்லை.

அவன் தரையில் தாழ்ந்து உட்காரப்போகும்போது, வான் குளூக்கின் குரல் காதில் விழுந்தது. அது உற்சாகத்தில் வழிந்தது. 'அதோ அங்கே!'

ஓய்வெடுக்கும் சிந்தனைகள் எல்லாம் மறந்துபோயின. விஜய் வான் குளூக் நின்ற இடம் நோக்கி மற்றவர்களோடு விரைந்தான். கைவிளக்குகளின் வெளிச்சத்தில் ஒரு பெரிய பாறை அமைப்பு, 15 அடி உயரத்தில் மேலோட்டமாகத் தெரிந்தது. அது ஓர் அலையைப்போல தோன்றியது. அதை ஐந்துதலைப் பாம்பென்று விளங்கிக் கொள்வது எளிதாக இருந்தது. எவ்வளவு தொன்மை கொண்டது அந்தப் பாறை அமைப்பு என்று விஜய் யோசித்தான். ஏதோவொரு காலகட்டத்தில் அது பாம்புபோல தெரிந்திருக்க வேண்டும்; அதனால்தான் பாட்டு அதன் வடிவத்தை அப்படிச் சொன்னது. ஆயிரக்கணக்கான வருடங்களின் அரிப்பு அதன் அடிப்படை வடிவத்தை மாற்றவில்லை. இப்போது புரிந்தது கியூப்பின் வயசு என்னவாக இருக்கும் என்று. அவர்கள் நினைத்ததைவிட மிகவும் தொன்மையாக இருக்க வேண்டும்.

'குகைக்கு போகும் வாசலைத் தேடுங்க,' என்று ஆணையிட்டான் வான் குளூக். கூட்டம் பிரிந்து தேடியது.

ஒரு குறுகலான குகைவெடிப்பைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு நீண்ட நேரம் ஆகவில்லை. ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே நுழைய

கூடிய வாயில் அது.

'நீ முதல்ல போ,' என்று வான் குளூக் விஜயைப் பார்த்து பல்லிளித்தான். 'உள்ளே போவது பாதுகாப்பானதா என்று பாப்போம்.'

விஜய் தலையசைத்து, ஒருவனிடமிருந்து கைவிளக்கைப் பிடுங்கி குகை வெடிப்பின் ஊடாக உள்ளே சென்றான்.

பாறையின் ஊடாக ஒரு குறுகிய பாதையில் நடந்தான். அது திடீரென்று ஒரு படிக்கட்டுகளில் முடிந்தது. படிக்கட்டுகள் மலையின் உள்பகுதியில் குடைந்து வெட்டப்பட்டிருந்தன. அவன் விளக்கொளியை படிக்கட்டுகளில் பாய்ச்சினான். அவர்கள் கொஞ்சதூரம் சென்று மலையின் இதயப்பகுதிக்குள் நுழைந்தார்கள்.

'ரொம்ப நல்லாயிருக்கு,' என்று அவன் கத்தினான். 'இங்க இருக்கிற படிகள் குறைஞ்சது 500 அடிகள் தூரம் கீழ்நோக்கிப் போவுது. நான் கீழே போனபின்னாடி நான் பேசுறது உங்களுக்குக் கேட்காது.'

பதிலுக்குக் காத்திராமல் அவன் படிக்கட்டுகளில் இறங்கினான். அடிப்பகுதியில் என்ன கிடக்கிறது என்பதை அறிந்துகொள்ள அவனும் ஆர்வமாக இருந்தான். ரகசியத்தைப் பற்றி நிறைய மர்மம் இருக்கிறது. கடவுள்களின் ரகசியம் உண்மையிலேயே என்னவென்று இப்போது அவனுக்குத் தெரிந்துவிட்டதால், அது எங்கே ஆரம்பமாகிறது என்பதைத் தானே காண விரும்பினான். மகாபாரதத்தில் விவரிக்கப் பட்டது போல உண்மையிலேயே அது அப்படித்தான் இருக்கிறதா?

அவன் கீழே இறங்கிப்போகும்போது, மற்றவர்கள் பின்தொடர்ந்ததால் அவனைச் சுற்றி வெளிச்சம் அதிகமானது. அடிப்பகுதி வரும் வரை அவன் தொடர்ந்து கீழிறங்கினான்.

அவன் கைவிளக்கைச் சுற்றி அடித்தான். அவன் ஒரு பெரிய குகைக்குள் இருந்தான். அந்த குகைவெளியை அவன் உள்வாங்கியபோது பிரமிப்பில் வார்த்தைகள் வரவில்லை. ஹிண்டு குஷ் மலையின் உட்பக்கம் முழுவதும் நீட்டிக்கிடந்தது போன்று தோன்றியது குகை. அதன் சுவர்கள் தென்படவில்லை.

குகையை ஆக்ரமித்து தன்முன்னே விரிந்துகிடந்ததை மட்டுந்தான் அவனால் பார்க்கமுடிந்தது.

தொன்மத்தின் மூலம். ரகசியத்தின் தோற்றம்.

அது மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டது போலவே இருந்தது. காலங்காலமாக உலாவிக்கொண்டிருக்கும் ஆகப்பெரிய

தொன்மங்களின் ஒன்றை உருவாக்குவதற்கு எது ஆதாரமாக இருந்ததோ, அதனின் இருப்புக்கு முன்னாடி அவன் நின்றுகொண்டிருந்தான்.

63

தேடல் ஆரம்பமாகிறது

கார் விமானநிலையம் நோக்கி விரைந்துகொண்டிருக்கும் போது, இம்ரான் தன் உடலில் போட்டிருந்த தையல்கள் மீது கைகளை வைத்து அழுத்தினார். ராதாவிடமிருந்து மின்னஞ்சல் வந்து ஒரு மணிநேரம் ஆகிவிட்டது. செய்தியின் பூகோள மூலம் கண்டுபிடிக்கப்படும்போது, 30 நிமிடங்களுக்குள் ஒரு விமானம் தயாராக இருக்கவேண்டும் என்று ஓர் அவசரகால வேண்டுகோளை இம்ரான் அனுப்பினார். அவரும் அவரது படையும் செய்திவந்த இடத்திற்குப் பயணம் போவதற்காக. பத்து நிமிடத்திற்கு முன்பாக, செய்திவந்த இடம் ஒரு மருத்துவ மையம் என்று கண்டுபிடிக்கப் பட்டது. அது ஜெய்பூரிலிருந்து ஒரு மணிநேர கார்ப்பயணம். டைட்டன் பார்மசூட்டிக்கல்ஸின் மருத்துவ பரிசோதனைகளுக்கான ஒப்பந்த இடங்களின் பட்டியலில் இந்த மையம் இல்லை. விநோதம்.

தேடல் அறிவுப்பூர்வமானதாக இருந்தவரை, எந்த தடயங்களும் இல்லாமல், ராதாவை எப்படி கண்டுபிடிப்பது என்ற முடிவில்லாத வெறும் விவாதங்களாக இருந்தவரை, இம்ரான் மருத்துவமனையில் ஒடுங்கிக் கிடந்தார். இப்போது அவள் இருக்கும் இடம் தெரிந்தபின்பும், அவர் சும்மா இருக்க வழியில்லை. காப்பாற்றும் குழுவில் அவர் இருந்தாகவேண்டும். அவர்க்கு ராதாவின்மீது ஒரு விசேச பந்தம் உண்டு. அவர்கள் அவளைக் காப்பாற்றும் முயன்றபோது அவர் சும்மா ஆஸ்பத்திரி படுக்கையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தார் என்று யாராவது சொல்லியிருந்தால், அவர் பயங்கரமாக எதிர்த்திருப்பார்.

இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவர்கள் ஜெய்ப்பூரில் இருப்பார்கள். விமான நிலையத்திலிருந்து, அவர்கள் ஹெலிகாப்டரில் சென்று சேருமிடத்தை அடைவார்கள்.

இதற்கிடையில் டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸின் உயர்நிலை

நிர்வாகத்தினர்கள் இருக்கும் இடங்களைப் பற்றி அவர் கேட்டறிந்துகொண்டார். அவர்களில் சிலர் பயணங்களில் இருக்கிறார்கள். ஒரே ஒருவர்தான் ஜெய்ப்பூரில் ஒரு மருத்துவக் கூட்டத்தில் பேசுவதற்கு பயணம் போயிருப்பதாக அலுவலகத் தகவல் சொன்னது.

அது தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் வருண் சக்ஸேனா. இது எதேச்சையான சம்பவத்திற்கும் மேலான விசயம்.

இம்ரானின் முகம் கல்லாக இறுகியிருந்தது. அவர்கள் விமான நிலையம் வந்து காத்துக்கொண்டிருந்த விமானத்தில் ஏறினார்கள்.

அவர் ராதாவைப் பத்திரமாக மீட்டுக் கொண்டுவர போகிறார்.

போகும் நேரம்

அசையாமல் கிடந்த ராதாவின் உடல் அறையிலிருந்து சுமக்கப்பட்டு வெளியே நின்றிருந்த ஆம்புலன்ஸில் கொண்டுவைக்கப் பட்டதை சக்ஸேனாவும் ஃபிரீமனும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவளது உடல் ஒரு திரவக்குழாயோடு இணைக்கப்பட்டிருந்தது; முகத்தில் ஆக்சிஸன் முகமூடி வைக்கப்பட்டிருந்தது

'ரொம்ப மும்முரமாய் இருந்திருக்கீங்க,' என்று ஃபிரீமன் சொன்னான், ராதாவின் உடலைச் சுமந்துசென்ற வேலைக்காரர்களிடம். 'அவ செத்துட்டா. இந்த துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகி யாரும் பிழைச்சது கிடையாது. அதிர்ச்சியால் அவள் சாகாட்டாலும், ரத்த சேதாரம் அவள கொன்னுடும். ரத்தமேத்தறதுக்கு மருத்துவமனைக்கு போனாலும் நேரம் பத்தாது. அவளோட முக்கியமான உறுப்புகள் அடிவாங்கியிருந்தா, அவள காப்பாத்தறதுக்கு வாய்ப்பே இல்ல.'

சக்ஸேனாவின் முகம் இருண்டது. 'முட்டாள் காவலாளிகள். அவங்க அவள சுட்டிருக்க கூடாது. அவள் நமக்காக கடவுள் கொடுத்த பணயக்கைதி! காரியம் முடிகிறவரை பணையக் கைதிகள கொல்லக்கூடாது.'

'சரி, விடு. அவங்க அவங்களோட வேலையத்தான் செஞ்சாங்க,' என்று ஃபிரீமன் மறுப்பு தெரிவித்தான். 'அவ பணயக்கைதின்னு அவங்களுக்கு எப்படி தெரியும்? பாதுகாப்பு அதிகாரிங்க அவள *CCTV*-ல பாத்துட்டாங்க. விசாரண நடத்துனாங்க. அவ இருந்த தளத்தில டாய்லெட்டில ஒரு கார்டு மின்னதிர்ச்சியில கிடந்திருக்கான். அப்புறம்

உன்னவேற அறையில வச்சு அவ பூட்டிட்டா. நீ கூவுன. தரைத்தளத்தில கார்டுங்க அவள பாத்தவுடனே, யாரோ ஒரு கைதி உன்ன ஆபத்தில மாட்டவச்சிட்டு தப்பிக்குதுன்னு புரிஞ்சுக்கிட்டாங்க. அதனால அவங்க என்ன செய்யனுமோ அதத்தான் செஞ்சானுக. ஞாபகம் இருக்கா, நம்ம தாரகமந்திரம். 'உயிர்பிழைத்தோர் யாருமில்லை; சாட்சிகள் யாருமில்லை?' அதுதான் அவனுக செஞ்சது. அவங்க வேலைய செஞ்சதுக்காக அவங்கள் நிந்திக்காத.'

'அவனுக வடிகட்டின முட்டாள்கள்,' என்று சக்ஸேனா முணுமுணுத்தான். 'விஷயத்த சிக்கலாக்கிட்டானுங்க. ஆனா எனக்கு ஒண்ணும் பயமில்ல. அவ செத்துப்போனாக்கூட, விஜய் சிங்குக்குத் தெரியாது. நான் கூப்பர்க்குச் தகவல் சொல்லிட்டேன். அவன் பாத்துக்குவான்.'

ஃபிரீமன் ஆர்வமானான். 'நீ ஏன் அவளுக்கு வைரஸும், பாக்டீரியமும் கலந்த காக்டெயிலை உள்ள ஏத்தின? புல்லட்கள் அவள கொல்லலைன்னா, அது கொன்றுரும். நமக்குத் தெரியும். இந்தப் பரிசோதனையில் பிழைச்சவங்க யாருமே இல்ல. நீ அவளுக்கு அதிகமான டோஸ் கொடுத்திட்ட.'

சக்ஸேனா தலையாட்டினான். 'பரிசோதன பண்றதுக்கு நமக்கு கிடைச்ச பெரிய வாய்ப்புன்னு நினைச்சேன். நமக்கு இதுவரை பரிசோதனைக்கு நல்ல ஆள் கிடைச்சதில்ல. பாக்கலாம் என்ன நடக்குதுன்னு. எப்படியும் அவ செத்திடுவா. ஆனா அது ரொம்ப சுவாரஸ்யமா இருக்கும். அலெக்ஸாண்டரோட பிணத்தில நமக்கு என்ன கிடைச்சுதுன்னு ஞாபகம் இருக்கா?'

ஃபிரீமன் தலையசைத்தான். 'இருக்கு இன்னும் ஆறு மாசம்தான். என்னோட பரிசோதனைங்களோட விளைவுகள நீ பாக்கப்போற.' அவன் தோள்குலுக்கினான். 'அது மோசமாகாதுன்னு நினைக்கிறேன்.'

சாக்ஸேனா சுற்றுமுற்றும் பார்த்தான். 'நாம இங்கிருந்து போயிடுவோம். அவள் ஈமெயில் அனுப்பும்போது நல்லவேளையா நான் கூட இருந்தேன். நாம எல்லாத்தயும் அப்புறப்படுத்திட்டு இந்த இடத்த காலிபண்றதுக்கு நேரம் கிடைச்சதே. கணினி செர்வர்கள் எல்லாம் சுத்தமா துடைக்கப்படுது. ஐபி ஆட்களுக்கு ஒரு தகவலும் கிடைக்காது. இந்த இடத்த டைட்டனோடு சம்பந்தப்படுத்த அவங்களுக்கு ஒரு வழியும் இல்ல. ஏதோ கொஞ்சத்த விட்டுவச்சிருக்கேன், ஐபி பாக்கிறதுக்கு.'

ஃபிரீமன் தலையசைத்தான். சக்ஸேனா எதைச் சொல்கிறான் என்று

அவனுக்குத் தெரியும். 'பாவம். இந்த பரிசோதனை மனுசங்கள இங்கேயே விட்டுட்டு போகவேண்டியிருக்கு.'

'பரவாயில்ல,' என்று சக்ஸேனா பதில்சொன்னான். 'அவங்களோட மருத்துவ சரித்திரங்களும், ரிசல்ட்களும் நம்மகிட்டதான் இருக்கு. அத வச்சிக்கிட்டு வேறு மாதிரிகள வச்சு நாம மறுபடியும் ஆரம்பிக்கலாம். எப்படியோ, நமக்கு பரிசோதனை மாதிரிகள் தேவைப்படாது. மூலத்தோட மாதிரிகள கூப்பர் வெற்றிகரமாகக் கொண்டுவந்திட்டான்னா, நம் வேலைமுடிஞ்சுது.'

அவர்கள் ஆனந்தமாக ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்கொண்டனர். எந்த வழியிலும் திட்டம் வெற்றியடைய போகிறது. இப்போது அவர்களின் வழியில் எதுவும் குறுக்கே நிற்கவில்லை.

64

பாற்கடல்

விஜய் தன் கண்களை வரவேற்ற காட்சியை வெறித்துப் பார்த்தான். அவனுக்கு முன்னாடி ஓர் அகன்ற நீர்நிலை விரிந்துகிடந்தது. அவனுக்கு அருகிலிருந்த கரையைத் தவிர அதன் ஓரங்கள் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு மிகவும் அகன்று கிடந்தது. குகை முழுவதையும் ஏரி ஆக்ரமித்ததை அவனால் பார்க்க முடிந்தது.

அவனை அதிர்ச்சியடைய வைத்தது ஏரியல்ல. வான் குளூக் ஏற்கனவே சொல்லியிருந்ததால், ஒரு பெரிய நீர்நிலையைக் காண தயாராகவே இருந்தான் விஜய். அந்த ஏரியின் தோற்றந்தான் அவனின் மூச்சை நிறுத்தியது.

கைவிளக்கின் வெளிச்ச நிறத்தில் ஏரியின் மேலான பகுதி வெள்ளியின் வெள்ளை நிறத்தைப் பிரதிபலிப்பது கண்ணுக்கு எட்டிய தூரம் தெரிந்தது. மற்றவர்களும் விஜயோடு இணைந்து ஏரியை வெறித்தவாறே, அவனைப் போலவே அதிசயித்தும் பிரமித்தும் நின்றபோது, கைவிளக்குகளின் வெளிச்சத்தில் முடிவில்லாத வெள்ளிநிற நீர்ப்பாதை அமைதியாக, நிர்ச்சலனமாக, அலைகள் இல்லாமல் கிடந்தது.

'இதை பாற்கடல்ன்னு சொல்றதல ஆச்சரியமே இல்ல,' என்று வான் குளூக் விஜயின் அருகில் நின்றவாறு முணுமுணுத்தான். 'இப்பத்தான் புரியது ஏன்னு.'

ஆனால் அந்தப் பெரிய குகையில் மேல பல ஆச்சரியங்கள் இருந்தன. கைவிளக்குகள் வெளிச்சம் படிக்கட்டைத் தாங்கிய சவரில் விழுந்தபோது, உலோகக்குழாய்களின், கல் கால்வாய்களின் வரிசை ஒன்று கண்ணில் தென்பட்டது. ஒரு பெரிய கல்கால்வாய் சுவரின் வழியாகச் சென்றது. அது ஏரித்திசையிலிருந்து வந்து ஒரு பெரிய கல் கொப்பரையில் முடிந்தது. மற்ற குழாய்களும், கால்வாய்களும்

ஏராளமான கல்கொப்பரைகளை ஒன்றுக்கொன்று இணைந்துநிற்கும்படி செய்து, அவற்றை மேலே உயர்ந்து நிற்கும் ஒரு பெரிய உலோகப் பொறியோடு இணைத்தன. குழாய்களிலும் அந்த எந்திரத்திலும் பயன்படுத்தப்பட்ட உலோகம் கறுப்பாக இருந்தது. உலோகத்தில் சின்ன துருவைக்கூட கைவிளக்குகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அமெரிக்காவில் மதுவடிக்கும் சில ஆலைகளில் வான் குளூக் பார்த்திருந்த கொதிக்கும் தொட்டிகள் போல அந்த முழு உபகரணமும் அவர்க்குத் தோன்றியது.

அவர்களில் ஒருவன் கத்தினான். 'இங்கே ஏதோ ஒண்ணு அசையுது!'

அவன் சுட்டிக்காட்டிய திசைக்கு கைவிளக்குகள் மாறின. எல்லோரும் உறைந்து நின்றனர். சற்றுநேரம் எதுவும் அசையவில்லை.

பின்பு, வெளிச்சத்தின் ஓரங்களில் ஏதோவொன்று அசைந்தாடியது. ஒரு பெரிய வட்டவடிவம். கைவிளக்குகள் உருவாக்கிய வெளிச்சக்குளத்துக்குள் ஒரு பெரிய ஆமை நகர்ந்து வந்தது. குறைந்தபட்சம் 20 அடி நீளமுள்ள ஒரு பெரியமிருகம். விஜயால் தன்கண்ணை நம்பமுடியவில்லை. அந்த ஐந்து வெளிச்சக்குளத்தில் மெல்ல நகர்ந்து மறுபக்கமிருந்த இருட்டுக்குள் மறைந்தது.

'சரி, வேலையை பாருங்க,' என்று வான் குளூக் ஆணையிட்டான். 'இன்னும் பத்து நிமிசத்துக்குள்ள மாதிரிகள சேகரிச்சிட்டு இங்கிருந்து கிளம்புவோம்.'

விஜய் ஏரிக்கரைக்கு நடந்தான். அதன் வெள்ளி மேற்பாகத்தை ஆராய்ந்தான். தொன்மத்தில் விவரிக்கப்பட்ட நீர்நிலையே இதுதான் என்று நம்புவது அசாத்தியமாக இருந்தது. ஒன்றே ஒன்றைத் தவிர, நீரின் நிறத்திற்கு உண்மையான காரணம் என்னவென்று அவனுக்குத் தெரிந்தது. மாவீரன் அலெக்ஸாண்டரின் பதப்படுத்தப்பட்ட பிணத்தில், அமைப்பு கண்டுபிடித்திருந்த பாக்டீரியாக்களின் ஆதிமூலம் இதுதான். அவர் 2,300 வருடங்களுக்கு முன்பு இந்த ஏரித் தண்ணீரைத்தான் குடித்திருந்தார்.

ஆனால் அவர் ஏன் இறந்தார்? அந்த தண்ணீர் அவர்க்குள் ஏன் வேலை செய்யவில்லை?

'போக வேண்டிய நேரம்,' என்று வான் குளூக்கின் கரகரத்த குரல் அவனின் சிந்தனைகளைக் கலைத்தது. 'எல்லோரும் போயிட்டாங்க.' அவன் விஜயிடம் திரும்பினான். 'நாம ஜலாலாபாத்துக்குப் போறதுக்கு முன்னாடி, கடைசிப் பாட்டோட அர்த்தத்தை நீ கண்டுபிடிக்கிறது

நல்லது.'

புதிர் விடுவிக்கப்பட்டது

காலினும் அலைஸும் படிப்பறையில் இருந்து, விஜயின் அழைப்புக்காகக் காத்திருந்தார்கள். அவர்களால் விஜயைப் பிடிக்கமுடியாது. ஏனெனில் தனது செயற்கைக்கோள் எண்ணை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள விஜய்க்கு அனுமதி இல்லை. சுக்லா தன் அறைக்குள் சென்றுவிட்டார், தூங்குவதற்கு காலின் தூங்குவதற்கு எவ்வளவு நேரம் கிடைக்கும் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஏனென்றால் ராதா பற்றிய சேதி எதுவும் இன்னும் வரவில்லை.

ஃபோன் ஒலித்தது. இரவின் மௌனத்தைத் தகர்த்தது. காலின் ஓடிவந்து போனை எடுத்தான். ஸ்பீக்கரை முடுக்கிவிட்டான்; அலைஸும் அந்த உரையாடலை கவனிக்கட்டும் என்பதற்காக.

'ஹாய், விஜய்,' என்று தன் நண்பனிடம் காலின் கூவினான். 'அலைஸும் இங்கேதான் இருக்கா.

'நீங்கல்லாம் எனக்கு ஏதாவது வச்சிருப்பீங்க நினைக்கிறேன். ஏதாவது.'

'வச்சிருக்கோம்.' காலின் தன் குரலில் ஒலித்த கர்வத்தைத் தவிர்க்கமுடியவில்லை. 'உனக்குத் தேவையான கடைசி இடம் உஸ்டியூர்ட் மேட்டுநிலம்; அது கஜக்கிஸ்தானையும், உஸ்பெகிஸ்தானையும் இணைக்குது. பாட்டில சொன்ன இடம் ஓர் இயற்கையான வடிவமைப்பு. அதுக்குப் பேரு மூன்று சகோதரர்கள்; அது மேட்டுநிலத்தில கஜாக் பகுதியில இருக்கு. கஜக்கிஸ்தானோட காட்டுப்பகுதியில இருக்கு அங்கே போறது ரொம்ப கஷ்டம். அலைஸும் நானும் சேர்ந்து மூணுமணிநேரம் ஆராய்ச்சி செஞ்சோம்.'

'அற்புதம்! அப்புறம் வில்முனை? 'வழிகாட்டும்' வில்முனை?'

காலின் தான் இணையத்தில் தேடியதை விஜயிடம் சொன்னான்.

'ரொம்ப சரியா தெரியது. அருமை; நிச்சயமா சாத்தியம். நான் நிச்சயமா பந்தயம் கட்டமுடியும்.'

'நானுந்தான். ஆனா, வெளிப்படையா சொன்னா, நீ அங்க என்னத்த கண்டுபிடிக்க முடியும்னு எனக்குத் தெரியல. 'தேடலின் மையம்' என்பதற்கு என்னால அர்த்தம் கண்டுபிடிக்க முடியல.'

'அது என்னன்னு எனக்குத் தெரியும். அது வைரஸ். மேட்டுநிலம் வைரஸின் மூலம். குனார் பள்ளத்தாக்கில பாக்டீரியாவோட மூலத்த கண்டுபிடிச்சோம். அங்கதான் அம்ருதா தயாரிக்கப்பட்டது. இன்னும் கிடைக்காத ஒரே விசயம் வைரஸோட அசல் வடிவம். வைரஸ் அம்ருதாவோட முக்கிய கலவைக்கூறானதால, அதுதான் தேடலின் மையமாக இருக்கணும்.' விஜய் அவர்களிடம் குனார் பள்ளத்தாக்கில் தான் கண்டதைப் பற்றிச் சொன்னான்.

'பாக்ட்ரியாங்ற இடத்தில காலிஸ்தெனிஸ் கண்டு எடுத்த பொருள சொல்ற கவிதை மட்டுந்தான் படிச்சி புரிஞ்சிக்கிறதுக்குப் பாக்கியிருக்கு,' என்று அலைஸ் குறிப்பிட்டாள். 'அதயும் நாங்க ஆராய்ச்சி பண்ணணும்னு நீ விரும்புறியா?'

எதிர்முனையில் நிர்ச்சலனமும், சன்னமான பேச்சுச்சத்தமும் கேட்டன. பின்பு, விஜய் இணைப்பில் வந்தான். அவன் வான் குளுக்கோட ஆலோசித்திருந்தது தெளிவாகத் தெரிந்தது. 'தேவை இல்ல. அவங்க அதுசம்பந்தமா வேலை செஞ்சிட்டிருக்காங்க. அந்தப் பாட்டு எதப்பத்தி சொல்லுதுன்னு அவங்களுக்குத் தெரியும். அது சொல்ற பொருள எங்க கண்டுபிடிக்கணும்னும் அவங்களுக்குத் தெரியும். நன்றி நண்பர்களே. மலையளவு உதவி உங்களோடது.' விஜய் முடித்து இணைப்பைத் துண்டித்தான்.

காலின் அலைஸை வருத்தமாகப் பார்த்தான். 'அவன் ராதாவ பத்தி ஒருதடவைகூட கேட்கல.'

அலைஸ் இதைப்பற்றி யோசித்தாள். 'நீ சொல்றது சரிதான். அவளோட விடுதலைக்காக இப்படி பேரம்பேச வேண்டிய நிலையில இருக்கறது அவனுக்கு மகிழ்ச்சி தராது.'

'அவன் முயற்சி பண்ணியிருந்தால் ஜெயிச்சுருப்பான்னு சொல்லியிருக்க முடியாது,' என்று காலின் விளக்கினான். 'அவ திரும்ப கிடைப்பான்னு நம்பிக்கை அவனுக்கு இல்லங்ற மாதிரி தெரியது.'

அவர்கள் மௌனமாக உட்கார்ந்தார்கள். விஜய் என்ன செய்துகொண்டிருப்பான் என்று யோசித்தார்கள். அவனது வருங்கால மனைவியைக் கடத்தியவர்கள் மத்தியில் அவன் தனியாக இருக்கிறான். அவள்மீது அவனுக்கு நம்பிக்கை போயேவிட்டது என்று அவன் நம்பினால், மிகவும் கவலைப்பட வேண்டிய நேரம் இதுதான்.

65

ஜெய்பூர், ராஜஸ்தான்

இ ம் ரா ன் *Mi*-26 ஹெலிகாப்டரில் உட்கார்ந்திருந்தார். ஜெய்பூர் விமானப்படை தளத்திலிருந்து கேட்டுவாங்கிய இரண்டு ஹெலிகாப்டர்களில் ஒன்று அது. உலகத்திலே மிகவேகமான ராணுவ போக்குவரத்து ஹெலிகாப்டர். இந்த பணித்திட்டத்திற்கு அதுதான் சாலச்சிறந்தது. ராதா தன்னொடு பேசிய கைப்பேசியைப் பயன்படுத்தி குறிவைத்து கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு படைவீரர்களைக் கொண்டுசெல்ல இரண்டு ஹெலிகாப்டர்களும் இப்போது பயன்படுத்தப் படுகின்றன.

ஜெய்பூரின் புறநகர்களுக்கு மேலாக அவர்கள் பறந்துபோனார்கள்; மாநகரத்தின் மின்விளக்குகளைத் தாண்டி, சின்னச்சின்ன வெளிச்சத்திட்டுகள் அவ்வப்போது ஊடுருவிய பெரிய இருட்டுப்பகுதிகளை அவர்கள் கடந்துகொண்டிருந்தார்கள். இரவு ஆகாயத்தின் பின்னணியில், சிகப்பு விளக்கு நிலையான கதியில் மின்ன, பறந்துவரும் இன்னொரு ஹெலிகாப்டரின் நிழல்வடிவத்தை அவரால் காணமுடிந்தது.

மாநகரத்தை விட்டுக் கடந்து சுமார் பத்துநிமிடங்கள் கழித்து, ஒரு பெரிய வெளிச்சத்திட்டுப் பகுதி முன்னாடி காட்சிப்புலத்தில் வந்ததை இம்ரான் கவனித்தார். அவர்களின் இலக்கான மருத்துவ மையத்தின் சுற்றுப்பகுதி அது. இடத்தை அவர்கள் சரியாக அடையாளங்கண்டவுடன், சுற்றுப்பகுதியில் சாலைத் தடுப்பான்கள் வைக்கச் சொல்லி அவர்கள் ஜெய்பூர் போலீஸுக்கு எச்சரிக்கை ஒன்றை அனுப்பினார்கள். ஆனால் இதுவரை மருத்துவ மையத்திலிருருந்து யாரும் வெளியேறவில்லை என்று போலீஸ் சொன்னது.

இம்ரான் கவலைப்பட்டார். அதுக்கு இரண்டே இரண்டு அர்த்தம்தான் இருக்க முடியும். ஒன்று வருண் சக்ஸேனா அங்கே

இல்லை; இல்லையென்றால், சாலைத்தடுப்பான்கள் வைக்கப்படுவதற்கு முன்பாகவே அவன் கிளம்பியிருக்க வேண்டும். எப்படியோ டைட்டனின் தலைமை மருத்துவ அதிகாரி வலையிலிருந்து தப்பித்துவிட்டான் என்று இம்ரான் பயந்தார்.

குறித்த இடத்தை அடைந்தவுடன் இரண்டு பெரிய ஹெலிகாப்டர்களும் தரை இறங்கின. மையத்தின் பிரதான வாயிலுக்குச் செல்ல அங்கே ஒரு வாகனப்பாதை இருந்தது. அங்கேதான் இறங்க அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

ஹெலிகாப்டர்கள் தரைதொட்டவுடன், அவற்றின் கதவுகள் திறந்தன; வீரர்கள் இறங்கி சிதறி, முக்கிய புள்ளிகளில் நின்றுகொண்டு மையத்தின் சுற்றளவுப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அதிமுக்கிய வீரர்கள் படை இம்ரான் பின்தொடர கட்டிடத்தை நோக்கி முன்னேறினர். கட்டிடடத்தின் உள்ளே ஆயுதப்படை எதுவும் இருப்பது போல தெரியவில்லை. ஆனால் எதை எதிர்பார்ப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

வரவேற்பறையில் விளக்குகள் அணைக்கப் பட்டிருந்தன. கட்டிடம் யாருமே இல்லாதது போல அமைதியாக இருந்தது. யாருமே இல்லை. ஒரு காவலாளிகூட இல்லை.

இரவுக் கண்ணாடிகளுக்கு உயிர்கொடுத்து வீரர்கள் கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள். விளக்கு சுவிட்சுகள் இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் யாரும் இல்லை. கட்டிடத்தின் இரண்டு மாடிகளில் மொய்த்தனர். எதுவும் தென்படவில்லை. கட்டிடம் காலிசெய்யப்பட்டு விட்டது என்பது தெளிவானது.

'ப ழை ய *CCTV* காட்சிகளைப் பாருங்க. அவனுக சுத்தமா துடைக்காம விட்டிருந்தாங்கன்னா, ஏதாவது தடயங்க கிடைக்கலாம்,' என்று இம்ரான் அர்ஜுனுக்குக் கட்டளையிட்டார். அவரது உதவிஅதிகாரி மற்ற ஐபி குழுவினரோடு உள்ளே சென்றான். இம்ரான் தரைத்தளத்தை ஆய்வு செய்வதைத் தொடர்ந்தார். அவர் மின்னேனியை அடைந்தபோது, டில்லியில் மருத்துவ மையத்தில் தேடும்போது, அடித்தளங்களைக் கண்டுபிடித்தது அவர்க்கு ஞாபகம் வந்தது.

இம்ரான் மின்னேணியைச் சோதித்தார். மூன்று அடித்தளங்களின் பட்டன்களை அவர் கண்டுபிடித்தார். அனுமதி அட்டைகள் இல்லாமல் அவற்றைப் பயன்படுத்த முடியாது. இந்த தடவை அவர் தயாராகவே வந்திருந்தார். அவரது குழுவில் இருந்த மின்னியல் நிபுணர் ஒரு

கையளவு மாஸ்டர் எந்திரத்தைக் கொண்டுவந்திருந்தார். அதைப் பயன்படுத்தி மின்னேணியின் பாதுகாப்புக் கட்டமைப்பை வீழ்த்திவிட்டு எல்லாத் தளங்களுக்குள்ளும் நுழையும் வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அவரது காது எந்திரம் ஒலித்தது. அர்ஜுன். 'சார். இங்க ஒண்ணு இருக்கு. நீ வந்து பாக்கணும்.'

'இதோ வர்றேன்,' என்று இம்ரான் அவனிடம் சொன்னார். படைவீரர்களின் தலைவனிடம் அவர் சொன்னார். 'எல்லா தளங்களையும் சோதிச்சு பாருங்க. முடிஞ்சவுடன் என்னை கூப்பிடுங்க. அங்க என்ன இருக்கும்னு எனக்குத் தெரியணும்.'

சீக்கிரமாகவே அவர் பாதுகாப்பு அறைக்குள் சென்று அர்ஜுன் அருகில் நின்றார்.

'சார், இங்க வினோதமா ஒண்ணு இருக்கு,' என்று அர்ஜுன் சொன்னான். இம்ரானுக்குத் தான் போட்டுக்காட்ட விரும்பிய வீடியோப் பகுதியை ஓட விட்டான். 'பழைய காட்சிச்தொகுப்பை சுத்தமா துடைச்சிட்டாங்க. எந்தப் பதிவுகளும் இல்ல. இதைத்தவிர. எனக்குப் புரியல. எல்லாத்தயும் துடைச்சவனுக, ஏன் இதமட்டும் விட்டு வச்சானுக?

'பாப்போம்.' இம்ரானின் முகம் கடுமையாக இருந்தது. ஒரு கெட்ட உணர்வு உள்ளுக்குள் இறங்கியது. ஒரே ஒரு வீடியோக் காட்சிமட்டும் வெட்டப்படாமல் விடப்பட்டிருந்தால், அதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்கிறது என்று அவருக்குத் தெரியும். வீடியோ ஓடத் தொடங்கியவுடன் அவர் பயத்துடன் காத்திருந்தார்.

வீடியோவில் ராதா தரையில் உட்கார்ந்து மடிக்கணினியை நோண்டிக் கொண்டிருந்தாள்.

இம்ரான் உடனே நிமிர்ந்தார். மூழ்குவது போன்ற ஓர் உணர்வு அவருக்குள் இறங்கியது. இது நல்லதுக்கில்ல. சில வினாடிகள் கடந்தவுடன், ராதா கணினியை வைத்துவிட்டு எழுந்தாள். சுற்றுமுற்றும் எச்சரிக்கையுடன் பார்த்துவிட்டு அவள் நகர்ந்தாள். அவள் அசைந்தபோது, திரையின் ஓரத்தில் தெரிந்த வேகமான செயல்பாடுகளை அர்ஜுன் சுட்டிக்காட்டினான். அந்தக் கிளிப் சத்தமில்லாமல் ஓடியது. மூன்று காவலாளிகள் ராதாவைத் துப்பாக்கியால் சுடுகிறார்கள். ராதா ரத்தக்குளத்தில் விழுந்ததை, இம்ரான் அதிர்ச்சியோடும், திகிலோடும் பார்த்தார். துப்பாக்கிக்

குண்டுகள் துளைத்த அவள் உடம்பிலிருந்து ரத்தம் ஆறாகக் கொட்டி தரைமுழுவதும் பரவியது.

வீடியோ திடீரென்று முடிந்தது.

இம்ரான் ஆணியடித்தமாதிரி நின்றார். புலன்கள் மரத்துவிட்டன. ராதா இறந்ததை அவர் பார்த்துவிட்டார்.

66

ஆறாவது நாள்

சமுத்திரமந்தன்

விஜய் வான் குளூக்கின் ஆடம்பரமான கல்ஃப்ஸ்டீரிம் ஜெட்டில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் கஜக்ஸ்தானில் உள்ள அக்டவ் பன்னாட்டு விமானநிலையத்திற்குப் பறந்துகொண்டிருந்தார்கள். அங்கிருந்து அவர்கள் ஹெலிகாப்டரில், காலின் சொன்ன இடத்திற்குச் செல்வார்கள். ஆயுதந்தரித்த ஒரு பாதுகாப்புப்படை அவர்களின் வருகைக்காகக் காத்துநின்றது. மனிதர்களையும் ஆயுதங்களையும் தான்விரும்பிய எந்த இடத்திலும் திரட்டும் சக்திகொண்டதாக அமைப்பு தோன்றியது.

வெளியே இன்னும் இருட்டாக இருந்தது. உடனே கிளம்பவேண்டும் என்று வான் குளூக் வற்புறுத்தியிருந்தான். சூரியோதயத்திற்கு முன்பாகவே மேட்டுநிலத்தின் மீது அவர்கள் இருக்கவேண்டும் என்று அவன் விரும்பினான். தாங்கள் என்ன தேடிக்கொண்டிருக்கிறோம் என்று அவர்களுக்கு இப்போது தெரிந்தாலும், வைரஸ் மூலத்தின் மறைவான நுழைவாயிலை வெளிக்காட்ட எந்த நேரத்தில் நிழல் படியும் என்று அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. எதற்கும், விடியல்நேரத்திலே அங்கே இருப்பது நல்லது என்று அவன் நினைத்திருந்தான்.

முன்னதாகவே ஒரு குழு ஏற்கனவே அக்டவ்வை விட்டு போய்விட்டது. காரில் பயணித்து, அந்தக்குழு கிட்டத்தட்ட 400 கிலோமீட்டர் தூரத்தை கிட்டத்தட்ட அரைநாளில் மண்பாதையிலும், களிமண் பாதையிலும் கடந்து சென்றது. அவர்கள் சென்ற இறுதியிடத்தைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, பிரதானக்குழுவின் வருகைக்காகக் காத்திருப்பதுதான் அவர்களின் வேலை.

விஜய்க்கு ஓர் எண்ணம் உதித்தது. வான் குளூக் அவனிடம் முன்பு சொல்லியிருந்தது சரிதான் என்று, குனார் பள்ளத்தாக்கின் ஏரிகொண்ட குகை நிரூபித்துவிட்டது. ஆனாலும் தான் பார்த்ததை மகாபாரதத்தின் தொன்மத்தோடு இணைத்துப் பார்க்க இன்னும் அவனால் முடியவில்லை.

அவன் தன் எண்ணங்களுக்குக் குரல்வடிவம் கொடுத்து வான் குளூக்கிடம் விஜய் சொன்னான்.

'வாஸ்தவம். மகாபாரதம் நாம கண்டுபிடிச்சதை விளக்குது,' என்று வான் குளூக் மூக்கை உறிஞ்சியவாறு சொன்னான். 'நீ பாட்டுகளை சரியா விளங்கிக் கொள்.' அவன் எழுந்து ஒரு பெரிய பேழையிலிருந்து கனத்த புத்தகம் ஒன்றை எடுத்து தன் இருக்கைக்குத் திரும்பினான். புத்தகத்தை மேஜைமீது வைத்தான். 'உனக்கு சமஸ்கிருதம் தெரியுமா?'

விஜய் மறுத்து தலையாட்டினான்.

'தெரியாது. பெரும்பாலான இந்தியர்களைப் போலவே.' வான்

குளூக்கால் குரலில் ஒலித்த கிண்டலை மறைக்கமுடியவில்லை. 'நான் அந்த பாஷையில் சரளம்,' என்று அவன் தொடர்ந்தான். 'அதனால நான் உனக்கு விளக்றேன்.'

அவன் புத்தகத்தைத் திறந்து பக்கங்களைப் புரட்டினான். 'இது மகாபாரதத்தின் முதல் புத்தகமான ஆதி பர்வம். இதிலதான் அந்த தொன்மம் இருக்கு. அதுக்கு பேரு சமுத்திரமந்தன். அது தவறாக ஆனால் பொதுவாக 'கடலைக் கடைதல்'னு அழைக்கப்படுது.'

அந்த ஐரோப்பியனின் சமஸ்கிருத உச்சரிப்பு கிட்டத்தட்ட முழுமையானது என்பதை விஜய் முதன்முதலாக உணர்ந்துகொண்டான். சமஸ்கிருதத்தில் பேசும்போது, பெரும்பாலான மேலைநாட்டுக்காரர்களிடம் இருக்கும் வழக்கமான ஒலிஅழுத்தம் அவனிடம் இல்லை. அதைத் தன் இளமைக்காலத்திலே கற்றுக்கொண்டு, அதில் சரளமாக பேசுவதற்கும், வாசிப்பதற்கும் பல வருடங்களாக அவன் பயிற்சி எடுத்திருக்க வேண்டும், என்று விஜய் யோசித்தான்.

'இதோ அது இங்கே இருக்கு,' என்று வான் குளூக் தன் விரலை ஒரு பக்கத்தில் வைத்தான். 'ஆயிரம் வருசங்களுக்கு முன்னால என்ன நடந்திச்சுன்னு சொல்ற சில சுலோகங்கள் ஆதி பர்வத்தில் வருது. இருந்தாலும், வழக்கமா கொடுக்கப்பட்ட மரபுரீதியான விளக்கங்கள் அதோட உண்மையான அர்த்தத்தை மறைச்சிடுச்சி. அதனால நடந்த நிகழ்ச்சியோட நிஜ இயல்பு பலகாலமாக மறைஞ்சி போச்சி. இந்தக் கதைக்குக் கொடுக்கப்பட்ட ஆங்கில பேரு தப்பு. உண்மைதான், சமுத்திரமந்தன் என்ற வார்த்தைக்கு அர்த்தம் 'கடலைக் கடைதல்'ன்னு விளக்கம் சொல்லலாம். ஆனா மந்தன் என்பதோட வேர் மந்து அல்லது மத்து. அதுக்கு ஆங்கிலத்தில பல அர்த்தங்கள் இருக்கு. மத்து என்பதற்கு கலக்குதல், கிளர்த்துதல் அல்லது கலத்தல் என்று கூட அர்த்தங்கள் இருக்கு. அதனால, தலைப்போட மரபுரீதியான அர்த்தத்தை ஒதுக்கிவிட்டுப் பாத்தா, அதுக்கு "கடலைக் கலக்குதல்" அல்லது "கடலில் கலத்தல்" என்ற அர்த்தமும் வரும். நீயே புரிந்துகொள்ளலாம்; நடந்த நிகழ்வை விவரிக்கிறதுக்கு அதுதான் சரியான சொல் என்று. ஏரிப்பக்கம் நாம பாத்த கருவியிலதான் அந்த கலத்தல் நிகழ்ந்தது. ஏரித்தண்ணி சுவரில் இருந்த கல் கால்வாய்மூலம் இறைக்கப்பட்டிச்சி. கலவைப்பொருட்களின் மிச்சங்களை சேகரிச்சி மிக்சருக்குள் கொண்டுபோவதற்கு, கல்கொப்பரைகள் பயன்படுத்தப்பட்டன. தண்ணியை இறைக்க பயன்படுத்தப் பட்ட கருவி ஏரித்தண்ணி கடையப்படுவது போல ஒரு போலிக் காட்சியை உருவாக்கியிருக்கலாம். அதனாலதான், 'மத்து'ங்ற வேர்ச்சொல்லுக்கு ஜனரஞ்சகமான அர்த்தம்

"கடைதல்"னு இருக்கு இன்னும் விளக்கிறேன்.'

அவன் புத்தகத்தை துருவிப்பார்த்தான், மேலே இருந்த விளக்கைப்போட்டுக் கொண்டு. 'நாம இந்த சுலோகத்த பாக்கலாம்:

देवैरसुरसंघै ष्च मथ्यतां कलशोदधिः
भविष्यत्यमृतं तत्र मथ्यमाने महोदधौ॥**12**॥

இந்த சுலோகத்துக்கு மரபுரீதியான அர்த்தம் இதுதான். "கடவுள்களும் தானவர்களும் பெரிய கடலைக் கடைந்த பின்பு, கடல் தண்ணீர் ஓர் அமுதக் கலசமாக மாறும்." ஆனா "கடைந்த" என்ற வார்த்தைக்குப் பதிலா, மத்து என்ற வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி, "கலக்கிய" அல்லது "கலந்த" என்று போட்டால் முழு அர்த்தமும் மாறிடுது. இப்ப நீ இதுக்கு இப்படி விளக்கம் கொடுக்கலாம்; கடவுள்களும் தானவர்களும் கடல் தண்ணீரை கலந்தார்கள் அல்லது கலக்கினார்கள்; பின்பு அது அமுதக்கலசமாக மாறியது.'

அவன் அடுத்த சுலோகத்திற்குப் போனான்; அதை வாசித்தான்.

सर्वोषधीः समावाप्य सर्वरत्नानि चैव हि।
मन्थध्वमुदधिं देवा वेत्स्यध्वममृतं ततः॥१३॥

இங்க மரபுரீதியான அர்த்தம் இது: "ஓ கடவுள்களே! மூலிகைகளையும் ஆபரணங்களையும் பெற்று (பெற்றபின்பு), கடலைக் கடையுங்கள்; பின் நீங்கள் அமுதத்தைப் பெறுவீர்கள்." மறுபடியும் "கடைதல்" வார்த்தைக்குப் பதில் "கலத்தல்" அல்லது "கலக்குதல்" போட்டுப்பாரு. செடிகளயும், பழங்களயும் பத்தி விவரிக்கிற கியூப் கவிதை பொருத்தமாக இருப்பதை நீயே பாக்கலாம்.'

தான் கேட்டுக்கொண்டிருந்ததை விஜயால் நம்ப முடியவில்லை. சின்ன வயசிலிருந்தே ஆயிரக்கணக்கான முறை கேட்டு வளர்ந்த ஒரு தொன்மத்திற்கு வான் குளூக், இதுவரை தெரிந்த விளக்கத்திற்கு முற்றிலும் வித்தியாசமான ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறான்.

'இப்ப இன்னொரு சுலோகம். நாம குனார் பள்ளத்தாக்கில பாத்ததை நேரடியா சொல்றது அது:

ततस्तेन सुराः सार्धं समुद्रमुपतस्थिरे।
तमूचुरमृतार्थाय निर्मथिष्यामहे जलम्॥८॥

இந்த சுலோகத்திற்கு மரபான விளக்கம் இதுதான்: "பின்பு

கடவுள்களும் தானவர்களும் கடலின் கரையில் நின்றார்கள்; அமுதத்திற்காக நாம் நீரைக் கடையலாம் என்றார்கள்." இங்கே, ரொம்ப சுவராஸ்யமாக, சமுத்திரம் என்பதற்கு "நீரின் கூட்டம்" என்று விளக்கமுடியும். இது பெரிய நீர்நிலையைக் குறிப்பதுதான். அதைத்தான் நாம கண்டுபிடிச்சோம். இல்லியா? அதனால, இந்தச் சுலோகத்திற்கு உண்மையான அர்த்தம் இதுதான்: "பின்பு கடவுள்களும் தானவர்களும் நீரின் கூட்டம் இருந்த இடத்தின் கரையில் நின்றுகொண்டு அமுதத்திற்காக நாம் நீரைக் கிளறிக் கலக்கலாம் அல்லது நீரை கலக்கலாம் என்று சொன்னார்கள்."'

அவன் இன்னும் சில பக்கங்களைப் புரட்டி, இன்னொரு பாட்டை எடுத்தான். 'இங்கேதான் விஞ்ஞானம் வருது. ஒரு புரட்சிகரமான வித்தியாசமான மன அமைப்பு உனக்குத் தேவைப்படும் இந்த சுலோகத்தை சரியாக விளங்கிக் கொள்றதுக்கு:

तत्र नानाजलचरा विनिष्पिष्टा महाद्रिणा।
विलयं समुपाजग्मुः शतशो लवणाम्भसि॥ १९॥

இதுக்கு மரபுரீதியா இந்த பொருளைத்தான் சொல்றாங்க. "பின்பு, பெரிய மலையால் நசுக்கப்பட்டு, பல நீர்நிலை மிருகங்கள் தங்கள் அழிவை நோக்கிப் புறப்பட்டு, உப்புநீரில் நூறுதடவை மறுபிறப்பு எடுத்தன." ஜலக்காரா என்ற வார்த்தையை "நீர்நிலை மிருகங்கள்"ன்னு மொழிபெயர்த்தாங்க. அது தப்பு. உண்மையான அர்த்தம், "நீருக்குள் செல்பவவை" அல்லது "நீரில் வசிப்பவை". அது நீருக்குள் இருக்கும் எந்த உயிரியைக் குறிக்கும், நாம ஏரியில கண்டுபிடிச்சோமே அந்த பாக்டீரியாவையும் சேர்த்துத்தான். வினிஸ்பிஷ்டா என்ற வார்த்தை "அரைக்கப்பட்டது அல்லது தூளாக அரைக்கப்பட்டது" என்ற அர்த்தத்தைக் கொடுக்கும். கடைசியாக, மறுபடியும், ஒரு உப்பு நீர்நிலையைப் பத்தின குறிப்பு வருது. அம்ஃபாசி என்பது நீர், லவணம் என்பது உப்பு. அதனால இங்கேயும் நாம உப்பு நீர்நிலையைப் பத்தித்தான் பேசுறோம். அது நாம கண்டுபிடிச்ச ஏரியை ரொம்ப முழுமையாக விவரிக்குது. அதனால புது மொழிபெயர்ப்பு இப்படித்தான் இருக்கும்: "உப்புநீரில் இருக்கும் கடல்வாழ் உயிரிகள் அல்லது பாக்டீரியாக்கள் அழிக்கப்பட்டு நூறுமுறை மறுபிறப்பு எடுக்கின்றன." ரெட்ரோவைரஸ் பாக்டீரியாக்களை தொற்றுக்குள்ளாக்கி அவற்றின் மரபணுக்கூறுகளை மாற்றும்போது என்ன நடக்கிறது என்பதை இந்த வரிகள் விவரிக்கவில்லையா? - ஒருவிதமான மறுபிறப்புன்னு சொல்ல மாட்டீயா?'

'மிஸ்டர் வான் குளூக்,' என்று விமான ஓட்டியின் குரல் ஒலிபெருக்கிகளில் ஒலித்தது. 'நாம இப்ப அக்டவ்வுக்குள் இறங்கப்போறோம். 30 நிமிசத்தில தரையை தொடுறோம்.'

வான் குளூக் புத்தகத்தை மூடிவிட்டு விஜயை அளப்பது போல பார்த்தான். 'இன்னும் நிறைய இருக்கு நிறையவே. ஆயிரக்கணக்கான வருசங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு விஞ்ஞான நிகழ்வைப் பத்தி உண்மையிலேயே மகாபாரதம் சொல்றதுன்னு உனக்குப் புரியதா? அந்த நிகழ்வுக்கு அடித்தளமிட்டது ஒரு சமுத்திரமோ அல்லது கடலோ இல்ல. ஒரு பெரிய உப்பு நீர்நிலைதான். அதை இப்பத்தான் நீ உன் கண்ணால பார்த்தாய்.'

விஜய் ஆம் என்பதுபோல தலையசைத்தான். வார்த்தைகள் அவனை தோற்கடித்தன. ஒரு கற்பனையான புனைவை மேலோட்டமாகச் சொல்லும் சுலோகங்களுக்குப் பின்னாடி ஒளிந்திருந்த ஒரு பெரிய அர்த்தம் இப்போதுதான் அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

67

சிறப்பாக தீட்டப்பட்ட திட்டங்கள் [ஆனால் தோற்றவை)]

பேட்டர்சன் கேமராவை வெறுப்புடன் பார்த்தார். இரவை முழுவதுமாகக் கொல்லப்போகிற விஷயம் இது. இம்ரான் அப்போதுதான் ஜெய்பூரிலிருந்து திரும்பி மருத்துவமனைக்கு வந்திருந்தார். இரவு முழுவதும் உழைத்த உழைப்பினால் களைப்படைந்ததால் அவர் உடலில் போட்டிருந்த தையல்கள் வலிக்க ஆரம்பித்தன. அதிக ரத்த இழப்பாலும் சர்ஜரியாலும் அவர் இன்னும் களைப்பாகவே இருந்தார். ஜெய்பூருக்குப் போய்வந்தது வேறு களைப்பை அதிகமாக்கியது.

இம்ரான் ராதாவைப் பற்றி பேட்டர்சன்னுக்குச் சுருக்கமாகச் சொன்னார். அந்தப் பெரிய மனிதர் செய்தியை உணர்ச்சிகள் ஏதுமின்றி எடுத்துக்கொண்டார். இது ஒரு யுத்தம்; முன்பு தன் குழுவினர்களை அவர் இழந்திருக்கிறார். துக்கப்படுவதற்கும் அனுதாபப் படுவதற்கும் நேரம் இருக்கிறது. செய்யவேண்டிய காரியம் நிறைய இருக்கிறது.

ஆனால் காலின் கொடுத்திருந்த செய்தி அவருக்கு மகிழ்ச்சி இல்லை.

'எல்லா இடத்தையும் விட்டு அவர்கள் ஏன் கஜக்ஸ்தானைத் தேர்ந்தெடுக்கணும்?' என்று அவர் உறுமினார். 'கிறிஜிஸ்தானில் இருந்த ராணுவத்தளத்த விட்டு நாம இப்பத்தான் விலகிவந்திருக்கோம். மத்திய ஆசியாவில அமெரிக்க தளங்கள் வேறு ஒன்றும் இல்லை. அவர்கள் ஆஃப்கானிஸ்தானில் இருக்கிற வரைக்கும், நாம விஜய்க்கு மனிதரற்ற விமானத் தளங்கள் *(drone base)* மூலமா உதவி செஞ்சிருக்க முடியும்; அவனை அங்கிருந்து பிரச்சினையே இல்லாம வெளியே கொண்டுவந்திருக்க முடியும். நமக்கு இன்னும் அங்கே படைகள் இருக்கு, கஜக்ஸ்தான் ரொம்ப கஷ்டம். அது ஒரு பைத்தியக்கார நாடு. ஆஃப்கானிஸ்தானிலிருந்து போற எந்த விமானமும் உஸ்பெக்கையும்

கஜாக் பகுதியையும் கடந்துதான் போகணும். ஆஃப்கன் தளத்திலிருந்து நம்மால விமானங்கள பயன்படுத்தமுடியாது. அவற்றிற்கு அந்த அளவுக்கு வீச்சும் கிடையாது. இந்த நாடுகள்ல எதுவும் நம்ம போர்விமானங்கள் அவங்க விமானவெளியில போறதுக்கு குறுகிய கால அவகாசத்தில் அனுமதிக்காது.'

'அப்படின்னா, விஜய் தன்னைத்தானே காப்பாத்திக்க வேண்டியதுதானா?' என்று இம்ரான் உரக்கச் சிந்தித்தார்.

பேட்டர்சன் தோள்குலுக்கினார். 'அவனுக்கு உதவி பண்றதுக்கு என்னால் ஆனத செஞ்சு தொலக்கிறேன். என் முக்கிய கவலை அதுவல்ல. வாஷிங்டனில் இருக்கிற ஒவ்வொரு தொடர்புமூலமாகவும் நான் அதைச் செஞ்சிடுவேன். ஆனால் அதுக்கு போதிய நேரம் கிடைக்குமான்னு தெரியல. நாள விடியதற்குள்ள உள்ளூர் கஜாக் நேரப்படி, அவங்க கடைசி இலக்கு இடத்தில் இருப்பாங்கன்னா, எனக்கு ஒரு சில மணிநேரம்தான் மிச்சமிருக்கும். அவ்வளவுதான். நான் இப்பவே போறது நல்லது.'

'வாழ்த்துக்கள்,' என்று இம்ரான் முடித்தார்; கணினித் திரையை அணைத்தார். ஒரு வெறுமை உணர்வு அவர்க்குள் இறங்கியது. அவர் ஏற்கனவே ராதாவை இழந்துவிட்டார். விஜய்க்கு உதவி செய்வதுபற்றி பேட்டர்சன் நம்பிக்கையோடு பேசவில்லை. இம்ரானுக்குத் தெரியும் கஷ்டங்கள். என்னதான் போராடினாலும், தான் இன்னும் ஒரு நண்பரை இன்று இழக்கப்போகிறோம் என்ற உணர்வை அவரால் உதறித்தள்ள முடியவில்லை.

மூன்று சகோதரர்கள்

அவர்கள் உஸ்டியூர்ட் பீடபூமியின் மேல் கடக்கும்போது விஜய் ஹெலிகாப்டரிலிருந்து வெறித்துப் பார்த்தான். மிகவும் கீழே ஒரு தட்டையான மேட்டுநிலம் மண்பரவி கிடந்தது. கண்ணுக்கெட்டும் தூரம்வரை, வைகறை வெளிச்சத்தில் பச்சைத்தாவரங்கள் எதுவுமில்லை; நீர்நிலைகளும் இல்லை. வறட்சியின் உச்சம்.

பாலைவன மணலிலிருந்து அசுரவடிவ அடுக்குத்தளங்களும், சுண்ணாம்பு செங்குத்துச் சரிவுகளும் மேலேழும்பி, வானில் பறக்கும் இடைஞ்சல்காரர்களைத் தொட முயற்சித்தது போல தோன்றின. கரடுமுரடான கீறல்கள்விழுந்த செங்குத்துப்பாறைகள் குறைந்தது 300 மீட்டர் உயரத்தில், சுத்தமான வெள்ளை நிறத்திலிருந்து நீலம்,

இளஞ்சிவப்பு நிறங்கள் வரை வெவ்வேறு வண்ணங்கள் கொண்டிருந்தன. மற்றொரு கிரகத்தைச் சுற்றிவரும்போது அதனை உற்றுநோக்குவது போல தோன்றியது.

இந்த இடத்தில்தான் வைரஸின் நதிமூலம் இருக்கிறதா? அவர்கள் சீக்கிரமே கண்டுபிடித்து விடுவார்கள்.

சமிக்ஞை செய்யப்பட்டவன் போல, விமான ஓட்டி பின்னால் திரும்பி அவர்களிடம் சொன்னான், மூன்று சகோதரர்கள் என்ற பாறை அமைப்பு கண்ணில் தட்டுப்பட்டது என்று.

'வில்முனையைத் தேடிப்பாரு,' என்று வான் குளூக் கட்டளையிட்டான். 'எல்லா கண்ணும் தரைமீது இருக்கட்டும்.'

அவர்கள் மேலே பறந்துகொண்டிருந்த, தட்டையான அந்த பீடபூமி மண்ணுக்குள் பெரிய அம்புகள் குடைந்து வரையப்பட்டிருந்தது போல இருந்தன. விஜய்க்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. தரையில் மைல்கணக்காக வரையப்பட்ட நாஸ்கா வரிகள் (பெரு பாலைவனத்தில்) ஞாபகம் வந்தது. ஆனால் இங்கே விற்களைத் தவிர வேறெந்த வடிவங்களும் கண்ணுக்குப் புலனாகவில்லை.

விற்களில் ஒரு யூ-வடிவ பை இருந்தது; அதிலிருந்து நன்றாக கூர்தீட்டப்பட்ட முனைகள் கொண்ட இரண்டு விற்கள் துருத்திக்கொண்டிருந்தன.

விஜய்க்கு பாட்டின் அர்த்தம் இப்போது புரிந்தது. சூரியோதயத்திற்கு முன்பாகவே இங்கு வந்துவிட வேண்டும் என்று ஏன் வான் குளூக் விரும்பினான் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

மூன்று சகோதரர்கள் அமைப்பு இப்போது அவர்களுக்கு முன்பாக கம்பீரமாகவும் அதே நேரத்தில் அமானுஷ்யமாகவும் தோன்றின. அந்த மூன்று செங்குத்தான பாறைத் தூண்கள் பெருமையோடு ஒரு சுண்ணம் படுக்கையிலிருந்து எழுந்துநின்றன. பாதாளப் பகுதிகளை மூழ்கடித்த ஓர் அசுரவடிவிலான சுண்ணாம்பு மணல்குன்றைப் போல, சுண்ணம் படுக்கை செங்குத்தாக மேலேறிச் சென்றது. தூண்கள் வெறுமையாக இருந்தன, பச்சைத்தாவரங்கள் இல்லாமல், அவற்றின் கிழக்குப் பகுதி புதிதாய்ப் பிறந்த சூரியனால் தீப்பிடித்து எரிந்தது.

இதுவரை தான்பார்த்த பீடபூமியின் வறண்ட அழகைக் கடந்துசென்ற இயற்கையின் அதியற்புதமான பேரழகுக் காட்சியிலிருந்து விஜயால் தன் கண்களை மீட்டெடுக்க முடியவில்லை. அமரத்துவ வாழ்வைக் கொடுக்கக் கூடிய இயற்கைப் படைப்பு ஏதாவது

இருக்குமேயானால், அதைக் காணக்கூடிய இடமாக இது தோன்றியது.

'மூன்று சகோதரர்கள்,' என்று வான் குளூக் முணுமுணுத்தான், யாரை நோக்கியும் இல்லாமல். பாறை அமைப்பின் பேரழகு அவனை ஈர்த்தது. பின் சுயநினைவுக்கு வந்து ராணுவத்துல்லியத்துடன் கட்டளைகளை இட்டான்.

மிகவும் கீழே தரையில் ஒரு ஸ்போர்ட்ஸ் கார் தெரிந்தது. அதிலிருந்தவர்கள் எறும்புகளாகத் தெரிந்தார்கள். முன்னாடிச் சென்ற குழு.

விஜய் அதைப் பார்த்தான். இன்னொரு விற்களின் கூட்டம். அவர்கள் சற்றுமுன்பு கடந்துவந்த மற்ற விற்களைப் போலவே இவையும் பீடபூமியின் கல்லுக்குள் வரையப் பட்டிருந்தன. மற்றவை வடக்குநோக்கி சுட்டிக்காட்டிய போது இந்த விற்கள் மூன்று சகோதரர்களைச் சுட்டிக்காட்டின.

வழியைச் சுட்டிக்காட்டும் வில்முனை

ஆனால் பாட்டு குறிப்பிட்ட வில்முனை எது? ஒவ்வொன்றும் பாறை அமைப்பைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது, ஆனால் பாறையின் வெவ்வேறு பாகங்களை.

'எது அது?' என்று கூப்பர் ஹெலிகாப்டரின் சுழல் சத்தத்திற்கும் மேலாக கத்தினான்.

'நிழல்கள் எதைத் தொடுதோ அதுதான் நம்மளை முத்திரைக்கு இட்டுச் செல்லும்!' என்று வான் குளூக் திருப்பிக் கத்தினான். 'பாரு. அவை ஏற்கனவே பின்வாங்கிக் கொண்டிருக்குது.'

அவன் சொன்னது சரி. பாறையின் மீது பிரகாசிக்கும் அதிகாலைச் சூரியன் வீசியெறிந்த நிழல்கள் சுருங்கிப் பின்னால் உள்ளிழுத்தவாறு பாறை அமைப்பை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன, பின்னால் தோழியர் புடைசூழ போய்க்கொண்டிருக்கும் மணமகள் போல.

'நாம இங்கேயே ரொம்ப நேரம் தொங்கிக் கொண்டிருக்க முடியாது!' என்று கூப்பர் கத்தினான். 'அக்டவுக்குத் திரும்பிப் போறதுக்கு மட்டும்தான் நம்மகிட்ட எரிபொருள் இருக்கு!'

'அதோ வில்முனைகள அவை உருவாக்குது!' என்று வான் குளூக் பதில்சொன்னான். 'நாம இப்போ கீழே போவோம்.'

ஹெலிகாப்டர் கீழே இறங்க ஆரம்பித்தது. தரையில் காத்திருந்த

குழுவினர் வில்முனைகளைத் தேடி அங்கேயும் இங்கேயும் அலைய ஆரம்பித்தனர். என்ன நடக்கிறது என்பதை விஜய் புரிந்துகொண்டான். விடியல்வெளிச்சம் வந்தவுடன், ஒவ்வொரு வில்முனையைச் சுற்றியும் கீழிருந்த குழுவினர்கள் வெள்ளைக் கொடிகளை நட்டார்கள். பாறை அமைப்பின் நிழல் சரியான வில்லைத் தொட்டவுடன், தன்னைப் படைத்த பொருளை நோக்கி பின்வாங்கும் நிழல் வெள்ளைக் கொடிகள் மீது படுவதை வைத்து அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

ஹெலிகாப்டர் புழுதிப்புயலில் இறங்கியது. அதன் சுழலிகளின் சத்தம் செத்துப்போய் காதடைக்கும் நிர்ச்சலனத்தில் முடிந்தது.

அது ஓர் அழகான காட்சி. அவர்களைச் சுற்றிலும் ஒரு பரந்த கல் பாலைவனப் பூமி; அதன் நடுவே மூன்று சகோதரர்கள் என்றழைக்கப்படும் பாறை வடிவமைப்பு. தொலைதூரத்தில் ஆகாயத்தில் சூரியன் உயரமாக ஏறியபோது, செங்குத்துக் குன்றுகள் நிறமாறின.

'புரியவில்லையே,' என்றான் விஜய். 'ரெண்டு வில்முனைகளும் இப்போ நிழல்லதான் இருக்கு. பாறையோட நிழல் பின்னாடி போகும்போது, அது ரெண்டு வில்முனைகள தொடும். அவை ஒரே திசையைத்தான சுட்டிககாட்டுது!'

'பொறுமை,' என்றான் வான் குளூக் 'ஞாபகம் இருக்கட்டும். கனசதுரத்த அமைப்புதான் உருவாக்கிச்சி. நாங்க செய்ற ஒவ்வொரு விஷயத்திலயும் ஒரு நோக்கம் இருக்கும். இந்த முறையிலதான் நாம அந்த இடத்த கண்டுபிடிக்கணும்னு பாட்டு சொல்றதுன்னா, நாம அப்படியேதான் செய்யணும்.'

மூன்றுதலைப் பாறையின் நிழல் தொடர்ந்து பின்னாடிச் சென்றபோது, குழு காத்திருந்தது. இரண்டு வில்முனைகளில் எந்த ஒன்றை அவர்கள் தேடிவந்தார்கள்?

68

நாக முத்திரை

நிழல் சுருங்கி இரண்டு வில்முனைகளின் ஓரங்கள்மீது கடந்து வலதுப்புற விளிம்பில் ஒரு வில்முனையின் ஓரத்தின்மீது நின்றபோது, ஆயுதந்தரித்த மனிதர்கள் கோரஸாக சத்தமிட்டனர். அந்த நிழல் மூன்று சகோதரர்களுக்குச் செல்லும் சின்னப் பாதையைச் சுட்டிக்காட்டியது.

வான் குளூக்கின் வார்த்தைகளில் இருந்த உண்மையை விஜய் இப்போது புரிந்துகொண்டான். இதுவரை அவன் நம்பாமல் இருந்தான். ஆனால் பின்வாங்கிச் சென்ற நிழல் வில்முனைகளைக் கடந்தபோது, பாறையிலிருந்து விலகிப்போன வில்முனையாகவே மாறிவிட்டது. பாறையின், சூரியனின் இயற்கையான வினோதமான நிலை அமைப்பால், வில்முனை வடிவமான நிழலும், பீடபூமிமேல் வரையப்பட்டிருந்த வில்முனையும் இப்போது சந்தித்துக் கொண்டன.

வான் குளூக் விஜயின் மீது ஒரு வெற்றிப்பார்வையை ஏவினான். அதை ஒத்துக்கொண்டது போல விஜயும் தலையசைத்தான். 'போகலாம். அந்த ஐரோப்பியன் முன்னால் சென்றபோது, மற்றவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து பெரிய பெட்டிகளைத் தூக்கிவந்து வில்லின் திசையில் அவனைப் பின்தொடர்ந்தனர்.

அவர்கள் ஒரு சிறிய சிகரத்தை அடைந்தவுடன், விஜய்க்குள் எதிர்பார்ப்பு உணர்வு ஏற்பட்டது. நாகமுத்திரை தன்னை என்னவாகக் காட்டப்போகிறது?

கூப்பர் வில்முனையைத் திரும்பிப்பார்த்தான். அவன் மனதிற்குள் ஏதோ கணக்குப்போட்டுக் கொண்டிருந்தான். 'வில் மேல் நோக்கி சரிந்துபோகுது,' என்றான் அவன் இறுதியில். 'அதுக்கு அர்த்தம், நாம தோண்டவேண்டிய இடம் சரிவில இருக்கு. அது இங்கதான் இருக்குன்னு நினைக்கிறேன்.' பாறை வடிவமைப்பின் செங்குத்தான முகத்தில் ஒரு இடத்தை அவன் சுட்டிக்காட்டினான்.

கட்டளைகள் இடப்பட்டன. மனிதர்கள் முன்னாடி வந்தார்கள். ஒரு பெட்டி திறக்கப்பட்டது; கருவிகள் வெளியே எடுக்கப்பட்டன. ஐந்து மனிதர்கள் திரும்பத்திரும்ப பாறையைப் பார்த்துக்கொண்டே விவாதித்தனர். மலையேறுபவன் இல்லை விஜய். அதனால் அவன் விவாதத்தைப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் என்ன கருவியைப் பிரயோகிக்கலாம் என்பது பற்றி அவர்கள் விவாதிக்கிறார்கள் என்று மட்டும் அவன் தெரிந்துகொண்டான்.



அவன் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஒருவன் ஓர் உருளைப் பொறியை எடுத்து ஒரு முனையால், மூன்று சிகரங்களில் ஒன்றின் உச்சியைக் குறிவைத்தான். பற்றிக்கொள்ளும் கொக்கி ஒன்று ஏவப்பட்டு அது பாறையின் உச்சியின் மேலேறி, பின்னாடி ஏறும் கயிறொன்றை தொங்கவிட்டது. பாறையின் மீது கொக்கியை ஏவியது காற்றடைக்கப்பட்ட ஒரு பீரங்கி என்று விஜய் புரிந்துகொண்டான். கொக்கி பாறையின் உச்சியில் சத்ததோடு இறங்கியது. இன்னொரு மனிதன் தொங்கும் கயிற்றை இழுத்துப் பார்த்தான். அது சில அங்குலங்கள் முன்னே ஆடியது. பின்பு இறுக்கமானது. பாறையின்

உச்சியில் வீசப்பட்ட கொக்கி பலமாக அதில் ஒட்டிக்கொண்டு விட்டது.

இன்னொரு கருவி திறக்கப்பட்டு அது கயிற்றில் இணைக்கப்பட்டது. ஒருவன் ஒரு தோல்பட்டையைக் கொண்டுவந்து அதனோடு கருவியை இணைக்கும்வரை அது என்ன கருவி என்று விஜயால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த ஆள் ஒரு பட்டனை அமுக்கியவுடன் மோட்டார் வின்ஞ் அவனை கயிற்றின் மேல் ஏற்றிக்கொண்டு சென்றது.

'மேல போய் பாறையில ஏதாவது குழி இருக்கா அல்லது அமைப்போட முத்திரை இருக்கான்னு பாரு,' என்று கூப்பர் மேலேறிச்செல்பவனிடம், தன் தொண்டையில் பொருத்திய மைக்ரோபோன் மூலம் கட்டளையிட்டான். விஜய் மற்றும் வான் குளூக்கைத் தவிர மற்றவர்களிடம் இருந்ததைப் போலவே, மேலேறிச்செல்பவனிடமும் தொண்டை மைக்ரோபோனும் காதுப்பொறியும் இருந்தன, தகவல் பரிமாற்றத்துக்காக.

வின்ஞ் அவனை சரிவின் மேலே இழுத்துச் சென்றது. ஒரு 70 அடி உயரத்தில், அவன் நிறுத்தி, கயிற்றை பாறையில் கட்டினான், தான் அந்தரத்தில் தொங்கக்கூடாது என்பதற்காக.

'அவன் முத்திரையைப் பாத்திட்டான்,' என்று கூப்பர் வான் குளூக்கிடம் சொன்னான். 'அது அப்படியே இருக்கு.'

வான் குளூக் தலையசைத்தான். 'நானும் அப்படித்தான் நினைச்சேன். இப்ப நமக்குத் தெரியுது, அலெக்ஸாண்டரை எது கொன்னதுன்னு.' விஜய் அவனை புரியாமல் பார்த்தான். ஆனால் வான் குளூக் தன் ரத்தினச்சுருக்கமான வாக்கியத்தை விரிவுபடுத்தவில்லை.

மனிதர்கள் பெட்டியிலிருந்த மற்ற பொருட்களை பிரித்துப்பார்க்க தொடங்கிவிட்டார்கள். அசையும் மின்னுற்பத்திக்கருவிகள், மின் துளையியந்திரங்கள், பாறைத்துரப்பணங்கள், துளையிடும் மின்எந்திரங்கள், உடலுழைப்புக் கருவிகளான கோடாரிகள், மண்வெட்டிகள், மண்வாரிகள், மற்றும் பாறையை உடைக்கும் பெரிய சுத்தியல்கள் என்று எல்லாம் வெளிவந்தன.

மற்ற நான்கு மனிதர்களும் சிறிய கருவிகளால் பாறை உச்சியில் பற்றிக்கொள்ளும் கொக்கிகளை எய்தார்கள். பின்பு, முதலில் ஏறியவுடன் சேர்ந்துகொள்ள அவர்களும் ஏறினார்கள். தன் இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை அவன் கீழே தாழவிட்டான். கருவிகள் பை ஒன்றைக் கயிற்றில் கட்டி அதனோடு சேர்ந்து அவர்களும் ஏறினார்கள்.

கனமான கேபிள்கள் மின்கருவிகளிலிருந்து பாம்பாக நெளிந்து, தரையில் இருந்த ஜெனரேட்டர்களொடு கட்டப்பட்டிருந்தன.

'நீங்க முத்திரையை உடைக்கணும்,' என்று கூப்பர் சரிவிலிருந்த மனிதர்களிடம் சொன்னான். 'மென்மையா இருக்கவேண்டிய அவசியம் இல்லை. குழியை நாம அப்புறமா மூடிக்கலாம்.'

மின்னுற்பத்திக்கருவிகள் ஓட ஆரம்பித்தன; சத்தம் பரந்த கல் பீடபூமி முழுக்க எதிரொலித்ததால், சில முயல்களும் பறவைகளும் கூடுகளிலிருந்து தெறித்து ஓடின. மேலேறியவர்கள் முத்திரையை உடைக்க பாறையை துளையெந்திரங்களாலும், சுத்தியல்களாலும் தாக்க ஆரம்பித்தனர். தொலைவிலிருந்து பார்த்தபோது, முத்திரை எப்படி இருக்கும் என்று விஜயால் பார்க்கமுடியவில்லை. அது மறைவாக மூடப்பட்டிருக்கும் என்று அவன் புரிந்துகொண்டான். பாறை வடிவமைப்புக்குள் முத்திரை எங்கேயோ மறைந்திருக்கும் என்று யாரும் கண்டுபிடித்திருக்க முடியாது.

இறுதியில் மேலேறியவர்களிடமிருந்து ஒரு காட்டுக்கத்தல் வந்தது. அதோடு சேர்த்து, பலமான கீறலும், பாறைத்துண்டுகளும் சடசடவென்று சரிவில் உருண்டுவந்தன. முத்திரை உடைக்கபட்டுவிட்டது.

சதுரமான, கறுப்பான துவாரம் ஒன்று பாறையில் கொட்டாவிவிட்டபடி இருந்தது. வெள்ளைச்சரிவின் பின்னணியில் அது இருட்டாகத் தெரிந்தது. அது மிகப்பெரியதாக இல்லை. முதலில் ஏறியவன் தன்னைத் தூக்கி அதற்குள் செலுத்தியபோது, இரண்டுபக்கமும் மூன்றடிக்கு மேலே அது இருக்கமுடியாது என்று விஜய் உணர்ந்தான். ஒரேநேரத்தில் ஒருமனிதன் மட்டும்தான் செல்லமுடியும் என்ற அளவில் அது இருந்தது.

மேலேறியவர்கள் ஒருவரொருவராக துவாரத்தில் நுழைந்தபோது, மின்கருவிகள் ஐந்து விஞ்சுகளோடு இறக்கப்பட்டன. அவர்கள் உடைப்புச்சாதனங்களை சுமந்துகொண்டு போனார்கள்.

'பாறைவழியாகச் செல்லும் கிடைமட்டச் சுரங்கம் அது,' என்று கூப்பர் வான் குளூக்கிடம் சொன்னான். 'குறுகலானது. அதனால அவனுக கைமுட்டி கால்முட்டிப் போட்டுதான் போறானுக.' சற்றுநேரம் கழித்து, மலையேறிகள் நின்றுவிட்டார்கள். கூப்பர் தன் காதுக்கருவிக்குள் கூர்மையாகக் கவனித்தார். அவன் வான் குளூக்கிடம் திரும்பினான். 'அவங்க ஓர் அறைக்குள்ள இருக்காங்க. அங்கிருந்து

கீழேபோற படிகள் இருக்கு. நாம் அவங்களோட இப்போ சேர்ந்துக்கணும். அவங்க இறங்கிப் போனபின்னாடி, தொடர்பு விட்டுபோயிடும்.'

'நாம போகலாம்,' என்று வான் குளூக் தன் ஆட்களைப் பின் தொடருமாறு சைகை காட்டினார். அவர் பாறையின் அடித்தளத்திற்குச் சென்று ஒரு விஞ்சைப் பற்றினார். 'அமைப்போட பழைய வழக்கமான இடங்கள் எப்படி இருந்திச்சுன்னு பார்க்கிற நேரம் வந்திடுச்சி.'

கிட்டத்தட்ட அங்கே

இரண்டு காவலாளிகளுக்கு இடையில் தன்னை நுழைத்துக்கொண்டு விஞ்சில் ஏறினான் விஜய். அவன் பெரிசா செய்யவேண்டியது ஒன்றுமில்லை. விஞ்சே எல்லாவற்றையும் செய்துகொடுத்தது. அவனுக்கு முன்னாலிருந்த காவலாளி, ஒரே நேரத்தில் ஒரு ஆளைமட்டும் அனுமதிக்கும் அந்தத் துவாரத்தின் ஊடாக மறைந்துபோனான். விஜய் பின்தொடர்ந்தான். அவனது தலைக்கவச விளக்கு வெளிச்சம் காவலாளியின் பின்புறத்தில் பட்டது.

சுரங்கம் பாறையின் ஊடாக கிடைமட்டமாக சென்றது. அசௌகரியமான முறையில் குறுகலாக இல்லை. இரண்டு பக்கமும், விஜய் தன் தலையைத் தூக்காதவரைக்கு, மேலேயும் நிறைய இடமிருந்தது. தரையும் சுவர்களும் பளபளப்பாக ஜொலித்தன.

முப்பது அடி அல்லது அதற்கு மேலே சென்றபின்பு சுரங்கம் ஒரு பெரிய அறைக்குள் நீண்டுவிரிந்தது. விஜய் தாவிச்சென்று வான் குளூக்கோடும் தனக்கு முன்னால் சென்ற மனிதர்களோடும் சேர்ந்துகொண்டான். அப்போது மற்றவர்களும் வழியிலிருந்து மேலேறி தோன்றினார்கள்.

'விளக்குகள்,' என்று வான் குளூக் ஆணையிட்டான். அதிசக்திவாய்ந்த அசையும் மின்விளக்குகள் போடப்பட்ன. படிக்கட்டில் வெளிச்சம் பரவியது. படிக்கட்டு ஒரு பெரும் இருட்டில் இறங்கிமுடிந்தது. அதற்கப்புறம் தோன்றிய அடிப்பகுதியை வெளிச்சத்தால் ஊடுருவ முடியவில்லை.

கூப்பரின் சமிக்ஞையில், முதலில் வந்திருந்த நால்வர் குழு படிக்கட்டில் இறங்கியது. தன் காதுக்கருவி மூலம் அவர்களின் இயக்கங்களை கூப்பர் கண்காணித்தார். அவர்களும் தங்கள் இயக்கங்கள் பற்றிய தகவல்களை ஒலிபரப்பிக் கொண்டே

இருந்தார்கள்.

குழு அமைதியாக, பொறுமையாக அறையில் காத்துநின்றது. நிமிடங்கள் கடந்தன. இறுதியில், இருபது நிமிடங்கள் இருக்கும் என்று விஜய் கணித்திருந்த நேரத்திற்குப் பின்பு, கூப்பர் வான் குளூக்கிடம் தலையசைத்தான். 'எல்லாம் தெளிவாச்சி,' என்றான்.

வான் குளூக்கும் தலையசைத்தான். கும்பல்காரர்கள் படிக்கட்டில் இறங்கி சென்றனர்.

69

அமுதமும் ஆபரணங்களும்

விஜய் கடைசிப் படிக்கட்டிலிருந்து இறங்கி சுற்றுமுற்றும் ஆச்சரியத்தோடு பார்த்தான். தேடுவிளக்குகள் அடித்து பாறையில் குடைந்துருவாக்கப் பட்டிருந்த ஒரு பெரிய ஹாலைக் காட்டின. இது குகை அல்ல; இயற்கையானதும் அல்ல; மனிதன் உருவாக்கியதும் அல்ல. அவர்கள் நின்றிருந்த அறை தெளிவான வடிவியல் வரிகளைக் கொண்டிருந்தது. பளபளப்பாக்கப்பட்ட சுவர்களுடன் கூடிய செவ்வகம் வடிவம் அது. இரண்டு பக்கமும் இருந்த சுவர்களில் இருட்டுக்கு இட்டுச்செல்லும் கதவுவழிகள் இருந்தன. அறையின் தூரத்து முனையில் கும்பலை நோக்கியிருந்த சுவரிலிருந்து ஒரு செவ்வகக்கல் துருத்திக் கொண்டிருந்தது.

வான் குளுக்கிடமிருந்தும், கூப்பரிடமிருந்தும் வந்த ஆணைகள்படி, கூட்டம் கும்பல்களாகப் பிரிந்து அறைமுழுக்கப் பரவியது. திறந்த கதவுவழிகளுக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதை ஆராய சென்றனர். அறைக்கு அறை நகர்ந்துகொண்டிருந்த வான் குளுக்கைப் பின் தொடர்ந்தான் விஜய்; வழக்கம்போல அவன்கூடவே இரண்டு காவலாளிகளும் வந்தனர்.

முதல் அறையில், சுவர்களில் வரிசையாய்ப் பதித்திருந்த அடுக்குகளில் ஓரடி உயரமுள்ள கலயங்கள் இருந்தன. உலோகத்தட்டை உருவாக்கிய அதே கறுப்புநிற உலோகத்தால் செய்யப்பட்ட நூறு கலயங்கள் அங்கே இருந்தன.

தேடுவிளக்குகள் சுவர்களின் மேல்பகுதிகளை வெளிச்சம் பாய்ச்சியபோது, தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டிருந்த ஓர் ஒற்றை வார்த்தைக் கண்ணில்பட்டது.

ரசகுண்டா. விஜய் அதை வாசித்தான். அதற்கு என்ன அர்த்தமென்று விஜய்க்குப் புரியவில்லை.

வான் குளூக் அவனது குழப்பமான பார்வையைப் பார்த்து நமட்டாகச் சிரித்தான். 'இந்தக் கலயங்கள்ல ஒரு விசேசமான திரவம் இருக்கு. மகாபாரதத்தில அது அமுதம்னு விவரிக்கப்பட்டிருக்கு,' என்று அவன் விளக்கினான், போனால் போகட்டும் என்பது போல. 'யார் இதைக் குடித்தாலும் அவங்களுக்கு ஒரு பெரிய பலம் கிடைக்கும். மகாபாரதத்தில, துரியோதனன் பீமனுக்கு விஷம் கொடுத்தபோது, பீமன் நாகர்கள் ராஜ்ஜியத்திற்குள் இறங்கினான். அவன மீட்டுக்கொண்டுவர்றதுக்கும், அவனுக்கு புதுபலம் கொடுப்பதற்கும் இந்த திரவம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிச்சி. காப்பியத்தின்படி, பீமன் எட்டு ஜாடி அமுதம் குடிச்சான்; ஒவ்வொண்ணும் ஆயிரம் யானைகளோட பலத்தைக் கொடுக்கும்னு சொல்லப்பட்டிருக்கு.'

'இதே ஜாடிகள்தான் மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்குன்னு சொல்றீங்களா?' என்று கேட்டான் விஜய். தான் கேட்டதை அவனால் நம்பமுடியவில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவங்களின் அடிப்படையில்தான் மகாபாரதம் உருவானது என்று அவன் ஏற்கனவே தெரிந்துவைத்திருக்கிறான். அதற்கான சான்றுகளையும் அவன் பார்த்திருக்கிறான். ஆனால் அந்த ஆதிகாவியத்தில் இருந்த பொருட்களை நேரில் பார்ப்பது என்பது வேறுவிஷயம்.

வான் குளூக் தோள்குலுக்கினார். 'ஒருவேளை அதே ஜாடிகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனா இதுதான் இந்த கல்வெட்டு சொல்வது.' அவன் கூப்பரிடம் திரும்பினான். 'இத்தனை நூற்றாண்டுகள் கழிஞ்சபின்னாடி, இந்த கலயங்கள் வெறுமையாகத்தான் இருக்கணும். அமுதமும் ஆவியாக போயிருக்கணும். திரவத்தில ரெட்ரோவைரஸ் இருந்திருக்கணும். அமுதத்தைக் குடிப்பவனுக்கு அதிகபலம் கிடைக்கும்ங்றதுக்கு இதுதான் ஒரே விளக்கம். வைரஸ் இருக்கிற மிச்ச திரவம் இருக்கலாம். போதுமான அளவுக்கு மாதிரிகளை சேகரிச்சுங்கோங்க.'

கூப்பர் சரி என்பதுபோல தலையசைத்தான். பைகள் வந்தன. ஒவ்வொருவரின் இடுப்பிலும் ஒரு நைலான் பை கட்டப்பட்டிருந்ததை விஜய் கவனிக்கவில்லை. அவர்கள் கலயங்களை ஆய்வுசெய்து சிலவற்றை எடுத்து பைகளில் போட்டுக்கொண்டார்கள்.

வான் குளூக் நீளநடை போட்டு எதிரறையில் நுழைந்தான். அங்கே சுவர்களில் வரிசையாக ஆபரணங்கள் இருந்தது தேடுவிளக்குகளின் வெளிச்சத்தில் தெரிந்தது. ஐரோப்பியன் தலையசைத்தான்.

'ஒவ்வொண்ணும் எப்படி இருக்கனுமோ அப்படியே இருக்குது,' என்றான், விஜய்க்குச் சொல்வதினும் தனக்குத்தானே சொல்பவன் போல.

வான் குளூக் என்ன முணுமுணுக்கிறான் என்பதை விஜய் புரிந்துகொண்டான். கஜக்ஸ்தானுக்கு விமானத்தில் சென்றபோது அவன் விஜய்க்கு விளக்கியிருந்த ஒரு சுலோகம், மூலிகைகளைப் பற்றியும், ஆபரணங்களையும் பற்றியும் சொல்லியிருந்தது. மூலிகைகளைப் பற்றிய குறிப்பு தெளிவாகவே இருக்கிறது. பாக்ட்ரியா காடுகளில் சேகரித்து வருவதற்கு காலிஸ்தெனிஸ்க்கு ஆணையிடப்பட்டு அவர் சென்று அள்ளிக்கொண்டு வந்த மூலிகைகளைத்தான் அது சொல்லியது. ஆனால் அந்த நேரத்தில் ஆபரணங்களைப் பற்றிய குறிப்புதான் விஜய்க்குப் புரியாமல் இருந்தது. இப்போது புரிந்துவிட்டது. ஆபரணங்கள் இங்கே இருக்கின்றன வைரஸோடு.

பாறையின் முத்திரையை உடைக்கும்போது, அலெக்ஸாண்டரை கொன்றது எது என்பது புரிகிறது என்று ஏதோ வான் குளூக் முணுமுணுத்திருந்தான்.

அதற்கு என்ன அர்த்தமென்று விஜய்க்கு இப்போது புரிந்துவிட்டது. அம்ருதத்தைக் குடித்தபின்னும் அலெக்ஸாண்டர் ஏன் இறந்தார் என்று அவனுக்கும் விளங்கிவிட்டது.

இறுதித்தடை

'இது ஒரு கதவு,' என்று வான் குளூக் அறிவித்தான். அறை நுழைவாயிலுக்கு எதிர்ச்சுவரில் துருத்திக்கொண்டிருந்த கல்லடுக்கை வேகமாக ஆராய்ந்தான். பிரதான அறைக்கு இரண்டுபக்கமும் இருந்த சின்ன அறைகளை குழுவினர்கள் வேகமாக ஆராய்ந்தார்கள். முதல் அறையில் கலயங்களும், இரண்டாம் அறையில் ஆபரணங்களும் இருந்ததைத்தவிர, சின்ன அறைகளில் முக்கியமான பொருளேதும் அகப்படவில்லை. ஒரே ஒரு அறையில் சுவரில் சில கல்வெட்டுக்கள் மாத்திரம் காணப்பட்டன. இந்த இடத்தில் இருந்தவர்கள், கலயங்களையும், ஆபரணங்களையும் தவிர எல்லாவற்றையும் அப்புறப்படுத்திக் கொண்டு போய்விட்டார்கள் என்று தோன்றியது. ஏன் அவற்றை மட்டும் கொண்டுபோகவில்லை என்பது புரியவில்லை. ஆனால் ஆராய்ச்சிக்கோ அனுமானத்திற்கோ நேரமில்லை. நம்பிக்கைத் தரக்கூடிய வைரஸோட மாதிரியைக் கண்டுபிடிப்பதிலே வான் குளூக்

தீவிரமாக இருந்தான். அது இந்தக் கல்கதவுக்குப் பின்னாடிதான் இருக்கவேண்டும் என்று நம்பினான்.

என்னதான் அவன் தீர்மானித்திருந்தாலும், கதவைத் திறக்க வழியொன்றும் இருப்பது போல தெரியவில்லை.

'உடையுங்கள்,' என்று வான் குளூக் ஆணையிட்டான், மேலும் காத்திருக்க முடியாமல்.

பாறை உடைக்கும் பெரிய சுத்தியல்கள் கொண்டுவரப்பட்டன. மூன்றுபேர் வேலையில் இறங்கினர்.

பாறையின் பின்னே ஏதோ முக்கியமான ஒன்று இருந்தாக வேண்டும். அதனால்தான் அவ்வளவு எளிதாக பாறை வழிவிட மறுக்கிறது. மூன்று மனிதர்களும் அரைமணி நேரமாக உழைத்தனர். பாறையில் கீறல்கள் விழத் தொடங்கின. அறைமுழுக்கத் கல்தெறிப்புகள் பறந்தன. கல்லிலிருந்து ராக்கெட்டாகப் புறப்பட்ட துண்டுகள் முகத்தைப் பதம்பார்த்துவிடலாம் என்று பயந்து மற்றவர்கள் கைகளினால் முகங்களை மூடிக்கொண்டார்கள். பாறையைத் தகர்த்துக்கொண்டிருந்த மூன்றுபேரும் பின்வாங்கினார்கள். வேறுமூன்று ஆட்கள் பொறுப்பெடுத்தார்கள், அந்த வேலைக்கு புத்துணர்ச்சி கொடுப்பதற்காக.

முதுகுடைய அரைமணி நேரம் அவர்கள் உழைத்தபின்பு, இறுதியில் கல்கதவு உடைந்து கல்துண்டுகளாகச் சிதறிவெடித்தது.

பெரிய கொட்டாவிபோன்ற ஒரு கறுப்பு ஓட்டை வாய்பிளந்து நின்றது.

என்னதான் மறைக்கப்பட்டிருக்கிறது அந்த ஓட்டைக்குப் பின்னால்?

70

கிமு 327

நவீனகால ஆஃப்கானிஸ்தான்
மனிதனிலிருந்து கடவுள்வரை

யூமனியஸ் தீப்பந்தத்தைத் தூக்கிப்பிடித்தபடி நிற்க, அலெக்ஸாண்டர் தோல்காகிதத்தை மாறுகண்ணால் பார்த்தார். கிழக்குநோக்கி அவர் படையெடுத்துப் போகுமுன்னர் அவரது தாயார் அவர்க்குக் கொடுத்திருந்த ஆட்டுத்தோல் காகிதம் அது. இப்போது அவர்படைகள் பாசறை அமைத்திருக்கும் நாட்டிலிருந்து வந்த ஒரு தத்துவஞானி அவளுக்குக் கொடுத்திருந்த தோல்காகிதம் அது. ஆனால் அவருக்கு சுவாரஸ்யமாக இருந்தது, தோல்காகிதத்தின் ஆதிமூலமல்ல. ஒரு தொன்மத்தின் கதை - கடவுள்களின் ரகசியம் - அதுதான் அவரை ஆசியா முழுக்கவும், சிந்துநிலத்திலும் படையெடுக்க வைத்தது.

அவர் தன்னைச் சுற்றியிருந்த இருட்டான நிலப்பகுதியை வெறித்துப் பார்த்தார். தோல்காகிகத்தின் கவிதைகளுக்கான அர்த்தத்தை, ஸ்தல விவரங்களுடன் தன் தாயார் தனக்கு விளக்கியிருந்தது போல, புரிந்துகொள்ள அவர் முயன்றார்.

'அது இங்கே எங்கோதான் இருக்கவேண்டும்,' என்று அவர் தனக்குள்ளே பாதியும், பாதி யூமனியஸிடமும் முணுமுணுத்தார். 'நாம் இப்போது பொசெய்டானின் சூலத்தைக் கடந்திருக்கிறோம்.'

யூமனியஸ் ஆம் என்பது போல தலையசைத்தான். 'நாம் மேற்கொண்டு போகலாமா? ஒரு வேளை முன்னாடி இருக்கலாம்.'

அலெக்ஸாண்டர் உறுமினார். அவர்கள் ஒரு மணிநேரமாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நடந்த பாறைப்பாதையின் கரடுமுரடான தன்மையும் இருட்டும் சேர்ந்து அவர்களது வேலையைச் சிரமமாக்கி

விட்டன. ஆனால் அலெக்ஸாண்டர் தன் தேடலை செவ்வனே செய்வதற்கு இருட்டுதான் தேவைப்பட்டது. பொசெய்டானின் சூலத்தைக் கண்டுபிடிப்பதற்கு அதுதான் ஒரேவழி.

இவ்வளவு தூரம் வருவதற்கு அவர் தன் படையினரைத் தந்திரமாகத் தூண்டிவிட்டிருக்கிறார். தன் வெற்றியின் குறுக்கே எதையும் குறுக்கிட அவர் அனுமதிக்க மாட்டார். ஆரம்பத்தில், அவர் தன் வீரர்களுக்குச் சொல்லியிருந்தார், அவர்கள் புகழுக்காக போர்புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று. மாசிடொனியாவின் கீர்த்திக்காக. பாரசீகர்களின் கைகளினால் தாங்கள் பட்ட அவமானத்திற்கு பழிதீர்ப்பதற்காக. அவர்கள் பாரசீகர்களோடு சண்டையிட்டு அவர்களைத் தோற்கடிப்பார்கள். பின் அலெக்ஸாண்டர் பாரசீகத்தை ஆட்சிசெய்வார். இதுதான் அவரின் படையினரை உற்சாகப்படுத்தியது, குறிப்பாக போர்கள் பல பார்த்திருந்த மகா அனுபவசாலிகளை; அவரது தந்தை இரண்டாம் பிலிப்பிடம் ஊழியம் புரிந்த வயதில்முத்தவர்களை. அவரது திட்டத்தில் அவர்கள் பிலிப் இலட்சியங்களின், வெற்றிகளின் விரிவைப் பார்த்தார்கள். அவர்களுக்கு, அலெக்ஸாண்டர் அவரது தந்தையின் உண்மையான மைந்தன்.

கடந்த சில வருடங்களில் அவர்கள் டாரியஸைத் தோற்கடித்தார்கள்; அந்தப் பாரசீக மாமன்னனைக் காட்டிக்கொடுத்த பிரபுக்களைக் கொன்றார்கள்; பின்பு அலெக்ஸாண்டரை பாரசீக ஆட்சியாளராய் முடிசூட்டினார்கள். அப்புறம், பால்க்கில் படைவீரர்கள் தாய்நாடு திரும்புவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது, அலெக்ஸாண்டர் ஒரு குண்டைப் போட்டார். அவர்கள் ஆசியாவுக்கு நடைபோட வேண்டும். உலகத்தை வெற்றிகொள்ளும் கதைகளாலும், அதன் எல்லைகள் வரைக்கும் படையெடுத்து சிந்துநிலத்தில் மாசிடோனியாவின் ஆளுமையை நிறுவும் கதைகளாலும் அவர் அவர்களைத் தூண்டினார். வெற்றிகள் தந்த மயக்கத்திலும், தங்கள் பேரரசரின் திண்மையாலும், அவரது படையின் வலிமையாலும் ஏற்பட்ட போதையிலும் வீரர்கள் அவர்பின்னே ஒன்றாய் நின்றார்கள்.

இப்போது அவர் இங்கே இருப்பதற்கான உண்மையான காரணத்தின் அணுக்கத்தில் இருக்கிறார்: கடவுள்களின் ரகசியம். தன் படையை இரண்டாகப் பிரித்து, ஒரு பிரிவுக்குத் தான் தலைமை தாங்கி, தோல்காகிதத்தில் சொன்ன ஆணைகள் பிரகாரம், அதை குனார் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுவந்தார். தோல்காகிதக் கட்டளைகளில் சிலவற்றைப் பின்பற்றி, காலிஸ்தெனிஸ் திட்டத்தின் ஒரு பகுதியிலிருந்த தன்பங்கு வேலையை முடித்திருந்தார். அலெக்ஸாண்டர் சோக்டியன்

பாறைக்கு எதிராக படைநடத்தி, பாக்ட்ரியன் ஆதிவாசிகளை அடக்கினார்.

தோல்காகிதத்தின் கட்டளைகள்படி, தனக்குத் தேவையான எல்லாவற்றையும் அலெக்ஸாண்டர் பெற்றுவிட்டார். இரவில் பாசறையை விட்டு அவரும் யூமனியஸும் ரகசியமாக நழுவி, தங்களை ரகசியத்தின் இருப்பிடத்திற்கு இட்டுச்செல்லும் இறுதி சமிக்ஞைகளைத் தேடிச் சென்றார்கள்.

அவர்களுக்கு மேலே உயர்ந்துநின்று, இரவின் மௌனக்கல்லறைகள் போல தோன்றிய பாறை வடிவமைப்புகளைத் தாண்டி அவர்கள் மெதுவாக, எச்சரிக்கையாக முன்னேறி நடந்து சென்றார்கள். கீழே அவர்களின் கண்ணில் தட்டுப்படாதவண்ணம் மலைகளால் மறைக்கப்பட்டு, இருட்டுப்போர்வையில் நதியொன்று தவழ்ந்து சென்றது. வாகைசூடிய மாமன்னர்கள் பலர் வந்து போனதை நதி பார்த்திருக்கிறது; உலகத்தின் மிக உயர்ந்த வெற்றியாளர்களில் ஒருவராக விளங்கப்போகிற இந்தப் பேரரசனின் இருப்பைக் கூட அது கண்டுகொள்ளாமல் இருந்தது.

யூமனியஸ் பதற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். தன் காவலர்களைத் துணைக்குக் கூட்டிவர அலெக்ஸாண்டர் மறுத்துவிட்டார். அவர்க்குத் தன் வாளின்மீது நம்பிக்கை; ஒரு வீரனாக தன் திறமையின் மீது நம்பிக்கை. 'உலகத்தை ஜெயித்தவனை எவன் வந்து தாக்குவான்?' என்று அவர், வீரர்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாம் என்று கருதிய யூமனியஸைப் பார்த்து ஏளனம் செய்தார். ஆனால் அலெக்ஸாண்டரின் நம்பிக்கையை யூமனியஸ் பகிர்ந்துகொள்ளவில்லை. இந்தப் பகுதியில் மலை ஆதிவாசிகள் தன் படையினர்க்குப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை அடக்கவேண்டும் என்ற தன் ஆசையை அலெக்ஸாண்டர் வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். ஆனால் இந்த இரவில் அலெக்ஸாண்டரும் தானும் மேற்கொண்டிருக்கிற ரகசிய பணித்திட்டத்தின் வெறும் சாக்குதான் அது என்பதை யூமனியஸ் புரிந்துகொண்டார். ஆனால் அவர்கள் நெருங்கியவுடனே, கிழக்கு நோக்கிச் செல்லும் கணவாயில் சில மைல்கள் தாண்டியிருக்கும் ஆர்னோஸில் உள்ளூர் ஆதிவாசிகள் ஓடிப்போய் ஒளிந்துகொண்டார்கள். நாகரிக உலகத்தின் ஆட்சியாளரைக் கொலைசெய்ய பாதிக்கப்பட்ட ஓர் ஆதிவாசி பாறைகளிலும் மரங்களிலும் ஒளிந்திருக்க மாட்டான் என்று யாரால் சொல்ல முடியும்?

'அங்கேதான்!' அலெக்ஸாண்டரின் கரகரத்த முணுமுணுப்பு தளபதியின் சிந்தனைகளில் தலையிட்டது.

அலெக்ஸாண்டர் என்ன கண்டுபிடித்திருக்கிறார் என்பதைப் பார்க்க யூமனியஸ் திரும்பிப் பார்த்தார். அவர்களுக்கு முன்பாக மற்றொரு வினோத வடிவமான பாறை வடிவமைப்பு தோன்றியது. ஆனால் இது வித்தியாசமாக இருக்கிறது. இரண்டு பக்கமும் அரிக்கப்பட்ட அடுக்குகளால் ஆனது; ஒரு பேரலை வான்வரைப் பொங்கி அடுக்குகளை உடைத்த ஒரு தோற்றத்தை உண்டாக்கியிருந்தது.

ஒரு பேரலை அல்லது ஐந்துதலை நாகம். தோல்காகிதக் கவிதைக்குப் பொருத்தமாக.

நாகவடிவ பாறைநோக்கி அலெக்ஸாண்டர் விரைந்தார். யூமனியஸ் தள்ளாடி அரசரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க ஓடினான்.

அவர்கள் பாறையின் முன்னால் நின்றார்கள். அவர்கள் முதலில் பார்த்ததைவிட மிக உயரமாக இருந்தது அது. அவர்களின் தலைக்கு மேலே 15 அடி உயர்ந்து நின்றது.

யூமனியஸ் தீப்பந்தத்தை பாறைக்கு அருகில் கொண்டுசென்றான். தோல்காகிதம் சொன்னது போல, பூமிக்கடியில் இருந்த குகையின் நுழைவுவாயிலைக் கண்டுபிடிக்க முயன்றான்.

அலெக்ஸாண்டர் கண்டுபிடித்துவிட்டார். அது குறுகலான பிளவு; பாறை மடிப்பின் பின்னாடி மறைந்திருந்தது. அது அங்கிருக்கிறது என்று ஒருவர்க்குத் தெரியவில்லை என்றால், அதைப் பகல்வெளிச்சத்தில்கூட பார்ப்பது அசாத்தியம்.

'இங்கே இரு,' என்று அலெக்ஸாண்டர் ஆணையிட்டு, யூமனியஸிடமிருந்து தீப்பந்தத்தை வாங்கிக்கொண்டார். 'நான் சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்.'

யூமனியஸ் ஆட்சேபிக்க ஆரம்பித்தான். ஆனால் உடனே அமைதியாக்கப் பட்டான். 'இது ஒரு புனிதமான இடம்,' என்று அலெக்ஸாண்டர் சொன்னார். 'கடவுளுக்கு மட்டுமே உரியது. நானே போய்வருகிறேன்.'

யூமனியஸை இருட்டில் விட்டுவிட்டு, அந்த இளம் மாவீரன் பாறைப்பிளவுக்குள் மறைந்துபோனார். ஆனால் தளபதி தன் பாதுகாப்பைப் பற்றி கவலைப்படவில்லை. அந்தப் பிளவைத்தாண்டி என்ன இருக்கும் என்று இருவருக்குமே தெரியாது. எவனோ ஓர்

அந்நியன் சொன்ன வார்த்தையை நம்பி போகவேண்டியிருக்கிறது. இது அலெக்ஸாண்டரைக் கொல்வதற்கான ஒரு தந்திரமாக இருந்தால்?

நேரம் மெதுவாக வலியோடு நகர்ந்தது. யூமனியஸ் கடினமான கல்தரையில் உட்கார்ந்தான். தன் அரசன் திரும்பிவருவதற்குக் காத்திருந்தான்.

இறுதியில், ஒரு யுகம்போன்ற காலம் முடிந்தவுடன், அலெக்ஸாண்டர் பிளவிலிருந்து வெளிப்பட்டார். அவரது ஆயுதக்கவசம் ஈரமாக இருந்தது; முகம் ஜொலித்தது.

'முடிந்தது,' என்று தீப்பந்தத்தை யூமனியஸிடம் திருப்பிக் கொடுத்தபடி சொன்னார். 'இறுதியில் இப்போது நான் ஒரு கடவுள்.'

71

நிகழ்காலம்

ஆறாவது நாள்
தேடலின் மையம்

இப்போது திறந்துகிடந்த வாசல் வழிவிட்டது. வெற்றுவெளி தெரிந்தது. வெற்றுவெளியின் ஒவ்வொரு துளையிலும் இருட்டு நிரம்பியிருந்தது. இருட்டு வாசலிலிருந்து வழிந்து அவர்கள் நின்றிருந்த அறைமுழுவதையும் நிரப்பிவிடும் போல அச்சுறுத்தியது.

கல்கதவு தாண்டி ஒரு மறைவான குகையை உருவாக்கிய, துளைக்கமுடியாத இருட்டின் மீது தேடுவிளக்குகளின் வெளிச்சம் பாய்ந்தபோது, அங்கே ஒட்டுமொத்தமான ஒரு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

குகையின் தரைமீது எல்லா வடிவங்களிலும், எல்லா வகைகளிலும் உருண்டுகொண்டிருந்த பாம்புக்கூட்டம் ஒன்று தெரிந்தது. நல்லபாம்புகளும் எலிப்பாம்புகளும் அடையாளம் தெரிந்தன. மற்றவை ஓரடி நீளத்திலிருந்தன. கறுப்பு, பச்சை, சாம்பல்நிறம், துருப்பிடித்த நிறம் என்று பல வண்ணங்களில் பாம்புகள் நெளிந்தன.

வான் குளூக் மட்டும் அசையாமல் நின்றான். விஜய் அவனை ஏறிட்டுப் பார்த்தான். அந்த ஐரோப்பியனின் முகத்தில் ஒரு திருப்தியான, இறுக்கமான பார்வை இருந்ததை விஜய் ஆச்சரியமாக அவதானித்தான். வான் குளூக் இதை எதிர்பார்த்திருந்தவன் போல தோன்றினான்.

'எல்லாவற்றையும் எடுங்கள்!' என்று அவன் ஆணையிட்டான். 'ஒவ்வொரு பாம்பு வகையில் ரெண்டு ரெண்டு வேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் எடுங்கள்'

மனிதர்கள் தயங்கினார்கள். விஷமில்லாத பாம்புகள் அங்கே

இருக்கக்கூடும். ஆனால் பெரும்பாலானவை விஷம்கொண்டவைகளாகத் தோன்றின.

கூப்பர் துப்பாக்கியை எடுத்து கத்தலோடு ஆணையிட்டான். 'ஒவ்வொருத்தனும் அங்க போகணும். உங்ககிட்டதான் துப்பாக்கிகள் இருக்கே. போய் மாதிரிகளை எடுங்க. தேவைப்பட்டா சுடுங்க. போதுமான அளவுக்கு இருக்கு. ரெண்டுரெண்டு பேரா போங்க; ஒருவரை ஒருவர் கவனிச்சோங்க.'

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். தயக்கத்துடன் குகைக்குள் நகர்ந்தனர். பத்துபேர் கதவுவாசலில் நின்று தேடுவிளக்குகளை ஏந்தி தங்கள் தோழர்களுக்குச் சௌகரியமாக தரையில் வெளிச்சத்தைப் பாய்ச்சினர்.

மனிதர்கள் வாசலைக் கடந்து உள்ளே சென்றவுடன், பாம்புகள் மிக அதிகமாகவே படமெடுத்து நெளிந்தன. பாம்புகளுக்கு நடுவே சென்று அவற்றை மிதித்துவிடாமல் கவனமாக அவர்கள் அடியெடுத்து வைத்தனர்; ஒரு கையில் பைகள்; மறுகையில் துப்பாக்கி.

உடனடி மரணங்கள் நிகழ்ந்தன. ஒருவன் மிதித்த நல்ல பாம்பு அவனை மின்னல் வேகத்தில் கொத்த, அவன் அந்த இடத்திலே சுருண்டுவிழுந்தான். மற்றவர்கள் தங்கள் நடையைத் தொடர்ந்தார்கள். மற்றொரு துரதிருஷ்டசாலி ஒரு நாகப்பாம்பை மிதிப்பதைத் தவிர்க்கும்போது, கவனிக்காமல் இன்னொரு பாம்புக்குவியல் மீது காலைவைத்தான். நெளிந்து சுருண்ட பாம்புகள் மொத்தமாய் பலமுறை கொத்த, அவன் அலறலோடு விழுந்தான்.

தங்கள் சகமனிதர்கள் பண்ணிய தவறுகளிலிருந்து பாடங்கள் கற்க முயன்ற மற்றவர்கள் ஜாக்கிரதையாக மெல்ல அடியெடுத்துவைத்து சென்றார்கள். இருவர் இருவராக சேர்ந்து, அவர்கள் கவனமாக பாம்புகளைத் துப்பாக்கிகளில் எடுத்து பைகளில் போட்டார்கள். அது வலிமிகுந்த மெதுவான ஆபரேஷன். ஆனால் மேற்கொண்டு உயிரிழப்புகள் இல்லை.

விஜய் மிரட்சியோடு கவனித்து நின்றான். குகைக்குள் இருந்த மனிதர்களின் விதியைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவன் கவலைப்பட்டது அடுத்த என்ன நடக்கும் என்பதைப் பற்றி; தனக்கு; ராதாவுக்கு.

குகைமனிதர்கள் திரும்பிவர ஆரம்பித்ததை அவன் பார்த்தான். பாம்புகளுக்கு நடுவே அந்த ஐந்துக்களைத் தொந்தரவு செய்யாமல்

கவனமாக சென்ற வரைக்கும் அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பதை அவன் கவனித்தான். பொதுவாக, மனிதர்களின் அத்துமீறிய பிரவேசத்தை பாம்புகள் வெறுத்தாலும், அவை அவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டன.

இறுதியில் கடைசி இரண்டு மனிதர்கள் உடைந்த கல்கதவு வாசல் வழியாக தடுமாறியபடி பிரதான அறைக்குள் வந்தார்கள். அவர்கள் நெற்றிகளில் வேர்வைத்துளிகள் வழிந்தன; ஆடைகள் உடலோடு ஒட்டிக்கொண்டன. இங்கே குளிராகத்தான் இருந்தது; ஆனால் அவர்கள் செய்த கடுமையான வேலைப்பளுவால் அவர்கள் வேர்வையில் நனைந்தனர்.

'அருமை,' என்று வான் குளூக் புகழ்ச்சியோடு புன்னகைத்தான். 'நமக்கு வைரஸ் கிடைத்துவிட்டது. நமது ஆபரேஷன் முடிந்தது.'

விஜய் முறைத்தான். வான் குளூக் என்ன சொன்னான் என்று அவனுக்கு விளங்கவில்லை. அவர்கள் பாம்புகளைத் தானே சேகரித்திருக்கிறார்கள். இதில் எங்கே வைரஸ் வந்தது?

ஆனால் ஐரோப்பியன் மீண்டும் பேசினான். 'நாம போகலாம்.' அவன் விஜயை கல்போன்ற பார்வையால் துளைத்தான். 'அமெரிக்கர்கள் சொல்வது போல இப்போ 'திருப்பிகொடுக்கும் நேரம்'. போன வருசம் நீ எங்களை போதுமான அளவுக்கு துக்கப்படுத்திட்ட. அதுக்கு முற்றுப்புள்ளி வைக்கிற நேரம் இதுதான்னு நான் நினைக்கிறேன். எப்படியிருந்தாலும், உனக்கு எங்கள பத்தியும், இந்த ஆபரேஷனை பத்தியும் நிறையவே தெரிஞ்சிடுச்சி. அதனால, நாங்க உன்ன கூட்டிக்கிட்டு போகலை. உனக்கு புரியும்னு நினைக்கிறேன். நீ இங்கதான இருக்கப்போற.'

விஜயின் இதயம் அதிர்ந்தது. இதுதான் நிகழும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தபோதிலும், ஐரோப்பியன் தன் வாக்கைக் காப்பாற்றுவான் என்று அவன் நம்பியிருந்தான். அவன் உஷாராய் இருந்திருக்க வேண்டும். அதிலும், அவர்கள் எதைத் தேடிக்கொண்டிருந்தார்கள் என்பது அவனுக்குத் தெரிந்த பின்பும்.

ஆனால் இன்னும் கடைசி நம்பிக்கை மிச்சம் இருந்தது. அவன் அதைப் பற்றிக்கொண்டான். அது அவனுக்காக அல்ல.

'ஆனா ராதாவ விட்ருவீங்க இல்ல?' என்று கேட்டான்.

கூப்பர் பல்லிளித்தான். 'முடியும்னா விட்ருவோம்.'

'அவ செத்துட்டா,' என்று வான் குளூக் தகவல் சொன்னான், தனது சகஜமான பாணியில். 'அவ தப்பிக்க முயற்சி செஞ்சா. அதனால எங்க கார்டுகள் அவள சுட்டுட்டாங்க.' பின்பு, பார்த்துக் கொண்டிருந்த ஆட்களைப் பார்த்து அவன் சொன்னான். 'நாம போகலாம்.'

விஜய் அந்த இடத்திலே ஆணியடித்தாற்போல உறைந்து நின்றான். மரத்துப்போனான். வெறுமை சிந்தனைகளை எல்லாம் உறிஞ்சி எடுத்து ஒரு பெரிய ஓட்டையை ஏற்படுத்தியது போன்று அவன் மனம் உணர்ந்தது. ஓர் ஆழமான, இருட்டான வெறுமை. அவன் கால்கள் மடிந்து குழலாட, அவன் பொத்தென்று தரையில் விழுந்தான். முதுகு குனிந்திருக்க, முகம் அவன் கைகளில் புதைந்திருந்தது.

தான் நேசித்தவர்களை எல்லாம் அவன் இழந்திருக்கிறான். பெற்றோர்கள். மாமா. ஆனால் ராதாவின் இழப்பு அவனை நிலைகுலையச் செய்தது. பேட்டர்சன் ஏற்கனவே அவனை இதற்குத் தயார்ப்படுத்தியிருந்தார். ஆனால், உயிருக்கும் மேலாக நேசித்த ஒருவரை இழப்பதற்கு எப்படி ஒருவன் தயாராக இருக்கமுடியும்?

மக்கள் அசைந்து செல்வதை சன்னமாக மூடுபனி ஊடாக அவன் உணர்ந்தான்; இல்லை, கேட்டான். யாரோ தன்னிடம் எதையோ சொல்கிறார். ஒரு தேடுவிளக்கு அவன் கையில் திணிக்கப் பட்டது. ஆனால் அவன்மனதில் இருந்த விரக்தி இருட்டு அவனை விழுங்கியிருந்தது. மனதையும், உடலையும். ஏற்பட்ட இழப்பு மிகப்பெரியது. வேறு எதுவும் மனதில் பதியவில்லை.

ஆட்கள் படிக்கட்டு வழியாக மீண்டும் வந்தார்கள். கூப்பர் விஜயின் கையில் தேடுவிளக்கைக் கொடுத்தான். 'நாங்க கொடுமையானவங்க இல்ல,' என்று அவன் பல்லிளித்தான். 'இந்த விளக்க வச்சுக்கோ. பேட்டரி தீர்றவரைக்குமாவது இது உதவும்.'

விஜய் குதிக்காலிட்டு உட்கார்ந்தான்; வெறுமையை வெறித்துக்கொண்டு. வான் குளூக்கும் கூப்பரும் படிக்கட்டில் மறைந்துபோனார்கள்.

கேள்விகேட்க முடியாத அளவுக்கு அவன் அதிர்ச்சியில் ஆழமாக மூழ்கியிருந்தான்.

திறந்துகிடக்கும் வாசலைக் கண்டுபிடித்து அறைக்குள் வருவதற்கு பாம்புகளுக்கு எவ்வளவு நேரம் ஆகிவிடப்போகிறது?

ஓடுவதற்கு இடமில்லை

எவ்வளவு நேரம் மயக்கத்திலே தான் அங்கு இருந்தோம் என்று விஜய்க்குத் தெரியவில்லை. அறை அசைந்து, உடைந்த வாசலிலிருந்து தெறித்த கற்துண்டுகள் தரையில் வீசப்பட்டன; அந்தக் கனத்த சத்தம் கேட்டு அவன் அதிர்ந்து சுயநினைவுக்கு வந்தான்.

ஒருகணம் தான் எங்கிருக்கிறோம் என்பதே அவனுக்கு மறந்துபோனது. பின்பு சுதாகரித்துக்கொண்டு நிகழ்கணத்தையும் இடத்தையும் புரிந்துகொண்டான். தனக்கு ஏற்பட்ட இழப்பின் கூர்த்தவலி ஒரு பலகீனமான வலியாக சற்று குறைந்தது. புலன்திறன்கள் திரும்ப வந்தன.

தேடுவிளக்கு வெளிச்சத்தில், படிக்கட்டு வழியாக சரிந்துவந்த கனத்த புழுதிச்சுழல்களை அவன் பார்த்தான். என்ன நடந்தது என்று அவன் புரிந்துகொண்டான். வான் குளுக்கும் அவன்குழுவும் பாறையை விட்டு வெளியேறி, சுரங்கத்தின் துவாரத்தை வெடிவைத்து தகர்த்து, முத்திரை போட்டு மூடி, பாறைச் சிதறல்களையும் புழுதிகளையும் படிக்கட்டு வழியாக உள்ளே அனுப்பிவைத்தனர்.

அவன் மாட்டிக்கொண்டான்.

ஆனால் இன்னும் மோசமானது நடந்துகொண்டிருந்தது. அவனைச் சுற்றிலும் தேய்க்கும் சத்தங்கள் கேட்டன. தேடுவிளக்கு வெளிச்சத்தின் ஓரத்தில், ஒளிக்கற்றையின் வீச்சைத் தாண்டி ஆட்சி செய்திருந்த இருட்டிலிருந்து, 'ஷ்... ஷ்' என்ற ஓசைகள் எழும்பின.

விளக்கைத் தரைநோக்கிச் செலுத்திப் பார்த்தான். அப்படியே திகிலில் உறைந்துநின்றான்.

அறையைக் கண்டுபிடித்த பாம்புகள் மெல்ல ஊர்ந்து உள்ளே வந்துகொண்டிருந்தன.

72

துப்பாக்கிச் சக்தி

வான் குளூக் தன் கடைசி ஆட்களும் வின்ஞ் வழியாக சரிவில் இறங்கிவந்து சேர்ந்ததைக் கவனித்தான். சேகரிக்கப்பட்ட பாம்புகளும் கலயங்களும் ஹெலிகாப்டரில் பத்திரமாக வைக்கப்பட்டன. கருவிகளையும் உபகரணங்களையும் பெட்டிகளில் வைத்து அவற்றையும் ஹெலிகாப்டரில் வைப்பதில் ஆட்கள் மும்முரமாக இருந்தனர்.

'அடிவானத்தில் பறவைகள்,' என்று ஒருவன் திடீரென்று கூறினான்.

எல்லாக் கண்களும் அவன் சுட்டிக்காட்டிய திசைநோக்கிச் சென்றன. உபகரணங்களை வைப்பதும் பெட்டிகளை நிறைப்பதும் சற்று நிறுத்தப்பட்டன.

மேற்கில் விரிந்துகிடந்த தட்டையான நிலங்களுக்கு மேலே உயரத்தில் இரண்டு புள்ளிகள் கண்ணுக்குத் தெரிந்தன. அவை வேகமாக பெரிதாகிக் கொண்டே வந்தன.

விமானங்கள். அவர்களது திசைநோக்கி பறந்துவந்து கொண்டிருந்தன.

கூப்பர் ஆட்களைத் துரிதப்படுத்தினான். விமானங்களில் இருப்பது யாரென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக அவர்கள் நண்பர்கள் அல்ல. அவர்களின் நண்பர்களில் யாருக்குமே இந்தத் திட்டத்தின் பகுதியைப் பற்றித் தெரியாது. இங்கே விமானங்கள் வந்துகொண்டிருந்தால், அது நல்ல செய்தி அல்ல.

'போ, போ, போ,' என்று அவன் கத்தி, ஆட்களை வேகப்படுத்தினான். அவனது குரலில் ஒலித்த அவசரத் தொனியைப் புரிந்துகொண்டு ஆட்கள் வேகமாக ஓடி சற்றுமுன்பு சாவகாசமாக அடுக்கிக்கொண்டிருந்த கருவிகளை அப்படி அப்படியே அள்ளி

விமானத்தின் உள்ளே போட்டார்கள்.

விமானங்கள் பெரிய வடிவில் வளர்ந்தன. சுழலிகளின் தனித்துவமான அலறல் ஓசை அவர்களின் காதுகளில் விழுந்தது. அவை துரிதமான விமானங்கள்; பாறைக்குப் போகும் தூரத்தை அதிவேகமாகக் கடந்துவந்து கொண்டிருந்தன.

எல்லாக் கருவிகளையும் ஹெலிகாப்டரில் ஏற்ற நேரமிருக்காது என்று கூப்பர் புரிந்துகொண்டான். நாம இதுகள இங்கேயே விட்டுட்டு போக வேண்டியதுதான், என்று அவன் வான் குளூக்கிடம் சொன்னான். வான் குளூக்கும் சரி என்பது போல தலையசைத்தான்.

ஆட்கள் பெட்டிகளை தூக்கிப்போட்டுவிட்டு தங்கள் விமானங்களில் ஏறிக்கொண்டார்கள்.

கூப்பர் ஒரக்கண்ணால் அடிவானத்தைப் பார்த்தான். இரண்டு ஹெலிகாப்டர்களும் இப்போது வெறுங்கண்ணால் பார்க்கும் அளவுக்கு மிகமிகப் பெரியதாக தெரிந்தன.

'கெட்ட செய்தி, என்று அவன் வான் குளூக்கிடம் சொன்னான். கஜாக் விமானப் படை யூரோகாப்டர் *EC*725 வகைகள்.

வான் குளூக் ஆம் என்பது போல தலையசைத்தான். நாம போயிடலாம். அவங்ககிட்ட வெறும் எந்திரத் துப்பாக்கிகளும், பீரங்கிகள் மட்டுந்தான் இருக்கும்னு நம்புறேன். ராக்கெட் ஏவுகணைகள் இருக்காது.

கூப்பர் விமானத்தில் தாவிக்குதித்தான். இரண்டு ஹெலிகாப்டரும் மேலே எழும்பின.

கஜாக் விமானப்படை விமானங்கள் அதிவேகமாக நெருங்கிக் கொண்டிருந்தன. வான் குளூக்கின் விமானங்கள் அதிவேகப்பயணத்திற்கென்று வடிவமைக்கப் பட்டவை அல்ல. அவனின் படையாட்கள் *Mi*-26 என்ற உலகத்திலே அதிகனமான மிகப்பெரிய லிஃப்ட் ஹெலிகாப்டரில் இருந்தனர். அதில் 82 பிரயாணிகள் பயணிக்கலாம். இந்தத் திட்டத்திற்கென்று வான் குளூக்குடன் வந்த 60 ஆட்களுக்கு அது போதுமானதாக இருந்தது. அந்த விமானத்தின் வீச்சு 432 நாட்டிக்கல் மைல்கள். அவர்கள் பயணிக்க வேண்டியிருந்த தூரத்திற்கு மிகவும் ஏற்ற வீச்சுதான். அவனது சொந்த விமானம் அகஸ்டாச் வெஸ்ட்லாண்ட் *AW*139*M* வகையைச் சேர்ந்தது; மொத்தமே 15 பிரயாணிகளுக்கானது; அதன் வீச்சு 537 நாட்டிக்கல் மைல்கள்.

மாறாக, கஜாக் விமானங்கள் சிறியவை. ஒருமணி நேரத்திற்கு அவற்றின் அதிகபட்ச வேகம் 324 கிமீ; அகஸ்டாவை விட அதிகவேகம் கொண்டவை. அகஸ்டாவின் வேகம் 306 கிமீ; அளவில் பெரியதான *Mi-26* வெறும் 295 கிமீதான். மேலும், கஜாக் விமானங்கள் ஒருவேளை எதிரிகளைத் தேடும் பணிக்காக வந்திருக்கலாம். அதனால் அமைப்பிற்குச் சொந்தமான விமானங்களில் இருந்ததைப் போல, அவற்றில் நிறைய படைவீரர்கள் இல்லை. அதனால் கஜாக் விமானங்கள் பாரம் அதிகமில்லாமல் இலகுவாகவும் அதிவேகமாகவும் பறந்து வர முடிந்தது.

'நாம தப்பிக்கமுடியாது,' என்று கூப்பர் இறுக்கமாகச் சொன்னான்.

'ராக்கெட் ஏவுகணைகள எடு,' என்று வான் குளூக் கட்டளையிட்டான். 'ஆயுதப் போராட்டத்த அவனுக எதிரபார்த்திருக்க மாட்டானுக. அவனுகள் நம்ம வாலைவிட்டு விலக வைக்கணும்.'

கூப்பர் ஆணையைச் சொன்னான். அகஸ்டா விமானத்தில் பின்பக்க அறையில் இரண்டு ராக்கெட் ஏவுகணைகள் இருந்தன. அவை அவசர அவசரமாக பிரிக்கப்பட்டு தாக்குதலுக்கான தயார்நிலைக்குக் கொண்டுவரப் பட்டன. இரண்டுபேர் அவற்றை ஏவ காத்திருந்தார்கள்.

எதையும் சந்தேகிக்காமல் கஜாக் விமானங்கள் மிக அருகில் வந்தன.

'பொறு,' என்று வான் குளூக் கட்டளை இட்டான். 'அவங்க கிட்டேயும் ராக்கெட் ஏவுகணைகள் இருக்கான்னு தெரியல. அவனுக இன்னும் நெருங்கி வரட்டும். நம்மகிட்ட ஒரே ஒரு ஷாட்தான் இருக்கு. அதனால அத உருப்படியா பயன்படுத்து.'

ஆய்வுசெய்தல்

விஜய் கவனமாக எழுந்து நின்றான். இனி என்ன செய்வதென்று யோசித்தான். நூற்றுக்கணக்கான பாம்புகளோடு அவன் மாட்டிக்கொண்டான். தப்பிப்பதற்கு இருந்த ஒரே வழியையும் வான் குளூக் அழித்துவிட்டான்.

ஒரு சிந்தனை உதித்தது. அது பெரியதான நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. ஆனால் அதிலிருந்து ஆரம்பிக்கலாம். இந்த அறை மகாபாரதத்துடன் தொடர்பு கொண்டது என்றால், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாக இது கட்டியிருக்கப்பட வேண்டும். இந்தப் பாம்புகளுக்கு அவ்வளவு வயது இருக்காது. உயிரோடு இருந்து

இனப்பெருக்கம் பண்ண வேண்டுமென்றால், இந்த ஐந்துக்களுக்கு ஆகாரம் தேவைப்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு அர்த்தம், அவை ஏறிச்சென்று மேல்தளத்திற்குப் போயாகவேண்டும் என்பதுதான். பீடபூமியில் வசிக்கும் உயிரினங்களைத் தின்பதற்கு அவை ஊர்ந்து வெளியே செல்வதற்குத் தோதாக ஏதோ சில துவாரங்கள் இருந்தாக வேண்டும். இந்த இடம் பல நூற்றாண்டுகளாக முத்திரையிடப்பட்டு மூடியிருந்தாலும், இங்கே காற்று புதிதாகத்தான் இருக்கிறது. ஒருவேளை, அவன் வெளியே ஊர்ந்துசெல்லும் அளவுக்கு ஒரு துவாரம் பெரியதாக இருந்தால்? அதை ஆராய வேண்டும். அவன் உயிர் பிழைப்பதற்கு வேறு வழியில்லை.

ஆனால் இதுவரை அவன் மனதை உறுத்திக்கொண்டிருந்த ஒரு வேலையை முதலில் முடித்தாக வேண்டும். வான் குளூக்கும் அவன் ஆட்களும் சுற்றிநின்றபோது அதை அவன் செய்யமுடியவில்லை. அவன் அறையில் நுழைந்தான். அவனது ஞாபகத்தில் இருந்த, கல்வெட்டுக் குறிப்புகள் கொண்ட ஒரு சுவரில் தேடுவிளக்கை அடித்தான். அவை விநோதமான வடிவங்கள் கொண்ட கல்வெட்டுகள்; இதற்கு முன்பு அதுமாதிரி அவன் பார்த்ததில்லை. ஒரு கையால் விளக்கைப் பிடித்துக்கொண்டு, தன் ஸ்மார்ட் ஃபோனால் சில நிழற்படங்கள் எடுத்துவிட்டு பிரதான அறைக்குத் திரும்பினான்.

இப்போது இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்கும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

கிளம்பும்போது அந்த மனிதர்கள் தரையில் விட்டுச் சென்ற மண்வெட்டி, கோடரிகள், மற்றும் பல உபகரணங்களை எடுத்துக்கொண்டான். அவை பிரயோஜனப் படலாம்.

ஒரே ஒரு பிரச்சினை. தன் முன்னே விரிந்து கிடக்கும் நாகக்கடலை அவன் தாண்டியாக வேண்டும்.

73

விரலைக்கடிக்க வைக்கும் பதற்றம்

'அவர்கள் விமானங்களைத் தாக்கப் போறாங்க,' என்று பேட்டர்சன் அறிவித்தார். அவர் இம்ரானோடு தொலைக்காட்சித் தொடர்பில் இருந்தார். இம்ரான் இன்னும் மருத்துவனை அறையிலிருந்து தொழில்நுட்பக் கருவிகள்மூலம் உலகத்தோடு தொடர்பில் இருந்தார்.

பேட்டர்சன் வாஷிங்டனில் உள்ள எல்லாத் தொலைபேசி இணைப்புகளையும் பயன்படுத்தி, ராணுவத்திலும், காங்கிரஸிலும் உள்ள தன் தொடர்புகளோடு பேசினார்; அமெரிக்க ஜனாதிபதியிடம் போனார். தன் குழு அங்கத்தினன் ஒருவன் களத்தில் இருக்கிறான். அவர் அவனைக் கைவிடப் போவதில்லை. அது அவரது குணமும் அல்ல.

இறுதியாக, தூதரகம் மற்றும் ராணுவ வழிகள் மூலம், அவர் கஜாக்கின் மந்திரிசபையில் ராணுவ இலாக்காவைத் தொடர்புகொண்டு, அவர்களிடம் நிலைமையின் அவசரத்தைப் புரியவைத்தார். எனினும், பேட்டர்சன் அறிந்திருந்த தகவல்கள் அரசாங்க ரகசியங்கள் என்பதால், அவற்றை ஒரு முன்னாள் சோவியத் மாநிலத்தோடு பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு தடை அவர்க்கு இருந்தது. உஸ்டியூர்ட் பீடபூமியின் களத்திற்கு படைகளை அல்லது அதிரடி வீரர்களை அனுப்புவதற்கான அவசர தேவையைப் பற்றி சொல்லி கஜாக்குளை நம்பவைப்பது மிகவும் கடினமாக இருந்தது. பீடபூமியை வேவு பார்த்து அறிக்கை அளிப்பதற்கு அவர்கள் இரண்டு விமானங்களை அனுப்ப உடன்பட்டார்கள்.

முழு ஆபரேஷனும் கஜாக் விமானப் படையின் கண்காணிப்பில் நடந்துகொண்டிருந்தது. அதன் ஒளிவடிவம் பேட்டர்சனுக்கும், இம்ரானுக்கும் காட்டப்பட்டது.

கஜாக் விமானங்களில் இருந்த கேமாராக்கள், தரையில் தென்பட்ட இரண்டு விமானங்களைக் குறிவைத்து காட்டியதையும், கீழே இருந்த மனிதர்களின் முகபாவங்களைப் படம்பிடித்ததையும், அவர்கள்

விமானங்களில் கருவிகளை வேகமாக ஏற்றியதை, பின்பு அதை விட்டுவிட்டு துரிதமாக விமானங்களில் ஏறி பறந்ததை பதிவுசெய்ததையும் இம்ரானும் பேட்டர்சனும் பார்த்தார்கள்.

கீழிருந்து மேலேறிய ஒரு விமானம் கிழக்குநோக்கி பறந்து தப்பிக்கப் பார்த்தபோது, மற்றொரு விமானம் என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாதது போல அந்தரங்கத்தில் தொங்கிய காட்சியை அவர்கள் பார்த்தார்கள்.

வான் குளூக்கிற்குச் சொந்தமான அகஸ்டா வெஸ்ட்லாண்ட் *AW*139*M* என்ற விமானம் கஜாக் விமானங்களைத் தாக்க திட்டமிட்டுக் கொண்டிருந்ததை அப்போதுதான் பேட்டர்சன் கவனித்தார். அகஸ்டாவில் எந்திர துப்பாக்கிகள் மட்டுமே இருந்ததால், அவர்கள் தாக்குவதற்குக் காத்திருந்தார்கள் என்றால், நிச்சயம் அவர்களிடம் ராக்கெட் ஏவுகணைகள் இருக்க வேண்டும் என்று பேட்டர்சன் நினைத்தார்.

கஜாக் விமானப் படையும் அப்படித்தான் நினைத்தது. மனிதர்கள் தங்கள் பைலட்டுகளை எச்சரிக்கை செய்யவும், எதிர்த்தாக்குதல் நடத்தச் சொல்லவும், அடித்துப் புரண்டோடும் போது ஒலித்த ஆணைகளும், படபடப்பான வார்த்தைகளும் காட்டுக்கத்தல்களும் பேட்டர்சனுக்கும் இம்ரானுக்கும் கேட்டன. ஆயுதத்தாக்குதல் எழும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. பீடபூமியில் இருந்தவர்கள் யாரென்று யாருக்கும் தெரியாது; அவர்களிடம் குண்டுபோடும் ஆற்றல் இருக்குமென்றும் யாரும் எதிர்பார்க்கவில்லை. *EC*725 விமானங்களில் எந்திரத் துப்பாக்கிகளும் 20*mm* பீரங்கிகளும் மட்டுமே இருந்தன.

இரண்டு ராக்கெட்டுகளின் முகப்பகுதிகள் *AW*139*M* விமானத்தின் பெரிய சரிவான கதவுகள் வழியாகத் தோன்றியதை, பேட்டர்சனும் இம்ரானும் திகிலோடு பார்த்தார்கள்.

விடாப்பிடியான போராட்டம்

ராக்கெட்டுகள் ஏவப்பட்டன. ஆனால் விமானப் படையால் எச்சரிக்கப்பட்டு, கஜாக் விமானங்கள் ராக்கெட் தாக்குதலைப் பார்த்த கணத்திலே நழுவி விலகிக் கொண்டன. ஏவுகணைகள் வெற்றுவெளியில் உயர்ந்து பின்பு அந்த 'மூன்று சகோதரர்களை' நோக்கி கீழ்ப்பக்கமாக வளைந்து நெளிந்து சென்றன.

ஏவும் பொறியில் மீண்டும் ராக்கெட்களை வான் குளூக்கின் ஆட்கள்

நிரப்பிக் கொண்டிருந்தனர். ஏற்கனவே ஏவப்பட்ட ராக்கெட்டுகள் கீழே பாறைச்சரிவின் மத்திம பகுதியில் மோதி இரண்டு பெரிய சிகரங்களுக்கு அடியில் வெடித்துவிட்டன. அந்தச் சத்தம் காதைப் பிளந்தது. ஆனால் அக்ஸ்டா விமானத்தில் இருந்தவர்கள் கீழே நடப்பதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

அவர்கள் கஜாக் ஹெலிகாப்டர்களைக் குறிவைத்தனர்.

அவர்கள் மீண்டும் சுட்டார்கள்.

ஒரு கண்டுபிடிப்பு

குகைக்குள் எல்லை என்று எதுவுமில்லை. பாம்புகளுக்கு மத்தியில் எவற்றையும் மிதித்துவிடாமல் மெல்ல கால்விரல்களால் விஜய் நடந்தபோது அவனைச் சுற்றி இருட்டு விரிந்துகிடந்தது.

அவன் கவலைப்பட்டான். இதுவரை, பக்கவாட்டில் நடந்தும் தாண்டியும், தன்னைக் கடந்து ஊர்ந்துசென்ற பாம்புகளிடமிருந்து விலகியும் அவன் சமாளித்துவிட்டான். சில நிமிசங்கள் மட்டும், அவன் கடந்தபோனபோது 'உஷ்' சத்தங்கள் கேட்டன. அதைத்தவிர பாம்புகள் அவனைக் கண்டுகொள்ளவில்லை. எவ்வளவு நேரம் நீடிக்கும் இந்த அதிர்ஷ்டம்?

தேடுவிளக்கை அடித்து எவ்வளவு தூரம் கடந்துவந்திருக்கிறோம் என்று அவன் பார்த்தான். சூரியவெளிச்சத்தை தடுப்பதற்காக ஜன்னலில் போடப்பட்ட ஒரு கனத்த கறுப்புத் திரைபோல, இருட்டு குகையின் நுழைவாயிலை மூடிமறைத்தது. அவன் மனதில் கவலைமிக்க ஒரு கேள்வி எழுந்தது. தேடுவிளக்கு எவ்வளவு நேரம் தாக்குப்பிடிக்கும்?

ஆனால் அவன் போய்க்கொண்டே இருக்க வேண்டும். வேறு வழியே இல்லை. இப்போது நின்றுவிடுவது தற்கொலை.

திடீரென்று திடீரென்று தரை ஆடியது. ஓர் அதிர்வு குகைமுழுவதும் ஓடியது. கண்ணுக்குப் புலப்படாத கூரையிலிருந்தும், சுவர்களிலிருந்தும் ஒரு நீண்ட முனகல் சத்தம் கேட்டது.

அவன் நடப்பதை நிறுத்திவிட்டு அசையாமல் நின்றான். ஏதோ நடந்திருக்கிறது. இல்லை. ஏதோ நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தரை தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தது. பாம்புகள் கலைய ஆரம்பித்தன. அவை அவனிடமிருந்து விலகி, அவன் நினைத்துப் பார்க்காத படுவேகத்தில் ஓடின.

எதையோ கண்டு அவை வெருண்டோடியது போல தோன்றியது. என்ன அது?

ஓடும் அந்தப் பாம்புகளைத் தொடர்ந்தால், ஒருவேளை தப்பிக்கும் வழியைக் காணலாம் என்று அவனுக்கு உதித்தது. அவை எதைக் கண்டு ஓடியதோ அது அவனை முந்தாமல் இருக்கும் பட்சத்தில்.

அவன் கால்களுக்கு இடையே, அவனின் பக்கவாட்டுகளில், சிலநேரத்தில் அவன் பாதங்களுக்கு மேலேயும் வழுக்கிக் கொண்டுபோன பாம்புகளின் பின்னால் அவன் போக ஆரம்பித்தான். அவனது இருப்பைப் பற்றி அவை அவதானித்தது போல தெரியவில்லை. அவற்றின் ஒரே சிந்தனை தப்பித்தல் மட்டுமே.

விஜய் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவன் அவற்றைத் தொடர்ந்துவரும் வேகத்தைவிட அதிவேகமாக அவை இருட்டில் மறைந்தன.

திடீரென்று அவன் தன்பாதையில் நின்றான். அவன் பார்த்துக்கொண்டிருந்த காட்சியை அவனால் நம்பமுடியவில்லை. பதினைந்து அல்லது இருபது அடிகள் தாண்டி, அவனின் வலதுபுறம் கல்படிக்கட்டுகள் தோன்றின. அவன் நம்பிக்கைகள் உயர்ந்தன. படிக்கட்டுகளுக்குப் போகும் பதற்றத்தில் அவன் வேகமாக முன்னே விரைந்தான்.

அது நேரமறிந்து செய்த ஒரு செயல் அல்ல. அவன் முன்னே சென்ற போது, இரண்டு நல்லபாம்புகள் அவனருகே ஊர்ந்துசென்றன. அவற்றில் ஒன்று அவன் காலடியில் மாட்டி, பின் தலைதூக்கிப் பார்த்து 'ஷ்' சத்தத்துடன் தாக்க தயாரானது.

விஜய் பின்னால் துள்ளிக் குதித்தான்; பாம்பின் கொத்தலிலிருந்து மில்லிமீட்டர் இடைவெளியில் அவன் தப்பினான். ஆனால் அதே திசையில் சோர்வாக ஊர்ந்துகொண்டிருந்த இன்னொரு நாகப்பாம்பை மிதித்துவிட்டான். அது அவனைத் தாக்க தன்னைச் சுருட்டிக்கொண்டு படமெடுக்க ஆரம்பித்தது.

அப்போது விளக்கு அணைந்தது. அவன் கீழே விழுந்து, விளக்கில் ஏதோ ஒன்று அடிபட்டு அதனால் அது அணைந்ததா அல்லது பாட்டரி தீய்ந்துபோவதற்கு அந்தக் கணத்தைத் தேர்ந்தெடுத்ததா என்று விஜயால் சொல்ல முடியவில்லை. வெளிச்சம் செத்துப்போனது; குகை இருள்வெள்ளத்தில் மூழ்கியது.

பாம்புகள் ஊர்ந்துசெல்லும் சன்னமான சத்தங்கள் சுற்றிலும்

ஒலித்தன. ஆனால் கல்படிக்கட்டு எந்தத் திசையில் இருக்கிறது என்று அவனுக்குப் புலப்படவில்லை.

74

முதல் தாக்குதல்

ராக்கெட்டுகளின் இரண்டாவது சுற்று முதலாவதை விட சிறப்பாக இல்லை. மீண்டும் கஜாக் பைலட்டுகள் அதே எதிர்பார்ப்போடு அவற்றை விட்டு விலகி சமாளித்தனர்.

வான் குளூக் எரிச்சலடைந்தான். 'நாசமா போக. உங்களுக்கு என்ன மாறுகண்ணா?' என்று துப்பாக்கி ஏந்தியவர்களை எச்சரித்தான். 'அவங்கள காலிபண்ணாம நாம இந்த இடத்தவிட்டு போகமுடியாது.' அவன் வெளியே எட்டிப்பார்த்து கிழக்கு நோக்கினான். அங்கே அவனது இரண்டாவது ஹெலிகாப்டர் வேகமாக உருவம் சிறுத்துக்கொண்டே இருந்தது.

எந்திரத்துப்பாக்கிகள் சுட்டுக்கொண்டே இருக்க, கஜாக் ஹெலிகாப்டர்களில் ஒன்று அவர்களை நோக்கி இப்போது நேராகவே வந்துகொண்டிருந்தது. அடுத்து என்ன வருமென்று வான் குளூக் அறிந்திருந்தான். அந்த விமானத்தில் அச்சுப்பொறி பொருத்தப்பட்டிருந்தால் 20-*mm* பீரங்கி வெடிக்கும்; அல்லது 68-*mm* ராக்கெட் ஏவுகணை வரும்.

'இப்போ,' என்று அவன் கத்தினான்.

துப்பாக்கி ஏந்திய வான் குளூக்கின் ஆள் குறிவைத்து, மூன்றாவது தடவையாக ராக்கெட் ஏவுகணையை ஏவினான்.

இந்தத் தடவை குறி தப்பவில்லை.

கஜாக் விமானம் நெருப்புப் பந்தாக வெடித்து 'மூன்று சகோதரர்களை' நோக்கி தலைக்குப்புற சர்ரென்று வீழ்ந்து, மிகச்சிறிய சிகரத்தின்மீது மோதி, பின் பாறைச்சரிவில் சரிந்து, பீடபூமித் தரையில் எரிந்து சேதமாயிற்று.

மாட்டிக்கொண்டான்

சில கணங்கள் விஜய் ஆடாமல் அசையாமல் நின்றான். அடுத்து என்ன செய்யலாம் என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. வெளிச்சம் செத்துப்போனதிலிருந்து தேய்தல் சத்தமும், ஊர்தல் சத்தமும் உரக்கவே கேட்டன. இருட்டில் கண்பார்வை போனதற்கு நஷ்ட ஈடாக தனது தேகம் காதுகேட்கும் திறனை அதிகப்படுத்திவிட்டதா அல்லது பாம்புகள் மேலும் அதிகமாக சினமடைந்து விட்டனவா என்று அவனுக்குப் புரியவில்லை. பேரச்ச அலை பாய்ந்து அவனை மூழ்கடிக்க அச்சுறுத்தியது.

அவன் தன்னைச் சிந்திப்பதற்குக் கட்டாயப்படுத்தினான். இருட்டில் தடவியவாறு சில அடிகள் எடுத்து வைத்தான்.

அங்கே ஒன்றும் தட்டுப்படவில்லை.

பின்னால் அடியெடுத்து வைக்க முயன்றான். அதுவும் சரியாக வில்லை.

அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்தான். படிக்கட்டு கண்ணில் தென்பட்டவுடன், இந்த இடத்தைவிட்டு தப்பிப்பதற்கான வாய்ப்பு, அது எவ்வளவு சின்னதாக இருந்தாலும், கிடைத்துவிட்டதே என்று நினைத்திருந்தான்.

தனக்குள் எழும்புகின்ற அச்சத்தையும் திகிலுணர்வையும் அடக்கிக்கொண்டு, தன்னைச் சுற்றியிருந்த பாம்புகளின் சத்தத்தில் கவனம்குவிக்க முயன்றான். அவை எந்தத் திசையில் போய்க்கொண்டிருந்தன என்று அவனால் புரிந்துகொள்ள முடிந்ததா?

பெரிய சகோதரன்

'ஏவுகணை எச்சரிக்கை!' என்று விமான பைலட் அறிவித்தான். 'வ ந் து கொ ண் டி ரு க் கி ற து . *ECM (Electronic Countermeasure)* ஆரம்பமாகிவிட்டது!'

(ECM என்று அறியப்படும் *Electronic Countermeasure)* என்பது எதிரிவிமானத்தின் தாக்குதலை முறியடிக்கும் ஒரு மின்கருவி - மொழிபெயர்ப்பாளர்)

'பின்னாக்கிள்ஸ்!' என்று வான் குளூக் கத்தினான். 'பின்னாக்கிள்ஸ் பயன்படுத்து! இங்கிருந்து வெளியேறி தொலைப்போம்!' என்ன நடந்தது

என்பதை அவன் புரிந்துகொண்டான். கஜாக் விமானப்படை தங்கள் விமானங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்தான். அவர்கள் இவ்வளவு வேகமாக எதிர்வினையாற்றுவார்கள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. தங்கள் விமானங்களை சரியான நேரத்தில் வான் குளூக் தாங்கவிருந்ததை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். அவர்கள் தங்களின் போர்விமானங்களைத் திரட்டிக்கொண்டுவந்த வேகத்தை வேறுவகையில் விளக்கமுடியாது.

'MiG!' 29கள்!' என்று வான் குளூக்கின் பைலட் கத்தினான். அவன் தன் விமானத்தை செங்குத்தாய்க் கீழிறக்கி தாவச்செய்தான்; தங்களுக்கும், தாக்கவரும் காற்றுவெளியிடை உஷ்ணத் தடம் தேடிப்பாயும் ஏவுகணைகளுக்கும் இடையே மூன்று சகோதரர்கள் மலை இருக்கும்படி ஹெலிகாப்படரை நிலைநிறுத்தினான். அகஸ்டா விமானத்தில் ஏவுகணையைக் கண்டு எச்சரிக்கும் கருவியிருந்ததால், பைலட் ஏவுகணையைக் கண்டு உஷாரானான். அந்த விமானத்தில் இருந்த மின்னியல் எதிர்நடவடிக்கைகளை எடுக்கும் அமைப்பு, மின்னியல் எதிர்நடவடிக்கைக் கருவியைப் பயன்படுத்தி ஏவுகணையைப் பாதைமாறச் செய்தது.

'மூன்று சகோதரர்கள்' மேலே நெருப்புச்சுடர் மேலெழுந்ததை வான் குளூக் கவனித்தான். தன் பைலட் எதையும் விட்டுவைக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டான். *ECM*-மோடு, அவன் போலித்தீச்சுடரையும், வளிமண்டலத்தில் பிராணவாயுவை உள்வாங்கி ஓர் அகச்சிவப்பு ஒளியை உருவாக்கும் விசேஷமான போலிப்பொருட்களையும் பயன்படுத்தினான். தாக்கவரும் ஏவுகணைகள் அந்தப் பொய்யான ஒளியைக் குறிவைத்து ஏமாந்துபோகும்.

விமானம் தாழ்வாக பறந்தது; 'மூன்று சகோதரர்கள்' அதற்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக இருக்க, விமானம் முழுவீச்சில் குண்டுகளைப் பொழிந்தவண்ணம் கிழக்கு நோக்கி சர்ரென்று பறந்தது. உஸ்பெகிஸ்தான் எல்லை அதிக தூரமில்லை. கஜாக் விமானங்களால் எல்லையின் அருகே அதிரடி நடவடிக்கைகள் எடுக்க முடியாது.

இந்தச் செயல்பாடு வெற்றிகரமாக முடியப்போகிறது.

சொர்க்கத்தின் படிக்கட்டு

விஜய் தாழ்வாக உட்கார்ந்துகொண்டு, பார்வையற்று இருக்கும்

உணர்வைக் கூட்டுவதற்காக, கண்களை மூடிக்கொண்டான். பாம்புகளின் சத்தங்களைக் காதுகொடுத்துக் கேட்டான். வெளியேறிக்கொண்டிருக்கும் பாம்புகளின் சத்தத்திற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காக, அவன் தன் சுவாசத்தை அமைதியாக்க முயன்றான்.

அவனை நாகங்கள் கடந்தன; போகும்போது சில அவன் பாதங்களை உரசின. தான் செல்ல வேண்டிய திசையைத் தீர்மானிப்பதற்கு, தன் ஸ்பரிச உணர்வையும், செவிப்புலன் உணர்வையும் ஒன்றாக இணைக்க முயன்றான். சில நிமிடங்கள் கழித்து, அவன் முன்னே செல்ல தீர்மானித்தான். பாம்புகளை மிதித்துவிடக்கூடாது என்பதற்காக, முதலில் ஒரு பாதத்தை முன்னே வைத்து, பின்பு அடுத்ததை வைத்தான்.

திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது. படிக்கட்டு எங்கே செல்கிறது? அவன் தலையாட்டினான். இதை அவன் முதலிலேயே யோசித்திருக்க வேண்டும்? முன்நோக்கிப் பார்த்தான். அவனுக்கு மேலே, இருட்டின் ஊடாக, ஒரு சிறிய ஒளிப்புள்ளி தெரிந்தது. வெளியுலகத்திற்கான துவாரம்.

நம்பிக்கைகள் புத்துணர்வுபெற, கண்களை மூடி, கைகளை நீட்டியவாறு, அவன் சிரமத்துடன் முன்னே நகர்ந்து சென்றான். கனமான இருட்டாக இருந்தாலும், கண்களைத் திறக்காமல் இருக்க போராடினான். அது ஓர் அசௌகரியமான உணர்வு.

திடீரென்று தான் முன்னோக்கிப் பிடித்துக்கொண்டிருந்த மண்வெட்டி, ஏதோவொன்றின்மீது பட்டது. அவன் வேகமாக முன்னால் நகர்ந்தான்; கைகள் பாறையின்மீது உராய்ந்தன. இருட்டில் துழாவியவாறு ஒரு படிக்கட்டின் வடிவத்தை உணர்ந்தான். பின்பு இன்னொன்று. சந்தோசத்தில் அழவேண்டும் போலிருந்தது. அவன் ஜெயித்துவிட்டான். ஆனால் கொண்டாடும் நேரம் இதுவல்ல. இங்கிருந்து வெளியேற வேண்டும். பாம்புகள் எதைக்கண்டு மிரண்டு ஓடியிருந்தாலும் சரி, அதைக் கண்டுபிடிக்க முயல்வது தேவையற்ற வேலை.

அவன் மண்வெட்டியைக் கீழே வைத்தான். தாழ்வான படிக்கட்டில் கால்வைத்து பின் தன் வழியைக் காலின் ஸ்பரிசத்தால் உணர்ந்து மேலே செல்ல ஆரம்பித்தான். மண்வெட்டியைப் பின்னால் விட்டுத்தான் வரவேண்டும். அது ஓர் ஆபத்தான ஏற்றம். படிக்கட்டுகள் பாறைக்குள் குடையப் பட்டிருந்தன; மூன்றடிக்கு மேல் அகலமில்லை. அவனது

இடதுபுறம், குகைச்சுவர் இருந்தது. வலதுபுறம் வெற்றுவெளியும், தரையில் முடியும் சரிவும் இருந்தன. ஒரு சின்ன தவறு போதும்; கீழே பொத்தென்று விழுந்துவிடலாம். அவன் நடுங்கினான்; இடதுபுறம் உள்ள பாறைச்சுவரைப் பற்றிக்கொண்டு, மேலே ஏறினான்.

அது நீண்ட ஏற்றம். படிக்கட்டு போய்க்கொண்டே இருந்தது. வியர்வை அவன் ஆடைகளை நனைத்தது. தவறிவிடக் கூடாது என்பதற்காக, பாறையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டதால், அவன் கைகள் உராய்ந்து காய்ப்பேறின. நீண்ட, மெதுவான ஏற்றப்பயிற்சியால் தொடைகள் வலிக்க ஆரம்பித்தன. ஆனால் அவன் விடப்போவதில்லை.

தான் எங்கே இருக்கிறோம் என்பதை விஜய் புரிந்துகொண்டான். 'மூன்று சகோதரர்களில்' ஒன்றில். பாறை வடிவமைப்பின் சரிவான படுக்கைப் பாறையிலிருந்து மேலெழும்பி நின்ற பெரிய உச்சிகளில் ஒன்றிற்குள் குடைந்து உருவாக்கப்பட்டிருந்த ஒரு படிக்கட்டு அது. எந்த ஒன்று அது என்று அவனால் ஊகிக்கமுடியவில்லை. அதன் நுழைவாயில் கீழே இருந்ததால், அது ஆகக்குறுகலான ஒன்றாக இருக்கமுடியாது. ஆனால் அது இப்போது முக்கியமில்லை. உச்சியை அடைந்தவுடன் தான் என்ன செய்வது என்பது பற்றி அவன் நின்று யோசிக்கவில்லை. அங்கே போனவுடன், பாறையை விட்டு கீழிறங்கும் பிரச்சினையை அவன் எதிர்கொள்வான். இப்போதைக்கு, அவன் இருட்டை விட்டு, இந்தக் குகையை விட்டு வெளியேற வேண்டும்.

மெதுவாக ஆனால் நிலையாக, அவனுக்கு மேலிருந்த திறப்பு பெரிதாக்கிக் கொண்டே இருந்தது. மிகவும் பிரகாசமாகவே. அவன் முயற்சியை இரட்டிப்பாக்கி நடைவேகத்தைக் கூட்டினான். அருகில் வந்துவிட்டான்; மிக அருகில்.

மேலிருந்த துவாரத்திலிருந்து வெளிச்சம் படிக்கட்டை வெளிச்சமாக்கியது. ஒவ்வொரு படியின் வடிவமும் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தது.

நம்பிக்கை அவனுக்குள் பிரவாகித்தது. இன்னும் 40 அல்லது 50 அடிகள்தான் இருக்கும். அவன் மேலே சேரப்போகிறான்!

அடுத்தடுத்த படிகளில் கால்வைத்து வேகமாக ஏறினான்.

பின்பு, நரகம் வெடித்து சிதறியது போலிருந்தது. பாறையுச்சி ஒரு பலத்த இடிசப்தத்துடன் வெடித்து தகர்ந்தது. படிக்கட்டின் மீது திடீரென்று வெளிச்சம் பரவி, பாறைவெடிப்புகள் மழையாகப் பொழிந்தன.

அவன் கைகளை தலைமேல் வைத்தான். முகத்தை மூடிக்கொள்ள முயன்றான். சுவரைப் பிடித்துக் கொண்டிருந்த பாதுகாப்பைக் கைவிட்டு, மடமடவென்று விழும் பாறைத்துகள்களைத் தள்ளிவிட முயன்றான். சில பாறைத்துகள்கள் கால்பந்து வடிவத்தில் விழுந்தன. அவன் கைகளில், மார்பில், கால்களில் பொத்பொத்தென்று வீழ்ந்த பாறைகள் படிக்கட்டு விளிம்புகளில் உருண்டோடி பள்ளத்தில் போய்ச்சேர்ந்தன.

கிட்டத்தட்ட அதே நேரத்தில் இன்னொரு வெடிப்புச் சத்தம் கேட்டது. இந்த தடவை அது ஒரு குண்டுவெடிப்பாக ஒலித்தது. படிக்கட்டை மூடியிருந்த பாறைக் கோபுரம் அதிர்ந்தது. பாறைத் தாக்குதல்களில் விஜய் பின்னாடி தள்ளாடினான். சில பெரிய பாறைத்துண்டுகள் அவன் மார்பை, இடுப்பை தாக்கின. ரத்தம் வந்தது. இன்னொரு துண்டு காலைத் தாக்கியதில், தொடையின் ஊடாக வலி கூர்மையாகப் பாய்ந்தது.

ஜெட் விமானத்தின் அலறல்சத்தம் கேட்டது. அவனது வலதுகால் படிக்கட்டிலிருந்து தவறி விழுந்தது. பரபரத்த கைகளோடு, அவன் கீழே விழாமல் தன்னைப் பிடித்துக்கொண்டான். ஒருகணம் படிக்கட்டில் அவன் தடுமாறினான். பாறைச்சுவரை படபடத்த கைகளால் கெட்டியாக அழுத்திப் பிடித்துக்கொண்டான்.

பின்பு, புவியீர்ப்புச் சக்தி மேலோங்க, அவன் அந்தரத்தில் கால்பாவி பள்ளத்தில் தலைகீழாக விழுந்தான்.

75

தவிடுபொடியானது

பேட்டர்சனும் இம்ரானும் திரைகளில் தெரிந்த காட்சி யைக் கவனித்தனர். முதல் ஹெலிகாப்டர் நொறுங்கி கீழே எரிந்துவிழிந்ததை அவர்கள் திகிலோடு பார்த்துவிட்டனர். இரண்டாவது ஹெலிகாப்டர் தப்பித்து நழுவியதும், அகஸ்டா விமானம் மறைந்துபோனதை அவர்கள் கவனித்தனர். ஆனால், சில வினாடிகளுக்குள், ஏவுகணை ஆகாயத்தில் கோடுகிழித்து கிழக்குநோக்கிச் சென்றதையும், அகச்சிவப்பொளியைக் கண்டுபிடிக்கும் அதனது கருவி அகஸ்டாவின் உஷ்ண அடையாளத்தைத் தேடுவதையும் அவர்கள் பார்த்தனர்.

ராக்கெட் லான்சர்கள் அகஸ்டாவிலிருந்து துருத்திக் கொண்டிருந்தது தெரிந்தவுடன், கஜாக் அதிகாரிகள் ஒரு சில *MiG*29களை ஏற்பாடு செய்து தங்கள் ஹெலிகாப்டர்களுக்கு ஆதரவாக செலுத்தினர்.

பின்பு, மிச்சமிருந்த கஜாக் ஹெலிகாப்டர் மேலே தோன்றியது. தனக்கு ஆதரவாக வந்த கஜாக் ஜெட்களாலும், அகஸ்டா தலைதெறிக்க ஓடுகிறது என்ற நிஜத்தாலும், கஜாக் ஹெலிகாப்டர் உற்சாகம் அடைந்தது. தீப்பொறிக் கோடுகள் பின்னால் தோன்ற, அகஸ்டா கிழக்கு நோக்கி பறந்ததையும் அவர்கள் பார்த்தனர்.

பேட்டர்சன் கெட்ட வார்த்தைகளை அள்ளித் தெளித்தார். 'அடிமுட்டாள்கள்! விமானப்படை வீரர்களை அனுப்பச் சொன்னேன். அவர்கள் நான் சொன்னதைக் கேட்டிருக்கணும். அந்தப் பசங்ககிட்டதான் எல்லா கருவிகளும் இருக்கு. ஏவுகணைகள சமாளிக்க அவங்ககிட்டதான் *ECM*மும், போலி இலக்குகளை எதிர்க்குக்காட்டும் கருவிகளும் இருக்கு.'

ஏவுகணைகள் போலிஇலக்குகளைச் நோக்கி விரைந்துசென்றதை அவர்கள் அவதானித்தனர். ஒரு ஏவுகணை பாறையின் நடுஉச்சியைத்

தாக்கி, பாறையைத் தூள்தூளாக்கி, சேதாரங்களை சரிவில் பறந்துபோகச் செய்தது. அது கடந்து சென்றவுடன், பாறை உச்சி முன்பிருந்ததைவிட 50 அடிகள் குறைந்து காணப்பட்டது.

இரண்டாவது ஏவுகணை, உச்சியின் ஆதாரத்திலிருந்த பாறைகுள்ளே சென்று தாக்கியது. பீடபூமியின் மேல்தளத்திற்கு 100 அடி மேலே, அஸ்திவாரப் பாறையிலிருந்து அது மீண்டும் தலைதூக்கியது.

அகஸ்டா தப்பித்து பறந்ததைப் பார்த்த அந்த இரண்டு மனிதர்களும் அமைதியான பார்வையாளர்களாய் மட்டுமாகவே இருக்க வேண்டியிருந்தது. ஜெட்விமானங்களின் சத்தம் நம்பிக்கையூட்டுவதாகத்தான் இருந்தது. ஆனால் அந்தச் சத்தத்தால் ஒரு நிஜத்திற்கு முகமூடியை போட முடியவில்லை: எதிரி தப்பித்து விட்டான் என்பதுதான் அந்த நிஜம்.

மரணத்தின் பிடிக்குள்

படிக்கட்டுவிளிம்பில் விஜய் தடுமாறி விழுந்தபோது, படிகளை இருகைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஒருகைக்குக் கிடைத்த பிடிமானம் ஒரு வினாடிதான் நிலைத்தது; அவன் படிகளின்மீது அடுத்த பிடிமானத்தைப் பெறமுயன்றபோது அது நழுவியது.

இந்த தடவை ஒருகையால் நல்ல உறுதியான பிடிமானத்தைப் பிடித்து, மறுகையால் பாறையைப் பற்றிக்கொள்ள முன்னே பாய்ந்தான்.

இது நீண்டநேரம் நிலைக்காது என்று அவனுக்குப் புரிந்தது. ஏறிஏறி அவன் விரல்கள் புண்ணாகி வலித்தன. பெரிய பாறை மோதியதில் அவனது இடுப்பில் காயம் ஏற்பட்டு தொடை அழுத்தமாக வலித்தது.

தவிர்க்கமுடியாத ஒன்றைச் சில கணங்களுக்குத் தள்ளிப்போட மட்டும்தான் அவன் சமாளித்தான்.

அவன் எண்ணங்களுக்கு மேலும் வலுவூட்டுவது போல, படிக்கட்டு அதிர்ந்தது; கனத்த கீறல் சத்தங்கள் வரிசையாகக் கேட்டன.

விஜய் கீழே இருந்த பள்ளத்தைப் பார்த்தான். ஏதோவொன்று நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அதிர்வு மேலும் வலுவாகி, படிக்கட்டுகளில் கீறல்கள் தோன்ற ஆரம்பித்தன.

பாம்புகள் ஏன் அப்படி பயந்தோடின என்று இப்போது விஜய்க்குப் புரிந்தது. அவற்றின் ஆறாமறிவு சொன்னதை எளிதாக அவை கடைப்பிடித்தன. மனிதர்களுக்கில்லாத சக்தி - அபாயத்தை மோப்பம்

பிடிக்கும் தனித்துவ ஆற்றல் - மிருகங்களுக்கு இருந்தன. அந்த நேரத்தில் அவனுக்குத் தெரியாத ஒரு விசயத்தைப் பாம்புகள் தெரிந்துவைத்திருந்தன.

உச்சிகள் சரசரவென்று விழுந்துகொண்டிருந்தன.

இரண்டு சகோதரர்கள்

ஹெலிகாப்டர் பைலட் பாறைக்கு சுற்றிவந்தான். பணிப்படைக் குழு உறுப்பினனைத் தேடச் சொல்லி அவனுக்கு கட்டளை இடப்பட்டிருந்தது. அந்த உறுப்பினன், அவனது சகப்பணியாளைச் சுட்டுத்தள்ளிய கும்பலிடம் சிறைக்கைதியாக இருப்பவன். காப்பாற்றப்பட வேண்டிய அவன் எதிரியின் இரண்டு ஹெலிகாப்டர்களில் ஒன்றில் கைதியாகவே போயிருக்க சாத்தியம் உண்டு என்றாலும், பைலட் அந்த இடத்தில் சல்லடை போட்டு தேடினான். ஒருவேளை அவன் இங்கு இருந்தால்.

சுட்டெரிக்கப்பட்ட கஜாக் விமானத்தின் சேதாரத்திலிருந்தும், பாறை உச்சியில் மோதிய ஏவுகணையின் தீப்பிடித்தெரிந்த மிச்சத்திலிருந்தும் எழுந்து நெளிந்து ஆகாயம் வரை சுருண்டு போய்க்கொண்டிருந்த கறுப்புப்புகை வளையங்கள் தவிர்த்து அங்கே வேறொன்றும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.

பிரயோஜனமில்லை. அந்த ஆள் இறந்திருக்க வேண்டும்; இல்லைஎன்றால், எதிரிகளோடு போயிருக்க வேண்டும். எப்படி பார்த்தாலும் தேடும் திட்டம் தோல்விதான். இரண்டு சகப்பணியாளர்களை இழந்தாயிற்று. இருவருமே நல்ல மனிதர்கள்.

பெருமூச்சு விட்டுக்கொண்ட் அந்த பைலட் மேற்குத் திசையில் திரும்பினான், விமானப்படைத் தளம் நோக்கி.

அவனது சகப் பைலட் திடீரென்று சத்தம் எழுப்பினான். சேதாரமான பாறை உச்சியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவன், பாறையில் ஒரு மனிதன் தொங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

பைலட் வேகமாக புற நீரியல் உயர்த்தி அமைப்புக்கு *(external hydraulic hoist system)* உயிர்கொடுத்து விமானத்தை பாறை உச்சிக்கு மேலே நேராக நிறுத்தினான்.

அவன் ஜெயித்துவிடுவானா?

பாறை உச்சிச் சுவர்களும், படிக்கட்டுகளும் சிதறி உடைய ஆரம்பித்தவுடன், ஹெலிகாப்டரின் சுழலிகள் சத்தம் தலைக்கு நேராக மேலிருந்து கேட்டது.

அவன் ஏறிட்டுப் பார்த்தான். மேலேற்றும் கருவி ஒன்று அவனை நோக்கி ஆடிக்கொண்டிருப்பதைக் கவனித்தான்.

கருவி அங்குல அங்குலமாக அவனிடம் வந்து கொண்டிருந்தது. அவன் இறுக்கமான முகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

இன்னும் சில அங்குலங்கள்தான்.

கிட்டத்தட்ட வந்துவிட்டது.

இப்போது.

ஒரு பலத்த இடிச்சத்தத்துடன் பாறை உச்சியின் சுவர்கள் படபடவென்று நொறுங்க, படிக்கட்டு தகர்ந்து போனது. விஜய் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பெரிய பாறைகளை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தான்.

மேலேற்றும் கருவி தன் தோள்களைத் தொடுவதை விஜய் உணர்ந்தான். அதை உடனே பிடித்துக்கொண்டான். அவனைச் சுற்றி அந்தப் பாறை உச்சி உள்ளே பெரும் சத்தத்துடன் டமாரென்று வெடிக்க, மேலெழுந்த புழுதிமேகங்கள் அவனை மூடின. கருவி மீதான பிடிமானத்தை அவன் மேலும் உறுதியாக்க முயன்றபோது இருமினான். கண்கள் எரிந்தன.

பின்பு அவன் மேலே தூக்கப்பட்டான். பலமான கைகள் அவனை இழுத்து விமானத்திற்குள் போட்டது. கேபின் கதவு மூடிக்கொள்ள விமானம் அவனைப் பாதுகாப்பாகச் சுமந்துகொண்டு மேலே பறந்தது.

76

உளவுத்துறை தலைமையகம் [*IB*], புது டில்லி

'நாம எதிரிகளைக் குறைவாக எடைபோட்டுட்டோம்,' என்று பேட்டர்சன் முடித்தார். உஸ்டியூர்ட் பீடபூமி நிகழ்வுகளுக்கு இட்டுச்சென்ற ஆபரேஷன்களையும், சாவிலிருந்து தப்பித்த விஜயின் சம்பவங்களையும் பற்றி பணிப்படைக் குழு தனது மீள்ஆய்வை முடித்துக் கொண்டிருந்தது.

அன்று கஜாக் விமானப்படைத் தளத்தில் மருத்துவ உதவி கொடுக்கப்பட்டவுடன், விஜய் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தான். எலும்பு உடையாமல், காயங்கள் ஏதுமில்லாமல் அவன் அதிர்ஷ்டவசமாக தப்பித்திருந்தான். பேட்டர்சன் கூட்டிய கூட்டத்திற்கு காலினோடும் சுக்லாவோடும் டில்லிக்குப் போவதற்கு முன்பு சற்று ஓய்வெடுத்தான். கிளம்பும்வரை, கோட்டையில் தங்கள் அறைகளில் விஜயும் சுக்லாவும் அடைத்துக்கொண்டு கிடந்தார்கள், யாருடனும் பேசுவதற்கு விருப்பமில்லாமல்.

உளவுத்துறை அலுவலகத்தில் மாநாட்டு அறையில் அவர்கள் விவாதித்தார்கள்: கிரீஸ் அகழ்வாராய்ச்சி தொடங்கி, கஜக்ஸ்தான் நிகழ்வுகள், ராதாவைக் காப்பாற்றமுடியாமல் போனது உட்பட, எல்லாவற்றையும் ஆதியோடு அந்தமாய் விவரித்தார்கள். ராதாவின் மரணம் விவாதத்தின் கடைசிப் பகுதியாய் பேசி முடிக்கப்பட்டதும் அங்கே சில கணங்கள் மௌனம் நிலவியது. குழு ஒரு அங்கத்தினரை இழந்துவிட்டது. பணிப்படைக் குழுவின் இலட்சியங்களை தன் உயிருக்கும் மேலாக மதித்து, அவள் தைரியத்தையும், தீர்க்கமான உள்ளத்தையும் வெளிக்காட்டிவிட்டு போய்விட்டாள்.

இந்தச் சந்திப்புக்காகவே இம்ரான் மருத்துவமனைப் படுக்கையைவிட்டு வந்திருந்தார். தான்நேரடியாகவே வருவேன் என்று அவர் அடம்பிடித்தார். அமெரிக்கா சார்பாக, பணிப்படைக் குழுவின்

மரபியல் நிபுணரான பெர்சி காலிபோஸோடு ராய்சன் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

பேட்டர்சன் உற்சாகமற்றவராய்த் தோன்றினார். கடந்த 24 மணிநேரம் எல்லோர்க்கும் நரகமாக இருந்தது. அவர்களின் ஆகச்சிறந்த முயற்சிகளையும் தாண்டி எதிரி தப்பித்து ஓடிவிட்டான்.

'கஜக்கிஸ்தானில் அவனுக காட்டிய சுடும்திறன் இதுவரை இல்லாதது,' என்று சொல்லிவிட்டு அவர் தொடர்ந்தார்: விஜய் சொன்னதுபோல, ஆஃப்கானிஸ்தானில் தங்களோட வேலை முடியற வரைக்கும், அவனுக தலிபனையே விரட்டி அடிச்சிருக்கானுக. அந்த அமைப்பு என்னதுன்னும், அதோட உறுப்பினர்கள் யாருன்னும் இன்னும் நமக்கு தெரியல. சரித்திரத்தில் எங்கேயும் அதைப் பத்தின குறிப்புகளே இல்லை. எப்படியோ இத்தனை நூற்றாண்டுகளாக அவனுக தங்களோட இருப்பை பத்திரமாகவே பாத்துக்கிட்டானுக. நமக்கு சில பெயர்கள்தான் கிடைச்சிருக்கு. அதுக்கு மேல ஒண்ணுமில்ல. நமக்கு நிச்சயமா தெரிஞ்ச ஒரே விசயம் அவனுக ரொம்ப திறமைசாலிகள்; நிறைய வசதிகளோட இருக்கானுகங்றதுதான். பலநாடுகள்ல உங்க நாட்டயும் எங்க நாட்டயும் சேர்த்து, அவங்களுக்கு அரசு அலுவலகங்களில் பெரிய தொடர்புகள் இருக்கு.'

'மேலும் அவனுக ஆதிகாலத்து ஆட்கள்,' என்று விஜய் சேர்ந்து சொன்னான். 'ரொம்ப ஆதிகாலம். வான் குளுக் சொன்னது உண்மைன்னா, அந்தக் குகையை ஆயிரக்கணக்கான வருசங்களுக்கு முன்னாடி உருவாக்கினதே இந்த அமைப்புதான். அம்ருதம் தயாரிப்புக்கும் அந்த அமைப்புக்கும் ஏதோவொரு சம்பந்தம் இருக்கு.' ஏதோ ஒன்று அவனுக்குள் தோன்றியது. 'மன்னிக்கவும். நான் ஒரு ஃபோன்கால் பண்ணணும். ஏதோவொன்று எனக்கு தோணுது.'

பேட்டர்சன் சரி என்பது போல தலையசைத்தார். விஜய் அறையை விட்டு வெளியேறினான். சில நிமிடங்களில் திரும்ப உள்ளே வந்தான். அவன் முகத்தில் புதிய உற்சாகம் தெரிந்தது.

மற்றவர்கள் அவனை என்னவென்பது போல பார்த்தார்கள். அவர்களிடம் சொல்வதற்கு அவனிடம் ஏதோவொன்று இருப்பது தெளிவாகத் தெரிந்தது.

'நீங்க சொன்ன விஷயம்தான்,' என்று விஜய் ஆரம்பித்தான், பேட்டர்சனைப் பார்த்து. 'நீங்க அவங்களை எதிரின்னு சொன்னீங்க. அப்போதுதான் எனக்கு திடீர்னு தோணிச்சி. இங்க பாருங்க.

சரித்திரத்தில அவங்கள பத்தின குறிப்பு ஒண்ணு இருக்குது.' அவன் ஒரு சின்ன நோட்டுப்புத்தகத்தை எடுத்தான். நான் அலைஸைக் கூப்பிட்டேன். போன வருசம் எனக்குக் கிடைச்ச ஒரு டைரியை பார்க்கச் சொன்னேன். அது புருனோ பெஜர் என்ற ஒரு ஜெர்மனுக்குச் சொந்தமான டைரி. உங்களுக்கு அந்தக் கத தெரியும்.'

எல்லோரும் ஆம் என்பது போல தலையாட்டினார்கள். முன்னாள் நடந்த ஒரு வீரச்செயலில் பங்குபெறாதவர்களுக்கு அதுபற்றி சுருக்கமாக சொல்லப்பட்டது.

'நல்லது. அந்த டைரியில ஒரு குறிப்பு இருக்கு. மாவீரர் அசோகரின் சபையில் இருந்த சூரசென் என்பவர் எழுதிய ஒரு ஆவணத்தின் மொழிபெயர்ப்பு அது. அதிலிருந்து முதல் பத்தியை நான் வாசிக்கிறேன்:

'சூரசென்னாகிய நான், இங்கே என் கண்டுபிடிப்பை, தேவனாம்பிய பியதசி என்ற நமது அன்புக்குரிய சக்கரவர்த்தி மாவீரர் அசோகர் என்பவரால் உருவாக்கப்பட்ட, கீர்த்திவாய்ந்த 'ஒன்பது அறியப்படாத மனிதர்கள்' என்ற சகோதரத்துவ அமைப்பின் ரகசிய நூலகத்தில் ஒரு பகுதியாக வைக்கிறேன். அது என்ன கண்டுபிடிப்பு என்று நான் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் எதிரியின் கையில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக, நான் கண்டுபிடித்ததை ஆவணப்படுத்துவதை சக்கரவர்த்தி தடைசெய்துவிட்டார். ஒன்பது என்ற சகோதரத்துவ அமைப்பு நிறுவப்பட்டதற்கான காரணம் இதுதான்.'

அவன் நோட்புத்தகத்தை மூடிவிட்டு மற்றவர்களைப் பார்த்தான். 'எந்த 'எதிரி'யிடமிருந்து அசோகர் அந்தக் கண்டுபிடிப்பை மறைக்க முயன்றாரோ, அந்த எதிரிதான் அந்த அமைப்பு. இரண்டாயிரம் வருசங்களுக்கு மேலாகவே அவர் அதில ஜெயிச்சிட்டார். அந்த அமைப்பு ஆட்கள் யாருன்னு தெரியணும்னா, நாம புராணத்த தோண்டிப் பாக்கணும். அவங்களோட தோற்றகாலம் இந்தியாவிலதான். அது ரொம்ப தெளிவா இருக்கு. அப்போதிருந்து அவங்க ஒரு உலக அமைப்பாக வளர்ந்திட்டானுக.'

'நீ இப்ப சூரசென்னோட கதையைச் சொன்னப்போ, பிளேக்கை நான் முதல்முதலா சந்திச்சபோது அவரு எனக்குப் போட்டுக்காட்டின ஃபோன்மூலமா ஒட்டுகேட்ட ரெக்கார்டிங் ஞாபகம் வருது. பதிவுசெய்யப்பட்ட அந்த உரையாடல்ல மர்ஃபிங்றவரு இந்தியாவில இருந்த அமைப்போட உறுப்பினர்கிட்ட போய்ச்சொல்வாருன்னு ஒரு வரி வந்திச்சி,' என்று இம்ரான் நினைவுகூர்ந்தார். 'கண்ணுக்குத்

தெரியாத ஓர் அரக்கனை சமாளிக்கிறோம். அமைப்போட இருப்பு உலகத்தில உள்ள எந்த உளவுத்துறைக்கும் தெரியாது. ஆனால் அதுகிட்ட நிறைய வசதிகளும் இருக்கு; நாம பார்த்தோமே அந்த அளவுக்கு ஆற்றலும் இருக்கு.'

'இப்ப அவங்க நம்மள விடப்போறதில்ல,' என்று சுக்லா சோகமாகச் சொன்னார். 'நாம யாருன்னு அவங்களுக்குத் தெரிஞ்சுபோச்சி. எங்க இருக்கோம்; என்ன செய்றோம்றதும் அவங்களுக்குத் தெரியும். அவங்க நம்மள தேடிக்கிட்டு வருவாங்க. அவங்க நம்மகிட்ட எக்ஸ்போஸ் ஆயிட்டாங்க. அந்த தவறைச் சரிபண்ண முயற்சிப்பாங்க. நாம பாதுகாப்பாக இல்ல.'

'உண்மைதான்,' என்று பேட்டர்சன் உடன்பட்டார். 'ஆனா அவங்களுக்கு பணிப்படைக் குழுவ பத்தி தெரியாது. நம்மகிட்டயும் எல்லா வசதிகளும் திறமையும் இருக்குங்றத மறந்திடாதீங்க. நாம சண்டையில தோத்திருக்கலாம்; ஆனால் யுத்தம் இப்பதான் ஆரம்பிச்சிருக்கு. இந்த தடவை நாம சரியா தயார்நிலையில இருக்கல. இப்ப நமக்கு கொஞ்சம் தெரியும் அவங்கள பத்தி. அதனால நாம நம்மளை இன்னும் சிறப்பா தயார்படுத்திக்க முடியும்.'

அவர் விஜயைப் பார்த்தார். 'அவங்களோட முழுத் திட்டமும் வேலையும் ஒரு மகாபாரதத்தோட தொன்மத்திலிருந்து உந்தப்பட்டு வந்ததுன்னு நீ சொன்னீல்ல?'

விஜய் ஆம் என்பது போல தலையசைத்தான்.

'அதப் பத்திச் சொல்லு.'

விஜய் ஒரு கணம் யோசித்தான். எங்கிருந்து ஆரம்பிப்பது? 'தொன்மத்த விவரிக்கிற மகாபாரத சுலோகங்களுக்குள் போக விரும்பலை,' என்று அவன் ஆரம்பித்தான். 'ஆனா வான் குளூக் சில சுலோகங்கள எனக்காக மொழிபெயர்த்துச் சொன்னான். தொன்மத்துக்குப் பேரு சமுத்திரமந்தன்,' என்று சொல்லிவிட்டு அவன் சுக்லாவை ஏறிட்டான். 'அந்தத் தொன்மம் எதப்பத்தின்னு விளக்கிறதுக்கு நீங்கதான் சரியான ஆளுன்னு நான் நினைக்கிறேன்.'

சுக்லா தயங்கினார்; பின்பு சரியென்பது போல தலையசைத்தார். 'நம்ம பக்கத்தில இருக்கிற எல்லோருக்கும் அந்தத் தொன்மம் தெரியும். ஆனா அதை நம்ம அமெரிக்க நண்பர்களுக்காக சுருக்கமா சொல்றேன். மகாபாரதக் கதப்படி, தேவர்களும், அதாவது கடவுள்களும், அசுரர்களும் அல்லது தானவர்களும் அதாவது அரக்கர்களும் ஒன்றாய் சேர்ந்து

பாற்கடலைக் கடைஞ்சாங்க, அமிர்தத்திற்காக; அந்த அமிர்தத்தைக் குடிக்கிறவர்களுக்கு அமரத்துவம் கிடைக்கும். அவங்க வாசுகிங்ற பாம்பை கடைசல் கயிறாகவும், மந்தார மலையை மத்தாகவும் அதாவது கடைசல் கம்பாகவும் பயன்படுத்தினாங்க. கடைசியில பல வருசம் கடைஞ்சதுக்கப்புறம், பாற்கடலிலிருந்து மத்தபொருள்களோட சேர்ந்து அமிர்தம் வந்திச்சி.'

காலிபோஸ் முறைத்தார். 'நா இந்தக் கதையைக் கேட்டிருக்கேன்,' என்றார் அவர். 'இந்தக் கதைக்கும், நீங்க சொன்ன பாக்டீரியா, வைரஸுக்கும் என்ன சம்பந்தம்?'

'வான் குளூக் சொன்ன மொழிபெயர்ப்பு பிரகாரம்,' என்று விஜய் பதில் சொல்ல ஆரம்பித்தான். 'வழக்கமா கொடுக்கப்படுற விளக்கத்தவிட, அந்த சுலோகங்கள் வித்தியாசமான ஒரு கதையைச் சொல்லுது. ஆயிரக்கணக்கான வருசங்களுக்கு முன்னாடி, அமரத்துவம் தர்ற ஒரு திரவத்தை தேடிப் போயிருக்கிறாங்க. ஹிந்து குஷில் இருக்கிற குகையில பூமிக்கடியில ஒரு ஏரி இருக்குது. அதிலதான் நாம ஆரியன் பரிசோதனைக்கூடத்தில் கண்டுபிடிச்ச பாக்டீரியா இருக்கு அந்த பாக்டீரியம் ஒரு எக்ஸ்டீரிமோஃபைல்; அதாவது எந்த புவியியல் அமைப்பிலும் எந்த தட்பவெப்பச் சூழ்நிலையிலும் உயிர்வாழும் திறன்பெற்ற ஓர் உயிரி. உப்புநீரிலும் வாழக்கூடியது. இந்த உலகத்திலுள்ள கடல்களைவிட அந்த ஏரியில் உப்பு அதிகம். ஏரியில் வாழ்ந்த பாக்டீரியா கூட்டம் நீர்நிலைக்கு ஒரு வெள்ளிநிறமான வெள்ளை நிறத்த கொடுத்திச்சி. ஏரி பால்போல தெரிஞ்சது. அதனாலத்தான் மஹாபாரதத் தொன்மத்தில பாற்கடல்னு சொல்லப்பட்டிச்சி.'

'உப்புநீரில் வாழும் ஒற்றைசெல் உயிரிகள் போல,' என்று ராய்சன் முணுமுணுத்தார். பேட்டர்சன் முறைப்பதைப் பார்த்துவிட்டு அவர் வேகமாக சொன்னார்: 'சாக்கடலில் *(Dead Sea)* இருக்கும் சிகப்பு பாசிபோல *(red algae)*'

'இந்தப் பாக்டீரியா தங்களோட இயல்பான நிலையில மனுசங்களுக்கு ஆபத்து தர்ற நச்சுப்பொருட்களை உருவாக்குது,' என்று விஜய் தொடர்ந்தான். 'ஆனா, யாரோ ஒருத்தர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக பாக்டீரியாக்களுக்கு தொற்றை உருவாக்கும் ரெட்ரோவரைஸை கண்டுபிடிச்சது மாதிரி தெரியது.'

'பாக்டீரியோஃபேஜ்' என்றார் ராய்சன் விளக்கமுகாந்திரமாக.

(பாக்டீரியோஃபேஜ் - *bacteriophage;* பாக்டீரியாவைத் தாக்கும் வைரஸ் கூட்டம் - மொழிபெயர்ப்பாளர்)

'சரியா சொன்னீங்க. நன்றி. எனக்கு அந்த வார்த்தை மறந்துபோச்சு. இந்த ரெட்ரோவைரஸைப் பத்தி சுவாரஸ்யமான விசயம் என்னன்னா, எக்ஸ்டீரிமோஃபைல் பாக்டீரியாவை அது தொற்றுக்கு ஆளாக்கிய உடனே, பாக்டீரியாவோட டிஎன்ஏ-வையும் அவை உண்டாக்கும் புரோட்டீன்களையும் மாத்திடும். நச்சுப்பொருட்களை அகற்றிவிட்டு, மனுசங்களுக்கு நன்மைதரும் புரோட்டீன்களை வச்சிடும். இருந்தாலும், சில வைரஸ்கள் உப்புநீரில் உயிர்பிழைக்க முடியாது. பாக்டீரியா உப்புநீர்க்கு வெளியே உயிர்பிழைக்காது. அதனால சில மூலிகைகளையும், செடிகளையும், பொடியாக அரைக்கப் பட்ட ஆபரணங்களையும் பிரயோகித்து தொற்றை உருவாக்கணும். இது எப்படி வைரஸ் மீதான உப்பின் விளைவை சரிபண்ணும்னு தெரியல. இதுதான் மகாபாரதத்தில சொல்லப்படுற மந்தன். அது கடலைக் கடைவதைப் பற்றிய குறிப்பு இல்ல. அது எல்லா உள்ளடக்கப் பொருட்களையும் கலந்திடச் செய்வது பத்திய வர்ணனை. தொற்று உருவாக்குதல் முடிந்தவுடன், அம்ருதா அருந்தப்படுவதற்கு தயாராகிறது.'

'அமைப்பு, குகையில இருந்து பாம்புகள மாதிரிகளா எடுத்திட்டு போச்சின்னு சொன்னீயே,' என்று பேட்டர்சன் குறிப்பிட்டார். 'வைரஸ் பாம்புகளையும் தொற்றுக்கு ஆளாக்குதுன்னு அவங்க நம்புறாங்கன்னு நினைக்கிறேன்.'

விஜய் தோள்குலுக்கினான். 'எனக்கு தெரியல. அவங்க எதுவும் அதுசம்பந்தமா எனக்குச் சொல்லலை. ஆனால் இதைத்தான் நான் அப்போதும் நினைச்சேன். ஆனாலும் எனக்குப் புரியல. மனுசங்களைத் தாக்கும் வைரஸை எப்படி பாம்புக்குள்ள இருக்கும்?'

'சாத்தியம்தான்,' என்று மற்றவர்கள் கருத்துச் சொல்வதற்கு முன்பே ராய்சன் சொன்னார். 'முழுமையா ஒதுக்க முடியாத விசயம்தான் இது. சில வருசங்களுக்கு முன்னால, சான் ஃபிரான்ஸிஸ்கோவில இருக்கிற கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில ஒரு ஆய்வில எரினாவைரஸ் *(Arenavirus)* குடும்பத்தைச் சேர்ந்த வைரஸைக் கண்டுபிடிச்சாங்க. அந்தவகை வைரஸ்கள் பாலூட்டிகளை, வழக்கமா எலிகளை, தொற்றுக்கு ஆளாக்குகின்றன. இந்தவகை வைரஸ் பாம்புகளிடமிருந்து மனிதர்களுக்குக் கடந்து செல்லும்ங்றதுக்கு எந்த சான்றுமில்லை. ஆனால் இந்த வரைஸ் குரூப்பிலுள்ள ஒரு ஜீன் (மரபணுக்கூறு),

மனுசங்களுக்குத் தொற்று உண்டாக்கும் ரத்தஒழுக்கு வைரஸான எபோலாவைக் கொண்ட வைரஸ் குடும்பம் மாதிரியே இருக்கு. இந்தக் கண்டுபிடிப்பு இதுவரை இல்லாதாது. பாம்புகளையும் மனுசங்களையும் தாக்குற மத்த வைரஸ்கள் இல்லைன்னு யாருக்குத் தெரியும்? அதனால உயிரோடு இருக்கும் ஐந்துக்கள்ல இருக்கிற வைரஸைப் பாதுகாத்து வச்சிருக்கிறது நல்ல வழிதான்.'

'செடிகள் பாட்டுல சொல்ற செடிகள்தானா?' என்று இம்ரான் கேட்டார்.

ஆம் என்பது போல விஜய் தலையசைத்தான். 'நாங்க கஜக்ஸ்தானுக்குப் போனபோது, பாட்டுல சொன்ன தாவரங்கள தன்னோட குழு கண்டுபிடிச்சதாக வான் குளூக் சொன்னான். அதோட சில பெயர்கள் ஞாபகம் இருக்கு. இந்த சந்திப்புக்காக கோட்டையை விட்டு வர்றதுக்கு முன்னாடி நான் அந்தப் பெயர்களைப் பத்தி கொஞ்சம் விசாரிச்சிட்டு வந்தேன். ஊதாப் பழம் கொண்ட செடியோட பேரு,' என்று அவன் தன் நோட்புக்கை மீண்டும் சரிபார்த்தான். 'பிராங்கோ பபுலேரியா லிண்ட்ல். அது லத்தீன் பேரு. உஸ்பெகிஸ்தானில்ல இருக்கிற சில பகுதிகள்ல அது ஓர் உள்ளூர் பெயர். அதனால அதுக்கு ஆங்கிலப் பேரு கிடையாது. கருநீலப் பழம் கொண்ட இன்னொரு செடிக்குப் பெயர் புரூனஸ் சோக்டியன வாஸிலெஸ். ஆங்கிலத்தில அதுக்குப் பேரு சோக்டியன பழவகை. செடியோட பழைய கிளைகள் கருஞ்சாம்பல் நிறத்திலும், புது கிளைகள் பழுப்புப் பச்சை நிறத்திலும் இருக்கு. பூக்கள் வெள்ளை அல்லது கருநீல அடிப்படை கொண்டது. அதனால்தான் இந்த வரி வருது: "சாம்பல்நிறத்தில், வெள்ளை, பச்சை அல்லது பழுப்பு நிறங்களில் மறைக்கப் பட்டது." இதுவும் உஸ்பெகிஸ்தான், கிர்ஜிஸ்தான் நாடுகள்ல சில பகுதிகள்ல காணக் கிடைக்குது. இணையத்தில நான் தேடும்போது, இரண்டு செடிகளுமே உஸ்பெகிஸ்தான்ல் ரெண்டு பகுதிகள்ல மட்டும் ஒன்றாகவே இருக்கு: அந்த ரெண்டு பகுதிகள் இதுதான்: டாஷ்கெண்ட் மற்றும் சுர்கோண்டார்யோ. நீங்கள் இதை நம்பலாம்; நம்பமால் இருக்கலாம்; சுர்கோண்டார்யோ கிட்டத்தட்ட சோக்டியன் பாறை இருந்த இடமாக இருந்திருக்க வேண்டும். அந்தப் பாறையே இதுவரை கண்டுபிடிக்கப் படாததுதான். ஆனால் அலெக்சாண்டரோட பாதை அந்தப் பகுதிவழியாகத்தான் போச்சு. அப்புறம்தான் அது தெற்குநோக்கி போனது.'

'அப்புறம் இந்தத் திரவம் அமரத்துவம் தந்திச்சா?' என்று ராய்சன் கேட்டார்.

'தொன்மத்தின் பிரகாரம், ஆமாம்.'

'அம்ருதா பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா?' என்று ராய்சன் கேட்டார். 'விஞ்ஞானக் கோணத்திலதான். அந்தத் தேடல் அசலான பாக்டீரியாவையும் ரெட்ரோவைரஸையும் கண்டுபிடிக்கிற முயற்சின்னு நீங்க சொன்னீங்க. தொற்றை உருவாக்கும் அந்த வைரஸ்களைத்தான் மருத்துவப் பரிசோதனைப் பண்ணப்பட்ட ஆட்களிடம் நாம பார்த்தோம். ஆனால் அந்த அம்ருதா திரவத்தைக் குடிச்சவுடனே சரியா என்ன நடக்கும்ங்றத பத்தி நான் தெரிஞ்சிக்க ஆசைப்படுறேன். அவர்கள் உங்ககிட்ட ஏதாவது சொன்னாங்களா?'

ஆம் என்பது போல விஜய் தலையசைத்தான். 'விஞ்ஞான வார்த்தைகள்லாம் எனக்கு ஞாபகம் இல்ல,' என்று அவன் ஒத்துக்கொண்டான். 'ஆனா, எனக்கு ஞாபகம் இருக்கிறத என்னால சொல்லமுடியும். ரெட்ரோவைரஸ் மனுச உடம்புக்குள்ள புகுந்து அதில வசதியா உட்கார்ந்துக்கிட்டு தன்னைப் பெருக்கிக்கறதுக்காக, மனுச மரபணுக்கூறுத் தொகுப்புக்குள்ள தன்னோட டிஎன்ஏ-வை செலுத்துது. அப்படிச் செய்யும்போது, சில மரபணுக்களை உயிர்பெறச் செய்து புரோட்டீன்கள உருவாக்குது. அந்தப் புரோட்டீன்கள்தான் முதுமையையும், முதுமை நோய்களையும் தடுக்குது.'

'சுவாரஸ்யமா இருக்கு,' காலிபோஸ் குறிப்பிட்டார். 'மரபணுவியல் அல்லது புரோட்டீன்கள் பத்தின விவரங்கள் ஏதாவது ஞாபகம் இருக்கா?'

ஞாபகப்படுத்திக்கொள்ள விஜய் வெறித்துப் பார்த்தான். 'பாக்கலாம். வான் குளூக் சொன்னான்; முதுமைக்குப் பல காரணங்கள் இருக்குன்னு. உதாரணமா, டெலோமியர்கள் (*telomere*: மரபணுக்கூறுகளின் இழைகளின் இறுதியில் ஷூலேஸ் மாதிரி இருக்கும் மூடி. மனிதனுக்கு வயது ஏற ஏற அதன் நீளம் குறைந்து, முதுமை வருகிறது.) சுருங்கிப் போனால் செல்களின் இழப்பு நிகழ்கிறது; தசைகள் சுருங்கும். அவன் சொன்னான், குரோமோ சோம்களின் முனைகள்ல டெலோமியர்கள் இருக்குதுன்னு.'

காலிபோஸ் நேரடியாகத்தலையிட்டார். 'குரோமோசோம் என்பது அசுரத்தனமாக சுருண்டுகிடக்கும் டிஎன்ஏ அணுக்கூறு. ஒவ்வொரு குரோமோசோமின் இறுதிப்பகுதியிலும் திரும்பத்திரும்ப ஒரு வரிசை இருக்கும். மரபணுவியல் கோணத்தில அதுக்கு அர்த்தம் கிடையாது. அதுதான் டெலோமியர். ஷீ லேஸில கடைசியில இருக்கிற குட்டித்தகடு அதைத் தேய்ஞ்சுபோகாம பாத்துக்கிறமாதிரி டெலோமியர் இருக்கு.

ஒவ்வொரு தடவையும் ஒரு குரோமோசோம் நகலெடுக்கப்படும்போது, கொஞ்சம் டெலிமியர் விடுபட்டுப் போகும். நிறைய நகலெடுக்கப்பட்ட பிறகு, டெலோமியர் சுருங்கிப்போகும். அதனால மேற்கொண்டு நகலுருவாக்கம் ஆரம்பமாகும்; அப்போது உருப்படியான மரபணுக்கூறுகளை அது விட்டுவிடும். அப்போதுதான் செல் பகுக்கப்படுவது நின்றுவிடும். முதுமை வருவதும், செல் இழப்பு நிகழ்வதும் போக, பகுக்கப்படுவதை நிறுத்தும் செல்கள் சாவதில்லை; ஆனால் ஆரோக்கியமான செல்கள்மீது அவை தீய விளைவுகள ஏற்படுத்தும்.'

'ஆமாம்,' என்று விஜய் உடன்பட்டான். 'ஒரு மரபணுக்கூறு உயிரூட்டப் படுது. அது, சுருங்கிப்போகும் டெலோமியர்களை சரிசெய்யும் டெலோமிரஸை உற்பத்தி செய்யது. *(telomerase*: டெலோமியர்களை ரிப்பேர் செய்யும் ஒரு என்ஷைம்; அதாவது ஒரு நொதிப்பொருள்). அதனால செல்கள் பெருகிக்கொண்டே வர, செல் இழப்பு தடுக்கப்பட்டு முதுமையும் தடுக்கப்படுது.'

காலிப்போஸ் தலையசைத்தார். 'சுவாரஸ்யமா இருக்கு. ஆனால் டெலோமிரஸை உற்பத்திச் செய்யும்போது, ஏகப்பட்ட செல்கள் பகுக்கப்படும்; நகலெடுக்கப்படும்; அப்ப ஒரு கட்டி உருவாகுது. அல்லது இன்னொரு பெயர் சொன்னா, அது கேன்சர்; புற்றுநோய். அது எப்படி தவிர்க்கப்படும்?'

'அது ஒரு சுவாரஸ்யமான பகுதி. வைரஸும் ஒரு புரோட்டீனை உற்பத்தி செய்றதில பெரிய தாக்கத்த ஏற்படுத்தும். அந்த புரோட்டீன் செல்களைத் தற்கொலை செய்ய வைக்கும்; முதுமை அடையவைக்கும் தீய செல்களைக் குறிவைத்து தாக்கும். உடம்புக்குள் ஏற்படுற புற்றுநோய் வளர்ச்சியை அது தீர்த்துவிடும்.'

காலிபோஸ் விசிலடித்தார். *'p*53 மாதிரி தெரியது. *(TP*53 - *Tumour Protein* 53 என்பதின் இன்னொரு வடிவம் *p*53; புற்றுநோய்க்கட்டிகளை வளரவிடாமல் தடுக்கும் ஒருவகையான புரோட்டீன்). அது ஒரு புரோட்டீன்; செல் சுழற்சியை நிறுத்தவும், செல் சாகவும் அல்லது செல்லே தன்னைத்தானே கொல்லும்படியான சமிக்ஞையை அனுப்பவும் அந்தப் புரோட்டீன் வழிசெய்யது. மரபணுக்கூறுகள் பாதிக்கப்பட்ட செல்களை, அதாவது புற்றுநோய்ச் செல்களை புரொட்டீன் தாக்கி செல்களின் மரணத்தை *(apoptosis)* உருவாக்குது. அதனால, வைரஸ் கட்டுப்பாடில்லாத செல்களைக் கட்டுபடுத்துது. ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு.'

'அவன் இன்னும் சில ஜீன்களை (மரபணுக்கூறுகளை) சொன்னான். அவையும் புரோட்டீன்கள உற்பத்தி செஞ்சி, புரோட்டீன்கள் மூலமா இதய நோய்கள, சக்கரை நோயை, அதிரத்தக்கொதிப்பை, ஏன் அல்ஷைமர் நோயைக் கூட தடுக்குது. இந்த ஜீன்கள் உடல்ல இருக்கிற சதைக்கூட்டத்தோட இயக்கத்த அதிகரிக்குது; அல்லது நிறைய தசைகளை மறுவடிவம் எடுக்கச்செஞ்சி அவற்றை அதிகமாக்குது. எல்லாமும் ரெட்ரோவைரஸால் துடிப்பாக இருக்கு. ஆனால் அந்த ஜீன்கள் எல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. வைரஸ் எப்படி வேலை செய்யதுன்னு பாக்கத்தான் அவங்க மருத்துவ பரிசோதனைகள் நடத்தினதாக வான் குளூக் சொன்னான். அதனாலதான் அவங்களுக்கு அந்த அசலான வைரஸ் தேவைப்பட்டிச்சி. பாக்டீரியாவுக்குள்ள போய் தொற்று ஏற்படுத்தும் வைரஸ் *(prophage or bacteriophage)* அதேமாதிரி வேலை செய்யாது. ஆனால் பரிசோதனை விளைவுகள பத்தி அவன் நம்பிக்கையோட இருந்தான்.'

'அற்புதம் மூலமா குணப்படுத்துதல் மாதிரி தெரியது,' என்று காலின் குறிப்பிட்டான்.,

'அப்படித்தான் இருக்கு, என்று ராய்சன் அழுத்தமாகச் சொன்னார். 'அதனால அவங்க இந்த.... இந்த கலவையைப் பிடிக்க விரும்பினாங்க.' தான் கேட்டதை இன்னும் நம்பமுடியாமல் அவர் தலையாட்டினார்.

'இதச் சொல்றதுக்கு நீங்க என்ன மன்னிக்கணும்,' என்று காலின் சொன்னான். 'இந்த அறையில் பெரியபெரிய விஞ்ஞானிகள்லாம் இருக்கிறீங்க. இந்த விசயத்த பத்தி தீர்மானமா கருத்து சொல்ற அளவுக்கு எங்கிட்ட பெரிசா அறிவெல்லாம் கிடையாது. ஆனால் நேர்மையா சொல்லணும்னா, இதெல்லாம் ரொம்ப கட்டுக்கத மாதிரி தெரியது. ஒரு அதிசய வைரஸ், வயசாறத தடுக்கிற புரோட்டீன்கள உருவாக்கி, பாக்டீரியாவோட இயல்ப மாத்தி, புற்றுநோய் செல்களைத் தாக்குதுன்னு சொல்றது எல்லாம் நம்புறதுக்கு கொஞ்சம் கஷ்டமா இருக்கு. ஒரு விஞ்ஞானப் புனைவுக்கத மாதிரி இருக்கு.'

'உண்மையிலே அப்படியில்ல,' என்று ஓர் ஆதரவான கருத்து சாத்தியமில்லாத இடத்திலிருந்து வந்தது. பேட்டர்சன் களத்தில் குதித்தார். 'மனுசனோட மரபணுவைப் பத்தியும், வைரஸ்கள பத்தியும் நாம இன்னும் கண்டுபிடிக்காத விஷயங்கள் நிறையவே இருக்கு. ஒவ்வொரு நாளும் புதுப்புது கண்டுபிடிப்புகள் நடந்துகிட்டுதான் இருக்கு. உதாரணத்துக்கு, அடினோ-அசோசியேட்டட் வைரஸ் டைப்-2 அல்லது *AAV2*-ஐ சொல்லலாம். அது மனிதர்களைத் தாக்கக்கூடியது.

ஆனால் நோயை உருவாக்குவதல்ல. எலிகள வச்சு பண்ணின ஆய்வுகள்ல, செல்லின் மரணத்திற்கு முக்கியமான காஸ்பேஸ் என்றழைக்கப்படும் புரோட்டீன்களுக்கு உயிர்கொடுத்து, *AAV2*ங்ற வைரஸ் மார்புப் புற்றுநோய் செல்கள 100 சதவீதம் அழிக்குதுன்னு சோதனைக்கூடத்தில நிரூபிச்சிருக்காங்க. *AAV2*ங்ற வைரஸால தாக்கப்பட்ட புற்றுநோய்ச் செல்கள், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகப்படுத்தும் *Ki*-67ங்ற புரோட்டீனை ஏராளமாக உற்பத்தி செய்யது. மேலும் அவை, *c-Myc*ங்ற புரோட்டீனையும் உற்பத்தி பண்ணுது. அந்தப் புரோட்டீன்தான் செல் வளர்ச்சிக்கும் செல் மரணத்திற்கும் உதவி செய்யுது.'

'மேலும்,' என்று ராய்சன் தொடர்ந்தார். 'மனுசனோட மரபணுத்தொகுதியில 8 சதவீதம் வைரஸ் மரபணுக்களாகவும், அவற்றின் மிச்சங்களாகவும் இருக்குது. ஆயிரக்கணக்கான வருசங்களுக்கு முன்பு ரெட்ரோவைரஸ்களால் தொற்றுக்கு ஆளான, பரிணாமம் அடைந்துகொண்டிருந்த ஆதிப்பாலூட்டிகளின் மிச்சங்கள் அவை. மனுசங்களுக்குள் வழக்கமா தூங்கிக்கிட்டிருக்கும் டிஎன்ஏயை எழுப்பித் தூண்டிவிடும் வைரஸ்கள் நமக்குத் தெரியும். உதாரணம் ஹெ.ஐ.வி வைரஸ். அந்த ரெட்ரோவைரஸ் புரோட்டீன்களை உற்பத்தி செய்யுது; அந்தப் புரோட்டீன்கள் டிஎன்ஏ-யோடு இணைக்கப்பட்டு நமக்கு உண்மையிலே தெரியாத மரபணுக்களைத் தட்டி எழுப்புது. மனித மரபணுத்தொகுதி இன்னும் ஒரு பெரிய மர்மமாகவே இருக்கிறது. அது வரைபடமாக்கப் பட்டிருக்கு. ஆனா அதனோட பெரிய பகுதிகள் என்ன பண்ணுதுன்னு கண்டுபிடிக்க நாம இன்னும் முயற்சிதான் பண்ணிக்கிட்டு இருக்கோம். நீண்டகாலமாகவே, மரபணுத்தொகுதியின் 90 சதவீதத்திற்கும் மேலான பகுதிக்கு வெறும் 'குப்பை டிஎன்ஏ'ன்னுதான் பெயர் வச்சிருந்தோம். ஏனென்றால் அதனோட புரோட்டீன்களுடைய அமினோ அமிலத்தன்மை எப்படிப்பட்டதுன்னு சொல்ற ஒரு சங்கேதக்குறியை அது உருவாக்கவில்லை. இன்னைக்கு அந்த அடையாளப் பெயரை தூக்கியெறிஞ்சாச்சி. புதுப்புது கண்டுபிடிப்புகள் வெளிச்சத்துக்கு வருது.'

இப்போது காலிபோஸ் வர்ணனையைத் தொடர்ந்தார். 'சரியா சொன்னீங்க. கிட்டத்தட்ட 70 சதவீத டிஎன்ஏ *(DNA - Deoxyribo Nucleic Acid)* நகலெடுக்கப்பட்டு ஆர்என்ஏ-குள் *(RNA - Ribo Nucleic Acid)* வைக்கப்படுகிறது என்று *ENCODE* திட்டத்தின் ஆராய்ச்சி சொல்லுது. *(ENCODE: Encyclopedia of DNA Elements*: அமெரிக்காவில் 2003-லிருந்து நடக்கும் மரபணு ஆராய்ச்சித்திட்டம்). இந்த எண்ணிக்கை முன்னால்

சொல்லப்பட்டதைவிட மிக அதிகம். லட்சக்கணக்கான மரபணுக்கள் இருக்க சாத்தியமுண்டு. நமக்குத் தெரியாது. ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடந்த ஆய்வுகள், *lincRNAs* என்ற ஒரு மரபணு வகையில் 83 சதவீதத்துக்கு மேலான கூறுகள் இடம்மாறக் கூடியவை என்று சொல்லுது. அந்தக் கூறுகளுக்குப் பேரு 'குதிக்கும் மரபணுக்கள்.' ஏன்னா மரபணுத்தொகுதிக்குள்ளேயே அவை இடம்விட்டு இடம் தாவக்கூடியவை. அந்தக் 'குதிக்கும் மரபணுக்கள்' உண்மையிலேயே ஆதிகாலத்து ரெட்ரோவைரஸ்களின் வாரிசுகள்; ரெட்ரோ வைரஸ்கள் மற்ற மரபணுக்களோடு பல தலைமுறைகள் தாண்டி வந்தவை. இந்தப் பலவகை ரெட்ரோ வைரஸ்களின் மிச்சங்கள், மரபணுக்களை அவ்வப்போது தூண்டிவிடும்; அமைதியாக்கிவிடும் என்று சொல்லப் படுகிறது. அதனால, ஒரு ரெட்ரோவைரஸ் மனுச உடம்புக்குள்ள புகுந்து நமக்குத் தெரியாத புது மரபணுக்களை தூண்டிவிடும்ங்ற கருத்து சாத்தியமில்லாத கருத்து இல்லை.'

'அலெக்ஸாண்டர் அமிர்தத்தைக் குடிச்சபின்னாடி ஏன் செத்துப்போனார்?' என்று காலின் விடாப்பிடியாகக் கேட்டான். 'அவர்க்கு இந்த அற்புதமருந்து கிடைச்சி அதை அவரு குடிச்சிருந்தாருன்னா, நீண்டகாலத்து கிடைச்சி உயிரோடு இருந்திருக்கலாமே.' அவன் நடுங்கினான். 'நல்ல வேளை அவர் நீண்டகாலம் இல்லை.'

'அதுக்குக் காரணம் நான் சொல்றேன்,' என்று விஜய் சொன்னான். 'அது காலிஸ்தெனிஸ்.'

'என்ன?' என்று காலிபோஸ் குழப்பமாகப் பார்த்தார்.

காலின் நமட்டாகச் சிரித்தான். 'ஒரு கிரேக்க சரித்திராசிரியன் அவன். அவனைத்தானே அலெக்ஸாண்டர் தூக்கில போட்டார்.' அவன் விஜயைப் பார்த்தான். 'என்ன பண்ணினார் காலிஸ்தெனிஸ்?'

விஜய் இல்லைன்பது போல தலையாட்டினான். 'அவன் என்ன செஞ்சானோ அதுவல்ல காரணம். என்ன செய்யலியோ அதுதான் காரணம். நாங்க அந்த 'மூன்று சகோதரர்கள்'கிட்ட போனப்போ, நாகமுத்திரை உடையாமல் இருந்ததைப் பார்த்தோம். பாறைக்குள்ளாற இருக்கிற அறை முத்திரையிட்டு மூடின காலத்திலிருந்து அது தொடப்படாமலே இருந்திருக்கிறது. காலிஸ்தெனிஸ் அந்த அறைக்குள்ள போனதே இல்லை. அவன் பாறைமேலே ஏறி முத்திரையை உடைச்சிருந்தாலும், குகைக்கதவு வரைக்கும்தான் அவன் போயிருந்திருக்க முடியும். தேவைப்பட்ட செடிகளயும், பழத்தையும்

அவன் எடுத்தான். ஆனால் அவனுக்கு வைரஸ் கிடைக்கவே இல்லை.'

காலின் விசிலடித்தான். 'அதனால அவன் அலெக்ஸாண்டரைச் சாகவிட திட்டம் போட்டான்? அதாவது, அந்தப் பாட்டுகள் ரொம்ப தெளிவாகவே இருக்கு. அதில சொல்லப்பட்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலைன்னா, ஒரு வாய்ப்பும் இல்லை. நமக்கு வைரஸைப் பத்தி இப்போ புரிஞ்சதை வச்சிப் பாக்கும்போது அது ஒண்னும் ஆச்சரியமில்ல.'

'உண்மையிலே அப்படி இல்ல,' என்று விஜய் பதில் சொன்னான். 'காலிஸ்தெனிஸ் திட்டம்போட்டான்னு நான் நினைக்கல. பாறைமேல ஏறி முத்திரையை உடைக்க வழியில்லேன்னு அவனுக்குப் புரிஞ்சிருக்கும்ன்னு நான் நினைக்கிறேன். அந்த முத்திரைக்குப் பின்னாடி இருக்கிற விஷயம் அவ்வளவு முக்கியமில்லைன்னு அவன் நினைச்சிருக்கலாம். அதப்பத்தி அலெக்ஸாண்டர்கிட்ட அவன் சொல்ல விரும்பாம இருந்திருக்கலாம். அந்த நேரத்தில சகிப்புத்தன்மை அற்றவராக அலெக்ஸாண்டர் இருந்தார்ங்றத வச்சிப் பாக்கும் போது, அது ஆச்சரியமில்ல.'

இதை ஒவ்வொருவரும் உள்வாங்கிய போது அங்கே கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. மகாபாரதத்தின் ஒரு தொன்மம் ஒரு மாவீரனைச் சாவுக்குக் கொண்டுபோயிருக்கிறது. முப்பத்து மூன்றாவது பிறந்தநாளுக்கு இன்னும் சில நாட்களே பாக்கியிருந்தபோது, அலெக்ஸாண்டர் சாகாமல் இருந்திருந்தால், இந்த உலகமே ஒரு வித்தியாசமான இடமாக இருந்திருக்கும்.

'டைட்டன் விஷயத்தில இப்போ என்ன நிலைமை?' என்று விஜய் கேட்டான். மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்ட நோயாளிகளை அடைத்து பூட்டியிருந்த எட்டு மறைக்கப்பட்ட தளங்களைக் கண்டுபிடித்தவுடன், இம்ரான் படுவேகமாக அத்தனைபேரையும் மருத்துவரீதியாக அங்கிருந்து ஜெய்பூருக்கு நகர்த்தினார். ஜெய்பூரில் இருந்தவாறே, பேட்டர்சன்னுக்கு அந்த நிகழ்வுபற்றி சுருக்கமாகச் சொல்லியிருந்தார்.

'நாங்க வாலஸ்கிட்ட பேசிட்டோம்,' என்று பேட்டர்சன் பதில்சொன்னார். எச்சரிக்கையோடு. 'மருத்துவ நிலையம்பற்றி கேள்விப்பட்டவுடன் அவர் அதிர்ந்துபோனார். அந்த இடம் டைட்டனுக்குச் சொந்தமில்லை என்பதையும் அவர் சரியாகச் சுட்டிக்காட்டினார். ஜெய்பூரில் இருந்த பரிசோதனைக் கூடமும் எந்த வழியிலும் டைட்டனோடு சம்பந்தப் பட்டதில்லை. கிட்வாய் அதனோட

உரிமையாளர்கள கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்திட்டு இருக்கார்.'

'அவங்க தப்பிச்சிட்டாங்க.' என்றார் இம்ரான், அந்த வர்ணனையைத் தான் எடுத்துக்கொண்டு. 'நாங்க எல்லா இடத்தையும் உஷார் படுத்தியிருக்கோம். ஆனா அவனுக தப்பிச்ச பாதையை ரகசியமாக்கிட்டானுங்க. இது திட்டமிட்டு நடத்தப்பட்ட ஆபரேஷன். மாட்டிக்கொள்ற மாதிரியான அவசர சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரியே திட்டம் போட்டு வச்சிருந்தானுங்க.'

'நீங்க வாலஸை நம்புறீங்களா?' என்று காலின் கேட்டான். 'அவன் பேரு நிறைய விநோதமான இடங்கள்ல வருது. நிறைய எதேச்சையான ஒரேமாதிரியான சந்தர்ப்பங்கள்; ஜீரணிக்கமுடியாத அளவுக்கு. இதப் பாருங்களேன். அவரு ஒலிம்பியாஸ் கல்லறை அகழ்வாராய்ச்சிக்கெல்லாம் காசு கொடுத்திருக்கார். அவரோட அறக்கட்டளை ஸ்டாவ்ரோஸையும் பீட்டரையும் வேலைக்கு வச்சிருக்கு. அவனுக மோசமானவங்க. அவரு டைட்டன் ஃபார்மசூட்டிக்கல்ஸோட சேர்மன். அவரு கம்பெனியோட சம்பந்தப்பட்ட ஒரு மருத்துவ மையம் நிழல்பரிசோதனைகள்ல ஈடுபட்டிருந்ததை நாம பார்த்தோம். அந்த மையம் வெளியாட்களுக்குச் சொந்தமானது என்றாலும், அதில ஏதோவொரு தொடர்பு இருக்கு!'

சில கணங்கள் அங்கே மௌனம் நிலவியது. பின்பு பேட்டர்சன் பேசினார். 'நீ சொன்ன உண்மைகள நான் மறுக்கல,' என்று அவர் ஆரம்பித்தார். 'ஆனா எதுக்குமே சாட்சி இல்ல. வாலஸ், டைட்டன் நிறுவனத்தின்

'நான்-எக்ஸியூட்டிவ் சேர்மன்'. அதுக்கு அர்த்தம், அன்றாடம் கம்பெனி எடுக்கும் முடிவுகள்ல அவரு கையெழுத்து போடுறதில்ல. மருத்துவ பரிசோதனைகள் நடத்துற வெளியாட்களோட போட்ட ஒப்பந்த முடிவுகள்ல கூட அவரு இல்ல. டில்லி மையம் அமைப்புக்கு வேலை பாத்ததுகூட அவருக்குத் தெரிஞ்சிருக்கக்கூடிய சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். ஜெய்பூர் மையத்தோடு டைட்டனுக்கு எந்த வழியிலும் சம்பந்தம் இல்ல. இந்த இரண்டு மையங்களுக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கலாம்; அந்த தொடர்பில் டைட்டனுக்கு ஒன்றுமே இல்லைன்னு சொல்றதுக்கு அவர்க்கு போதுமான காரணங்கள் இருக்கு.'

'அந்த அகழ்வாராய்ச்சி?' என்று காலின் விடாப்பிடியாக கேட்டான். அவனுக்கு ராதாமீது பிரியம் இருந்தது. அவளின் மரணத்திற்குக் காரணமான ஆளை அவன் தேடிக்கொண்டிருந்தான்.

பேட்டர்சன் தலையாட்டினார். 'மறுபடியும் எதிர்மறையான சிந்தனை. வாலஸின் அறக்கட்டளையை செய்மூர் பார்க்கர்ங்ற ஆள்தான் நடத்துறான். பார்க்கர்தான் எல்லா நியமனங்களையும் பாத்துக்குறான். வாலஸ் இல்ல. அவர் ஸ்டாவ்ராஸ் அல்லது கூப்பரைப் பத்தி கேள்விப்பட்டதில்ல. பார்க்கரோட பின்னணியைச் சோதிச்சு பாத்தாச்சி. ரொம்ப தெளிவா இருக்கு. கூப்பரின் பேப்பர்கள் எல்லாம் போலி. படுமோசமான மோசடி. கிட்டத்தட்ட சிஐஏ விசயம். இந்தப் பசங்க தொழில்முறையாளர்கள். நானும் உன்னமாதிரியே பார்க்கரைச் சந்தேகப்பட்டால், அவனுக எல்லாத்தயும் ஒரு நோக்கத்தோடே செய்திருக்கானுங்கங்றதுக்கு எந்த சாட்சியுமே இல்ல. அவங்க எல்லாம் பக்காவாக இருக்கானுக.'

'ஆனா நீங்க அவங்கள கண்காணிக்கப் போறீங்க, இல்லையா?' என்று காலின் இன்னும் பிடிவாதமாகவே கேட்டான்.

'நாம கவனமா அடியெடுத்து வைக்கணும்,' என்று பேட்டர்சன் பதில்சொன்னார். 'ஒரு பணிப்படைக்குழுவாக, நம்ம விஷயத்தை அழுத்திச் சொல்ற அளவுக்கு நாம இன்னும் நம்பகத்தன்மையை ஏற்படுத்தலை, முதல்முதலா நாம செயல்பட்ட போது, நாம தோத்துப்போயிட்டோம். பரவாயில்லை. நாம தோத்துட்டோம். நடந்ததை விவரிப்பதுக்கு நமக்கு வேற வழி தெரியல. என்ன காரணங்களாக இருந்தாலும் சரி, எந்தச் சூழ்நிலை காரணியாக இருந்தாலும் சரி, விளைவு விவாதத்திற்கு அப்பாற்பட்டது. நாம யாரையாவது குற்றம் சொன்னாலும் யார் நம்மளை நம்பப் போறாங்க? நாம கண்காணிக்க நினைக்கற ஆட்களை யாரு வேவுபாக்கப் போறாங்க?'

'நாம சும்மா இருந்திட்டு அவங்கள தப்பிக்க விடமுடியாது,' என்று காலின் எதிர்த்துப் பேசினான்.

'உன் பேச்சு வெறும் உணர்ச்சியா அல்லது நிஜங்களை அடிப்படையாக கொண்டதா?' என்று பேட்டர்சன் பதிலடி கொடுத்தார். 'நீ நினைக்கிற மாதிரிதான் நானும் நினைக்கிறேன். பணிப்படைக்குழு உறுப்பினர்கள்தான் எனக்கு முக்கியம். மத்தவங்க எக்கேடும் கெட்டுப்போகட்டும். ஆனால் நான் வெறும் உணர்ச்சிக்கு ஆளாக விரும்பலை. இந்தக் காலகட்டத்தில நாம யாரும் மேலேயும் குற்றம் சுமத்தக்கூடாதுன்னு கிடைச்ச உண்மைகள் நமக்குச் சொல்லுது. சரியான ஆதாரங்கள் மட்டும் கிடைச்சிதுன்னா, அவங்க ரத்தத்தை உறிஞ்சிற முதல் ஆளு நானாத்தான் இருப்பேன். ஆனா இப்ப இல்ல.'

மீண்டும் மௌனம் நிலவியது. திருப்பி அடித்த காலின் பேட்டர்சன்னின் வார்த்தைகளில் இருந்த நிஜத்தை ஏற்றுக்கொண்டான். கசப்பான நிஜம்தான். ஆனால் சரியானது. அவர் சொன்னதை எதிர்க்கக்கூடிய விவாதம் ஒன்றுமில்லை.

'அப்போ, சக்ஸேனா?' என்று விஜய் தெரிந்துகொள்ள விரும்பினான்.

'சாட்சியே இல்ல,' என்று பேட்டர்சன் பதில் சொன்னார். 'நாம சக்ஸேனாவை அந்த மையத்தோட சம்பந்தப்படுத்தமுடியாது. அவன் அங்கே இருந்தாங்றதுக்கு எந்த சாட்சிகளும் இல்ல.'

'அவன் சுதந்திரமா நடமாடப் போறானா?' என்று விஜய் நம்பிக்கை இழந்தவனாகக் கேட்டான். 'இம்ரானைக் கொலை செய்ய பாத்தாங்க; ராதாவைக் கொன்னுட்டாங்க. அதுக்கப்புறமும்,' என்று அவன் ராதாவின் பெயரைச் சொல்லும்போதே உணர்ச்சியில் மூச்சுத்திணறினான். 'அந்த ஆளு இதில எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கான்ங்றது தெளிவா தெரியலியா?'

'நாம அவனைக் கைது பண்ணமுடியாது,' என்றார் இம்ரான் மென்மையாக. 'நீயும் நானும் அவன சந்தேகப்படுறோம். ஆனால் ஆதாரமில்லாம நாம எதையும் செய்யமுடியாது. வேணும்னா நாம அவன கழுகுமாதிரி வேவுபாக்கலாம். எப்படியும் சீக்கிரமாகவோ அல்லது பின்னாடியோ தடுக்கி விழத்தான் போறான். அப்போ நாம அவனைப் பிடிச்சிரலாம்.'

'நாம சரியான முறையில்தான் செய்யணும்,' என்றார் பேட்டர்சன். 'நாம எதைச் செஞ்சாலும், யார்மீது குற்றம் சுமத்தினாலும், நீதிமன்றத்தில அது நிக்கணும்.'

விஜய் மௌனமாக, இருந்தான். உள்ளிருந்த கசப்புணர்ச்சி அவன் முகத்தில் வெளிப்பட்டது.

'சரி. அமெரிக்க அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் கொடுக்க வேண்டிய அறிக்கைகளுக்குத் தேவையானது எனக்கு கிடைச்சிடுச்சின்னு நினைக்கிறேன்,' என்று பேட்டர்சன் சுருக்கமாகச் சொன்னார். 'நம்ம பணிப்படைக் குழுவுக்கு இது ஒரு நல்ல ஆரம்பம் இல்ல. நம் எதிரி தப்பித்துவிட்டான். அவங்ககிட்ட வைரஸ் இருக்கு. செய்றதுக்கு நமக்கு வேலை இருக்கு. வைரஸைப் பிரிச்சு, வரிசைப்படுத்தி, அவங்க உருவாக்க நினைக்கிற திரவத்தை உண்டாக்க அவங்களுக்கு ரொம்ப நாள் ஆகாது. நாம அவங்களை நிறுத்தியாகணும்.

ஆனால் நாம தொடர்ந்து போறதுக்கு நம்ம கிட்ட பலமா ஒண்ணும் இல்ல. நாம வேலையைப் பார்ப்போம். என்ன தோண்டியெடுக்க முடியும்னு பார்ப்போம். ஏதோவொரு தடம் இருந்தாகணும். சரித்திரம், அமைப்பைக் கண்டுக்காம இருந்திருக்கலாம். ஆனால் முழுமையா ஒதுக்கியிருந்திருக்காது.'

ஆம் என்பது போல மற்றவர்கள் தலையசைத்தார்கள். இனி அவர்களுக்கு ஓய்வு இருக்காது. அவர்கள் அமைப்பைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதை நிறுத்த வேண்டும். காலதாமதம் ஏற்படுவதற்கு முன்னாலே.

பேட்டர்சன் தலையசைத்தார். எல்லோரும் கிளம்ப எழுந்தார்கள். அவர் விஜயைக் கூர்மையாகப் பார்த்து சொன்னார். 'இரு.'

எல்லோரும் அறையைவிட்டு வெளியேறியபின், விஜய் மட்டும் இருந்தான். பேட்டர்சனும் தனியாக இருந்தார். அவர் கீழே பார்த்துவிட்டு விஜயை மீண்டும் பார்த்தார்.

'உன் உணர்ச்சி எப்படி இருக்குதுன்னு எனக்குத் தெரியும்ங்ற மாதிரி என்னால பாவனை செய்ய முடியாது,' என்றார் அவர். 'ஆனா நான் உனக்கு உறுதியளிக்கிறேன். என்னால உன் உணர்ச்சியைப் புரிஞ்சிக்க முடியும். போர்க்களத்தில நான் என் உயிர்நண்பர்கள இழந்திருக்கேன். அவங்ககூட நான் வளர்ந்தேன்; வெளியே பல இடங்களுக்குப் போயிருக்கேன்; ஒண்ணாய் சேந்து பீர் அடிச்சிருக்கேன்...' அவர் தலையசைத்தார். 'போரை பத்தி நான் ஒரு விஷயம் கத்துக்கிட்டேன்னா, அது இதுதான். நம்பிக்கை வைக்காதே. போர் நம்பிக்கையை கொண்டுவராது. அது நம்பிக்கையை அழித்துவிடும். சமாதானம்தான் நம்பிக்கையைக் கொடுக்கும். அதை நோக்கித்தான் நாம வேலை செய்யணும். ராதாவைப் பத்தி நான் ரொம்ப வேதனைபடுறேன். நிஜமாகவே. ஆனால் நீ மேற்கொண்டு போயாகணும். அவளோட சாவுக்காக பழிவாங்கணும்ங்ற எண்ணங்கள் உனக்கிருக்குன்னு நான் நினைக்கிறேன். அது இயல்பானதுதான். ஆனால் நீ அந்த எண்ணங்கள அடக்கி வைக்கணும். நாம் அந்த அமைப்பைத் தோற்கடிக்க வேலை செய்யணும். இல்லைன்னா, எல்லாம் நாசமாக போயிடும். இது ஒரு யுத்தம், என் அருமை பையனே. இது ராதாவை பத்தின விசயமல்ல. உலகத்தின் எதிர்காலம் பத்தினது. அதனால் நிலையாய் நில்லு.'

விஜய் எழுந்து சற்றுநேரம் மௌனமாக நின்றான். 'புரிகிறது.' அவன் பேட்டர்சன்னின் கண்ணுக்குள் பார்த்தான். 'சக்ஸேனா, வான் குளூக், மற்றும் பலர்; நம்ம கிட்ட ஆதாரம் இல்லைங்றதுக்காக அவங்க

சுதந்திரமா நடக்க முடியாது. நம்மால ஆதாரத்த சேகரிக்க முடியாட்டா, நிறைய வேலைகள் நாம செஞ்சாகணும். அந்த அமைப்பை ஒழிக்கிறதுக்கு நான் வேலை செய்வேன். பழிவாங்கணும்ங்றதுக்காக மட்டுமில்ல. மத்தவங்களோட நேசத்துக்குரியவர்களையும் அவங்க கொன்னுடக் கூடாதுங்றதுக்காகவும்தான். பரிசோதனைக்கு ஆளான ஜனங்கள் மாதிரியான ஆட்களை. நாம அமைப்பை

நிறுத்தியாகணும். எப்படி செய்ய போறோம்ங்றது கடவுளுக்கு மட்டுந்தான் தெரியும். ஆனா நமக்கு ஒரு வழிகிடைக்கும்னு எனக்குத் தெரியும். என்ன விலையானலும் சரி.'

பேட்டர்சன் தலையசைத்தார். என்ன விலையானாலும் சரி.

பழிவாங்கும் எண்ணங்கள்

விஜய் மாநாட்டு அறையை விட்டு வெளியே வரும்போது, சுக்லா தன் வழியை மறித்து நின்றதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அந்த மொழியியலாளரின் கண்கள் பிரகாசமாக இருந்தன. புறக்கணிக்க முடியாத அளவுக்கு அவர் முகத்தில் ஒரு கடுமையான தீர்மானம் இருந்தது.

சுக்லாவை எதிர்கொண்டு விஜய் மௌனமாக நின்றான். வயதான அந்த மனிதர் தன்னிடம் அந்தரங்கமாகப் பேச விரும்புகிறார் என்று அவன் புரிந்துகொண்டான். மற்றவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். மிச்சமிருப்பது அவர்கள் இருவர் மட்டுந்தான்.

தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயன்றவர்போல அவர் சில கணங்கள் அமைதியாக நின்றார். பின் பேசினார்.

'நான் என் மகளோட பிணத்தைக்கூட பாக்கலை,' என்று ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாக உச்சரித்து பேசினார். 'ஒரு தகப்பனுக்கு தன்னோட மகள் எவ்வளவு விலைமதிக்க முடியாத ஜீவன்றது உனக்குத் தெரியுமா?' உணர்ச்சியில் பெருகும் கண்ணீரை அவர் அடக்க முயன்றதை விஜய் அவதானித்தான். பதிலுக்கு தன்னுள்ளும் ஒரு வினோதமான உணர்வு எழுவதை அவன் உணர்ந்தான். 'மகள்ங்றது ஒரு தகப்பனோட உயிர். அவளுக்கு வலிக்கும் போதெல்லாம் அவருக்கும் வலிக்கும். அவள் அழும்போதெல்லாம் அவருக்கும் வலிக்கும். தன்சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தாலும், தன்னோட மகள் விரும்புற மகிழ்ச்சியை அவர் அவளுக்குக் கொடுக்கவே விரும்புவான்.' அவர் நிறுத்தினார், மீண்டும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு. 'நான்

வாழ்ந்ததே அவளுக்காகத்தான். இப்போ.... இப்போ. அவள் போய்விட்டாள்!'

சுக்லாவின் சுயக்கட்டுப்பாடு தளர்ந்துபோக, அவர் கன்னங்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. உணர்ச்சிகளை இனியும் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தன் உணர்ச்சிகள் மனதிற்குள் புயலாக ஓங்கியடிக்க, விஜய் அமைதியாக நின்றான். தானும் இழந்துநிற்பதை சுக்லாவின் வார்த்தைகள் அவனுக்கு நினைவுப்படுத்தின. அவனை அவனுக்காக, அவன் குறைகளைமீறி காதலித்த சுயநலமற்ற ஒரு ஜீவன்.

அவன் சுக்லாவின் கைகளைப் பற்றிக்கொண்டு அவர் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான். 'நான் அவளைத் திரும்பிக் கொண்டுவருவேன்,' என்று அவன் சுக்லாவுக்கு உறுதியளித்தான். 'நான் அவளுக்கென்று ஒண்ணுமே செய்யலை. என்னால அவள காப்பாத்தமுடியல.' வார்த்தைகள் தடுமாறி விழுந்தன. தன் உணர்ச்சிகள்தான் அவற்றை எடுத்துக்கொடுத்தன என்று அவனுக்குத் தெரியும். ஆனால் இப்போது அவன் தன்னைக் கட்டுப்படுத்த விரும்பவில்லை. 'நீங்க அவள மறுபடியும் பார்ப்பீங்க; நான் வாக்கு கொடுக்கிறேன். நான் அவள திரும்பக் கொண்டுவருவேன். எப்படின்னு தெரியல. ஆனா நான் அவங்கள வேட்டையாடப் போறேன். அவளோட உடலை கண்டுபிடிப்பேன். அவங்கள பழிவாங்காம நான் விடமாட்டேன்.'

சில நிமிடங்களுக்கு முன்பு தான் பேட்டர்சன்னிடம் சொன்னதற்கு முற்றிலும் மாறாக இப்போது தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற பிரக்ஞை அவனுக்குள் இருந்தது. ஆனால் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. கவலைப்பட விரும்பவில்லை. மற்றவர்கள் தங்களின் பிரியத்துக்கு உரியவர்களை இழந்துவிட அனுமதிக்கக் கூடாது என்று பேசுவதெல்லாம் அருமையாகவும், பெருமையாகவும்தான் இருக்கிறது. ஆனால் அவன்? ராதா? இனி அவள் திரும்பிவரப் போவதில்லையே.

உணர்ச்சியில் உடைந்துபோன அந்த வயோதிகரை ஆரத்தழுவினான் விஜய்.

மாநாட்டு ஹாலின் பாதி இருட்டான முன்னறையில் அந்த இரண்டு மனிதர்களும் தங்களின் துக்கத்தைப் பகிர்ந்துகொண்டு நின்றார்கள். அந்தக் கணத்தில், அந்தக் கணநேரத்திற்கு, எண்ணங்களாலும்,

உணர்ச்சிகளாலும் அவர்கள் இருவரும் ஒருவராக இருந்தார்கள்.

பின்னுரை

நிம்மதியைக் குலைத்த அழைப்பு

கோட்டையில் படிப்பறையில் அமர்ந்து விஸ்கி அருந்திக்கொண்டிருந்தான் விஜய். தனிமையில் இருந்தான். காலின் இரவு அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டான். பணிப்படைக்குழு கூட்டம் முடிந்தவுடனே நேராக அவன் விமானநிலையம் சென்றுவிட்டான். அலைஸும் அவன் கூட போயிருக்கிறாள். இருவரும் ஒரே விமானத்தில் டிக்கெட் பதிவு செய்திருந்தார்கள். அமெரிக்காவில் அலைஸின் பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை பேட்டர்சன் பண்ணியிருந்தார். என்ன ஏற்பாடுகள் என்பதை அவரும் சொல்லவில்லை; யாரும் கேட்கவும் இல்லை. அப்படியிருந்தது நல்லதுதான்.

வாழ்க்கையில் முதன்முதலாக தனிமையை உணர்ந்தான் விஜய். அவன் பெற்றோர்கள் இறந்தவுடன் அவனது மாமா கூட இருந்தார். மாமா கொலை செய்யப்பட்டு இறந்தபின்பு, காலின் அவனருகே இருந்தான். பின்பு, ராதா வந்தாள்.

இப்போது யாருமே உடன் இல்லை. இந்த உலகத்தில் தனியாக வந்தோம்; தனியாகப் போகிறோம் என்பதுதான் நிஜம் என்று அவன் யோசித்தான். ஏதோவொரு காரணத்தினால், அவன் சிந்தனைகள் இருட்டாகவும் சோகமாகவும் மிதந்தன. மரணத்தைப் பற்றி யோசிக்காமல் இருக்க முடியவில்லை. மரணம் அவனுக்கு ஆச்சரியமானதாக தெரியவில்லை; அவனின் பிரியத்துக்குரியவர்களை எத்தனை தடவை வந்து அள்ளிக்கொண்டு போனது மரணம்.

மேஜையின் மீது கண்ணாடி தம்ளரை வைத்தான். சிந்தனைகள் தன்னில் பிரவாகித்து தன்னை மூடிவிடக்கூடாது என்பதற்காக ஏதாவது ஒன்றில் கவனம் செலுத்தி மும்முரமாகிவிட வேண்டும் என்று நினைத்தான். ஐந்தாவது தளத்து அறையிலிருக்கும் பெட்டிகளிலிருந்து ஆவணங்களை எடுத்து படித்து நேரத்தைச் செலவிடுவது நல்லது. களைத்துப் போய் தூங்கப் போகும் அளவுக்கு படிக்கலாம்.

போன் மணிஒலி சிந்தனைகளுக்குள் அத்துமீறி ஒலித்தது. அவன் முறைத்தான். யாராக இருக்கும்? கைக்கடிகாரத்தைப் பார்த்தான். இரவு 11 மணி. சமூகரீதியான அழைப்புக்கு கொஞ்சம் அகாலமான நேரம்.

முன்பின் தெரியாத எண்ணாக இருந்தது. எடுத்துப் பேச தீர்மானித்தார். 'யாரு?'

'விஜய் சிங்கா?'

அவன் முறைத்தான். அது தவறான எண்ணல்ல ஆனால் குரல் பரிச்சயமானது அல்ல.

'ஆமாம்.'

'உனக்கு என்னைத் தெரியாது.' குரலில் தயக்கமிருந்தது. கொஞ்சம் நடுக்கமும் தெரிந்தது. பேசுபவன் முதலில் விஜயை அழைக்கவேண்டுமா என்பதில் நிச்சயமில்லாதவன் போல இருந்தது குரல். எச்சரிக்கையாகவும், சுயபாதுகாப்போடும் இருந்தது.

'யாரு இது?'

'நான் பிரதாப் சிங்கின் நண்பன்,' என்று பதில் வந்தது. 'ரொம்ப நெருங்கிய நண்பன்.'

விஜய் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய அப்பா பெயர்தான் பிரதாப் சிங். 'உங்க பேர் என்ன?'

'நான்... நாம சந்திக்கலாமா?'

'நீங்க யாருன்னு எனக்குத் தெரியணும்.'

'நாம சந்திச்சாகணும்.' பேசுபவன் இப்போது மிகவும் அழுத்தமாக இருந்தான். தயக்கம் போய்விட்டது. 'நான் உன்கிட்ட ஒண்னு சொல்லனும். சாகறதுக்கு முன்னால, உன் அப்பா என்கிட்ட ஒண்னு கொடுத்தாரு.' பேசுபவன் தன்னைத் திருத்திக்கொண்டு பேசினான். 'கார் விபத்துக்கு முன்னாடி.'

'என்ன அது ?'

'சொல்ல முடியாது. ஃபோன்ல வேண்டாம். நேரிலே சொல்றேன்.'

'நீங்க ஏன் 15 வருசம் காத்திருந்தீங்க என்னைத் தொடர்புகொள்றதுக்கு?'

'இதுவரை தேவை ஏற்பட்டதில்ல. இப்போது ஏற்பட்டிருக்கு.'

விஜய் ஆழமாய் யோசித்தான். அமானுஷ்யமான இந்த அழைப்பாளியை 15 வருசங்கள் கழித்து எது தூண்டியிருந்திருக்கும் விஜயைத் தொடர்புகொள்ள?

'நீங்க ஒரு மோசடி ஆள் இல்லைன்னு எனக்கு எப்படி தெரியும்? எங்க அப்பாவை உங்களுக்குத் தெரியும்னு சொல்றது வெறும் கதையா இருக்கலாம், இல்லியா?'

'உன் ஈமெயிலைப் பாரு.'

'அப்படியே நில்லுங்க.' விஜய் தன் மடிக்கணினியை இழுத்து அதைத் திறந்தான். மின்னஞ்சலைப் பார்த்தான். சில நிமிடங்களுக்கு முன்பு அனுப்பப்பட்டிருந்த மின்னஞ்சல் ஒன்று வந்திருந்தது. அவனுக்குப் பரிச்சயம் இல்லாத மின்னஞ்சல் முகவரியிலிருந்து. அதைத் திறந்து பார்த்தான்.

அப்படியே உறைந்தான். திரையில் தோன்றியதைப் பார்த்து அவனால் நம்ப முடியவில்லை. இப்போது புரிகிறது. அவனது தகப்பனாரின் காகிதங்களின் கோப்பு செய்தித்தாள் துண்டங்கள்; கட்டுரைகள். தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் பற்றிய ஆய்வு. அவன் அதிர்ச்சியடைந்தான். ஆனால் அவனுக்கு நிறைய தெரிய வேண்டியிருந்தது.

'இருக்கியா?' என்று அழைத்தவன் கேட்டார். கொஞ்சம் பதற்றத்துடன்.

விஜய் கனவுலகத்திலிருந்து நிஜத்திற்குத் தன்னை இழுத்துக் கொண்டான். 'இங்கதான் இருக்கேன்,' என்று பதில் சொன்னான். 'நாம எப்போ சந்திக்கலாம்?'

'இன்னையிலிருந்து ஆறுமாசம் கழிச்சி. குர்கான். சைபர் ஹப். ஸ்டார்பக்ஸ். ரெண்டு நாளக்கு முன்னாடி ஃபோன் பண்ணுவேன். அப்ப நேரம் சொல்றேன்.'

'விசயம் ரொம்ப அவசரமானதுன்னா, ஏன் அவ்வளவு நாள் காத்திருக்கணும்?' விஜய்க்குப் புரியவில்லை.

'தயார் செய்யறதுக்கு எனக்கு அவகாசம் வேணும்,' என்று ரத்தினச்சுருக்கமாக பதில் வந்தது.

அழைப்பு துண்டிக்கப்பட்டது. ஃபோனை வைத்துவிட்டு விஜய் யோசிக்க ஆரம்பித்தான். மனம் சுழன்றது. யாரிந்த அமானுஷ்யமான அழைப்பாளி ? சந்திப்பதற்கு அவனுக்கு ஓர் அவசரத்தேவை இருக்கிறது.

ஏன் ஆறுமாதம் காத்திருக்கவேண்டும்? அவனது விளக்கம் சரியானதாக இல்லை. என்ன தயார் செய்யப்போகிறான் அவன்? சந்திக்கும் போது அவன் விஜயிடம் எதைச் சொல்லப் போகிறான்? நிறைய கேள்விகள் எழுந்தன; விடைகள்தான் ஒன்றுமே இல்லை.

இன்றிலிருந்து ஆறுமாதம் கழித்து இந்தப் புதிர் விடுவிக்கப்படும்.

அவசியம் அவன் காத்திருக்க வேண்டும்.

(தொடரும்).....

ஆசிரியர் குறிப்புகள்

அன்பு வாசகர்களே,

இந்தப் புத்தகத்தை ஆர்வமுடன் வாசித்ததற்கு மிக்க நன்றி.

இந்தத் தொடரில் இது முதல் புத்தகம். எனது முந்தைய புதினமான, மகாபாரத ரகசியம் போலில்லாமல், இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்ட கதை இத்தோடு முடிவதில்லை; மேலும் அது தொடர்கிறது.

இப்போது நீங்கள் இதை வாசித்து முடித்து விட்டதால், எனக்கு நிச்சயமாகத் தெரியும், பதிலளிக்கப்படாத கேள்விகளும், சில விளக்கங்களுக்கான தேவையும் உங்களிடம் இருக்கும் என்று. நீங்கள் புரிந்துகொள்ளாத உண்மைகளும், சூழ்நிலைகளும், பாத்திரங்களும் கூட இந்தப் புதினத்தில் இருக்கலாம். அவை அப்படியே இருக்க வேண்டும் என்றுதான் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன; ஏனென்றால் இந்தப் புத்தகம் முடிந்தபின்பும் கூட கதை தொடர்கிறது. இந்தத் தொடர் மேற்கொண்டு நகர்ந்து கதையின் முடிவுக்குள் செல்லும்போது, உங்கள் கேள்விகளுக்குப் பதில்கள் கிடைத்துவிடும்; குழப்பங்களும் அல்லது சந்தேகங்களும் தீர்ந்துவிடும் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.

மர்ம உணர்வும் சந்தேகங்களும் உங்களுக்குள் ஒரு கிளுகிளுப்பான உணர்வை ஏற்படுத்தும் என்றும், கதை மொத்தத்தில் முடியும் போது உங்களுக்குத் தேவைப்படும் விடைகள் கிடைத்துவிடும் என்றும் நான் நம்புகிறேன். ஆகையால், உங்கள் கேள்விகளுக்கான விடைகள் கிடைப்பதற்காக, நீங்கள் பொறுமையுடன் அடுத்த புத்தகங்களுக்காக காத்திருக்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களின் காத்திருத்தல் தகுதியானதாக இருக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

இதற்கிடையில், இந்தப் புத்தகத்தில் விளக்கப்பட வேண்டிய பல்வேறு தரவுகளும் தகவல்களும் இருக்கின்றன. அவற்றை விளக்க நான் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

இதோ அந்த விளக்கங்கள்:

விஞ்ஞானக் கோப்புகளிலிருந்து

நிறைய விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன. அவற்றை முடிந்த அளவுக்கு நான் எளிமையாக்க முயன்றிருந்தாலும், நிறைய தொழில்நுட்ப வர்ணனைகளும், கலைச்சொற்களும் தவிர்க்கமுடியாமல் இடம்பெற்றிருக்கின்றன. கதையின் போக்கிற்கு இடைஞ்சல் தராத முறையில் விஞ்ஞான உணமைகளுக்கு நேரான விளக்கங்கள் கொடுக்கலாம் என்று நான் விரும்புகிறேன்.

PCR Testing: *Polymerase Chain Reaction* – பாலிமெரேஸ் சங்கிலித்தொடர் எதிர்வினை பரிசோதனை. டிஎன்ஏ-யின் சிறுவரிசையை ஆராயும் ஒரு முறை. டிஎன்ஏ அல்லது ஆஎன்ஏ-யின் பகுதிகளை அது பெரிதாக்குகிறது; மீளுருவாக்கம் அல்லது படியெடுத்தல் செய்கிறது. ஒரு *DNA* பாலிமெரேஸ் படியெடுக்கப் பயன்படுகிறது. இந்தப் பரிசோதனை நடக்கும்போது, உற்பத்தியாகும் டிஎன்ஏ-யே படியெடுக்க ஓர் அச்சுவார்ப்பாக பயன்படுகிறது. பல டிஎன்ஏ பிரதிகளை எடுப்பதற்கான ஒரு சங்கிலித்தொடர் எதிர்வினையை அது தூண்டிவிடுகிறது

Stingray: இது ஒரு புதிய தொழில்நுட்பம். கையில் எடுத்துச்செல்லக் கூடிய கருவி. வாகனங்களுக்குள், வீடுகளுக்குள், பாதுபாப்பு அரண்கொண்ட கட்டடங்களில் பயன்படுத்தப்படும் கைப்பேசிகளின் ஒலி சமிக்ஞைகளை வேவுபார்க்கும் திறன்கொண்டது. நிஜமான கைப்பேசிக் கோபுரங்களைப் போலியாக உருவாக்கி, கைப்பேசிக்குள் வருகின்ற உரையாடல்களையும் மின்னஞ்சல்களையும், கைப்பேசி பயன்படுத்தப்படும் களங்களைப் பற்றிய தகவல்களையும் ஸ்டிங்ரேயைப் பயன்படுத்துபவர்கள் திருடுகிறார்கள். குறிப்பிட்ட கைப்பேசியை யார் பயன்படுத்துகிறார், யாரோடு பேசுகிறார், எங்கிருந்து பேசுகிறார் போன்ற விவரங்களை இந்தக் கருவி பயனாளிகளுக்கு கொடுத்துவிடுகிறது.

Virus replication: (நச்சுநுண்ணுயிரி படியெடுத்தல்) எல்லா 'செல்'களும், அதாவது எல்லா உயிரணுக்களும் பகுப்பின் மூலமாக பிரதிஎடுக்கப்படுகின்றன. தங்களின் அணுக்கருவில் பதிந்துகிடக்கும் டிஎன்ஏவின் ஒரேமாதிரியான பிரதிகளை அவை உருவாக்குகின்றன. ஒரு வைரஸ் தானாகவே தன்னைப் பிரதியெடுத்துக் கொள்வதில்லை. அதற்கு ஓர் ஓம்புயிரி *(host)* வேண்டும். அது பாக்டீரியா என்னும் ஒரு

நுண்ணுயிரியாகவோ அல்லது எந்த ஜீவராசியாகவும் இருக்கலாம். வழக்கமான ஒரு வைரஸ் தன் டிஎன்ஏ-ஐ *(Deoxyribonucleic Acid & DNA:* ஆக்ஸிஜன் அற்ற கரு அமிலம்) ஆர்என்ஏ-விற்கு *(Ribonucleic acid & RNA)* மொழிமாற்றம் செய்து தன்னைப் பிரதி எடுத்துக்கொள்கிறது. இந்த ஆர்என்ஏ என்பது கட்டளைகளின் தொகுப்பு; அதாவது கணினி ஆணைகள் மாதிரி. புரோட்டீன்களை, அதாவது புரதங்களை, தொகுக்கும் கட்டளைத்தொகுப்பு ஆர்என்ஏ. இந்தப் புரோட்டீன்கள்தான் ஒரு புதிய வைரஸை உருவாக்குகிறது. அதனால், வைரஸ், ஓம்புயிரியை, அதாவது இடம்கொடுக்கும் ஓர் உயிரணுவை, தொற்றுகிறது. ஓம்புயிரி உயிரணுக்குள் (அதாவது செல்லுக்குள்) இருக்கும் பிரதியெடுக்கும் எந்திரம், தொற்றிக்கொண்ட வைரஸ் டிஎன்ஏ-ஐ வைரஸ் ஆர்என்ஏவாக மொழிபெயர்க்க உதவுகிறது. பின்பு வைரஸ் புரோட்டீன்கள் உருவாகி புதிய வைரஸ் உண்டாகிறது. இந்தக் குழந்தை வைரஸ்கள் மேலும் பெருகி வளர்ந்து உயிரணுவின் ஊடாக வெடித்து உயிரணுவைக் கொல்கிறது. அப்புறம் புது உயிரணுக்களில் தொற்று ஏற்படுத்துகிறது. மீண்டும் அதே பாணி ஆரம்பமாகிறது. பயங்கரமாக இல்லை?

புரோவைரஸ்: ஓர் ஓம்புயிரியின் (ஹோஸ்ட்) டிஎன்ஏ-விற்குள் அடங்கியிருக்கும் ஒரு வைரஸின் மரபணு சங்கேதம்.

பாக்டீரியோஃபேஜ்: பாக்டீரியாக்களைத் தொற்றி அவற்றின் உயிரணுக்களை, மேலே குறிப்பிட்டவிதமாக, தங்களைப் பிரதியெடுத்துக்கொள்ளும் வைரஸ்கள்.

வைரியான் *(virion):* தொற்று ஏற்படுத்தும் வைரஸ் துகள்

ரெட்ரோவைரஸ் ரெப்பிளிக்கேஷன் *(Retrovirum replication):* ரெட்ரோவைரஸ் மிகவும் தந்திரமானது; மிகவும் சிக்கலானது. ஆர்என்ஏ இழைகள் கொண்டது; டிஎன்ஏ இழைகள் கொண்டதல்ல. அது ஓர் ஓம்புயிரி உயிரணுவை *(host cell)* தொற்றும்போது, அதனுடைய ஆர்என்ஏ டிஎன்ஏவாக மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதற்கு 'ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டேஸ்' (மாற்று நொதி) என்ற புரோட்டீன் பயன்படுகிறது. வைரஸ் டிஎன்ஏ உருவாக்கப்படும்போது, அது ஓம்புயிரி உயிரணுவின் டிஎன்ஏ-க்குள் செருகப்படுகிறது. ஆம். வைரஸ் தான்தொற்றிக்கொண்ட செல்லின் ஒரு பகுதியாகவே மாறிவிடுகிறது. அதனால்தான் மனித டிஎன்ஏ-யின் பெரும்பகுதி ரெட்ரோவைரஸ்களிலிருந்து பெறப்படுகிறது. நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நமது டிஎன்ஏயை பொறுத்தவரை, நாம் பாதி வைரஸ்தான். இந்த வைரஸ் டிஎன்ஏ பின்பு வைரஸ் ஆர்என்ஏ-வாக

மொழிபெயர்க்கப்படுகிறது; பின் வைரஸ் ஆர்என்ஏ, ஒரு புதிய வைரஸைத் தொகுக்கக்கூடிய வைரஸ் புரோட்டீன்களை உருவாக்குகிறது. இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட ரெட்ரோவைரஸ் இப்படித்தான் வேலை செய்கிறது. ரெட்ரோவைரஸ் ஏரியிலுள்ள பாக்டீரியாவைத் தொற்றும்போது, அது தனது சொந்த டிஎன்ஏ-யை பாக்டீரியாவின் டிஎன்ஏ-க்குள் செருகி, பாக்டீரியாவின் டிஎன்ஏ-யை மாற்றிவிடுகிறது. அதனால் பாக்டீரியா உற்பத்தி செய்யும் புரோட்டீன்களின் இயல்பு மாறிவிடுகிறது.

நன்மைதரும் வைரஸ்கள்: ரெட்ரோவைரஸ் மனிதனுக்குள் இருக்கும் உயிரணுக்களை (செல்களை) தொற்றிக்கொள்ளும்போது, இதுவரை செயலற்று இருந்த மரபணுக்கூறுகளை (ஜீன்களை) உயிர்ப்பித்து விடுகிறது. இது முழுக்க உண்மை. இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட உதாரணங்கள் உண்மையானவை. வைரஸ்கள் நமது டிஎன்ஏ-யையும், மரபணுக் கூறுகளையும் எப்படி பாதிக்கின்றன என்பது பற்றி நித்தம் பலகண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. ஜீன்கள் அடிப்படையில் கணினிக் கட்டளைகள் (கம்ப்யூட்டர் புரோகிராம்கள்) போன்று இருக்கின்றன. ஜீன்கள் என்னும் இந்த புரோகிராம்கள்தான் மனிதஉடம்புக்குள் பலவேலைகள் செய்யும் புரோட்டீன்களை உற்பத்தி செய்கின்றன. இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்ட *p*53 போன்ற எல்லாப் புரோட்டீன்களும் நிஜமான புரோட்டீன்கள் தான். அவற்றின் எல்லாப் பணிகளும் நிஜமானவை. தூங்கிக்கிடக்கும் மரபணுக்கூறுகளை வைரஸ்கள் உயிர்ப்பித்து தூண்டிவிடுகின்றன. அதனால் புரோட்டீன்கள் உற்பத்தியாகின்றன. இந்தப் புரோட்டீன்கள் நம் உடம்புக்குள் பலவிதமான விளைவுகளை நமக்குத் தெரியாமலே ஏற்படுத்துகின்றன. அதனால்தான் மரபணுவியல் (ஜெனிடிக்ஸ்) இன்றைய காலகட்டத்தில் ஒரு சூடான விஷயமாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் எந்த மருத்துவ சிகிச்சையைவிடவும், மரபணுரீதியிலான சிகிச்சை மிகவும் ஆற்றல்கொண்டதாக இருக்கிறது. நமக்கு நன்மை செய்யும் புரோட்டீன்கள் பல உண்டு. இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட *p*53 என்ற புரோட்டீன் நிஜமாகவே புற்றுநோய் உயிரணுக்களை (கேன்சர் செல்களை) கொன்றுவிடுகிறது. நான் கதையில் சொன்னமாதிரி, புற்றுநோய், நீரிழிவுநோய், அல்ஷெயிமர்ஸ் நோய், இதயநோய்கள் போன்றவற்றை கட்டுப்படுத்த உதவும் புரோட்டீன்களை உற்பத்தி செய்யக்கூடிய மரபணுக்கூறுகள் நிறையவே இருக்கின்றன. மரபணுக்கூறுகளில் ஏற்படும் சிதைமாற்றங்கள் அல்லது மரபணுக்கூறுகளின் செயல்படாததன்மைகள் இந்த நோய்களை நம்மைப் பாதிக்க செய்கின்றன. நமக்கு நன்மை

செய்யும் புரோட்டீன்களை உற்பத்தி செய்வதற்கு மரபணுக்கூறுகளை சரியாக வேலை செய்யவைப்பதற்கு (வைரஸ் மாதிரி) ஏதாவது ஒரு வழியிருந்தால், முதுமை அடைவதை நம்மால் தடுக்கமுடியும். இந்தத் துறையில் இப்போது நிறையவே ஆராய்ச்சிகள் நடக்கின்றன. யாருக்குத் தெரியும், இன்னும் 20 வருசங்களுக்குள் நமக்கு ஒரு தீர்வு கிடைக்கலாம்!

புரோஃபேஜ் இண்டக்ஷன் *(prophage induction):* வைரஸ்கள் இரண்டுவழிகளிலில் இனப்பெருக்கமாகின்றன. முதல்வழிக்குப் பெயர் லிடிக் சுழற்சி *(lytic Cycle)*. இதில், ஒரு வைரஸ், ஓம்புயிரி உயிரணுவை *(host cell)* தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, அதனுடைய உயிரணு எந்திரத்தைப் பயன்படுத்தி இனப்பெருக்கமாகிறது. வைரஸின் பிரதிகள், உயிரணுவுக்குள் (செல்லுக்குள்) நிரம்பி, உயிரணுவை வெடிக்கவைத்து அதைக் கொன்றுவிட்டு, மேலும் பல செல்களைத் தொற்றிக்கொள்ள பல வைரஸ்களை கட்டவிழ்த்துவிடுகிறது. வைரஸ் இனப்பெருக்கத்தின் இரண்டாவது வழி லைசோஜெனிக் சுழற்சி *(lysogenic Cycle)*. இந்த வைரஸ் புரோஃபேஜ் எனப்படும். (அதாவது பாக்டீரியம் என்ற நுண்ணுயிரிக்குள் சென்று தனது மரபணுப்பொருளை நுண்ணுயிரியின் மரபணுத்தொகுதிக்குள் செலுத்திவிடும் வைரஸுக்குப் பேர்தான் புரோஃபேஜ்). அந்த வைரஸின் மரபணுச்சரக்கு ஓம்புயிரியின் *(host)* மரபணுத்தொகுதிக்குள் கலந்து ஒன்றாகிவிடுகிறது. ஓம்புயிரிக்குள் வைரஸ் கொஞ்சநாள் அமைதியாக செயலற்று இருந்துவிட்டு, பின்பு லிட்டிக் சுழற்சியை அடைந்து பல்கிபெருகுகிறது. லிட்டிக் சுழற்சியை அடைந்து தன்னைத்தானே பிரதிகள் எடுத்துக்கொள்ள இந்த வைரஸ்களைத் தூண்டும் ஓர் அமைப்புக்குப் பேருதான் புரோஃபேஜ் இண்டக்ஷன். பாக்டீரியாவின் குரோமோ சோமிலிருந்து புரோஃபேஜ் என்னும் வைரஸைத் துண்டித்து விடவும், வைரஸின் பிரதியெடுப்புக்கும் ஒரு தூண்டுதல் தேவைப்படுகிறது.

டெலோமியர்களும், முதுமையடைதலும் *(telomeres and aging):* இந்தப் புத்தகத்தில் நான் சொன்ன டெலோமியரேஸ் *(telomerase)* என்னும் புரோட்டீன் நோபல் பரிசு பெற்ற ஒரு விஷயம். உயிரணுக்கள் (செல்கள்) பிளவு ஆகும்போது அல்லது சாகும்போது, டெலோமியர்கள் (மரபணுத் தகவல்களைக் கொடுக்கும் குரோமோசோமின் முனையில் இருந்து காப்பாற்றும் கருஅமிலக் கட்டமைப்புப் பகுதி டெலோமியர்) சுருங்கிவிடாமல் இருப்பதற்கு உதவி செய்வது டெலோமியரேஸ். இதன் நன்மைகளைப் பற்றி இன்று விஞ்ஞான உலகத்தில் அனல்பறக்கும் விவாதங்கள் நடக்கின்றன. டெலோமியரேஸின் இருப்பினால் புற்றுநோய் உருவாகும் சாத்தியத்தைப் பற்றி விவாதங்கள்

போய்க்கொண்டிருக்கின்றன. நாம் நம் தாயின் கருப்பையில் கருமுட்டைகளாக இருக்கும்போது, இந்த டெலோமியரேஸ் துடிப்போடு இருக்கிறது. ஏனெனில் உயிரணுப் பகுப்பு *(cell division)* மிகவும் முக்கியம், கருமுட்டை வளர்ச்சிக்கு. எனினும் நாம் பிறந்தவுடன், டெலோமியரேஸ் உற்பத்திக்கு இட்டுச்செல்லும் மரபணுக்கூறு அல்லது ஜீன் துண்டிக்கப்படுகிறது. அதனால் நம் டெலோமியர்ஸ் நாம் பிறந்த நாளிலிருந்தே சுருங்க ஆரம்பித்துவிடுகின்றன. சாவின் விதி அப்போதே எழுதப்பட்டு விடுகிறது. ஆனால் உயிரணுக்கள் தாறுமாறாக போகாமல் இருக்கவும், பெருகிக்கொண்டே இருக்கவும் இயற்கை உறுதிசெய்கின்ற வழி இதுதான். புற்றுநோயின் இலக்கணமும் இதுதான். அதனால், டெலோமியரேஸ் என்னும் புரதம் ரெட்டைமுனை கொண்ட ஒரு வாள். அது முதுமையைத் தடுக்கிறது; அதே சமயம், புற்றுநோய் மரணத்தையும் கொண்டுவருகிறது.

மரபணுக்களையும், நோய்க்கிருமிகளையும் பற்றிய நமது அறிவு என்னதான் பரந்துபட்டதாக இருந்தாலும் அது இன்னும் முழுமையாகவில்லை. உயிரணுக்கள் பணியாற்றும் முறையைப்பற்றி, மரபணுக்கள் வேலைசெய்யும் முறையைப் பற்றி அல்லது நோய்க்கிருமிகள் மனிதர்களையும், மனிதரல்லாத ஜீவராசிகளையும் தொற்றும் முறையைப்பற்றி ஒவ்வொருநாளும் ஆராய்ச்சிகள் மூலம் புதுப்புது கண்டுபிடிப்புகள் வெளிவருகின்றன. இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்ட பல விஞ்ஞான உண்மைகள், கடந்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் செய்யப்பட்ட கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை.

வீனஸ் நூதன நிகழ்வு *(The Venus phenomenon):* 60-ஆவது அத்தியாயத்தில் விவரிக்கப் பட்ட வீனஸ் நூதன நிகழ்வு நிஜமான நிகழ்வுதான். அதேமாதிரியான நிகழ்வு ஒன்று வேல்ஸில் ப்ரின் செலி டூ என்ற இடத்தில் நிகழ்ந்தது; அங்கே வீனஸ் என்னும் நட்சத்திரம் இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டதுபோலவே ஒரு குறுகிய பாதைக்குள் ஜொலிக்கிறது. கிறிஸ்டோஃபர் நைட் மற்றும் ராபர்ட் லோமாஸ் இருவரும் சேர்ந்து எழுதிய ஊரியல்ஸ் மெஷின் என்ற புத்தகத்தில் விஞ்ஞான விளக்கத்துடன் இந்த வீனஸ் நிகழ்வு ஆராய்ச்சி செய்யப்பட்டு விவரிக்கப்படுகிறது. ஹிந்து குஷ் பகுதியில் இந்த நிகழ்வு நிகழ்ந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. அதனால் அந்த வர்ணனை வெறும் புனைவுதான். ஆனால் இந்த நிகழ்வு புனைவு அல்ல. ஒளிப்பெட்டி என்னும் கருத்து, அயர்லாந்தில் உள்ள நியூகிரான்ஞ்சில் இருக்கும் அதே மாதிரியான குன்றில் சூரியன் ஒரு குறுகிய பாதையில்

ஒளிர்ந்து பாறையை வெளிச்சமாக்கும் என்ற நிகழ்விலிருந்து கடன்வாங்கப்பட்டது. இந்த நிகழ்வும் அந்தப் புத்தகத்தில் வர்ணிக்கப்படுகிறது.

சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து

இந்தப் புத்தகத்தில் ஒலிம்பியாஸ், யூமனியஸ் மற்றும் காலிஸ்தெனிஸ் பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்ற சரித்திர மாந்தர்கள் பற்றி லேசாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் இப்போது அவர்களை மேலும் சில விளக்கங்கள் கொடுப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

பெர்டிக்காஸ்: அலெக்ஸாண்டர் இறந்தவுடன், அவரின் முழு சாம்ராஜ்யத்திற்கும் பதிலி ஆட்சியாளராய் இருந்தவர். எனினும் அலெக்ஸாண்டரின் தளபதிகளில் பலர் அவர்க்கு எதிராக சதிபண்ணி அவரைக் கொலைசெய்தனர். அவரது முக்கிய கூட்டாளி யூமனியஸ்.

ஆண்டிபேட்டர்: பிலிப்பாலும், அலெக்ஸாண்டராலும் பெரிதும் நம்பப்பட்டவர். ஆசியாவில் போர்தொடுக்க அலெக்ஸாண்டர் சென்றபோது, அவர் சார்பாக மாசிடோனியாவையும் கிரீஸையும் ஆண்டவர்.

பாலிபெர்க்கான்: ஆண்டிபேட்டருடைய கூட்டாளி. ஆண்டிபேட்டர் இறந்தவுடன், கிரீஸிலும், மாசிடோனியாவிலும் பதிலி ஆட்சியாளராய் இருந்தவர்.

கசாண்டர்: ஆண்டிபேட்டருடைய மகன்.

தாலமி: அலெக்ஸாண்டர் மரணத்திற்குப் பின்னர், எகிப்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர். பெர்டிக்காஸுக்கும், பின்னர் ஆண்டிகோனஸ்க்கும் எதிரான கலகத்தைத் தூண்டியவர். எகிப்து அரசர்களுக்கு உரிய பாரோ என்னும் பட்டத்தை சூட்டிக்கொண்டவர்; தாலமி வம்சத்தை தொடங்கிவைத்தவர்.

ஆண்டிகோனஸ்: முதலில் பிரிஜியாவின் ஆளுநராக இருந்தவர். பெர்டிக்காஸோடு முரண்பட்டு, சிரியா மற்றும் பாரசீக நாடுகளுக்காக யூமனியஸோடு சண்டையிட்டார். யூமனியஸ் இரண்டுமுறை அவரைத் தோற்கடித்தாலும், இறுதியில் ஆண்டிகோனஸ், யூமனியஸைத் தந்திரத்தால் தோற்கடித்து அவரைத் தூக்கிலிட்டார்.

கிளிட்டஸ்: ஓர் உண்மையான உயிர்ப்பாத்திரம். இந்தப்

புத்தகத்தில் விவரிக்கப்பட்ட அவரது மரணத்தை உருவாக்கிய சூழ்நிலைகள் கிளிட்டஸின் மரணம் என்ற புத்தகத்தையும் (கிளம்சன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எலிஸபெத் கார்னே எழுதியது), மற்றும் புளுடார்க்கின் 'அலெக்ஸாண்டரின் வாழ்க்கை' என்ற புத்தகத்தையும் அடிப்படையாக கொண்டவை.

நான் ஆராய்ச்சி நோக்குடன் பார்த்துப் படித்த புத்தகங்களையும், கட்டுரைகளையும், வீடியோக்களையும், இணையத்தளங்களையும் பார்க்காமலே நீங்கள் நிறைய தெரிந்துகொள்ள விரும்பினால், அலெக்ஸாண்டர் பற்றியும், ஒலிம்பியாஸைப் பற்றியும், மற்றும் அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின்பு தளபதிகளுக்குள் நிகழ்ந்த ஆட்சியுரிமை யுத்தங்கள் பற்றியும் பின்வரும் இரண்டு மூலங்கள் மிகச்சுருக்கமாக ஏராளமான தகவல்களைத் தரும்:

Alexander: http://www.ancient.eu.com/Alexander_the_Great

Olympias: http://www.historytoday.com/robin&Waterfield/olympias&olympias&funeral

புராணத்தின் கோப்புகளிலிருந்து

சமுத்திரமந்தன்: ஒவ்வொருவருக்கும் இந்த தொன்மம் தெரியும். இந்தப் புத்தகத்தின் ஆதாரங்களாக நான் பயன்படுத்தியவை: கிசாரி மோகன் கங்குலி எழுதிய வியாச மகாபாரதம் (சமஸ்கிருதப் பிரதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு); சான் சாரின் எழுதிய சமுத்திரமந்தன். சமஸ்கிருத சுலோகங்களும் அவற்றின் மரபுரீதியான பதவுரைகளும் கொண்ட சமஸ்க்ருதப் பிரதியின் விமர்சன ஆய்வு அது.

சமுத்திரமந்தன் விளக்கமும் நான் வழங்கியிருக்கும் விஞ்ஞானமும் சாத்தியமான காட்சிகள்தான். நான் கொடுத்திருக்கும் மொழிபெயர்ப்பும், வழங்கியிருக்கும் விஞ்ஞான அனுமானக் கருத்தும் சமஸ்கிருத வல்லுநர்களாலும், மருத்துவத்துறை நிபுணர்களாலும் சரிபார்க்கப்பட்டு, சாத்தியமென்றும் நம்பத்தகுந்தவை என்றும் கருதப்பட்டிருக்கின்றன. அப்படித்தான் நிஜமாகவே நிகழ்ந்திருக்குமா? சாத்தியமில்லை என்று ஒதுக்குவதற்கில்லை. இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஞ்ஞானம் பற்றி நிறைய தகவல்களும் விளக்கங்களும் தேவைப்பட்டால் என் இணையத்தளத்தை (www.christophercdoyle.com) அல்லது என் முகநூல் (www.facebook.com/hercdoyle) பக்கத்தைப் பார்க்கவும். எனக்கு நீங்கள் எழுத ஆசைப்பட்டால் அல்லது விஞ்ஞானக்

கேள்விகள் உங்களிடம் இருந்தால், பின்வரும் மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்புகொள்ளலாம். contact@achristophercdoyle.com